உலக வரலாறு

(கி. பி. 1789-முதல் இன்று வரை)



டி. ஆர். இராமச்சந்திரன்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு-அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண் – 126

உலக வரலாறு

(கி.பி. 1789 முதல் இன்று வரை)

புகுமுக வகுப்புக்குரியது

ஆசிரியர்
டி. ஆர். இராமச்சந்திரன், எம்.ஏ., எம்.லிட்.,
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு–அரசாங்கம்

First Edition—July, 1966

B.T.P. No. 126

World History

T. R. Ramachandran

Price Rs. 4-00

Printed by
Kabeer Printing Works,
Madras-5.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகி விட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'உலக வரலாறு' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 126ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 161 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

பொருளடக்கம்

பின்னிணைப்பு—படங்கள்

உலக வரலாறு
(1789—1960)

1. பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளில் உலக நாடுகள்

தோற்றுவாய்

தற்கால உலக வரலாற்றினை நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். ஏனெனில், தற்கால மனிதனுடைய நடவடிக்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு அது நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. 1789ஆம் ஆண்டு முதற்கொண்டு தற்கால உலகம் எவ்வெவ் வகையில் வளர்ச்சியுற்றது என்பதை நாம் இந் நூலில் கவனிப்போம். 1789ஆம் ஆண்டு உலக வரலாற்றிலே குறிப்பிடத்தக்க கட்டமாகும். அவ்வாண்டில் ஐரோப்பாவிலுள்ள ஃபிரான்சு நாட்டில் மாபெரும் புரட்சியொன்று ஏற்பட்டது. அக்காலத்தில் தோன்றிய சமத்துவம், சுதந்திரம் ஆகிய கருத்துகள் அப் புரட்சி ஏற்படக் காரணமாயிருந்தன. இன்று பல்வேறு நாடுகளில் இயங்கிவரும் மக்களாட்சி முறையின் அடிப்படைத் தத்துவங்கள் என்று கூறப்படும் இக் கருத்துகள் அக்காலத்தில் ஃபிரான்சிலும் இதர ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்துவந்த மக்களிடம் மட்டுமன்றி, பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த மக்களிடமும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இதன் விளைவாக அந்நிய ஆட்சியும், வல்லாட்சியும் பல நாடுகளினின்றும் அகற்றப்பட்டன. அவைகளுக்குப் பதிலாகக் குடிமக்களின் நலன்களைப் பேணும் மக்களாட்சி நிறுவப்பட்டது. வல்லாட்சிக் கொள்கைக்கும், மக்களாட்சிக் கொள்கைக்கும் பத்தொன்பதாம் நூற்றுண்டு முழுவதும் நடைபெற்று வந்த போராட்டம் முதல் உலகப் போர் நிகழ்ந்த காலத்தில் உச்சகட்டத்தை அடைந்தது என்று கூற

லாம். அப்பொழுது பல்லாண்டுகளாக நடைபெற்று வந்த மன்னர் ஆட்சிமுறை பல இடங்களில் அழிவுற்றது. அவைகளிருந்த இடத்தில் குடியரசுகள் நிறுவப்பட்டன. தேசிய தன்னுட்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட புது நாடுகள் உருவாக்கப்பட்டன. இதனின்றும் 1789-ல் ஏற்பட்ட புரட்சி வல்லாட்சிக் காலத்தையும், மக்களாட்சிக் காலத்தையும் பிரிக்கும் ஓர் எல்லைக் கோடாகக் கொள்ள லாம் என்பது தெளிவாகிறது. இத்தகைய சிறப்புப் பெற்ற ஃபிரஞ்சுப் புரட்சியின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு முன்னர், புரட்சிக்கு முன் ஐரோப்பாவின் நிலைமையைப் பற்றித் தெரிந்துகொள்வது அவசிய மாகும்.

ஐரோப்பாவில் வல்லரசுகள்

பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பொதுவாக ஐரோப்பிய நாடுகளனைத்தும் மன்னர்களால் ஆளப்பட்டு வந்தன. இடைக் காலத்தில் இவ்வரசர்கள் பலம் பொருந்தியவர்களாயிருந்ததில்லை. அவர்கள் தங்கள் விருப்பப்படி ஆட்சி செய்ய முடியவில்லை. பிரபுக்கள், மதகுருமார்கள், நகர மக்கள் ஆகியோர் பெற்றிருந்த உரிமைகள், அவ்வரசர்களுடைய அதிகாரத்தை விரிவுபடுத்துவதைத் தடுத்து நிறுத்தின. இடைக்கால மக்கள் சபைகள் அரசர்களுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்தின. ஆனுல், பதினைந்தாம், பதினுரும் நூற்றுண்டுகளில் தோன்றிய தேசிய உணர்ச்சி, மன்னர்கள் தேசிய ஒற்றுமையின் சின்னங்கள் என்று கருதப்பட்டனர். இதனுல் அவர்க ளுடைய அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள முடிந்தது. மேலும், பிரபுக்கள் போன்றவர்களுடைய கொடுமைகளினின்றும் மக்களைக் காப்பாற்றக்கூடியவர் அரசர் ஒருவர்தாம் என மக்கள் உணர்ந்தனர். ஆகவே, அவர்கள் வல்லாட்சி ஏற்படுத்துவதை ஆதரித்தனர். மேலும், அரசர்கள் பலம் பொருந்தியவர்களாயிருந்தால்தான் நாட்டில் அமைதி நிலவமுடியும் என்ற கருத்து வளர்ந்துவரலாயிற்று. பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு அமைதி இன்றியமையாததென்றும் உணர்ந்தனர். இக் காரணங்களால் ஐரோப்பாவில் வல்லரசுகள் அமைக்கப்பட்டன.

பதினேழாம் நூற்றுண்டிலும், பதினெட்டாம் நூற்றுண்டிலும் ஏற் படுத்தப்பட்ட வல்லாட்சிகள் அரச தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இருந்தன. நாட்டரசு கடவுளால் ஆக்கப் பட்டது, அரசர்கள் கடவுளால் நியமிக்கப்பட்டவர்கள், அவர்கள் கடவு ளன்றி வேறெவருக்கும் பதில் சொல்லும் பொறுப்புடையவரல்லர் ஆகிய கருத்துகளை அக் கோட்பாடு உட்கொண்டு இருந்தது. அரசர் தீயவரா யிருப்பினும், மக்கள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யக்கூடாது என்றும், மக்களின் பாவச் செயல்களைத் தண்டிக்கும்பொருட்டே கடவுள்

அத்தகைய அரசரை அனுப்பிவைக்கிருர் என்றும் கருதி வந்தனர். முடியரசர்கள் தங்களுடைய நாடுகளைத் தங்களின் சொத்தாகக் கருதினர். தங்களுடைய நலன்களையும் நாட்டினுடைய நலன்களையும் ஒன்றென அவர்கள் கருதினர். அவர்கள் நாட்டில் வலிமை பொருந்திய மைய ஆட்சி முறையை ஏற்படுத்திஞர்கள். திறமை வாய்ந்த அதிகார வர்க்கமும், சிறந்த பயிற்சி பெற்ற நிலப்படை யொன்றும் இவ்வாட்சிக்கு உறுதுணையாக இருந்தன. அரசருடைய சொந்த விருப்பு வெறுப்புகளின்படியே அரசாட்சி நடைபெற்றது. மக்களுக்கு யாதோர் உரிமையும் வழங்கப்படவில்லை. தங்களது நாடுகளை விரிவு படுத்தவேண்டும் என்ற ஆசையும், பிற அரசர்களின் பால் ஏற்பட்ட பொருமையும், அவ் வரசர்களைப் போரில் ஈடுபடுமாறு தூண்டின. சொந்த எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ளவேண்டி நாடுகளைப் போரில் ஈடுபடுத்துவது அக்காலத்தில் வழக்கமாயிருந்தது. பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இவ் வல்லரசர்களிடம் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் தாங்கள் ஆளவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, தகுதி பெற்றவர்களையே அமைச்சராக அமர்த்தினர். சட்டங்களைத் திருத்தியமைத்தனர். விவசாயம், தொழில், வர்த்தகம் ஆகியவைகளைப் பெருக்கினர். கல்வி பெருகுவதற்கு வழிவகை செய்தனர். விஞ்ஞானிகளையும், எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஆதரித்தனர். எனவே, இவ் வல்லரசர்களை ஒளியூட்டுகிற வல்லரசர்கள் (Enlightened Despots) என்று அழைத்தனர். இத்தகைய வல்லரசர்களில் தலைசிறந்தவர்களைப்பற்றி இப் பகுதியில் காணலாம்.

ஃபிரான்சில் வல்லரசு

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வல்லாட்சிமுறை நடைபெற்று வந்தபொழுதிலும், ஃபிரான்சு நாட்டில்தான் இவ்வாட்சி முழுமையை அடைந்தது. இடைக்காலத்தில் ஃபிரஞ்சு மன்னர்கள் ஒருசில அதிகாரங்களே பெற்றிருந்தனர். அவர்கள் கீழிருந்த பல பிரபுக்களில் ஒருவராகவே காணப்பட்டனர். நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் பிரபுக்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் அழித்து நாடு முழுவதையும் தங்களுடைய நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். 1589ஆம் ஆண்டு தொடங்கி 1610ஆம் ஆண்டு வரை ஆட்சிபுரிந்த பூர்போன் (Bourbon) வம்சத்தைச் சார்ந்த முதல் அரசரான நான்காம் ஹென்றியும், அவரைப் பின் தொடர்ந்து ஆட்சிபுரிந்த பதின்மூன்றும் லூயியின் அமைச்சரான கார்டினல் ரிஷெலியூவும் (Cardinal Richelieu) ஃபிரான்சு நாடு முழுவதிலும் மன்னரின் ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தனர். அவ் வேலையில் அவர்கள் பெரு வெற்றியடைந்தனர். எனினும், பதின்மூன்றும் லூயிக்குப் பிறகு அரியாசனத்தில் அமர்ந்த பதிஞன்காம்

லூயியினுடைய நீண்ட ஆட்சிக் காலத்தின்போதுதான் இவ்வாட்சி உச்சகட்டத்தை அடைந்தது.

பதினான்காம் லூயி மன்னர் (1643—1715)

பதினேழாம் நூற்றாண்டில் ஃபிரான்சில் ஆட்சி புரிந்த அரசர்களில் தலைசிறந்தவர் பதினான்காம் லூயி ஆவார். அவர் தம்முடைய ஐந்தாவது வயது நிரம்பு முன்னரே பட்டத்துக்கு வந்தார். ஆகவே, அவருடைய குழந்தைப் பருவத்தில் ஆட்சிப் பொறுப்பை அவருடைய தாயாரான ஆஸ்திரியா நாட்டின் இளவரசியான ஆன் (Anne of Austria) ஏற்று வந்தார். கார்டினல் மாசரின் (Mazarin) என்ற, இத்தாலி நாட்டினின்று வந்து ஃபிரஞ்சுக் குடிமகனாக மாறிய மதகுரு அமைச்சராகப் பணியாற்றினார். இவர் மிக அழகாக இருந்த காரணத்தால், ஆன் அரசியாரின் நம்பிக்கையையும் அன்பையும் பெற்றார். ஆன் அரசியை இரகசியமாக மணஞ் செய்துகொண்டார் என்ற கருத்தும் உலவி வருகிறது. இவர் மதகுருவாயிருந்தபோதிலும் அரசியல் விவகாரங்களிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் மிக்க அக்கறை கொண்டிருந்தார். இவருக்கு முன்னர் அமைச்சர் பதவி வகித்த ரிஷெலியூ தொடங்கிய வெளிநாட்டுப் போரைத் தொடர்ந்து நடத்துவதே இவருடைய முதல் வேலையாகக் கொள்ளப்பட்டது. இப் போரை வெகு திறமையாக நடத்தி, ரிஷெலியூவினுடைய எண்ணங்களை நிறைவேற்றி வைத்தார். அக்காலத்தில் தலைசிறந்து விளங்கிய இரு போர் வீரர்களான காண்டி (Conde), டுரென் (Turenne) ஆகியோர்களின் உதவியைக் கொண்டு ஃபிரஞ்சுக்காரர்களின் எதிரிகளை ராக்ராய் (Rocroi), லென்ஸ் (Lens) என்ற இடங்களில் முறியடித்தார். இதனால் 1648-ல் ஜெர்மெனியிலுள்ள பகைவர்கள் ஃபிரான்சுடன் வெஸ்ட்பேலியா உடன்படிக்கை (Treaty of Westphalia) செய்து கொண்டனர். இதன் விளைவாக ஃபிரான்சு சில பிரதேசங்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. ஐரோப்பாவில் ஃபிரான்சினுடைய செல்வாக்கு அதிகரித்தது. ஆகவே, வெஸ்ட்பேலியா உடன்படிக்கை மாசரினுடைய பெரும் சாதனை என்று கூறுவது மிகையாகாது.

ஆனால், ஸ்பெயின் நாட்டுடன் நடத்திவந்த போர் தொடர்ந்து நடைபெற்றது. பல வெற்றிகளை ஃபிரஞ்சுக்காரர்கள் அடைந்த போதிலும், ஸ்பெயின் நாட்டினை முழுமையாக அடக்குவது முடியாத காரியம் என்று அவர்கள் அறிந்தார்கள். அப்பொழுது இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை யேற்றிருந்த கிராம்வெல் (Cromwell) என்பவரின் உதவியை இரு நாடுகளும் நாடின. இறுதியில் ஃபிரான்சு அவருடைய உதவியைப் பெறுவதில் வெற்றிகண்டது. மாசரின், இங்கிலாந்து நாட்டரசின் துணைகொண்டு, ட்யூன்ஸ் சண்டையில் (Battle of the Dunes) வெற்றி கண்டார். 1659-ல் பிரனீஸ் உடன்

படிக்கை (Treaty of Pyrennes) வாயிலாகப் போர் முடிவுற்றது. ஃபிரான்சு சில பிரதேசங்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது. பதினுன்காம் லூயி மன்னருக்கும், ஸ்பெயின் நாட்டிளவரசியான மேரியா தெரீசா (Maria Theresa) விற்கும் நடைபெற்ற திருமணம் இச் சமாதானத்தை மேலும் வலுப்படுத்தியது. இதுவும் மாசரினுடைய பெரும் சாதனை என்று கூறலாம்.

உள்நாட்டு விவகாரங்களில் இவர் ரிஷெலியூ புரிந்த பெருமைப்படத் தக்க சாதனைகளைப் போன்றவைகளை நிறைவேற்றவில்லை. ஏனெனில், இவரிடம் ரிஷெலியூ பெற்றிருந்த செயல் திறமும், யாவரையும் பணிய வைக்கத்தக்க ஆற்றலும் காணப்படவில்லை. மேலும், இவர் இத்தாலிய நாட்டைச் சார்ந்தவராதலால், ஃபிரஞ்சுக்காரர்களின் சிறப்பியல்புகளைச் சரிவரப் புரிந்துகொள்ள இயலவில்லை. மற்றும் இவர் அந்நியராதலால் இவருக்கெதிராகச் சதி செய்வது எளிதான காரியமாகத் தோன்றியது. இவர் ஏராளமான பொருளை ஈட்டிய காரணத்தால், இவர்மீது குற்றஞ் சாட்டுதலும் எளிதாக இருந்தது. இவர் பெருமளவில் அதிகாரத்தைப் பெற்றிருந்ததால், பிரபுக்கள் இவர்மீது பொருமை கொண்டனர். மேலும், இவர் காலத்தில் நடைபெற்ற போர்களின் விளைவாக நாட்டு மக்கள்மீது சுமத்தப்பட்ட வரிப்பளு அதிகரித்தது. இக் காரணங் களால் இவருக்கெதிராகவும், மன்னருக்கு எதிராகவும் கலகங்கள் ஏற்பட்டன. இவைகளை ஃபிராண்டே கிளர்ச்சிகள் (Wars of the Fronde) என்று அழைத்தனர். இவைகளுள் முதலாவது கிளர்ச்சி பாரிஸ் பார்லிமென்டால் (Parliament of Paris) துவக்கப்பட்டது. இம் மன்றத்தின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களோ அல்லது அரசரால் நியமிக்கப்பட்டவர்களோ அல்லர். அவர் களில் சிலர் தங்களுடைய மன்ற உறுப்பினர் பதவியை மரபுரிமை யாகப் பெற்றிருந்தனர். மற்றவர்கள் அப் பதவியை விலை கொடுத்து வாங்கியிருந்தனர். அம் மன்றத்தை நீதிமன்றம் என்று அழைப்பது பொருத்தமேயன்றிச் சட்டசபை என்று கூற இயலாது. அதன் முன்னர் சமர்ப்பிக்கப்படும் அரசர் ஆணைகளைப் பதிவு செய்யும் உரிமையே அதற்கு வழங்கப்பட்ட ஆட்சி முறை சார்ந்த ஒரே அதிகாரமாகும். அம் மன்றத்தின் ஏடுகளில் பதிவு செய்யப்படாத எந்த அரச ஆணையும் சட்டமாகக் கருதப்படமாட்டாது. 1648-ல் மாசரின், நிதியைப்பற்றிய புது ஆணைகளை அம் மன்றத்தின் முன் வைத்தார். பார்லிமென்ட் அவை களைப் பதிவு செய்ய மறுத்துவிட்டதோடல்லாமல் ஆட்சி முறையில் சீர்திருத்தங்கள் வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தது. இவ் வாருகப் பார்லிமென்ட் மக்கள் உரிமைகளுக்காகப் போராடும் மன்ற மாகத் திகழ்ந்தது. மாசரின் பார்லிமென்டின் முக்கியத் தலைவர்களைச் சிறையில் அடைத்து நிலைமையைச் சமாளிக்க எண்ணினர். காண்டி யின் தலைமையின்கீழ் ஒரு சேனையை அனுப்பி பாரிஸ் நகரத்தை

முற்றுகையிடச் செய்தார். 1649-ல் இக் கிளர்ச்சி முடிவுற்றது. ஃபிரஞ்சு அரசாங்கம் வரிச் சலுகைகள் அளிப்பதற்கு இசைந்தது.

சிறிது காலத்திற்குள் இரண்டாவது கிளர்ச்சி ஏற்பட்டது மாசரின் ஆட்சியில் அதிருப்தியடைந்த பிரபுக்களால் இது ஆரம்பிக்கப் பட்டது. காண்டியைச் சிறையிலிட்ட செய்தி கிளர்ச்சிக்கு நேரடியான காரணமாகும். பாரிஸ் நகர மக்கள் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர். மன்னரிடத்தில் அதிக அளவில் விசுவாசத்துடன் நடந்து கொள்ளும் டுரென்கூடக் கலகத்தில் சேர்ந்துகொண்டார். மாசரின் பதவியைவிட்டு விலகவேண்டும் என்று கலகக்காரர்கள் கூச்சலிட்டனர். எதிர்ப்பு மிகக் கடுமையாக இருந்த காரணத்தால் மாசரின் காண்டியை விடுவித்ததோடல்லாமல், அவரே நாட்டை விட்டுச் சென்றார். ஃபிரான்சுக்கு வெளியே இருந்த காலத்திலுங்கூட ஆட்சிமுறையை இயக்கி வந்தார் என்பதைக் குறிப்பிடுதல் அவசியமாகும். சில காலத் திற்குப்பின் டுரென் மீண்டும் அரசர் படையில் சேர்ந்துகொண்டார். மேலும், கலகக்காரர்கள் தெளிவான திட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அவர்களுடைய ஆர்வம் குறையலாயிற்று. 1652-ல் காண்டி தோற்கடிக்கப்பட்டார். மாசரின் ஃபிரான்சுக்குத் திரும்பி மறுபடியும் பதவியிலமர்ந்தார். ரிஷெலியூ ஏற்படுத்திய ஆட்சிமுறை மறுபடியும் புகுத்தப்பட்டது. இவ்வாறாக அரசருடைய ஆதிக்கத்தை ஃபிரான்சு முழுவதிலும் மீண்டும் நிலைநிறுத்தினார். 1661-ல் மாசரின் உயிர் நீத்தார். மாசரினுடைய மறைவு பதினான்காம் லூயியின் காலத்தின் (Age of Louis XIV) தொடக்கத்தைக் குறித்துக் காட்டுகிறது.

மாசரின் மறைந்த பிறகு இருபத்திரண்டு வயது நிரம்பிய லூயி தாமே ஆட்சி நடத்தத் தீர்மானித்தார். ஆகவே, புதிய முதல் அமைச்சரை எதிர்பார்த்திருந்த அரச சபையை 'நானே இனி என்னுடைய முதலமைச்சராக இருப்பேன்' என்று கூறி அச் சபை யினரை அதிர வைத்தார். லூயி மிகத் திறமை வாய்ந்தவர். கட்டான உடலமைப்புடன் அழகையும் பெற்றிருந்தார். உயர்ந்த பண்புகள் சிலவற்றைப் பெற்றிருந்தார். அவருடைய நடத்தையில் யாதொரு குறையும் காண இயலாது. தன்னடக்கம் பெருமளவில் பெற் றிருந்தார். அவர் கடும் உழைப்பையும் மேற்கொள்ளும் திறனுடை யவர். எல்லா ஆலோசனைச் சபைக் கூட்டங்களிலும் கலந்துகொள்வார். ஆட்சி முறை சார்ந்த பத்திரங்களை வெகு கவனமாகப் படிப்பார். அரசியல் விவகாரங்கள் அனைத்திலும் அவர் முழுத் தேர்ச்சியடைய வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர். அவருடைய ஆட்சியின் முதற் பகுதியில் அவருடைய அமைச்சர்கள் ஆட்சியை நடத்தி வந்தனர் என்றாலும், பிற்காலத்தில் அவர்கள் அவருடைய விருப்பத்தினை நிறைவேற்றிவைக்கும் கருவிகளாகவே இயங்கி வந்தனர். திறமை

வாய்ந்தவர்களையே அமைச்சர்களாக நியமிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அவருடைய முடிவுகளில் அவருக்கு அலாதி நம்பிக்கை உண்டு. ஐரோப்பிய அரசியல் விவகாரங்களை மிகத் தெளிவாக உணர்ந்தவர், அரச தந்திரத்தில் கைதேர்ந்தவர். நிரம்பப் படியாதவர் என்றாலும், அவர் பல துறைகளில் மேம்பட்டு விளங்கியவர்களைக் கொண்ட அவையை ஏற்படுத்தினார். இதைப்பற்றிப் பின்னர் விரிவாகக் கவனிப்போம்.

அவரிடம் சில குறைகளும் உண்டு. அவர் சுயநலக்காரர் ; தருக்கு நிறைந்தவர் ; வெளிநாட்டு விவகாரங்களில் அவர் காட்டிய பொறுமையினை மதம் போன்ற விவகாரங்களில் காட்டியவரன்று. மத விஷயங்களில் அவரை ஒரு வெறியர் என்றே கூறவேண்டும். நாடு பிடிப்பதிலும், போரிடுவதிலும் அவருக்கு அதிக விருப்பமிருந்தது. இதனால் ஃபிரான்சு அவசியமின்றிப் பல போர்களில் ஈடுபட்டது. இதன் காரணமாக அந் நாட்டின் பொருளாதார நிலை சீர்குலையலாயிற்று. அவர் அநேக வெற்றிகளைக் கண்டார் என்பதும், முற்றுகை முறையில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதும் உண்மையே என்றாலும், அவர் ஒரு வீரர் அல்லர். அவர் எந்தப் போராட்ட ஏற்பாட்டிலும் முக்கிய அங்கம் வகித்ததில்லை. கிராண்ட் (Grant) அவர்கள் குறிப்பிட்டபடி அவர் ஒரு வீரராகவோ அல்லது அரசியல் நிபுணராகவோ ஐரோப்பிய வரலாற்றிலே உயர்ந்த இடத்தைப் பெறவில்லை ; அவர் தற்கால முடியாட்சியின் சிறந்த உதாரணமாக விளங்குகிறார். பெரும்பாலும் எல்லா அரசர்களும் அவரை மாதிரியாக வைத்துக்கொண்டு ஆட்சி செய்ய முற்பட்டனர். பல துறைகளிலும் சிறந்த பணிகளை ஆற்றிய காரணத்தால் அவருக்கு மாட்சிமிக்க மன்னர் (Grand Monarch) என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

லூயியின் ஆட்சிமுறை

அரச அதிகாரத்தை விரிவுபடுத்துவதே அவருடைய முக்கியக் குறிக்கோளாக இருந்தது. அரச தெய்வீக உரிமைக் கோட்பாட்டினில் திட நம்பிக்கை கொண்டிருந்த அவர் தன்னைக் கடவுளுடைய பிரதிநிதியாகக் கருதினார். அரசர்தாம் எல்லா அதிகாரத்தின் பிறப்பிடம் என்று அறிவித்தார். அவர்கீழ்ப் பணியாற்றும் அதிகாரிகள் அனைவரும் அவர் அனுமதிபெற்ற அதிகாரங்களைமட்டுமே நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் கூறினார். 'நான்தான் நாடு' (I am the State) என்ற சொற்றொடர் அவர் கொண்டிருந்த அரசாங்கத்தைப்பற்றிய கருத்துகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ரிஷெலியூ, மாசரின் ஆகியோரின் காலத்தில் முழு வளர்ச்சியடைந்த மைய ஆட்சி முறையினை லூயி கையாண்டு வந்தார். இதன்படி எல்லா அதிகாரங்களையும் தன்

கைக்குட்படுத்தினர். எவ்வளவு திறமை பெற்றிருந்தபோதிலும் 'ஒரு தனி மனிதனுல் எல்லா அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்துவது மிகக் கடினமான செயலன்றே ? ஆகவே, அவருடைய நம்பிக்கையைப் பெற்ற ஆட்சி வட்டாரம் ஒன்றினை ஏற்படுத்தினர். அவற்றுள் தலை சிறந்து விளங்கியதுஅவர் காலத்தில் இயங்கி வந்த பலதிறப்பட்ட சபை களாகும் (Councils). இச் சபைகளை அவருடைய கருத்துக்குத் தக்க வாறு திருத்தி அமைத்தார். புது சபைகளை உண்டாக்கினர். பிரபுக் களையும், மத குருக்களையும் அவைகளினின்றும் விலக்கினர். ஏனெனில், இவர்கள்தாம், முற்காலத்தில் வல்லரசின் பகைவர்களாக இருந்தனர். அவர்களுக்குப் பதிலாக நடுத்தர வகுப்பினைச் சார்ந்தோர்களை, குறிப் பாக வழக்கறிஞர்களை உறுப்பினர்களாக அமர்த்தினர். ஏனெனில், அரசர் உதவியால் உறுப்பினர் பதவி பெற்ற இவர்கள் அரசருக்கு அடங்கி நடப்பார்கள் என்று லூயி கருதினர். இச் சபைகளில் மிக முக்கியமானது அரச சபையாகும் (King's Council). எல்லா முடிவு களும் அரச சபையில்தான் மேற்கொள்ளப்பட்டன. ஆனுல், எல்லா சபைகளும் ஆலோசனை சபைகளாகவே இயங்கி வந்தன என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அடுத்தபடியாக, அரசருடைய விருப் பத்தை நிறைவேற்றி வைப்பதற்காகப் பல அமைச்சர்கள் நியமிக்கப் பட்டனர். இவர்களனைவரையும் அரசரே நியமித்தார். இவர்கள் அரச ருடைய நம்பிக்கையைப் பெற்றிருந்த வரையில்தான் பதவியில் இருக்க முடிந்தது. லூயி திறமை வாய்ந்தவர்களையே அமைச்சராக நியமித்தார். ஆனுல், ஆட்சி நடத்தும் பொறுப்பு உண்மையில் செயலாளர்களிடம்தான் இருந்தது. இவர்களெல்லோரும் ஆட்சிமுறை நடத்துவதில் சிறந்த பயிற்சி பெற்றவர்களாயிருந்தனர். ஃபிரான்சு நாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் கவர்னர் ஒருவர் இருந்தார். இவர் பிரபுக்கள் வகையினைச் சார்ந்தவ ராதலால் இவரிடமிருந்த அதிகாரங்கள் எல்லாம் பறிக்கப்பட்டன. அவருக்குப் பதிலாக, ரிஷெலியூ காலத்தில் நியமிக்கப்பட்ட இண்டெண்டன்ட்டு (Intendent) என்னும் அதிகாரி அரசருடைய பிரதி நிதியாக ஆட்சி நடத்தினர். தொடக்கத்தில் வரிவசூலிக்கும் அதிகாரம் மட்டும் பெற்றிருந்த அவர்கள் நாளடைவில் பல்வேறு அதிகாரங்களையும் பெற்றனர். அவர்களுடைய கவனமெல்லாம் அரச ஆதிக்கத்தினைப் பெருக்குவதிலேயே செலுத்தப்பட்டது. மாசரின் காலத்தில் வல்லாட் சியை.எதிர்த்துப் போராடிய பாரிஸ் பார்லிமெண்டு இப்பொழுது நியாயம் வழங்கும் மன்றமாகவே இயங்கி வந்தது. மற்றைய பார்லிமெண்டுகள் மங்கிய நிலையை எய்தின. ஸ்டேட்ஸ்-ஜெனரல் (States-General) என்னும் பிரபுக்கள், மதகுருக்கள், மக்கள் பிரதிநிதிகளடங்கிய சபை இவர் காலத்தில் கூட்டப்படவேயில்லை. இதனுல் மக்க ளுடைய ஒப்புதல் இன்றி அவர்களிடமிருந்து வரி வசூல் செய்யப் பட்டது. மாகாணங்களில் நடைமுறையில் இருந்த பிரதிநிதிகளடங்கிய

சபைகள் சில ஒழிக்கப்பட்டன. எஞ்சியிருந்த சபைகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அவைகள் இப்பொழுது அரசருக்குத் தேவையான வரித்தொகை வழங்கும் சபைகளாக மாறின. நகரசபைகளுக்காக நடத்தப்படும் தேர்தலிலும் அரசாங்கப் பணியாளர்கள் தலையிட்டனர். பெரும்பாலும் அரசருக்கு அடங்கி நடப்பவர்களே நகரசபைத் தலைவர்களாகத் (Mayors) தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக அரசரை எதிர்ப்பவர்கள் விசாரணையின்றிச் சிறையிலடைக்கப்பட்டனர்.

நிதிநிலையில் சீர்திருத்தங்கள்

லூயி பட்டத்திற்கு வந்தபொழுது நிதிநிலை சீர்குலைந்திருப்பதைக் கண்டார். அப்பொழுது நிதி அமைச்சராக விளங்கிய ஃபோகே (Fouquet) என்பவர் திறமைசாலி என்றாலும், குறுக்கு வழிகளில் நிறையப் பொருள் தேடியவர். ஆகவே, முதல் வேலையாக அவரைப் பதவியினின்று நீக்கினார். அந்தப் பதவியில் கால்பர்ட் (Colbert) என்பரை நியமித்தார். கால்பர்ட் திறமை வாய்ந்தவர். மன்னரிடத்தில் மிக்க விசுவாசமுடையவர். மாசரின்கீழ் வெகு சிறப்பாகப் பணியாற்றிய காரணத்தால், மாசரின் அவரைத் தமக்குப் பின்னர் அமைச்சர் பதவியில் நியமிக்கவேண்டும் என்று சிபாரிசு செய்தார். அவர் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர். லூயி மன்னரின் நேராட்சியின் முதல் பதினோர் ஆண்டுகளில் கால்பர்ட்டின் கருத்துகளுக்கேற்றவாறே ஆட்சி நடைபெற்று வந்தது என்பது உண்மையேயாகும். நிதி விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பை அவர் ஏற்றவுடன், நிதி முறையில் காணப்பட்ட குறைகளை நீக்க கால்பர்ட் முற்பட்டார். ஃபிரான்சு நாட்டின் நிதிமுறையில் காணப்பட்ட பெருங்குறையாதெனில், பிரபுக்களும், மதகுருக்களும் நிலவரி செலுத்துவதினின்றும் விலக்குரிமை பெற்றிருந்தார்கள். ஆகவே, வரிச்சுமை முழுவதும் குடிமக்கள் மீது சுமத்தப்பட்டது. கால்பர்ட் இந்த விலக்குரிமையை அகற்ற முற்படவில்லை என்பது உண்மையேயானாலும், அவர் விலக்குரிமைக் கோரிக்கைகளை மிகக் கவனமாகப் பரிசீலனை செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார். அதன் விளைவாக அவ்வுரிமையைப் பெறத் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டவர்கள் அதனை யிழந்தார்கள். அதனால் அதனைப் பெறத் தகுதியுள்ளவர்கள் எண்ணிக்கை குறைந்தது. அரசாங்கத்தினுடைய வருவாயும் பெருகியது. மேலும், வரிவசூல் செய்வதில் உயர் அதிகாரிகள் மிகக் கவனமாக மேற்பார்வையிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். குறைந்த செலவுடன் வசூல் செய்யும் அதிகாரிகளுக்கு வெகுமதியும், மிகுந்த செலவுடன் வரிவசூல் செய்யும் அதிகாரிகளுக்கு தண்டனையும் வழங்கப்பட்டன. இவ்வகைகளில் அரசாங்கத்தின் வருவாயை இரண்டு மடங்காக்கினார். சரியான கணக்குகளை வைத்

திருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினர். அவர் வரவு செலவுத் திட்டப் பட்டியல் தயாரிக்கும் முறையைப் புகுத்தினர்.

பொருளாதாரத்துறையில் முன்னேற்றம்

கால்பர்ட் காலத்தில் ஃபிரான்சு தொழில்வளம் நிறைந்த நாடாகக் காணப்படவில்லை. மக்களுக்கு வேண்டிய செயற்கைப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. ஃபிரான்சு நாட்டு மன்னரின் பெருமை மக்களுடைய பொருள் வளத்தைச் சார்ந்திருந்தது என்பதையும், அப் பொருள்வளம் வர்த்தகம், தொழில் ஆகியவைகளின் வளத்துடன் இணைக்கப்பட்டிருந்தது என்பதையும், கால்பர்ட் நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, அவர் ஃபிரஞ்சு மக்கள் அவர்களுக்குத் தேவையான பொருள்களை அவர்களே உற்பத்தி செய்யுமாறும், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யச் சிறந்த பொருள்களைத் தயாரிக்குமாறும், அவர்களுக்குத் தக்க தூண்டுதல்களை ஏற்படுத்துவது என்று தீர்மானித்தார். ஆதலால், 1663-ல் ஃபிரான்சு நாட்டில் தயாரிக்கப்பட வேண்டிய பொருள்களின் பட்டியலொன்றை வெளியிட்டார். நசிந்து போன தொழில்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. புதிய தொழில்களைத் தொடங்க முன்வருபவர்களுக்கு அரசாங்கம் உதவித்தொகை அளித்தது. வெளிநாடுகளிலிருந்து ஃபிரான்சு நாட்டிற்கு வந்து தங்கி, தங்கள் நாட்டுப் பொருள்களைத் தயாரிக்க முன்வரும் அந்நியர்களுக்கு கால்பர்ட் வெகுமதி வழங்க ஏற்பாடு செய்தார். அதே சமயத்தில் தொழில்துறையில் ஈடுபட்ட ஃபிரஞ்சுக்காரர்கள் வெளிநாடு செல்வதையும் தடுத்தார். தங்கள் நாட்டின் தொழில் நுணுக்கங்களை அந்நிய நாட்டிற்குத் தெரிவிக்கும் ஃபிரஞ்சுக்காரர்கள் கடுமையான தண்டனைக்கு ஆளாக்கப்பட்டார்கள். ஃபிரஞ்சு மக்கள் சோம்பேறிகளாக வாழ்வதையும் தடுத்தார். தொழில் வளம் பெருக விடுமுறை நாட்கள் குறைக்கப்பட்டன. அந்நிய நாட்டினர் ஃபிரஞ்சுப் பொருள்களை விரும்பி வாங்கவேண்டும் என்பதற்காக உயர்தரமான சாமான்களையே உற்பத்தி செய்யவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். உள்நாட்டுத் தொழில்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களின்மேல் மிகுதியான காப்புவரி விதிக்கப்பட்டது. ஃபிரான்சிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின்மீது விதிக்கப்பட்டிருந்த சுங்க வரி குறைக்கப்பட்டது. ஃபிரான்சிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மூலப்பொருள்களின்மீது மிகுதியான வரி விதிக்கப்பட்டது. இவ்வாறு ஒரு நாட்டின் தொழில்வளத்தைக் காக்கும் முறைக்கு கால்பர்டிஸம் (Colbertism) என்ற பெயர் வழங்கப்பட்டது. கால்பர்ட், ஃபிரஞ்சு நாட்டின் வர்த்தகம் பெருகுவதற்கும் வழிவகை செய்தார். இங்கிலாந்து, ஹாலந்து ஆகிய நாடுகள் தங்களுடைய வாணிபத்தைப் பெருக்குவதற்கு வாணிகக் கம்பெனிகளை ஏற்படுத்தியிருந்தன. அம்

முறையை கால்பர்ட் பின்பற்றி பால்டிக் கடல் நாடுகள், மத்தியதரைக் கடல் நாடுகள், இந்தியக் கடல் நாடுகள், அமெரிக்க நாடுகள் ஆகியவற்றுடன் வியாபாரம் செய்வதற்கெனப் பல கம்பெனிகளை ஏற்படுத்தினர். அவைகளில் மிக முக்கியமானது ஃபிரஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியாகும். அயல்நாடுகளில் ஃபிரஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதற்குத் திட்டம் வகுத்து அத் திட்டத்தைச் செயல்படுத்தினர். இவர் காலத்தில்தான் கனடாவில் ஃபிரஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதில் அதிக அக்கறை காண்பிக்கப்பட்டது. இக் குடியேற்ற நாடுகள் ஃபிரான்சு நாட்டில் தயாரித்த பொருள்களை விற்பதற்கும், ஃபிரஞ்சுத் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களை அடைவதற்கும் உதவின. வாணிபம் பெருகுவதற்கு வியாபாரக் கப்பல்கள் இன்றியமையாததென்று கால்பர்ட் அறிந்திருந்தார். எனவே, அவர் கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்குக் கடன் தொகை வழங்கினர். ஃபிரஞ்சுக்காரர்களின் அயல்நாட்டு வாணிபத்தையும், குடியேற்ற நாடுகளையும் தக்கவாறு பாதுகாக்க பலம் பொருந்திய கடற்படை அவசியம் என்பதையும் உணர்ந்திருந்தார். அத்தகைய கடற்படையை உருவாக்க முற்பட்டார். கப்பற்படைப் பயிற்சிப் பள்ளிகளையும், படைக் கொட்டில்களையும் அமைத்தார். போர்க் கப்பல்கள் கட்டப்பட்டன. முதன்முதலில் இருபதே கப்பல்கள் கொண்டிருந்த படை 1667-ல் 270 கப்பல்களைக் கொண்டிருந்தது. ஃபிரஞ்சு மாலுமிகள் குறிப்பிட்ட காலம் கப்பற்படையில் செயலாற்றும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். துறைமுகங்களைச் செப்பனிட்டார். புதிய துறைமுகங்களைக் கட்டுவித்தார்.

உள்நாட்டு வியாபாரத்தைப் பெருக்குவதிலும் கால்பர்ட் கவனம் செலுத்தினர். சாலைகளைத் திருத்தியமைத்தார். ரோமானியர்களுக்குப் பிறகு இவரைப்போல் எவரும் சாலைகள் விஷயத்தில் அக்கறை கொள்ளவில்லை.[1] அநேக கால்வாய்கள் வெட்டப்பட்டன. இவற்றுள் மிக முக்கியமானது லாங்டாக் கால்வாய் (Canal Longudoc) ஆகும். பலதிறப்பட்ட சுங்கவரி முறைகள் உள்நாட்டு வியாபாரத்திற்குத் தடையாக இருந்தன. ஆகவே, அவைகளை ஒன்று சேர்த்து வைக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

விவசாயப் பெருக்கத்திலும் கால்பர்ட் மிக்க அக்கறை கொண்டிருந்தார். குறிப்பாகக் குதிரை வளர்ப்பில் மிகுந்த கவனம் செலுத்தினர். ஆனல், குடியானவர்களின் நிலை முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய வழிவகை அவர் செய்யவில்லை என்பது இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

[1] 'கேம்பிரிட்ஜ் தற்கால வரலாறு', வால்யூம் I, பக்கம் 14 (Cambridge Modern History, Vol. I, page 14).

கால்பர்ட் நீதி வழங்கும் முறையில் காணப்பட்ட குறைகளைப் போக்கவும் முனைந்தார். நீதி வழங்கும் முறையைச் சீர்படுத்தப் பல சட்டங்களை இயற்றினர். இச் சட்டங்களின் தொகுதிக்கு கோட் லூயி (Code Louis) என்ற பெயர் அளிக்கப்பட்டது. இத் தொகுதியில் காணப்படும் முறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளைத்தான் இன்றும் ஃபிரான்சு நாட்டின் நீதிமன்றங்கள் கடைப்பிடித்து வருகின்றன.[1]

பதினன்காம் லூயி கல்வி, கலை ஆகியவை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். அவர் காலத்தில் ஃபிரான்சு நாடு இத் துறையில் பெரும்புகழ் எய்தியது. அவருடைய அரசவையினைப் பல்வேறு துறைகளிலும் பெரும்புகழ் பெற்றவர்களைக்கொண்டு அலங்கரித்தார். அவருடைய காலத்தை ஃபிரஞ்சு இலக்கியத்தின் பொற்காலம் என்று கூறப்படுகிறது. இராசைன் (Racine), மோலியர் (Moliere) போன்ற சிறந்த நாடக ஆசிரியர்களும், பாயிலு, லாபாண்டேன் போன்ற கவிகளும், செயின்ட் சைமன் (St. Simon) போன்ற வரலாற்று ஆசிரியர்களும், பாஸ்கல் (Pascal), தெகார்த்தே (Descartes) போன்ற தத்துவ ஞானிகளும், நிதித்துறையில் கைதேர்ந்த கால்பர்ட் அவர்களும், போசோ (Boussuet), ஃபெனலன் (Fenelon) போன்ற இறைமை இயல் வல்லுநர்களும், காண்டி, டுரின் போன்ற ஒப்பற்ற போர்வீரர்களும், லூவா (Louvois) என்ற சிறந்த போர்த்துறை அமைச்சரும், வாபன் (Vauban) என்ற படைத்துறைக் கட்டுமான வேலைகளைத் திட்டமிட்டு வகுத்தமைப்பவரும் இவருடைய அவையில் வைத்துப் போற்றப் பட்டனர். கால்பர்ட் ஐந்து புதிய கலைக்கழகங்களை (Academics) அமைத்து விஞ்ஞானம், கட்டடக்கலை, இசை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டார். கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கு உதவிப்பணம் வழங்கினர். அறிஞர்கள் வாயிலாக மக்கள் கருத்தைக் கட்டுப்படுத்துவதே அவருடைய முக்கிய நோக்கம் என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

பதினன்காம் லூயி பகட்டாரவாரத்தில் மிக்க நாட்டங்கொண்டவர். அவரைப் பகட்டாரவாரப் பித்தன் என்று கூறுகிருர்கள்.[2] லூயி மூன்று அரண்மனைகளைக் கட்டிமுடித்தார். அவற்றுள் மிகச் சிறந்தது பெருஞ் செலவில் கட்டப்பட்ட வெர்சாயி (Versailles) அரண்மனையாகும். கண்ணுடி அறைகளையும், ஓவியங்கள் தீட்டப்பட்ட சுவர்களையும்,

[1] பிஷர், ஐரோப்பிய வரலாறு, பக்கம் 667 (Fisher, A History of Europe, page 667).

[2] டேவிஸ், உலக வரலாற்றின் சுருக்கம், பக்கம் 420 (Davis, 'An Outline History of the World', p. 420).

தோட்டங்களையும், நீர் ஊற்றுகளையும் பெற்றிருந்த அவ்வரண்மனையைப் போற்றுதவர் எவருமிலர். அதுவே அரசருடைய கொலுவிருக்கையாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஐரோப்பாவின் இதர நாடுகளை ஆண்டுவந்த அரசர்கள் இவ்வரண்மனையை மாதிரியாகக் கொண்ட அரண்மனைகளைத் தங்கள் நாட்டில் கட்ட முனைந்தனர்.

லூயி மன்னரின் நேராட்சியின் முதல் பன்னிரண்டு ஆண்டுகள் தொழில், வணிகம், விவசாயம் ஆகிய துறைகளில் வளர்ச்சியைக் கண்டன. அதற்குப்பிறகு அரசருடைய மனம் படைத்துறையில் புகழ் தேடுவதை நாடியது. இதற்குக் காரணமாயிருந்தவர் லூவா என்ற பெயருடைய போர்த்துறைத் தலைவராவார். அவர் அரசரைப் போருக்கான முயற்சிகளில் பொருள் செலவிடுமாறு தூண்டினுர். அவர் ஃபிரஞ்சுப் படையினைச் சீர்திருத்தி அமைத்தார். ஃபிரஞ்சுப் படையினை அரசருடைய நேரடி அதிகாரத்திற்குட்படுத்தினுர். இப் படையினரிடம் காணப்பட்ட பிரபுக்களின் செல்வாக்கு அழிக்கப்பட்டது. நவீன போர்க்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. போர்வீரர்களுக்குக் கடும் பயிற்சி அளிக்கப்பட்டது. போர்க்காலத்தில் சேனைகள் துரிதமாகச் செல்வதற்காக ஆங்காங்கே படைக்கலக் கொட்டில்கள் ஏற்படுத்தப் பட்டன. அக்காலத்தில் பிரபுக்கள் போர்வீரர்களைச் சேகரித்தும் அவர்களுக்குத் தக்க கருவிகளைக் கொடுத்தும் வந்தனர். அதற்காக அரசாங்கத்தினிடம் அவர்கள் பொருள் பெற்று வந்தனர். பொதுவாக அவர்கள் வைத்துப் பேணிவரும் வீரர்களின் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையை அரசாங்கத்திற்குக் காட்டி பெரும் பொருளை அவர்கள் ஈட்டி வந்தனர். லூவா மேற்பார்வையாளர்களை நியமித்து இவ் வழக்கத்தை ஒழித்தார். போரில் காயமுற்று வேலையிழந்த வீரர்களுக்கு உதவி செய்வதற்காக அவர் ஹோட்டல் தெ இன்வலிட் (Hotel de Invalides) என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தினுர். இவ்வாருக ஃபிரஞ்சு சேனையின் போர் புரியும் தரத்தைப் பெருமளவில் உயர்த்தினுர்.

மதக்கொள்கை

அரசியல் விவகாரங்களில் உயர்வதிகாரம் பெற்ற லூயி மன்னர் மத விஷயங்களிலும் ஒப்புயர்வற்றவராக விளங்க எண்ணியது இயற்கையேயாகும். மதஸ்தாபனங்கள் அனைத்தும் தன்னுடைய ஆணைக்குட்பட்டு நடக்கவேண்டும் என்பது அவரது பேரவாவாகும். எனவே, 1682-ல் காலிகன் லிபர்டிஸ் (Gallican Liberties) என்ற அறிக்கையை விடுத்தார். கத்தோலிக்கர்கள் தலைவரான போப்பாண்டவர் மத விவகாரங்களில் மட்டுமே அவருடைய அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்றும், அவருக்கு அரசரைப் பதவியிலிருந்து நீக்க உரிமையில்லை என்றும், மத விவகாரங்களில்கூட அரசர் இசைவு பெற்ற

2499

அதிகாரம் மட்டுமே அவர் செலுத்தவேண்டுமென்றும் அதில் குறிப்பிட்டார். போப் இவ்வறிக்கையை எதிர்த்தார். ஆயினும், லூயி விட்டுக் கொடுக்கவில்லை.

அக்காலத்தில் ஃபிரான்சில் ஜேன்சனிஸம் (Jansenism) என்ற மதவியக்கம் தோன்றியது. இவ்வியக்கத்தைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கருத்துகளை ஜேன்ஸன் என்ற மதகுரு ஆக்கிய நூல்களினின்றும் பெற்றனர். இவர்கள் கத்தோலிக்க மதத்தில் மிகுந்த பற்றுடையவர்கள். ஆனால், இவர்கள் தூய வாழ்க்கை முறையைக் கையாண்டு வந்தனர். இவ் வியக்கத்தில் பாஸ்கல், இராசைன் போன்ற அறிஞர்கள் கலந்துகொண்டனர். லூயி, இவ்வியக்கத்தினால் தன்னுடைய அதிகாரங்கள் பாதிக்கப்படும் என்று எண்ணியதால், இதனை ஒடுக்கினார்.

அடுத்தபடியாக அவருடைய் கவனம் ஃபிரஞ்சு பிராடஸ்டண்டுகள் (Protestants) பக்கம் திரும்பியது. ஃபிரஞ்சு மக்கள் பெரும்பாலோர் கத்தோலிக்கர்கள். அவர்களில் ஒருசிலரே பிராடஸ்டண்டு மதத்தைப் பின்பற்றிவந்தனர். இவர்கள் யூகனோக்கள் (Huguenots) என்று அழைக்கப்பட்டனர். ஒருகாலத்தில் இவர்கள் ஒரு பெரும் சக்தியாக விளங்கினார்கள். ஆனால், இப்பொழுது அவர்களுடைய எண்ணிக்கை குறைந்துவிட்டது. சமுதாயத்தில் அவர்களுக்கு இருந்த செல்வாக்கும் படைபலமும் அழிந்துவிட்டது. மன்னரிடம் உண்மை விசுவாசம் கொண்டிருந்தார்கள். அவர்கள் கவனமெல்லாம் இப்பொழுது வியாபாரம், தொழில் ஆகிய துறைகளிலேயே செலுத்தப்பட்டது. ஆகவே, அத்தகைய மக்களைக் கொடுமை செய்வதற்குக் காரணமாயிருந்தது அவருடைய மதவெறி என்பதில் ஐயமில்லை. நாட்டில் மத விவகாரங்களிலும் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தினாலும் அவர் யூகனோக்களைத் துன்புறுத்தினார். முதலில் இவருடைய குழந்தைகளின் வளர்ப்புத் தாயாகவிருந்து பிறகு இவருடைய மனைவியாகிய மாதாம் தெ மென்டனான் (Madame de Maintenon) இவ்வகையில் இவருக்கு உதவியாக இருந்தார். யூகனோக்கள் பலவகையில் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டன. அவர்களுடைய சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களுடைய குழந்தைகள் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்களுடைய தொழுகை இல்லங்கள் அழிக்கப்பட்டன. அரசுப்பணியில் அவர்கள் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வீடுகளில் போர்வீரர்களைத் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. கத்தோலிக்க மதத்தைச் சேர விரும்பும் யூகனோக்களுக்குப் பொருள் அளிக்கப்பட்டது. இவைகளில் திருப்தி அடையாத லூயி மன்னர் 1685-ல் நான்டீஸ் ஆணையை (Edict of Nantes) நிராகரித்தார். யூகனோக்களின் எண்ணிக்கை மிகச் சொற்ப

மாக இருந்ததால் அவர்களுடைய மத உரிமைகளைக் காக்கவேண்டிப் பிறப்பிக்கப்பட்ட இக் கட்டளை இனி அவசியமில்லை என்று வாதாடப் பட்டது. இதன் விளைவாக யூகனேக்கள் இதுகாறும் அனுபவித்துவந்த மத சுதந்திரம் பறிபோயிற்று. இதற்குப் பிறகு ஃபிரான்சில் குடியிருக்க விருப்பங்கொள்ளாததால் அவர்களில் பெரும்பாலோர் நாட்டைவிட்டுச் சென்றனர். அவர்களுக்கு இங்கிலாந்து, ஹாலந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் புகலிடம் தந்தன. அவர்கள் அனைவரும் தொழி லிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்ததால், அவர்கள் நாட்டை விட்டுச் சென்றபின் ஃபிரான்சு நாட்டின் தொழில்வளம் பேரளவில் குன்றியது. ஃபிரான்சு எதை இழந்ததோ அதை அந்நிய நாடுகள் பெற்றன.

வெளிநாட்டுக் கொள்கை

லூயி நாடு பிடிக்கும் ஆசை கொண்டவர் என்று முன்னரே குறிப் பிட்டோம். இவ்வாசையின் விளைவாக ஃபிரான்சு நாடு பல போர்களை நடத்தியது. இப் பகுதியில் இப் போர்களைப்பற்றிக் கவனிப்போம்.

லூயி மன்னர் அயல்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவளவில் இரு குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். முதலாவதாக ஃபிரான்சு நாட்டின் எல்லைகளை அதனுடைய இயற்கையாக அமைந்த எல்லையான ரைன் நதி வரை பரப்பவேண்டும் என்று விருப்பப்பட்டார். இரண்டாவதாக ஃபிரான்சு நாட்டின் எதிரிகளான ஹாப்ஸ்பர்க்கு (Hapsburgs) வம்சத் தைச் சார்ந்த அரசர்களை ஒழிக்கவேண்டும் என்பது. இவ்வெண்ணங் களை நிறைவேற்றுவதற்காக இரண்டு வழிகளைக் கையாண்டார். முதலில் வேற்று நாட்டு அரச குடும்பங்களுடன் உறவு கொண்டு தம் நாட்டை விரிவுபடுத்த எண்ணினர். இவ்வெண்ணம்தான் இவருக்கும் ஸ்பெயின் நாட்டிளவரசிக்கும் இடையே முன்னரே குறிப்பிட்ட திரு மணம் நடைபெறுவதற்குக் காரணமாகும். போர் புரிந்து நாடுகளை வெல்லவேண்டுமென்பதே அவர் கைகொண்ட இரண்டாவது வழியாகும். அதன் விளைவாக லூயி மன்னர் நான்கு பெரும் போர்களில் ஃபிரான்சு நாட்டை ஈடுபடுத்தினர்.

அவற்றுள் முதலாவது உரிமைப்போராகும் (War of Devolution 1667—1668). 1659-ல் லூயி ஸ்பெயின் நாட்டின் மூத்த இளவரசியான மேரியா தெரீஸா என்பவரை மணமுடித்தார் என்று முன்னரே கூறி னேம். அவருடைய உட்கருத்தை அறிந்துகொண்ட ஸ்பெயின் அரசர் அப்பொழுது ஒரு நிபந்தனையை விதித்தார். அதாவது, அவர் எக் காரணத்தைக் கொண்டும் ஸ்பெயின் நாட்டு அரசுக்கும் அல்லது அதனுடைய ஆளுகைக்குட்பட்ட எந்தப் பகுதிக்கும் உரிமை கொண் டாடுதல் கூடாது என்பதாகும். இதற்குப் பதிலாக அவருக்கு ஒரு

பெரும் தொகையைச் சீதனமாகக் கொடுக்க இசைந்தார். 1665-ல் ஸ்பெயின் மன்னர், நான்காவது ஃபிலிப் (Phillp IV) காலமானர். உடனே லூயி ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதர்லாந்து நாட்டின் ஒரு பகுதி தன்னுடைய மனைவிக்குச் சேரவேண்டும் என்று உரிமை கொண்டாடினர். முன்னர் அறிவித்தபடி அவருக்குக் கொடுக்கவேண்டிய சீதனத் தொகையைக் கொடுக்கத் தவறியதால், தன்னுடைய வாக்குறுதிக்குத் தான் கட்டுப்படவியலாது என்று கூறினர். ஸ்பெயின் அரசருக்கு இரு மனைவிகளிருந்தனர். மூத்தவளின் மகள் மேரியா தெரீசாவாகும். இளையவளுக்கு சார்லஸ் என்ற பெயர்கொண்ட ஒரு மகனும், மார்கரெட் தெரீஸா (Margaret Teresa) என்ற பெயருடைய மகளும் இருந்தனர். ஸ்பெயின் மன்னரின் ஆளுகைக்குட்பட்ட நெதர்லாந்தின் ஒரு பகுதியில் வழங்கிவந்த சட்டத்தின்படி, இளையவளின் மகனைக் காட்டிலும் மூத்தவளின் மகளுக்கே சொத்துரிமை வழங்கப்பட்டது. அச் சட்டத்தைத் தனக்கு ஆதாரமாகக்கொண்டு லூயி அப் பகுதியின் ஆட்சியுரிமையைக் கொண்டாடினர். இவ் வுரிமையை அங்கீகரிக்க மறுத்த காரணத்தால் போர் மூண்டது. ஃபிரஞ்சுப்படை நெதர்லாந்துப் பகுதியில் புகுந்தது. ஸ்பெயின் நாட்டுப் படை பல இடங்களில் தோல்வியுற்றது. அச் சமயத்தில் ஃபிரான்சின் ஆக்கிரமிப்பைக் கண்டு அச்சமடைந்த ஹாலந்து, இங்கிலாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகள் ஒப்பந்தம் (Triple Alliance) ஏற்படுத்திக்கொண்டன. இதன் முக்கிய நோக்கம் ஃபிரான்சு நாட்டின் முன்னேற்றத்தைத் தடுப்பதே யாகும். இந் நாடுகளுடன் போர்புரியத் தயக்கம் கொண்ட லூயி ஸ்பெயினுடன் சமாதானம்—ஏக்ஸ் லா ஷாபேல் (Aix-la-Chapelle) செய்துகொண்டார். இதன்படி நெதர்லாந்துப் பகுதியில் சில இடங்களை ஃபிரான்சு பெற்றது. கைப்பற்றப்பட்ட இதர இடங்களை ஸ்பெயினுக்குத் திருப்பிக் கொடுக்க ஃபிரான்சு இசைந்தது.

லூயி நடத்திய இரண்டாவது போர் டச்சுப் போராகும் (1672—1678). லூயியினுடைய பெரும் பகைவர்கள் டச்சுக்காரர்களாவார்கள். இவர்கள் மூவரசு நேச ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி லூயியினுடைய முன்னேற்றத்தைத் தடை செய்தார்கள் என்று முன்னர்க் கண்டோம். உரிமைப்போர் முடிந்த பிறகு லூயி இதற்காக டச்சுக்காரர்களைத் தண்டிக்க எண்ணினர். மேலும், வர்த்தகத்துறையில் ஃபிரான்சின் போட்டியாளராக இருந்து அவருடைய வெறுப்பை டச்சுக்காரர்கள் தேடிக்கொண்டனர். லூயி மன்னர் கத்தோலிக்க மதத்தில் பற்றுள்ளவர். கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் நாட்டின் தலைவர். டச்சுக்காரர்கள் பிராடஸ்டண்டு மதத்தினராதலால் இவ்விருவருக்குமிடையே பகைமை யுணர்ச்சி வளரலாயிற்று. ஃபிரான்சு நாட்டில் வல்லாட்சி நடைபெற்று வந்தது. டச்சுக்காரர்கள் குடியாட்சி முறையைக் கையாண்டு வந்ததாலும் இவ்விரு நாடுகளுக்கிடையே

கசப்புணர்ச்சி வளர்ந்தது. போரிடுமுன் லூயி மன்னர் ஹாலந்து நாட்டின் நேசநாடுகளை அதனிடமிருந்து பிரித்தார். இங்கிலாந்து மன்னரான இரண்டாவது சார்லஸ் (Charles II) என்பவருடன் டோவர் இரகசிய ஒப்பந்தம் (Secret Treaty of Dover) ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி லூயி மன்னருக்கு டச்சுக்காரர்களுடன் போர் நடக்குங்காலத்தில் உதவிபுரிய அவர் ஒப்புதல் தெரிவித்தார். ஸ்வீடன் அரசாங்கத்திற்கு இலஞ்சம் கொடுத்து அந் நாட்டை மூவரசு நேச ஒப்பந்தத்தினின்றும் பிரித்தார். இந்த ஏற்பாடுகள் முடிவுற்ற பிறகு ஹாலந்து நாட்டின்மேல் படையெடுத்தார். யாதோர் உதவியின்றிப் போரிட்ட டச்சுக்காரர்கள் பல இடங்களை இழந்தனர். ஆம்ஸ்டர்டாம் நகருக்குப் பேராபத்து ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் வேறுவழியில்லாத காரணத்தால் சமாதானப் பேச்சினை ஆரம்பித்தனர். லூயி கண்மூடித் தனமாக அதனை நிராகரித்தார். அத் தருணத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. அரசியல் துறையில் ஆற்றல் வாய்ந்த வில்லியம் ஆரஞ்சு (William of Orange) என்பவரைத் தலைவராக டச்சுக்காரர்கள் அமர்த்திஞர்கள். ஹாலந்து நாடு கடல்மட்டத்திற்குக் கீழ் இருப்பதால், கடல் நீர் நாட்டிற்குள் புகாவண்ணம் செய்கரைகள் (dykes) எழுப்பப் பட்டிருந்தன. அதனை உடைத்தெறியுமாறு வில்லியம் கட்டளையிட்டார். சமவெளிப் பிரதேசம் முழுவதும் நீர்மயமாயிற்று. இதனுல் ஃபிரஞ்சுக் காரர்கள் பின்வாங்க நேரிட்டது. மேலும், தன்னுடைய திறமையால் வில்லியம் ஃபிரான்சுக்கெதிராக நேசநாட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திஞர். இதில் ஸ்பெயினும், ஜெர்மனியிலுள்ள பிராண்டன்பர்க்கும் கலந்து கொண்டன. இதற்கிடையில் இங்கிலாந்து லூயி மன்னருடன் சேர்ந்து போரில் ஈடுபட்டது. சில காலத்திற்குள் இங்கிலாந்தின் மக்கள் அதை எதிர்த்தனர். இங்கிலாந்தின் மக்கள் ஹாலந்து நாட்டுடன் சமாதனம் செய்துகொள்ளுமாறு அவர்களுடைய அரசாங்கத்தை வற்புறுத்திஞர்கள். 1678-ல் இப் போர் முடிவுற்றது. அப்பொழுது செய்துகொள்ளப்பட்ட நிமீஜியன் உடன்படிக்கைப்படி (Treaty of Nimeguen) ஃபிரான்சு வட எல்லையில் சில இடங்களையும், கிழக்கு எல்லையில் ஃபிரான்ஷி காம்டி (Franche Comte) என்ற பகுதியையும் பெற்றுத் தன்னுடைய நாட்டின் எல்லையை விரிவுபடுத்தியது. அதனு டைய புகழும் உயர்ந்தது.

லூயி நடத்திய மூன்ருவது போர் ஆக்ஸ்பர்க் ஒப்பந்த நாடு களுடன் 1688-ல் மேற்கொண்ட போராகும் (War of the League of Augsburg). இதற்கிடையேயிருந்த சமாதான காலத்தில் ரியூனியன்ஸ் (Reunions) எனப்படும் பிரதேசங்களை அவர் தன்னுட்டுடன் இணைத்துக்கொண்டார். 1648-ல் வெஸ்ட்பேலியா உடன்படிக்கை ஏற்பட்டது என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அதன்படி ஆல்சேஸ் (Alsace), லொரேன் (Lorraine) பகுதிகளில்

உள்ள சில மாவட்டங்கள் ஃபிரான்சுடன் இணைக்கப்பட்டன. அத்துடன் அப் பிரதேசங்களுக்கு இருந்த உரிமைகளை ஃபிரான்சு அனுபவிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. அவ் வுரிமைகள் சரிவர வரையறுக்கப்படவில்லை. ஆகவே, லூயி தனக்குச் சாதகமான ஒரு நீதிமன்றத்தை அமைத்து இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைந்தார். இறுதியில் ஆல்சேஸும், அத்துடன் ஸ்ட்ராஸ்பர்க் (Strassburg) என்ற ஜெர்மனியிலுள்ள நகரமும் ஃபிரான்சுக்குச் சேரவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. அதேபோல் லக்ஸம்பர்க்கும் (Luxemburg) இத்தாலியிலுள்ள காசேலும் (Casale) ஃபிரான்சுடன் இணைக்கப்பட்டன. ஸ்ட்ராஸ்பர்க்கு, காசேல், லக்ஸம்பர்க்கு ஆகிய இடங்களை ஃபிரான்சுடன் இணைப்பதைத் தடுத்து நிறுத்த ஜெர்மனியில் இராடிஸ்பன் (Ratisbon) என்னுமிடத்தில் ஜெர்மனியிலுள்ள நாடுகளின் பிரதிநிதிகள் கூடினர். அப் பிரதிநிதிகள், மேற்கூறிய இடங்களை ஆளும் உரிமையை இருபது ஆண்டுகளுக்கு லூயி மன்னருக்கு வழங்கவேண்டும் என்றும், தவறினால் சண்டையிட நேரிடும் என்றும் அவர் அறிக்கை விடுத்தார். இறுதியில் அவர்கள் லூயியின் கட்டளைக்கு இணங்கினார்கள்.

பல இடங்களைக் கைப்பற்றிய பிறகுங்கூட லூயி கொண்டிருந்த நாடுபிடிக்கும் ஆசை குறையவில்லை. ஆகவே, அவருக்கு எதிராக நாட்டுக் கூட்டிணைவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதற்கு ஆக்ஸ்பர்க்கு நாட்டுக் கூட்டிணைவு என்ற பெயரளிக்கப்பட்டது. அதில் ஹாலந்தும், ஸ்பெயினும், ஸ்வீடனும், வேறு சில நாடுகளும் கலந்து கொண்டன. ஆஸ்திரியப் பேரரசரும் சேர்ந்துகொண்டார். இதற்கிடையில் இங்கிலாந்தில் பெரும் புரட்சியொன்று ஏற்பட்டதன் விளைவாக, ஹாலந்து நாட்டின் தலைவரான வில்லியம் இங்கிலாந்து நாட்டுக்கு மன்னரானார். ஆகவே, இங்கிலாந்தும் இக் கூட்டிணைவில் கலந்துகொண்டது. 1688-ல் லூயி மன்னருக்கெதிராகத் தொடங்கப்பட்ட போரில் இங்கிலாந்தும் சேர்ந்துகொண்டது. இதற்குக் காரணம் லூயி மன்னர், இங்கிலாந்து மக்களால் துரத்தியடிக்கப்பட்ட இரண்டாவது ஜேம்ஸ் மன்னரை வில்லியத்திற்கு எதிராக ஆதரித்ததேயாகும். அதனால் இப் போருக்கு ஆங்கிலேய வாரிசுரிமைப்போர் (War of English Succession) என்ற பெயர் வழங்கப்பட்டது. அயர்லாந்திலும், நெதர்லாந்திலும், 'கடலிலும் இப் போர் நடைபெற்றது. அயர்லாந்துக்கு 1688-ல் ஓடிச்சென்ற ஜேம்ஸ் மன்னருக்கு உதவியாக அயர்லாந்தின் கத்தோலிக்கர்கள் திரண்டெழுந்தார்கள். மூன்றாவது வில்லியம் அயர்லாந்து சென்று ஜேம்ஸ் மன்னரை பாயின் நதிக் (Boyne) கரையில் நடந்த சண்டையில் தோற்கடித்தார். 1690-ல் நடைபெற்ற கப்பற்சண்டையில் ஃபிரஞ்சுக் கப்பற்படை ஆங்கிலேயக் கப்பற்படையினையும், டச்சுக்காரர்களின் கப்பற்படையினை பீசிஹெட் (Beachy Head) என்னுமிடத்திற்கு அருகேயும் தோற்கடித்தது.

1692-ல் லூயி இங்கிலாந்து நாட்டின்மீது படையெடுக்க பெருமுயற்சி செய்தார். லா ஹோக் முனைக்கு (Cape La Hogue) அருகே நடந்த சண்டையில் ஆங்கிலேயர்கள் ஃபிரஞ்சுக் கப்பற்படையைத் தோற் கடித்து, படையெடுப்பினைத் தடுத்து நிறுத்தினுர்கள். ஐரோப்பாவில் நடந்த போரில் லூயி பல வெற்றிகளை அடைந்தார். அநேக கோட்டை களைக் கைப்பற்றினுர். இப் போர் அமெரிக்காவிலும் நடைபெற்றது. ஃபிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான அகேடியா (Acadia) ஆங்கிலே யர் கைவசமாயிற்று. 1697-ல் இரு தரத்தாரும் களைத்துப்போன காரணத் தால் போரை நிறுத்திக்கொண்டார்கள். அப்பொழுது செய்துகொண்ட ரிஸ்விக் உடன்படிக்கையின்படி (Treaty of Ryswick) ஃபிரான்சு இப் போர் தொடங்குவதற்கு முன்னர் கைப்பற்றிய இடங்களையும், பிற இடங்களையும் திருப்பிக்கொடுக்க இசைந்தது. மூன்றும் வில்லியத்தை இங்கிலாந்தின் அரசராக லூயி ஏற்றுக்கொண்டார். ஜேம்ஸ் மன்னரும் அவருடைய வமிசத்தைச் சார்ந்தவர்களும் இங்கிலாந்து நாட்டின் ஆட்சியைத் திரும்பக் கைப்பற்ற மேற்கொள்ளும் முயற்சியை ஆதரிப்ப தில்லை என்று வாக்குறுதி கூறினுர்கள். எல்லைப்புறக் கோட்டைகளை டச்சுக்காரர்கள் தங்களுடைய சேனைகளைக்கொண்டு பலப்படுத்த அனுமதிக்கப்பட்டனர்.


லூயி துவக்கிய கடைசிப் போர், ஸ்பெயின் நாட்டின் வாரிசுரிமைப் போராகும். இப் போருக்கு அடிப்படைக் காரணம் ஸ்பெயின் நாட்டைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்று அவர் கொண்ட ஆசையேயாகும். அப்பொழுது ஸ்பெயின் நாட்டை இரண் டாம் சார்லஸ் (Charles II, the King of Spain) என்பவர் ஆண்டு வந்தார். அவருக்குக் குழந்தை எதுவும் இல்லை. ஆகவே, அவருக்குப் பின்னர் ஸ்பெயினை ஆளவேண்டியவரை நியமிப்பதில் ஐரோப்பிய அரசுகள் அவைகளுடைய கவனத்தைச் செலுத்தலாயின. சார்லஸ் அரசருக்குப் பின்னர்ப் பட்டத்திற்கு வர மூவருக்கு உரிமையிருந்தது. அவர்களுள் ஒருவர் சார்லஸின் மூத்த சகோதரியை மணம் புரிந்து கொண்ட பதினுன்காம் லூயி ஆவார். அடுத்து உரிமை கொண்டாடி யவர் பவேரியா நாட்டுத் தலைவரான (The Elector of Bavaria) மாக்ஸ் இம்மானுவேல் (Max Emmanuel) ஆவார். இவர் சார்லஸின் இளைய சகோதரியான மார்கரெட் தெரீஸாவிற்கும், அவர் கணவர் பேரரசர் லியோபால்டுக்கும் (Leopold) பிறந்த மேரியாவின் கணவ ராவார். பேரரசர் லியோபால்டும் ஸ்பெயின் நாட்டு ஆட்சி உரிமையைக் கோரினுர். இவர் இரண்டாம் சார்லஸின் தகப்பனுரான நான்காம் பிலிப்பின் இளைய சகோதரியின் மகனுவார். இவர்களில் எவரொருவர் பட்டத்திற்கு வரினும், வாரிசுப் போரொன்று நடைபெறுவது திண்ணம் என்பதையும், வல்லமைச் சமநிலை (balance of power) பாதிக்கப் படும் என்பதையும் அனைவரும் உணர்ந்திருந்தனர். அதே சமயத்தில்

வல்லரசுகள் வாரிசுரிமைப் போர் ஏற்படுவதையும், வல்லமைச் சமநிலை பாதிக்கப்படுவதையும் தடுக்க எண்ணினார்கள். உரிமை கொண்டாடிய மூவரும் தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களில் எவரேனும் ஒருவருக்குத் தங்களுடைய உரிமையை விட்டுக்கொடுக்க இசைந்தார்கள். இறுதியில் வில்லியம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக பாகப் பிரிவினை உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டது. அதன்படி மாக்ஸ் இம்மானுவேலினுடைய மகன் ஜோசப் ஃபெர்டினண்டு (Joseph Ferdinand) ஸ்பெயின் நாட்டரசராக ஏற்றுக்கொள்ள லூயி ஒப்புதல் தெரிவித்தார். ஃபிரான்சும், ஆஸ்திரியாவும் தங்களது உரிமையை விட்டுக்கொடுத்ததற்காக ஸ்பெயினுக்குச் சொந்தமாக இத்தாலியிலுள்ள பகுதிகளைப் பெறவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், சில காலத்திற்கெல்லாம் ஜோசப் ஃபெர்டினண்டு அம்மை கண்டு இறந்துவிட்டார். ஆகவே, இரண்டாவது பாகப் பிரிவினை ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி லியோபால்டின் இளைய மகன் சார்லஸ் ஸ்பெயின் நாட்டு அரசுக்கு உரிமை உடையவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இத்தாலியில் ஸ்பெயினுக்குச் சொந்தமாயிருந்த பகுதிகளை ஃபிரான்சு பெறவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இவ்விரு ஒப்பந்தங்களும் சார்லஸின் ஒப்புதல் இன்றியே செய்துகொள்ளப்பட்டன. இதனால் ஸ்பெயின் மக்கள் வெகுண்டெழுந்தனர். மேலும், அவர்களுடைய பேரரசைத் துண்டிக்க விரும்பவில்லை. ஆகவே, அவர்களுடைய அரசரை இப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வேண்டினர். இதன் விளைவாக சார்லஸ் வாழ்விறுதி விருப்பம் (Will) ஒன்று தயாரித்தார். அதன்படி லூயி மன்னரின் இளைய பேரனை பிலிப் சார்லஸுக்குப் பின் ஸ்பெயின் நாட்டரசராக நியமிக்கப்பட்டார். சார்லஸ் இறந்த பிறகு அவருடைய விருப்பம் வெளியிடப்பட்டது. உடனே லூயி தன்னுடைய பேரனை ஸ்பெயின் நாட்டரசராக ஏற்றுக்கொண்டார். இந் நிகழ்ச்சி மட்டும் போரைத் தொடங்கி இருக்கமுடியாது. ஏனெனில், இதனால் வல்லமைச் சமநிலை பாதிக்கப்பட்டதென்று கூற இயலாது. ஏனெனில், இளைய பேரனைத்தான் ஸ்பெயின் அரசராக ஏற்றுக்கொண்டார். மூத்த பேரன் உயிருடன் இருக்க இளைய பேரன் ஃபிரான்சு நாட்டு அரசராக முடியாதல்லவா? ஆனால், லூயியினுடைய செய்கைகளில் சில போருக்குக் காரணமாயின. ஸ்பெயின் நாட்டரசரான பிறகுங்கூட ஃபிலிப்பு ஃபிரான்சின் அரசுரிமையை இழக்கவில்லை என்று அறிவித்தார். ஃபிரான்சும், ஸ்பெயினும் ஒரு நாடு என்றே கருதி வந்தார். இதனின்றும் லூயி பிற்காலத்தில் ஃபிரான்சுடன் ஸ்பெயினை இணைத்து, ஃபிரான்சை வலிபொருந்திய நாடாக்க எண்ணினார் என்பது தெளிவாயிற்று. ஆதலால் வல்லமைச் சமநிலை பாதிக்கப்படும் என்று கருதிய நாடுகள் போருக்குத் தயாராயின. மேலும், லூயி ரிஸ்விக் உடன்படிக்கையை மீறி நடந்தார். டச்சுக்காரர்களை எல்லைப்புறக் கோட்டைகளினின்றும் துரத்தினர். இரண்டாவது

ஜேம்ஸின் மகனுன ஜேம்ஸ் என்பவரே இங்கிலாந்து நாட்டரசுரிமை பெறத் தகுந்தவர் என்று அறிவித்தார். ஆகவே, வில்லியம் ஐரோப்பிய நாடுகளுக்குத் தூதனுப்பி நேச நாடுகளின் கூட்டிணைவு ஒன்றை ஏற்படுத்தினுர். அவருடைய முயற்சியின் விளைவாக கிராண்ட் அலையன்ஸ் (Grand Alliance) என்ற நேச நாடுகள் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்டது. இதில் இங்கிலாந்து, ஹாலந்து, ஆஸ்திரியா, பிரான்டன்பர்க்கு, இன்னும் சில சிறு நாடுகள் சேர்ந்துகொண்டன. லியோபால்டின் இளைய மகன் சார்லஸ் என்பவரை ஸ்பெயின் நாட்டு அரசராக ஆக்குவதே அதனுடைய முக்கிய நோக்கமாகும்.

1702ஆம் ஆண்டு தொடங்கிய இப் போர் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், அட்லான்டிக் பெருங்கடலிலும், மத்தியதரைக் கடலிலும் நடைபெற்றது. ஐரோப்பாவில் ஃபிரஞ்சு சேனைகள் ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதர்லாந்தில் புகுந்தன. டச்சுக்காரர்கள் உதவியுடன் ஆங்கிலேயப் படைகள் மார்ல்பரோ பிரபுவின்கீழ் நெதர்லாந்தில் போரிட்டன. மார்ல்பரோவின் குறிக்கோள் ஃபிரஞ்சுப் படையினை நெதர்லாந்தினின்றும் துரத்தியடிப்பதேயாகும். இதற்கிடையே ஃபிரஞ்சுக்காரர்கள் பவேரியா நாட்டின் துணைகொண்டு ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னுவைக் கைப்பற்ற முயன்றனர். பேரரசருடைய வேண்டுகோளை ஏற்று மார்ல்பரோ பிரபு (Duke of Marlborough) தன் சேனையை மத்திய ஐரோப்பாவிற்கு நடத்திச் சென்ருர். பிலென்ஹீம் (Blenheim, 1704) என்னுமிடத்தில் ஃபிரஞ்சு சேனையை முறியடித்து வியன்னுவைக் காப்பாற்றினுர். இவ் வெற்றி ஃபிரஞ்சு சேனையின் மதிப்பைக் குறைத்துவிட்டது. பிறகு மார்ல்பரோ நெதர்லாந்துக்குச் சென்று அங்கு ஃபிரஞ்சுக்காரர்களை, ராமிலீஸ் (Ramillies), அவுடநார்டு (Oudenarde), மால்பிலேக் (Malplaquet) ஆகிய இடங்களில் தோற்கடித்து, அவ்விடத்தினின்றும் விரட்டினுர். இதற்கிடையில் ஸ்பெயினுக்குச் சொந்தமான ஜிப்ரால்டர் ஆங்கிலேயர் கைவசமாயிற்று. 1708-ல் மைனுர்கா (Minorca) தீவு ஆங்கிலேயர் கைவசமாயிற்று. போர் ஸ்பெயினிலும் நடைபெற்றது. நேச நாடுகள் பார்சிலோனுவைக் கைப்பற்றின. சேனைகளுடன் சென்ற லியோபால்டின் மகன் சார்லஸ், மூன்ரும் சார்லஸ் என்ற பெயருடன் ஸ்பெயினின் ஒரு பகுதிக்கு அரசரானுர். ஆனுல், இறுதியில் அல்மான்சா (Almanza) என்னுமிடத்தில் நடைபெற்ற சண்டையில் நேச நாடுகள் தோல்வியுற்றன. ஜிப்ரால்டரைத் தவிர மற்ற இடங்களினின்றும் அவர்கள் விரட்டப்பட்டனர். ஃபிரான்சுக்குச் சொந்தமான மேற்கிந்தியத் தீவுகள் தாக்கப்பட்டன. பல இடங்களில் தோல்வியுற்ற லூயி மன்னர் 1709-ல் சமாதானம் விரும்பினுர். ஆனுல், நேச நாடுகளின் நிபந்தனைகள் மிகக் கடுமையாக இருந்ததால் போரைத் தொடர்ந்து நடத்துவதென முடிவு கட்டினுர்.

ஸ்பெயின் அரச குடும்பத்தின் வழி விளக்க அட்டவணை



1711-ல் பிரிட்டனில் போரை விரும்பாத டோரி கட்சியினர் பதவியேற்றனர். மேலும், 1711-ல் ஆஸ்திரியாவின் சார்லஸ் பேரரசராஞர். அவர் ஸ்பெயின் நாட்டின் அரசராக அமர்த்தப்பட்டால் வல்லமைச் சமநிலை பாதிக்கப்படும் என்று உணர்ந்ததால், 1713-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் லூயி மன்னருடன் உட்ரெக்ட் சமாதானம் (Treaty of Utrecht) செய்துகொண்டது. அதன்படி ஐந்தாம் பிலிப், ஸ்பெயின் நாட்டு அரசராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆனால், அவர் ஃபிரான்சு நாட்டை ஆளும் உரிமையை இழந்தார். ஸ்டுவர்ட்டு குலத்தைச் சார்ந்த மூன்றும் ஜேம்சை ஆதரிப்பதில்லை என்று லூயி உறுதி கூறினர். ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதர்லாந்து, மிலான், சார்டினியா, நேபில்ஸ் ஆகிய இடங்கள் பேரரசர் சார்லஸுக்கு அளிக்கப்பட்டன. சிசிலித் தீவு சவாய் கோமகனுக்கு (Duke of Savay) அளிக்கப்பட்டது. பிரிட்டன் ஸ்பெயினுக்குச் சொந்தமான ஜிப்ரால்டர், மைனூர்கா ஆகிய இடங்களையும், அமெரிக்காவில் ஃபிரான்சுக்குச் சொந்தமான அகேடியாவையும் பெற்றது. நியூஃபவுண்டுலாந்து, ஹட்சன் வளைகுடா ஆகிய பிரதேசங்களில் ஃபிரஞ்சுக்காரர்கள் அனுபவித்திருந்த சில உரிமைகளை விட்டுக்கொடுத்தனர். ஸ்பெயினுடன் பிரிட்டன் ஏற்படுத்திக்கொண்ட ஆசியெண்டோ ஒப்பந்தத்தின்படி (Asiento Treaty) பிரிட்டிஷ்காரர்கள் ஸ்பெயினுக்குச் சொந்தமான அமெரிக்க நாடுகளுடன் வியாபாரம் செய்யவும், அந் நாடுகளுக்கு அடிமைகளை விற்கவும் அனுமதி பெற்றனர்.

ஆனால், பேரரசர் போரைத் தொடர்ந்து நடத்திவந்தார். ஃபிரஞ்சுக்காரர்கள் சில வெற்றிகளை அடைந்தார்கள். ஆகவே, 1714-ல் பேரரசர் லூயி மன்னருடன் ராஸ்டாட் உடன்படிக்கை (Treaty of Rastadt) செய்துகொண்டார். இது உட்ரெக்ட் உடன்படிக்கையின் நிபந்தனைகளை வலியுறுத்தியது.

இவ்வாறுக ஐரோப்பா ஃபிரஞ்சு அரசரின் ஆக்கிரமிப்புகளால் ஏற்பட்ட ஆபத்தினின்றும் காப்பாற்றப்பட்டது. லூயி மன்னருடைய பெருமை அழிந்தது. ஃபிரான்சு நாட்டின் நிதிநிலை சீரழிந்தது. போர் காரணமாக மக்கள்மீது கடுமையான வரிகள் விதிக்கப்பட்டன. இதனால் அவர்கள் மனக்கசப்பு அடைந்தனர். இந்த நிலையில் லூயியினுடைய மகனும், இரண்டு பேரன்களும் இறந்தனர். லூயி மனமுடைந்து 1715-ல் காலமானுர். மிகச் சிறப்பாகத் தொடங்கிய ஆட்சி, லூயி தொடங்கிய போர்களினுல் சீர்குலைந்து மக்கள் மதிப்பை இழந்துவிட்டது.

ருஷ்யாவில் வல்லரசு

ருஷ்ய நாடு ஐரோப்பாவின் கிழக்குப் பாகத்தில் பரந்து கிடக்கிறது. இடைக்காலத்தில் ருஷ்யா முக்கியத்துவம் பெற்ற

நாடாக விளங்கவில்லை. அக்காலத்தில் நாகரிக முதிர்ச்சியற்ற வாழ்க்கையை ருஷ்ய மக்கள் நடத்தி வந்தனர். அவர்களுடைய நாகரிகம் ஆசிய நாட்டு மக்களின் நாகரிகத்தைச் சார்ந்திருந்தது. வெகுகாலம் வரை அவர்களுடைய நாடு பல ஆட்சிப் பகுதிகளாகப் பிரிந்திருந்தன. அவைகளெல்லாவற்றையும் தார்த்தாரியர் (Tartars) என்ற மங்கோலியர்கள் தங்கள் ஆளுகைக்குட்படுத்தி இருந்தனர். அப் பகுதிகளில் ஒன்ருன மஸ்கோவியின் (Muscouy) தலைவரிடம், ருஷ்யத் தலைவர்கள் மங்கோலியர்களுக்குச் செலுத்தவேண்டிய கப்பப் பணம் வசூலிக்கும் பொறுப்பு விடப்பட்டிருந்தது. பிற்காலத்தில் மங்கோலியர் ஆதிக்கத்தை ஒழிக்க மேற்கொள்ளப்பட்ட இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை மஸ்கோவியின் சிற்றரசர் ஏற்பதற்கு அத்தகைய அதிகாரம் உதவியாக இருந்தது. மங்கோலியர்களை விரட்டியபின் எல்லா ருஷ்யத் தலைவர்களும் மஸ்கோவி சிற்றரசரின் ஆணைக்குட் பட்டு நடக்கலாயினர். இவ்வாருக ருஷ்ய அரசு ஏற்பட்டது. ருஷ்யாவின் அரசர்கள் ஃசார் (Czar) என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டனர். இதன் பிறகு ருஷ்ய அரசர்கள் தங்களுடைய நாட்டை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டனர். 16ஆம் நூற்ருண்டில் அரசாண்ட ஐவன் (Ivoan, the terrible) என்பவர் தார்த்தாரியர்களுக்குச் சொந்தமான காஜான் (Kazan), ஆஸ்ட்ரகான் (Astrakuan) போன்ற சிறு நாடுகளை வென்ருர். பிறகு ருஷ்யர்கள் சைபீரியாவில் குடி யேறினர். பதினேழாம் நூற்ருண்டில் ருஷ்யர்களின் ஆட்சி பசிஃபிக் பெருங்கடல் வரை பரவலாயிற்று. மேலும், மேற்குப் பாகத்திலும் போலந்துக்குச் சொந்தமான பகுதிகளை வென்று ருஷ்ய அரசர்கள் தங்களுடைய நாட்டை விரிவுபடுத்தினுர்கள்.

1598-ல் ருஷ்யாவை ஆண்டுவந்த அரச குடும்பம் மரபற்றழிந்தது. ஆதலால் நாட்டில் குழப்பங்கள் அதிகரித்தன. வெளிநாடுகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ருஷ்ய விவகாரங்களில் தலையிட்டுத் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டன. 1610-ல் போலந்து அர சாங்கம் ருஷ்யாவின்மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. அயல்நாட்டின் தலையீடு நாட்டில் கிளர்ச்சியை உண்டாக்கியது. இதன் விளைவாகப் போலந்தின் ஆதிக்கம் அகற்றப்பட்டது. 1613-ல் ரோமனுவ் (Romanov) வமிசத்தைச் சேர்ந்த மைக்கேல் (Michael) என்பவரைத் தங்களரசராகத் தேர்ந்தெடுத்தனர். 1645-ல் அலெக்ஸிஸ் (Alexis) என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவருடைய ஆட்சி முக்கிய நிகழ்ச்சிகள் நிறைந்த ஆட்சியாகும். ஏழ்மையில் வாடிக்கொண்டிருந்த மக்கள் பல கிளர்ச்சிகளைத் தொடங்கினுர்கள். 1649-ல் சட்டங்களைத் திருத்தியமைத்தார். அந்நியர்களைக் கொண்டு சிறந்த பயிற்சியைத் தன் வீரர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்தார். போர்ப் பயிற்சிக்காக வரவழைக்கப்பட்ட அந்நியர்கள் மேற்கத்திய நாகரிகப் பண்புகளை

ருஷ்யாவில் புகுத்தலாயினர். அலெக்ஸிஸ் தன் முன்னேர்கள் வழியைப் பின்பற்றி நாட்டை விரிவுபடுத்தினர். ஸ்வீடனுடன் சேர்ந்து, போலந்துக்கு எதிராகப் போரிட்டு வெள்ளை ருஷ்யாவையும் சிறிய ருஷ்யாவையும் தன் நாட்டுடன் 1656-ல் இணைத்தார். பிறகு ஸ்வீடனுடன் போரிட்டார். இதை அறிந்த போலந்து 1656-ல் அது ருஷ்யாவுடன் செய்துகொண்ட வில்ஞ உடன்படிக்கையை (Treaty of Vilna) நிராகரித்தது. இரண்டு பகைவர்களுடன் ஒரே சமயத்தில் போரிடுவது உசிதமன்று என்று எண்ணிய அலெக்ஸிஸ் ஸ்வீடனுடன் சமாதானம் செய்துகொண்டார். இதன்படி ருஷ்யா பால்டிக் கடலையும் பின்லாந்து வளைகுடாவையும் பயன்படுத்தும் உரிமையை இழந்தது. இறுதியில் அலெக்ஸிஸ் போலந்துடன் சமாதானம் செய்துகொண்டார். அதனுல் சில பகுதிகளைப் போலந்திடமிருந்து பெற்றுர்.

அலெக்ஸிஸ் மறைவிற்குப் பின்னர் 1676-ல் மூன்றும் தியோடர் (Theodore III) பட்டத்திற்கு வந்தார். 1682-ல் குழந்தையேதுமின்றி அவர் இறந்தார். அவருக்கு ஐவன், பீட்டர் என்ற இரு சகோதரர்கள் இருந்தனர். அவர்களிருவரும் வெவ்வேறு தாய் வயிற்றில் பிறந்தவர்கள்; அப்பொழுது ஐவனுக்கு வயது பதினுறு; பீட்டருக்கு வயது பத்து. ஐவன் மிக்க பலவீனனுக இருந்ததால் மக்கள் பீட்டரை அரசராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனுல், ஐவனின் தமக்கையான சோபியா அவருடைய தம்பி பட்டத்திற்கு வரவேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். இறுதியில் இரு சகோதரர்களும் அரசாள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. 1696-ல் ஐவன் இறந்த பிறகு பீட்டர் மட்டும் ஆட்சிசெய்து வந்தார். அவருடைய ஆட்சிக்காலம், தற்கால ருஷ்யாவின் வரலாற்றின் தொடக்கத்தைக் குறித்துக் காட்டுகிறது என்று கூறப்படுகிறது.

வரலாற்று ஏடுகளில் காணக்கிடக்கும் விசித்திர மனிதர்களுள் பீட்டரும் ஒருவராவார். உடல் வலிமை பெற்றவர். அவர் மகா முரடர். எதற்கும் கட்டுப்படாதவர். கொடுஞ் செயல்களைச் செய்வதற்கு அஞ்ச மாட்டார். அவருடைய சகோதரி சோபியாவை அடைத்து வைத்தார். அவருடைய மனைவியை கன்னிமாடத்தில் சேர்த்துவிட்டார். அவருடைய மகனை அவரை எதிர்த்த காரணத்திற்காகச் சித்திரவதை செய்து கடைசியில் கொன்றுர். அவர் ஒரு குடிகாரர். ஆகவே, அவர் இறந்தபொழுது மக்கள் எல்லோரும் பேராறுதல் அடைந்தார்கள். அவரிடத்தில் சில நற்பண்புகளும் காணப்பட்டன. அவர் அயராது உழைக்கும் திறனைப் பெற்றிருந்தார். கடு உழைப்பில் இன்பத்தைக் காணும் பண்புடையவர். எவ்வித வேலையும் ஏற்றுச் செவ்வனே நடத்தும் திறம் பெற்றிருந்தார். அவர் உயர்ந்த பதவியிலிருந்த போதிலும், எந்த வேலையினையும் அவருடைய தகுதிக்குத் தாழ்ந்தது

என்று கருதியதில்லை. விஞ்ஞானம், தொழில் ஆகியவற்றில் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். சில சமயம் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டிருந்தபொழுதிலும், ருஷ்யர்கள் மேலைநாட்டுப் பண்புகளை மேற்கொண்டு சிறப்பாக வாழவேண்டும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டிருந்தார். அந் நோக்கத்தை நிறைவேற்ற அரும்பாடுபட்டார். ஆதலால் அடில்லா என்ற கொடிய ஹூணப் படைத்தலைவரிடம் காணப்பட்ட கேவலமான பண்புகளும், பதினான்காம் லூயி பெற்றிருந்த உயரிய பண்புகளும் ஒருங்கே இவரிடம் சேர்ந்திருந்தன என்பது முற்றிலும் உண்மையாகும்.[1]

பீட்டரின் நோக்கங்களில் ஒன்று அவருடைய அதிகாரத்தைப் பெருக்குவதேயாகும். இதை நிறைவேற்றும்பொருட்டு வல்லாட்சியினை அமைத்தார். அரசர் எல்லோருக்கும் மேம்பட்டவர்; அவர் இவ்வுலகத்தில் எவருக்கும் கீழ்ப்படிந்தவரல்லர்; அவர் கடவுளைத் தவிர வேறொருவருக்கும் பதில் சொல்லும் பொறுப்புடையவரல்லர் என்று அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டார். அரசர் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் சில முட்டுக்கட்டைகள் இருப்பதை அவர் உணர்ந்திருந்தார். ஆகவே, அவர் முதலில் அவைகளை அகற்ற முற்பட்டார். வல்லாட்சியை அமைப்பதில் பெரிய முட்டுக்கட்டாக விளங்கியவர்கள் பிரபுக்களே ஆவார்கள். அதனால் அவர்கள் அனுபவித்துவந்த உரிமைகளையும் சலுகைகளையும் ஒழித்தார். பிரபுக்களைக்கொண்ட டுமா (Duma) என்னும் சபையை அழித்தார். அரசாங்க அலுவலர்களை அமர்த்தும்பொழுது உயர் குடியில் பிறந்தவர்களுக்குத் தனிச் சலுகைகள் காட்ட மறுத்தார்.

பிரபுக்களின் செல்வாக்கைக் குறைத்த பிறகு ஸ்ட்ரெல்ட்சி (Streltsi) என்னும் மெய்க்காவற்படையை அழிப்பதில் தன் கவனத்தைச் செலுத்தினார். இப் படையிலுள்ள வீரர்கள் சில சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தார்கள். இவர்கள் பெரும்பாலோர் சோம்பேறிகளாகவும், திறமையற்றவர்களாகவும் இருந்தார்கள். மேலும், பீட்டர் புகுத்த விரும்பிய நூதன கருத்துகளை எதிர்த்தனர். அவர்கள் தொடங்கிய கலகத்தை அடக்கி, கையிலகப்பட்ட அனைவரையும் தூக்கிலிட்டுக் கொன்றார்.

பீட்டருடைய அதிகாரத்தைப் பெருக்குவதற்குக் குறுக்கே இருந்த மற்றொரு தடை ருஷ்ய மத ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனத்தின்

[1] A. J. கிரான்ட், 'ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டுகளின் வரலாறு', பக்கம் 624 (A. J. Grant, 'Europe—The Story of the Last Five Centuries').

தலைவர் (Patriarch of Moscow) மதகுருமார்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு சமூகத்தினரிடம் மிக்க செல்வாக்கு இருந்தது. இத்தகைய செல்வாக்குடன் தனித்தியங்குகிற மதத்தலைவர் வல்லாட்சி முறைக்கு முரணுகக் கருதப்பட்டார். ஆகவே, பீட்டர், மதத்தலைவர் பெற்றிருந்த அதிகாரங்களை அவரிடமிருந்து பிடுங்கி, அவற்றைப் புதிதாக ஏற்படுத்திய தூயசபைக்கு (Holy Synod) வழங்கினுர். இச் சபையில் உள்ள உறுப்பினர் அனைவரும் அரசரால் நியமிக்கப்பட்ட மதகுருக்களாவார்கள். அரசரால் அமர்த்தப்பட்ட மதத்துறை சாராதவர் ஒருவர் அதனுடைய தலைவராக நியமிக்கப்பட்டார். இச் சபைக்கு மத விவகாரங்களில் முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டது. மதச் சொத்துகளின்மீது மடாதிபதிகளுக்கு இருந்த அதிகாரம் பிடுங்கப்பட்டது. மடத்துறவிகளுக்கு அரசாங்கமே சம்பளத் தொகையைக் கொடுத்து வந்தது. அப்பொழுதிலிருந்து மத ஸ்தாபனம் அரசருடைய உண்மை ஊழியர்களுள் ஒன்ருக மாறியது.

அதன் பிறகு பீட்டர் ஆட்சி முறையை அவருடைய கருத்துக்கு ஏற்றவாறு திருத்தியமைக்க முற்பட்டார். ருஷ்ய பிரபுக்கள் அடங்கிய சபையைக் கலைத்தார் என்று முன்னரே குறிப்பிட்டோம். அத்துடன் ஏனைய மக்கட் பிரிவுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட மற்ருெரு சபையினையும் ஒழித்துக் கட்டினுர். அவைகளுக்குப் பதிலாக, ஆட்சி முறையில் தனக்கு உதவியாக இருக்கும்பொருட்டு ஓர் ஆலோசனை சபையை ஏற்படுத்தினுர். அடிக்கடி போர்க் காரணமாக ருஷ்யாவைவிட்டுச் செல்லவேண்டியதாய் இருந்ததால் பீட்டர் ஆட்சி முறை சார்ந்த சபையொன்றை (Administrative Senate) ஏற்படுத்தினுர். அவர் தலைநகரில் இல்லாத காலத்தில் எல்லா அதிகாரங்களையும் இச் சபை பெற்றிருந்தது. ஆட்சி முறை ஒழுங்காக அமையும்பொருட்டு, மைய ஆட்சி முறையை ஒன்பது துறைகளாகப் பிரித்தார். அவைகள் ஒவ்வொன்றினையும் காலேஜ் (Colleges) என்றழைக்கப்பட்ட சிறு குழுவின் அதிகாரத்திற்குட்படுத்தினுர். ருஷ்யா எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதிக்கும் கவர்னர் ஒருவர் அமர்த்தப்பட்டார். வரி வசூல் செய்வதே அவருடைய முக்கிய வேலையாகும். தலத்தாபன ஆட்சி முறையும் திருத்தியமைக்கப்பட்டது. மேலைநாட்டுப் பாணியில் நகரசபைகள் ஏற்படுத்தப்பட்டன. ருஷ்ய நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இடைநிலை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையொன்று அமைக்கப்பட்டது. தன்னுடைய வல்லாட்சிக்கு உறுதுணையாக இரண்டு அமைப்புகளை ஏற்படுத்தினுர். அவற்றுள் ஒன்று இரகசிய பாதுகாப்புப் (Police) படையாகும். மற்றென்று இரண்டு லட்சம் பேர் கொண்ட இராணுவப்படையாகும். இப்படையினருக்குப் பயிற்சி அளிக்க அன்னியர்களை வரவழைத்தார். அதனுடைய முக்கிய ஆணையர்கள் வெளிநாட்டவர்களாகவே இருந்

தனர். படித்தவர்களும் திறமைசாலிகளுமே ஆணையர்களாக அமர்த்தப் பட்டனர்.

இவருடைய ஆட்சி ஒழுங்காக நடைபெறுவதற்குச் சீரான நிதி அமைப்பு அவசியமென்பதை நன்குணர்ந்தார். எல்லா வகுப்பினரும் வரி செலுத்தும் முறையைப் புகுத்தினர். எனினும், சாதாரண மக்களே அதிக வரி செலுத்தி வந்தார்கள். அரசாங்க வருவாயைப் பாதுகாக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பொதுக் கணக்குகளைச் சீராக வைப்ப தற்காக நில அலுவலகங்களை (Land offices) ஏற்படுத்தினர். ஊழல் நிறைந்த அதிகாரிகள் கடுமையாக தண்டிக்கப்பட்டார்கள். அரசாங்க வருமானத்தைப் பெருக்க மதுபானங்களை விற்கும் உரிமையை அரசாங்கமே ஏற்றுக்கொண்டது.

பொருளாதாரம்பற்றிய நடவடிக்கைகள்

பீட்டர் ருஷ்ய மக்களின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் சிறு பிள்ளையாக இருந்தபொழுதே தொழில் துறையில் நாட்டம் செலுத்தினர். மேல் நாட்டுத் தொழில்களைக் குறிப்பாகக் கப்பல் கட்டும் தொழிலைக் கற்றுக் கொள்வதற்காக அவரே அந் நாடுகளுக்குச் சென்றர். ஹாலந்து நாட்டில் ஒரு சாதாரணத் தொழிலாளியாகக் கப்பல் துறைகளில் வேலை பார்த்தார். ருஷ்ய மக்களை வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் முறைகளைக் கற்றுக்கொள்ளுமாறு தூண்டினர். வெளிநாடுகளிலிருந்து நூற்றுக் கணக்கான கைவினைஞர்களை வரவழைத்தார். அவர்களுக்கு அநேக சலுகைகளைக் காட்டினர். அவர் காலத்தில் இரும்புத் தொழில், நெசவுத்தொழில் ஆகியவை வளர்ச்சியடைந்தன. தோல் பதனிடும் தொழிலில் புதுமுறைகள் கையாளப்பட்டன. கப்பல்கட்டும் தொழிலில் அதிக அக்கறையை அவர் காட்டிவந்தார். தொழில் வளத்தைப் பெருக்கச் சிறப்பு முறை அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர். ருஷ்யாவின் வர்த்த கத்தைப் பெருக்குவதற்கு பிரிட்டன், ஹாலந்து ஆகிய நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கையைச் செய்துகொண்டார். ருஷ்ய வர்த்தகர் களின் நன்மைக்காக வியாபாரக் கம்பெனிகள் நிறுவப்பட்டன. சாலை களை அமைத்தார். கால்வாய்கள் வெட்டினர். நாணயமுறையில் சீர்கேடுகள் மலிந்திருந்ததால் வியாபாரம் வளர்ச்சியடையவில்லை என்பதைப் பீட்டர் உணர்ந்தார். ஆகவே, நாணயமுறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தினர். தங்க நாணயங்களைத் தயாரிக்கவும், அவைகளின் தரத்தை அளவிடவும், தங்கசாலைகள் நிறுவப்பட்டன.

சமுதாயஞ் சார்ந்த நடவடிக்கைகள்

மேலைநாட்டு நாகரிகத்தை ருஷ்யாவில் புகுத்தவேண்டுமென்பது பீட்டரின் தலையாய நோக்கமாக இருந்தது. அவர் காலத்தில் ஐரோப்

பியர்கள் தாடி வளர்க்கும் வழக்கத்தைப் பெரும்பாலும் கைவிட்டிருந் தார்கள். ஆகவே, பீட்டர் ருஷ்யர்களும் தாடி வளர்க்கும் வழக்கத்தைக் கைவிடவேண்டும் என்று கட்டளை இட்டார். அவர் நாட்டு மக்களின் தலைவர்களை அழைத்துத் தன்னுடைய கைகளினுலேயே அவர்களுடைய தாடியையும், நீண்ட மீசையையும் கத்தரித்துவிட்டார். அதற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டதால் தாடி வளர்ப்பதை அனுமதித்தார். ஆனல், தாடியை வைத்திருப்பவர்களை அதற்கென வரி கட்டுமாறு கட்டாயப் படுத்திஞர். ருஷ்யர்கள் நீண்ட ஆடைகளை அணிவது வழக்கமாக இருந்தது. பீட்டர் மேல்நாட்டு பாணியில் ஆடைகள் அணியவேண்டும் என்று பணித்தார். நகர வாயில்களில் காவலாளிகளை நிறுத்தி முழங் கால்வரை ஆடைகளைக் கத்தரித்துவிடுமாறு கட்டளையிட்டார். ருஷ்யப் பெண்களும் மேல்நாட்டவர்கள்போல் ஆடைகள் அணியவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். ருஷ்யப் பெண்களின் நிலை உயர்த்தப்பட்டது. கட்டாய மணம் தடை செய்யப்பட்டது. இது காறும் ருஷ்யப் பெண்கள் பிறர் பார்வையில் படாமல் வாழ்ந்து வந்தனர். ஆனல், பெண்கள் அரண்மனை விழாக்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். மேல்நாட்டு மக்களைப்போல் புகைபிடிக்கும் வழக்கத்தைக் கற்றுக்கொள்ளுமாறு கட்டளையிட்டார். அரசர் முன் மக்கள் முழங்காலிட்டு வணங்கும் வழக்கத்தையும் ஒழித்தார். ஐரோப்பிய நடன முறையைப் புகுத்திஞர். இதுவரை ருஷ்யர்கள் செப்டம்பர் முதல் தேதியினை வருடப்பிறப்பு நாளாகக் கொண்டாடினர். இனி ஐரோப்பியர்களைப்போல ஜனவரி முதல் தேதியினை வருட ஆரம்ப நாளாகக் கொள்ளவேண்டும் என்று கட்டளையிட்டார். மாஸ்கோ நகரில் ஒரு நவீன மருத்துவசாலையைக் கட்டிஞர். நகரத்தின் சுகாதாரத்தைப் பெருக்குவதற்குச் சுகாதார அதிகாரிகளை அமர்த்திஞர். தீ விபத்தி னின்றும் மக்களைக் காப்பாற்ற எல்லா வீடுகளையும் செங்கற்களால் கட்ட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

கல்வித்துறையில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படு வதற்கு வழிவகை செய்தார். கணக்கியல், நீர்வழிச் செலவுபற்றிய பாடங்களைப் போதிக்கும் பள்ளிகள் நிறுவப்பட்டன. ஃபிரஞ்சு மொழி யும், ஜெர்மன் மொழியும் பள்ளிகளில் போதிக்குமாறு பணித்தார். விஞ்ஞானத்தைப் பெருக்குவதற்கு ஏராளமான பொருள் செலவிடப் பட்டது. விஞ்ஞானக் கலைக்கழகம் (Academy of Science) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ருஷ்ய மொழியின் எழுத்துத் தொகுதி சுருக்க வடிவமாக்கப்பட்டது.

ருஷ்யர்களின் சட்டத்தொகுதி ஸ்வீடன் நாட்டு சட்டத் தொகுதி யின் கருத்துகளுக்கேற்றுற்போல் மாற்றியமைக்கப்பட்டது. புதிய வாரிசுச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி விளைநிலம் முழு

வதும் மூத்த பிள்ளைக்கே சேரவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இவ் வழக்கத்தை இங்கிலாந்து நாட்டில் மக்கள் கடைப்பிடித்து வருவதை பீட்டர் கண்டறிந்தார்.

மதத்துறையிலும் பல திருத்தங்களை ஏற்படுத்தினர். லூயி மன்னரைப்போல் அவர் மதவெறியர் அல்லர். ஆகவே, எல்லோருக்கும் தொழுகை சுதந்திரம் வழங்கினர். யூதர்களுக்கு இச் சுதந்திரம் வழங்கப் படவில்லை என்பது இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும். எல்லா மக்களும் ஆண்டுக்கொருமுறை கோயிலுக்குச் சென்று தங்களுடைய பாவங்களை சமய குருமாரிடம் முறைப்படி தெரிவிக்கவேண்டும் என்று ஆணையிட்டார். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாகப் பின்பற்ற வேண்டும் என்று கூறினர்.

பீட்டர் லூயி மன்னரைப்போல் கட்டடம் கட்டுவதில் ஆர்வம் காட்டினர். பீட்டர்ஸ்பர்க்கு என்னும் புதிய நகரத்தைக் கட்டுவித்து அதனைத் தன்னுடைய தலைநகரமாக்கினர். அவ்விடத்தில் அழகிய மாளிகை யொன்றையும் கட்டுவித்தார்.

வெளிநாட்டுக் கொள்கை

பீட்டர் அரச பதவியேற்றபொழுது, ருஷ்யர்கள் காஸ்பியன் கடல், வெண்கடல் ஆகியவற்றின் வழியாகமட்டுமே கடல்வழி வர்த்தகம் மேற்கொள்ள வாய்ப்பிருந்தது. இவற்றுள் காஸ்பியன் கடல் ஓர் ஏரியாக இருப்பதாலும், வெண்கடல் பெரும்பாலும் உறைந்து கிடப்பதாலும், ருஷ்யர்களின் வியாபாரம் செழித்து ஓங்கவில்லை என்பதைப் பீட்டர் கண்டறிந்தார். ஆகவே, அவருடைய கவனத்தை பால்டிக் கடல் பக்கமும், கருங்கடல் பக்கமும் திருப்பினர். அப்பொழுது பால்டிக்கடல் பிரதேசம் வலிமை பொருந்திய ஸ்வீடன் ஆட்சிக்குட்பட்டிருந்ததால், பீட்டர் துருக்கியின் ஆளுகைக்குட்பட்டிருந்த கருங்கடல் பிரதேசத்தைக் கைப்பற்ற முனைந்தார். அஜாவ் (Azov) என்ற துருக்கியர்களின் கோட்டையைக் கைப்பற்றுதலை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டார். பீட்டரே பெருஞ் சேனையொன்றை 1695-ல் நடத்திச் சென்றார். ஆனல், அதைக் கைப்பற்றும் முயற்சியில் தோல்வியுற்றார். கப்பற்படை இல்லாததே தோல்விக்குக் காரணமென்றறிந்த பீட்டர் அயல் நாடுகளிலிருந்து கப்பல் கட்டுவதில் வல்லுநர்களை வரவழைத்து ஒரு கப்பற்படையைக் கட்டுவித்தார். 1696-ல் மீண்டும் துருக்கியுடன் போரிட்டுக் கப்பற்படையின் துணைகொண்டு அஜாவ் கோட்டையைப் பிடித்தார். அவ்விடத்தில் கப்பற்படைத் தாவளம் (Naval Station) ஒன்றை அமைத்தார். இவ் வெற்றிக்குப் பிறகு தேசிய கடற்படையொன்று அமைக்க முடிவு கட்டினர். மேலும், துருக்கியர்களை வென்று கருங்கடல் பிரதேசத்திலுள்ள கிரிமியா (Crimea) தீபகற்பத்தைத் தன் நாட்டுடன் இணைத்துக்கொள்

ளப் பிற நாடுகளின் உதவி இன்றியமையாதது என்றும் அறிந்தார். ஆகவே, வெளிநாடுகளின் உதவிபெறத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி வைத்தார். ஹாலந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளின் கப்பல்கட்டும் முறையையும், விஞ்ஞானம் முதலியவற்றையும் கற்றுக்கொள்ள ருஷ்யர் களை அங்கு அனுப்பிவைத்தார். அவரே மாறு பெயருடன் அந் நாடு களில் சென்று பல தொழில்களைக் கற்றுவந்தார் என்று முன்னரே குறிப் பிட்டோம். தேசிய கப்பற்படையை உருவாக்குவதில் வெற்றி கண்டார். ஆனால், துருக்கியர்களுடன் நடத்த எண்ணியிருந்த போரில் மேலை நாடுகளின் உதவியைப்பெற அவர் செய்த முயற்சி தோல்வியுற்றது. பிறநாடுகளின் உதவியின்றி கிரிமியாவைக் கைப்பற்ற முடியாது என்று அறிந்த பீட்டர் தன்னுடைய கவனத்தை பால்டிக் கடற்பக்கம் திருப்பி விட்டார்.

அக்காலத்தில் ஃபின்லாந்து (Finland), எஸ்தோனியா (Estonia), லாட்வியா (Latvia) ஆகிய பால்டிக் கரை நாடுகள் ஸ்வீடன் ஆட்சிக் குட்பட்டிருந்தன. மேலைநாடுகளுடன் தொடர்புகொள்ள இவ்விடங் களைத் தன் நாட்டுடன் இணைப்பதவசியம் என்பதைப் பீட்டர் உணர்ந் திருந்தார். ஆகவே, ஸ்வீடனுடன் போரிடத் தயாரானுர். அப்பொழுது பதினைந்து வயது நிரம்பிய பன்னிரண்டாவது சார்லஸ் ஸ்வீடனில் ஆட்சி புரிந்துவந்தார். ஸ்வீடன் அரசர் சிறு பிள்ளையாக இருந்தமை யால் அவரைத் தோற்கடிப்பது எளிதான காரியமென்று பீட்டர் கருதி னுர். இச் சண்டையில் தனக்கு உதவியாகப் பீட்டர் போலந்து நாட்டரச ரையும் டென்மார்க்கு அரசரையும் சேர்த்துக்கொண்டார். சிறுபிள்ளை யாக இருந்தபோதிலும் சார்லஸ் திறமை வாய்ந்தவர்; திடசித்தமுடை யவர்; இராணுவக் கலையினை நன்கு பயின்றவர். 1699-ல் சார்லஸ் டென்மார்க்கு நாட்டிற்குத் தன்னுடைய சேனையை நடத்திச் சென்று அந் நாட்டைப் பணியவைத்தார். பிறகு ருஷ்யநாட்டிற்குள் புகுந்து நார்வா (Narva) என்னும் இடத்தில் ருஷ்யர்களைத் தோற்கடித்தார். அதன் பிறகு போலந்து நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, அதன் தலை நகரைக் கைப்பற்றி, புதிய ஆட்சியொன்றை ஏற்படுத்தினுர். தொடர்ந்து அவர் பெற்ற வெற்றிகள் அவரை மேலும் வெற்றிகளைத் தேடுமாறு ஊக்கின. ஆகவே, மறுபடியும் ருஷ்யர்கள் பக்கம் அவரது கவனத்தைத் திருப்பினுர். மாஸ்கோ நகரத்தை நோக்கிப் பெருஞ்சேனை யொன்றை நடத்திச் சென்ருர். ருஷ்யநாட்டின் குளிர், போதிய ஆகார மின்மை, தேவையான போர்க்கருவிகள் பெற இயலாமை ஆகிய கார ணங்களால் அவருடைய சேனை அதிக இன்னல்களுக்குட்பட்டது. இறுதியில் புல்டோவா (Pultowa) என்னும் இடத்தில் தோற்கடிக்கப் பட்டது. 1721-ல் போர் முடிவுற்றது. அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட நைஸ்டாட் உடன்படிக்கையின்படி (Treaty of Nystad) எஸ்தோ னியா, லாட்வியா, ஃபின்லாந்தின் ஒரு பகுதி ஆகிய நாடுகளடங்கிய

பால்டிக்கரை பிரதேசத்தை ருஷ்யா பெற்றது. ருஷ்யர்கள் இனி மேலைநாடுகளுடன் எளிதில் தொடர்புகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே, இதனை மேலைநாடுகள் பக்கமாக அமைக்கப்பட்ட சன்னல்கள் (Windows to the West) என்று கூறுகிறார்கள்.

1725-ல் பீட்டர் இறந்தார். பல குறைகள் அவரிடம் காணப்பட்ட போதிலும், பிற்போக்கு சக்திகள் நிரம்பியிருந்த ருஷ்யாவை நவீன நாடாக மாற்றியமைத்துப் பெரும்புகழ் தேடிக்கொண்டார். தற்கால நாடு பெற்றிருக்கவேண்டிய சிறப்புக் கூறுகளான பலம்பொருந்திய சேனை, கப்பற்படை, அமைதிக்கால பணித்துறை ஆகியவற்றைத் தம் பெரு முயற்சியினால் உருவாக்கி ருஷ்யாவிற்குத் தந்தார்.[1] கல்வி, தொழில் ஆகிய துறைகளிலும் ருஷ்யர்கள் முன்னேறவேண்டிய அவசியத்தைக் குறித்துக் காட்டியுள்ளார். இத்துணை நற்காரியங்களை அவர் செய்து முடித்ததால், அவரை மகாபீட்டர் என்று அழைக்கிறார்கள்.

பீட்டருக்கு அடுத்தபடியாக ஆட்சிசெய்த மிகச்சிறந்த அரசி இரண்டாவது காதரைன் (Catherine II, 1762—1796) ஆவார். பீட்டர் 1725-ல் மறைந்தார் என்று முன்னரே கூறினோம். இரண்டாவது காதரைன் 1762-ல் பதவியேற்றார். இதற்கிடையே ருஷ்யாவைப் பீட்டரின் மனைவி முதலாவது காதரைன் (1725—1727), அவருடைய பேரனான இரண்டாவது பீட்டர் (1727—1730), அவரது தமையன் மகளான ஆன் (Anne, 1730—1740), அவரது இளைய மகளான எலிசபெத் (Elizabeth, 1741—1762) ஆகியோர் ஆண்டனர். இவர்களெல்லோரும் பலவீனர்களாகவும், பிற்போக்குக் கருத்துடையவர்களாகவும் இருந்தனர். ஆன் காலத்தில் ஜெர்மானியர்களுடைய செல்வாக்குப் பெருகியது. முக்கியப் பதவிகள் எல்லாம் ஜெர்மானியர்களுக்கே கொடுக்கப்பட்டன. அவருக்குப்பின் ஆட்சிசெலுத்திய எலிசபெத் ஜெர்மானியர்களை வெறுத்தார். ருஷ்யர்களையே பெரும்பதவிகளில் அமர்த்தினார். இவர் காலத்தில் ருஷ்யா, பிரஷ்ய (Prussia) நாட்டுடன் போர் தொடங்கியது. எலிசபெத் அரசிக்குப் பிறகு மூன்றாவது பீட்டர் பட்டத்துக்கு வந்தார். அவர் மகாபீட்டரின் மூத்தமகளின் மகனாவார். அவர் களியாட்டங்களில் தனது கவனத்தைச் செலுத்தினார். அவரை ஓர் அரைப் பயித்தியமாக மக்கள் கருதினார்கள். ஆகவே, அவரை அரியணையிலிருந்து அகற்ற ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. அவரது மனைவி, ஜெர்மனியிலுள்ள சிற்றரசர் குடும்பத்தைச் சார்ந்த காதரைன், கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி செய்தார். பீட்டர் சிறையிலடைக்கப்பட்டு, பிறகு கொலை செய்யப்படுவதற்

[1] பிஷர், 'ஐரோப்பிய வரலாறு', பக்கம் 723. (Fisher, 'A History of Europe', page 723).

கும் இவர் உடந்தையாக இருந்தார். பிறகு காதரைனே அரசப் பொறுப்பேற்ருர். ஜெர்மனியைச் சார்ந்தவரென்ருலும், அவர் ருஷ்ய மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தார். அவர்களுடைய நன்மதிப் பைப் பெறுவதற்குப் பல வழிகளைக் கையாண்டார். ருஷ்ய மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார். ருஷ்ய மதத்தைத் தழுவினுர். எப்பொழு தும் ருஷ்யர்களுடைய யோசனையின்படியே நடக்கலானுர். அவர் நடத்தை கெட்டவர் என்ருலும் திறமை வாய்ந்தவர். நாட்டு நன்மை யையே கோருந் தன்மையுடையவர்.

காதரைன் வல்லாட்சி முறைக் கருத்துகளுக்கேற்ப ஆட்சி முறை யைத் திருத்தியமைத்தார். நியாயம் வழங்கும் முறையைச் சீர்படுத்தி னுர். மத ஸ்தாபனத்தை அவரது அதிகாரத்துக்குட்படுத்துவதற்காக அதனுடைய சொத்துகளைப் பறிமுதல் செய்தார். அவருடைய ஆட்சியை உண்மையுடன் ஆதரிப்பவர்களுக்குத் தக்க வெகுமதிகளை அளித்தார். மகாபீட்டர் ருஷ்யாவை மேற்கத்திய மயமாக்குவதற்கெனத் தொடங்கிய இயக்கத்தை காதரைன் பின்பற்றினுர். அக்காலத்தில் ஃபிரான்சு நாட்டில் சிறந்து விளங்கிய கற்றறிந்த பெரியோர்களுடனும், தத்துவ நூலாசிரியர்களுடனும் தொடர்பு வைத்துக்கொண்டார். ஃபிரஞ்சு மொழியினையும், பழக்க வழக்கங்களையும், கட்டடக் கலையினை யும் ருஷ்யர்கள் கற்றுக்கொள்ளும்படி ஊக்குவித்தார். வெளிநாடு களிலிருந்துவந்து ருஷ்யாவில் குடியேறும் மக்களுக்குப் பல சலுகைகள் காட்டினுர். வர்த்தகம், தொழில் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க பெருக்கத்தை உண்டாக்கினுர். அநேகக் கல்விக்கூடங்களையும், பீட்டர்ஸ்பர்க்கில் ஒரு கலைக்கழகத்தையும் நிறுவினுர்.

அயல்நாட்டு விவகாரங்களில் மகாபீட்டரைப்போல் ஒப்பற்ற சாதனைகளைப் புரிந்தார். இத் துறையில் அவரது முக்கிய நோக்கங்களில் ஒன்று ருஷ்யாவின் தெற்கெல்லையை கான்ஸ்டான்டிநோபிள்வரை பரப்புவது ஆகும். மற்ருென்று, போலந்து நாட்டில் அவருடைய ஆதிக் கத்தை நிலைநாட்டுவது ஆகும். அவருடைய முதல் நோக்கத்தை நிறை வேற்றும்பொருட்டு, துருக்கியுடன் இரண்டு போர்கள் நடத்தினுர். முதல் போர் 1768-ல் தொடங்கி 1774-ல் முடிவுற்றது. 1774-ல் செய்துகொள்ளப் பட்ட குசக் கைனுர்ஜி (Kuchuk Kainardji) உடன்படிக்கையின்படி, ருஷ்யா அஜாவ் என்னுமிடத்தைத் திரும்பப் பெற்றது. அத்துடன் கருங்கடலுக்கும், காஸ்பியன் கடலுக்கும் இடையே துருக்கிக்குச் சொந்தமான இடங்களையும் பெற்றது. ருஷ்யக் கப்பல்கள் பாஸ்போரஸ், டார்டனல்ஸ் ஆகிய கடற்கால்கள் வழியாகச் செல்ல அனுமதிக்கப் பட்டன. இரண்டாவது போர் 1787-ல் தொடங்கி 1792-ல் முடிவுற்றது. 1792-ல் ஏற்படுத்தப்பட்ட ஜாஸி உடன்படிக்கையின்படி (Treaty of Jassy) காகசஸ் மலைத்தொடர் இவ்விரு நாடுகளின் எல்லையாக

ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் கிரிமியா தீபகற்பமும் ருஷ்யாவிற்குச் சொந்தமாயிற்று.

போலந்து விவகாரத்திலும் குறிப்பிடத்தக்க வெற்றியை அவர் அடைந்தார். 18ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் போலந்து ஒரு பெரிய நாடாக இருந்துவந்தது. அந்நாட்டு மக்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அதன் அரசரை பிரபுக்களும் இடைநிலை மக்களும் சேர்ந்து தேர்ந்தெடுத்தார்கள். அவ்விருவகை மக்களின் பிரதிநிதிகளடங்கிய சபைக்குச் சட்டமியற்றும் உரிமையும் வழங்கப் பட்டிருந்தது. அச் சபை பிரபுக்களின் செல்வாக்கையும், இடைநிலை மக்களின் உரிமைகளையும் காப்பதிலேயே தன் கவனத்தைச் செலுத்தி வந்தது. மன்னரைத் தேர்ந்தெடுக்கும் முறை போலந்து நாட்டில் எக்காலத்திலும் அமைதியை நிலவவிடாமல் தடுத்தது. மேலும், அந்நிய நாட்டினரை அந் நாட்டின் விவகாரங்களில் தலையிட வாய்ப் பினை உண்டாக்கியது. அவ்வாறே 1764-ல் காதரைன் அதனுடைய விவகாரங்களில் தலையிட்டு, அவரது அன்பைப் பெற்றவர்களில் ஒருவரான ஸ்டானிஸ்லாஸ் போனியாடோவாஸ்கி (Stanislaus Poniatowski) என்பவரை அந் நாட்டரசராக்கினர். அந் நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் நடந்துகொள்வாரேயாயின் அவருடைய செல்வாக்கை அங்கு நிலைநாட்ட முடியாது என்று அவர் கருதினர். ஆகவே, அவர் களிடம் ஒற்றுமை வளரவிடாமல் தடுத்தார். 1768-ல் அவர்களிடம் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி போலந்து அரசாங்கம் மேற் கொள்ளும் சீர்திருத்தங்கள் காதரைனுடைய அங்கீகாரம் பெறவேண்டு மென்று அறிவிக்கப்பட்டது. 1772-ல் போலந்தின் அழிவிற்குக் காரணமாயிருந்த மூன்று பிரிவினை ஒப்பந்தங்களில் முதல் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதில் ருஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடு கள் கலந்துகொண்டன. அதன்படி போலந்துக்குச் சொந்தமான லிது வேனியா (Lithuania) ருஷ்யாவிற்கும், காலிசியாவின் (Galicia) பெரும்பகுதி ஆஸ்திரியாவிற்கும், மேற்குப் பிரஷ்யா பிரஷ்யா விற்கும் வழங்கப்பட்டன. இதன் விளைவாக போலந்து தன் நாட்டின் கால்பகுதியினை இழந்தது. இனியும் இத்தகைய இழப்பு நேரா திருக்க, அந் நாட்டு மக்கள் தங்கள் அரசாங்கத்தைப் பலப்படுத்தத் தொடங்கினர்கள். காதரைன் இதனல் கோபமடைந்தார். 1793-ல் மறுபடியும் பிரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டு இரண்டாவது பிரிவினை உடன்படிக்கையை ஏற்படுத்தினர். பிரஷ்யா போசனையும் (Posen) மேற்குப் போலந்தையும் பெற்றது. ருஷ்யா கிழக்குப் போலந்து, தென்கிழக்குப் போலந்து ஆகியவற்றின் பெரும்பகுதியைப் பெற்றது. இத் திட்டத்தை எதிர்த்துப் போராடிய போலந்து மக்களை காதரைன் தோற்கடித்தார். 1795-ல் மூன்ருவது முறையாக போலந்து வல்லரசு களிடையே பிரித்துக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக போலந்து

நாடு ஐரோப்பிய வரைபடத்தினின்றும் மறைந்துவிட்டது. போலந்து நாட்டின் பெரும்பகுதி ருஷ்யாவுடன் இணைக்கப்பட்டதால், ருஷ்யாவின் எல்லை ஐரோப்பிய வல்லரசு நாடுகளின் எல்லை வரை விரிவு படுத்தப்பட்டது.

1796-ல் காதரைன் மறைந்தார். ருஷ்யாவை ஐரோப்பிய நாடாக மாற்றிய பெருமை பீட்டரைச் சார்ந்ததாகும். ருஷ்யாவை வல்லரசாக ஏற்படுத்திய பெருமை காதரைனைச் சார்ந்தது என்பதில் ஐயமேதும் இல்லை. ஆகவே, இவரையும் மகா காதரைன் என்று அழைக்கிறுர்கள்.

பிரஷ்யாவில் வல்லாட்சி

இடைக்காலத்தில் ஜெர்மனி பல சிறு நாடுகளை உட்கொண்டிருந்தது. அவைகள் எல்லாம் புனித ரோமானியப் பேரரசின் (Holy Roman Empire) கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தன. ஆஸ்திரிய நாட்டரசர் அப் பேரரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெர்மனியிலுள்ள நாடுகளில் மிக முக்கியமானது பிரஷ்ய நாடாகும். அந் நாட்டு மக்களில் பெரும்பாலோர் ஸ்லாவ் (Slau) வகுப்பைச் சார்ந்தவராவார்கள். இடைக்காலத்தில் டியூட்டானிக் (Teutonic) இனக் குழுவைச் சார்ந்த ஜெர்மானிய சமயப் பணித்துறையாளர்கள் பிரஷ்யாவிற்குச் சென்று, அந் நாட்டின் அரசியல் மத விவகாரங்களில் அவர்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டினுர்கள். அவர்களின் தலைவர், பிரஷ்யாவின் பெருந்தலைவர் (Grand Master of Prussia) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். 15ஆம் நூற்றுண்டில் போலந்து அரசர் பிரஷ்யாவை வென்றுர். மேற்குப் பிரஷ்யா போலந்துடன் இணைக்கப்பட்டது. கிழக்குப் பிரஷ்யாவில் டியூட்டானிக் தலைவர்கள் தொடர்ந்து ஆட்சிசெலுத்த அனுமதிக்கப் பட்டார்கள். ஆனால், அவர்கள் போலந்து அரசருக்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. 16ஆம் நூற்றுண்டில் ஹோயன் ஜோலர்ன் (Hohen Zollern) குடும்பத்தைச் சார்ந்த ஆல்பர்ட்டு (Albert) என்பவர் பிரஷ்யாவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1618-ல் அவருடைய சந்ததி அற்றுப்போனதால், ஜெர்மனியிலுள்ள பிராண்டன்பர்க் என்ற ஒரு சிறு ஆட்சிப் பகுதியை ஆண்டு வந்த ஹோயன் ஜோலர்ன் குடும்பத்தைச் சேர்ந்தவர் கிழக்குப் பிரஷ்யாவின் தலைமைப் பொறுப்பையேற்றுர். முதன்முதலில் பிராண்டன்பர்க் ஜெர்மானியர்கள் அல்லாதாரை ஜெர்மனிக்குள் நுழைய விடாது தடுக்கும்பொருட்டு அமைக்கப்பட்ட எல்லைக் காவல் அரணாக விளங்கியது. பிறகு சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தது. 1415-ல் புனித ரோமானியப் பேரரசர் அதனை ஆளும் உரிமையை ஹோயன் ஜோலர்ன் குடும்பத்தைச் சார்ந்த பிரடெரிக் என்பவருக்கு வழங்கினுர். அவருக்கு பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்

கப்பட்டதால் அவருக்கு 'எலக்டர்' (Elector) என்ற பட்டம் அளிக்கப் பட்டது. 1609-ல் பிராண்டன்பர்க்கின் தலைவர், தன்னுடைய மனைவி யின் உரிமையை ஆதாரமாகக்கொண்டு, கிலீவ் (Cleves) என்னும் பகுதியைத் தன் நாட்டுடன் இணைத்தார். இவ்வாருகப் பதினேழாம் நூற்ருண்டில் பிராண்டன்பர்க்கை ஆண்டுவந்த ஹோயன் ஜோலர்ன் குடும்பத்தைச் சார்ந்த தலைவர், கிலீவ் என்னும் ரைன் நதிப் பகுதியினை 'டியூக்' (Duke) என்ற பட்டத்துடனும், பிராண்டன்பர்க்கை 'எலக்டர்' என்ற பட்டத்துடனும், கிழக்குப் பிரஷ்யாவை 'கிராண்ட் மாஸ்டர்', என்ற பட்டத்துடனும் ஆட்சிசெய்து வந்தார். ரைன் நதிப் பகுதியினையும், பிராண்டன்பர்க் பகுதியினையும் பேரரசின் கட்டளைக் குட்பட்டும், கிழக்குப் பிரஷ்யாவை போலந்து மன்னரின் அதிகாரத் துக்குட்பட்டும் ஆட்சி புரிந்தார்.

பதினேழாம் நூற்ருண்டில் சிறந்து விளங்கிய பிரஷ்யாவின் தலைவர் பிரடெரிக் வில்லியம் (1640—1688) என்பவராவார். அவர் ஜெர்மனியில் நடைபெற்று வந்த முப்பதாண்டுப் போரில் (Thirty years war, 1618-48) கலந்துகொண்டார். அப் போர் முடிவுற்ற போது, கிழக்குப் பாமரேனியா, மாக்டிபர்க் (Magdeburg) ஆகிய இடங்களை பிரஷ்யா பெற்றது. 1657-ல் ஸ்வீடன் நாட்டுடன் சேர்ந்துகொண்டு போலந்தை வார்சா சண்டையில் தோற்கடித்தார். அதன் விளைவாக போலந்து அரசர் கிழக்குப் பிரஷ்யாவில் பெற்றிருந்த அதிகாரம் நீக்கப்பட்டது. 1675-ல் ஸ்வீடனுடன் பிரடெரிக் வில்லியம் போரிட்டார். ஸ்வீடனை ஃபெஹர்பெல்லின் (Feherbellin) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அவ் வெற்றி பிரஷ்யாவின் கீர்த்தியைப் பெருக்குவதற்கு உதவியாயிருந்தது. மேற் கூறிய சாதனைகளின் விளைவாக 'மகா எலக்டர்' (Great Elector) என்னும் பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது.

பிரடெரிக் வில்லியம் அவர்களின் ஆட்சி இன்னுமொரு காரணத் தால் சிறப்பாகக் கருதப்படுகிறது. அவர் வல்லாட்சி முறை வளர்வதற் கேற்ற சூழ்நிலையை உருவாக்கினர். பிரதிநிதிகளைக்கொண்ட சபைகள் நசுக்கப்பட்டன. அவைகளுக்குப் பதிலாக அவருக்கு அடங்கி நடக் கும் சபையொன்றை ஏற்படுத்தினர். எல்லா அதிகாரங்களையும் அவரே ஏற்றுச் செயல்படுத்தினர். வல்லாட்சிக்கு ஆதாரமாக அமையுமாறு பலம் பொருந்திய சேனை யொன்றினை ஏற்படுத்தினர். பிரஷ்யாவின் பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டாக்கினர். வியாபாரம் பெருகு வதற்குக் கால்வாய்களை வெட்டினர். நாட்டுத் தொழில்களைக் காப்பாற் றும் வகையில் வெளிநாடுகளினின்றும் இறக்குமதியாகும் பொருள் களின்மீது கடுமையான வரிகளை விதித்தார். இவர் காலத்தில்தான் ஃபிரஞ்சு ஃயூக்னேக்கள் வெளிநாடுகளில் அடைக்கலம் நாடினர்.

அவர்களை நல்ல முறையில் வரவேற்று பிரஷ்யாவில் குடிவைத்தார். மேலும், அவர்களுக்கு அநேக சலுகைகளைக் காட்டினர். அவர்கள் எல்லோரும் சிறந்த கைவினைஞர்கள் என்று முன்னரே குறிப்பிட்டோம். ஆகவே, பிராண்டன்பர்க்கின் தொழில் முன்னேற்றம் அடைந்தது. மேலும், அவர்கள் பிரஷ்ய நாட்டின் படைகளில் சேர்ந்து, அந் நாட்டின் இராணுவ பலத்தையும் பெருக்கினர்கள்.

பிரடெரிக் வில்லியம், இறந்த பிறகு மூன்றுவது பிர்டெரிக் பட்டத்துக்கு வந்தார். அவர் களியாட்டங்களில் மிக்க விருப்பங்கொண்டவர். அரசியல் திறம் அவரிடம் காணப்படவில்லை. எனினும், அவர் காலத்தில் நடைபெற்ற ஸ்பெயின் நாட்டின் வாரிசுப் போரில் பேரரசர் பக்கமாகக் கலந்துகொண்டார். ஆகவே, பேரரசர் அவருக்கு அரசர் பட்டம் கொடுத்தார். இனி பிராண்டன்பர்க் தலைவர்கள் பிரஷ்யாவின் அரசர் என்று அழைக்கப்படலாயினர். அப்பொழுதிலிருந்து பிரஷ்யாவின் ஆட்சித் தலைவர்கள் வல்லாட்சி முறையை ஏற்படுத்துவதில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர்.

1713-ல் முதலாவது பிரடெரிக் வில்லியம் பிரஷ்யாவின் அரசராகப் பொறுப்பேற்றுர். அவர் ஆட்சி முறையிலுள்ள சீர்கேடுகளைப் போக்கினர். சுதந்திரம், பிரதிநிதித்துவம் போன்ற கருத்துகளுக்கு அவராட்சியில் இடங்கொடுக்கப்படவில்லை. அரசருடைய செய்கைகளைக் குறைகூறுவதை அனுமதிக்கவில்லை. தனக்கு உதவியாக இருக்கும் பொருட்டு ஆளும் வகுப்பு ஒன்றினை ஏற்படுத்தினர். பிரஷ்யாவின் அரசாங்க அலுவலர்கள் வேலையில் கவனக்குறைவாக நடந்தபொழுது கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். பொருளைச் செலவிடுவதில் மிகக் கவனமாக நடந்துகொண்டதால் அவரால் ஏராளமான பொருள் சேர்க்க முடிந்தது. பிரஷ்யாவின் சேனை பலத்தைப் பெருக்கினர். அவர் பதவியிலமர்ந்தபோது பிரஷ்யாவின் வீரர்களின் எண்ணிக்கை 38,000 ஆக இருந்தது. அதை 84,000 ஆக உயர்த்தினர். கடுமையான பயிற்சியை வீரர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்தார். நவீனப் போர்க்கருவிகளைப் புகுத்தினர். தகுதி வாய்ந்தவர்களே பதவியேற்றம் பெற்றனர்.

முதலாவது பிரடெரிக் வில்லியம் இறந்த பிறகு அவருடைய மகனுன 28 வயது நிரம்பிய இரண்டாவது பிரடெரிக் (1740—1786) அரசப் பதவி ஏற்றுர். இவர் பிரஷ்ய நாட்டை உருவாக்கிய அரசர்களுள் தலைசிறந்தவராவார். குட்டையான உருவங்கொண்டவர்; எப்பொழுதும் அமைதியாக இருப்பவர்; நுண்ணிய திறம் பெற்றவர். அயராது உழைக்கும் தன்மையுடையவர். போர் புரிந்து புகழ் அடைவதில் மிக்க ஆர்வம் கொண்டவர். போர்க்காலத்திலும், சமாதான காலத்திலும்

தலைமைப் பொறுப்பேற்று நடத்தும் ஆற்றல் பெற்றவர். அவரே பன்முறை தன்னுடைய சேனையின் தலைவராக இருந்து போர் புரிந்து வெற்றியை அடைந்துள்ளார். இளமையில் இசை, கவிதை, நாட்டியம் ஆகியவற்றில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். ஆகவே, இவரிடம் பெண்மை குடிகொண்டிருந்தது என்று பலர் கருதினர்கள். ஆதலின், இவருடைய தந்தையார் இவரை ஆண்மகனுக்குரிய விளையாட்டுகளில் நாட்டம் செலுத்துமாறு கட்டளையிட்டார். அதனால் வெறுப்படைந்த பிரடெரிக் நாடுவிட்டு ஓட முற்பட்டார். பிரடெரிக் வில்லியம் அவரைச் சிறையிலிட்டார். பிறகு அவரைக் கொல்லுமாறு ஆணை பிறப்பித்தார். இறுதியில் பிரடெரிக் தந்தை காட்டும் வழியில் செல்ல இசைந்தார். கடுமையான பயிற்சி பெற்றார். அதுவே அவர் புகழுக்குக் காரணமான வெற்றிகளை அடையக் காரணமாயிருந்தது. பிரடெரிக் அக்காலத்தில் வாழ்ந்த அறிஞர்களை வெகுவாகப் பாராட்டினர். அவர் கல்வியிலும் கலாசாரத்திலும் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். பெர்லின் கலைக்கழகத்தை அவர்தாம் புதுப்பித்தார். வால்டேர் (Voltaire) என்ற புகழ்பெற்ற ஃபிரஞ்சு அறிஞரைத் தனது அவையில் வைத்துப் போற்றினர். வரலாறு, கவிதைகள், கட்டுரைகள் ஆகியன பல பிரடெரிக் எழுதியுள்ளார். ஆனல், அவருக்கு ஜெர்மன் மொழியிலும் இலக்கியத்திலும் ஒரு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. ஆகவே, அவர் ஜெர்மானியர்களுடைய வெறுப்புக்காளானர். அதே நேரத்தில் பிரஷ்யாவின் சேனையைக் கண்டு ஐரோப்பியர் அனைவரையும் நடுங்கச் செய்தும், பிரஷ்யாவைப் படைபலம் பொருந்திய நாடாக மாற்றியும், அவர் நிகழ்த்திய போர்களின் வாயிலாகப் பல முக்கியமான நிலப்பகுதிகளைக் கைப்பற்றியும், பிரஷ்யர்களுடைய அன்பைப் பெற்றார். ஆகவே, இவர் 'கெட்ட ஜெர்மானியர், ஆனல் நல்ல பிரஷ்யர்'[1] என்று விவரிக்கப்படுகிறார்.

ஃபிரடெரிக் காலத்தில் வல்லாட்சி முறை உச்சகட்டத்தை எய்தியது. ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அவர் ஆட்சி முறையில் அதிக அக்கறை காட்டி வந்தார். அநேக வழிகளில் பதினன்காவது லூயி மன்னரைப் பின்பற்றிவந்த போதிலும், அவ்விருவருடைய ஆட்சி முறைகள் நேர்மாறான கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. லூயி மன்னர் தம்முடைய சொந்த நலன்களும் நாட்டினுடைய நலன்களும் ஒன்றெனக் கருதினர் என்று முன்னரே கவனித்தோம். ஆனல், ஃபிரடெரிக் தம்மை நாட்டினுடைய முதல் பணியாளன் என்று குறிப்பிட்டார். மற்ரேர் இடத்தில், 'மக்களுக்காக அரசரேயன்றி அரசருக்காக மக்கள் அன்று' என்று எழுதியுள்ளார். மேலும், இவருக்கு பகட்டாரவாரத்தில் யாதொரு விருப்பமும் இல்லை. மக்கள் வரிப்

[1] பிஷர், 'ஐரோப்பிய வரலாறு', பக்கம் 749 (Fisher, A Histry of Europe, P. 749)

பணத்தைக் களியாட்டங்களில் வீணுக்கவும் அவர் விரும்பவில்லை. அரசாங்க அலுவலர்களை நியமிக்கும்போது மிகக் கவனமாக நடந்து கொண்டார். நற்றிறம் பெற்றவர்களையும், உண்மை விசுவாசத்துடன் நடப்பவர்களையுமே அமைச்சர்களாக நியமித்தார். அரசாங்க அலுவலர்களின் நடவடிக்கைகளை மிக விழிப்புடன் மேற்பார்வையிட்டு வந்தார். நாளின் பெரும் பகுதி அரசப் பணிக்கே செலவிட்டார். இவருடைய ஆட்சிக்கு ஆதாரமாக அமையும்பொருட்டும், பகைவர்களை அச்சுறுத்தி வைத்திருக்கவும், அவருடைய 'படைபலத்தைக் குறையவிடாமல் கண்காணித்து வந்தார். நல்ல பயிற்சியினையும், சிறந்த போர்க் கருவிகளையும், ஒப்பற்ற ஆணையர்களையும் பெற்றிருந்த அவருடைய படை மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

நீதிவழங்கு முறையை அவர் சீர்படுத்தினுர். நீதி தவறிய நீதிபதிகளைத் தண்டித்தார். அவர்களைப் பதவியினின்றும் விலக்கினுர். பிரஷ்யாவின் சட்டதிட்டங்களைத் தொகுத்தமைத்தார். கடுமையான தண்டனைகளை நீக்கினுர். விசாரணையின்போது சித்திரவதை செய்யும் வழக்கத்தைப் போக்கினுர்.

மக்கள் நலம் பேணும் வல்லரசராக இருந்ததால், அவர் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் மிக்க கவனம் செலுத்தினுர். சதுப்பு நிலங்களில் உள்ள நீரை வடித்துப் பயிர் செய்யும் நிலப்பகுதியைப் பெருக்கினுர். பழமரங்கள், உண்ணத்தக்க வேரையுடைய செடிகள் ஆகியவற்றைப் பயிர் செய்யுமாறு தூண்டினுர்.

புதிய விவசாய முறைகளைப் பின்பற்றுமாறு வற்புறுத்தினுர். வெளிநாடுகளிலிருந்து வந்து பிரஷ்யாவில் தங்குவோருக்கு உதவி செய்தார். அடிமைத்தனத்தை ஒழிக்க முற்படவில்லை என்றுலும், குடியானவர்களைப் பிரபுக்களின் கடும் பிடியினின்றும் காப்பாற்றினுர். இந் நடவடிக்கைகளின் விளைவாக விவசாயம் பெருகியது.

அவர் பிரஷ்யாவின் தொழில் வளத்தையும் பெருக்கினுர். அவர் காலத்தில் பட்டுத்தொழில் சிறந்து விளங்கியது. வெளிநாடுகளினின்றும் இறக்குமதியாகும் பொருள்களின்மீது காப்புவரி விதிக்கப்பட்டது. வர்த்தகத்தைப் பெருக்குவதற்காகச் சாலைகளையும் கால்வாய்களையும் உண்டாக்கினுர். அவர் காலத்தில் வரிச்சுமை மிகக் குறைவாகவே யிருந்தது.

மத விவகாரங்களில் இவர் போற்றத்தக்க கொள்கையினைக் கடைபிடித்தார். பிராடஸ்டன்டு மதத்தினராயிருப்பினும், கத்தோலிக்கர்களைத் துன்புறுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர்களை அவர்கள் விருப்பம்போல் கோயில்களைக் கட்ட அனுமதித்தார். துருக்கியர்கள்

அவருடைய நாட்டில் வந்து தங்க நேருமிடத்து, அவர் கையாலேயே அவர்களுக்கு மசூதிகள் கட்டிக்கொடுக்க விரும்புவதாக ஓரிடத்தில் அவர் குறிப்பிட்டார். இருப்பினும் யூதர்களிடத்தில் கடுமையுடன் நடந்துகொண்டார். அவர்கள்மீது பல கட்டுப்பாடுகளைச் சுமத்தினார்.

வெளிநாட்டுக் கொள்கை

ஆனால், ஃபிரடெரிக், அவர் புரிந்த போர்களின் காரணமாகத்தான் இன்று எல்லோராலும் போற்றப்படுகிறார். பொருள் நிறைந்த கருவூலம், பலம்பொருந்திய சேனை, திறமைமிக்க அரசாங்க அலுவலர்கள் ஆகிய வற்றை வாரிசுப்பொருள்களாகப் பெற்று ஃபிரடெரிக் போர் தொடங்கிய தில் வியப்பொன்றும் இல்லை. மேலும், அவர் போர்புரிந்து பெரும் புகழ டைய எண்ணினார் என்று முன்னரே குறிப்பிட்டோம். அத்துடன் அவர் நாடு சேர்க்கும் ஆசை பெற்றிருந்ததால் பட்டத்துக்கு வந்தவுடன் ஆஸ்திரிய நாட்டுடன் போர் தொடங்கினார். அது ஆஸ்திரிய நாட்டு வாரிசுரிமைப் போர் என்று அழைக்கப்படுகிறது. ஆஸ்திரியாவின் பேரரசர் ஆறுவது சார்லஸுக்கு ஆண் குழந்தை இல்லை. ஆனால், எல்லா வகையிலும் அவருடைய மகளான மேரியா தெரீஸா பட்டம் பெறத் தகுதியானவராகக் காணப்பட்டார். ஆகவே, அவரே தனக்குப் பின் ஆஸ்திரியா, ஹங்கேரி, பொஹீமியா, பெல்ஜியம் ஆகிய இடங்களை ஆளவேண்டும் என்றும், அவருடைய கணவர் ஃபிரான்சிஸ் பேரரசர் பட்டம்பெற வேண்டும் என்றும் விரும்பினார். ஆகவே, பேரரசரின் கட்டளை (The Pragmatic Sanction) என்ற பத்திரம் ஒன்றைத் தயாரித்து அதன் வாயிலாகத் தன்னுடைய விருப்பத்தினை அறிவித் தார். அப் பத்திரத்திற்கு அவரது ஆளுகைக்குட்பட்ட நாடுகளின் அங்கீகாரத்தையும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் ஒப்புதலையும் பெற்றார். 1740-ல் சார்லஸ் இறந்தார். உடனே ஃபிரெடரிக் ஆஸ்திரியா வின் ஒரு பகுதியான சைலீஷியாமீது உரிமை கொண்டாடி, சைலீஷியா வின்மீது படையெடுத்துச் சென்றார். வெகுசீக்கிரத்தில் சைலீஷியாவைக் கைப்பற்றினார். ஆஸ்திரியாவின் வெகுநாள் பகை நாடான ஃபிரான்சு பிரஷ்யாவிற்கு உதவி செய்தது. ஃபிரான்சின் பெரும் எதிரியான பிரிட்டன் ஆஸ்திரியாவின் பக்கம் சேர்ந்துகொள்ளவேண்டியதாயிற்று. மேரியா தெரீஸாவின் அரச உரிமையை ஆதரிப்பதாக அது கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவும் பிரிட்டன் போரில் ஈடுபட்டது. பிரஷ்யாவும், ஃபிரான்சும் பவேரியா நாட்டுத் தலைவரைப் பேரரசராக்க முற்பட்டன. இதற்கு முன்னரே பிரிட்டனுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே வியாபாரம் காரணமாகப் போர் தொடங்கியது. அப் போர் அந்த வாரிசுரிமைப் போருடன் இணைந்துவிட்டது. ஆகவே, ஆஸ்தி ரியா, பிரிட்டன், ஹாலந்து ஒரு புறமும், பிரஷ்யா, ஃபிரான்சு, பவேரியா, ஸ்பெயின் மற்றொரு புறமும் இருந்து போர் செய்யலாயின.

இப் போர் ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா ஆகிய இடங்களில் நடைபெற்றது. ஃபிரெடரிக் ஐரோப்பாவில் சைலீஷியாவைக் கைப்பற்றினுர் என்று முன்னரே குறிப்பிட்டோம். மேரியா தெரீஸா தன்னுடைய முழு பலத்தையும் ஃபிரான்சுக்கும் பவேரியாவுக்கும் எதிராகப் பயன்படுத்தவேண்டும் என்று கருதியதால், சைலீஷியாவை ஃபிரெடரிக் அவர் நாட்டுடன் இணைத்துக் கொள்ளுவதை இறுதியில் ஒப்புக்கொண்டார். ஆகவே, ஃபிரெடரிக் போர் புரிவதை நிறுத்திக்கொண்டார். அதன் பிறகு ஆஸ்திரியா பவேரியாவைக் கைப்பற்றியது. ஃபிரஞ்சுக்காரர்கள் ஜெர்மனியினின்றும் விரட்டப்பட்டனர். இத்தாலியிலும் ஆஸ்திரிய சேனை வெற்றிகண்டது. அதற்கிடையில் ஆங்கிலப்படை டெட்டிங்கன் (Dettingen) என்னுமிடத்தில் வெற்றிபெற்றது. அதனுல் ஃபிரஞ்சுக்காரர்கள் தெற்கு ஜெர்மனியிலிருந்து பின்வாங்க நேர்ந்தது. அதன் பிறகு ஃபிரஞ்சுக்காரர்கள் ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான நெதர்லாந்தைத் தாக்கினுர்கள். ஃபான்டினுய் (Fontenoy) என்ற இடத்தில் வெற்றியடைந்து நெதர்லாந்தைக் கைப்பற்றினுர்கள். 1745-ல் பிரிட்டனில் கிளர்ச்சி ஏற்பட்டதால், பிரிட்டிஷ் படை நாடு திரும்ப வேண்டியதாயிற்று. இந்தியாவில் நடந்த போரில் ஃபிரஞ்சுக்காரர்கள் சென்னையைக் கைப்பற்றினுர்கள். அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் ஃபிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான லூயிபர்க்கைக் கைப்பற்றினுர்கள். 1748-ல் போர் முடிவுற்றது. அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட ஏக்ஸ்-லா-சாபேல் (Treaty of Aix-la-Chapelle) உடன்படிக்கையின்படி ஃபிரான்சும் பிரிட்டனும் போரின்போது கைப்பற்றிய இடங்களைத் திருப்பித்தர இசைந்தன. நெதர்லாந்து ஆஸ்திரியாவின் ஆளுகைக்கு மறுபடியும் உட்படுத்தப்பட்டது. ஃபிரெடரிக், சைலீஷியாவைப் பிரஷ்யாவுடன் இணைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். பவேரியா, இழந்த இடங்களைத் திரும்பப் பெற்றது. 1745-ல் பவேரியாவின் 'எலக்டர்' இறந்துவிட்டதால் மேரியா தெரீஸாவின் கணவர் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வேற்பாட்டினை 1748ஆம் ஆண்டின் உடன்படிக்கை உறுதி செய்தது.

மேரியா தெரீஸா எப்படியும் சைலீஷியாவைத் திரும்பப் பெற வேண்டும் என்று தீர்மானித்தார். இந்தியாவிலும் அமெரிக்காவிலும், ஆங்கிலேயர்களும் ஃபிரஞ்சுக்காரர்களும் ஏற்படுத்திய குடியேற்ற நாடுகளுக்கும், வியாபார ஸ்தலங்களுக்கும் இடையே உண்டான சிக்கல்களுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. ஆகவே, மற்றெரு போர் அவசியமாகக் கருதப்பட்டது. ஆஸ்திரியா பிரிட்டனின் நேசம் பயனற்றது எனக் கருதியது. ஆகவே, ஆஸ்திரியாவின் நெடுநாளைய பகை நாடான ஃபிரான்சின் நட்பை மேரியா தெரீஸா நாடினுர். அதை அடுத்து இரு நாடுகளும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தின. அதன்படி சைலீஷியாவைப் பிரஷ்யாவின் கைவசமிருந்து மீட்கவேண்டும் என

முடிவு கட்டினார்கள். பிரிட்டனின் எதிரியான ஃபிரான்சு இப்பொழுது பிரஷ்யாவிற்கு எதிராக ஆஸ்திரியாவுடன் சேர்ந்துகொண்டதால், பிரிட்டன் பிரஷ்யாவுடன் சேர்ந்துகொண்டது. ருஷ்யாவும், ஸ்விடனும், சாக்ஸனியும், மேரியா தெரீஸாவிற்கு உதவி செய்ய இசைந்தன. 1756-ல் தொடங்கிய போர் 1763-ல் முடிவுற்றது. ஆகவே, இதனை ஏழாண்டுப் போர் என்று அழைக்கிறார்கள்.

இப் போர் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், இந்தியாவிலும் நடைபெற்றது. முதலில் பிரிட்டனும் பிரஷ்யாவும் மிக இக்கட்டான நிலையில் இருந்தன. 1756-ல் ஃபிரெடரிக் சாக்சனி(Saxony)யின்மீது படையெடுத்தார். அதைக் கைப்பற்றிய பிறகு ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான பொகிமியா(Bohemia)வைத் தாக்கினார். ஆனால், அவருடைய தாக்குதல் முறியடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவருடைய பகைவர்கள் பல திசைகளினின்றும் அவரைத் தாக்கினார்கள். ஒப்பற்ற திறமை வாய்ந்த ஃபிரெடரிக் தன்னுடைய விரோதிகளைத் தனித்தனியாகச் சந்தித்து, போரிட்டு, வெற்றி கண்டார். மேற்கிலிருந்து தாக்கிய ஃபிரஞ்சுக்காரர்கள் ரோஸ்பாக் (Rossbach) என்னுமிடத்திலும், தெற்கிலிருந்து தாக்கிய ஆஸ்திரியாவை லூதன் (Leuthen) என்னுமிடத்திலும், கிழக்கிலிருந்து தாக்கிய ருஷ்யர்களை ஜான்டார்ஃப் (Jondorf) என்னுமிடத்திலும் தோற்கடித்தார். இத் தோல்விகளையறிந்த ஸ்விடன் பிரஷ்யாவின்மீது படையெடுக்கும் முயற்சியினைக் கைவிட்டது. இந்நிலையில் வில்லியம் பிட் இங்கிலாந்து முதலமைச்சரானார். அவர் ஃபிரெடரிக்குக்குப் படைகளையும் பணத்தையும் கொடுத்து உதவினார். இவ்வாறு ஃபிரஞ்சுக்காரர்களின் கவனம் முழுவதும் ஐரோப்பாவிலேயே நிலைத்து இருக்கச் செய்தார். ஆகவே, அவர்கள் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் உள்ள ஃபிரஞ்சுக்காரர்களுக்கு உதவியளிக்க முடியாத நிலையில் இருந்தனர். அதனால்தான், அமெரிக்காவிலும் இந்தியாவிலும் குறிப்பிடத் தக்க வெற்றிகளை ஆங்கிலேயர்கள் அடைய முடிந்தது. கனடாவை ஜெர்மனியின் சமவெளியில் வெல்ல முடியும்[1] என்ற கூற்றினை மெய்ப்பித்துக் காட்டினார். பிரிட்டனின் உதவி பெற்றுங்கூட ஃபிரெடரிக்கின் நிலை மோசமாக இருந்தது. 1759-ல் குனர்ஸ்டார்ஃப் (Kunersdorf) என்னுமிடத்தில் தோற்றார். பெர்லினனது ஆஸ்திரியா, ருஷ்யா ஆகிய நாடுகளின் கைவசமாயிற்று. 1761-ல் பிரஷ்யாவின் பெரும் பகுதி அந்நியர்களின் கைவசமாயிற்று. அதே வருடம் வில்லியம் பிட் பதவியினின்றும் விலகினார். அவருக்குப்பின் பதவியில் அமர்ந்தவர்கள் ஐரோப்பியப் போரினின்றும் விலகத் தீர்மானித்தனர். ஆனால், நல்ல காலமாக ருஷ்யாவின் அரசி எலிசபெத் இறந்துவிட்டார். அவரைப் பின்தொடர்ந்த மூன்றுவது பீட்டர் ஃபிரெடரிக்கிடம்

[1] 'I will win Canada on the plains of Germany'

மிகுந்த பற்று வைத்திருந்தார். ஆகவே, அவருக்கெதிராகப் போரிடுவதை நிறுத்திக்கொண்டதோடல்லாமல், அவருடன் நட்புறவு நாடினுர். சில காலத்திற்கெல்லாம் பீட்டர் கொல்லப்பட்டார். அவரைப் பின் தொடர்ந்த இரண்டாவது காதரைன் பிரஷ்யாவிடம் ஏற்படுத்தப் பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்தார். ஆனுல், அதற்குள் பிரஷ்யா காப்பாற்றப்பட்டுவிட்டது. 1763-ல் எல்லா நாடுகளும் போர் புரிந்து சோர்வடைந்த காரணத்தால் சமதானம் செய்து கொண்டன.

ஏழாண்டுப் போர்க் காலத்தில் பிரிட்டிஷ் கடற்படை முதலில் சில தோல்விகளை அடைந்தது. 1756-ல் மைனுர்கா தீவு ஃபிரஞ்சுக்காரர்கள் வசமாயிற்று. அத் தீவினைத் திரும்பப்பெற பிரிட்டிஷார் மேற்கொண்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டது. பிட் பதவியேற்றபின் கடற்படை திருத்தியமைக்கப்பட்டது. அதன் பின்னர் அப் படை சிறந்தமுறையில் செயற்பட்டது. அது ஃபிரஞ்சுத் துறைமுகங்களை வெற்றிகரமாக முற்றுகையிட்டது. ஃபிரஞ்சுக்காரர்களின் குடியேற்றப் பகுதிகளைத் தாக்கவும் அது பயன்படுத்தப்பட்டது. மேலும், ஃபிரஞ்சுக்காரர்கள் 1759-ல் இங்கிலாந்தின்மீது படை யெடுப்பதற்காக மேற்கொண்ட முயற்சியினை குவிபெரான் விரிகுடாவில் (Quiberon Bay) நிகழ்ந்த போரில் தோற்கடித்தது. இதன்பிறகு ஃபிரான்சின் கடல் ஆதிக்கம் அழிவுற்றது.

அமெரிக்காவில் நடைபெற்ற போரிலும் பிரிட்டிஷ்காரர்கள் முதலில் தோல்வியடைந்தனர். பிறகு வெற்றி வாகை சூடினுர்கள். மேற்கிந்தியத் தீவுகளில் சிலவற்றைக் கைப்பற்றினுர்கள். லூயிபர்க்கு பிரிட்டிஷார் கைவசமாயிற்று. பிரிட்டிஷ் தளபதி உல்ஃப் (Wolfe) கியூபெக் (Quebec) நகரத்தைக் கைப்பற்றினுர். 1760-ல் மான்ட்ரீல் (Montreal) பிடிபட்டது. 1762-ல் ஸ்பெயினும் போரில் கலந்து கொண்டதால், ஸ்பெயினுக்குச் சொந்தமான மேற்கிந்தியத் தீவுகளும் பிரிட்டிஷ் கப்பற்படையின் தாக்குதலுக்கு இலக்காயின.

இந்தியாவிலும் இப் போர் நடைபெற்றது. இராபர்ட் கிளைவ் 1757-ல் பிளாசிச் சண்டையில் வெற்றி பெற்று வங்காளத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குட்படுத்தினுர். கர்நாடகத்தில் நடந்த போரில் ஆங்கிலேயர்கள் வந்தவாசி என்னுமிடத்தில் ஃபிரஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தார்கள். 1761-ல் பாண்டிச்சேரி ஆங்கிலேயர் கைவசமாயிற்று. இதற்குப் பின் ஃபிரஞ்சுக்காரர்கள் இந்தியாவை அவர்களுடைய ஆளுகைக்குட்படுத்தும் நோக்கத்தைக் கைவிட்டார்கள்.

ஏழாண்டுப் போர் 1763-ல் ஏற்படுத்தப்பட்ட பாரிஸ் உடன்படிக்கை வாயிலாக முடிவடைந்தது. ஃபிரெடரிக் சைலீஷியாவைத் தம்முடைய ஆளுகையின்கீழ் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டார். பிரிட்டன்

ஃபிரான்சிடமிருந்து கனடா, செனிகல், மைனுர்கா, நான்கு மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றைப் பெற்றது. ஃபிலோரிடா (Florida) என்னும் நிலப்பகுதியை ஸ்பெயினிடமிருந்து இங்கிலாந்து பெற்றது. இதற்குப் பதிலாகப் போர்க்காலத்தில் ஃபிரான்சிடமிருந்து கைப்பற்றிய கோரீ (Goree), பாண்டிச்சேரி, இரு மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றையும், ஸ்பெயினிடமிருந்து கைப்பற்றிய கியூபா (Cuba), பிலிப்பைன் தீவுகள் ஆகியவற்றையும் திருப்பிக் கொடுக்க பிரிட்டன் இசைந்தது. இந்தியாவில் இராணுவப் படையை நிறுத்தி வைக்க ஃபிரான்சு அனுமதிக்கப்படவில்லை.

மேற்கூறிய இரு போர்களின் வாயிலாக ஃபிரெடரிக் செல்வம் நிறைந்த சைலீஷியாவைத் தன் நாட்டுடன் இணைத்தார். அத்துடன் பிரஷ்யாவின் செல்வாக்கைப் பெருக்குவதிலும் வெற்றி கண்டார். சமாதான முறையைப் பின்பற்றி நாடு சேர்ப்பதிலும் ஃபிரெடரிக் வல்லவராய் இருந்தார். பிரிவினை ஒப்பந்தத்தின் வாயிலாக மேற்குப் பிரஷ்யாவைத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டாரென்று நாம் முன்னரே கவனித்தோம். இந் நிலப்பகுதி கிழக்குப் பிரஷ்யாவையும், பிராண்டன்பர்க்கையும் ஒன்று சேர்க்க உதவியாயிருந்தது. இத்தகைய சாதனைகள் பல புரிந்த ஃபிரெடரிக்கினுடைய ஆட்சி 1786-ல் முடிவுற்றது.

ஆஸ்திரியாவில் வல்லாட்சி

பதினேழாம் நூற்றுண்டில் ஆஸ்திரியாவை ஹாப்ஸ்பர்க் (Habsburgs) குலத்தைச் சார்ந்த அரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்கள் புனித ரோமானியப் பேரரசர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டதால், அவர்கள் ஜெர்மனியில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். 1648-க்குப் பிறகு அவர்களுடைய செல்வாக்கு ஜெர்மனியில் குறையலாயிற்று. ஏனெனில், அவ்வாண்டில் ஏற்படுத்தப்பட்ட வெஸ்ட்பேலியா உடன்படிக்கை ஜெர்மனியிலுள்ள ஆளுநர்களின் சுதந்திரத்தை அதிகரித்தது. எனினும், ஆஸ்திரியா ஐரோப்பாவின் வல்லரசுகளில் ஒன்றுகத் தொடர்ந்து இருந்து வந்தது.

பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் முதலாவது லியோபால்ட் மன்னர் (1658—1705) ஆட்சி செலுத்தினுர். ஹங்கேரியில் தன்னுடைய ஆட்சியைப் பலம் பொருந்தியதாக்கினுர். அங்குள்ள மக்களின் உரிமைகளைக் குறைத்தார். அவர் காலத்தில் துருக்கியர்கள் தங்களுடைய ஆதிக்கத்தைப் பெருக்க முற்பட்டு, ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னுவரை தங்களுடைய படைகளை நடத்திச் சென்றுர்கள். ஆகவே, 1683-ல் துருக்கியர்களுக்கு எதிராக லியோபால்ட் போர் தொடங்கினுர். போலந்து நாட்டின் சிறப்புவாய்ந்த கடைசி அரசர்

மூன்றாவது ஜான் சோபியெஸ்கி (John Sobieski) துருக்கியர்களை விரட்டி அடித்து வியன்னாவைக் காப்பாற்றினார். 1699-ல் கார்லோவிட்ஸ் சமாதானம் (Peace of Karlovitz) செய்துகொள்ளப்பட்டது. ஹங்கேரி முழுவதும் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப் பட்டது. லியோபால்ட், ஐரோப்பாவில் நடைபெற்ற ஆக்ஸ்பர்க் நேச நாடுகளின் போரிலும், ஸ்பெயின் நாட்டின் வாரிசுரிமைப் போரிலும் கலந்துகொண்டார். போரின் இறுதியில் ஸ்பெயினுக்குச் சொந்தமான நெதர்லாந்து, மிலான், நேபில்ஸ், சிசிலி[1] ஆகிய இடங்களை அவருக்குப் பின்னர் அரசாண்ட ஆறாவது சார்லஸ் பெற்றார். ஆறாவது சார்லஸ் (1711—1740) மறைவிற்குப்பின் மேரியா தெரீஸா பட்டத்துக்கு வந்தார் என்பதை முன்னரே கண்டோம்.

மேரியா தெரீஸா (1740—1780) பெண்ணாக இருப்பினும் திடசித்த முடையவர். அவர் காலத்தில் ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்கும் இடையே ஏற்பட்ட போர்களையும், ஆஸ்திரியாவிற்கும் ஃபிரான்சுக்கும் இடையே ஏற்பட்ட நட்புறவைப்பற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். உள்நாட்டு விவகாரங்களிலும் வெளிநாட்டு விவகாரங்களிலும் அவருக்கு உறுதுணையாக அவருடைய அமைச்சர் கௌனிட்ஸ் (Kaunitz) இருந்தார். அவர் புதிய சட்டத் தொகுதி இயற்ற முற்பட்டார். சாலைகள், கால்வாய்கள் போன்ற வசதிகளை மக்களுக்குச் செய்துதந்தார். விவசாயத்தைப் பெருக்க விவசாயக் கழகம் ஒன்றை நிறுவினார். எல்லா மக்களையும் பாதிக்கும் வரித்திட்டம் ஒன்றை அமைத்தார். மருத்துவச்சாலைகளைக் கட்டுவித்தார். கல்வி, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். மதத் துறையில் காணப்பட்ட குறைகளை நீக்கினார். இத்துணை நற்பணிகளைச் செய்த அவரை ஐரோப்பிய வரலாற்றில் காணப்படும் சிறப்பு வாய்ந்த ஒரு நபர்[2] என்று கூறுவது மிகையாகாது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த ஆஸ்திரிய அரசர்களுள் புனித ரோமானியப் பேரரசர் பட்டம் பெறாதவர் அவர் ஒருவர் மட்டுமே ஆவார். இவருக்குப் பதிலாக இப் பட்டத்தை இவருடைய கணவர் 1765 வரை வகித்திருந்தார்.

ஐரோப்பாவின் மக்கள் நலம் பேணும் வல்லரசர்களில் ஒருவரான இரண்டாவது ஜோசப் (Joseph II) 1780-ல் ஆஸ்திரிய நாட்டின் அரசரானார். அதற்கு முன்னர் 1765-ல் பேரரசராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களின் நன்மைக்காகப் பாடுபடவேண்டும் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டவர். மேற்கொண்ட எண்ணங்களை நிறை

[1] நேபில்ஸ், சிசிலி ஆகியவைகளை ஆஸ்திரியா 1738-ல் இழந்தது.

[2] கிராண்ட், 'ஐரோப்பிய வரலாறு', பக்கம் 642. (Grant, 'Europe—The History of the Last Five Centuries', Page 642)

வேற்றும் ஆற்றல் படைத்தவர். கடுமையாக உழைக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். வெளிப்படையாகப் பேசும் தன்மையுடையவர். வரலாறு, சட்டம், பொருளாதாரம், இராணுவக் கலை ஆகியவற்றில் நல்ல அறிவு படைத்தவர். அவர் நேரத்தை வீணுக்க விரும்புவதில்லை. பயன்படாத விவகாரங்களில் பொருள் செலவிடுவதை விரும்பவில்லை. ஃபிரெடரிக்கைப் போல் அவர் வகித்திருக்கும் பொறுப்புகளைப்பற்றி உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருந்தார். அப்படியிருந்தும் அதற்காகச் செருக்குக் கொண்டவரில்லை. அவர் நாட்டிலும், பிற நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து ஆட்சி முறைபற்றிய விவரங்களைச் சேகரிப்பதில் மிகவும் ஊக்கங்காட்டி வந்தார். அவர் தன்னுடைய குடும்பத்தின் மோசமான பகைவரான ஃபிரெடரிக்கை அரசியல் குருவாக வைத்துப் போற்றினர். பொதுவாக ஃபிரெடரிக்கினுடைய ஆட்சிமுறைக் கருத்துகளை அவருடைய நாட்டில் புகுத்த முற்பட்டார். ஆனால், நல்ல நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட இவரது ஆட்சி இருள் கவிழ்ந்த நிலையில் முடிவுற்றது.

பதவியேற்றவுடனே அவருடைய சீரிய கருத்துகளைச் செயற்படுத்த முனைந்தார். அரசியல் துறையில் இரு பெரு நோக்கங்களைக் கொண்டிருந்தார். பல்வேறு இனத்தவரையும், மொழியினரையும், மதத்தினரையும் உட்கொண்டிருந்த ஆஸ்திரிய நாட்டினில் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்த வேண்டுமென்பது அவரது குறிக்கோள்களில் முதலாவதாகும். அக்காலத்தில் ஆஸ்திரியா பொதுவாக ஐந்து பெரும் பிரிவுகளாக இருந்தது. வியன்னுவும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் ஆஸ்திரியா என்றழைக்கப்பட்டன. அதில் கத்தோலிக்கர்களும் ஜெர்மானியர்களும் நிறைந்திருந்தனர். இரண்டாவது பிரிவான ஹங்கேரியில், மாகியர் (Magyars) இனத்தவர் வாழ்ந்து வந்தனர். மூன்ருவது பிரிவான பொகிமியா, மொரேவியா பகுதிகளில் செக் (Czech) இனத்தவர் வசித்து வந்தனர். இவர்களில் பெரும்பாலோர் பிராடஸ்டன்ட் மதத்தைச் சேர்ந்தவர்கள். இத்தாலியிலுள்ள நான்காவது பிரிவில் கத்தோலிக்கர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால், மொழி, இனம், கலாசாரம் ஆகியவற்றில் ஆளும் மக்களுக்கும், ஆளப்படும் மக்களுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகள் இருந்தன. இதே நிலையில்தான் ஐந்தாவது பிரிவான ஆஸ்திரியாவின் நெதர்லாந்தும் இருந்துவந்தது. ஆட்சி முறையைப் பொறுத்தவரை அவர் கொண்டிருந்த இரண்டாவது குறிக்கோள், அரசரது அதிகாரத்தை எல்லாவற்றிற்கும் மேலாக நிலைநாட்டுவதேயாகும்.

மேற்கூறிய இரண்டு எண்ணங்களை நிறைவேற்றப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். முதலில் ஆட்சி முறையை ஒழுங்குபடுத்தினர். ஆஸ்திரிய நாட்டினைப் பதின்மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்

வொன்றிலும் ஒரே மாதிரியான ஆட்சி முறையை அமைத்தார். ஒவ்வொரு பிரிவினையும் ஓர் இராணுவத் தளபதியின் ஆட்சிக்குட்படுத்தினார். அங்கு அமைக்கப்பட்டிருந்த மக்கள் சபைகளின் அதிகாரத்தை அழித்தார். அவைகள் அரசருக்குத் தேவையான வரிகளை வழங்குவதற்குமட்டுமே கூட்டப்பட்டன. பல்வேறு இனத்தவருக்கு வழங்கப்பட்டிருந்த தனிச் சலுகைகளை ஒழித்தார். ஒவ்வொரு பெரும் பிரிவினையும் பல வட்டங்களாகப் பிரித்தார். வட்டத்தின் அதிகாரி (Circle Captain) அரசருடைய ஆணைகளைச் செயற்படுத்திவந்தார். வட்டங்களில் அமைதியை ஏற்படுத்தும் பணியைத் தனி அதிகாரி ஒருவருக்கு அளித்தார். ஒவ்வொரு வட்டத்திலும் பல நகரங்களும் கிராமங்களும் அடங்கியிருந்தன.

மைய ஆட்சி முறை நான்கு துறைகளாகப் பிரிக்கப்பட்டது. இவைகள் அரசியல், பொருளாதாரம், நீதிமுறை, இராணுவம் ஆகியவற்றில் கவனம் செலுத்திவந்தன. இவைகள் எல்லாம் வியன்னாவில் இயங்கிவந்த ஆட்சிமுறையைச் சார்ந்த சபைகளின் அதிகாரத்திற்குட்படுத்தப்பட்டன. அச் சபைகளின் முடிவுகளை அரசருடைய அங்கீகாரம் பெற்றபிறகுதான் செயற்படுத்த இயலும்.

நாட்டில் ஒருமைப்பாட்டினை வளர்க்க ஜெர்மன் மொழியினை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்படுத்தினார். இதுகாறும் அரசாங்க அலுவலகங்கள் ஜெர்மன் மொழியுடன், லத்தீன், மாகீயர் மொழிகளையும் உபயோகப்படுத்திவந்தன என்பதை ஈண்டுக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

வல்லாட்சிக்குப் பலம் பொருந்திய படை அவசியமென்பதை ஜோசப் நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே, இராணுவ அமைப்பை பிரஷ்யாவின் படை அமைப்பு முறையைப் பின்பற்றி மாற்றியமைத்தார். விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும் படையில் சேருமாறு வற்புறுத்தினார்.

வல்லாட்சி வெற்றிபெறப் பழுதற்ற நிதி அமைப்பு இன்றியமையாதது என்பதையும் ஜோசப் உணர்ந்திருந்தார். எல்லோர்மீதும் வரி விதித்தும், புது நிலவரி ஒன்றை விதித்தும், வரிவிகிதங்களை மாற்றியமைத்தும் (வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின்மீது கடுமையான காப்புவரியை விதித்தும்) அரசாங்க வருவாயை அதிகப்படுத்தினார். தேவையற்ற செலவுகளை குறைத்துக்கொண்டார்.

நீதிமன்ற அமைப்பில் மாறுதல்கள் சிலவற்றைப் புகுத்தினார். வியன்னாவின் உயர் நீதிமன்றத்தைத் தலைமை நீதிமன்றமாகவும், மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களைக் கீழ் நீதிமன்றங்களாகவும்

கொண்ட படிநிலை அமைப்பு ஒன்றை உருவாக்கினர். திறமை வாய்ந்தவர்களையே நீதிபதிகளாக நியமித்தார். எல்லா நீதிமன்றங்களிலும் ஒரே மாதிரியான வழக்கு முறையைப் புகுத்தினர். நியாயம் பெறுவதற்கு மக்கள் செலுத்தவேண்டிய கட்டணத்தைக் குறைத்தும், தீர்ப்புகளை எழுத்துமூலமாகப் பெறுவதற்குச் செலுத்தவேண்டிய தொகையை ஒழித்தும் ஏழைகளும் நியாயம் பெற வழி செய்தார். சித்திரவதைபோன்ற கடுமையான தண்டனைகள் ஒழிக்கப்பட்டன.

அவரது வல்லாட்சி நல்லாட்சியாக விளங்கவேண்டும் என்பதற்காகப் பொருளாதாரத்துறையில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தினர். கைவினைஞர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் பொருளுதவி செய்தார். தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், இயந்திரங்கள் வாங்குவதற்கும் பணவுதவி செய்யப்பட்டது. உள்நாட்டுத் தொழில்களைக் காப்பாற்றுவதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின்மீது கடுமையான வரியை விதித்தார். உள்நாட்டுச் சுங்கவரியைத் தவிர்த்தும், சாலைகள் அமைத்தும், கால்வாய்கள் வெட்டியும், துறைமுகங்களைக் கட்டியும் வியாபாரத்தைப் பெருக்கினர்.

சமூகநலப் பணிகளையும் மேற்கொண்டார். குடியானவர்களுக்குச் சுதந்திரம் அளித்தார். பிரபுக்கள் அனுபவித்துவந்த ஊழிய மானியம் சார்ந்த உரிமைகள் ஒழிக்கப்பட்டன. அத்துடன் அம் முறை ஏற்படுத்திய மதிப்புச் சின்னங்களும் மறைந்துவிட்டன. அறிஞர்களைப் போற்றி வளர்த்தார். கல்வித்துறையில் பெருக்கத்தை ஏற்படுத்தினர். ஆரம்பக் கல்வியினை அனைவரும் பெற வழிவகை செய்தார். ஒவ்வொரு பெரும் பிரிவிலும் ஒரு பல்கலைக்கழகத்தை அவர் நிறுவினர். கலைக்கழகங்களை ஏற்படுத்தினர். ஆங்காங்கே நூல்நிலையங்களை அமைத்தார். மருத்துவம், விஞ்ஞானம் ஆகிய கலைகளை வளர்த்தார். புத்தகங்கள் வெளியிடுவதற்குச் சுதந்திரம் அளித்தார்.

மதத்துறையிலும் அநேக மாறுதல்களை உண்டாக்கினர். மத விவகாரங்களிலும் அரசருடைய செல்வாக்கை ஏற்படுத்துவதே அவரது நோக்கமாகும். அவரது அனுமதியின்றி போப்பாண்டவருடைய கட்டளைகளை அவருடைய நாட்டில் செயற்படுத்துவதைத் தடுத்தார். மத ஸ்தாபனங்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்தார். அநேக மடங்களை அழித்தார். நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்துவதிலும், கல்வியைப் போதிப்பதிலும் ஈடுபட்டிருந்த மடங்கள் மட்டும் தொடர்ந்து பணியாற்ற அனுமதி கொடுத்தார். மத குருமார்களை அரசாங்கக் கல்விக்கூடங்களில் பயிற்சிபெறுமாறு கட்டாயப்படுத்தினர். அவர்களை மதக்கலையில்மட்டுமன்றி மற்றையக் கலைகளையும் கற்குமாறு பணித்தார். மதஸ்தாபனத்தில் இருந்த சில சீர்கேடுகளையும் அகற்றி

ணுர். கோயில்களில் இருந்த சிலைகளையும் படங்களையும் அகற்றினுர். நாட்டினுடைய ஒருமைப்பாட்டினுக்கு மத விவகாரங்களில் சகிப்புத் தன்மை அவசியம் என்று உணர்ந்தார். ஆகவே, 1781-ல் ஓர் அறிக்கையை விடுத்தார். அதன்படி எல்லா மதத்தினரும் அவர்களுடைய மதத்தை யாதோர் இன்னலுமின்றிக் கடைபிடித்துவரலாம் என்று அறிவித்தார். எல்லா மதத்தினரும் அரசாங்க வேலையில் ஈடுபடலாம் என்றும், எல்லாவிதமான கல்வி நிலையங்களிலும் சேரலாம் என்றும், எல்லாத் தொழில்களிலும் ஈடுபடலாம் என்றும் அறிவித்தார்.

அயல்நாட்டுத் துறையில் இவர் தமது தாயாருடன் சேர்ந்து அண்மையிலுள்ள பவேரியாவைக் கைப்பற்ற முற்பட்டார். ஃபிரெடரிக் இதைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொண்டார். 1778-ல் இதனுல் போர் மூண்டது. 1779-ல் இப் போர் முடிவுற்றது. ஆஸ்திரியா, பவேரியாவைக் கைப்பற்றும் எண்ணத்தைக் கைவிட்டது. ஜோசப் தன்னுடைய சுய ஆட்சியை ஏற்படுத்தியபிறகுங்கூட, நாடுகளைச் சேர்க்கும் எண்ணத்தைக் கைவிடவில்லை. பவேரியாவை அடைவதற்குத் தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட பெல்ஜியத்தையும் கொடுக்கத் தயாராய் இருந்தார். ஆனுல், அவர் நோக்கம் நிறைவேறவில்லை. ருஷ்யாவுடன் சேர்ந்து துருக்கி நாட்டிற்கு எதிராகப் போரிட்டார். அவருடைய வெளிநாட்டுக் கொள்கை பெரும்பாலும் தோல்வியிலேயே முடிவுற்றது.

அவர் ஆட்சியின் இறுதியில் பல இடங்களில் பலத்த எதிர்ப்புகள் ஏற்பட்டன. பெல்ஜியம் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். மாகியர்கள் அவர்களுடைய உரிமைகளைப் பறித்ததால் வெகுண்டெழுந்தனர். பிரபுக்கள் அவர்களுடைய செல்வாக்கு அழிக்கப்பட்டதால் அவரை வெறுத்தனர். பிற மதங்களைச் சார்ந்தோர்களுக்குச் சமமான உரிமைகள் வழங்கியதாலும், மத விவகாரங்களில் போப்புக்கு இருந்த அதிகாரத்தைக் குறைத்ததாலும், கத்தோலிக்கர்களுடைய வெறுப்புக்கு உள்ளாணுர். மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்குப் பதிலாக அவருடைய நடவடிக்கைகள் அவர்களை நன்றி கெட்டவர்களாக மாற்றிவிட்டதை அறிந்து'அவர் மனக்கசப்பு அடைந்தார். ஆகவே, அவர் தான் இறந்த பிறகு தன்னுடைய கல்லறையின்மீது பின்வருமாறு பொறிக்கப்பட வேண்டும் என்று விரும்பினுர்: ‘நல்ல எண்ணங்களுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளுள் ஒன்றில்கூட வெற்றிபெருத மனிதர் இங்கு கிடக்கிருர்’. அவர் தோல்வி யடைந்ததற்குப் பல காரணங்களுண்டு. அக் காலத்திய மக்கள் அவருடைய சீரிய கருத்துகளைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. அவர் கருத்துகளை நிறைவேற்றும்பொருட்டு அமர்த்தப்பட்ட அலுவலர்கள் அவரைப்போல் நல்லவர்களாகவோ அல்லது அவைகளில் மிக்க அக்கறை கொண்டவர்களாகவோ இருக்கவில்லை. மேலும், அவர் ,சில சமயங்களில் மிகக் கடுமையாக நடந்துகொண்டார்.

மத விவகாரங்களில் தலையிட்டும், தொன்றுதொட்டு வரும் பழக்கங்களைத் தாக்கியும் மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார்.

ஐரோப்பாவில் வேறு சில நாடுகளிலும் நல்லெண்ணத்துடன் கூடிய வல்லாட்சி பதினெட்டாம் நூற்றாண்டில் நடைபெற்று வந்தது. ஸ்பெயின் நாட்டில் மூன்றாவது சார்லஸ் (1759—1788) என்பவர் இத் தகைய ஆட்சியை ஏற்படுத்தினார். ஆட்சி முறையிலிருந்த சீர் கேடுகளை நீக்கினார். கால்வாய்களை வெட்டினார். சாலைகளை அமைத் தார். விவசாயம், வர்த்தகம், தொழில் ஆகியவற்றைப் பெருக்கினார். நிலப்படை, கப்பற்படை ஆகியவற்றைப் பலம் பொருந்தியனவாகச் செய்தார். ஸ்பெயின் அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கினார். கத்தோலிக்கர் அல்லாதாரைத் துன்புறுத்திவந்த மன்றங்களின் (Inquisition) நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினார். ஸ்பெயினுக்குச் சொந்தமான குடியேற்றங்களிலும் நல்லாட்சி நிலவ வழிவகை செய்தார்.

போர்ச்சுகல் நாட்டில் முதலாவது ஜோசப் (1750—1777) நல் லாட்சியை ஏற்படுத்தினார். கல்வித்துறையில் முன்னேற்றங்களை ஏற் படுத்தினார். ஸ்வீடனில் மூன்றாவது கஸ்டாவஸ் (Gustavus III) (1771—1792) வல்லாட்சி முறையை மக்களின் நன்மைக்காகக் கையாண்டு வந்தார்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினெட்டாம் நூற் றாண்டிலும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் ஏற்படுத்தப்பட்ட வல்லாட்சி முறையைப்பற்றி நாம் இதுவரை கவனித்தோம். அதே காலத்தில் ஓரிரு நாடுகளில் அம் முறைக்கு எதிராக ஏற்பட்ட புரட்சி களைப்பற்றி இங்குக் கவனிப்போம். 16-ஆம் நூற்றாண்டில் டச்சுக் காரர்கள் ஸ்பெயினுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, பிறகு சுதந்திரம் பெற்றார்கள். பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வல்லாட்சியை எதிர்த்து மக்கள் புரட்சி செய்தார்கள். இப் புரட்சியின் வரலாற்றினை இங்குச் சிறிது கவனிப்போம்.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்து ஸ்டுவர்ட்டு (Stuart) அரசர்களின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டது. அவர்களின் ஆட்சியின்போது அரசருக்கும், மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றத்திற்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அதற்குக் காரணங்கள் பல உண்டு. ஸ்டுவர்ட்டு மன்னர்களுக்கு முன்னர் ஆட்சி செலுத்திய டியூடர் குல அரசர்கள் ஏற்படுத்திய வல்லாட்சி முறையைத் தொடர்ந்து பின்பற்றவேண்டுமென அவ்வரசர்கள் விரும்பினார்கள். நாட்டில் அமைதி நிலவியிருந்ததாலும், இங்கிலாந்துக்கு பலம் பொருந் திய பகைநாடு இல்லாததாலும், பாராளுமன்றம் அவ் வல்லாட்சி

முறையை மாற்றியமைக்கவேண்டும் என்று விரும்பியது. இரண்டாவதாக, வியாபாரம் பெருகிய காரணத்தாலும், மக்களின் பொருளாதார நிலை உயர்ந்ததாலும், நாட்டில் நடுத்தர வகுப்பு ஒன்று வளர்ச்சியடைந்தது. இவர்கள் விவசாயத்திலும் வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தார்கள். பணம் படைத்தவர்களாகவும் படித்தவர்களாகவும் இருந்த காரணத்தால், நாட்டின் அரசாட்சியில் பங்குகொள்ள விரும்பினுர்கள். பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாக இவர்களில் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அரசர் தன்னுடைய அதிகாரத்தைப் பாராளுமன்றத்துடன் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. மூன்ருவதாக, ஸ்டுவர்ட்டு மன்னர்கள் ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர்களாதலால் மக்களின் போக்கை உணர்ந்து கொள்ளவில்லை. அதற்கு மாருக, அவர்கள் கோபமடையுமாறு நடந்துகொண்டனர். கடைசியாக, மத விவகாரங்களில் இவ்விருதரத்தினருக்கும் இடையே இருந்த வேறுபாடுகளும் தகராறுக்குக் காரணமாயிருந்தன. அப்பொழுது நடைமுறையிலிருந்த ஆங்கில மத ஸ்தாபனத்தைச் (Anglican Church) சேர்ந்த குருமார்கள் அரசரை ஆதரித்தனர். ஆனுல், மக்களில் பலரும், பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரும் பியூரிடன் மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்ததால் ஆங்கில மத ஸ்தாபனத்தை வெறுத்தார்கள்.

இனி, புரட்சி ஏற்பட்ட விதத்தைக் கவனிப்போம். 1603-ல் ஸ்காட்லாந்து அரசரான ஆரும் ஜேம்ஸ், முதலாம் ஜேம்ஸ் (1603—1625) என்ற பட்டத்துடன் இங்கிலாந்து அரசரானுர். இவர் வல்லாட்சியில் நம்பிக்கை மிகுந்தவர். ஆகவே, இவருக்கு முன்னர் இங்கிலாந்தை ஆண்ட டியூடர் அரசர்கள் ஏற்படுத்திய வல்லாட்சியினைத் தொடர்ந்து நடத்துவதென முடிவுசெய்தார். அரச தெய்வீக உரிமைக் கோட்பாட்டிலும் மிக்க நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனுல், பாராளுமன்றம் இதற்கு மாருன கருத்துகளைக் கொண்டிருந்தது. சட்டத்தின் வரம்புக்கு உட்பட்டே அரசர் அதிகாரத்தைச் செலுத்தமுடியும் என்று பாராளுமன்றம் வாதித்தது. அரசாங்கத்தின் செலவு அதிகமானதாலும், பாராளுமன்றம் புதிய வரிகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கியதாலும், ஜேம்ஸ், டியூடர்கள் கையாண்ட முறைகளைப் புதுப்பித்தார். பொருள்களைத் தயாரிக்கும் ஏகபோக உரிமையை விற்பது அவைகளில் ஒன்று ஆகும். இம் முறைகளைப் பாராளுமன்றம் கண்டித்தது. மேலும், ஜேம்ஸ் அவசரச் சட்டங்களைப் பெருவாரியாக ஏற்படுத்தினுர். அதனுலும் பாராளுமன்றம் மனக்கசப்பு அடைந்தது. ஜேம்ஸ் தன்னுடைய நண்பர்களையே அமைச்சர்களாகவும் ஆலோசகர்களாகவும் கொண்டிருந்தார். ஆகவே, பாராளுமன்றம் அவர்களைத் தாக்க முற்பட்டது. மத விவகாரங்களிலும் அவர் மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார். ஜேம்ஸ் ஆங்கிலிகன் மத ஸ்தாபனத்தை ஆதரித்தார். ஏனெனில், அது அரச அதிகாரத்தை அதிகப்படுத்தவேண்டும் என்ற கொள்கையினையுடைய

தாக இருந்தது. பாராளுமன்றத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை யுடைய பியூரிடன்கள் இவர்மீது வெறுப்புக்கொண்டனர். மேலும், மத விவகாரங்களில் சகிப்புத்தன்மை வேண்டும் என்ற கொள்கையுடையவ ராதலால், முதலில் கத்தோலிக்கர்களுக்கு உரிமைகள் வழங்கினர். ஆனால், இவர் கத்தோலிக்கருடைய நண்பர் என்று மக்கள் கருதினர். இதனாலும் பிராடஸ்டன்டுகளைப் பெருவாரியாகக் கொண்டிருந்த பாராளு மன்றம் இவரை எதிர்த்தது. வெளிநாட்டுக் கொள்கையின் வாயிலாக வும் அவர் மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார். இங்கிலாந்தின் பழம்பெரும் பகைநாடான ஸ்பெயினுடன் சேர முயன்றதே இதற்குக் காரணமாகும். அம் முயற்சி வெற்றிபெறவில்லை என்பதும், இங்கிலாந்து பிறகு ஸ்பெயினுடன் போர்செய்தது என்பதும் இங்குக் குறிப்பிடப் படுதல் அவசியம். அதே நேரத்தில் கால்வினிஸ்ட்[1] மதத்தினரும், ஜேம்ஸுடைய மருகருமான பாஸாடினேட் நாட்டின் தலைவர் கத்தோ லிக்கப் பேரரசருக்கு எதிராகப் போரிட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு யாதோர் உதவியும் ஜேம்ஸ் செய்யவில்லை. இது பியூரிடன்களைக் கோபமடையச் செய்தது.

அவருக்குப் பின்னர் ஆண்ட முதலாவது சார்லஸ் (1625—1649) என்பவரும் அரசருடைய அதிகாரத்தை நிலைநிறுத்த முற்பட்டார். அவர் ஹென்றியட்டா மேரியா (Henrietta Maria) என்ற கத்தோலிக்க இளவரசியை மணம் செய்துகொண்டதால், கத்தோலிக்கர்களைத் துன்புறுத்துவதை நிறுத்தினர். அதனால் மக்களும் பாராளுமன்ற மும் வெறுப்படைந்தனர். அவர் காலத்தில் நடைபெற்ற வெளி நாட்டுப் போரில் இங்கிலாந்து பலத்த நஷ்டம் அடைந்தது. அது பாராளுமன்றத்தின் கோபத்தைக் கிளறிவிட்டது. வரிகளைச் சுமத்தும் விஷயத்திலும் மன்னர் பாராளுமன்றத்துடன் சண்டைபோட வேண்டியதாயிற்று. 1628-ல் அவர் பாராளுமன்றம் தயாரித்த உரிமை மனுவை (The Petition of Right) ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அரசர் பாராளுமன்றத்தின் இசைவைப் பெறாமல் வரிவசூல் செய்யவும், மக்களை விசாரணையின்றிச் சிறையிலடைக்கவும் கூடாது என்று அம் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசர் அன்பைப் பெற்றவரும், அமைச்சருமான பக்கிங்காம் பிரபுவை பாராளுமன்றம் விசாரணைக்குக் கொண்டுவர முயற்சி செய்தது. அவரைக் காப்பாற்றப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன்பிறகு பதினோர் ஆண்டுகள் (1629—1640) மன்னர் கொடுங்கோலாட்சி புரிந்துவந்தார். கடுமையான தண்டனை விதித்தும், மக்கள் சுதந்திரத்தை அழித்தும், அவர் விருப்பம்போல் வரிகளை வசூலித்தும் மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார். மத

[1] பிராடஸ்டன்டு மதத்தின் ஒரு பிரிவு. ஜான் கால்வின் என்ற ஃபிரெஞ்சுக் காரர் இதன் கொள்கைகளை வரையறுத்தார்.

விவகாரங்களில் பியூரிடன் மதத்தினர் கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர். ஸ்காட்லாந்தில் ஆங்கிலிகன் மதஸ்தாபனத்தை ஏற்படுத்த முற்பட்டார். இதனுல் அம் மக்கள் கிளர்ச்சி செய்தனர். அதனை அடக்கப் பணம் தேவையாய் இருந்தது. ஆகவே, 1640-ல் பாராளுமன்றத்தை மீண்டும் அமைத்தார். இப் பாராளுமன்றம் அரசருக்கு வேண்டிய பணம் கொடுப்பதற்குப் பதிலாக அவருக்குத் துணையாக இருந்தவர்களை தண்டிக்க முற்பட்டது. பாராளுமன்றம் மூன்றுண்டுக்கொரு முறை கூட்டப்பட வேண்டும் என்றும், அதனுடைய இசைவைப் பெருமல் அதனைக் கலைக்கலாகாது என்றும் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் இனி அமைச்சர்களை அரசர் நியமிக்கலாகாது என்றும், படையினைப் பாராளுமன்றமே கட்டுப்படுத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப் பட்டது. அதனுல் பாராளுமன்றத்திற்கும் அரசருக்கும் போர் (1642—1649) ஏற்பட்டது. அப் போரில் அரசர் தோல்வியுற்ருர். 1649-ல் அவர் கொல்லப்பட்டார். அரசருடன் எல்லா அரசியல் ஸ்தா பனங்களும் அழிக்கப்பட்டன. இதனை ‘பியூரிடன் புரட்சி’ என்று கூறுகிருர்கள்.

அரசர் கொல்லப்பட்ட பின்னர் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. அக் குடியரசு பதினேர் ஆண்டுகள் தொடர்ந்து இருந்துவந்தது. அவ்வாட்சியின் தலைவராக ஆலிவர் கிராம்வெல் விளங்கினுர். இவர் பல அரசியல் முறையைச் சார்ந்த சோதனைகளை நடத்தினுர். ஆனுல், அவைகள் வெற்றிபெறவில்லை. ஏனெனில், அக் குடியரசு ஒருசிலராலே (பியூரிடன்) நடத்தப்பட்டுவந்தது. மக்களாட்சி ஏற்படுத்தப் பொதுத் தேர்தல் நடைபெற்ருல், பியூரிடன் ஆட்சி நிலைபெற்றிருக்க முடியாது என்பதைக் கிராம்வெல் அறிந்தார். மேலும், பாராளுமன்றத் தின் அதிகாரங்களைக் கட்டுக்குள் வைத்திருக்க விருப்பப்பட்டார். அவ ருடைய விருப்பத்திற்கேற்ருற்போல அரசியல் முறையை அமைப்பது மிகக் கடினமாகத் தோன்றியதால், பாராளுமன்றம் இன்றியே ஆட்சி புரியலானுர்.

கிராம்வெல் பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் தொடங்கப்பட்ட முதல் டச்சுப் போரை நிறுத்தினுர். பிறகு ஸ்பெயினுக்கு எதிராக ஃபிரான்சுடன் சேர்ந்துகொண்டார் என்பதை முன்னரே கவனித்தோம். அப் போர் பலத்த பொருட்சேதத்தை உண்டாக்கியது. அதனுல் குடியாட்சி மக்களின் நன்மதிப்பை இழந்தது.

கிராம்வெல் இறந்தபிறகு நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சார்லஸின் மகனுன இரண்டாவது சார்லஸ் (1660—1685-ல்) 1660-ல் அரசராக்கப்பட்டார். அவருடன் பாராளுமன்றமும், மத

ஸ்தாபனமும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. புதிதாக அமைக்கப் பட்ட பாராளுமன்றத்தில் ஆங்கிலிகன் மதத்தைச் சார்ந்த வர்களே பெரும்பான்மையினராய் இருந்தார்கள். ஆகவே, பியூரி டன்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். ஆனால், அரசர் அதிகாரம் உயர்ந்ததா, பாராளுமன்றத்தின் அதிகாரம் உயர்ந்ததா என்கிற பிரச்சினைக்கு இன்னும் முடிவு காணப்படவில்லை. சார்ல ஸும், அவருடைய தம்பி ஜேம்ஸும் கத்தோலிக்க வழிகளில் வளர்க்கப்பட்டவர்கள். ஆகவே, அவர்கள் கத்தோலிக்கர்களுக்கு மத உரிமையை வழங்க விரும்பினார்கள். ஆனால், பாராளு மன்றம் அதற்குத் தடையாக நின்றது. வெளிநாட்டு விவகாரங்களில் இருவரும் ஃபிரான்சுடன் உறவுகொள்ள விரும்பினார்கள். பாராளு மன்றம் அதற்கு இசைவு கொடுக்கவில்லை. எனவே, இருவருக்கும் மறுபடியும் சச்சரவுகள் ஏற்பட்டன.

இரண்டாவது சார்லஸ் மிகவும் பக்குவமாக நடப்பவர். அவரைப் பின்தொடர்ந்த இரண்டாவது ஜேம்ஸ் (1685—1688) வீம்பு மிக்கவர். அவர் மதவெறி கொண்டவர். அவர் தன் விருப்பம்போல் ஆட்சி செய்ய விரும்பியதால், பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். கத்தோலிக்கர்களை உயர்பதவியில் அமர்த்த அவர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட சட்டங்களினின்றும் அவர்களுக்கு விலக்கு அளித்தார் (dispensing power). சில சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நிறுத்தினார் (suspending power). இதனால் கத்தோலிக்கர்கள் பொது இடங்களில் தடையின்றி வழிபாடு நடத்தமுடிந்தது. அவ ருடைய செய்கைகள் மக்களின் கோபத்தைக் கிளறிவிட்டன. அவ ருக்குப்பின் இங்கிலாந்தினை ஆளும் உரிமை அவருடைய மூத்த மகளான மேரியைச் சார்ந்திருந்தது. அவர் வில்லியம் ஆரஞ்சு என்ற பிராடஸ்டன்டு மதத்தைச் சார்ந்த டச்சுத் தலைவரை மணம்செய் திருந்தார். ஆகவே, ஜேம்ஸ் இறந்தபின்னர் கத்தோலிக்க ஆட்சிக்கு முடிவு ஏற்படும் என்று கருதி அவருடைய சாவை எதிர்நோக்கி மக்கள் இருந்தனர். அப்பொழுது ஜேம்ஸுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. பிறந்த குழந்தை தந்தையைப்போல் கத்தோலிக்க மதத்தில் பற்றுக் கொள்ளக்கூடும் என்று கருதியதால், மக்கள், வில்லியம் ஆரஞ்சு, அவர் மனைவி மேரி ஆகியோரை இங்கிலாந்திற்கு வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அவர் களும் அவ் வேண்டுகோளை ஏற்று 1688-ல் இங்கிலாந்தில் காலடி வைத்தார்கள். பெருவாரியான மக்களின் ஆதரவு பெற்றிருந்ததால், ஜேம்ஸ் அவர்களை எதிர்க்கத் துணிவுகொள்ளவில்லை. எனவே, அவர் நாட்டைவிட்டு ஓடிவிட்டார். இடைக்காலப் பாராளுமன்றம் ஒன்றைக் கூட்டி உரிமைச் சட்டம்.(Bill of Rights) நிறைவேற்றி, வில்லியம், மேரி ஆகியோர்களை இங்கிலாந்தின் அரசர்களாக மக்கள் நியமித்தார்கள்.

இவ்வாறு இங்கிலாந்தில் பெரும் புரட்சியொன்று வெற்றிகரமாக இரத்த சேதமின்றி முடிக்கப்பட்டது.

இப் புரட்சி, அரசரின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டினைத் தகர்த்தெறிந்தது. அரசர்களை அமர்த்தும் உரிமை பாராளுமன்றத்தைச் சேர்ந்ததாகும் என்று அறிவிக்கப்பட்டது. அரசர் அதிகாரம் குறைக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் செல்வாக்கு அதிகரிக்கப்பட்டது. புரட்சிக்குப் பிறகு தானுக வளர்ந்த அமைச்சரவை ஆட்சிமுறை (Cabinet system of Government) அப் பாராளுமன்றத்தின் ஆதிக்கத்தை விரிவுபடுத்தியது. ஆங்கிலிகன் மதஸ்தாபனம் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனமாகத் தொடர்ந்து இருந்தது. புரட்சியின் விளைவாகத் தோன்றிய முற்போக்குக் கருத்துகளை ஐரோப்பியர் நாளடைவில் தங்கள் நாடுகளிலும் புகுத்த முற்படலாயினர்.

அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகள்

இன்று உலகத்தின் பல பாகங்களிலும் மேற்கத்திய நாகரிகம் செல்வாக்குப் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம். ஐரோப்பியர் அவ்விடங்களில் குடியேறியதே இதற்குக் காரணமாகும். 15ஆம், 16ஆம் நூற்றுண்டுகளில் இந்தியாவுடனும் கிழக்கிந்தியத் தீவுகளுடனும் நேரடி வியாபாரத் தொடர்புகள் வைத்துக்கொள்ள மேற்கொண்ட கடற் பயணங்கள் புதிய வழிகளுடன், புதிய நாடுகளையும் கண்டுபிடிக்க உதவின. அதன்பிறகு அவரவர் கண்டுபிடித்த இடங்களில் குடியேற்ற நாடுகளை அமைக்க ஐரோப்பியர்கள் முற்பட்டனர். இம் முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்டவர்கள் ஸ்பானியர்களும் போர்ச்சுகீசியருமே யாவார்கள். அமெரிக்காவில் முதன்முதல் காலடி எடுத்துவைத்த ஐரோப்பியர் கொலம்பஸ் என்பவராவர். இவர் 1492-ல் கிழக்கு நாடுகளுக்குப் புது வழி கண்டுபிடிக்க ஸ்பானிய அரசியின் உதவியுடன் மேற்கொண்ட கடற்பயணம், அவரை மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றுன பஹாமா தீவிற்குக் கொண்டுசென்றது. அதைத் தொடர்ந்து மேலும் மூன்று பயணங்கள் செய்தார். சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளைத் தேடும் முயற்சி, நடுஅமெரிக்கா, வெனிசூலா, கரீபியன் கடல் ஆகிய இடங்களைக் கண்டுபிடிப்பதில் முடிவடைந்தது. 1497-ல் ஜான் கேபட் (John Cabot) என்பவர் வடஅமெரிக்கக் கடற்கரைப் பிரதேசத்தில் ஆய்வுப் பயணம் செய்தார். 1500-ல் கேப்ரால் (Cabral) என்னும் போர்ச்சுகீசியர் இந்தியாவிற்குப் பயணஞ் செய்துகொண்டிருந்த பொழுது புயலால் தாக்கப்பட்டு அமெரிக்காவிலுள்ள பிரேசில் (Brazil) என்னுமிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். இவ்வாருக பிரேசில் மீது போர்ச்சுகீசியர் உரிமை கொண்டாட வழி ஏற்பட்டது. அதே சமயத்தில் அமெரிக்கோ வெஸ்புச்சி (Amerigo Vespucci) என்ற

இத்தாலியர் அமெரிக்காவில் ஆய்வுப் பயணம் ஒன்று நடத்தி, 'புதிய உலகம்' என்ற தலைப்புடன் புத்தகம் ஒன்றை வெளியிட்டார்.

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவை வென்று தங்களுடைய ஆளுகைக்குட்படுத்தலாயின. 1494-ல் போப் அலெக்சாந்தர் உலகத்தின் குறுக்கே வடக்குத் தெற்காக ஒரு கோடிட்டு, அதன் கிழக்குப் பகுதியினைப் போர்ச்சுகீசியருக்கும், மேற்குப் பகுதியினை (பிரேசில் தவிர) ஸ்பெயினுக்கும் கொடுத்தார். அவரவருக்குக் கொடுக்கப்பட்ட பகுதியில் அவர்களுக்கு வியாபாரம் செய்யவும், குடியேற்றம் ஏற்படுத்தவும் ஏகபோக தனியுரிமை வழங்கப் பட்டது. அவ்வுரிமையை ஆதாரமாகக்கொண்டு குடியேற்றங்களை அமைப்பதில் கடு முயற்சிகள் மேற்கொண்டனர். 1513-ல் ஃபிளோரிடாவை ஸ்பானியர்கள் கண்டுபிடித்தனர். 1519-ல் கோர்த்தேஸ் (Cortez) என்ற ஸ்பானியர் மெக்ஸிகோவை வென்றார். 1951-ல் பிஸாரோ என்ற ஸ்பானியர் பெருவைக் கைப்பற்றினார். சிறிது சிறிதாக ஸ்பானியர்கள் தென் அமெரிக்காவில் பெரும் பகுதி, நடு அமெரிக்கா, மெக்ஸிகோ, ஃபிளோரிடா ஆகியவைகளைத் தங்களின் குடியேற்ற நாடுகளாக மாற்றி விட்டனர். போர்ச்சுகீசியர் பிரேசிலைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்தினார்கள். இவ்விடத்திலிருந்து பொன், வைரம் ஆகியவைகள் போர்ச்சுகலுக்குப் பெருமளவில் எடுத்துச் செல்லப்பட்டன.

16ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவர்களுடைய ஏகபோக உரிமை இங்கிலாந்து, ஹாலந்து, ஃபிரான்சு ஆகிய நாடுகளின் தாக்குதலுக்கு இரையாயிற்று முதலிரண்டு நாடுகளும் பிராடஸ்டன்டு மதத்தைத் தழுவி போப்பின் அதிகாரத்தை அழித்துவிட்டமையால், அவர்கள் போப்பின் ஏற்பாட்டினை ஏற்கவில்லை. அந் நாடுகளுள் அமெரிக்காவின் குடியேற்றங்களை ஏற்படுத்தவும், அங்கு வியாபாரம் செய்யவும் முற்பட்டன. இதனால் போர் ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் பிரேசிலின் ஒரு பகுதியைக் கைப்பற்றினார்கள். முடிவில் பிரேசில் மக்கள் ஆங்கிலேயர் உதவியுடன் அவர்களைத் துரத்தியடித்தார்கள். ஸ்பானியர்கள் பல இடங்களில் தொடர்ந்து ஆட்சி செய்துவந்தனர். ஆனால், அவர்கள் ஆதிக்கம் முழுமையாக ஏற்படுத்தப்படாத இடங்களில் ஃபிரான்சு, ஹாலந்து, இங்கிலாந்து நாட்டு மக்கள் குடியேற்றங்களை அமைத்தனர். மேலும், கொள்ளைக்காரர்களின் நடவடிக்கைகள் அவர்களுடைய வியாபாரச் செழிப்பைக் குறைத்தன. ஆகவே, பதினேழாம் நூற்றாண்டில் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகியன தங்கள் செல்வாக்கை இழந்த நிலையில் இருந்தன.

இனி, ஆங்கிலேயக் குடியேற்றங்களைப்பற்றிக் கவனிப்போம். ஆங்கிலேயர்களின் ஆய்வுப் பயணங்களில் முதற் பயணத்தை

ஜான் கேபட் என்பவர் மேற்கொண்டார். அவருக்குப் பின்னர் அவருடைய மகஞன, செபாஸ்டியன் கேபட் (Sebastian Cabot) என்பவர் நடத்திய கடற் பயணங்கள், நியூபவுண்டுலாந்தில் மீன் பிடிக்கும் தொழில் வளர்வதற்கு உதவி செய்தன. ஃபிரான்சிஸ் டிரேக் (Francis Drake) என்பவர் அமெரிக்காவின் கடற்கரையோரமாக கலிஃபோர்னியா வரை சென்றுர். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் பிற்காலத்தில் ஆங்கிலேயர்கள், கலிஃபோர்னியா, ஓரிகான் (Oregon), பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய இடங்களின்மீது உரிமை கொண்டாடினுர். வால்டர் ரேலே (Walter Raleigh) என்ற மற்ருேர் ஆங்கிலேய மாலுமி தென் அமெரிக்காவிலுள்ள கயாஞ (Guiana) பகுதியில் ஆய்வுப் பயணஞ் செய்தார். வட அமெரிக்காவில் வர்ஜீனியா என்னும் இடத்தில் குடியேற்ற நாடு அமைக்கவும் முற்பட்டார். ஆனுல், பதினுரும் நூற்றுண்டில் குடியேற்ற நாடுகளே அமைப்பதில் ஆங்கிலேயர்கள் வெற்றி காணவில்லே. ஆகவே, அவர்களின் மாலுமிகள் ஸ்பானியர், போர்ச்சுகீசியர் ஆகியோருடைய வியாபாரக் கப்பல்களேக் கொள்ளேயடித்து எளிதான முறையில் பொருள் ஈட்டிவந்தனர்.

பதினேழாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்கள் குடியேற்ற நாடுகளே அமைப்பதில் வெற்றி கண்டார்கள். அவர்களது முதல் அமெரிக்கக் குடியேற்ற நாடு வர்ஜீனியாவாகும். இங்கிலாந்தை முதலாவது ஜேம்ஸ் ஆண்ட காலத்தில், குடியேற்ற நாட்டை ஏற்படுத்த கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டது. 1607-ல் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் அக் கம்பெனி 'ஜேம்ஸ் டவுன்' என்ற சிறு நகரத்தை அமைத்தது. இப்பட்டணத்தைச் சுற்றி வர்ஜீனியா என்ற குடியேற்ற நாடு வளரலாயிற்று. அங்குப் புகையிலேத் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளில் வேலே செய்வதற்கு ஆப்பிரிக்காவினின்றும் அடிமைகளேக் கொண்டுவந்தார்கள். 1624ஆம் ஆண்டில் அக் குடியேற்ற நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேய அரசாங்கம் கம்பெனியினிடமிருந்து ஏற்றுக்கொண்டது. கவர்னர் ஒருவரும், ஆலோசனே சபை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. பிறகு பிரதிநிதிகள் அடங்கிய சபை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

1610-ல் நியூபவுண்டுலாந்தில் அரசாங்கமே குடியேற்றம் ஏற்படுத்தியது. 1612-ல் வர்ஜீனியா கம்பெனி குடியேற்றக்காரர்களே பெர்மூடாவிற்கு அனுப்பியது. 1684-ல் பெர்மூடா அரசராள் குடியேற்ற நாடாயிற்று (Crown Colony).

முதலாவது ஜேம்ஸ் மன்னர் காலத்தில், அவருடைய மதக்கொள்கையில் அதிருப்தியடைந்த பியூரிடன் மதத்தினர் ஹாலந்துக்குச் சென்றனர். சில ஆண்டுகளுக்குப்பின் அவர்கள் மே ஃபிளவர் (May

Flower) என்னும் கப்பலில் அமெரிக்கா சென்றனர். இவர்களை 'யாத்திரைப் பெரியார்கள்' (Pilgrim Fathers) என்று அழைத்தார்கள் இவர்கள் ஏற்படுத்திய முதல் குடியேற்றம் பிளிமத் (Plymouth) என்பதாகும். சில ஆண்டுகளுக்குப் பிறகு அநேக பியூரிடன்கள் மாசாசுசெட்ஸ் குடாக் கம்பெனி (Massachusetts Bay Company) ஒன்றை முதலாவது சார்லஸ் மன்னரின் அனுமதியுடன் தோற்றுவித்தார்கள். அக் கம்பெனியைச் சார்ந்தோர்கள் மாசாசுசெட்ஸ் குடியேற்றத்தை ஏற்படுத்தினார்கள். இங்குக் குடியேறியவர்கள் மதவெறியர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வெளிநாடு சென்றவர்களாவார்கள். எனினும், அவர்கள் குடியேறிய பகுதிகளில் மதவிவகாரங்களில் அடக்கு முறையைக் கையாண்டனர். ஆகவே, முற்போக்குக் கருத்துடையவர்கள் அப் பகுதியினின்றும் பிரிந்துசென்று 1636-ல் ரோட் ஐலண்ட் (Rhode Island) என்ற குடியேற்றத்தை ஏற்படுத்தினார்கள். கொஞ்ச காலத்திற்கெல்லாம் மாசாசுசெட்ஸ் குடியேற்ற நாட்டின் தெற்கிலும் வடக்கிலும் பியூரிடன் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளுள் சிலவற்றை மாசாசுசெட்ஸ் தன்னுடன் இணைத்துக்கொண்டது. இறுதியில் நான்கு பியூரிடன் குடியேற்றங்கள் இருந்தன; மாசாசுசெட்ஸ், ரோட் ஐலண்டு, கனக்டிகட் (Connecticut), நியூ ஹாம்ப்ஷயர் (New Hampshire) இவைகளை ஒன்றுசேர்த்து 'நியூ இங்கிலாந்து' (New England) குடியேற்றங்கள் என்று கூறுவதுண்டு.

இதன் பிறகு ஆங்கிலேயர்கள் மேற்கிந்தியத் தீவுகள் சிலவற்றைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்தினர். 1925-ல் பார்படாஸ் (Barbados) குடியேற்ற நாடாக ஏற்படுத்தப்பட்டது. அதையடுத்து ஆன்டிகுவா (Antigua), செயின்ட் கிட்ஸ் (St. Kitts), பஹாமா தீவுகள் ஆகியவற்றிலும் குடியேற்றம் அமைத்தனர்.

1632-ல் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பால்டிமோர் பிரபு (Lord Baltimore) முதலாவது சார்லஸ் மன்னரிடம் அமெரிக்காவில் குடியேற்றம் ஏற்படுத்துவதற்கு அனுமதி பெற்றார். அவருடைய மகன் குடியேறுபவர்களை அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்று மேரிலாந்து (Maryland) என்னும் குடியேற்றத்தை அமைத்தார். அங்கு பிராட்டஸ்டன்டு மதத்தினரும் குடியேறினார்கள்.

1638-ல் நடு அமெரிக்காவில் ஹோண்டுரா கடற்கரையில் பெலிஸ் (Belize) என்ற குடியேற்றத்தை ஏற்படுத்தினர். 1655-ல் ஜமெய்கா ஆங்கிலேயர் வசமாயிற்று. இது மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றாகும்.

இரண்டாவது சார்லஸ் மன்னர் ஆங்கிலேயக் குடியேற்றங்களை அமெரிக்காவில் ஏற்படுத்த உதவி செய்தார். அவர் காலத்தில் ஹட்சன் குடாக் கம்பெனி (Hudson Bay Company) ஏற்படுத்தப்பட்டது.

1610-ல் ஹட்சன் என்னும் ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்ட ஹட்சன் விரிகுடாப் பகுதியில் வியாபாரத்தைப் பெருக்குவது அதன் முக்கிய நோக்கமாகும்.

அவர் காலத்தில் மேரிலாந்துக்கு அருகே புதிய குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. சில காலத்திற்கெல்லாம் இதை இரண்டு குடியேற்றங்களாகப் பிரித்தனர்; வடக்குக் கரோலிஞ (North Carolina), தெற்குக் கரோலிஞ (South Carolina)—வட அமெரிக்காவின் கிழக்குக் கரையோரத்தில்—இவ்வாறுக இரண்டு ஆங்கிலேயக் குடியேற்றங்களின் தொகுதி அமைக்கப்பட்டது. வடக்குத் தொகுதி நியூ இங்கிலாந்துக் குடியேற்றங்களை உட்கொண்டிருந்தது; தெற்குத் தொகுதி மேரிலாந்து, வர்ஜீனியா, வடக்குக் கரோலிஞ, தெற்குக் கரோலிஞ ஆகியவைகளை உட்கொண்டிருந்தது. இவ்விரு தொகுதிகளுக்கு இடையில் நியூ ஆம்ஸ்டர்டாம் (New Amsterdam) என்ற டச்சுக் குடியேற்றமும், நியூ ஸ்வீடன் என்ற ஸ்வீடனின் குடியேற்றமும் இருந்தன. நாளடைவில் நியூ ஆம்ஸ்டர்டாம் குடியேற்றம் நியூ ஸ்வீடன் குடியேற்றத்தைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. இரண்டாவது சார்லஸ் மன்னர் காலத்தில் இங்கிலாந்துக்கும் ஹாலந்துக்கும் இடையே போர் நிகழ்ந்தது (1664–67). மன்னரின் தம்பி ஜேம்ஸ், யார்க் கோமகன் (James, the Duke of York) நியூ ஆம்ஸ்டர்டாமைக் கைப்பற்றினுர். போரின் முடிவில் நியூ ஆம்ஸ்டர்டாம் ஆங்கிலேயர் வசம் ஆயிற்று. ‘நியூயார்க்கு’ என்ற பெயர் அதற்கு அளிக்கப்பட்டது. பிறகு அதனை மூன்று பிரிவுகளாக்கிஞர்கள்—நியூயார்க்கு, நியூஜெர்சி (New Jersey), டெலவேர் (Delaware). வில்லியம் பென் (William Penn) என்பவருக்கு சார்லஸ் பணம் கொடுக்கவேண்டியிருந்ததால், சார்லஸ் அவருக்கு எஞ்சிய நிலப்பகுதியினை அளித்தார். இதற்குப் ‘பென்சில்வேனியா’ என்ற பெயர் வழங்கலாயிற்று. இங்குதான் ஃபிலடெல்ஃபியா (Philadelphia) என்ற நகரம் ஏற்படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர்கள் தென் அமெரிக்காவிலுள்ள கயாஞ என்னுமிடத்தில் குடியேற்றங்களை அமைத்தார்கள். இதுவே பிற்காலத்தில் ‘பிரிட்டிஷ் கயாஞ’வாக வளர்ச்சியுற்றது.

1732-ல் ஜேம்ஸ் ஒக்லெதோர்ப் (James Oglethorpe) என்பவர் இங்கிலாந்தில் கைதிகளை நடத்தும் முறையில் அதிருப்தியடைந்தார். ஆகவே, அமெரிக்காவில் குடியேற்ற நாடொன்றை அமைத்து, விடுதலையான கைதிகளுக்குப் புது வாழ்வு கொடுக்கத் திட்டமிட்டார். இத்திட்டத்தின் விளைவு ‘ஜார்ஜியா’ என்னும் குடியேற்றமாகும்.

ஆங்கிலேயர்கள் வட அமொரிக்காவில் ஏற்படுத்திய குடியேற்றங்கள் சாலச் சிறந்தனவாகும். அவைகள்தாம் உண்மைக் குடியேற்றங்

களாகும். அவைகளில் குடியேறியவர்கள் குடியிருப்பை நாடி வந்தவர்களேயாவார். ஆகவே, அவர்கள் தங்களுடைய பெண்டுபிள்ளைகளுடன் இங்குக் குடியேறினுர்கள். அவர்களில் பலர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு உதவியாக அடிமைகளை அமர்த்திக் கொண்டார்கள். ஆகவே, அடிமை வியாபாரம் பெருகலாயிற்று. மேற்கிந்தியத்தீவுகள் இவ் வியாபாரத்தில் சிறந்து விளங்கின. ஒருசில மக்கள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். மத விவகாரங்களில் சகிப்புத்தன்மை கையாளப்பட்டதால், இக் குடியிருப்புகளின் மக்கள் தொகை அதிகரித்தது. மிகுதியான மக்கள்தொகைதான் அவர்கள் அமெரிக்காவின் ஏனைய பகுதிகளில் குடியேற்றம் ஏற்படுத்துவதில் வெற்றி காண உதவியது. மேலும், ஆங்கிலேய அரசாங்கம், அவர்களுடைய ஆட்சிமுறை, சட்டதிட்டங்கள், வியாபாரம் ஆகியவற்றில் மிகுந்த அக்கறை காட்டி வந்தது. அதே நேரத்தில் அவைகள் இங்கிலாந்தினுடைய நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டவை என்ற கருத்தும் நிலவிவந்தது. அதனுல் இங்கிலாந்தின் நன்மைக் கெனப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளுள் ஒன்று 1660-ல் இயற்றப்பட்ட 'கப்பல் போக்கு வரத்துச் சட்டம்' (The Navigation Act). அதன்படி இங்கிலாந்துக்கும் குடியேற்றங்களுக்கும் இடையே நடைபெறும் வியாபாரம் ஆங்கிலேயக் கப்பல்களின் வாயிலாகவே நடைபெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. சர்க்கரை, புகையிலை போன்ற பொருள்கள் இங்கிலாந்துக்குமட்டுமே ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் பிற்காலத்தில் குடியேற்றங்களுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே போர் மூளக் காரணமாயிருந்தன. இதைப்பற்றி விரிவாகப் பின்னர் கவனிப்போம்.

ஃபிரெஞ்சுக்காரர்களும் அமெரிக்காவின் பல பகுதிகளில் குடியேற்றங்களை அமைத்தனர். 16ஆம் நூற்ருண்டில் ஜாக் கார்ஷியர் (Jacques Cartier) என்ற ஃபிரெஞ்சு மாலுமி செயின்ட் லாரன்ஸ் வளைகுடாவைக் (Gulf of St. Lawrence) கண்டுபிடித்தார். செயின்ட் லாரன்ஸ் நதிப் பள்ளத்தாக்கில் அவர் நான்கு பயணங்களை மேற்கொண்டார். லாரன்ஸ் குடாக் கரையோரங்களிலும், அதனருகே உள்ள செயின்ட் ஜீன் தீவு (Ile de St. Jean), ரோயால் தீவு (Ile Royale), கேப்பிரிட்டன் தீவு (Cape Breton Island) ஆகியவைகளிலும், நோவஸ்கோஷியாவிலுள்ள (Novascotia) அகேடியாவிலும் (Acadia) குடியேற்றங்களை ஏற்படுத்திஞர்கள். பிரிட்டன் தீவில் பதினெட்டாம் நூற்ருண்டில் 'லூயிபர்க்' என்ற கோட்டை ஏற்படுத்தப்பட்டது. 1608-ல் ஷாம்ப்லேயின் (Champlain) என்பவர் 'கியூபெக்' (Quebec) என்னும் குடியேற்றத்தை ஏற்படுத்திஞர். இதனின்றுதான் கனடா குடியேற்ற நாடு வளர்ச்சியுற்றது. இதன் பிறகு ஃபிரஞ்சு சமயப்பரப்

பாளர்களும் துணிச்சல் வியாபாரம் செய்பவர்களும் லாரன்ஸ் நதிப் பிரதேசத்திலும் பெரும் ஏரிகளிலும் ஆய்வுப் பயணங்களை மேற் கொண்டனர். அவர்களில் ஒருவரான ராபர்ட் தெ லா சேல் (Robert de le Salla) என்பவர் மிசிசிபி நதி வழியாகச் சென்றுர். மிசிசிபி பள்ளத்தாக்கின்மீது ஃபிரஞ்சுக்காரர்களின் உரிமையை நிலைநாட்டினுர். பதினேழாம் நூற்றுண்டில் ஃபிரஞ்சுக்காரர்கள் மேற்கிந்தியத் தீவுகள் சிலவற்றிலும் [மார்தினிக் (Martinique), குவாதெலூப் (Guadeloupe), கிரெனடா (Grenada), செயின்ட் பார்த்தலோமியூ (St. Bartholomew), செயின்ட் குரூவா (St. Croix), செயின்ட் கிட்ஸ் (St. Kitts) தீவின் ஒரு பகுதி], தென்அமெரிக்காவின் கயானுவைச் சேர்ந்த கேயென் (Cayenne) என்னுமிடத்திலும் குடியேற்றங்களை அமைத்தனர். 1699-ல் இல்பர்வில் (Ilberville) என்பவர் லூசியானுவில் (Louisiana) ஃபிரஞ்சுக் குடியேற்றம் ஒன்றை ஏற்படுத்தினுர். லூயி மன்னர் மேற்கிந்தியக் கம்பெனியொன்றை அமைத்துக் குடியேற்ற நாடுகளைப் பெருக்குவதில் காட்டிய அக்கறையைப்பற்றி முன்னரே கவனித் தோம். இக் குடியேற்றங்கள் பெரும்பாலும் இராணுவமுறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆகவே, அவைகள் ஆங்கிலேயக் குடியேற்றங்களைப்போல் மக்கள்தொகை நிறைந்திருக்கவில்லை. அது அக் குடியேற்றங்களின் அழிவுக்கு ஒரு காரணமாகும். அமெரிக் காவில் ஆங்கிலேயர்களும் ஃபிரஞ்சுக்காரர்களும் பெரும்பாலும் அடுத்தடுத்துக் குடியேற்றங்களை அமைத்தனர். அதனுல் பதினேழாம் நூற்றுண்டிலேயே இவ்விரு குடியேற்றங்களுக்குமிடையே போர் மூண்டது. அவைகளில் முக்கியமானவை நாம் முன்னரே கவனித்த ‘வில்லியம் சண்டை’ என்ற ஆக்ஸ்பர்க் நேசநாடுகளின் போர், ‘ஆன் அரசியார் சண்டை’ என்ற ஸ்பானிய வாரிசுரிமைப் போர் ஆகும். இப் போரின் விளைவாக அக்கேடியா ஆங்கிலேயர் வசமாயிற்று. நாளடை வில் ஃபிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் அப்பலாசியன் மலைத் தொடரைக் கடந்து அமெரிக்காவின் உட்பகுதியில் புகுந்து அவர்களது குடியேற்றங்களை ஏற்படுத்தவிடாமல் தடுத்து, அமெரிக்காவின் உட் பகுதியைத் தங்களது ஆளுகையின்கீழ்க் கொண்டுவர முடிவு செய்தார்கள். ஆகவே, பல கோட்டைகளை வரிசையாக அமைத்தனர். ஆங்கிலேயர்களும், ஃபிரஞ்சுக்காரர்களின் குடியேற்றங்களாகிய கனடாவும் லூசியானுவும் இணைக்கப்பட்டால், தங்களுடைய முன்னேற்றம் பாதிக்கப்படும் என்று எண்ணியதால், அவ்விணைப்பைத் தடுக்க முற்பட்டனர். ஆகவே, அவர்கள் ஒகியோ (Ohio) நதிப் பள்ளத் தாக்கில் கோட்டைகள் அமைக்கலாயினர். இதனுல் பதினெட்டாம் நூற்றுண்டில் இரண்டு போர்கள் ஏற்பட்டன—ஆஸ்திரியா வாரிசுப் போர், ஏழாண்டுப் போர். அப் போர்களின் விளைவுகளை நாம் முன்னரே கண்டோம். இதன்பிறகு ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் வட அமெரிக்காவில் நிலைநிறுத்தப்பட்டது.

பதினேழாம் நூற்றுண்டில் ஹாலந்து பெரு வியாபார நாடாக விளங்கியது. டச்சுக்காரர்கள் பால்டிக் கடல், அண்மைக் கிழக்கு நாடுகள், அமெரிக்க தூரக்கிழக்கு நாடுகள் ஆகியவற்றுடன் வியாபாரத் தொடர்புகள் வைத்திருந்தனர். அமெரிக்காவில் குடியேற்றங்கள் அமைப்பதற்கும், வியாபாரம் செய்வதற்கும் 1621-ல் மேற்கிந்தியக் கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டது. இக் கம்பெனி தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்ற போர்த்துகீசியருடனும் ஸ்பானியர்களுடனும் போர்புரியவேண்டியதாயிற்று. முடிவில் மேற்கிந்தியத் தீவிலும், ஹட்சன் நதிப் பள்ளத்தாக்கிலும், தென் அமெரிக்காவில் கயானுவிலும் குடியேற்றங்களை அமைத்தனர். பிரேசிலின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர்கள். ஆனல், வெகுவிரைவில் அவ்விடத்தினின்றும் பிரேசில் மக்களால் துரத்தப்பட்டனர். பதினேழாம் நூற்றுண்டில் ஹாலந்துக்கும் இங்கிலாந்துக்கும் வியாபாரம் காரணமாக மூன்று போர்கள் நிகழ்ந்தன. இவைகளின் முடிவில் டச்சுக்காரர்கள் நியூ ஆம்ஸ்டர்டாம் பகுதியினை இழந்தார்கள். டச்சுக்காரர்கள் குடியேற்றங்களை வியாபாரத் தலங்களாகக் கருதினர்களேயொழியக் குடியிருப்பு இடங்களாகக் கொள்ளவில்லை. எனவே, அவர்களது குடியேற்றங்கள் ஆங்கிலேயர்களின் குடியேற்றங்களைப் போல் பலம் பெருந்தியனவாக இல்லை. அதுவே அவர்களின் அழிவுக்குக் காரணமாயிற்று.

ஆப்பிரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகள்

பதினைந்தாம் நூற்றுண்டில் ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஆய்வுப் பயணங்கள் பலவற்றை ஐரோப்பியர்கள் மேற்கொண்டனர். போர்ச்சுகீசிய அரசரான ஹென்றி என்பவர் புதிய நாடுகளைக் கண்டு ஆராய்வதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். மேலும், அவர் பிற மதத்தினரைக் கிறித்துவ மதத்தைத் தழுவும்படி செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டார். அக் காலத்தில் இந்தியாவிற்குப் புது வழி கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தைப் பலர் உணர்ந்திருந்தனர். மேற்கூறிய காரணங்களால் போர்ச்சுகீசிய மாலுமிகள் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரமாகக் கடற் பயணங்கள் செய்தனர். 1460-க்குள் அவர்கள் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரத்தின் பாதி தூரம் சென்றனர். 1488-ல் பார்த்தலோமியூ டயஸ் (Bartholomew Diaz) என்பவர் மேற்குக் கரையின் தெற்கு முனையை—நன்னம்பிக்கை முனையை—அடைந்தார். அவரைப் பின்தொடர்ந்த வாஸ்கோடகாமா (Vasco de Gama) என்பவர் நன்னம்பிக்கை முனையைக் கடந்து, கிழக்குக் கரையோரமாக மாலிந்தி (Malindi) வரை பயணம் செய்து, பிறகு இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டையை அடைந்தார். இந்தக் கடற் பயணங்கள் போர்ச்சுகீசியர்களுடைய வியாபாரத் தலங்கள் பல ஆப்பிரிக்காவின் கடற்கரையோரத்தில்

அமைக்கப் பெரிதும் பயன்பட்டன. முதன்முதலில் ஆப்பிரிக்கக் கரைப் பகுதியை ஆராய்ந்த காரணத்தால், ஆப்பிரிக்கா முழுவதையும் அத னுடையதெனப் போர்ச்சுகல் உரிமை கொண்டாடியது. ஆனல், அவ் வுரிமையைப் பாதுகாக்க அதற்குப் போதிய பலமில்லை. அதனல் ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவில் வியாபாரத் தலங்களை அமைக்க முற்பட்டன. தாமஸ் விந்தாம் (Thomas Wyndham), ஜான் லோக் (John Lok) ஆகிய ஆங்கிலேய மாலுமிகள் கினி குடாவிற்குப் பல பயணங்களை நடத்திச் சென்ருர்கள். ஜான் ஹாகின்ஸ் (John Hawkins) என்பவர் கினி கடற்கரையில் இறங்கிப் பல நீக்ரோக்களைப்பிடித்து, அவர் களை ஸ்பானிய அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் விற்ருர். இதுதான் அடிமை வியாபாரத்தின் தொடக்கமாகும். அடிமை வியாபாரம் மிகவும் இலாபகரமாக இருந்ததால், ஆங்கிலேய அரசாங்கம் மேற்கு ஆப்பிரிக் காவின்பால் தன்னுடைய கவனத்தைத் திருப்பியது. காம்பியா (The Gambia) நதிக்கரையில் ஒரு தலத்தை 1631-ல் ஏற்படுத்தியது. 1662-ல் ‘ ராயல் அட்வென்ஸரர்ஸ்’ (Royal Adventurers) என்னும் கம்பெனி ஏற்படுத்தப்பட்டது. அடிமை வியாபாரத்தை ஒழுங்கு படுத்துவதே இதனுடைய முக்கிய நோக்கமாயிருந்தது. ஆனல், டச்சுக்காரர்களின் போட்டியால் இக் கம்பெனி நலிவுற்றது. 1672-ல் ‘ராயல் ஆப்பிரிக்கக் கம்பெனி’ (Royal African Company) என்ற பெயரால் அக் கம்பெனி மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. அது கோல்ட் கோஸ்டில் பல வியாபாரத் தலங்களை ஏற்படுத்தியது. ஸியேராலியோன் என்னுமிடத்திலும் குடியேற்றத்தை ஆங்கிலேயர்கள் அமைத்தனர்.

1652-ல் டச்சுக்காரர்கள் நன்னம்பிக்கை முனையைத் தம் வசப்படுத் தினர்கள். தேவைப் பொருள்களுக்காகக் கப்பல்கள் செல்லக்கூடிய துறைமுகமாக அதனை ஏற்படுத்தினர்கள். ஆனல், அதைக் குடி யேற்ற நாடாக அமைக்க யாதொரு முயற்சியும் செய்யவில்லை.

ஃபிரஞ்சுக்காரர்களும் ஆப்பிரிக்காவில் மடகாஸ்கர், கோரி (Goree), செனிகல் நதிப் பிரதேசம் ஆகிய இடங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர்கள். ஆனல், உண்மையான ஐரோப்பியக் குடியேற் றங்கள் பிற்காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டன.

பதினேழாம், பதினெட்டாம் நூற்ருண்டுகளில் ஆசியா

இனி, இக் காலத்தில் ஆசியாவின் முக்கிய நாடுகளாக விளங்கிய இந்தியா, சீனு, ஜப்பான் ஆகியவற்றின் நிலைமையினைக் கவனிப்போம்.

பதினேழாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் அக்பர் என்னும் சிறப்பு வாய்ந்த மொகலாய அரசர் இந்தியாவை ஆண்டுவந்தார். ஏறக் குறைய ஐம்பது ஆண்டுகள் அவர் அரசு செலுத்திய காலத்தில், புதுக்

கருத்துகளை இந்தியாவில் புகுத்தினர். மக்களின் நலனுக்காக மிகவும் பாடுபட்டார். அவர் அரசியல் திறமை வாய்ந்தவர். அஞ்சாது போர் புரியும் ஆற்றலையும் பெற்றவர். அவருக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது என்று கூறப்படுகிறது. ஆனால், கல்வித்துறையில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. இந்துக்களை அடக்கியாள்வதற்குப் பதிலாக அவர்களது ஒத்துழைப்பையும் நன்மதிப்பையும் பெற்ற பேரரசை ஏற்படுத்தவேண்டும் என்ற புரட்சிகரமான நோக்கத்தைக் கொண்டிருந்தார். ஆகவே, இந்துக்களை உயர்ந்த பதவியில் அமர்த்தினர். மத விவகாரங்களின் சகிப்புத் தன்மையில் திடநம்பிக்கை கொண்டிருந்தார். ஆகவே, இந்துக்களின் மீது சமயம் காரணமாக சுமத்தப்பட்ட கட்டுப்பாடுகளை அகற்றினர். ஆகவே, வரலாற்றில் காணப்படும் பெருமை வாய்ந்த அரசர்களில் ஒருவராக இவர் கருதப்படுகிறார்.

அக்பருக்குப் பின் அவருடைய மகன் சலீம், 'ஜஹாங்கீர்' என்ற பட்டத்துடன் பேரரசரானர். நியாயம் வழங்குவதில் மிக்க ஆர்வம் கொண்டவர். ஆகவே, தன் அரண்மனை வாயிலில் மணி ஒன்றை அமைத்தார். அம் மணியை அசைத்து அவரிடம் யாவரும் தங்களுடைய கஷ்டங்களை எடுத்துரைக்க வழி செய்தார். இவர் காலத்தில் ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே புதுத் தொடர்பொன்று ஏற்படுத்தப்பட்டது. இதைப்பற்றிப் பின்னர் விவரமாகக் கவனிக்கலாம்.

1628-ல் ஷாஜஹான் பேரரசரானர். அவருடைய காலம் இந்தியாவில் மொகலாய ஆட்சியின் பொற்காலம் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. அவர் ஆற்றல் வாய்ந்த அரசர். அவருடைய குடிமக்களை அவர் குழந்தைகளாகப் பாவித்தார். அவரது ஆட்சியின் கடைசியில் ஏற்பட்ட வாரிசுப் போருக்கு முன்னர் அவருடைய அதிகாரத்தை எதிர்க்க எவருக்கும் தைரியமில்லை. அயல்நாடுகளினுல் யாதோர் ஆபத்தும் இந்தியாவிற்கு அவர் காலத்தில் நேரவில்லை. நிதிநிலையும் சீரிய நிலையில் இருந்தது. மேற்கு ஆசியாவுடனும் ஐரோப்பாவுடனும் இந்திய மக்கள் நடத்திவந்த வியாபாரம் செழிப்புற்றுக் காணப்பட்டது. கட்டடக் கலை ஓங்கி வளர்ந்திருந்தது. அக் காலத்தில் இந்தியாவின் கட்டடக் கலையின் சிறப்பை எடுத்துக்காட்டும் சின்னங்களில் ஒன்ருகிய தாஜ்மஹால் அவரால் கட்டி முடிக்கப்பட்டது. அதைக் கட்டி முடிக்க இருபத்திரண்டு ஆண்டுகளும், மூன்று கோடி ரூபாய்களும் செலவிடப்பட்டன என்று கூறுகிறார்கள். இலக்கிய உலகிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இவர் காலத்தில் ஏற்பட்டன. அப்துல் அமீத் லஹோரி (Abdul Hamid Lahori) என்பவர் இயற்றிய 'பாதுஷா நாமா' (Padshah Nama), காஃபி கான் (Khafi Khan) இயற்றிய 'முந்தகாப்-

உல்-லுபாப்' (Muntakab-ul-Lubab), பீஹாரிலால் இயற்றிய 'சாத் சாய்' (Sat Sai of Biharilal) ஆகிய நூல்கள் இவர் காலத்தில் இயற்றப் பட்டன. சிறப்புமிக்க இவருடைய ஆட்சியிலும் சில குறைகள் உண்டு. மாகாண கவர்னர்களின் ஆட்சி சீர்கெட்டிருந்தது. அதைச் சீர் படுத்த யாதொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களின் பொருளாதார நிலை சீரழிந்திருந்தது. அதற்குக் காரணம் அவர்கள்மேல் சுமத்தப்பட்ட வரிச்சுமையேயாகும். மாபெருஞ் சேனையையும் ஆளும் வர்க்கமொன்றையும் வைத்துப் போற்றுவதற்கு ஏராளமான பொருள் தேவைப்பட்டது. அவர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களும் பெரும் பொருட்செலவினை ஏற்படுத்திவிட்டன. ஆகவே, இவருடைய ஆட்சி ஏறத்தாழ 14ஆவது லூயி மன்னரின் ஆட்சியை ஒத்திருக்கிறது என்று கூறுவர்[1]. ஃபிரான்சில் ஏற்பட்டதுபோலவே இந்தியாவிலும் பொது நிதி சீர்கேட்டை அடைந்தது. இதுவே மொகலாயப் பேரரசு அழிவதற்கு ஒரு காரணமாகும்.

1657-ல் ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டார். அதைத் தொடர்ந்து நாட்டில் வாரிசுப் போர் ஒன்று நிகழ்ந்தது. முடிவில் ஷாஜஹா னுடைய மூன்ருவது மகன் அவுரங்கசீப் வெற்றிபெற்ருர். 1658-ல் பேரரசராக முடி சூட்டிக்கொண்டார்.ஷாஜஹான் சிறையிலடைக்கப்பட் டார். பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதி முழுவதிலும் இந்தியாவை ஆண்ட அவுரங்கசீப் பல சாதனைகளைப் புரிந்தார். முதலில் வங்காளத் தின் கவர்னராகப் பணியாற்றிவந்த மீர் ஜும்லா (Mir Jumla) உதவி கொண்டு மொகலாயப் பேரரசுக்கு இடையூறுகளை விளைவித்துவந்த அஹோம்ஸ் (Ahoms) என்னும் மக்களை ஒடுக்கினுர். அவர்களுடைய நிலப்பகுதிகளில் சிலவற்றைத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார். வடமேற்கு எல்லைப் பகுதியில் வாழ்ந்துவந்த ஆப்ரிதியர் போன்ற மக்கள் மொகலாயர்களுக்குப் பலவிதத் தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். அவர்களுக்கு எதிராக அவுரங்கசீப் தானே படை நடத்திச் சென்ருர். அநேக தலைவர்களுக்குப் பணம் கொடுத்து அவர்களைத் தன் ஆணைக்குட்படுத்தினுர். மற்றவர்களைப் படைகளைக் கொண்டு அடக்கினுர். உதவித் தொகை கொடுத்தும், ஒரு மக்கட்பிரிவை மற் ருென்றுக்கு எதிராகத் தூண்டிவிட்டும் அமைதியை அவ்விடத்தில் ஏற் படுத்தினுர்.

மத விவகாரங்களில் இவருடைய கொள்கை அக்பருடைய கொள்கையினின்றும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இவர் தீவிரமான மதக் கருத்துகளைக் கொண்டவர். திருக்குரானில் கூறப்

[1] Three Authors', 'An Advanced History of India', page 490.

பட்டுள்ளது போலவே நடக்க முயன்றார். அரசரவையில் இசை பாடுவதை நிறுத்திஞர். ஜோசியர்களை விரட்டிஞர். குடிப்பழக்கத்தை நிறுத்தப் பாடுபட்டார். பேரரசர் பிறந்தநாளையொட்டித் தங்கத்தாலும் வெள்ளியாலும் பேரரசரை எடைபோடும் வழக்கத்தை நிறுத்திஞர். திருவிழாக் காலங்களில் ஊர்வலங்களைத் தடை செய்தார். தூய வாழ்க்கையை வற்புறுத்துவதற்கெனத் தனி அதிகாரிகளை நியமித்தார். முகம்மதியர்களல்லாதாரை இஸ்லாம் மதத்தில் சேரும்படி வற்புறுத்திஞர். அவ்வாறு சேருபவருக்கு உயர்ந்த பதவிகள் அளித்தார். இந்துக்களைப் பலவாறு கொடுமைப்படுத்திஞர். அவர்களுடைய தொழுகை இடங்களை அழித்தார். காசி, மதுரை ஆகிய இடங்கள் அவருடைய கொடுமைக்கு இலக்காயின. இந்துக்கள்மீது விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியைப் புதுப்பித்தார்.

இக் கொடுமைகளைச் சகிக்கமுடியாத இந்துக்கள் அவராட்சிக்கு எதிராகப் பல கிளர்ச்சிகளைச் செய்தார்கள். மதுரையைச் (வட இந்தியா) சார்ந்த ஜாட் என்னும் மக்கள் கோக்லா (Gokla), இராஜாராம், சூராமன் (Churaman) ஆகிய தலைவர்களின்கீழ்க் கிளர்ச்சி செய்தார்கள். கிழக்கு மாளவத்தில் புந்தேலர்கள் தனி நாடு ஒன்றை அமைத்தனர். சாத்நாமி (Satnamis) என்பவர்களின் கிளர்ச்சியை அவுரங்கசீப் அடக்கிவிட்டார். சீக்கியர்களின் தலைவர் டெஜ் பகதூர் (Teg Bahadur) அவுரங்கசீப்பின் நடவடிக்கைகளைக் கண்டித்த காரணத்திற்காகக் கொல்லப்பட்டார். இதனுல் சீக்கியர்கள் மொகலாய அரசரின் பகைவர்களானூர்கள். குரு கோவிந்தர் தலைமையின்கீழ் மொகலாயர்களுக்கு எதிராகச் சண்டையிட்டுவந்தனர். அக்பர் காலத்தில் மொகலாய ஆட்சியின் தூண்களாக இருந்த இராஜபுத்திரர்களும் அவுரங்கசீப்பை எதிர்க்கலாயினர். மார்வார் அரசர் இறந்தபின் அவுரங்கசீப் அப் பகுதியைப் பேரரசுடன் இணைத்தார்.

மேலும், அவ்வரசர் இறந்தபின் அவருக்குப் பிறந்த குழந்தையை அப் பகுதி மக்கள் அரசராக்கவேண்டும் என்று விரும்பினர். அவுரங்கசீப் அக் குழந்தை இஸ்லாம் மதத்தைத் தழுவினுல் அரசபீடத்தில் அமர்த்துவதாகக் கூறிஞர். இதனுல் மார்வார் மக்கள் துர்காதாஸ் என்பவரின் தலைமையின்கீழ்க் கிளர்ச்சி செய்தார்கள். அவர்களுக்கு உதவியாக மேவார் சேர்ந்துகொண்டது. அவுரங்கசீப் தானே படை நடத்திச் சென்ருர். மேவார் தலைநகரான சித்தூரைக் கைப்பற்றிஞர். அச் சமயத்தில் அவருடைய மகனுன அக்பர் தந்தைக்கெதிராகக் கலகம் செய்தார். இராஜபுத்திரர்கள் அவருடன் சேர்ந்தனர். அவுரங்கசீப் மிகத் தந்திரமாக அவர்களை அக்பர் பக்கத்தினின்றும் பிரித்துவிட்டார். 1681-ல் மேவாருடன் சமாதானம் செய்துகொண்டார். ஜிசியா வரிக்குப் பதிலாகச் சில நிலப்பகுதிகளை அவுரங்கசீப்புக்குக் கொடுப்பதற்கு மேவார் இசைந்தது. மார்வார் போரைத் தொடர்ந்து நடத்திவந்தது.

அதன்பிறகு அவுரங்கசீப் தன் கவனத்தைத் தக்காணத்தில் திருப்பினுர். அப்பொழுது சிவாஜி என்ற மராட்டியத் தலைவர் பல கோட்டைகளைத் தக்காணத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த முஸ்லிம் நாடுகளில் ஒன்ருன பீஜபூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினுர். மொகலாயப் பேரரசும் அவரால் தாக்கப்பட்டது. வடமேற்குப் பகுதியில் அமைதி ஏற்படுத்துவதில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியிருந்ததால், அவுரங்கசீப் சிவாஜியை அடக்க உடனடியான நடவடிக்கையினை மேற்கொள்ளவில்லை. இதற்கிடையில் பீஜபூர் சுல்தான் அப்சல் கான் என்ற சேனைத் தலைவனின்கீழ் அனுப்பிய படையொன்றினை சிவாஜி தோற்கடித்தார். அதன்பிறகு மொகலாய சேனையொன்று ஷயிஸ்டகான் என்பவரின் தலைமையின்கீழ் அனுப்பப்பட்டது. அதுவும் சிவாஜியால் தோற்கடிக்கப்பட்டது. ஆகவே, அவுரங்கசீப் ஜெய்சிங்கைத் தக்காணத்திற்கு அனுப்பிவைத்தார். சிவாஜி (1665) இவருடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. ஜெய்சிங்கு இவரை டில்லிக்கு வருமாறு அழைத்தார். அவுரங்கசீப்பிடம் தக்க வெகுமதி பெறலாம் என்ற நோக்கத்துடன் டில்லி சென்ருர். அங்கு அவர் அவமதிக்கப்பட்டார். பிறகு பேரரசரை ஏசியதற்காகச் சிறையிலடைக்கப்பட்டார். வெகு தந்திரமாகச் சிறையிலிருந்து தப்பித் தனது நாடு வந்து சேர்ந்தார். 1674-ல் இராஜ்கார் என்னுமிடத்தில் அரசர் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். 1680-ல் சிவாஜி மறைந்தபின்னர் சாம்பூஜி (Shambhuji) மராத்திய மன்னரானுர்.

வட இந்தியாவில் பல கிளர்ச்சிகளை அடக்கியபிறகு அவுரங்கசீப் தக்காணத்தின்பால் தன்னுடைய கவனத்தைச் செலுத்தினுர். முதலில் அங்கிருந்த ஷியா பிரிவைச் சார்ந்த முகமதிய நாடுகளான பீஜபூர், கோல்கொண்டா ஆகியவைகளைத் தாக்கி மொகலாயப் பேரரசுடன் சேர்த்துவிட்டார். பிறகு மராத்தியர்களைத் தோற்கடித்து சாம்பூஜியைக் கொன்ருர் (1687). அவருடைய தம்பி இராசாராம், தெற்கு நோக்கி ஓடினுர். அவரைப் பின்தொடர்ந்து திருச்சி, தஞ்சாவூர் ஆகியவற்றை தன்னுடைய கைவசமாக்கிக்கொண்டார். ஆனுல், மராத்தியர்களின் தொல்லை அடங்கவில்லை. இராசாராம் சாகும்வரை மொகலாயர்களுக்கு இடையூறுகளை விளைவித்துக்கொண்டிருந்தார். அதன் பிறகு அவருடைய மனைவி தாராபாய் அவர்களுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்துவந்தார்.

அவுரங்கசீப் இறந்தபின்னர் மொகலாயப் பேரரசு அழிவுற்றது. அவரைப் பின்தொடர்ந்த அரசர்கள் பலமற்றவர்களாயிருந்தனர். அநேக வாரிசுப் போர்கள் ஏற்பட்டதால் நாட்டில் குழப்பமதிகரித்தது. அவுரங்கசீப்பின் மதக்கொள்கை இந்துக்களையும், பிற மதத்தினரையும் பேரரசின் எதிரிகளாக மாற்றிவிட்டது. அடிக்கடி தொடுக்கப்பட்ட

போர்கள் பேரரசரின் கருவூலத்தைக் காலியாக்கிவிட்டன. முஸ்லீம்களுக்குள்ளேயே பிளவுகள் ஏற்பட்டன. அவர்கள் பொதுவாக இரு கட்சியினராகப் பிரிந்திருந்தனர்—ஹிந்துஸ்தானி முஸ்லீம்கள் கட்சி, வெளிநாட்டு முஸ்லீம்கள் கட்சி. வெளிநாட்டு முகம்மதியர்கள் இரு பிரிவாக இருந்தனர்—துரானியர் கட்சி, இரானியர் கட்சி. அவர்களுக்குள் ஒற்றுமை இல்லாததால் மொகலாயப் பேரரசு அழிவுற்றது. 18ஆம் நூற்றுண்டில் பேரரசர்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி அந்நியர்கள் படையெடுத்தார்கள். 1738-ல் நாதிர்ஷா என்னும் பாரசீக மன்னர் இந்தியாவின் மீது படையெடுக்கப் புறப்பட்டார். மொகலாய அரசரைத் தோற்கடித்து டில்லியைக் கைப்பற்றினுர். அங்குள்ள மக்களைக் கொள்ளையடித்துப் பெரும் பொருளுடன் தன் நாடு திரும்பினுர். சுமார் முப்பது கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. அவர் கொண்டுசென்ற பொருள்களில் குறிப்பிடத்தக்கவை கோஹினூர் வைரமும் மயிலாசனமும் (Peacock Throne) ஆகும். அடுத்து, அகமது ஷா அப்தாலி என்னும் ஆப்கானியர் பன்முறை இந்தியாவின் மீது படையெடுத்தார். அக் காலத்தில் மராத்தியர்கள் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியினை மூன்றுவது பானிப்பட் போரில் (1761) தோற்கடித்தார். அந்நியர்களின் படையெடுப்பு மொகலாயப் பேரரசின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தின. மேலும், மொகலாயப் பேரரசர்கள் பலமற்றவர்கள் என்று அறிந்தவுடன், ஆங்காங்கே ஆட்சி செலுத்திய மொகலாய கவர்னர்கள் தங்களுடைய சுய ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டார்கள். இவ்வாறு தக்காணத்தில் நைஜாம்-உல்-முல்க் தன்னுடைய ஆட்சியை ஏற்படுத்தினுர். அயோத்தி (Oudh), வங்காளம் ஆகியவைகளும் தனிப்பட்ட முஸ்லீம் நாடுகளாயின. 18ஆம் நூற்றுண்டு இந்துக்கள் புத்துயிர் பெற்ற காலமாகும். சீக்கியர்கள், இராஜபுத்திரர்கள், மராத்தியர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டார்கள். சாம்பூஜிக்குப் பிறகு மராத்தியர்களிடம் வாரிசு காரணமாகப் பிளவு ஏற்பட்டது. முடிவில் ஷாஹு (Shahu) வெற்றிபெற்றுர். எனினும், இனி பீஷ்வா என்ற பட்டம் பெற்ற முதலமைச்சரே அரசியல் விவகாரங்களில் செல்வாக்குப் பெறலாயினர். மேற்கூறிய காரணங்களால் மொகலாயப் பேரரசு வீழ்ந்தது. ஆனுல், பேரரசர் என்ற பட்டம் 1857 வரை தொடந்து வகிக்கப்பட்டுவந்தது. 1857-ல் கடைசிப் பேரரசரான பகதூர்ஷா என்பவர் பர்மாவிற்கு நாடுகடத்தப்பட்டார்.

ஆசிய வரலாற்றில் பதினேழாம் நூற்றுண்டு மற்றொரு வகையில் சிறப்புப்பெற்றது. அப்பொழுதுதான் மேலைநாட்டவர் கடல்வழியாகக் கிழக்குப் பகுதியில் புக ஆரம்பித்தனர். மேலைநாடுகளுக்கும், கீழை நாடுகளுக்கும் இடையே வெகுகாலத்திற்கு முன்னரே வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனுல், அவ்விருவகை நாடு

களுக்கும் இடையே நேரடித் தொடர்பு அதிகமாயிருந்ததில்லை. அவர்களிடையே ஏற்பட்ட வியாபாரம் பெரும்பாலும் மற்றவர்களால் நடத்தப் பட்டது. 15ஆம் 16ஆம் நூற்ருண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கடற் பயணங்கள் மேலைநாடுகளையும் கீழைநாடுகளையும் நெருக்கமாகப் பிணைத்துவிட்டன. முதலில் ஐரோப்பியர்கள் ஆசியாவின் பல்வேறு பாகங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்துவதுடன் மனநிறைவு அடைந்தார்கள். ஆனல், அங்கு ஏற்பட்டிருந்த சூழ்நிலைகள் அவர்களை ஆதிக்க வெறி கொள்ளுமாறு செய்தன. அதனல், ஆசியாவின் பெரும் பகுதி மேற்கத்திய ஆதிக்கத்திற்குட்பட்டது. இனி, ஐரோப்பியர்கள் ஆசியாவில் ஏற்படுத்திய தலங்களைப்பற்றிக் கவனிப்போம்.

இந்தியாவைப் பொறுத்த அளவில், முதன்முதல் வியாபாரத் தலங் களை ஏற்படுத்தியவர் போர்ச்சுகீசியராவர். அவர்கள் இந்தியாவிலும், இலங்கையிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் பதினரும் நூற்ருண்டில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர்கள். அவைகளுள் முக்கிய மானவை கோவா, டையூ, டாமன், சால்செட், பஸ்ஸீன், பம்பாய், சான்தோம், ஹுக்ளி ஆகும். ஆனல், இவைகளில் பலவற்றை நாளடைவில் இழந்தனர். கோவா, டையூ, டாமன் ஆகியவைகளே அவர்கள் ஆட்சியில் இருந்தன. பதினேழாம் நூற்ருண்டில் ஆங்கிலே யர்கள், டச்சுக்காரர்கள், டேனியர்கள், ஃபிரஞ்சுக்காரர்கள் கிழக்கு நாடுகளுடன் வியாபாரம் செய்ய முற்பட்டனர். இதனல் இவர்களுக்கும் போர்ச்சுகீசியருக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. டச்சுக்காரர்கள் தங்களுடைய செல்வாக்கினைக் கிழக்கிந்தியத் தீவுகளிலும், இலங்கை யிலும், இந்தியாவில் சில இடங்களிலும் ஏற்படுத்தினர்கள். 1639-ல் ஜகார்த்தாவைக் கைப்பற்றினர்கள். 1658-ல் இலங்கையை அவர்கள் கைவசமாக்கிக்கொண்டார்கள். இந்தியாவில் பழவேற்காடு, சூரத்து, சின்சூரா, பாட்ன, நாகப்பட்டினம், கொச்சி போன்ற இடங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர்கள்.

இதற்கிடையில் ஆங்கிலேயர்கள் கிழக்கு நாடுகளை நாடிப் பல கடற் பயணங்களை மேற்கொண்டார்கள். பதினரும் நூற்ருண்டில் பெனங்கு (Penang) சென்றடைந்தார்கள். 1600-ல் கிழக்கிந்தியக் கம்பெனி யொன்றை நிறுவினர்கள். இதற்குக் கிழக்குப் பகுதியில் வியாபாரம் செய்வதற்கு ஆங்கில அரசியாரால் ஏகபோக உரிமை வழங்கப்பட்டது. அப்பொழுதிலிருந்து கிழக்கு நாடுகளை நோக்கிப் பல பயணங்கள் மேற் கொள்ளப்பட்டன. முதலில் அவர்கள் கவனம் ஜாவா, சுமத்ரா, மொலூகஸ் ஆகிய தீவுகளின்பால் செலுத்தப்பட்டிருந்தன. 1608-ல் இந்தியாவில் வியாபாரத் தலம் அமைக்க முற்பட்டனர். அவ்வாண்டில் கேப்டன் ஹாகின்ஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பியது. அவர் பேரரசர் ஜஹாங்கிரைச் சந்தித்து, சூரத்தில் வியாபாரத்தலம் ஏற்படுத்த

அனுமதி கோரினர். 1613-ல் அவர்கள் சூரத்தில் பண்டகசாலை நிறுவ அனுமதிக்கப்பட்டார்கள். நாளடைவில் ஏனைய பகுதிகளிலும் பண்டக சாலைகளை அமைக்க அனுமதி பெற்றனர். அதற்குக் காரணமாயிருந் தவர் இங்கிலாந்து அரசாங்கத்தால் மொகலாயப் பேரரசரிடம் அனுப்பப் பட்ட தூதுவரான சர். தாமஸ் ரோ என்பவராவார். ஆக்ரா, ஆமதா பாத், மசூலிப்பட்டணம், சென்னை, பாட்னு, காசிம் பஜார், கல்கத்தா ஆகிய இடங்களில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினுர்கள். இரண் டாம் சார்லஸ் மன்னர் பம்பாயைப் போர்ச்சுகீசியரிடமிருந்து சீதன மாகப் பெற்றுக் கம்பெனியின் ஆட்சிக்குட்படுத்தினுர். ஆங்கிலேயர் களுடைய நடவடிக்கைகள் போர்ச்சுகீசியருக்கும் டச்சுக்காரர்களுக்கும் கோபமூட்டியது. ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறுகள் மிகக் கடுமையாக இருந்தன. 1623-ல் பத்து ஆங்கிலேயர்கள் அம்பாய்னுவென்னும் இடத்தில் கொல்லப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் இந்தியாவிலும், டச்சுக்காரர்கள் கிழக்கிந்தியத் தீவுகளிலும் வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர். எனினும், இவர்களிடையே ஏற்பட்ட பூசல்கள் 1759ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தன.

ஃபிரஞ்சுக்காரர்கள் கால்பர்டின் தூண்டுதலின்பேரில் 1664-ல் ஃபிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியை ஏற்படுத்தினுர்கள். 1668-ல் சூரத்தில் பண்டகசாலை யொன்றை அமைத்தார்கள். பிறகு மசூலிப் பட்டணத்திலும், பாண்டிச்சேரியிலும், சந்திரநாகூரிலும் வியாபாரத் தலங்களை அமைத்தார்கள். டச்சுக்காரர்களுக்கும் ஃபிரஞ்சுக்காரர் களுக்கும் ஐரோப்பாவில் நடைபெற்ற போர், இந்தியாவிலும் நடை பெற்றது. 1693-ல் டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியைக் கைப்பற்றினுர் கள். 1697-ல் ஏற்பட்ட சமாதானத்தின்படி பாண்டிச்சேரி திருப்பிக் கொடுக்கப்பட்டது. 18ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சூரத்து, மசூலிப்பட்டணம் ஆகியவைகளை இழந்துவிட்டார்கள். பதினெட்டாம் நூற்றுண்டில் மௌரிஷியஸ், மாஹி, காரைக்கால் ஆகிய இடங்களை அவர்கள் கைவசப்படுத்தினுர்கள். அந் நூற்றுண்டில் அவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் பெருத்த சச்சரவு ஏற்பட்டது. அதைப்பற்றிப் பின்னர் கவனிப்போம்.

சீனு

பதினேழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சீனு மிங்க்ஸ் (Mings) என்றழைக்கப்பட்ட குலத்தினரால் ஆளப்பட்டுவந்தது. மிங்க்ஸ் அரசர்கள் மங்கோலியர்களை ஒழித்து 1368-ல் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினுர்கள். நான்கிங் (Nanking) என்பது அவர்களுடைய தலைநகரமாயிருந்தது. பதினுரும் நூற்றுண்டுவரை சீனர்கள் வெளி உலகத்துடன் நெருங்கிய தொடர்பை வைத்துக்கொள்ளவில்லை.

அவர்கள் தங்களைப்பற்றி மிக உயர்வாகக் கருதிவந்தார்கள். உலகத்திலேயே பலம் பொருந்தியதும், பெருமை வாய்ந்ததும் தங்களுடைய நாடுதான் என்று எண்ணங்கொண்டிருந்தார்கள். ரோமானியர்கள் அவர்களுடன் ஓரளவு வியாபாரம் செய்தனர். அராபியர்களும் பாரசீக மக்களும் அவர்களுடன் அரசியல் தொடர்பு வைத்திருந்தனர்.

16ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் போர்ச்சுகீசியர் சீனுவிடம் வியாபார உரிமைகள் பெற முற்பட்டனர். சீனப் பேரரசர் முதலில் அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கினுர். அதைத் தொடர்ந்து அவர்கள் படைகளைக் கொண்டுவரத் தொடங்கியதைக் கண்டபேரரசர் அவ்வுரிமைகளைப் பறித்துக்கொண்டார். 1557-ல் பேரரசர் கடற்கொள்ளைக்காரர்களை அழிப்பதில் ஈடுபட்டு இருந்தபொழுது, போர்ச்சுகீசியர் அவருக்கு உதவி செய்து அவருடைய நன்மதிப்பைப் பெற்றுர்கள். அதனுல் மகாவோ (Macavo) என்னுமிடத்தை அவர்கள் பயன்படுத்த அனுமதி பெற்றனர். டச்சுக்காரர்கள் 1641-ல் பார்மோஸா தீவைக் கைப்பற்றினுர்கள். அது சர்க்கரை வியாபாரத்தில் தலைசிறந்து விளங்கியது. ஆங்கிலேயர்களும் சீனுவுடன் வியாபாரம் செய்ய முற்பட்டனர். 1635-ல் சூரத்தினின்றும் மகாவோவிற்கு ஒரு கப்பற்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இதனுல் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

பதினேழாம் நூற்றுண்டில் மிங் மன்னர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. மிங் மன்னர்களுள் சிறந்தவர் யுங் லோ (Yung Lo) என்பவராவார். அவர் காலத்தில் நல்ல பாதுகாப்பு வசதிகளைப் பெற்ற பீகிங் (Peking) சீனர்களின் தலைநகரமாயிற்று. அவருக்குப் பின் அரசாண்டவர்கள் பலவீனர்களாகவும் சீர்கேடுற்றவர்களாகவும் இருந்தனர். ஆகவே, அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி ஏற்பட்டது. இக் கிளர்ச்சி லி-சு-செங் (Li-Tsu-ch'eng) என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. சீனுவின் வடகிழக்குப் பகுதியிலும் மத்திய சீனுவிலும் இக் கிளர்ச்சி பரவியது. மிங் அரசர் பீகிங்கினின்றும் துரத்தப்பட்டதால், அவர் தற்கொலை செய்துகொண்டார். அச் சமயத்தில் மிங் அரசர்களின் உண்மையான தளபதிகளுள் ஒருவரான ஊ-சான்-கியி (Wu-San-Kuei) என்பவர் மஞ்சு என்னும் மக்கட் பிரிவினரைக் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக உதவி செய்யுமாறு அழைத்தார். மஞ்சு மக்களை உட்புகாதவாறு தடுக்க அமர்த்தப்பட்ட தளபதி அவர் என்பதை ஈண்டுக் குறிப்பிடுதல் அவசியமாகும். மஞ்சுக்களும் உடனே அவர் வேண்டுகோளுக்கு இசைந்தார்கள். சீனுவின் எல்லைக்குட் புகுந்து புரட்சித் தலைவர் லியை ஒழித்தார்கள். சுன் ஷி (Shun Chih) என்ற மஞ்சு குலத்தைச் சார்ந்தவரைப் பேரரசராக நியமித்தார்கள். இவ்வாறு சீன மக்களில் ஒருவரான மிங் அரசரை ஒழித்து, அந்நியர்

களில் ஒருவரான மஞ்சு மன்னரைச் சீன மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

மஞ்சுக்கள் கிழக்கு மங்கோலியாவைச் சேர்ந்தவர்கள். முதலில் நாடோடியாகத் திரிந்த இவர்கள், பிறகு, யாலு, துமென், சுங்காரி ஆகிய நதிப்பிரதேசங்களில் தங்கினார்கள். மஞ்சு என்றால் புனிதமான குலம் என்று பொருள். 1635 வரை அவர்கள் பெயரளவில் மிங் அரசர்களின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தார்கள். அவர்களை பலம் பொருந்திய சேனையாக மாற்றியமைத்தவர் நூர்ஹாசு (Nurhachu) என்பவராவார். இவர் சீன அதிகாரிகளின் கொடுமைக்கு ஆளானவர்களில் ஒருவர்.

மஞ்சுக்கள் பதவியேற்றபொழுது அவர்களுக்குப் பலத்த எதிர்ப்புகள் இருந்தன. மேற்குப் பகுதிகளில் அவர்களால் எளிதாகத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடிந்தது. ஆனால், யாங்கிட்சிகியாங் நதிக்குத் தெற்கேயுள்ள பகுதிகளில் கடுமையான எதிர்ப்பை அடக்க வேண்டியதாயிற்று. மஞ்சு அரசர்களின் ஆதிக்கத்தைத் தெற்குப் பகுதியில் ஏற்படுத்துவதைத் தடுக்க முயன்றவர்களில் கோசிங்கா (Koxinga) என்பவர் குறிப்பிடத்தக்கவராவர். அவருடைய தந்தை மஞ்சு அரசர்களை எதிர்த்ததால், கொல்லப்பட்டார். அதைப் பழி தீர்த்துக்கொள்ள கோசிங்கா முற்பட்டார். தெற்குச் சீனாவின் கடற் பகுதியைத் தன்னுடைய தாக்குதலுக்கு இரையாக்கினார். 1657-ல் நான் கிங்கைக் கைப்பற்ற முயன்றார். அதில் தோல்வியுறவே, தன்னுடைய கவனத்தை ஃபார்மோசா தீவின்பால் திருப்பினார். அத் தீவினின்றும் டச்சுக்காரர்களைத் துரத்தினார். மணிலாவைக் கைப்பற்ற முயன்றார். ஆனால், 1660-ல் அவர் மறைந்துவிட்டதால், அம் முயற்சி கைவிடப்பட்டது. ஆசிய மக்களும் தங்களுடைய கடற்படையைக் கொண்டு வெற்றிகரமாக ஐரோப்பிய நாடுகளைத் தோற்கடிக்க முடியும் என்ற உண்மையை அவருடைய வெற்றிகள் வலியுறுத்தின. 1682ஆம் ஆண்டிற்குள் அவர்களுக்கு எதிராக உருவாகிய கிளர்ச்சிகள் எல்லாம் அடக்கப்பட்டுவிட்டன.

1662 முதல் 1772 வரை ஆண்ட காங்-சி (Kang-Hsi) என்பவர் அரசியல் திறம் பெற்றதால், அவர் ஆட்சிமுறையைச் செவ்வனே நடத்தினார். மஞ்சு வமிசத்தின் ஆதிக்கத்தைச் சீனா முழுவதிலும் ஏற்படுத்தினார். கல்வியை வளர்த்தார். வெளிநாட்டவர்களை வியாபார சாலைகளை ஏற்படுத்த அனுமதி வழங்கினார். கான்டன் நகரத்தில் ஆங்கிலேயர்கள் பண்டகசாலை ஒன்றை அமைத்தனர். கான்டன் துறைமுகத்தை எல்லா நாட்டினரும் பயன்படுத்த அனுமதி வழங்கப் பட்டது.

பதினேழாம் நூற்ருண்டில் ருஷ்யர்களும் குடியேற்றங்களை அமைப்பதில் ஆர்வம் காட்டினுர்கள். 1650-க்குள் பசிபிக் கடற்கரைவரை கிழக்குப் பக்கமாக முன்னேறினுர்கள் என்று நாம் முன்னரே குறிப்பிட்டோம். அதன் பிறகு அவர்கள் கம்சட்கா (Kamchatka) தீபகற்பம், ஆமூர் பிரதேசம், மஞ்சூரியாவைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உட்புகுந்தனர். அப்பொழுது சீனர்களுடன் போர் புரிய வேண்டியதாயிற்று. பிறகு இருநாடுகளும் சமாதானம் செய்துகொண்டன. ருஷ்யர்கள் ஆமூர் நதிக்கு வடக்கேயுள்ள எல்லையை ஏற்றுக்கொண்டனர். சீனர்கள் ருஷ்ய வியாபாரிகளை அவர்கள் நாட்டில் தாராளமாகச் செல்ல அனுமதி கொடுத்தார்கள். இதுவே சீனர்கள் ஐரோப்பிய நாடு ஒன்றுடன் செய்துகொண்ட முதல் உடன்படிக்கையாகும். 1727-ல் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை, ஆண்டுதோறும் இருநூறு ருஷ்ய வியாபாரிகள் பீகிங் செல்ல அனுமதித்தது.

சீனர்கள் காங்சி ஆட்சிக் காலத்தில் தங்கள் ஆதிக்கத்தைச் சுற்றியுள்ள இடங்களில் ஏற்படுத்தலாயினர். வடக்கு மங்கோலியர்களை வெற்றி கண்டு அவர்களைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்தினுர்கள். காங்சி நடு ஆசியாவிலுள்ள கால்காஸ் மக்களை வென்ருர்கள். திபெத் மீது தங்களுடைய காப்பாளர் அரசை ஏற்படுத்தினுர்கள். அவர்களுக்குப் பின்னர் ஆண்ட யுங் செங் (Yung Cheng), சியென் லூங் (Chien Lung) என்பவர்களும் சிறந்த அரசர்களாவார்கள்.

மேற்கூறிய மூன்று மஞ்சு அரசர்கள் ஆட்சிக் காலத்தில் (1662—1796) சீனு பல வழிகளில் முன்னேற்றங் கண்டது. அதனுடைய ஆதிக்கம் திபெத், மஞ்சூரியா, கொரியா ஆகிய இடங்களில் பரவிற்று. பீங்கான் சாமான்கள் செய்யும் முறை முன்னேற்றுவிக்கப்பட்டது. கற்களின்மீது அழகான சித்திரங்கள் செதுக்கும் கலை வளர்ச்சியுற்றது. வியாபாரம் பெருகுவதற்கு வேண்டிய அமைதியை நாட்டில் அம் மன்னர்கள் ஏற்படுத்தினுர்கள். இவர்கள் காலத்தில் சமயப் பரப்பூழியர்களின் நடவடிக்கைகள் பெருகின.

ஜப்பான்

பல தீவுகளைக்கொண்ட ஜப்பானியப் பேரரசு பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே ஏற்படுத்தப்பட்டது. இப் பேரரசின் தலைவர் மிகாடோ (Mikado) என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். முதலில் இவர்கள் அநேக அதிகாரங்களைப் பெற்றிருந்தார்கள். பிறகு எல்லா அதிகாரங்களையும் அரசவையிலிருந்த குடும்பத்தினருள் ஒன்ருன ஃபூஜிவாரா (Fujivara) என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பெற்றிருந்தார்கள். பன்னிரண்டாம் நூற்ருண்டில் இவர்கள் பெற்றிருந்த அதிகாரங்களை இராணுவத் தலைவரிடம் மாற்றிவிட்டார்கள்.

இவர்கள் ஷோகன் (Shogun) என்ற பட்டம் பெற்றிருந்தார்கள். டோகியோவிற்கு அருகேயுள்ள காம்கூரா (Kamkura) என்ற பட்டணம் அவர்களுடைய இருப்பிடமாக இருந்தது. பிறகு, எடோ (Yedo) அவர்களது இருக்கையாக மாறியது. நாளடைவில் இதுவே நாட்டின் உண்மைத் தலைநகரமாக விளங்கியது. பெயரளவில்மட்டும் தலைவராக விளங்கிய பேரரசர், கியோடோ என்னுமிடத்தில் வசித்துவந்தார். இதைத்தான் இரட்டையாட்சி என்று குறிப்பிடுகிறார்கள். இவர்களைத் தவிர, டாமியோ (Damio) என்ற பண்ணைநிலக் குடியாளர்கள் (feudatories) இருந்தனர். அவர்கள் அதிகாரங்கள் பலவற்றைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு படையை வைத்திருந்தனர். அப் படையினர் அனைவரும் சேர்ந்து சாமுராய் (Samurai) என்ற இராணுவக் குலத்தை அமைத்தனர். மேற்கூறிய பண்ணைநிலக் குடியாளர்கள் மைய ஆட்சிக்குக் கீழ்ப்படியாது சுதந்திரமாகத் தங்களுடைய அதிகாரங்களைச் செலுத்திவந்தமையால், நாட்டில் குழப்பமும் உள்நாட்டுக் கலகமும் ஏற்படலாயின. இந் நிலை சுமார் இருநூறு ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது.

16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. திறமை வாய்ந்தவர்கள் ஷோகன் பதவியை ஏற்றனர். நோபுநாகா (Nobunaga) பண்ணைநிலக் குடியாளர்களைக் கட்டுப்படுத்தி வைத்தார். அவரைப் பின்தொடர்ந்த ஹிடேயோஷி (Hideyoshi) ஓர் அரசியல் வல்லுநர் ஆவார். ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்தினார். ஜப்பான் பேரரசை விரிவுபடுத்த எண்ணினார். கொரியாவின்மீது போர் தொடுத்தார். அப் போர் வேலையின்றிக் கிடக்கும் ‘சாமுராய்’ குலத்தினரைச் சில காலம் வேலையில் ஈடுபடுத்திவைக்கும் என்று கருதினார். அவருக்குப் பின்னர் டோகுகாவா குலத்தைச் சேர்ந்த இயாசு (Ieyasu) என்பவர் ஷோகனாகப் பதவியேற்றார். அவரும் அவர் குடும்பத்தினரும் 17ஆம் நூற்றாண்டில் ஜப்பானை ஆட்சி புரிந்து வந்தனர். நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார்கள். பண்ணைநிலக் குடியாளர்களின் அதிகாரத்தை அழித்தார்கள். மக்களை ஒழுங்காக நடக்குமாறு வேண்டினார்கள். நாடு முன்னேற ஒவ்வொருவரும் கடுவுழைப்பை மேற்கொள்ளவேண்டும் என்று கூறினார்கள். ஆனாலும், ஜப்பான் நாடு முற்போக்குக் கருத்துகளை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்படவில்லை. 19ஆம் நூற்றாண்டில்தான் பெருமாறுதல்கள் ஏற்பட்டன.

16ஆம் நூற்றாண்டில், போர்ச்சுகீசியர், ஸ்பானியர், டச்சுக்காரர் ஆகியோர் வியாபாரம் செய்யவும், மதத்தைப் பரப்பவும் ஜப்பானில் புகத் தலைப்பட்டார்கள். முதலில் அவர்களுக்குத் தகுந்த வரவேற்பளிக்கப்பட்டது. அவர்களுடன் வியாபாரம் செய்வதிலும், அவர்கள்

மதத்தைத் தழுவுவதிலும், அவர்களது போர்க்கருவிகளைப் பயன்படுத்துவதிலும் மக்கள் ஆர்வம் காட்டினார்கள். அரசாங்கமும் பண்ணைநிலக் குடியாளர்களை அடக்க ஐரோப்பியர்களின் உதவியை நாடியது. அவர்கள் கொண்டுவந்திருந்த உயர்ந்தரகப் போர்க்கருவிகளைப் பெறவே அவர்களை நாடியது. ஆனால், நாளடைவில் பண்ணைநிலக் குடியாளர்களும் அவர்களது உதவியைப்பெற்று அரசாங்கத்தை எதிர்க்கலாயினர். மேலும், வியாபாரத்திற்கென வந்த ஐரோப்பியர்கள் நாளடைவில் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்துவார்கள் என்று அச்சப்பட்டனர். மேலும், அந்நியர்கள் ஜப்பான் அரசாங்கத்தின் சட்டத்திற்கு யாதொரு மரியாதையும் காட்டவில்லை. ஆகவே, 17ஆம் நூற்றுண்டில் ஷோகன், சமயப் பரப்பூழியர்களை நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென்று கட்டளையிட்டார். அவர்களுடைய தொழுகை இல்லங்களை அழித்துவிட்டார். கிறித்துவ மதம் தழுவியவர்களை அம் மதத்தை விட்டுவிடும்படியும் ஆணையிட்டார். 1637-ல் மேலும் இரண்டு கட்டளைகளைப் பிறப்பித்தார். டச்சுக்காரர்கள், சீனர்கள் ஆகியோரைத் தவிர ஏனைய ஐரோப்பியர்கள் ஜப்பானில் பிரவேசிக்க அனுமதிக்கப் படவில்லை. டச்சுக்காரர்கள் இராணுவ பலத்தில் சிறந்தவர்கள் அல்லர் என்றும், கிறித்துவ மதத்தில் அதிக அக்கறை கொண்டவரல்லர் என்றும் கருதியதால், அவர்கள் ஜப்பானுடன் வியாபாரம் தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். ஜப்பானியர் எவரும் ஜப்பானை விட்டுப் போகலாகாது என்றும் கட்டளையிட்டார். கப்பல்கள் கட்டுதலையும் கட்டுப்படுத்தினர். ஆகவே, மக்கள் வறுமையிலும் பஞ்சத்தாலும் துன்பமடைந்தனர். கப்பல் போக்குவரத்தும் தடைப் பட்டது. இந் நிலை பதினெட்டாம் நூற்றுண்டு முழுவதும் தொடர்ந்து இருந்துவந்தது.

2. ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகள் (1789 – 1848)

ஃபிரஞ்சுப் புரட்சி

முன் அத்தியாயத்தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் வல்லாட்சிகள் 17ஆம், 18ஆம் நூற்ருண்டுகளில் ஏற்படுத்தப்பட்டன என்றும், ஆகவே அக் காலப் பகுதியினை வல்லாட்சிக் காலம் என்று கூறப்படுகிறது என்றும் குறிப்பிட்டோம். 1789 முதல் 1848 வரையுள்ள காலப்பகுதியினைப் புரட்சிக் காலம் என்று பொதுவாகக் குறிப்பிடு கிருர்கள். ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் வல்லாட்சி முறைக்கு எதிராகப் புரட்சிகள் அக் காலத்தில் தோன்றின. ஃபிரஞ்சுப் புரட்சி ஏனைய புரட்சிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது. இதனுல்தான் 'ஃபிரான்சுக்குச் சளி பிடித்தால் ஐரோப்பிய நாடுகளுக்குத் தும்மல் உண்டாகும்' என்று விளையாட்டாகக் கூறுகிருர்கள். ஆகவே, நாம் இப்பொழுது ஃபிரஞ்சுப் புரட்சியைப்பற்றிக் கவனிப்போம்.

புரட்சியின் காரணங்கள்

ஃபிரஞ்சு ஆட்சி முறையில் காணப்பட்ட சீர்கேடுகள் புரட்சிக்கு ஒரு காரணமாகும். அவ்வாட்சி முறையின் தலைவர் அரசராவார். அரசர் எல்லா அதிகாரங்களையும் தன்னுடைய கைக்குள் அடக்கி வைத்திருந்தார் என்பதை நாம் முன்னரே கண்டோம். அத்தகைய வல்லாட்சி ஒரு காலத்தில் மக்களால் வரவேற்கப்பட்டது. பிரபுக்கள் அனுபவித்துவந்த கொடுமையான உரிமைகளினின்றும் தங்களைக் காப்பாற்றக்கூடியவர் வலிமை பொருந்திய மன்னரேயாவார் என்று மக்கள் கருதினுர்கள். பிர்புக்கள், மத குருமார்கள் ஆகியோருடைய உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டதால், வல்லாட்சி முறை தேவையற்ற தாகக் கருதினுர்கள். ஐரோப்பாவில் ஃபிரஞ்சு ஆதிக்கத்தை ஏற்படுத்தியதாலும், மக்கள் நலன்களைப் பெருக்கியதாலும், கல்வி,

கலை ஆகிய துறைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்தியதாலும் வல்லரசர் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தார். லூயி மன்னருக்குப்பின் ஃபிரான்சு ஐரோப்பியப் போர்களில் பல சண்டைகளில் தோல்வியுற்றதால், தன்னுடைய செல்வாக்கை இழந்துவிட்டது. பொருளாதாரம், கல்வி, கலை ஆகிய துறைகளில் யாதொரு முன்னேற்றமும் காணப்படவில்லை. ஆகவே, மக்கள் வல்லாட்சி முறைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தயாராயிருந்தார்கள். வல்லாட்சி முறை வெற்றி பெறவேண்டுமெனில், அதை நடத்தும் அரசர் திறமை வாய்ந்தவராயிருத்தல்வேண்டும். ஆனால், 14ஆவது லூயியைப் பின்தொடர்ந்த பதினைந்தாம் லூயி, ஆட்சிமுறையைச் சீர்படுத்தவோ செலவுகளைக் குறைக்கவோ முற்படவில்லை. ஏராளமான பொருளைக் களியாட்டங்களிலும் ஐரோப்பியப் போர்களிலும் செலவிட்டார். பிரபுக்களையும் தன்னைப் போலவே ஊதாரித்தனமாகச் செலவிடுமாறு ஊக்குவித்தார். அரசாங்கக் காரியங்கள் அவருடைய நண்பர்களிடத்தும் ஆசைநாயகிகளிடமும் விட்டுவைக்கப்பட்டன. அவர்களில் மிக முக்கியமானவர் மதாம் தெ பாம்படூர் (Madame de Pampadour) என்பவராவார். ஆகவே, அவர் இறந்தபோது மக்கள் தங்களுடைய துயர் நீங்கியது என்று கருதினார்கள். அவருக்குப் பின்னர் அரசாண்ட பதினாறாம் லூயி மன்னர் காலத்தில்தான் புரட்சி ஏற்பட்டது. அப் புரட்சி 'எனக்குப் பின்னால் பேரழிவு ஏற்படும்'[1] என்ற பதினைந்தாம் லூயியின் கூற்றினை வெகு சீக்கிரமே மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. பதினாறாம் லூயி மக்களை உண்மையாகவே நேசித்தார். சிறந்த கல்வியைப் பெறவில்லை என்றாலும், ஆழ்ந்து சிந்திக்கும் திறனுடையவர். கெட்ட பழக்கங்கள் அவரிடம் அதிகம் இல்லை. மதப்பற்றுடையவர். ஆனால், அவர் மத வெறியர் அல்லர். மக்களின் நலத்தையே குறிக்கோளாகக்கொண்டு ஆட்சி செலுத்த எண்ணினார். அவருடைய சொந்தச் செலவைக் குறைத்துக்கொண்டு, நிதிநிலையை சீராக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தார். இவ்வளவு நற்பண்புகள் பெற்றிருந்தபோதிலும் அவர் தோல்வியுறக் காரணம் என்னவென்றால், அவர் வல்லாட்சி முறையைத் திறம்பட நடத்தத் தேவையான குண நலன்களைப் பெற்றில்லாததேயாகும். அவர், காலத்தை வேட்டையாடுவது போன்றவைகளில் செலவிட்டார். துணிச்சலான முடிவெடுக்க அவரால் முடியாது. சொந்த புத்தி என்பது அவரிடமில்லை. அவராக யாதொரு செயலிலும் ஈடுபடமாட்டார். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், அவர் வரம்புக்குட்பட்ட முடியரசு முறைக்குத் தகுதி வாய்ந்தவரேயன்றி, வல்லாட்சி முறைக்குக் கடுகளவும் தகுதியானவரன்று. அவருடைய அரசியும் அப் பதவிக்கு ஏற்றவரன்று. 'அவர் ஆஸ்திரியாவைச் சேர்ந்தவராதலால் மக்கள்

[1] 'After me, the deluge'—Louis XV.

அவரிடம் வெறுப்புக் கொண்டனர். அரசியல் அனுபவம் இல்லாதவர். ஆகவே, ஆட்சி தன்னுடைய சொந்தக் கருத்துகளுக்கேற்ப நடக்க வேண்டுமென்று எண்ணினர். மேலும், அவர் அந்நியராதலால், ஃபிரஞ்சு மக்களைப்பற்றிச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. அவரைச் சுலபமாக ஏமாற்ற முடியும். இரக்க மனப்பான்மை உடையவராதலால், எக் கட்சியினரும் அவரைச் சுலபமாக தங்கள் வயப்படுத்திக்கொள்ள முடிந்தது. ஊதாரித்தனமாக நடந்துகொண்டு மக்களின் கண்டனத் துக்கு ஆளானர். சுருங்கக் கூறின், ஆட்சிமுறையில் ஏற்பட்ட ஒவ்வொரு தவற்றுக்கும் அவர்தான் பொறுப்பு என்று எல்லா மக்களும் கருதினர்கள்.

அரசியல் அமைப்பில் மக்களின் செல்வாக்கினுக்கு இடமேயில்லை. அரசாங்கப் பொறுப்புகளை ஏற்றிருந்த அமைச்சர்கள் அரசருக்குக் கீழ்ப்படிந்தவர்களாயிருந்தார்கள். ஸ்டேட்ஸ்-ஜெனரல் எனப்பட்ட பிரதிநிதிகளடங்கிய சபை 1614ஆம் ஆண்டிற்குப் பின்னர் கூட்டப் படவேயில்லை. மக்கள் உரிமைக்காகப் போராடிய பார்லிமென்டுகள் தங்களுடைய செல்வாக்கை இழந்துவிட்டன. அரசாங்க அலுவல் களை நடத்துவதற்கு அதிகாரவர்க்கம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அரசாங்கப் பதவிகளை விற்கும் முறை கையாளப்பட்டதால், பயனற்ற பதவிகள் உண்டாக்கப்பட்டன. அவர்களில் பெரும்பாலோர் கடுமை யாக நடந்துகொண்டனர். மாகாணங்களிலும் மக்கள் செல்வாக்கி னுக்கு இடமளிக்கப்படவில்லை. அதிகாரம் முழுவதும் இன்டெண்டன்ட் (Intendant) என்னும் அரசருடைய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட் டிருந்தது. மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்ட மக்கள் சபைகள் பல அழிக்கப்பட்டன. எஞ்சியிருந்த சபைகளின் செல்வாக்குகள் வெகு வாகக் குறைக்கப்பட்டுவிட்டன. அவைகளுக்குச் சட்டமியற்றுதல், வரிகளை விதித்தல்போன்ற அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. சிறுநில ஆட்சிப் பகுதிகளிலும் (Commune) மக்கள் சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இச் சபைகளின் நடவடிக்கைகளை 'இன்டெண்டன்ட்' கட்டுப்படுத்திவந்தார். நகரங்களிலும் மக்கள் சபைகள் நடைபெற்று வந்தன. ஆனல், ஓட்டுரிமை ஒருசிலருக்கே வழங்கப்பட்டிருந்தது. பணநெருக்கடியும், அரசப் பணியாளர்களின் தலையீடும் இச் சபை களின் செல்வாக்கினைக் குறைத்துவிட்டன.

நீதிநிலையத் துறையிலும் சீர்கேடுகள் மலிந்திருந்தன. எண்ணிறந்த சட்டங்கள் நடைமுறையில் இருந்தன. அவைகளை முறைப்படுத்தியமைக்கப் பெரு முயற்சி ஏதும் செய்யப்படவில்லை. அரசருடைய நீதிமன்றங்கள், நிலமானியதார்களின் மன்றங்கள், மத ஸ்தாபனத்தின் மன்றங்கள்போன்ற பலவகைகள் ஏற்படுத்தப்பட்டிருந் ததால், நீதிநிலையத் துறை ஒரே குழப்பமாக இருந்தது. நீதிபதிகள்

யாவரும் அரசருடைய கட்டுக்குள் அடங்கியிருந்தனர். மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக ஆட்சியைக் குறைகூறுபவர்கள் விசாரணையின்றிச் சிறையிலடைக்கப்பட்டனர்.

இராணுவ அமைப்பிலும் பல சீர்கேடுகள் இருந்தன. கடுமையான பயிற்சியும், குறைந்த சம்பளமும், வீரர்களின் நலன்களில் கவனக்குறைவும் வீரர்களுக்கு வெறுப்பை உண்டாக்கின. மேலும், படைத்தலைவர்களில் பெரும்பாலோர் தகுதியற்றவர்களாயிருந்தனர்.

சமுதாய அமைப்பு, காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைக்கப் படாமல் பழைய மாதிரியே இருந்துவந்தது. அது மூன்று மக்கள் பிரிவுகளை உட்கொண்டிருந்தது. அவைகளில் முதலாவது இடத்தினை மத குருமார்கள் பெற்றிருந்தார்கள். மத குருமார்கள் இருவகையாகப் பிரிந்திருந்தனர்—உயர்வகைக் குருமார்கள், பாதிரி போன்ற கீழ்நிலைக் குருமார்கள். மத குருமார்கள் ஏராளமான சொத்தைப் பெற்றிருந்தார்கள். அளவு கடந்த உரிமைகளையும் பெற்றிருந்தனர். நிலவரி செலுத்துவதினின்றும் விலக்குப் பெற்றிருந்தார்கள். மக்களின் வருமானத்தில் ஒரு பகுதியை (Tithes) மத குருமார்கள் பெற்றனர். மத ஸ்தாபனத்தில் உயர்பதவிகளைப் பிரபுக்களே வகித்தனர். அவர்களில் அநேகர் சொத்துகளை அனுபவிக்கவே மத குருமார்களாக மாறினர். உயர்பதவியிலுள்ளோர் மத ஸ்தாபனத்தின் வருவாயில் பெரும் பகுதியை எடுத்துக்கொண்டனர். ஆகவே, கீழ்நிலையிலுள்ள மதகுருமார்கள் புரட்சியின்போது பொதுமக்களின் பிரதிநிதிகளுடன் சேர்ந்துகொண்டனர். மேலும், இவர்கள் மதத்தில் பற்றுடையவர்களாகவும், முற்போக்குக் கொள்கைகளையுடையவர்களாகவும் இருந்தனர். மடங்கள் முன்போல் மக்களின் துயரங்களைப் போக்கும் நிலையங்களாக விளங்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, கத்தோலிக்க ஸ்தாபனம் பிற மதத்தினரைத் துன்புறுத்தும் கொள்கையை மேற்கொண்டிருந்தது.

இரண்டாவது பிரிவான பிரபுக்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.[1] இவர்கள் பணம் படைத்தவர்களாகவோ, மிகுந்த நிலம் படைத்தவர்களாகவோ இருந்ததில்லை. அவர்களுக்கு ஆட்சி அதிகாரமும் கிடையாது. அப்படியிருந்தும் அவர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்வதற்குக் காரணமாயிருந்தது, அவர்கள் அனுபவித்துவந்த சலுகைகளேயாகும். மேலும், அவர்கள் பெரும்பாலும் வெர்சேயிஸ் அரண்மனையிலேயே காலங் கழித்தனர். ஆனாலும், குடியானவர்களிட

[1] பிரபுக்களும் மதகுருமார்களும் சேர்ந்து 300,000 பேர்களே இருந்தனர். ஃபிரான்சின் மொத்த மக்கள்தொகை அப்பொழுது $2\frac{1}{2}$ கோடியாக இருந்தது.

மிருந்து பண்ணை முதல்வர் என்ற முறையில் பணம் வசூல் செய்தார்கள். அதற்குப் பதிலாக மக்களுக்கோ, நாட்டிற்கோ எவ்வித சேவையும் புரியவில்லை.

மூன்ருவது பிரிவு, மற்ற எல்லா மக்களையும் கொண்டிருந்தது. அவர்களில் சிலர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களாவார்கள். அவ் வகுப்பில் அநேக வழக்கறிஞர்கள் இருந்தனர். அவர்கள் படித்தவர்களாதலால், அக் காலத்தில் தோன்றிய புதிய கருத்துகளைக் கற்றுணர்ந்திருந்தார்கள். அவ் வகுப்பில், வியாபாரிகளும் தொழில் துறையில் ஈடுபட்டவர்களும் இருந்தனர். அரசாங்கம் தங்களது துறைகளில் அடிக்கடி தலையிடுவதை அவர்கள் வெறுத்தார்கள். பொதுவாக, இவர்கள் இராணுவத்திலும், கப்பற் படையிலும், அயல்நாட்டுப் பணித்துறையிலும் உயர்பதவி பெற அனுமதிக்கப்படவில்லை. குறிப்பாக அவர்கள் பிரபுக்களுக்குத் தனி உரிமைகள் வழங்குவதையும் வெறுத்தார்கள். மேலும், தங்களுடைய தகுதிக்கும் திறமைக்கும் தக்கவாறு அரசாங்கத்தில் பங்குகொள்ளவேண்டும் என்றும் கருதினர்கள். ஆகவே, அவ் வகுப்பினின்றும் புரட்சித் தலைவர்கள் தோன்றியதில் வியப்பொன்றுமில்லை. குடியானவர்களே நாட்டு மக்களில் பெரும்பான்மையினராவார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கும், பிரபுக்களுக்கும், மத ஸ்தாபனத்திற்கும் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்தியபின் சிறு தொகையே எஞ்சியிருந்தது. இதுவன்றி, அவர்களுடைய விளைபொருள்களை விற்பனைக்கு எடுத்துச் செல்லும்போது அவர்கள் சுங்க வரி செலுத்த வேண்டியதாயிருந்தது. மேலும், அவர்கள் இராணுவ சேவையினையும் கட்டாய உடலீடுபாட்டு வேலையினையும் (Forced labour) மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. அவர்களன்றி, கூலிக்குப் பயிர்த்தொழில் செய்பவர்களும் இருந்தனர். பெரும்பாலும் ஏழைகளாகவும் மனநிறைவு அற்றவர்களாகவும் இருந்தார்கள்.

அரசாங்கத்தின் வரித் திட்டமும் பல சீர்கேடுகளை உடையதாயிருந்தது. அக் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகளில் முக்கியமானது சொத்துவரி (Taille) ஆகும். மத குருமார்களும் பிரபுக்களும் இவ் வரி செலுத்துவதனின்றும் விலக்குப் பெற்ருர்கள் என்று முன்னரே குறிப்பிட்டோம். சொத்தின் மதிப்பில் ஏதாவது மாற்றம் காணப்பட்டால், உடனே அரசாங்கம் வரியை அதிகப்படுத்தியது. ஆகவே, மக்கள் வேண்டுமென்றே தங்களுடைய வாழ்க்கைத்தரத்தைக் குறைத்துக்கொண்டார்கள். அதனல் நாட்டின் வளம் குன்றியது. ஒவ்வொரு குடும்பத்தின் தலைவர்மீதும் தலைவரியொன்று விதிக்கப்பட்டது. எல்லா வகுப்பினரும் இவ் வரியைச் செலுத்தினர்கள். எனினும், மூன்ரும் பிரிவைச் சேர்ந்தவர்களே அதிகமான வரியைச் செலுத்தலாயினர். உப்பு வரியும் (Gabelle) எல்லா மக்களும்

செலுத்தவேண்டியவர்களாயிருந்தனர். அரசாங்கம் உப்பு விற்கும் முழு உரிமையைப் பெற்றிருந்தது. ஒவ்வொரு குடும்பத்தினரும் குறிப்பிட்ட அளவு உப்பு வாங்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப் பட்டார்கள். உப்பின் விலையை அரசாங்கம் அதனுடைய விருப்பப்படி நிர்ணயித்தது. மேலும், சமுதாயப் பணிகளில் . குடியானவர்கள் கட்டாயம் ஈடுபட வேண்டியதாயிருந்தது என்று முன்னரே குறிப்பிட்டோம். அதற்கு யாதோர் ஊதியமும் கிடையாது. இவை களைத் தவிர பல மறைமுக வரிகளையும் மக்கள் செலுத்திவந்தனர். அவரவர் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்றவாறு வரிகள் விதிக்கப்பட வில்லை. குடியானவர்களே அதிகப்படியான வரிச்சுமையைத் தாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. வரி வசூலிக்கும் முறையிலும் பல குறைகள் இருந்தன. அரசாங்கத்திற்கும் மக்களுக்குமிடையே இருந்த வரி வசூலிக்கும் உரிமை பெற்ற குத்தகைக்காரர்கள் கொள்ளை இலாபம் அடைந்தார்கள். வரி வசூலிக்கும்போது இவர்கள் மக்களிடம் கொடூரமாக நடந்துகொண்டார்கள். பெருஞ் செலவில் வரி வசூல் செய்யப்பட்டது.[1] அரசாங்கத்தின் செலவு நாட்கள் செல்லச்செல்லப் பெருகிக்கொண்டே வந்தது. அரசாங்கத்தின் கடன் தொகையும் பெருகியது. செலவு முறையில் சிக்கனம் கையாளப்படவில்லை. பொதுக் கணக்குகள் சரியான முறையில் வைக்கப்படவில்லை. இத் துணைச் சிக்கல்கள் உடைய நிதிமுறை புரட்சியின் காரணங்களில் ஒன்றாக அமைந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அரசாங்கத்தின் நிதி மிக மோசமான நிலையில் இருந்தது என்று அனைவருமே அறிந்திருந்தனர். நிதி அமைச்சர்கள் நிலையைச் சீர் படுத்தவும் முனைந்தார்கள். துர்கோ (Turgot) என்பவர் இலஞ்ச ஊழலை ஒழித்து நிதி நிலையைச் சீர்படுத்த எண்ணினார். அவரைப் பின் தொடர்ந்த நெக்கர் (Necker) சிக்கன முறையைக் கையாண்டும், குறைந்த வட்டியில் கடன் வாங்கியும் நிலைமையைச் சமாளிக்க எண்ணினார். ஆனால், அப்பொழுது நிகழ்ந்த அமெரிக்கப் போர் அவர் திட்டங்களைத் தவிடுபொடி யாக்கியது. கலோன் (Calonne) அதிக வட்டியில் கடன் வாங்கி நிலையைச் சீராக்க முயன்றார். ஆனால், நாளடைவில் அனைவரும் நிதி நிலையைச் சீர்படுத்தவேண்டுமெனில், எல்லா மக்களும் வரி செலுத்தவேண்டும் என்று கருதினார்கள். ஆகவே, நெக்கர் மீண்டும் நிதி அமைச்சர் பதவியை ஏற்றபொழுது, எல்லா மக்களும் வரி செலுத்தும் நிலையை ஏற்படுத்தவும், புது வரிகளை விதிக்க வும் 1788-ல் அரசருக்கு ஸ்டேட்ஸ்-ஜெனரலை அழைக்குமாறு யோசனை கூறினார். இதுவே புரட்சியின் தொடக்கமாகும்.

[1] உப்பு வரியைப் பொறுத்தவளவில், 20 கோடி லிவ்ரா (ஃபிரஞ்சு நாணயம்) செலவு செய்து 60 கோடி லிவ்ரா வசூல் செய்தார்கள்.

எல்லா வகைகளிலும் மனக்கசப்பு அடைந்திருந்த மக்களைத் தட்டி யெழுப்ப பதினெட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த பேரறிஞர்கள் பெரிதும் உதவினுர்கள். வால்டேர் (1694—1778) என்ற அறிஞர் வரலாறு, நாடகம், கவிதை ஆகியவற்றின் வாயிலாக அப்பொழுது ஆட்சிமுறை, மதஸ்தாபனம், சமுதாய அமைப்பு ஆகியவற்றிலிருந்த சீர்கேடுகளை வெளிப்படுத்தினுர். பல சீர்திருத்தங்களை எடுத்துரைத்தார். சட்டங்கள் தெளிவாக இருக்கவேண்டும் என்றும், சட்டத்தின் முன் யாவரும் சமநிலையில் இருக்கவேண்டும் என்றும், வரியைச் சார்ந்த உரிமைகள் ஒழிக்கப்படவேண்டும் என்றும், மத விவகாரங்களில் சகிப்புத் தன்மை வளரவேண்டும் என்றும் யோசனை கூறினுர். அரசியல் துறையில் மக்களாட்சியை அவர் விரும்பவில்லை. வரம்புக்குட்பட்ட அரசரின் கீழ் மக்கள் உரிமையுடன் வாழ வகைசெய்யும் ஆட்சி முறையை ஆதரித்தார்.[1] மான்தெஸ்க்யூவினுடைய (Montesquieu, 1689–1755) கருத்துகள் அவர் இயற்றிய அரசியல்பற்றிய நூலில் (The Spirit of the Laws) காணக்கிடக்கின்றன. இந் நூலில் ஃபிரஞ்சுக்காரர்களை பிரிட்டனின் அரசியல் முறையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தினுர். சட்டம் இயற்றுதல், சட்டத்தை நிறைவேற்றுதல், சட்டத்தை மீறுபவரை தண்டித்தல் ஆகிய மூன்று அரசப்பணிகள் வெவ்வேறு நபர்களால் நிறைவேற்றப்படவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். புரட்சிக்காரர்களுக்குத் தேவையான கருத்துகளை வழங்கியவர் ரூஸோ (Rousseau, 1712–1778) என்பவராவார். அவர் இயற்றிய நூல் (The Social Contract) புரட்சிக்காரர்களின் வேத நூல் என்று கருதப்படுகிறது. இந் நூலில் தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை உடைத்தெறிந்தார். அரசாங்கத்தை ஏற்படுத்துவதும் அழிப்பதும் மக்களின் உரிமை என்று வாதாடினுர். மக்களாட்சியில்தான் சமத்துவமும் சுதந்திரமும் பெறமுடியும் என்று கருதினுர். மக்கள் விருப்பமே சட்டமாக்கப்பட வேண்டும் என்று கருதினுர். இவருடைய கருத்துகளேயன்றி, இவர் நூலைப் படிப்பவர்களுக்கு ஏற்படும் மனவெழுச்சியும், மக்களைப் புரட்சி செய்யத் தூண்டியது. இம் மூவரன்றி வேறு பல எழுத்தாளர்களும் புரட்சியைத் தூண்டிவிட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சோஷியலிஸ்டுகளும், பல்பொருள் விளக்க ஆசிரியர்களும் (Encyclopaedists), பொருளியல் நூலாசிரியர்களும் (Economists) ஆவார்கள். அவர்கள் பொதுவாக மக்கள் நலன்கள் பேணும் ஆட்சியை ஆதரிப்பவர்களாயிருந்தனர். அவர்களும் ஆட்சிமுறையிலும், பொருளாதாரத் துறையிலும் இருந்த சீர்கேடுகளை வெளிப்படுத்தினுர்கள்.

புரட்சிக்கு மற்ருெரு காரணம் அமெரிக்காவில் ஏற்பட்ட புரட்சியாகும். 1776-ல் வட அமெரிக்காவில் இருந்த ஆங்கிலேயக் குடியேற்ற

[1] அவர் ஒரு சிங்கத்தால் ஆளப்படுவதை விரும்புவாரேயன்றி நூறு எலிகளால் ஆளப்படுவதை விரும்பமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடுகள் தங்களுடைய சுதந்திரத்தைக் கோரி பிரிட்டனுக்கு எதிராகப் புரட்சி செய்தன. பிரிட்டன்மீது பழி தீர்த்துக்கொள்ள ஃபிரான்சு அக் குடியேற்றங்களுக்கு உதவி செய்தது. அமெரிக்காவில் போர் புரிந்த பின் நாடு திரும்பிய ஃபிரஞ்சு வீரர்கள் அமெரிக்க மக்கள் கொண்டிருந்த மக்கள் ஆட்சி முறையைப்பற்றிய கருத்துகளையும் அவர்களுடன் கொண்டுவந்தனர். மேலும், அமெரிக்கப் புரட்சியின் வெற்றி ஃபிரஞ்சுக் காரர்களைப் புரட்சி செய்ய ஊக்குவித்தது. மேலும், அப் போர் ஃபிரஞ்சுக் கருவூலத்தைக் காலியாக்கிவிட்டது. பணமின்றி அரசாங் கத்தை நடத்துவது கடினமன்றோ? ஆகவே, வேண்டிய பணத்தை மக்கள் பிரதிநிதிகளின் அனுமதியின்பேரில் பெறலாம் என்ற நோக்கத் துடன் ஸ்டேட்ஸ்-ஜெனரல் கூட்டப்பட்டது.

1789-ல் ஆரம்பிக்கப்பட்ட புரட்சி 1799 வரை நடைபெற்றது என்று கூறலாம். 1789-ல் ஸ்டேட்ஸ்-ஜெனரல் 1614ஆம் ஆண்டிற்குப் பின் முதல் தடவையாக வெர்சாயி அரண்மனையில் கூடியது. மூன்றுவது மக்கட் பிரிவுக்கு (Third Estate) அதிகமான பிரதி நிதித்துவம் வழங்கப்பட்டது.[1] எல்லா உறுப்பினர்களும் ஒன்ருகக் கலந்து சபையின் காரியங்களைக் கவனிக்கவேண்டும் என்றும், ஒவ் வோர் அங்கத்தினருக்கு ஒவ்வோர் ஓட்டு அளிக்கவேண்டும் என்றும் மூன்றுவது எஸ்டேட் உறுப்பினர்கள் கோரினர்கள். இதுவரை மூன்று எஸ்டேட்டுகளும் தனித்தனியே கூறின. ஒவ்வோர் எஸ்டேட்டுக்கும் ஓர் ஓட்டு என்ற அடிப்படையில் சபையின் தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டன. அம் முறை உரிமைகள் பெற்ற முதலிரண்டு எஸ்டேட்டுகளுக்கு மிகுந்த செல்வாக்கு அளித்தது. ஆகவே, மூன்றுவது எஸ்டேட்டின் அங்கத்தினர்கள் பெருவாரியாக இருந்தமை யால் மேற்கூறிய நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் மூன்றுவது எஸ்டேட்டி னுடைய செல்வாக்கு பெருகிவிடும் என்று கருதப்பட்டது. ஆகவே, லூயி அக் கோரிக்கைகளை ஏற்க மறுத்தார். ஆகவே, அதனுடைய விருப்பங்களை நிறைவேற்ற அதுவே நடவடிக்கைகளை மேற்கொண்டது. மற்ற இரண்டு எஸ்டேட்டுகளும் ஒன்று சேர்ந்து பணியாற்ற வருமாறு அழைப்பு அனுப்பியது. அவர்கள் அதற்கு இசைய மறுத்ததும், அதுவே எல்லா மக்களின் பிரதிநிதி என்ற முறையில் அதனுடைய பெயரை 'தேசிய சபை' (National Assembly) என்று மாற்றிக் கொண்டது. வெகு சீக்கிரத்தில் முதலாவது எஸ்டேட்டைச் சார்ந்த கீழ் நிலைக் குருமார்கள் தேசிய சபையில் கலந்துகொண்டார்கள். இதைக் கண்டு கோபமடைந்த லூயி, எல்லா அங்கத்தினர்களையும் சந்திக்க

[1] ஸ்டேட்ஸ்-ஜெனரல் அப்பொழுது 1214 உறுப்பினர்களைக் கொண் டிருந்தது. மதகுருமார்களின் எண்ணிக்கை 308, பிரபுக்களின் எண்ணிக்கை 285, மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை 621 ஆக இருந்தன.

விரும்பினர். அதற்கான ஏற்பாடுகள் செய்ய, தேசீய சபை கூடியிருந்த பெரிய அறையினின்றும் தேசீய சபையின் அங்கத்தினர்கள் துரத்தப் பட்டனர். ஆனால், அவர்கள் அதற்காக வருந்தாமல் பக்கத்திலிருந்த டென்னிஸ் விளையாட்டரங்கில் கூடி ஃபிரான்சு நாடு முழுவதற்கும் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தாமல் அவர்கள் கலைவதில்லை என்று பிரமாணம் செய்தார்கள். மத குருமார்களில் பலரும், சில பிரபுக் களும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். சில நாட்களுக்குப் பின்னர் அரசர் எல்லா எஸ்டேட்டுகளையும் ஒருங்கே சந்தித்து அவர் களை முன்மாதிரியே கூடி ஆலோசனை செய்யவும், முடிவெடுக்கவும் கட்டளையிட்டார். மூன்றாவது எஸ்டேட்டு அக் கட்டளையை நிறைவேற்ற மறுத்தது. லூயி மன்னர் துருப்புகளைக்கொண்டு அவர்களை அடக்கி யிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்ய அவருக்குத் துணிவில்லை; மனமும் இல்லை என்றும் கூறலாம். ஆகவே, தேசீய சபை தொடர்ந்து பணியாற்றியது. பிறகு பல மத குருமார்களும் சில பிரபுக்களும் அவர்களுடன் திரும்பவும் சேர்ந்துகொண்டார்கள். இறுதியில் லூயி மூன்றாவது எஸ்டேட்டின் கோரிக்கைகளை ஏற்றார். இதுவே மக்களின் சிறப்பான வெற்றிகளில் முதலாவதாகும்.

அதன் பிறகு கவர்ந்து பற்றுகிற இரு நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அவற்றுள் முதலாவது பாஸ்டைல் கோட்டையைத் தகர்த்தெறிந்த நிகழ்ச்சியாகும். பயிர்த்தொழிலும், வியாபாரமும் சரிவர நடைபெறாத தால், அநேகர் பட்டினியாலும் வேலையின்மையாலும் துன்பம் அடைந் தார்கள். அவர்களில் பலர் பாரிஸ் நகரத்திலிருந்த இடர் உதவி ஸ்தாபனங்களை நாடிச் சென்றனர். இவர்களும் பாரிஸ் மக்களும் நாளடைவில் பேச்சுத்திறன் படைத்த புரட்சித் தலைவர்களின் கைப் பொம்மைகளாக மாறினார்கள். இவர்களைக்கொண்டு பல புரட்சியாளர் களைக்கொண்ட கழகங்கள் பிற்காலத்தில் அமைக்கப்பட்டன. அவற்றுள் மிகப் பெயர் பெற்றது 'ஜாகோபின் கிளப்' (Jacobin Club) என்பது தாகும்.[1] பாரிஸ் நகர மக்களிடையே அருவருப்பும், கொந்தளிப்பும் வளர்ந்து இருந்த அச் சமயத்தில் அரசர் தேசீய சபையை (National Assembly) அடக்குவதற்கு இரகசியமாக அவருடைய படைகளைச் சேகரித்துக்கொண்டிருந்தார். அப் படைகளைக் கலைக்கவேண்டுமென்று தேசீய சபை விடுத்த வேண்டுகோளை நிராகரித்தார். சீர்திருத்தங் களை விரும்பிய நெக்கரைப் பதவியினின்றும் விலக்கினார். அச் செய் கைகள் பாரிஸ் மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டின. ஜூலை 14ஆம் தேதி பாஸ்டைல் கோட்டையில் வெடிமருந்து அதிக அளவில் இருப்ப தாக வதந்தி கிளம்பியது. உடனே புரட்சிக்காரர்கள் அதைத் தாக்கி

[1] முதன்முதல் இந்தக் கழகம் செயின்ட் ஜாக் (St. Jacques) மடத்தில் கூடியதால் இப் பெயர் வந்தது.

நொறுக்கினார்கள். இவ்வாறு வல்லாட்சியின் சின்னம் என்று கருதப்பட்ட அக் கோட்டையை அழித்த நாளை இன்றும் தேசீய விடுமுறை நாளாக ஃபிரஞ்சுக்காரர்கள் கொண்டாடுகிறார்கள். பாரிஸ் நகரத்தில் புதிய ஆட்சியை ஏற்படுத்தினார்கள். லஃபேயெத் (Lafayette) என்பவரைத் தலைவராகக்கொண்ட புரட்சிப்படை (National guard) ஏற்படுத்தப்பட்டது. அந்நேரத்திலும் மன்னர் கிளர்ச்சிக்காரர்களைப் படை கொண்டு ஒடுக்க முயற்சி செய்யவில்லை. அதற்கு மாறாக அவரே பாரிஸ் சென்று, புரட்சிக்காரர்களின் ஏற்பாட்டினுக்கு அவருடைய ஒப்புதலை அறிவித்தார். ஃபிரான்சின் ஏனைய பாகங்களிலும் கலகங்கள் ஏற்பட்டன. பண்ணை நில முதல்வர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. எல்லா நகரங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளுக்கு நகரங்களின் ஆட்சிப் பொறுப்பு கொடுக்கப்பட்டன. அதனால் பல பிரபுக்கள் நாட்டைவிட்டுச் சென்றனர். அவர்கள் வெளிநாடுகளில் குடியேறியவர்கள் (emigres) என்று அழைக்கப்படுகிறார்கள்.

இதன் பிறகு அரசர் வாளாயிருக்கவில்லை. மறுபடியும் அவருடைய படைகளைச் சேகரிக்க ஆரம்பித்தார். அப் படையினருக்குப் பெரு விருந்து ஒன்று ஏற்பாடு செய்தார். அச் சமயத்தில் உணவுப் பற்றுக் குறையினால் பாதிக்கப்பட்டிருந்த பாரிஸ் மக்கள் கோபமடைந்தார்கள். அரசரை அவர்களுடைய நேர்பார்வையில் வைத்திருக்கவேண்டும் என்று எண்ணினார்கள். அதனால் பாரிஸ் பெண்கள் அணிவகுத்து வெர்சாயி நோக்கிச் சென்றனர். ஆண்களும் அதில் கலந்துகொண்டனர். அரசர் பாரிஸ் மக்கள் வேண்டுகோளுக்கு இசைந்தார். தேசீய சபையும் அரசரைப் பின்தொடர்ந்தது. அந் நிகழ்ச்சிக்குப் பிறகு புரட்சிக் கருத்துகள் கொண்ட பாரிஸ் நகர மக்களிடையே அரசகுடும்பம் வாழ நேர்ந்தது. தேசீய சபையும் பாரிஸ் மக்களைச் சார்ந்திருக்கவேண்டியதாயிற்று.

1791-ல் தேசீய சபை கலைந்தது. ஆனால், அதற்கு முன்னர் பல சீரிய சட்டங்களை அது இயற்றிவிட்டது. பிரபுக்களும், மதகுருமார்களும் பெற்றிருந்த தனி உரிமைகளை ஒழித்துவிட்டது. பிரபுக்களின் பண்ணைத் தலைவருக்குரிய உரிமைகளும் அழிந்துவிட்டன. மதகுருமார்களுக்கு மக்கள் பணம் (Tithes) செலுத்திவரும் முறை ஒழிக்கப்பட்டது. பிறகு நாட்டின் நிதிநிலையைச் சீர்படுத்த மதச் சொத்துகளைப் பறிமுதல் செய்யப்பட்டது. அச் சொத்துகளை உடனே பணமாக்குவது கடினமான செயலாகத் தோன்றியது. ஆகவே, அச் சொத்துகளை ஈடாக வைத்துப் பத்திரங்கள் (Assignats) வழங்கியது. இவைகளே நாளடைவில் காகிதப் பணமாகப் பயன்படுத்தப்பட்டது. மதச் சொத்துகளைப் பறிமுதல் செய்தபின்னர் கத்தோலிக்க மதகுருமார்கள் அனைவரும் சம்பளம் பெறும் அரசாங்க அலுவலர்களாக மாறினர்.

அவர்கள், ஆட்சித்துறை வட்டாரங்களிலும், மாவட்டங்களிலும் இருந்த எல்லா மதத்தைச் சார்ந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஏற்பாடுகளைப் போப் கண்டித்தார். மதப்பற்றுடைய லூயி மன்னர் மிக்க வருத்தத்துடன் இந்த ஏற்பாட்டினை (Civil Constitution of the Clergy) ஏற்றுக்கொண்டார். இந்த ஏற்பாடு கத்தோலிக்கர் களைப் புண்படுத்தியது.

தேசிய சபையின் முக்கியமான சாதனை ஃபிரஞ்சு நாட்டுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றினை இயற்றியதேயாகும். இச் சட்டத்தின் முதற்பகுதியில் மக்களின் உரிமைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. எல்லா மக்களும் சமமானவர்கள்; மக்களே எல்லாவற்றினுக்கும் மேம்பட்டவர்கள்; சட்டமியற்றுவதில் மக்கள் பங்கு கொள்ளவேண்டும்; பேச்சுச் சுதந்திரம் மிகப் புனிதமான சுதந்திரமாகும்; விசாரணையின்றி எவரையும் சிறையிலடைக்க முடியாது என்று அவ்வுரிமை அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. ஆட்சி அதிகாரங்களை அரசருக்கே கொடுத்தது. அமைச்சர்களை அவரே நியமிக்கவேண்டும் என்றும் படைகளை அவருடைய கட்டுக்குள் வைத்திருக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டன. ஆனால், அவருக்குச் சட்டமியற்றும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. சட்டங்களைத் தாற்காலிகமாகத் தடுத்து நிறுத்துவதைத் தவிர இத்துறையில் வேறு அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. மேலும், சட்டசபையின் அனுமதியின்றி போர்ப் பிரகடனம் செய்ய அவருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. நீதிநிலயத் துறையிலும் அவருக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. சட்டமியற்றும் அதிகாரம் மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்கு அளிக்கப்பட்டது. வாக்காளர் உரிமை சொத்துடையவர்களுக்கு வழங்கப்பட்டது. அதனுல் நகரத்தில் வாழ்ந்த தொழிலாளர்கள் உரிமை பெருது போயினர். நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நீதிநிலயத்துறை சீர்படுத்தப்பட்டது. இதனுல் எல்லோரும் நியாயம்பெற வழி ஏற்பட்டது. தல ஆட்சியும் திருத்தியமைக்கப்பட்டது. ஆட்சித்துறை வட்டாரங்களிலும் (Departments), சிறுநில ஆட்சிப் பகுதிகளிலும் (Communes), மாவட்டங்களிலும் மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டன.

இதற்கிடையில் 1791-ல் அரசர் நாட்டினின்றும் ஓடிவிடத் தீர்மானித்தார். ஆனுல், அவர் அம் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது பிடிபட்டார். பலர் அவரைப் பதவியினின்றும் நீக்கிவிடவேண்டும் என்று கோரினுர்கள். ஆனுல், புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை அவர்முன் சமர்ப்பிப்பது என்றும், அதை அவர் ஏற்றுவிட்டால் அவரை அரசராக மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 1791-ல் லூயி அரசியலமைப்புச் சட்டத்தை ஒப்புக்கொண்டார்.

செப்டம்பர் மாதம் தேசீயசபை அதனுடைய வேலையை முடித்து விட்டதால் கலைந்தது.

1791-ல் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. புதிய சட்டசபை தேர்ந்தெடுக்கப்பட்டது. தேசீய சபையின் உறுப்பினர்கள் எவரும் இப் புது சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட லாகாது என்று தேசீய சபையே முடிவு கட்டியதால், சட்டசபையின் அங்கத்தினர்கள் அனைவரும் அனுபவம் அற்றவர்களாகவே இருந்தனர். இச் சபையின் உறுப்பினர்கள் மூன்று பிரிவினர்களாய் இருந்தனர். ஒரு கட்சியினர் அரசியலமைப்புப்படி ஆட்சி நடைபெறவேண்டும் என்று கருதினர். மற்றொருவர் புரட்சியைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்றும் குடியாட்சியை அமைக்கவேண்டும் என்றும் எண்ணமிட்டனர். இவர்களில் பெரும்பான்மையினோர் மிதவாதிகளாகவும், மற்றவர்கள் தீவிர நோக்குடையவர்களாகவும் இருந்தனர். இவர்களில் முதலில் கூறப்பட்டவர்கள் கிராண்டியர் (Girondins) என்று அழைக்கப்பட்ட னர்.[1] மற்றவர்கள் ஜாகோபியர் ஆவர். கிராண்டியர் கட்சியில் ரோலண்ட் (Roland) என்னும் அம்மையார் செல்வாக்குப் பெற்றிருந் தார். ஜாகோபியர்கள் டான்டன் (Danton), இரோபஸ்பியர் (Robesspierre) ஆகியவர்களைத் தலைவர்களாகக் கொண்டிருந்தனர். ஜாகோ பியர் சட்டசபையில் செல்வாக்குப் பெறவில்லை என்றாலும், பாரிஸ் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். சட்டசபையின் நடவடிக்கைகளை எல்லோரும் கவனிக்க அனுமதிக்கப்பட்டதால், பாரிஸ் மக்கள் அங்குச் சென்று அவர்களுடைய கட்சியினரை ஆதரிக்க முற் பட்டனர். ஆகவே, நாளடைவில் எக்கட்சியிலும் சாராதவர்கள் சட்ட சபைக்குச் சென்று நடவடிக்கைகளில் பங்குகொள்ளுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

முதலில் லூயி பிற்போக்குக் கட்சியைச் சார்ந்தவர்களை அமைச்சர் களாக நியமித்தார். பிறகு கிராண்டியர்களை அமைச்சர்களாக அமர்த்த நேர்ந்தது. அக்காலத்தில் ஃபிரான்சு பிறநாட்டார்களுடன் போர்புரிய வேண்டிய சூழ்நிலை உருவாகியது. ஃபிரஞ்சு அரசி, மாரி அன்த்வானெட் (Marie Antoinatte), ஆஸ்திரியா பேரரசரின் சகோதரியாவார். ஆகவே, பேரரசர் அவருடைய சகோதரிக்குப் புரட்சிக்காரர்களால் யாதோர் இன்னல் நேராவண்ணம் பாதுகாக்க அறிக்கை ஒன்றினை 1791-ல் வெளியிட்டார் (Declaration of Pillnitz, 1791). அதைத் தொடர்ந்து அவரும், பிரஷ்யா நாட்டரசரும், ஃபிரான்சு நாட்டு விவ காரங்களில் தலையிட ஏற்பாடுகளைச் செய்தார்கள். கிராண்டியர்கள்

[1] இவர்களின் தலைவர்கள் பெரும்பாலோர் கிராண்டே என்னும் பகுதியி லிருந்து வந்தவர்களாதலால் இப் பெயர் வழங்கலாயிற்று.

இந்த நிலையைப் பயன்படுத்தி நாட்டில் குடியரசை ஏற்படுத்த விரும்பினார்கள். அரசருடைய வரம்புக்குட்பட்ட ஆட்சியை விரும்பியவர்களும் போரில் அடையும் வெற்றிகளின் வாயிலாக 1791ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தை நிலைநிறுத்தக்கூடும் என்று கருதினார்கள். ஜாகோபியர்கள் ஒருவர்தாம் போர்புரிவதை எதிர்த்தார்கள். நாட்டில் வல்லாட்சி ஏற்படும் என்ற எண்ணமே அவர்களது எதிர்ப்புக்குக் காரணமாகும். 1792-ல் போர் தொடங்கியது. எதிர்பார்த்ததுபோலவே ஃபிரஞ்சுசேனை முறியடிக்கப்பட்டது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அரசர் சில கிராண்டிய அமைச்சர்களை நீக்கினார். மேலும், சில சட்டங்களைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தினார். அப்பொழுது எதிரிகளின் படைத்தலைவர், பிரன்ஸ்விக் கோமகன் (Duke of Brunsvick) ஓர் அறிக்கையை விடுத்தார். லூயிமன்னர் குடும்பத்திற்குக் கேடு விளைவிப்பவர்கள் கடுந் தண்டனைக்குள்ளாவார்கள் என்று அதில் குறிப்பிட்டார். மேற்கூறிய சம்பவங்கள் அரசர் நாட்டிற்கு எதிராகச் சதிசெய்கிறார் என்று கூறுபவர்களை மேலும் தூண்டிவிட்டன. அவர்களுள் முக்கியமானவர்கள் டான்டனும், இரோபஸ்பியரியும் ஆவார்கள். அவர்கள் தூண்டுதலின்பேரில் பாரிஸ் புரட்சிக்கர்ரர்கள் பாரிஸ்நகர ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு அரசருடைய மாளிகையைத் தாக்கினார்கள். அப்பொழுதும் கூட அரசர் அவருடைய காவலர்களைக்கொண்டு அவர்களைத் தாக்க விரும்பவில்லை. அதற்கு மாறாக அரசர் மாளிகையைவிட்டு சட்டசபையில் புகலிடம் நாடினார். புரட்சிக்காரர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். சட்டசபைமுன் மன்னர் ஆட்சியை நீக்கவேண்டும் என்று கூச்சலிட்டனர். ஆகவே, மன்னர் சிறைப்படுத்தப்பட்டார். சட்டசபைக்கு முடியாட்சியை ஒழிக்க அதிகாரமில்லாததால், புதிய அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கிடையில் பகைவர்கள் பாரிஸை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார்கள். இதை அறிந்த புரட்சிக்காரர்கள் அரசராட்சிக்கு ஆதரவளிப்பவர்களையெல்லாம் கொன்றுவிட்டனர் (September massacre). இக் கொலைகளுக்கெல்லாம் காரணமாயிருந்தது பாரிஸ் நகரசபையே (Commune) ஆகும். இந் நிகழ்ச்சி பயங்கர ஆட்சியின் (Reign of Terror) தொடக்கத்தைக் குறித்துக்காட்டும் நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

இதன் பிறகு டான்டன் சர்வாதிகாரியாக விளங்கினார். படுகொலைகளைத் தடுத்து, அமைதியை ஏற்படுத்த முனைந்தார். ஃபிரஞ்சுப் படையை பலமுடையதாகச் செய்தார். அதனால் வால்மி (Valmy) என்னும் இடத்தில் பகைவர்கள் முறியடிக்கப்பட்டார்கள். அதன் பிறகு ஃபிரஞ்சுப்படை ஆஸ்திரியா நெதர்லாந்துப் பகுதியில் புகுந்து வெற்றி கண்டது. மேலும், ரைன்நதிப் பகுதியிலும் இத்தாலியிலும் போர் புரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கிடையே பாரிஸில் நிறை உரிமைப் பேரவை (National Convention) கூட்டப்பட்டது. அதன்

உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் எக்கட்சியிலும் சேராது இருந்தனர். ஜாகோபியர் 50 இடங்களையும், கிராண்டியர் 120 இடங்களையும் கைப்பற்றி இருந்தார்கள். 1792ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி முடியாட்சி ஒழிக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அன்றுமுதல் ஃபிரான்சு குடியரசு நாடாயிற்று. பிறகு லூயி மன்னர் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். அவர்மீது பல குற்றங்கள் சாட்டப்பட்டன. அவர் குற்றவாளி என்றும், இரோபஸ்பியரின் தூண்டுதலின்பேரில் அவர் கொல்லப்படவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 1793ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசர் கொல்லப்பட்டார்.

அரசர் கொல்லப்பட்ட பிறகு புரட்சி அரசாங்கம் இக்கட்டான நிலையில் இருந்தது. வெற்றிப் பெருமிதத்தில் சுதந்திரம் அடைய முயற்சி செய்யும் எல்லா மக்களுக்கும் ஃபிரஞ்சுக்காரர்கள் உதவி புரிய காத்திருக்கிறார்கள் என்ற அறிக்கை விடுத்து, ஃபிரான்சுக்கு எதிராகப் பலம் பொருந்திய நேசநாடுகளின் கூட்டிணைவு ஒன்றை அச் சபை உருவாக்கிவிட்டது. அதில் ஆஸ்திரியா, பிரஷ்யா, பிரிட்டன், ஹாலந்து, ஸ்பெயின், சார்டினியா ஆகிய நாடுகள் சேர்ந்துகொண்டன. மேலும், பாரிஸ் நகரத்துக்கு வெளியே அரசருடைய ஆதரவாளர்கள் வெண்டி (Vendee) போன்ற இடங்களில் கிளர்ச்சியை மேற்கொண்டார்கள். படைத்தலைவர் டுமூரியே (Dumouriez) என்பவரும் புரட்சிக்காரர்களுக்கு விரோதமாக நடக்கலானர்; அவர் ஒரு கிராண்டியராதலால். கிராண்டியர்கள் தங்களுடைய செல்வாக்கை இழந்தார்கள். ஜாகோபியர்கள் இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கைப்பற்ற முனைந்தார்கள். கிராண்டியர்களை நிறை உரிமைப் பேரவையினின்றும் வெளியேற்றினர்கள். கிராண்டியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு ஃபிரான்ஸில் பயங்கர ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஜாகோபியர்கள் பாரிஸில்மட்டும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அவர்கள் நாட்டு மக்களில் ஒரு சிறு பகுதியினரே ஆவார். அத்தகையோர் ஆட்சி செலுத்த வேண்டுமாயின் பயங்கர முறையைப் பின்பற்றவேண்டியது அவசியமாகும்.

ஜாகோபியர்களுடைய பயங்கர ஆட்சிக்குத் துணையாக இருந்தது நாட்டின் பாதுகாப்புக்குழுவே (Committee of Public Safety) யாகும். பன்னிரண்டுபேர்களடங்கிய இக் குழுவில் முதலில் டான்டன் செல்வாக்குப் பெற்றிருந்தார். எல்லாவற்றினுக்கும் மேம்பட்ட அதிகாரத்தைப் பெற்றிருந்த இக் குழு அதனுடைய கவனத்தைப் பெரும்பாலும் படைகளைப் பெருக்குவதிலும், போரை நடத்துவதிலும் செலுத்தியது. ஜாகோபியர்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதில் கவனம் செலுத்திய மற்ருெரு ஸ்தாபனம் புரட்சியைச் சார்ந்த

நீதிமன்றமாகும் (Revolutionary Tribunal). நாட்டின் துரோகிகளை இம் மன்றம் விசாரித்து தண்டனை கொடுத்தது. ஜாகோபியர்களுக்கு எதிராக நடப்பது தேசத்துரோகமாகக் கருதப்பட்டது. இம் மன்றம் அநேகரைக் கொல்ல உத்தரவிட்டது. மாரி அன்தீவாநெட் அவர்களில் ஒருவராவார். கிராண்டியர் பலர் இவ்வாறு உயிரிழந்தனர்.

வெகுவிரைவில் ஜாகோபியர்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்களில் சிலர் மிதவாதிகளாக இருந்தனர். டான்டன் அவர்களுடைய தலைவராக விளங்கினர். இவர் இரக்க மனப்பான்மை கொண்டவர். அமைதியை ஏற்படுத்துவதில் நாட்டம் செலுத்தினர். சிலர் சமுதாயத் திருத்தங்களில் வெகு தீவிரமாக முனைந்திருந்தனர். இவர்களுக்கு ஹேபர்ட் (Hébert) என்பவர் தலைவராயிருந்தார். மூன்றாவது கட்சிக்கு இரோபஸ்பியர் தலைவராயிருந்தார். இவர் டான்டனுடைய மிதவாதத் தன்மையையும், ஹேபர்டினுடைய தீவிரத்தையும் வெறுத்தார். ஆகவே, இவர்கள் இருவரையும் ஒழித்துக்கட்ட எண்ணினர். அப்பொழுது ஹேபர்ட் கட்சியினர் பாரிஸ் நகர ஆட்சியின் துணைகொண்டு, பாரிஸில் கிறித்துவ மதத்தை யொழித்து, அறிவு வழிபாட்டினைப் (Worship of Reason) புகுத்தினர்கள். இதை வெறுத்த இரோபஸ்பியர் டான்டனுடன் சேர்ந்து ஹேபர்ட்டை கைது செய்து பிறகு கொல்லுவித்தார். 1794-ல் அவர் டான்டனையும் கைது செய்து, விசாரணைக்குக் கொண்டுவந்து பிறகு கொன்ருர். நிறை உரிமைப் பேரவை இவருடன் ஒத்துழைக்க நேர்ந்தது. மக்களின் நன்மதிப்பைப் பெற புது மதத்தைப் புகுத்தினர் (Worship of Supreme Being). கடவுள் ஒருவர் உள்ளார் என்பதும், அவர் அழியாதவர் என்பதும் அம் மதத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும். இரோபஸ்பியரிக்கு அநேக எதிரிகள் ஏற்பட்டனர். அவர்கள் வெற்றிபெற்ருல் அவர் அழிவுறுவார் என்பதை உணர்ந்திருந்தார். ஆகவே, அவர் சந்தேகப்பட்டவர்களையெல்லாம் கொலைக்கூடத்திற்கு அனுப்ப முற்பட்டார். ரூஸோவின் கருத்துகளுக்கு ஏற்றவாறு நடக்கவேண்டும் என்று கருதி, சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த முனைந்தார். ஆகவே, அவருக்கு எதிராகச் சதிக்கும்பல் தோன்றியது. 1794-ல் நிறை உரிமைப் பேரவையில் அவரைத் தாக்கிச் சிறைபிடித்தார்கள். சிறையினின்றும் தப்பியோடி பாரிஸ் நகராட்சியின் உதவியை நாடினர். இதற்குள்ளாக அவருடைய ஆதரவாளர்கள் அவரை விட்டு விலகினர்கள். எனவே, அவரைப் பிடிப்பது எளிதாயிற்று. அவர் சிறையினின்றும் தப்பியோடியதால், யாதொரு விசாரணையின்றி கொல்லப்பட்டார். அவருடைய மறைவு பயங்கர ஆட்சியின் முடிவைக் குறித்துக் காட்டுகிறது. அவ்வாட்சியின் போது வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் மீண்டும் நிறை உரிமைப் பேரவையில் சேர்ந்துகொண்டனர். எல்லா மதத்தினருக்கும் மத விவகாரங்களில் சுதந்திரமளிக்கப்பட்டது. கொலைகள் குறைந்தன.

அரசியல் நிர்ணயசபை எல்லா அதிகாரங்களையும் பெற்றது. ஜாகோபியர்கள் அதற்கெதிராக ஏற்படுத்திய கிளர்ச்சிகளையெல்லாம் ஒடுக்கியது. 1795ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அச் சபை கலைந்தது.

அச் சபை பல குறிப்பிடத்தக்க சட்டங்களை ஏற்படுத்தியது. நாட்டைவிட்டு வெளியேறிய பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தது. உணவுப் பொருள்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேலாக விற்கப்படுவதைத் தடுத்தது. பெரும் நிலப்பண்ணைகளைச் சிறு பிரிவுகளாக்கி அதனை ஏழை மக்களுக்கு விற்க ஏற்பாடு செய்தது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே விதமான அளவு முறைகளை ஏற்படுத்தியது. மெட்ரிக் அளவு முறை மேற்கொள்ள ஏற்பாடு செய்தது. ஒருவரின் சொத்துகளை எல்லாக் குழந்தைகளும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. கடனுக்காகச் சிறையிலிடும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. நீக்ரோ அடிமைகளை வைத்திருக்கும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்பதும் வலியுறுத்தப்பட்டது. சில பயனற்ற திருத்தங்களையும் அச் சபை மேற்கொண்டது. பிரபுக்கள் வகித்திருந்த பட்டங்கள் ஒழிக்கப்பட்டன. எல்லோரும் நாட்டுமக்கள் (Citizen) என்ற பெயரால் அழைக்கப்படவேண்டும் என்றும், வேலைப்பாடமைந்த ஆடைகளை அணியக்கூடாதென்றும் அறிவிக்கப்பட்டது. ஆண்டுக் குறிப்பேட்டையும் (Calendar) திருத்தி யமைத்தது. ஒவ்வொரு மாதத்திலும் பத்து நாட்கள் கொண்ட மூன்று வாரங்களை ஏற்படுத்தியது. மாதங்களின் பெயரை மாற்றியது. குடியரசு ஆரம்ப நாளைத் தொடக்கமாக அந்தக் குறிப்பேடு கொண்டிருந்தது.

இவைகளன்றி அப் பேரவை அரசியல் அமைப்புச் சட்டமொன்றை நிறைவேற்றியது. அதன்படி சட்டமியற்றும் அதிகாரம் இரு சபைகளடங்கிய சட்டசபைக்கு அளிக்கப்பட்டது. வாக்குரிமை வரி கொடுப்போருக்கே அளிக்கப்பட்டது. ஐந்து பேர்கள் கொண்ட குழுவினுக்கு (Directory) சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு உதவி செய்ய அமைச்சர்கள் அமர்த்தப்பட்டனர். ஒவ்வோர் ஆண்டும் சட்டசபைகளின் ஒரு பகுதியினரும், இயக்குநர்களில் (Directors) ஒருவரும் புதிதாகத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இயக்குநர்கள் ஆட்சி செய்த காலத்தில் வெளிநாடுகளுடன் போர் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இப் போர் ஏற்படக் காரணமும், முதலில் ஃபிரஞ்சுப்படை அடைந்த தோல்வியினையும், பிறகு டான்டன் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக ஃபிரஞ்சுப்படையின் முன்னேற்றத்தைப்பற்றியும், ஃபிரான்சுக்கு எதிராக நாடுகளின் கூட்டிணைவு

ஏற்படுத்தப்பட்டதையும் முன்னரே கவனித்தோம். குடியாட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர் போர் நடத்தும் பொறுப்பு நாட்டின் பாதுகாப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான கார்னோ (Carnot) என்பவர் ஃபிரஞ்சு சேனையில் புத்துயிரை ஊட்டியும், நவீன போர்க் கருவிகளைப் புகுத்தியும், எல்லா இடங்களிலும் தோற்றுக்கொண்டிருந்த ஃபிரஞ்சுப் படையை வெற்றிப் பாதையில் திருப்பிவிட்டார். ஹாலந்து அவர்கள் கைவசமாயிற்று. 1795-ல் பிரஷ்யா ஃபிரான்சுடன் சமாதானம் செய்துகொண்டது. ஹாலந்து ஃபிரான்சுடன் சேர்ந்து போராட இசைந்தது. ஸ்பெயினும் ஃபிரான்சுடன் சமாதானம் செய்துகொண்டது. பிரிட்டனும், ஆஸ்திரியாவும் மட்டுமே எஞ்சியிருந்தன. இதற்குள்ளாக இயக்குநர்கள் பதவியேற்றனர். இவர்கள் ஆஸ்திரியாவை முறியடிக்கப் படையொன்றை வியன்னு நோக்கி அனுப்பினுர்கள். சிறு படையொன்றை நெப்போலியன் என்ற படைத்தலைவரின்கீழ் இத்தாலிக்கு அனுப்பினுர்கள். ஆஸ்திரியாவைத் தோற்கடித்து வட இத்தாலி முழுவதையும் ஃபிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்குட்படுத்தினுர். 1797-ல் ஆஸ்திரியா சமாதானம் செய்துகொண்டது. காம்போ ஃபார்மியோ உடன்படிக்கைப்படி (Treaty of Campo Formio) ஃபிரான்சு, பெல்ஜியம், ஐயோனியன் தீவுகள் ஆகியவற்றைப் பெற்றது. வட இத்தாலியில் குடியரசு ஏற்படுத்துவதற்கு ஆஸ்திரியா இசைந்தது. பிரிட்டன் ஒன்றுதான் எஞ்சியிருந்தது. அந் நாட்டினையும் சமாதானத்திற்கு ஒப்புவிக்க நெப்போலியன் படைகளை எகிப்துக்கு நடத்திச் சென்றுர். எகிப்தில் பல வெற்றிகளைப் பெற்று, சிரியாவிற்குச் (Syria) சென்றுர். இதற்கிடையே பிரிட்டிஷ் கப்பற்படை நெல்சன் (Nelson) தலைமையின்கீழ் ஃபிரஞ்சுக் கடற்படையை நைல்நதி முகத்துவாரத்திற்கருகே தோற்கடித்தது. அதனுல் நெப்போலியன் இராணுவப் பொருள்களைத் தாய்நாட்டினின்றும் பெறமுடியாது போயிற்று. இவ் வெற்றியைப் பயன்படுத்தி பிரிட்டன் 1799-ல் இரண்டாவது நாடுகளின் கூட்டமைப்பை (Second Coalition) ஏற்படுத்தியது. இதில் ஆஸ்திரியாவும் ருஷ்யாவும் சேர்ந்துகொண்டன.

இதற்கிடையில் இயக்குநர்கள் அவர்களுடைய செல்வாக்கை இழந்துவிட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் திறமையற்றவர்களாயிருந்தனர். மேலும், அவர்களிடம் ஊழல்கள் மலிந்திருந்தன. அவர்களுக்கும் சட்டசபைகளுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. நாட்டின் நிதிநிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. வெளிநாட்டுப் போரை நடத்த அவர்களுக்குத் திறமை இல்லை என்பது அனைவருக்கும் தெரியலாயிற்று. ஃபிரஞ்சுக்காரர்கள் இத்தாலியினின்றும் துரத்தியடிக்கப்பட்டார்கள். ஆகவே, நாட்டில் வலிமை பொருந்திய ஆட்சி அமைக்கப்படவேண்டும் என்று மக்கள் வேண்டினர். நெப்போலியன் ஒருவரே

அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிவைக்கக்கூடியவராகக் காணப்பட்டார். பேராசைகொண்ட நெப்போலியனும், அப்பொழு திருந்த நிலையைப் பயன்படுத்தி அவருடைய அதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டார். எனவே, 1799ஆம் ஆண்டில் நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய நெப்போலியனுடைய நட்பை எல்லாக் கட்சி யினரும் நாடினார்கள். இறுதியில் அவர் சீயே (Sieyes) என்பவருடன் சேர்ந்துகொண்டார். நெப்போலியன் இயக்குநர் ஆக விரும்பினார். ஆனால், அப் பதவிக்குத் தகுந்த வயது இன்மையால், ஆட்சி அமைப்பு முறையை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. நெப்போலியனும் அவர் நண்பர்களும் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள். அதற்கு அவ ருடைய சகோதரர் லூசியென் (Lucien) பேராதரவு கொடுத்தார். அதன் விளைவாக, சட்டசபைகள் பாரிஸ் நகரத்திற்குச் சில மைல் களுக்கப்பாலுள்ள செயின்ட் க்லௌட் (St. Cloud) என்னுமிடத் திற்கு மாற்றப்பட்டன. பாரிஸ் நகரத்திலிருந்த படை நெப்போலிய னுடைய அதிகாரத்துக்குட்படுத்தப்பட்டது. சதித்திட்டத்தின்படி இயக்குநர்களில் ஒருவர் பதவியை இராஜிநாமாச் செய்தார். மற்ற வர்கள் இராஜிநாமாச் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். பிறகு சட்டசபைகளை, ஆட்சி அதிகாரத்தை நெப்போலியனைச் சேர்த்து மூன்று பேர் கொண்ட குழுவினுக்குக் கொடுக்குமாறும், அக் குழுவினருக்குப் புதிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கொடுக்கும் படியும் வற்புறுத்துவதற்காக நெப்போலியன் அச் சபைகளை அணுகி னார். ஒரு சபையின் அங்கத்தினர்கள் அவருடைய பேச்சினைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. மற்றொரு சபையில் அவர் தாக்கப்பட்டதால் அவர் மூர்ச்சையடைந்தார். அவருக்குச் சட்டத்தின் காப்பின்மையை அறிவிக்கத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற அச் சபை தயாரா யிருந்தது. அதனுடைய தலைவரான லூசியன் உடனே சபையைக் கலைத்துவிட்டு, இராணுவத்தின் உதவியைக்கொண்டு அச் சபையின் அங்கத்தினர்களை வெளியேற்றினார். பிறகு மற்றொரு சபையினை அணுகி, நாட்டின் குடியரசை நிலைநிறுத்த நெப்போலியன், டியூகோ (Ducos), சீயே ஆகியோரைக்கொண்ட சட்ட அமைப்புக்குழு ஒன்றை ஏற்படுத்துமாறு வேண்டினார். அதன் அனுமதி பெற்றபிறகு பிறிதொரு சபையின் அங்கத்தினர்களில் சிலரை மீண்டும் அழைத்து அத் தீர்மா னத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். இவ்வாறாக 1795-ல் ஏற்படுத் தப்பட்ட அரசியல் அமைப்பு அழிக்கப்பட்டது.

விரைவில் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆட்சி அதிகாரங்களை மூன்று கான்சல்கள் (Consuls) பெற்றனர். அவர்களுள் நெப்போலியன் முதலாவது கான்சலாக இருந்தார். மற்ற இரண்டு கான்சல்களும் முதல் கான்சலுக்குக் கீழ்ப்படிந்து நடக்க

வேண்டியவர்களாவர். சட்டங்களைச் செயற்படுத்தும் அதிகாரமும், படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும், அயல்நாட்டுக்கு அனுப்பப் படும் தூதர்களை நியமிக்கும் அதிகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டன. சட்டங்களை இயற்றும் அதிகாரம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு (State Council) ஒன்றினுக்கு வழங்கப்பட்டது. அறுபது பேர்கள்கொண்ட செனேட் (Senate) கான்சல் பதவியில் காலி ஏற்படும்போது அவ்விடத்தை நிரப்பும் அதிகாரம் பெற்றது. செனட் டால் நியமிக்கப்பட்ட நூறுபேரடங்கிய சபை (Tribunate) எல்லா மசோதாக்களையும் விவாதிக்கும் உரிமை பெற்றது. அச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதாக்கள் மட்டுமே 300 பேர் கொண்ட சட்ட சபையின் முன்னர் வைக்கப்பட்டன. அச் சபை யாதொரு விவாதமு மின்றி அம் மசோதாக்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்கூறிய புதிய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டவுடன் நெப்போலியன் இத்தாலிக்கு அவருடைய படைகளை நடத் திச் சென்றார். 1799-ல் ஃபிரான்சுக்கு எதிராக இரண்டாவது நேச நாடு களின் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்டதென்றும், அதில் கலந்துகொண்ட ஆஸ்திரியாவும், ருஷ்யாவும், ஃபிரஞ்சுக்காரர்களை இத்தாலியினின்றும் துரத்தியடித்தன என்றும் நாம் முன்னரே கவனித்தோம். மீண்டும் ஃபிரான்சின் ஆதிக்கத்தை இத்தாலியில் ஏற்படுத்தவும் பகைவர்களின் ஒற்றுமையைக் குலைக்கவும், நெப்போலியன் இத்தாலி சென்றார். மிலான் நகரத்தை எளிதில் கைப்பற்றினார். அதையடுத்து ஆஸ்திரியாவை மாரெங்கோ (Marengo) என்னும் இடத்தில் தோற்கடித்தார். அதற் கிடையில் வியன்னாவை நோக்கிப் புறப்பட்ட மற்றொரு ஃபிரெஞ்சுப் படை ஹோயென்லின்டன் (Hohenlinden) என்னுமிடத்தில் ஆஸ்திரி யாவைத் தோற்கடித்தது. ஆகவே, 1801-ல் லூனெவீல் சமாதானத்தை (Peace of Luneville) ஆஸ்திரியா செய்துகொண்டது. இத்தாலியில் ஆஸ்திரியாவின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளையும், ஜெர்மனியில் ரைன் நதிக்கு மேற்கேயுள்ள பகுதியினையும் ஃபிரான்சு பெற்றது. ஆஸ்திரியா, பிரிட்டன் ஆகியவற்றுடன் மனவருத்தம்கொண்டு, ருஷ்யா போரினின்றும் விலகிக்கொண்டது. ஆகவே, பிரிட்டன் மறுபடியும் தனித்திருந்து போர்செய்ய வேண்டியதாயிற்று.

இதற்கிடையில் ஆங்கிலேயக் கப்பற்படையினரின் தொந்தரவு களைத் தாங்கமுடியாமல் பல நடுநிலை நாடுகள் இங்கிலாந்துக்கு எதிராக ஒன்று சேர்ந்தன. இவைகளுக்குப் படைதரித்த நடுநிலைமை நாடுகள் (Armed Neutral States) என்ற பெயர் வழங்கலாயிற்று. அவை களில் ஒன்றான டென்மார்க்கின் கப்பற்படையை கோபன்ஹேகன் என்னுமிடத்திற்கு அருகே தோற்கடித்து நிலைமையை ஒருவாறு பிரிட் டன் சமாளித்தது. இதற்கிடையில் ருஷ்ய நாட்டின் அரசராகப் பதவி

யேற்ற முதலாவது அலெக்சாந்தர் (Alexander I) ஃபிரான்சின் எதிரியாவார். மேலும், இங்கிலாந்தின் கடற்படை நன்னம்பிக்கை முனை, இலங்கை, டிரினிடாட் (Trinidad) ஆகிய இடங்களைக் கைப்பற்றியது. ஃபிரான்சு பிரிட்டனைப் பணியவைக்கலாகாது என்ற முடிவுக்கு வந்தது. அதேபோல் பிரிட்டனும் ஃபிரான்சை ஐரோப்பாவில் நிலச்சண்டையில் தோற்கடிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தது. மேலும், இரு நாடுகளும் போரிட்டு மிகவும் களைப்படைந்தன. ஆகவே, 1802 ஆமியேன் சமாதானம் (Peace of Amiens) ஏற்படுத்தப்பட்டது. இங்கிலாந்து நன்னம்பிக்கை முனைப்பகுதி, மால்டா ஆகியவற்றைத் திருப்பிக் கொடுக்க இசைந்தது. இலங்கை, டிரினிடாட் ஆகியவற்றை அது தொடர்ந்து வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. ரோமாபுரி, தெற்கு இத்தாலி, எகிப்து ஆகிய இடங்களினின்றும் ஃபிரான்சு வெளியேற இசைந்தது. 1799-ல் நெப்போலியன் கான்சல் பதவியேற்ருர் என்று முன்னர் கூறினோம். அந் நிகழ்ச்சி புரட்சிக்கு முடிவு ஏற்படுத்தி விட்டது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆகவே, நெப்போலியனைப்பற்றி அறியுமுன்னர், புரட்சியின் விளைவுகளைச் சிறிது கவனிப்போம்.

புரட்சியின் விளைவாகப் பல புதிய கருத்துகள் செல்வாக்குப் பெற்றன. அவைகளில் ஒன்று ‘சுதந்திரம்’ என்பதாகும். அக் கருத்து பல அரசியல் நோக்கங்களை உட்கொண்டிருந்தது. 17ஆம், 18ஆம் நூற்றுண்டுகளில் அரச தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் இயங்கிவந்த வல்லாட்சி முறையை ஒழிக்க அது பெரும் உதவியாக இருந்தது. அரசியலமைப்போடு இசைவான ஆட்சிக்குப் பேராதரவு ஏற்படவும் அது காரணமாயிருந்தது. அரச தெய்வீக உரிமைக் கோட்பாடு அழிக்கப்பட்டு ஆட்சித் தலைமையுரிமை மக்களைச் சார்ந்ததே என்ற கருத்து ஓங்கி வளருவதற்கும் அது துணைபுரிந்தது. புரட்சிக்கு முன்னர் யாதோர் உரிமையுமின்றிப் பல கொடுமைக்கு உள்ளாக்கப் பட்டிருந்தார்கள். புரட்சியின் பயனாக மக்கள் பிறக்கும்போதே சில உரிமைகளைக் கொண்டிருந்தார்கள் என்றும், அவ் வுரிமைகளைக் குறைக்க எந்த ஆட்சிக்கும் உரிமையில்லை என்றும், அவ் வுரிமைகள் அனைத்தும் புனிதத்தன்மை வாய்ந்தவை என்றும் கருதப்பட்டது. அக் கருத்தையும், அவர்கள் அனுபவிக்கவேண்டிய உரிமைகளையும் புரட்சியின்போது தயாரிக்கப்பட்ட மனித உரிமைகள் அடங்கிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டன. எல்லா மக்களுக்கும் அவரவருக்குப் பிடித்த மதத்தைத் தழுவுவதற்கும், அதற்காகத் தொழுகை இல்லங்களை ஏற்படுத்துவதற்கும் உரிமை வழங்கப்படவேண்டும் என்றும், பேச்சுச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் என்றும், அவரவர்கள் எண்ணத்தை எழுத்துமூலமாக வெளியிட உரிமை வழங்கப்படவேண்டும் என்றும், சொத்துகளை யாதோர் இன்னல் இன்றி அனுபவிக்கும் உரிமை

அளிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டன. மேலும், இக் கருத்து ஆட்சிமுறையில் மாறுதல்கள் ஏற்படுத்தப் பெரிதும் பயன் பட்டது. சட்டசபைகள் அமைக்கவும், தல ஆட்சியைத் திருத்தி அமைக்கவும் ஆட்சியாளர் முனைந்தனர்.

புரட்சியின் பயனுகத் தோன்றிய சமத்துவம் என்ற கருத்து சமுதாய அமைப்பு முறையில் பல மாற்றங்கள் ஏற்படக் காரணமா யிருந்தது. புரட்சிக்கு முன்னர் ஃபிரான்சிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் சமுதாயம் பண்ணை நில உரிமைமுறையை (Feudalism) அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டு இருந்தது. அதனுல் ஒரு சிலர் உரிமைகளையும், ஏனையோர் கடமைகள்மட்டும் பெற்றிருந்தார்கள். ஒருசிலரின் நன்மைக்காக ஏனையோர் வாழவேண்டியநிலை ஏற்படுத்தப் பட்டது. அத்தகைய சமுதாய அமைப்பை புரட்சியின்போது ஃபிரஞ்சுக் காரர்கள் தகர்த்தெறிந்தனர். பண்ணை நில உரிமை முறையின் சான்றடையாளங்கள் அழிக்கப்பட்டன. நிலப்பண்ணைமுறை சார்ந்த நிலங்கள் குடியானவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன என்பதை முன்னரே குறிப்பிட்டோம். 'சமத்துவம்' என்ற கருத்து வளர்ச்சி யுற்றதால் சட்டத்தின்முன் யாவரும் சமம் என்ற எண்ணம் வளர்ந்தது. அதையொட்டி நாட்டின் வரியமைப்பு மாற்றப்பட்டது. வரிவிலக்குப் பெற்றவர்கள் அவ் வுரிமையை இழந்தனர். எல்லோரும் நல்வாழ்வு வாழ சமமான உரிமையைப் பெறவேண்டும் என்ற கருத்தும் தோன்றியது.

புரட்சியின் விளைவாகத்தான் தேசீயத் தன்மை ஓங்கி வளர லாயிற்று. 16ஆம் நூற்ருண்டிலே தோன்றிய இவ் வுணர்ச்சி மேலும் வளருவதற்கும், பிறநாடுகளில் பரவுவதற்கும் புரட்சி உதவி செய்தது. இதுகாறும் ஃபிரான்சில் மக்கள் அரசர் நாட்டு ஒற்றுமையின் சின்னம் என்பதற்காக அவரை நேசித்து வந்தனர். அந்நிலை இப்பொழுது மறைந்துவிட்டது. நாட்டுப்பற்று அதனுடைய இடத்தைக் கைப் பற்றிக்கொண்டுவிட்டது. இவ்வுணர்ச்சி வளர 'சகோதரத்துவம்' (Fraternity) என்ற புரட்சிக்காலக் கருத்து துணைபுரிந்தது. இதே கருத்து பிற இடங்களில் பரவுவதற்குக் காரணமும் புரட்சியேயாகும். ஃபிரஞ்சுப் புரட்சி அரசாங்கம் பிறநாடுகளுடன் போரிட நேர்ந்தது என்று குறிப்பிட்டோம். அதைத் தொடர்ந்து, நெப்போலியன் ஐரோப்பிய நாடுகளுடன் போர் புரியலானுர். ஃபிரஞ்சுப் படை சென்ற இடங்களில் எல்லாம் தேசீயத் தன்மை வளரலாயிற்று. பத்தொன்பதாம் நூற்ருண்டில் இக் கருத்து மிகவும் செல்வாக்குப் பெற் றிருந்தது. அதன் பயனுகப் பல நாடுகளில் ஒற்றுமையுணர்ச்சி மேலோங்கியது. தேசீய அடிப்படையில் நாடுகள் உருவாக்கப்படவும்

காரணமாய் அமைந்தது. ஃபிரான்சிலும் பிற இடங்களிலும் கல்வி, இராணுவம் ஆகியவைகள் தேசீயமயமாக்கப்பட்டன.

புரட்சி, மக்கள் நலத்தைக் கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கை களுக்கு ஊக்கமளித்தது. அடிமைத்தனம் ஒழிப்பதற்குப் பெரிதும் உதவியாயிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல நாடுகளிலும் மக்கள் நலம் கோரிப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. புரட்சியின் போது ஃபிரான்சில் இவ்வகையில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்களை நாம் முன்னரே கவனித்தோம்.[1]

கடைசியாக இலக்கியத்துறையில் ஏற்பட்ட புரட்சி குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாகவும் இருந்தது. 19ஆம் நூற்றாண்டில் எளிய நடையில் அறிஞர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்க முனைந்தனர். அவர்களில் தலைசிறந்தவர் விக்டர் ஹியூகோ (Victor Hugo) என்பவராவர்.

நெப்போலியன் (1769—1821)

1799ஆம் ஆண்டிற்குப் பிறகு ஃபிரான்சின் வரலாறும் நெப்போலிய னுடைய வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன. ஆகவே, நெப்போலியனுடைய சாதனைகளைப்பற்றி இனிக் கவனிப்போம். நெப்போலியன் 1769-ல் கார்சிகா என்னும் தீவிலுள்ள அஜாஸியோ என்னுமிடத்தில் பிறந்தார். அவருடைய தந்தை கார்லோ போன பார்ட்டும் (Carlo Bonaparte) தாயார் லெடிஜியாவும் (Letizia) நடுத் தர இத்தாலியக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். நெப்போலியன் பிறப்ப தற்கு ஓராண்டுக்கு முன்னர்தான் கார்சிகா ஃபிரஞ்சு வசமாயிற்று. ஆகவே, அவர் பிறந்ததிலிருந்தே அவர் ஃபிரஞ்சுக் குடிமகனாக விளங்கி னார். குடும்பம் மிகப் பெரியதாக இருந்ததால், அவருடைய தந்தை அவரை இராணுவத்தில் சேர்த்துவிட முடிவு செய்தார். பிரெயன் (Bri-enne), பாரிஸ் ஆகிய இடங்களிலிருந்த இராணுவப் பள்ளிகளில் படித் தார். படிக்கும்போது அவருக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை நிறை வேற்றுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்தார். அவருக்கு எதிர்ப்பட்ட இடர்களை மிகவும் பொறுமையுடன் சகித்துக்கொள்ளும் திறம் பெற்றவர். அவர் ஏழையாக இருந்ததால், பலரின் ஏளனத்துக்கு இலக்காயினர். யாருடனும் தாராளமாக நெருங்கிப் பழகும் தன்மையற்றவர். எப் பொழுதும் சிடுசிடுப்பாக இருந்தார். அவர் குடும்பத்தின்மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பயிற்சி முடிவுற்ற பிறகு ஃபிரஞ்சுப் படையின் பீரங்கிப் பிரிவில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட மேலாளராகப் பணியாற்றிவந்தார். அக் காலத்தில் அவர் பல அறிஞர்களின்

[1] 143ஆம் பக்கம் பார்க்க.

நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்தார். மகாஃபிரடெரிக் போர் ஏற்பாடுகளைப்பற்றிய நூல்களை மிகவும் கவனமாகப் படிப்பார். அவர் பிறந்த இடமான கார்சிகா தீவில் குடியரசு ஏற்படுத்தவேண்டும் என்று கருதியதால், சில ஆண்டுகளைக் கார்சிகாவில் கழித்தார். லூயி மன்னரின் கவர்னரை எதிர்த்துப் போராடினார். 1793-ல் மீண்டும் ஃபிரான்சு திரும்பினார். புரட்சியை முழுமனத்துடன் ஆதரித்தார். கிராண்டியர்களுக்கும் ஜாகோபியர்களுக்கும் இடையே தகராறுகள் ஏற்பட்டபோது, ஜாகோபியர் பக்கம் சேர்ந்துகொண்டார். 1793-ல் ஃபிரான்சுக்குள் புகுந்த பிரிட்டிஷார்களை டூலானிலிருந்து துரத்தும் பணியினை ஃபிரஞ்சு அரசாங்கம் அவரிடம் ஒப்படைத்தது. ஆங்கிலேயர்களை டூலானிலிருந்து துரத்தியடித்துப் பேரும் புகழும் பெற்றார். அதைத் தொடர்ந்து அவர் பதவியேற்றமும் பெற்றார். இரோபஸ்பியர் வீழ்ச்சிக்குப் பிறகு சில காலம் அவர் சிறைவாசம் செய்யவேண்டியதாயிற்று. அவர் இரோபஸ்பியரினுடைய ஆதரவாளர்களில் ஒருவர் என்று கருதப்பட்டதே இதற்குக் காரணமாகும். அவர் ஜாகோபியர் என்றாலும், கலகக் கும்பலையும், அக் கும்பல் செய்யும் பலாத்காரச் செயல்களையும் ஆதரிக்கவில்லை. அமைதியான ஆட்சியில் அவருக்கு மிகுந்த பற்று இருந்தது. ஆகவே, 1795-ல் கொந்தளிக்கும் மக்கள் கும்பலுக்கு எதிராக அவர் உதவியை நிறையுரிமைப் பேரவை (Convention) கோரியபொழுது, உடனே அவ் வேண்டுகோளுக்கு இணங்கினார். புரட்சி தொடங்கி ஏழாண்டுகளாகக் கலகக் கும்பல் மிக வெற்றிகரமாகத் தன்னுடைய நாசவேலைகளைச் செய்துவந்தது. நெப்போலியனே அக் கும்பலை முதன்முறையாகத் தோல்வியடையச் செய்தார். ஒழுங்கான ஆட்சிமுறை ஏற்படுத்த வழிவகை செய்தார். 1796-ல் அவருடைய திறமையைப் பாராட்டி நெப்போலியனை இத்தாலியில் போரிட வேண்டிய ஃபிரெஞ்சுப் படைக்குத் தளபதியாக இயக்குநர்கள் நியமித்தனர். மேலும், செல்வாக்கு மிகுந்த நெப்போலியன் தங்களுடைய ஆட்சிக்குக் கேடு செய்வாரோ என்ற பயத்தால் அப் பதவியைக் கொடுத்து வெளியேற்றினார்கள் என்ற கருத்தும் இருந்துவருகிறது. இத்தாலிக்குப் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நெப்போலியன் தன்னைவிட வயதில் மூத்தவரும், தேசிய சபையின் தலைவராகச் சில காலம் பணியாற்றிய போஆர்னே (Beauharnais) என்பவரின் விதவையும், இயக்குநர்களில் ஒருவரான பாராஸ் (Barras) என்பவரின் ஆசைநாயகியும் ஆகிய ஜோசஃபீன் (Josephine) என்பவரை மணம் செய்துகொண்டார். அதன் பிறகு அவர் இத்தாலியிலும், எகிப்திலும், சிரியாவிலும் போரிட்டார் என்று முன்னரே கவனித்துள்ளோம். அப் போர் அவருடைய போர்த் திறத்தை எடுத்துக்காட்டுகிறது. அதன் பின்னர் 1799-ல் பலாத்கார முறையைக் கையாண்டு புது அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கினார். அதில் அவர் முக்கிய அங்கத்தையும் வகித்தார். 1899-ல் பத்து ஆண்டு

களுக்கு முதலாவது கான்சலாகப் பதவியேற்ருர். இத்தாலியில் மீண்டும் படையை நடத்திச் சென்று வெற்றி பெற்ருர் என்று முன்னரே கூறியுள்ளோம். 1802-ல் அவர் வாழ்நாள் முழுவதும் கான்சலாக இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அவருக்குப் பின்னர் அப் பதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவரை நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அதே நேரத்தில் அவரைக் கொல்லப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அவைகளின் விளைவாக அவருக்குப் பேரரசர் என்ற பட்டம் 1804-ல் அளிக்கப்பட்டது. அவருடைய முடி சூட்டு விழாவில் பங்கெடுத்துக்கொள்ள போப்பாண்டவர் வரவழைக்கப் பட்டார். ஆனுல், இறுதியில் போப் கைகளினின்றும் மணிமுடியை வாங்கித் தானே சூடிக்கொண்டார். அரசர் ஆட்சிக்கு எதிராக நடத்தப் பட்ட இயக்கம் முடியாட்சியில் இவ்வாருக முடிவுற்றது. நெப்போலியன் ஃபிரஞ்சுக்காரர்களின் பேரரசர் என்ற பட்டம் பெற்ற பிறகுங்கூட ஃபிரான்சு 'குடியரசு' என்றே அழைக்கப்பட்டுவந்தது என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

உலகத்தில் தோன்றிய பெரும் படைத் தலைவர்களுள் நெப்போலியன் ஒருவராவார். அவர் போரிட்டு வென்ற நாடுகள் கணக்கற்றனவாகும். அதே நேரத்தில் அவர் சிறந்த அரசியல் மேதை யாவார். அவர் போர்க்களங்களில் பெற்ற வெற்றிகள் பயனுடைய விளைவுகளை ஏற்படுத்தவில்லை. ஆனுல், அவருடைய படைத்துறை சாராத நடவடிக்கைகள் ஃபிரான்சுக்கும் ஏனைய நாடுகளுக்கும் பயன் தரத்தக்க விளைவுகளை ஏற்படுத்தின. ஆகவே, அவருடைய போர் ஏற்பாடுகளைக் கவனிக்கு முன்னர் அவருடைய படைத்துறை சாராத நடவடிக்கைகளைப்பற்றிக் கவனிப்போம்.

பொதுவாக அவரை 'ஃபிரஞ்சுப் புரட்சியின் மகவு' என்று அழைக் கிருர்கள். புரட்சி ஏற்படவில்லை என்ருல் அவருடைய வாழ்க்கை சிறப் புற்றிருக்க முடியாது. ஆனுல், புரட்சிக் கொள்கைகள் அனைத்தையும் அவர் ஏற்கவில்லை. தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்று அவர் கருதிய கருத்துகளை அவர் ஏற்க மறுத்தார். அதே நேரத்தில் புரட்சிக்காரர் களின் தாக்குதலுக்கு இலக்காயிருந்த பழைய ஆட்சி முறையில் அவர் கண்ட நற்கருத்துகளை தைரியமாகக் கையாண்டார். ஆகவே, அவருடைய ஆட்சி முறை புரட்சிக் கருத்துகளையும், பழைய ஆட்சி முறையின் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு இருந்தது. மேலும், அவருடைய நடவடிக்கைகள் பல புரட்சிக் கருத்துகளுக்கு நேர்மாருக இருந்தன.

புரட்சி நடைபெற்றுவந்த காலத்தில் சீர்குலைந்துபோன ஆட்சி முறையை ஒழுங்குபடுத்துவதில் தன்னுடைய கவனத்தைச் செல

விட்டார். மைய ஆட்சி முறையை ஏற்படுத்தினர். சட்டசபை, ஆட்சிக் குழு (Council) போன்ற எல்லா ஸ்தாபனங்களையும் தன்னுடைய மேற்பார்வையின்கீழ்க் கொண்டுவந்தார். இலஞ்ச ஊழல்களை ஒழித்தார். எல்லா அதிகாரிகளும் கடுமையாக உழைக்க ஏற்பாடு செய்தார். தகுதி வாய்ந்தவர்களையே அமர்த்தி, ஆட்சித் தரத்தை உயர்த்தினர். சிறப்பாகப் பணியாற்றும் அதிகாரிகளுக்குத் தக்க பட்டங்கள் கொடுத்து கௌரவப்படுத்தவேண்டும் என்று எண்ணினர். ஆகவே, 1802-ல் சிறப்பு வாய்ந்த பண்பாட்டுக் குழுமம் (Legion of Honour) ஒன்றை அமைத்தார். இக் குழுமம் பல படிநிலைகளைக் கொண்டிருந்தது. படைத்துறையாளர்களுக்கும், படைத்துறையைச் சாராதவர்களுக்கும் அவரவருடைய நற்பணிகளுக்குத் தக்கவாறு கௌரவப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. புரட்சியின்போது பட்டங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வது அவசியமாகும். முதலில் திறமை வாய்ந்தவர்களுக்குப் பண்பாட்டுக் குழுமத்தில் இடமளிக்கப்பட்டது. ஆனல், நாளடைவில் திறமையற்றவர்களும் அதில் இடம்பெறலாயினர்.

புரட்சித் தலைவர்கள் ஆட்சிமுறையைச் சார்ந்த வட்டங்களில் இயங்கிவந்த அதிகாரிகளை மக்களே தேர்ந்தெடுக்கும் முறையைப் புகுத்தினர்கள் என்று நாம் முன்னரே கவனித்தோம். நெப்போலியன் அம் முறை பல குறைகளை உட்கொண்டிருப்பதைக் கண்டார். அது அவ்வதிகாரிகளுக்கு அதிகமான சுதந்திரத்தை வழங்கியது. மேலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் பெரும்பாலும் திறமையற்றவர்களாயிருந்தனர். அதனல் ஆட்சிமுறை சீர்குலைந்தது என்று அவர் கருதினர். ஆகவே, எல்லா வட்ட அதிகாரிகளையும் நியமிக்கும் பொறுப்பை அவரே ஏற்றுக்கொண்டார். அவர்கள் அனைவரும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வழிவகை செய்தார். மாகாணங்களில் (Departments) பிரிஃபெக்ட் (Prefect) என்ற அதிகாரியையும், நகரங்களில் மேயர் என்ற அதிகாரியையும் நியமித்து, எல்லா அதிகாரங்களையும் அவர்களுக்கு அளித்தார். பிரிஃபெக்டுகள் லூயி மன்னர் காலத்தில் இன்டென்டன்ட் என்பவர் பெற்றிருந்த அதிகாரங்களைவிட மேலான அதிகாரங்களைப் பெற்றிருந்தார்கள். நெப்போலியன் ஏற்படுத்திய தல ஆட்சிமுறைதான் இன்று ஃபிரான்சில் நடைமுறையில் இருக்கும் தல ஆட்சிமுறையின் அடிக்கல்லாக விளங்குகிறது.

அதே நேரத்தில் புரட்சிக் காலத்தில் உருவான கருத்துகள் சில வற்றினையும் அவர் ஏற்று ஆட்சியை நடத்திவந்தார். மக்கள் ஆட்சியின் தலையுரிமை பெற்றவர்கள் என்ற கருத்தினை அவர் ஒப்புக்கொண்டார். புரட்சிக்காரர்களின் மூவர்ணக் கொடியே தேசியக் கொடியாகக்

கொள்ளப்பட்டது. மார்சேயே (Marseillaise) என்ற புரட்சிக் காலத்தில் பாடப்பட்ட கீதம் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நெப்போலியன் படைத்துறையைச் சாராத விவகாரங்களில் மேற்கொண்ட சிறப்பு வாய்ந்த நடவடிக்கை, சட்டங்களை ஒழுங்குபடுத்தி அமைத்ததேயாகும். அவர் உலக மக்களுக்குப் பெருஞ்சேவை செய்த பெரியார்களுள் ஒருவராகக் கருதப்படுவதற்கு அவர் ஏற்படுத்திய சட்டத் தொகுதிகள் சான்று கூறுகின்றன. நாட்டிற்குப் பொதுவான சட்டதிட்டங்கள் இல்லாதது புரட்சிக்கு ஒரு காரணமென்று முன்னரே கண்டோம். அக் குறையை நீக்க நெப்போலியன் சட்டத் தொகுதிகளை ஏற்படுத்த முனைந்தார். 1800-ல் வழக்கறிஞர்கள் அடங்கிய குழு ஒன்றின் உதவியால் சிவில் சட்டத் தொகுதியை ஏற்படுத்தினர். அக் குழுவின் கூட்டங்களில் இடைவிடாது கலந்துகொண்டு சிவில் சட்டத் தொகுதியை உருவாக்குவதில் அவர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். இச் சட்டத் தொகுதி மக்களின் உரிமைகள், அவர்களது கடமைகள், திருமணம், விவாக ரத்து, வார்சுரிமை போன்ற விவகாரங்களைப் பற்றிய சட்டங்களை உட்கொண்டிருந்தது. சமத்துவம், மத விவகாரங்களில் சகிப்புத் தன்மை, சமமான சொத்துரிமை போன்ற புரட்சிக் கருத்துகளுக்கு இச் சட்டத் தொகுதியில் இடமளிக்கப்பட்டது. அத்துடன் பெண்கள் ஆண்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்ற கருத்தும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. குடும்பத்தின் தலைவருக்கு மனைவிமக்களின்மீது அளவற்ற அதிகாரம் கொடுக்கவேண்டுமென்ற கருத்தும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. மேலும், நடைமுறையிலிருந்த வழக்காறுகளும், ரோமானியர் சட்டங்களின் கருத்துகளும் இத்தொகுதியில் புகுத்தப்பட்டன. அது நாகரிகப் பண்பு பெற்ற சமூகம் எவ்வாறு அமையவேண்டும் என்பதனை வெகு தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துக்காட்டுகிறது. கிரிமினல் வழக்குமுறைச் சட்டத் தொகுதி, தண்டனைச் சட்டத் தொகுதி, வியாபாரச் சட்டத் தொகுதி ஆகியவைகளும் ஏற்படுத்தப்பட்டன. கிரிமினல் சட்டத் தொகுதி பகிரங்க விசாரணை, ஜூரி முறை ஆகியவற்றை உட்கொண்டு சிறப்படைந்தது. அதே சமயத்தில் ஜூரிகளை நியமிக்கும் உரிமை பிரிஃபெக்டுகளுக்கு அளித்தது என்றும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும். தண்டனைச் சட்டம் பல கடுமையான தண்டனைகளை விதிக்க வழிசெய்தது. எல்லாச் சட்டத் தொகுதிகளையும் ஒன்றுசேர்த்துப் பார்க்கும்பொழுது, சட்டத்துறையில் நெப்போலியன் சிறந்ததொரு பணியாற்றியுள்ளார் என்பது தெளிவாகிறது. அவருடைய சட்டங்கள் பின்பற்றுவதற்கு சௌகரியமாக இருந்தன. மக்கள் பயன்பெறத் தக்கனவாக அமைந்தன. புரட்சிக் கருத்துகள் பிற நாடுகளில் புகுவதற்கு உதவியாயிருந்தன. இன்று ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் நெப்போலியன் சட்டங்களை

ஆதாரமாகக் கொண்டுள்ளன. இதுவே அவருடைய சாதனையின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகும்.

நெப்போலியன் ஃபிரான்சின் நிதிநிலையைச் சீர்படுத்தினர். அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்கப் பல வழிகளைக் கையாண்டார். வரிகளை வசூல் செய்யும் முறையைத் திருத்தியமைத்தார். சிக்கன முறையைக் கையாண்டு செலவுகளைக் குறைத்தார். ஊழல் மலிந்த அதிகாரிகளைக் கடுந்தண்டனைக்குள்ளாக்கினர். புது வரிகளைச் சுமத்தினர். சில பொருள்களை விற்கும் முழு உரிமையை அரசாங்கமே ஏற்றுக்கொண்டது. தோல்வியடைந்த நாடுகள் அவருடைய படையை வைத்துப் பேணும்படி ஏற்பாடு செய்தார். சீரழிந்த காகித நாணயத்தை ஒழித்தார். 1800-ல் பாங்க் ஆஃப் ஃபிரான்ஸ் (Bank of France) என்னும் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். அதை நடத்துவதற்கு கவர்னர் ஒருவரை அமர்த்தினர். பிறகு அதனுடைய கிளைகளை மூன்று இடங்களில் ஏற்படுத்தினர். வல்லரசர்களைப்போல் பொருளாதாரத்துறையில் மக்கள் முன்னேற்றங் காணவேண்டும் என்று விழைந்தார். அதன் பயனாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். தொழில்துறையில் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்காக ஆலோசனைக் குழுக்களை அமைத்தார். காப்புவரிகளை மீண்டும் புகுத்தினர். நாட்டின் தொழில்களைப் பெருக்குவதற்குக் கழகம் ஒன்று அமைத்தார் (The Society for the Encouragement of National Industries). தொழில்துறையில் ஈடுபட்டிருந்தவர்களில் சிறந்தவர்களைக்கொண்டு இக் கழகம் அமைக்கப்பட்டது. அக் கழகம் சோதனைகள் நடத்தியும், பிரசாரம் செய்தும், கடன் தொகைகளை வழங்கியும், பரிசுப் பொருள்களைக் கொடுத்தும் தொழில்துறையில் முன்னேற்றங்களைச் செய்தது. தொழிற் கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன. கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. கிழங்கிலிருந்து சர்க்கரை செய்யும் தொழிலும், சிகோரி தயாரிக்கும் தொழிலும் தொடங்கப்பட்டன. புதிய இயந்திரங்களைக் கொண்டு பருத்தித் தொழிலை முன்னேற்றுவித்தார். தொழிற்சாலைகள் ஒழுங்காக அமையும்பொருட்டுத் தொழிற் சட்டங்களை ஏற்படுத்தினர். வர்த்தகத்துறையிலும் பெருக்கம் காணப்பட்டது. வர்த்தக சங்கங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. சாலைகளைச் செப்பனிட்டும், விரிவுபடுத்தியும், புதிய பாலங்களைக் கட்டுவித்தும், கால்வாய்களை வெட்டியும், துறைமுகங்களைப் பெரிதாக்கியும் வியாபாரத்தைப் பெருக்கினர். நாட்டு மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் குறைவில்லாமல் வழங்க அங்காடிகளையும், தானியக் களஞ்சியங்களையும், காவற்படையினரின் மேற்பார்வையில் வைத்தார். மெட்ரிக் அளவு முறை வியாபாரத்திற்கு சௌகரியமாகக் காணப்பட்டதால், அம் முறையைத் தொடர்ந்து பின்பற்றுமாறு கட்டளையிட்டார். புரட்சிக்காலத்தில் புகுத்தப்பட்ட ஆண்டுக் குறிப்பேடு ஒழிக்கப்பட்டது. பழைய குறிப்பேடு மீண்டும் உபயோகத்

தில் கொண்டுவரப்பட்டது. விவசாயத்துறையிலும் அவர் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். தானிய வகைகளை மாற்றிப் பயிர் செய்யும் முறையைச் (Crop-rotation) செம்மைப்படுத்தினர். வெளிநாடுகளிலிருந்து சாயங்களை இறக்குமதி செய்வதைத் தடுத்து, நாட்டில் சாயம் தயாரிக்கப் பயன்படும் செடிகளைப் பயிரிடுவதை ஊக்குவித்தார்.

மத விவகாரங்களிலும் மாறுதல் ஏற்படுத்தினர். நெப்போலியன் எந்த மதத்தையும் சார்ந்தவரல்லர். ஆனால், அவர் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கத்தோலிக்க மதத்தில் பற்றுள்ளவர்களாக இருப்பதைக் கண்டார். மேலும், அவர்களது மதப்பற்றும் நாட்டுப் பற்றும் ஒன்ருக இணைந்திருப்பதையும் அறிந்தார். ஆகவே, கத்தோலிக்க மத ஸ்தாபனத்துடன் தான் ஒப்பந்தம் செய்துகொண்டால், தன்னுடைய ஆட்சி பலம் பெற்று விளங்கும் என்று கருதினர். எனவே, அவர் கத்தோலிக்க மதத்தைச் சட்டப்படி நிறுவப்பட்ட ஸ்தாபனமாக்க முடிவு செய்தார். 1801-ல் போப்புடன் உடன்படிக்கை (Concordat) செய்துகொண்டார். கத்தோலிக்க மதம் சட்டப்படி நிறுவப்பட்ட மத ஸ்தாபனமாக ஏற்படுத்தப்பட்டது. ஆனல், ஏனைய மதங்களும் தொடர்ந்து இருக்க அனுமதி வழங்கப்பட்டது. மதகுருமார்களை நியமிப்பதில் அரசாங்கம் செல்வாக்குப் பெறவும், அவர்களுக்கு அரசாங்கமே ஊதியம் அளிக்கவும், மத ஸ்தாபனம் அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டு இயங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனல், புரட்சியின்போது பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளை மீண்டும் மத ஸ்தாபனத்திற்குத் திருப்பிக் கொடுக்க முயற்சி செய்யவில்லை. 1801-ல் ஏற்படுத்தப்பட்ட அந்த ஒப்பந்தம் 1905 வரை நடைமுறையில் இருந்தது. அதே நேரத்தில் அவருடைய மத விவகாரங்களில் அதிகாரத்தைப் பெருக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஃபிரஞ்சு மத ஸ்தாபனத்தில் போப்புக்கு இருந்த செல்வாக்குக் குறைக்கப்பட்டது. தன்னுடைய அனுமதியின்றிப் போப்பின் கட்டளைகளை ஃபிரான்சில் நிறைவேற்ற முடியாது என்றும், மத ஸ்தாபனத்தின் கூட்டங்கள் நடைபெற முடியாது என்றும், மதகுருமார்கள் நாட்டைவிட்டு வெளியே போகலாகாது என்றும் அறிவித்தார். அவ்வாறே பிராடஸ்டன்டு மத ஸ்தாபனங்களும், யூதர்களின் மத ஸ்தாபனங்களும் அவருடைய அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டன. அவருடைய மதத்தைப்பற்றிய சில ஏற்பாடுகள் பலத்த எதிர்ப்புக்குள்ளாயின. ஆனல், அவர் கத்தோலிக்க மத ஸ்தாபனத்தை மீண்டும் சட்டப்படி நிறுவப்பட்ட ஸ்தாபனமாக ஏற்படுத்தி அரசாங்கத்தின் கைகளைப் பலப்படுத்தினர் என்பதும், மதத்துறையில் ஒற்றுமையை ஏற்படுத்தினர் என்பதும் மறுக்கமுடியாத உண்மைகளேயாகும்.[1]

[1] A. J. Grant, 'A History of Europe—The Story of the Last Five Centuries', p. 690. (A. J. கிரான்ட், 'ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டுகளின் வரலாறு'.)

கல்வித்துறையிலே பல சீரிய நற்பணிகளை ஆற்றியுள்ளார். 1802-ல் கல்விக்கூடங்களை நான்கு பிரிவுகளாக்கினர்—ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், லைசீ (Lycees) எனப்படும் அரசாங்கப் பள்ளிகள், விஞ்ஞானம், தொழிற்கலைகள் ஆகியவற்றைக் கற்றுக்கொடுக்கும் சிறப்புப் பள்ளிகள். பல்கலைக்கழகம் ஒன்றும் பெருந்தலைவரின் (Grand Master)கீழ் நிறுவப்பட்டது. அதற்கு மாகாணங்களிலுள்ள கல்வி ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டது. ஆட்சிமுறை ஒருவர் கையில் கொண்டு வரப்பட்டது போலவே கல்வித்துறையும் ஒரே ஸ்தாபனத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. எல்லாக் கல்வி நிலையங்களும் கதீதோலிக்க மதக் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட கல்வியைப் புகட்டுமாறு கட்டாயப்படுத்தப்பட்டன. 1795-ல் நிறுவப்பட்ட கல்வி-கலை ஆய்வு நிறுவனத்திற்கு (Institute de France) உதவி செய்தார். அங்கு அறநெறி, அரசியல் பாடங்களைக் கற்றுத்தருவதை நிறுத்தினர். அரும்பெருங் காட்சிமனைகள் (Museums) பலவற்றை ஏற்படுத்தினர். இத்தாலியிலிருந்து கொண்டுவரப்பட்ட காட்சிப் பொருள்களைக் கொண்டு இச் சாலைகளைச் செம்மைப்படுத்தினர். பெருஞ் சாலைகளைக் கொண்டு பாரிஸ் நகரத்தை அழகுபடுத்தினர். இதுவரை நாம் கவனித்துவந்த அவருடைய நடவடிக்கைகள் ஃபிரான்சுக்கு மட்டு மல்லாமல் ஏனைய நாடுகளுக்கும் பயன் கொடுத்தன. ஆகவே, அவரை அரசியல்மேதை என்று கூறுவது முறையேயாகும். இனி, அவருடைய வெற்றிப் பெருமைகளைக் கவனிப்போம்.

இராணுவப் பள்ளியில் பயிற்சிபெற்ற பிறகு நெப்போலியன் படைத்துறையில் சாதாரண மேலாளராகப் பணியாற்றத் தொடங்கினர் என்றும், பிறகு படிப்படியாக உயர்ந்து பேரரசரானர் என்றும் முன்னரே குறிப்பிட்டோம். இப்பொழுது பேரரசராக இருந்து அவர் செய்த போர் ஏற்பாடுகளையும், அவைகளின் விளைவுகளையும் கவனிப் போம். 1803-ல் நெப்போலியன் மறுபடியும் போர் தொடங்கவேண்டிய தாயிற்று. ஆமியேன் சமாதானம் பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடு களுக்கு இடையே ஏற்பட்டிருந்த பகையுணர்ச்சியை அறவே ஒழிக்க வழி தேடவில்லை. அதற்குப் பதிலாக அவைகளிடையே இருந்த வேற்றுமை அதிகமாக வளர்ந்தது. ஃபிரான்சு தன்னுடைய செல்வாக் கைப் பெருக்குவதில் நாட்டம் செலுத்தியிருந்தது. சமாதானத்திற்குப் பிறகு ஃபிரான்சு பல நாடுகளைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தது. அதனுடைய படைகள் கடல் கடந்து சென்று ஃபிரான் சின் செல்வாக்கைப் பெருக்கியது. இந்தியாவிற்குத் தூதுவரொருவரை அனுப்பி, ஃபிரான்சின் செல்வாக்கை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கான வழிகளை ஆராயுமாறு பணித்திருந்தது. பிரிட்டனின் பாதுகாப்பு பாதிக்கப்படும் வழிகளில் ஃபிரஞ்சு ஆதிக்கம் பெல்ஜியத்தில்

ஏற்படுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய ஏற்பாடுகள் அனைத்தும், ஃபிரான்சின் ஆதிக்கக் கொள்கையைத் தெளிவாக எடுத்துக்காட்டின. இக் கொள்கையின் விளைவாக வல்லமைச் சமநிலை பாதிக்கப்படும் என்று பிரிட்டன் உணர்ந்தது. ஆகவே, அந்த நிலை ஏற்படாமல் தடுக்க ஏற்பாடுகள் செய்ய அது முனைந்தது.

நெப்போலியனுடைய வேறொரு செய்கையும் பிரிட்டனுடைய மனக் கசப்பை அதிகரிக்கச் செய்தது. சமாதானம் ஏற்பட்ட பிறகு பிரிட்டன் ஃபிரான்சுடன் வியாபாரம்பற்றிய ஒப்பந்தம் ஏற்படுத்த வழி பிறக்கும் என்று கருதியது. ஆனால், அதற்கு மாறாக பிரிட்டிஷ் கப்பல்களும், வியாபாரப் பொருள்களும் ஃபிரஞ்சுத் துறைமுகங்களினின்றும் வெளியேற்றப்பட்டன. அதே நேரத்தில் நெப்போலியனும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது கோபங் கொள்ளத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. பிரிட்டனில் பல செய்தித்தாள்கள் நெப்போலியனைக் கொடுங்கோலர் என்றும், மக்கள் உரிமையின் பகைவர் என்றும் விவரித்துவந்தன. நெப்போலியன் அத்தகைய செய்தித்தாள்களைத் தடை செய்யுமாறு வேண்டினார். மேலும், ஃபிரான்சின் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும், புரட்சியின் விரோதிகளுக்கும் பிரிட்டன் புகலிடம் தந்தது. நெப்போலியன் அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று வேண்டினார். பிரிட்டன் இவ் வேண்டுகோள்களை நிராகரித்தது.

போருக்கு உடனடியான காரணம் மால்டாவினின்றும் பிரிட்டன் வெளியேறாததேயாகும். ஆமியேன் சமாதானம் பிரிட்டிஷாரை வெளியேறுமாறு கட்டளையிட்டது. அத் தீவு போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. ஆகவே, அதைவிட்டு வெளியேற பிரிட்டனுக்கு மனமில்லை. எனவே, ஆமியேன் சமாதானம் விதித்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை என்று சாக்குச் சொல்லி மால்டாவைத் தொடர்ந்து தன்னிடம் வைத்திருந்தது.

1803-ல் போர் தொடங்கியது. ஸ்பெயின் ஃபிரான்சுடன் சேரக் கட்டாயப்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் பிரதமரான வில்லியம் பிட் (இளையவர்) தம்முடைய தந்தையின் வழியைப் பின்பற்றி நேசநாடுகளின் கூட்டிணைவு (Third Coalition) ஒன்றை 1805-ல் ஏற்படுத்தினார். இதில் பிரிட்டன், ஆஸ்திரியா, ருஷ்யா, ஸ்வீடன், நேபில்ஸ் ஆகிய நாடுகள் சேர்ந்துகொண்டன. இக் கூட்டிணைவு, ஃபிரான்சின் ஆதிக்கம் பிற இடங்களினின்றும் அகற்றப்பட்டு தனக்குரிய எல்லைக்குள்மட்டும் பரவியிருப்பதற்கு வேண்டி வழி செய்தலைப் பெருநோக்கமாகக் கொண்டிருந்தது.

போர் தொடங்கியவுடன் பிரிட்டன்மீது படையெடுத்து அந் நாட்டை அழிப்பதையே ஃபிரான்சு தன்னுடைய முக்கிய நோக்க மாகக் கொண்டிருந்தது. ஆகவே, அதனுடைய படைகள் பூலோன் (Boulogne) என்னுமிடத்தில் சேகரிக்கப்பட்டன. அப் படைகளை இங்கிலிஷ் கால்வாயைக் கடந்து இங்கிலாந்துக்குக் கொண்டுசெல்லக் கப்பல்களைத் தயாரித்தார். அக் கப்பல்களுக்குத் தகுந்த பாதுகாப் பளிக்கப் பல இடங்களில் சிதறிக் கிடக்கும் ஃபிரஞ்சுக் கடற்படையை இங்கிலிஷ் கால்வாய்க்குக் கொண்டுவரவும், அதே நேரத்தில் அக் கால் வாயினைப் பாதுகாத்திருந்த பிரிட்டிஷ் கடற்படையை அங்கிருந்து வெளியேற்றவும் ஏற்பாடுகள் செய்தார். பிரிட்டன் இவ்வேற்பாடுகளை அறிந்து ஃபிரஞ்சுக் கப்பற்படை ஒன்றுகச் சேர்ந்து இங்கிலிஷ் கால் வாயில் வரவொட்டாமல் தடுக்க ஏற்பாடுகள் செய்தது. நெப்போலியன் கட்டளையின்பேரில் ஃபிரஞ்சு, ஸ்பானியக் கப்பற்படைகள் முற்றுகை யினின்றும் விடுவித்துக்கொண்டு மேற்கிந்தியத் தீவுகளை நாடிச் சென்றன. பிரிட்டிஷ் கப்பற்படை அவைகளைத் தொடர்ந்தால், உடனே இங்கிலிஷ் கால்வாயை நோக்கி வந்து ஃபிரஞ்சு சேனை பிரிட்டனுக்குச் செல்ல உதவுமாறு திட்டமிடப்பட்டது. எதிர்பார்த்தது போலவே பிரிட்டிஷார் மேற்கிந்தியத் தீவுகளைக் காப்பாற்ற அவைகளைப் பின்தொடர்ந்தனர். திடீரெனப் பகைவரின் கப்பல்கள் பார்வை யினின்றும் மறைந்துவிடவே, ஃபிரஞ்சுக்காரர்களின் திட்டங்களை அவர்கள் புரிந்துகொண்டுவிட்டனர். உடனே நெல்சன் துரிதமாகச் செல்லும் கப்பல் ஒன்றைப் பகைவர்களுடைய கப்பல்களைக் கடந்து பிரிட்டிஷ் கப்பற்படைத்துறைக்குப் பகைவரின் திட்டத்தை அறிவிக்க ஏற்பாடு செய்து, பிறகு பகைவரைப் பின்தொடர்ந்தார். இவ்வாறு முன்னரே எச்சரிக்கப்பட்டதால், பிரிட்டிஷ் கப்பற்படை எதிரியின் திட்டத்தை அழித்துவிட்டது. (இவ்வாறுக பிரிட்டிஷ் கப்பற்படை பிரிட்டனைக் காப்பாற்றிவிட்டது.)

பிரிட்டனை இனிப் படையெடுத்துக் கைப்பற்ற முடியாது என்று அறிந்த நெப்போலியன், அதை ஒழிக்க வேறெரு திட்டத்தை உருவாக் கினர். பிரிட்டனை அதனுடைய நேசநாடுகளினின்றும் பிரித்து அதை அழித்துவிட வேண்டும் என்பதே அத் திட்டத்தின் அடிப்படைக் கருத் தாகும். இதை நிறைவேற்ற முதலில் ஆஸ்திரியாவை நோக்கிப் புறப் படுமாறு பூலோனிலிருந்த அவரது படைகளுக்குக் கட்டளையிட்டார். ஜெர்மனியில் புகுந்த ஃபிரஞ்சுப் படை அல்ம் (Ulm) என்னு மிடத்தில் ஆஸ்திரியாவின் படையைத் தோற்கடித்தது. இவ் வெற்றி நெப்போலியன் வியன்னவைக் கைப்பற்றுவதற்கு உதவியது. தற்கால வரலாற்றில் வியன்ன பகைவர்களின் கையில் சிக்கியது இதுவே முதல் தடவையாகும். பேரரசர் தலைநகரத்தினின்றும் ஓடி, ருஷ்யாவின் உதவியை நாடினர்.

இதற்கிடையில் பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளின் கப்பற் படைகளுக்கு இடையே டிராஃபால்கர் (Trafalgar) என்னுமிடத்தில் போர் நடந்தது. நெல்சன் பிரிட்டனின் வெற்றிக்குக் காரணமாயிருந்தார். இவ் வெற்றி பிரிட்டனின் கடலாதிக்கத்தினை நிலைநாட்டியது. ருஷ்யாவின் உதவி நாடிச் சென்ற பேரரசர், ருஷ்யாவின் உதவியுடன் போரிட்டு வியன்னாவைக் கைப்பற்ற முயன்றார். ஆனால், அம் முயற்சியை நெப்போலியன் அவுஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்னுமிடத்தில் பெற்ற வெற்றியைக் கொண்டு முறியடித்தார். அதனால் ஆஸ்திரியா நெப்போலியனுடன் பிரெஸ்பர்க் உடன்படிக்கை (Treaty of Pressburg) செய்துகொண்டது. ஆஸ்திரியா பல பகுதிகளை இழந்தது.

இதன் பின்னர் நெப்போலியன் ஜெர்மனியை நோக்கித் தன் கவனத்தைத் திருப்பினார். பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த தெய்வீக ரோமானியப் பேரரசை ஒழித்தார். பல சிறிய நாடுகள் அழிக்கப்பட்டன. பல நாடுகள் ஒன்றுசேர்ந்து ரைன் நதிப்பிரதேச நாடுகளின் கூட்டு (Confederation of the Rhine) அமைப்பை ஏற்படுத்தினார். அக் கூட்டமைப்பு ஃபிரான்சுக்குக் கப்பம் செலுத்தி வந்தது.

பிறகு நெப்போலியன் பிரஷ்யாவின் வலிமையை அடக்கி, அதனைத் தன்னுடைய பக்கத்தில் சேர்த்துக்கொள்ள முனைந்தார். போர் 1803-ல் ஏற்பட்டபோது பிரஷ்யா நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றி வந்தது. ஆனால், பலவிதங்களில் நெப்போலியன் பிரஷ்யாவின் பகைமையைத் தேடிக்கொண்டார். மேற்கு ஜெர்மனி நாடுகளை ஒன்று சேர்த்து பிரஷ்யாவிற்கு பலத்த போட்டி நாடுகளின் கூட்டமைப்பை உண்டாக்கினார். ஆஸ்திரியாவிற்குப் பிறகு பிரஷ்யா தெய்வீக ரோமானியப் பேரரசுப் பட்டத்தைப் பெற ஏற்பாடு செய்வதாக அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. பிரஷ்யா ஹனோவர் நாட்டைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள விரும்பியது. ஆனால், நெப்போலியன் ஹனோவரைப் பிரஷ்யாவுடன் சேர்த்துக்கொள்ள உதவி புரியவில்லை. அதனால் இரு நாடுகளுக்கும் போர் மூண்டது. ஏனா (Jena) என்னுமிடத்திலும் பிரஷ்யா தோல்வியுற்றது. பெர்லின் நெப்போலியன் கைவசமாயிற்று. பிரஷ்யா ருஷ்யாவுடன் ஏற்படுத்திக்கொண்ட நேசவுறவை விட்டுவிட மறுத்ததால், நெப்போலியன் ருஷ்யாவின்மீது படையெடுத்தார். 1807-ல் ஃபிரீட்லாந்து (Friedland) என்னுமிடத்தில் ருஷ்யாவை வென்றார். அதைத் தொடர்ந்து ருஷ்யாவும் ஃபிரான்சும் டில்சிட் உடன்படிக்கை (Treaty of Tilsit) செய்துகொண்டன. மேற்கு ஜெர்மனியில் பிரஷ்யாவிற்குச் சொந்தமான பகுதிகளை பிரஷ்யா இழக்க நேர்ந்தது. அவைகளையும் ஹனோவரையும் சேர்த்து ‘ வெஸ்ட்பேலியா ’ என்னும் அரசை நெப்போலியன் ஏற்படுத்

தினர். நெப்போலியனுடைய சகோதரர் ஜெரோம் போனபார்ட் (Jerome Bonaparte) அதன் அரசராக நியமிக்கப்பட்டார். பிரஷ்யாவிற்குச் சொந்தமான பிரஷ்யப் போலந்துடன் ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான காலிஷியாவை (Galicia) இணைத்து, 'வார்சா கோமகனுடைய பெரும் ஆட்சிப் பகுதி' (Grand Duchy of Warsaw) என்ற பெயர் கொடுத்தார். நெப்போலியனுடன் சேர்ந்திருந்த சாக்சனி அரசர் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். ருஷ்யா, பிரிட்டன்மீது நெப்போலியன் தொடங்கப்போகும் புதுவிதமான போரில், அவருக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்தது. நெப்போலியன் ருஷ்யாவின் நாடு பிடிக்கும் நடவடிக்கைகளுக்கு உதவுவதாக வாக்களித்தார்.

மூன்றாவது நேச நாடுகளின் கூட்டிணைவு நெப்போலியனுடைய போர் ஏற்பாடுகளினால் அழிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும், பிரிட்டன் அடி பணியவில்லை. ஆகவே, அதை அழிக்கப் புதிய திட்டம் ஒன்றைத் தீட்டினார். அதற்கு 'ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம்' (Continental System) என்று பெயர் வழங்கலாயிற்று. பிரிட்டன் அங்காடிகள் நடத்தும் மக்களைக்கொண்ட நாடு என்பதை நன்கு உணர்ந்திருந்தார். அவர்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்த பொருள்களையும், குடியேற்ற நாடுகளிலிருந்து கொண்டுவந்த பொருள்களையும் ஐரோப்பாவில் விற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்திவந்தார்கள். ஐரோப்பாவின் பெரும்பகுதியில் அவர் பெற்றிருந்த செல்வாக்கைக் கொண்டு பிரிட்டிஷாரை ஐரோப்பாவில் வியாபாரம் செய்யவொட்டாது தடுத்துவிட்டால் தங்கள் தொழிற்சாலைகளை அவர்கள் மூட நேரும் என்றும், அதனால் அவர்கள் நாட்டில் வேலையின்மை ஏற்படும் என்றும், அதன் விளைவாக அந் நாட்டில் பட்டினி ஏற்படும் என்றும், பட்டினியால் வாடும் மக்கள் தங்களுடைய அரசாங்கத்தை நெப்போலியனுக்கு அடி பணிந்துவிடுமாறு கட்டாயப்படுத்துவார்கள் என்றும் எண்ணினார். அதே நேரத்தில் நெப்போலியன் அவர்கள் நாட்டுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டும் என்று எண்ணினார். அவ்வாறு செய்தால் அவர்களுடைய கையிருப்பிலுள்ள தங்க நாணயங்கள் குறையும் என்றும், அதனால் அந் நாட்டின் நிதிநிலை வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் எண்ணினார். இந்த எண்ணங்கள் நிறைவேற வேண்டுமாயின், ஐரோப்பா முழுவதும் அவரது திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் அவர் உணர்ந்திருந்தார்.

1806-ல் ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முதல் நடவடிக்கையை மேற்கொண்டார். அவ்வாண்டில் பெர்லின் கட்டளைகளைப் (Berlin Decrees) பிறப்பித்தார். பிரிட்டன் முற்றுகையிடப்பட்டுள்ளது என்றும், அந் நாட்டின் துறைமுகங்களுக்குச் சென்று வரும் கப்பல்களும், பிரிட்டிஷார்களுடைய வியாபாரப் பொருள்களும்

பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவித்தார். நெப்போலியன், தான் மேற்கொண்டிருக்கும் பொருளாதாரத் திட்டத்தை பிரிட்டனும் மேற்கொள்ள முடியும் என்பதை அறியவில்லை. 1807-ல் பிரிட்டன் அவர் முறையையே பின்பற்ற ஆரம்பித்தது. ஃபிரஞ்சுத் துறைமுகங்களுடனும், ஃபிரான்சின் நேச நாடுகளின் துறைமுகங்களுடனும் யாரும் வியாபாரம் செய்யக்கூடாது என்ற கட்டளை (Order-in-Council) பிறப்பித்தது. அதைத் தொடர்ந்து பிரிட்டன் நடுநிலை நாடுகளின் கப்பல்கள் எல்லாம் பிரிட்டன் துறைமுகங்களுக்குச் சென்று, பிறகு மற்ற இடங்களுக்குச் செல்ல அவைகளுக்குச் சலுகைகள் காட்டியது. ஐரோப்பியர்கள் பிரிட்டிஷாரைத் தவிர வேறொருவரிடத்தில் வியாபாரம் செய்வதைத் தடுப்பதே பிரிட்டனின் நோக்கமாக இருந்தது. 1807-ல் நெப்போலியன் பொருளாதாரத் திட்டத்தின் அடுத்த பகுதியைத் தொடங்கினார். அவ்வாண்டில் மிலான் கட்டளையைப் பிறப்பித்து அத் திட்டத்தை பலப்படுத்தினார்.

வெகு விரைவில் ஐரோப்பியர்கள் இத் திட்டத்தினால் விளைந்த இன்னல்களை அனுபவிக்கத் தொடங்கினார்கள். அவர்களுக்குத் தேவையான பொருள்களை பிரிட்டனிடமிருந்து வாங்குவதை நெப்போலியனும், பிறநாட்டினரிடமிருந்து பெறுவதை பிரிட்டனும் தடைசெய்வதை உணர்ந்தார்கள். ஆகவே, அவர்கள் ஒன்று அப் பொருள்கள் இல்லாமல் வாழவேண்டும் அல்லது அப் பொருள்களை பிரிட்டனிடமிருந்து பெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. ஃபிரஞ்சுக்காரர்களுக்காக அவர்கள் அப் பொருள்களின்றி வாழ விரும்பவில்லை. எனவே, நெப்போலியன் அப் பொருள்களை பிரிட்டனிடமிருந்து வாங்குவதைத் தடை செய்ததால், அவர்கள் கள்ளக் கடத்தல் முறையைக் கையாள நேர்ந்தது. பிரிட்டிஷார் பொருள்களை விற்க மிகுந்த ஆர்வத்துடன் இருந்தாலும், இரகசியமாக அப்பொருள்கள் ஐரோப்பாவிற்குள் நுழைந்தன. பிரிட்டிஷார் ஹேலிகோலாந்து, ஜிப்ரால்டர், மால்டா, ஐயோனியன் தீவு ஆகிய இடங்களில் கள்ள வாணிப ஸ்தலங்களை ஏற்படுத்தினார்கள். அதன் விளைவாக ஐரோப்பா முழுவதும் பிரிட்டனில் செய்யப்பட்ட பொருள்கள் குவிந்தன.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம் தோல்வியுறுவதைக் கண்ட நெப்போலியன், ஐரோப்பியர்கள் இப் பொருள்களை வாங்காதிருக்கும்படி செய்ய அதிகமான காப்புவரிகளை அவற்றின்மேல் சுமத்தினார். அப்படியிருந்தும், ஐரோப்பியர்கள் தொடர்ந்து அப் பொருள்களைப் பயன்படுத்திவந்தனர். ஆகவே, போன்டேனிப்ளியூ கட்டளையைப் (Fontaineblew Decree) பிறப்பித்தார். பிரிட்டிஷாருடைய வியாபாரப் பொருள்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். இறுதியில் அவர் திட்டம் வெற்றிபெறவேண்டுமெனில், ஐரோப்பாவின் கடற்கரைப்

பிரதேசம் முழுவதையும் தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்றும் எண்ணினார். ஆகவே, அவர் திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களின் நாடுகளைக் கைப்பற்ற முனைந்தார். போப்பினுடைய துறைமுகங்களும், போர்ச்சுகல், ஸ்பெயின், டால்மேஷியன் கடற்கரைப் பகுதி, ஹாலந்து, ஜெர்மனியின் கடற்கரைப் பகுதி ஆகியவைகளைத் தன் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். அதனால் பல இடங்களில் நெப்போலியனுக்கு எதிராக ஒரு புதிய பகைவன் தோன்றினான். அதுவே தேசிய உணர்ச்சியாகும். இதுவரை நெப்போலியன் மன்னர்களின் சேனைகளுடன் போரிட்டு வெற்றி பெற்றார். இனி ஆயுதம் தாங்கிய மக்களுடன் போர்புரிய வேண்டியதாயிற்று. இதுவே அவருடைய அழிவிற்கு முக்கியக் காரணமாகும்.

நெப்போலியனுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது, பிரிட்டன் தன்னுடைய கடல் வலிமையைப் பயன்படுத்தி அம் மக்களுக்குத் தக்க உதவி செய்து, அவர்களுடைய கிளர்ச்சிகளை பலப்படுத்தியது. ஸ்பானியர்களுக்கு பிரிட்டன் அளித்த உதவி அவர்களுடைய வெற்றிக்கு ஒரு காரணமாகும்.

பிரிட்டன் ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தை மற்றொரு வழியிலும் அழித்தது. ஐரோப்பாவிற்குப் பொருள்களை அனுப்பக்கூடிய ஃபிரஞ்சுக் குடியேற்ற நாடுகளையும், அதன் அதிகாரத்திற்குட்பட்ட நாடுகளின் குடியேற்ற நாடுகளையும் பிரிட்டன் தன்னுடைய கப்பற் படையின் பலத்தைக்கொண்டு கைப்பற்றியது. அதனால் மற்றொரு விளைவும் ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்கப் புதிய சந்தைகளை பிரிட்டன் பெறலாயிற்று. அதனால் பிரிட்டனின் கஷ்டங்கள் ஓரளவு குறைந்தன.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம் பிரிட்டிஷாருக்குப் பல துன்பங்களை விளைவித்தது. நாட்டில் வேலையின்மை பெருகியது. வியாபாரம் தடைப்பட்டதால், மக்கள் பொருளாதார நிலை பாதிக்கப் பட்டது. நாட்டில் பொருளக முறிவுகள் ஏற்பட்டன. அதேநேரத்தில் இக் காலத்தில் ஃபிரான்சு வளம்பெற்று விளங்கியது. விவசாயம் பெருகியது. கிழங்கிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்யும் தொழில் வளர்ந்தது. நீலச்சாயம் செய்ய ஆரம்பித்தார்கள். அதுவே நெப்போலியனுடைய அழிவிற்குப் பெருங்காரணமாகவும் அமைந்து விட்டது. அத் திட்டம் தோல்வியுறக் காரணமாயிருந்தது பிரிட்டிஷ் கப்பற்படை என்று கூறுவது மிகையாகாது. ஃபிரஞ்சுக் கப்பற்படை வலிவிழந்த காரணத்தால் பிரிட்டனின் வியாபாரத்தைத் தடுக்கமுடியவில்லை. மேலும், நெப்போலியன் டென்மார்க்கினுடைய கப்பற் படையைக் கைப்பற்ற யோசித்துக்கொண்டிருக்கையில், பிரிட்டன்

மூந்திக்கொண்டது. பிரிட்டன், டேனியர்களை, அவர்களுடைய கப்பற் படையைப் போர் முடியும்வரை பிரிட்டிஷ்காரர்களின்கீழ் வைத்திருக்க யோசனை கூறியது. டேனியர்கள் மறுக்கவே, 1807-ல் கோபன் ஹேகன் பிரிட்டிஷ்காரர்களால் தாக்கப்பட்டது. அவர்களுடைய கப்பற்படை பிரிட்டனுக்குப் பணிந்தது. ஆகவே, கப்பற்படைத் துணையின்றிப் பொருளாதாரத் திட்டத்தில் வெற்றிகாண முனைந்த நெப்போலியன் முடிவில் தோல்வியுற்றார்.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தை எதிர்த்துப் போராடிய முதல் நாடு போர்ச்சுகல் ஆகும். ஆகவே, அதனை அடக்கவேண்டும் என்று எண்ணினார். அதோடு ஸ்பெயினையும் தன்னுடைய ஆதிக்கத் துக்கு உட்படுத்த விழைந்தார். மேலும், அங்கு ஆட்சிபுரியும் பூர்போன் குலத்தவரை ஒழித்துவிடவேண்டும் என்றும் எண்ணினார். ஆகவே, முதலில் ஸ்பெயினுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன் படி ஃபிரஞ்சுப் படைகளை ஸ்பெயின் வழியாக போர்ச்சுகல் செல்ல ஸ்பெயின் அனுமதி வழங்கிற்று. அதற்குப் பதிலாக போர்ச்சுகலை இரு நாடுகளும் பகிர்ந்துகொள்ள ஃபிரான்சு இசைந்தது. போர்ச்சு கலின் கப்பற்படையையும், அதனுடைய கஜானாவிலுள்ள பொருளையும் கைப்பற்ற ஃபிரஞ்சுப் படை போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனை நோக்கிச் சென்றது. அதற்குள் போர்ச்சுகலின் அரசர், கப்பற்படை, பொருட்குவை ஆகியவற்றுடன் தனது நாட்டைவிட்டுச் சென்று விட்டார். போர்ச்சுகல் ஃபிரான்சு வசமாயிற்று. அதே நேரத்தில் போர்ச்சுகலைக் கைப்பற்றுவதைக் காரணங்காட்டி ஃபிரஞ்சுப் படைகள் ஸ்பெயினில் குவிக்கப்பட்டன. ஸ்பெயின் அரசர் ஆறுவது சார்லஸ் இதைக் கண்டு மனக்கசப்படைந்தார். ஆகவே, போருக்கான ஏற்பாடு களைச் செய்யலானார். அந் நேரத்தில் அவர் மகன் பெர்டினுண்டு அவரது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தார். நெப்போலியன் வெகு தந்திரமாகத் தந்தையையும் மகனையும் ஃபிரான்சுக்கு வரவழைத்து, இருவரையும் நாட்டு அரசுரிமையை விட்டுக்கொடுக்குமாறு கட்டளை யிட்டார். காலியான அரசபீடத்தில் அப்பொழுது தெற்கு இத்தாலியை ஆண்டுவந்த அவரது சகோதரர் ஜோசஃப் போனபார்ட் என்பவரை அமர்த்தினார். இவ்வாறாக ஸ்பெயினிலும் அவரது செல்வாக்கு ஏற்படுத் தப்பட்டது. ஜோசஃப் சிறந்த முறையில் ஆட்சியை நடத்திவந்தார். ஆனால், ஸ்பானியர்கள் தேசீய உணர்ச்சி வசப்பட்டிருந்ததால், நல்ல ஆட்சியைவிட சுய ஆட்சியைத்தான் விரும்பினார்கள். ஆகவே, நெப்போலியனைத் தங்களது சுதந்திரத்தின் விரோதியாகக் கருதினர். எல்லா இடங்களிலும் மக்கள் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர். 1808-ல் பேய்லென் (Baylen) என்னும் இடத்தில் ஃபிரஞ்சுப் படை அடிபணிந் தது. ஜோசஃப், ஸ்பெயினின் தலைநகரான மாட்ரிடை விட்டு (Madrid) வெளியேறினார். இந் நிகழ்ச்சிகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த

பிரிட்டன், ஸ்பெயின் மக்கள் தன்னுடைய உதவியைக் கோரியபொழுது, உடனடியாக ஆர்தர் வெல்லஸ்லி (Arthur Wellesley) தலைமையின் கீழ் சேனையொன்றைப் போர்ச்சுகலுக்கு அனுப்பியது. இவ்வாறாக தீபகற்பப் போர் (Peninsular War) தொடங்கியது. பிரிட்டிஷ் போர்ச்சுகலுக்கு அனுப்பப்பட்ட படை விமீரோ (Vimiero) என்னும் இடத்தில் ஃபிரஞ்சுப் படையைத் தோற்கடித்தது. பிரிட்டிஷார் ஃபிரஞ்சுக்காரர்களுடன் சின்ட்ரா ஒப்பந்தம் (Convention of Cintra) செய்துகொண்டனர். அதன்படி, ஃபிரஞ்சுக்காரர்கள் போர்ச்சுகலினின்றும் யாதோர் இடையூறும் இன்றி வெளியேற அனுமதிக்கப்பட்டார்கள். அதனால் கோபமுற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் சர் ஜான் மூர் (Sir John Moore) என்பவரைப் படைத்தலைவராக அமர்த்தியது. இதற்கிடையில் நெப்போலியனே ஸ்பெயினுக்குப் படை நடத்திச் சென்றார். மாட்ரிட்டில் ஜோசப்ஃபை மறுபடியும் அமர்த்தினார். நெப்போலியன் தன்னுடைய சேனையின் முழு பலத்தைக்கொண்டு ஸ்பானியர்களைத் தாக்காதிருக்கும் வண்ணம், மூர் ஸ்பெயினுக்குள் புகுந்து, அச் சேனையின் கவனத்தைத் தன்பால் இழுத்தார். ஃபிரஞ்சு சேனை அவரை நோக்கி முன்னேறும் போது அவர் பின்வாங்கினார். கொருன்னா (Corunna) என்னும் இடத்தில் அவரது சேனை ஆங்கிலேயக் கப்பல்களின் துணைகொண்டு வெளியேறின. மூர் திட்டம் வெற்றியடைந்தது. நெப்போலியனும் ஆஸ்திரியாவுடன் போர்புரிய ஸ்பெயினைவிட்டுச் செல்ல நேர்ந்தது. அதன் பிறகு ஸ்பெயினுக்கு அவர் வரவேயில்லை. போர் ஏற்பாடுகளை யெல்லாம் அவருடைய சேனைத்தலைவர்களே மேற்கொண்டனர்.

மூர் கொருன்னா சண்டையில் இறந்துபோகவே, வெல்லஸ்லி மீண்டும் தலைமைப் பதவியைப் பெற்றார். ஸ்பெயினில் புகுந்து தலவேரா (Talavera) என்னுமிடத்தில் ஃபிரஞ்சுப் படையைத் தோற்கடித்தார். ஆனாலும், அவர் பின்வாங்க நேர்ந்தது. அவரை ஃபிரஞ்சுக்காரர்கள் பின்பற்றவே, லிஸ்பனுக்கு அருகே மறைகுழிகளை வெட்டி (The Lines of Torres Vedias) அங்கிருந்து போர்புரியலாயினர். பிரிட்டிஷ்காரர்களை வெளியேற்றும் நோக்கத்துடன் பின்தொடர்ந்த ஃபிரஞ்சுப் படை இக் குழிகளைக் கடக்கமுடியாததாலும், போதிய உணவு இல்லாததாலும் திரும்ப நேர்ந்தது. அதன் பிறகு ஃபிரஞ்சுக்காரர்கள் போர்ச்சுகலுக்குள் நுழையவேயில்லை.

இதற்கிடையில் ஸ்பானியர்கள் ஃபிரஞ்சுக்காரர்களுடன் தொடர்ந்து கொரில்லாச் சண்டை முறையைக் கையாண்டு தொல்லை கொடுத்து வந்தார்கள். 'வெல்லிங்டன் பிரபு' என்ற பட்டம்பெற்ற ஆர்தர் வெல்லஸ்லி 1812-ல் ஸ்பெயினுக்குள் புகுந்தார். பாட்ஜாஸ் (Badjoz), சியூடாட் ராட்ரிகோ (Ciudad Rodrigo) ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றி, சலமான்காவை (Salamanca) நோக்கி முன்னேறினர்.

அங்குப் பெற்ற வெற்றியின் பயனாக அவர் மாட்ரிட்டைக் கைப்பற்றினார். ஜோசப் அங்கிருந்து ஓடிவிட்டார். அவ்வாறிருந்தும் குளிர்காலம் தொடங்கவே, வெல்லிங்டன் போர்ச்சுகல் திரும்பினார். 1813-ல் மறுபடியும் ஸ்பெயினுக்குள் புகுந்தார். ஃபிரஞ்சுப் படையை விட்டோரியா (Vittoria) என்னுமிடத்தில் தோற்கடித்து, ஸ்பெயினிலிருந்து அதனைத் துரத்தியடித்தார். பிறகு பிரனீஸ் மலைத்தொடரைக் கடந்து ஃபிரான்சிலேயே போர்புரியத் தொடங்கினார். ஒர்தேஸ் (Orthez) என்னும் இடத்தில் அவர் வெற்றிபெற்றார். பிறகு டூலூசைக் (Toulouse) கைப்பற்றினார். அதற்கு முந்தின நாள் நெப்போலியன் எல்லா இடங்களிலும் தோற்கடிக்கப்பட்டதால், பதவியினின்றும் விலகினார். தீபகற்பப் போரும் முடிவுற்றது.

இப் போரில் நெப்போலியன் தோல்வியுறப் பல காரணங்கள் இருந்தன. ஸ்பெயினில் மக்களே போர்க்கருவிகளேந்தி சண்டையிடலாயினர். அவர்களுக்கு அந்நியர் ஆட்சியினின்றும் விடுதலைபெற வேண்டும் என்ற உயரிய நோக்கம் இருந்தது. அவர்கள் கையாண்ட கொரில்லாப் போர்முறை ஃபிரஞ்சுக்காரர்களைச் சோர்வடையச் செய்தது. ஸ்பெயினுடைய நில அமைப்பு அப் போர்முறைக்குச் சாதகமாய் அமைந்திருந்தது. மேலும், நெப்போலியன் ஆஸ்திரியாவுடனும் ருஷ்யாவுடனும் போர்புரிய நேர்ந்தது. ஆகவே, அவரே ஸ்பெயினில் இருந்து இறுதிவரை போர்புரிய இயலவில்லை. போர்க்களத்தில் அவர் ஒருவர் இருப்பின் அது 40,000 வீரர்களுக்குச் சமம் என்று வெல்லிங்டன் ஒரு சமயம் குறிப்பிட்டிருந்தார். அவருடைய சேனைத் தலைவர்கள் அவ்வளவு சிறப்புவாய்ந்தவர்களல்லர். ஃபிரஞ்சுப் படைத்தலைவராக இருந்து பிறகு ஸ்வீடன் அரசரான பெர்னேடோட் (Bernadotte) தனது நேசநாடுகளுக்குக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்: 'நெப்போலியனை எதிரில் கண்டால் பின்வாங்குங்கள். அவருடைய படைத்தலைவர்களைக் கண்டால் சண்டையிடுங்கள்.' வெல்லிங்டனுடைய திறமையும், ஆங்கிலேயக் கப்பற்படையின் வலிமையும் வெற்றிக்குப் பேரளவில் உதவி செய்துள்ளன. ஜோசப் திறமைசாலியல்லர். அதுவும் தோல்விக்குக் காரணமாகும்.

தீபகற்பப் போரில் ஈடுபட்டது நெப்போலியனுடைய மாபெருந் தவறாகும். அதில் அவர் படையின் பெரும்பகுதியை இழந்தார். ஆகவே, அப் போர் அவருடைய அழிவிற்கு ஒரு காரணமாகும்.

இதற்கிடையில் ஐரோப்பாவில் போர்புரிய நேர்ந்தது என்று முன்னரே குறிப்பிட்டோம். முதலில் அவர் ஆஸ்திரியாவுடன் போர் புரிந்தார். வாக்ராம் (Wagram) என்னுமிடத்தில் ஆஸ்திரியா தோல்வியுற்றது. அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்

படி ஆஸ்திரியா பல இடங்களை இழந்தது. ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தில் சேர அது இசைந்தது. ஆஸ்திரியா இளவரசியான மாரி லூவே (Marie Louise) நெப்போலியனை மணக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, ஜோசஃபீன் தள்ளிவைக்கப்பட்டார். நெப்போலியன் மாரி லூவேவை மணந்ததன் நோக்கம் அவருடைய நிலையை உயர்த்துவதேயாகும். அவர் குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் அரச குடும்பங்களுடன் மண உறவு வைத்துக்கொள்ளுமாறு வேண்டினார். லூசியன் ஒருவரே தன்னுடைய மனைவியை விலக்கி அரச குடும்பத்தினின்றும் ஒருவரை மனைவியாக்கிக்கொள்ள மறுத்தார்.

1810-ல் நெப்போலியனுடைய பேரரசு உச்சநிலையை அடைந்திருந்தது. ஃபிரான்சு, இத்தாலியின் ஒரு பகுதி, பெல்ஜியம், இல்வீரியா ஆகியவற்றைத் தன்னுடைய நேராட்சிக்கு உட்படுத்தி யிருந்தார். போப், அவருடைய பொருளாதாரத் திட்டத்தில் பங்குகொள்ளாததால் அதுவும் ஃபிரான்சுடன் இணைக்கப்பட்டது. இத்தாலியின் அரசு, ஸ்விட்சர்லாந்து, ரைன் நதிப் பிரதேச நாடுகளின் கூட்டமைப்பு ஆகியவை அவரைத் தலைவராகக் கொண்டிருந்தன. ஸ்பெயினிலும், வெஸ்ட்பேலியாவிலும் அவருடைய சகோதரர்களான ஜோசப், ஜெரோம் ஆண்டுவந்தனர். ஹாலந்தில் மற்றொரு சகோதரரான லூயி அரசாண்டார். அவர் ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டத்தில் பங்குகொள்ள மறுத்ததால், பிற்காலத்தில் ஹாலந்தை ஃபிரான்சுடன் இணைத்துக் கொண்டார். வார்சா கோமகன் பெருநில ஆட்சிப் பகுதியினை அவருடைய நண்பரான சாக்சனி அரசர் ஆண்டுவந்தார். தெற்கு இத்தாலி அவருடைய மைத்துனர் மூராத் (Murate) என்பவரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டது. ஆஸ்திரியா, பிரஷ்யா, ருஷ்யா, இவருடன் ஒப்பந்தம் செய்திருந்தன. ஸ்வீடன் அவருக்கு அடங்கியிருந்தது. அவரது தளகர்த்தர்களில் ஒருவரான பெர்னேடோட் என்பவருக்கு ஆட்சி உரிமையை வழங்கியது. வெகு சீக்கிரத்தில் இவ்வளவு பெரிய பேரரசை ஏற்படுத்திய நெப்போலியனைச் சிறந்த போர்த்தலைவர் என்று கூறுவது மிகையாகாது.

பேரரசுகள் ஏற்படுவதும் அழிவதும் உலக வரலாற்றில் சாதாரணமாக ஏற்படும் நிகழ்ச்சிகளாகும். ஆனால், நெப்போலியனுடைய பேரரசு வெகு சீக்கிரமாக அழிவுற்றது. ஸ்பெயினில் அவர் அதிகாரம் வீழ்த்தப்பட்டதை முன்பே கவனித்தோம். இனி, ஐரோப்பாவில் அவரது ஆதிக்கம் அழிவுற்றதைப்பற்றிக் கவனிப்போம். ஆஸ்திரியாவைத் தோற்கடித்தபின் ருஷ்யாவின்மீது படையெடுக்கப் போர்

[1] R. Denis, 'Illustrated History of Modern Europe', p. 56 (ரி. டெனிஸ், 'தற்கால ஐரோப்பிய வரலாறு', பக். 56).

ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தார். இப் பேரரசுகளிடையே பல காரணங்களால் மனக்கசப்பு வளர்ந்திருந்தது. ஆஸ்திரியாவுடன் போர் நடக்கும் காலத்தில் தகுந்த உதவி ருஷ்யா அளிக்கத் தவறிய தாலும், ருஷ்யப் பேரரசர் தனது சகோதரியை அவருக்கு மணம் முடிக்க மறுத்ததாலும் நெப்போலியன் ருஷ்யாவினிடத்தில் வெறுப்புக் கொண்டிருந்தார். ஃபிரான்சு ருஷ்யாவின் ஆதிக்கத்தைப் பரப்ப உதவி புரியவில்லை என்று ருஷ்யப் பேரரசர் குற்றம் சாட்டினர். மேலும், நெப்போலியன், அலக்சாந்தருடைய (ருஷ்யப் பேரரசர்) மைத்துனருக்குச் சொந்தமான ஓல்டென்பெர்க்கைக் (Oldenberg) கைப்பற்றியதால், அலெக்சாந்தர் கோபமடைந்தார். நெப்போலியன் போலந்து அரசைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுவதில்லை என்று உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனல், அவ்வாறு உறுதிகூற மறுத்துவிட்டார். 1810-ல் பொருளாதாரத் திட்டம் வெற்றிபெறச் செய்வதற்காக நெப்போலியன் நடுநிலை நாடுகளின் கப்பல்கள் ருஷ்யாவின் துறைமுகங்களில் உட்புகுதலைத் தடைசெய்யுமாறு கேட்டுக்கொண்டார். அலெக்சாந்தர் மறுத்துவிட்டார். மேலும், அலெக்சாந்தர் ஃபிரான்சிலிருந்து ருஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின்மீது அதிக வரிகளைச் சுமத்தினர். ஆகவே, போர் ஏற்பட்டது. நெப்போலியன் இப் போரை நடத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஏனெனில், இப் போரின் விளைவாக மாஸ்கோ பிடிபட்டால், இந்தியாவை அணுகுவது மிக எளிது என்று அவர் கருதினர்.[1]

600,000 பேர்கள் கொண்ட மலைக்கவைக்கும் படையுடன் (Grand Army) மாஸ்கோ நோக்கி 1812-ல் புறப்பட்டார். கோவ்னே என்னுமிடத்தில் நீமென் (Niemen) நதியைக் கடந்து ருஷ்யாவிற்குள் புகுந்தார். ருஷ்யப் படைகள் பின்வாங்கின. ருஷ்யக் குடியானவர்களும், தங்களுடைய உணவுப் பொருள்கள் முதலியவற்றை அழித்துவிட்டுப் படைகளைப் பின்தொடர்ந்தனர். போரோடினே (Borodino) என்னுமிடத்தில் ருஷ்யப் படைகளைத் தோற்கடித்து, மாஸ்கோ நகரத்தைக் கைப்பற்றினர். அங்குள்ள மக்கள் யாவரும் நகரம் பிடிபடுவதற்கு முன்னரே வெளியேறிவிட்டனர். அலெக்சாந்தர் நகரம் பிடிபட்ட பிறகு அடிபணிவார் என்று எண்ணிய நெப்போலியன் ஏமாற்றம் அடைந்தார். பழைய விரோதம் பாராட்டி, பெர்னேடோட்டு அலெக்சாந்தரை நெப்போலியனுடன் சமாதானம் செய்துகொள்வதைத் தடுத்தார். குளிர்காலம் தொடங்கியதாலும், தேவையான பொருள்கள் இல்லாததாலும், நெப்போலியன் தன்னுடைய நாடு நோக்கிப் படைகளை நடத்தவேண்டியதாயிற்று. ருஷ்யர்கள் அவர் வந்த வழியிலேயே திரும்பிச்செல்ல ஏற்பாடு செய்தார்கள். அதனல் நெப்போலியனுடைய

[1] 'Moscow is half way house to India'—Napoleon.

படைகள் உணவுப் பொருள்களைப் பெற வழியில்லாதுபோயிற்று. மேலும், அவர்களால் குளிர் தாங்க முடியவில்லை. ருஷ்யர்கள் அவர்களுக்குத் தொடர்ந்து இடையூறுகளைக் கொடுத்துவந்தனர். அதனால் படையின் பெரும்பகுதி அழிவுற்றது. 20,000 பேர்களே கோவ்னோவைக் கடந்து ஐரோப்பாவிற்குச் சென்றனர். மலைக்கவைக்கும் படை இவ்வாறாக அழிக்கப்பட்டது.

நெப்போலியனுடைய ருஷ்யப் படையெடுப்பு ஏற்பாடு தோல்வியுற்ற செய்தி பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளை ஃபிரான்சுக்கு எதிராகப் போரில் ஈடுபடத் தூண்டியது. 1813-ல் நான்காவது நேச நாடுகளின் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்டது. ஜெர்மனியில் தேசீய உணர்ச்சி பெருகிற்று. அதைப் பயன்படுத்தி பிரஷ்யா பெருஞ்சேனையொன்றை ஏற்படுத்தியது. பிரஷ்யாவில் தோன்றிய அரசியல் மேதைகள் பிரஷ்யாவைப் பல சீர்திருத்தங்கள் வாயிலாக வலிமை பொருந்திய நாடாகச் செய்தனர். ஆகவே, நெப்போலியன் ஜெர்மனியில் போர்செய்ய முற்பட்டார். 1813-ல் டிரெஸ்டன் (Dresden) சண்டையில் நெப்போலியன் வெற்றி பெற்றார். ஆனால், லீப்ஸிக் (Leipzig) என்னுமிடத்தில் அவர் பெருந் தோல்வி அடைந்தார். அதனால் நெப்போலியன் பின்வாங்க நேர்ந்தது. எல்லாத் திசைகளினின்றும் அவருடைய பகைவர்கள் அவரைத் தாக்கினார்கள். அவர் ஆட்சியின் கீழிருந்த அரசுகள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தன. ஃபிரஞ்சுக்காரர்களும் படைத்தலைவர்களும் சமாதானம் விரும்பினார்கள். இறுதியில் 1814-ல் நெப்போலியன் முடிதுறந்தார். ஆனால், அவர் பேரரசர் பட்டத்துடன் எல்பா (Elba) தீவில் வாழ அனுமதிக்கப்பட்டார். ஃபிரான்சு பூர்போன் மன்னரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டது. அவர் ஏற்படுத்திய பேரரசும் அழிக்கப்பட்டது.

1815-ல் நெப்போலியன் எல்பாவினின்றும் தப்பி ஃபிரான்சில் காலடி வைத்தார். வெகு விரைவில் மக்களின் உதவியுடன் பாரிஸைக் கைப்பற்றினார். பூர்போன் மன்னர் பதினெட்டாம் லூயி நாட்டைவிட்டு ஓடினார். ஃபிரான்சில் அவருடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திய பிறகு, பெல்ஜியம் நோக்கிப் படை நடத்திச் சென்றார். அங்கு ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள், பிரஷ்யர்கள் ஆகியோர் அவரை எதிர்த்தார்கள். பிரஷ்யர்களை லினி (Ligny) என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆனால், அவர்களைப் பின்தொடர ஏற்பாடு செய்யவில்லை. அதனால் வாட்டர்லூ என்னுமிடத்தில் நெப்போலியன் பிரிட்டிஷ் படையைத் தாக்கியபோது பிரஷ்யர்கள் திரும்பிவந்து அப் படைக்கு உதவிசெய்ய முடிந்தது. முடிவில் நெப்போலியன் தோல்வியுற்றார். பிறகு அவர் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தார். அவர்கள் அவரை யாவராலும் எளிதில் புகமுடியாத

செயின்ட் ஹெலினு (St. Helena) என்னும் தீவிற்கு அனுப்பினுர்கள். அங்குச் சில ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் 1821-ல் மறைந்தார்.

வியன்னு மாநாடு

நெப்போலியனைத் தோற்கடித்தபிறகு 1814-ல் ஃபிரான்சுடன் பாரிஸ் உடன்படிக்கையை நேசநாடுகள் செய்துகொண்டன. ஆனுல், ஐரோப்பாவின் இதர நாடுகளைப்பற்றிய முடிவுகள் எளிதாக மேற்கொள்ளத்தக்கனவாக இல்லை. வெற்றி பெற்ற நாடுகள் தகுந்த வெகுமதிகளை நாடினுர்கள். அவர்கள் தோல்வியுற்ற நாடுகளைத் தண்டிக்கும் வகையில் மாற்றங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று யோசனை கூறினுர்கள். அதே நேரத்தில் ஐரோப்பாவின் பல பகுதிகளில் ஃபிரஞ்சுப் புரட்சிக் கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. மக்கள் இக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி முறைகள் அமைக்கப்படவேண்டும் என்று எண்ணமிட்டு இருந்தனர். மேலும், இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடந்த போர்களால் ஏற்பட்ட துன்பங்கள் மீண்டும் நிகழாதிருக்கவேண்டிய வகையில் ஏற்பாடு அமையவேண்டும் என்ற கருத்து பலரிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் 1814ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் வியன்னுவில் கூடி ஆலோசிக்கலாயினர்.

வியன்னு மாநாடு பொதுவாக எல்லா ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளையும் கொண்டிருந்தது என்று கூறலாம். தோற்கடிக்கப் பட்ட ஃபிரான்சும் அதில் இடம் பெற்றிருந்தது. அதில் இரண்டு பேரரசர்களும், பல அரசர்களும், சிற்றரசர்களும் நேரடியாகக் கலந்து கொண்டார்கள். மாநாடு நடைபெற்ற இடத்தை அழகுபடுத்துவதற்கும், மாநாட்டில் கலந்துகொண்டோரை உபசரிக்கவும் பெரும் பொருள் செலவிடப்பட்டது. வியன்னு மாநாட்டின் முடிவுகள் பெரும்பாலும் ஒருசிலர் அடங்கிய சிறப்புக் குழுவினுலேயே ஏற்படுத்தப் பட்டன. அவர்களில் ஒருவர் ஆஸ்திரியாவின் வெளிநாட்டமைச்சரான மெட்டர்னிக் (Metternick) என்பவராவார். அவர் புரட்சிக் காலத்தில் வளர்ச்சியடைந்த சுதந்திரம், சமத்துவம் போன்ற கருத்துகளை வெறுத்தார். அவருடைய திறமை முழுவதும் அக் கருத்துகளின் அடிப்படையில் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் அரசு முறைகள் அமைவதைத் தடுப்பதில் பயன்படுத்தி, அம் முயற்சியில் வெற்றி கண்டார். அடுத்தவர் ருஷ்யப் பேரரசர் முதலாவது அலெக்சாந்தர் ஆவார். முற்போக்குக் கருத்துடையவராய் இருந்தபோதிலும், அக் கருத்துகளைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய பொறுமையும், இடைவிடாத உழைப்பும், மனத்திடமும் பெற்றிருக்கவில்லை. வியன்னு மாநாட்டில் ருஷ்யாவின் ஆதிக்கத்தைப் பெருக்குவதில் கவனம்

செலுத்தினர். ஃபிரான்சின் ஃபிரதிநிதியான தாலெரான் (Talleyrand) நெப்போலியன் கைப்பற்றிய நாடுகளே, அந் நாடுகளை முறைப்படி அரசு செலுத்த உரிமை பெற்றவர்களுக்குத் திருப்பி அளிக்க வேண்டும் என்ற (Principle of Legitimacy) கொள்கையை வற்புறுத்தினர். அவ்வாறு திருப்பிக்கொடுக்க முடியாத நிலே ஏற்பட்ட போது, அதனல் பாதிக்கப்படும் அரசர்களுக்கு நஷ்டவீடு வழங்க வேண்டும் என்றும் கூறினர். பிரிட்டனின் அமைச்சர் காசில் ரீ (Castle Reagh) என்பவர் வல்லமைச் சமநிலே ஏற்படுத்துவதில் நாட்டம் செலுத்தினர். மேற்கூறிய மூன்று கருத்துகளின்—அவரவர் நாடுகளே அவரவருக்குத் திருப்பி அளித்தல், நஷ்டவீடு வழங்குதல், வல்லமைச்சமநிலே ஏற்படுத்துதல் ஆகியவை—அடிப்படையில் வியன்ன ஏற்பாடு உருவாக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டினே உட்கொண்ட 'இறுதிச் சட்டம்' (Final Act) 1815-ல் நிறைவேற்றப்பட்டது.

போருக்குக் காரணமான ஃபிரான்சு கண்ணியமாகவே நடத்தப் பட்டது. 1814-ல் ஏற்படுத்தப்பட்ட முதலாவது பாரிஸ் உடன்படிக்கை யின்படி பதினெட்டாம் லூயி ஃபிரான்சு மன்னரானர். ஃபிரான்சு, வென்ற எல்லா நாடுகளேயும் இழந்தது. 1792-ல் இருந்த எல்லேகளே ஃபிரான்சு இப்பொழுது கொண்டிருக்க அனுமதிக்கப்பட்டது. குடியேற்ற நாடுகள் பலவற்றை அது இழந்தது. நெப்போலியனே வரவேற்று அவர் மறுமுறை போரில் ஈடுபடுவதற்கு ஃபிரான்சே காரணம் என்று நேச நாடுகள் கருதியதால், முதலாவது பாரிஸ் உடன்படிக்கை ஏற்படுத்திய திட்டத்தில் சில மாறுதல்களே ஏற்படுத்தினர்கள். 1790-ல் அமைந் திருந்த எல்லேகளேயே ஃபிரான்சு இப்பொழுது கொண்டிருக்கவேண்டும் என்றும், நேசநாடுகளுக்கு நஷ்டவீடு அளிக்கவேண்டும் என்றும், அதுவரை ஃபிரான்சில் அந்நியப் படைகள் இருக்கவேண்டும் என்றும், ஃபிரான்சு ரோம் நகரிலிருந்து கொண்டுசென்ற கலேப்பொருள்களேத் திருப்பித்தரவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான பெல்ஜியம், ஆஸ்திரியாவின் விருப்பப்படியே ஹாலந்துடன் இணைக்கப்பட்டது. இவ்விரு நாடு களுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகள் இருந்ததாலும், பாதிக்கப் பட்ட நாடுகளின் ஒப்புதல் இன்றி இம் முடிவு மேற்கொள்ளப்பட்ட தாலும், 1830-ல் இவ்விணைப்பு துண்டிக்கப்பட்டது. ஃபிரான்சின் எல்லேயில் 'பலம்பொருந்திய நாட்டை அமைத்து, வல்லமைச் சம நிலேயை நிலேநிறுத்தவே இவ்வேற்பாடு செய்யப்பட்டது.

ஜெர்மனியைப்பற்றிய ஏற்பாட்டினே நிறைவேற்றுவதில் சில தகராறுகள் ஏற்பட்டன. ஒருபுறம் ஜெர்மானியர்கள் தேசீய உணர்ச்சி யால் வசப்பட்டு ஜெர்மனியை ஒன்றுபடுத்தவேண்டும் என்று விரும்

பினர். ஆனால், மெட்பரினிக் ஆஸ்திரியாவின் செல்வாக்கை அங்குத் தொடர்ந்து நிலைநிறுத்துவதற்காக ஜெர்மனியைப் பிரித்தும், பலமற்ற நிலையிலும் வைத்திருக்க எண்ணினார். முடிவில் தெய்வீகப் புனித ரோமானியப் பேரரசு மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை. நெப்போலியனுடைய ரைன்நதிப் பிரதேச நாடுகளின் கூட்டமைப்பும் அழிக்கப் பட்டது. அவைகளுக்குப் பதிலாக 38 நாடுகள் கொண்ட ஜெர்மானியக் கூட்டமைப்பு (The German Confederation) ஏற்படுத்தப்பட்டது. ஆஸ்திரியா அதனுடைய தலைமைப் பொறுப்பைப் பெற்றது. கூட்டமைப்பின் பொறுப்புகளை நிறைவேற்ற சபை (Federal diet) ஒன்று ஃபிராங்ஃபோர்ட் (Frankfort) என்னுமிடத்தில் அமைக்கப் பட்டது. ஜெர்மனியின் நிலப்பகுதிகளை ஆளும் அரசர்களும், நான்கு சுதந்திரம் பெற்ற நகரங்களும் தங்களது பிரதிநிதிகளை அச் சபைக்கு அனுப்பினார்கள். முந்நூற்றுக்கு மேற்பட்ட சிறு அரசர்கள் அனைவரும் தங்களுடைய நிலப்பகுதிகளை மீண்டும் பெற அனுமதிக்கப்படவில்லை என்பது உண்மையேயானாலும், ஜெர்மனி பலம் பொருந்திய நாடாக அமைக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்த ஜெர்மானியர்களும் ஏமாற்றம் அடைந்தார்கள் என்பதில் ஐயமில்லை.

ஜெர்மனியிலுள்ள பிரஷ்யா சில நிலப்பகுதிகளைப் பெற்றது. போலந்தில் அதற்குச் சொந்தமாயிருந்த பகுதியில் சில இடங்களை விட்டுக்கொடுத்து, மேற்கு ஜெர்மனியில் வெஸ்ட்பேலியா, ரைன்நதிப் பிரதேசம் (the Rhine land), சாக்ஸனி நாட்டின் பெரும் பகுதியையும், பாமரேனியாவின் ஒரு பகுதியினையும் பெற்றது. ஜெர்மானியர்கள் அதிகமாக வாழாத இடங்களை இழந்து, ஜெர்மானியர்கள் பெருவாரியாக வசிக்கும் இடங்களைப் பெற்ற காரணத்தால், பிரஷ்யா ஜெர்மானிய நாடுகளில் தலைசிறந்த நாடாக விளங்கலாயிற்று.'

ஆஸ்திரியா பெல்ஜியத்தைத் தானாகவே விட்டுக்கொடுத்தது. வியன்னாவிலிருந்து வெகுதூரத்திலுள்ள பெல்ஜியத்தை ஆளுவது மிகக் கடினமாகத் தோன்றியது. அதற்குப் பதிலாக ஆஸ்திரியாவிற்கு வெகு அண்மையிலுள்ள வெனீஷியாவைப் பெற்றது. வெனீஷியாவையும் லம்பார்டியையும் சேர்த்து 'லம்பார்டி-வெனீஷிய அரசு' ஏற்படுத்தப் பட்டது. இவைகளன்றி, ஆஸ்திரியர் இல்லிரியா, பவேரியாவிற்குச் சொந்தமான பகுதிகளில் சிலவற்றையும் பெற்றது.

மேலும், இத்தாலியின் வடக்கிலும் நடுபகுதியிலும் பல சிற்றரசுகள் ஏற்படுத்தப்பட்டன. மோடெனா, டஸ்கனி, பார்மா ஆகியவைகள் எல்லாம் ஆஸ்திரிய அரசர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக் கப்பட்டன. ரோம், அதைச் சுற்றியுள்ள பகுதி, அம்பிரியா போன்ற போப்புக்குச் சொந்தமான இடங்களில் போப்பின் அதிகாரம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. நேபில்ஸ், சிசிலி ஆகியவை பூர்போன் குலத்

தைச் சேர்ந்தவருக்கு அளிக்கப்பட்டன. பியட்மான்ட் (Piedmont), சார்டினியா ஆகியவை சவாய் (Savoy) குலத்தைச் சார்ந்தவரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டன. ஆகவே, இத்தாலியும் மெட்டர்னிக்கி னுடைய கருத்திற்கு ஏற்றுற்போல பலமற்றதாகவும், பல பிரிவுகளை உட்கொண்டதாகவும் அமைக்கப்பட்டது.

போர்க்காலத்தில் ருஷ்யா கைப்பற்றிய இடங்களாகிய பின்லாந் தும் பெஸ் அரேபியாவும் (Bess Arabia) தொடர்ந்து அதனுடைய ஆளுகைக்குள் வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. போலந்தில் பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் சொந்தமான பகுதிகளில் சிலவற்றை ருஷ்யா பெற்றது.

போலந்து நாட்டினர் போர் முடிந்தவுடன் சுதந்திரம் பெறலாம் என்று எண்ணியிருந்தனர். அதற்கு மாறாக போலந்து நான்கு பிரிவுகளாகத் துண்டிக்கப்பட்டது. ஆஸ்திரியாவும், பிரஷ்யாவும், ருஷ்யாவும் ஒவ்வொரு பகுதியைப் பெற்றன. ருஷ்யாவின் பாகம் மற்ற இருவரின் பகுதிகளில் சில இடங்களைக்கொண்டு விரிவுபடுத்தப் பட்டது. நான்காவது சிறு பிரிவாகிய கிராகவ் (Cracow) குடியரசாக ஏற்படுத்தப்பட்டது.

டென்மார்க்கு நெப்போலியனுக்கு உதவி செய்ததால், அதனிட மிருந்து நார்வே (Norway) பிரிக்கப்பட்டது. நார்வே, ஸ்வீடனுடன் இணைக்கப்பட்டது.

ஸ்விட்சர்லாந்தில் பழைய கூட்டிணைவு புதுப்பிக்கப்பட்டது, ஸ்பெயினில் பூர்போன் குலத்தினர் மீண்டும் ஆட்சி செய்ய வழி வகுத்தது.

இங்கிலாந்து ஹேலிகோலாந்து, மால்டா-ஐயோனியன் தீவுகள், இலங்கை, நன்னம்பிக்கை முனைக் குடியேற்ற நாடு ஆகியவைகளைப் பெற்றது.

வியன்னா ஏற்பாடு பல குறைகளைக் கொண்டிருந்தது. வல்லமைச் சமநிலையை நிலைநாட்டும் நோக்கத்துடனும், வெற்றிபெற்ற நாடுகளின் ஆசைகளை நிறைவேற்றும் எண்ணத்துடனும் செயற்பட முனைந்த போது, அக் காலத்தில் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த தேசிய உணர்ச்சியையும் முற்போக்குக் கருத்துகளையும் கவனியாது விட்டது.

[1] A. J. Grant, 'Europe—the Story of the Last Five Centuries', page 725. (கிரான்ட், 'ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டுகளின் வரலாறு', பக்கம் 725.')

ஆகவே, நாடுகளின் எல்லைகளைத் திருத்தியமைக்கும்போது மக்களின் விருப்பத்தை அறிந்துகொள்ள முற்படவில்லை. அதனால்தான் அதனுடைய ஏற்பாட்டிற்குப் பல இடங்களில் எதிர்ப்பு உண்டாயிற்று. 1830-ல் பெல்ஜியம் கிளர்ச்சி செய்து சுதந்திரம் அடைந்தது. 1905-ல் நார்வே சுதந்திரம் பெற்றது. 1917-ல் பின்லாந்து ருஷ்யாவினிடமிருந்து பிரிந்து தனிநாடாயிற்று. இத்தாலியிலும் ஜெர்மனியிலும் 19ஆம் நூற்றாண்டில் ஒற்றுமை இயக்கம் தோன்றியது. மக்களாட்சி முறையை எதிர்நோக்கியிருந்த நாடுகளில் பழைய வல்லாட்சிகளை ஏற்படுத்திக் கிளர்ச்சியுண்டாவதற்கு வழிசெய்திருந்தது. ஆகவே, 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பல போர்களும் கிளர்ச்சிகளும் வியன்னா நாட்டின் ஏற்பாட்டின் குறைகளைப் போக்குவதற்காகவே ஏற்பட்டன என்று கூறப்படுகிறது. ஆனால், இவ்வேற்பாடு ஐரோப்பியர்களுக்கு ஒரு பெருநன்மையை உண்டாக்கியது. போரினால் அவதிப்பட்ட ஐரோப்பாவில் அடுத்த நாற்பது ஆண்டுகளில் பெரும் போர் ஏற்படாமல் தடுக்க அது பயன்பட்டது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

3. அமெரிக்க நாடுகளின் வளர்ச்சி

அமெரிக்க ஐக்கிய நாடு

முதல் அத்தியாயத்தில் வட அமெரிக்காவில் ஆங்கிலேயர்கள் பல குடியேற்றங்களை அமைத்தனர் என்றும், அவைகளில் சிறப்பு வாய்ந்தவை வட அமெரிக்காவின் அட்லான்டிக் கடற்கரையோரமாக அமைக்கப்பட்ட பதிமூன்று குடியேற்ற நாடுகள் என்றும் கவனித்தோம். இவைகளினின்றுதான் ஐக்கிய அமெரிக்க நாடு ஏற்பட்டது. ஆகவே, அந் நாட்டின் தோற்றத்தை இனிக் கவனிப்போம்.

17ஆம், 18ஆம் நூற்றுண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளுக்கும், அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்திவந்த பிரிட்டனுக்கும் 18ஆம் நூற்றுண்டில் போர் ஒன்று ஏற்பட்டது. இப் போரை 'அமெரிக்க சுதந்திரப் போர்' என்று கூறுகிருர்கள். இப் போர் ஏற்படப் பல காரணங்கள் உண்டு.

குடியேற்றங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஆட்சிமுறையில் காணப்பட்ட குறைகள் போருக்குரிய காரணங்களில் ஒன்ருகும். ஒவ்வொரு குடியேற்றமும் ஓர் அரசாங்க நிருவாகத்தைக் கொண்டிருந்தது. ஒவ்வொன்றிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஒருவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். சட்டமியற்றும் அதிகாரங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அச் சபையே கவர்னருக்கு ஊதியத் தொகையை அளிக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. ஆகவே, கவர்னருக்கும் சட்டசபைக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. சட்டசபை கவர்னரைத் தன்னுடைய அதிகாரத்திற்குட்படுத்த முயன்றது. அரசரால் நியமிக்கப்பட்ட கவர்னர் மக்கள் சபைக்கு உட்பட்டு நடக்க மறுத்தார்.

இத்துடன் மற்ருெரு பிரச்சினையும் எழுந்தது. குடியேற்ற நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் எவரும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படவில்லை. அவ்வாறிருக்க, அப் பாராளுமன்றம் குடியேற்ற நாடுகளுக்கும் சட்டங்களை இயற்றும் உரிமையைக் கொண்டாடியது. குடியேற்ற நாடுகள் அவ் வுரிமையை மறுத்தன. பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களைக் குடியேற்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தலாகாது என்று அறிவித்தன.

அடுத்தபடியாகக் குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புப் பிரச்சினையும் போர் ஏற்படக் காரணமாக அமைந்தது. எல்லாக் குடியேற்ற நாடுகளும் ஒன்றுசேர்ந்து தங்களுடைய பாதுகாப்புக்காக ஒரு பொது அமைப்பை உண்டாக்குவதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர்கள் இக் குடியேற்ற நாடுகளுக்குத் தீங்கு விளைவித்துக்கொண்டிருந்தார்கள். மேலும், ஏழாண்டுப் போருக்குப் பின்னரும் ஃபிரஞ்சுக்காரர்களால் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு ஏற்படும் ஆபத்து நிங்கியதாகத் தெரியவில்லை. ஆகவே, ஏழாண்டுப் போருக்குப் பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கம் குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புக்காக ஒரு கப்பற்படையையும், ஒரு சேனையையும் ஏற்படுத்துவதென முடிவு செய்தது. அவைகளை வைத்துப் பேணுவதற்குச் செலவிடப்படும் தொகையில் ஒரு பகுதியினைக் குடியேற்ற நாடுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரிட்டிஷ் அமைச்சர் கிரென்வில் (Grenville) கருதினர். ஆகவே, 1765-ல் முத்திரைச் சட்டம் (The Stamp Act) இயற்றினர். அதன்படி எல்லாப் பத்திரங்களும் முத்திரையிடப்பட்ட காகிதங்களில் எழுதப்பட வேண்டும் என்று கூறினர். இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கம் குடியேற்ற நாடுகளின்மீது நேரடி வரிகளை விதிக்க முற்பட்டதில்லை. உடனே குடியேற்ற நாடுகள், தங்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டிராத பாராளுமன்றத்திற்குத் தங்கள்மீது வரி விதிக்கும் உரிமை இல்லை என்று கூறின.[1] கிரென்விலுக்குப் பிறகு அமைச்சரான ராக்கிங்ஹாம் (Rockingham) அச் சட்டத்தை ரத்து செய்தார். அதே நேரத்தில் குடியேற்ற நாடுகளின்மீது பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு வரிவிதிக்கும் உரிமை உண்டு என்று சட்டத்தின் வாயிலாக அறிவித்தார். சார்லஸ் டவுன்ஷெண்டு (Charles Townshend) என்னும் நிதியமைச்சர், குடியேற்ற நாடுகளின் பாதுகாப்புக்காக அமைக்கப்படும் இராணுவம், கப்பற்படை ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் தொகையைப் பெறத் தேயிலைபோன்ற பொருள்களின்மீது வரிவிதித்தார். இவ் வரி, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் துறைமுகங்களுக்குள் இப் பொருள்களைக் கொண்டுசெல்லும்போது வசூலிக்கப்பட்டது. ஆகவே, இதற்கு யாதோர் எதிர்ப்பும்

[1] 'No taxation without representation'.

இராது என்று எண்ணினர். ஆனால், இதையும் அவர்கள் எதிர்த்தனர். பல இடங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இங்கிலாந்திலும் இதற்கு எதிர்ப்புகள் ஏற்பட்டன. அவரைப் பின்தொடர்ந்த நார்த் பிரபு (Lord North) புதிய தேயிலைச் சட்டம் ஒன்றை இயற்றினர். அதன் படி, இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குத் தேயிலையை நேராக எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இதனால் தேயிலையின் விலை குறைந்தது. அமெரிக்கக் குடியேற்ற நாடுகள், விலையைக் குறைத்துக் குடியேற்ற மக்களைத் தேயிலை வரியை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்குக் கையாளப்படும் தந்திரமாக அதனைக் கருதினர்கள். ஆகவே, பாஸ்டன் துறைமுகத்திற்குள் பல அமெரிக்கர்கள் செவ்விந்தியர்கள் வேடமணிந்து, தேயிலைக் கப்பல்கள் மீதேறித் தேயிலைக் கட்டுகளைக் கடலில் வீசி எறிந்தனர். இது 'பாஸ்டன் தேநீர் விருந்து' (Boston Tea Party) என்று கூறப்படுகிறது. உடனே அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவைகளில் முக்கியமானது மாசாசுஸெட்ஸ் ஆட்சிமுறைச் சட்டமாகும். அதன்படி, மாசாசுஸெட்ஸ் குடியேற்ற நாட்டிற்கு அளிக்கப்பட்ட உரிமைகள் ரத்து செய்யப்பட்டன. அதுவே போருக்கு உடனடியான காரணமாயிற்று.

வியாபார அமைப்புமுறையில் இருந்த சீர்கேடுகள் போர் மூலக் காரணங்களாய் இருந்தன. அவ் வியாபார அமைப்புமுறை 17 ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது. அம் முறை, குடியேற்றங்கள் அவைகளுடைய தாய்நாட்டின் நலன்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டவை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதன் விளைவாகச் சில மூலப்பொருள்களும் பிரிட்டனுக்கே அனுப்பப்பட்டன. பிற நாடுகளுடன் நேரடியான வியாபாரம் தடைசெய்யப்பட்டது. அந் நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படும் பொருள்களும், அங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் பொருள்களும் பிரிட்டிஷ் கப்பல்களிலோ, அல்லது குடியேற்றங்களின் கப்பல்களிலோ எடுத்துச் செல்லப்பட்டன. முதலில் இம் முறையை ஆங்கிலேயர்கள் கண்டிப்புடன் செயற்படுத்தவில்லை. ஆனால், 18ஆம் நூற்றாண்டில் கண்டிப்புடன் செயற்படுத்த முனைந்தார்கள். ஆகவே, குடியேற்ற நாடுகள் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டன. இதை அறிந்த பிரிட்டிஷ் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு கள்ள வாணிபத்தைத் தடுக்க முயன்றது. ஆகவே, குடியேற்ற நாடுகள் மனக்கசப்பு அடைந்தன.

கனடாவை பிரிட்டிஷ்காரர்கள் கைப்பற்றியபிறகு ஃபிரஞ்சுக்காரர்களால் குடியேற்ற நாடுகளுக்கு ஏற்படும் அபாயம் பெருமளவில் குறைந்தது. ஃபிரஞ்சுக்காரர்கள் கனடாவில் ஆதிக்கம் பெற்றிருந்தவரை, குடியேற்ற நாடுகள் பிரிட்டிஷ் படைகளின் உதவியைப் பெறுவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் பற்று மாருதவர்களாயிருந்தனர். பயம்

குறைந்துவிட்டதால், பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்கத் தலைப்பட்டார்கள்.

மேலும், குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் புதிதாகக் கைப்பற்றிய இடங்களைப் பகிர்ந்துகொள்வதில் வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. குடியேற்ற நாடுகள் தம் விருப்பம்போல் அந் நிலங்களை வாங்குவதற்கு முயன்றன. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் அவ்வாறு வாங்குவதற்கு அனுமதி வழங்கவில்லை. மேற்கூறிய காரணங்களால் போர் மூண்டது.

மாசாசுசெட்ஸ் குடியேற்றப் பகுதியின் உரிமைகளை ரத்து செய்ததை அறிந்த குடியேற்ற நாடுகள், தங்களுடைய உரிமைகளைக் காத்துக் கொள்ள 1774-ல் பிலடெல்ஃபியா நகரத்தில் நடைபெற்ற மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்பிவைத்தன. அதில் ஜார்ஜியா கலந்துகொள்ளவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதுச்சட்டங்களை உடனடியாக ரத்து செய்யுமாறு கோரினார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை பிரிட்டனுடன் வியாபாரம் செய்வதை நிறுத்தவேண்டும் என்று அம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. பாஸ்டனில் நிலைநிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் படை, குடியேற்ற நாட்டவர்கள் போருக்கான பொருள்களைச் சேகரிப்பதைத் தடுக்க முற்பட்டது. அதனால் 1775-ல் லெக்ஸிங்டன் என்னுமிடத்தில் முதல் முறையாக பிரிட்டிஷ் படையும் குடியேற்றநாட்டின் படையும் கைகலந்தன. இதற்கிடையில் இரண்டாவது மாநாடு ஒன்றைக் குடியேற்ற நாட்டினர் நடத்தினார்கள். அம் மாநாட்டில் குடியேற்ற நாடுகள் 1763-ல் தாம் இருந்த நிலையை மீண்டும் நிலைநிறுத்த இசைந்தன. அதற்குப் பதிலாக பிரிட்டிஷ் பாராளுமன்றம் குடியேற்ற நாடுகளுக்குச் சட்டம் இயற்றும் அதிகாரத்தை விட்டுவிடவேண்டும் என்று கோரியது. பிரிட்டிஷ் அரசாங்கம் அக் கோரிக்கையை நிராகரித்தது.

இதற்கிடையில் குடியேற்ற நாட்டினர் ஜார்ஜ் வாஷிங்டன் என்பவரை அமெரிக்கப் படையின் தலைவராக நியமித்தனர். ஜார்ஜ் வாஷிங்டன் வர்ஜீனியா குடியேற்ற நாட்டைச் சார்ந்தவர். அவர் ஒரு தோட்டப் பண்ணை முதலாளியாவார். திடசித்தமுடையவர். மேற்கொண்ட காரியத்தில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தி வெற்றி காணும் இயல்புடையவர். அதே நேரத்தில் பிரிட்டிஷ் படைத் தலைவராக அமர்த்தப்பட்ட சர் வில்லியம் ஹௌ (Sir William Howe) என்பவர் சிறந்த போர்வீரர் அல்லர். 1775-ல் பங்கர் ஹில் (Bunker Hill) என்னுமிடத்தில் சண்டை நடந்தது. அச் சண்டையின் முடிவில் அமெரிக்கர்கள் அவ்விடத்தினின்றும் துரத்தப்பட்டார்கள். கியூபெக்கைத் தாக்க அனுப்பப்பட்ட அமெரிக்கப் படையும் வெற்றிபெற

வில்லை. ஆனால், வாஷிங்டன் மிக வெற்றிகரமாக ஹௌவை பாஸ்டனிலிருந்து துரத்திவிட்டார்.

1776-ல் ஜுலை மாதம் 4ஆம் தேதி மூன்றாவது அமெரிக்க மாநாடு (Congress) பிலடெல்ஃபியாவில் கூடியது. அம் மாநாட்டில் சுதந்திர அறிக்கை வகுத்து இயற்றப்பட்டது. அவ்வறிக்கையில், எல்லா மக்களும் சில உரிமைகளைப் பிறப்புரிமையாகக் கொண்டுள்ளார்கள் என்றும், அவ்வுரிமைகளைக் காப்பது அரசாங்கத்தின் கடமை என்றும், அவ்வுரிமைகளைக் காக்கத் தவறிய அரசாங்கத்தினை மக்கள் ஒழிப்பதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள் என்றும், ஆகவே அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் சுதந்திர நாடுகளாக இனி இயங்க உரிமை உண்டு என்றும், அந் நாடுகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இடையேயுள்ள அரசியலைச் சார்ந்த தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கிடையே ஹௌ நியூயார்க்கைக் கைப்பற்றினார். பிலடெல்ஃபியாவும் அவர் வசமாயின. ஆனால், அவர் அமெரிக்கப் படையைத் தொடர்ந்து செல்லவில்லை. அவ்வாறு சென்றிருப்பாரேயானால், பட்டினியாலும் நோயாலும் அவதிப்பட்டுக்கொண்டிருந்த அமெரிக்கப் படைகளை எளிதாக வென்றிருக்க முடியும்.

1777-ல் பிரிட்டிஷ் படைத்தலைவரின் திறமைக்கேடு வாஷிங்டனுக்குப் பெருவெற்றியைக் கொடுத்தது. ஆங்கிலேயர்கள் பர்காயின் என்னும் படைத்தலைவரைக் கனடாவினின்றும் தெற்கு நோக்கிச் சென்று ஹௌவுடன் சேர்ந்துகொள்ளுமாறு கட்டளையிட்டனர். ஹௌ வடக்கு நோக்கிச் சென்று பர்காயினைச் சந்திக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், ஹௌ பிலடெல்ஃபியாவைக் கைப்பற்றுவதில் காலத்தை வீணாக்கினார். இதற்குள்ளாக பர்காயின், திட்டத்தின்படி ஹட்சன் பள்ளத்தாக்கில் வந்துசேர்ந்தார். எல்லாத் திசைகளினின்றும் அவர் தாக்கப்பட்டதாலும், ஹௌ குறித்த காலத்தில் அவருக்குத் துணையாக வராத காரணத்தாலும் சாரடோகா (Saratoga) என்னுமிடத்தில் சரணடைந்தார்.

இவ் வெற்றிச் செய்தியை அறிந்த ஃபிரான்சு அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் சேர்ந்து பிரிட்டனுக்கு எதிராகப் போரிடத் தீர்மானித்தது. ஃபிரஞ்சுக் கப்பற்படை மேற்கிந்தியத் தீவுகளைத் தாக்கியதால், பிரிட்டிஷ் கப்பற்படை அவைகளைக் காப்பாற்ற முனைந்தது. மேலும், ஃபிரஞ்சுக் கப்பற்படை, பிரிட்டனினின்றும் அமெரிக்காவில் போர்புரியும் பிரிட்டிஷ் படைகளுக்கு அனுப்பப்படும் வலிமையூட்டும் பொருள்கள் விரைவில் சேரவொட்டாமல் தடுத்தது. ஸ்பெயினும் இப் போரில் இங்கிலாந்துக்கு எதிராகக் கலந்துகொண்டது. மைனார்கா என்னும் தீவு பிரிட்டனிடமிருந்து கைப்பற்றப்பட்டது. டச்சுக்காரர்

களும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் சேர்ந்துகொண்டனர். நடுநிலை நாடுகள் பிரிட்டிஷ் கப்பற்படை தரும் தொந்தரவுகளைத் தாங்க மாட்டாமல் படைதரித்த நடுநிலைமை நாடுகள் கூட்டிணைவினை ஏற்படுத்தின. அதில் ருஷ்யா, ஸ்வீடன், டென்மார்க் ஆகிய நாடுகள் சேர்ந்தன.

இதற்கிடையில் பிரிட்டிஷ் படைத்தலைவர் மாற்றப்பட்டார். புதிய தலைவர் ஹென்றி கிளின்டன் (Henry Clinton), சார்ல்ஸ்டன் (Charleston) என்னுமிடத்தைக் கைப்பற்றினார். ஆனால், பிரிட்டிஷ் படைத்தலைவர் காரன்வாலிஸ் தன் படையுடன் யார்க்டவுனில் சரணடைந்தார். இத்துடன் அமெரிக்காவில் போர் முடிவுற்றது. ஆனால், ஃபிரான்சுடனும் ஸ்பெயினுடனும் போர் தொடர்ந்து நடைபெற்றது. ஜிப்ரால்டரைக் கைப்பற்றும் முயற்சியை பிரிட்டிஷ்காரர்கள் தோற்கடித்தனர். ஃபிரஞ்சுக் கப்பற்படை மேற்கிந்தியத் தீவுகளுக்கு அருகே தோல்வியுற்றது. பிரிட்டனின் பெருமை அதனால் புத்துயிர் பெறலாயிற்று.

1783-ல் வெர்சாயி (Versailles) உடன்படிக்கை வாயிலாகப் போர் முற்றுப்பெற்றது. அதன்படி, பிரிட்டிஷ்காரர்கள் 'ஐக்கிய அமெரிக்க நாடுகள்' என்ற பெயர்கொண்ட அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தனர். அந் நாடுகளுக்கும் கனடாவுக்கும் இடையேயுள்ள எல்லை வரையறுக்கப்பட்டது. ஃபிரான்சு கோரி, செனீகல், மேற்கிந்தியத் தீவுகளில் சில (Tobago and St. Lucia) ஆகியவற்றையும், ஸ்பெயின் ஃபிலோரிடா, மைனார்கா ஆகியவற்றையும் மீண்டும் பெற்றன.

அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுத்திய விளைவுகளில் முக்கியமானது 'ஐக்கிய அமெரிக்க நாடு' ஏற்படுத்தப்பட்டதேயாகும். அந் நாடு மக்களுடைய தலைமையுரிமையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டது. முதலில் அது உறுதியாக இணைக்கப்படாத நாடுகளின் கூட்டு அமைப்பாக அமைந்திருந்தது. குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய காங்கிரஸ் என்று அழைக்கப்பட்ட சபையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதில் அங்கம் வகித்திருந்த நாடுகள் மீது அதிகாரம் பெற்றிருக்கவில்லை. ஆனால், அந் நாடுகளுக்கு சிபாரிசு செய்யும் உரிமை பெற்றிருந்தது. ஆனால், அதை ஏற்கவோ மறுக்கவோ அந் நாடுகளுக்கு உரிமை இருந்தது. அத்தகைய அமைப்பு யாருக்கும் திருப்தியளிக்காததால், 1787-ல் பிலடெல்ஃபியாவில் அரசியலமைப்பைப் புதுமாதிரியாக நிர்ணயம் செய்வதற்காகப் பிரதிநிதிகள் அடங்கிய சபையொன்று கூட்டப்பட்டது. அச் சபையில் அனுபவம் முதிர்ந்த பெரியார்கள் பலர் கலந்துகொண்டனர். அக் கூட்டத்தில் மன்னராட்சி ஏற்படுத்தவேண்டும் என்றும், வாஷிங்டன் மன்னராக வேண்டும்

என்றும் சிலர் யோசனை கூறினர்கள். ஆனல், வாஷிங்டன் அதை ஏற்கவில்லை. பலத்த விவாதங்களுக்குப் பிறகு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்டம் கூட்டாட்சி அரசை அந் நாட்டில் ஏற்படுத்தியது. பலவகையான கருத்துகளையும் உரிமைகளையும்கொண்ட பலவகையான இனத்தவர்களைச் சில பொதுக் காரியங்களுக்காக ஒரே அரசாங்கத்தின்கீழ்க் கொண்டுவருவதற்கு இவ் வாட்சிமுறை பெரிதும் பயன்பட்டது. அமெரிக்காவில் ஏற்படுத்தப் பட்ட கூட்டாட்சி முறையைப் பல நாடுகள் பின்பற்றத் தொடங்கின. மேலும், 1789ஆம் ஆண்டின் அரசியல் சட்டம் அமெரிக்காவில் குடி யரசை ஏற்படுத்தியது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந் தெடுக்கப்படும் ஜனதிபதி அக் குடியரசின் தலைவராக ஏற்றுக்கொள்ளப் பட்டார். அவர் அமைச்சர்கள் துணைகொண்டு ஆட்சி செலுத்தவும், அவ்வமைச்சர்கள் அவருக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களா யிருத்தல்வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. சட்டங்களை இயற்ற இரு சபைகள்கொண்ட—கூட்டரசு உறுப்பு நாடுகளின் பிரதி நிதிகள் அடங்கிய சபை (Senate), மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சபை (House of Representatives)—சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. அது சட்டமியற்றவும், நிதிநிலையைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றது. அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க நீதிமன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இச் சட்டம் கூட்டாட்சி அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்கள் இசைவு பெற்றபின்னர் 1789-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. வாஷிங்டன் முதல் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முதலில் அமெரிக்கக் கூட்டரசு உறுப்புகளில்(States) இயங்கிவந்த சட்டசபைகள், மக்களாட்சிக் கருத்துகளின்படி அமைக்கப்பட்டிருக்க வில்லை. வாக்குரிமை ஆண்களுக்குமட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அவர்களுள் நிலம் படைத்தவர்களும், பொருள் படைத்தவர்களுமே அவ்வுரிமையைப் பெற்றிருந்தார்கள். சில இடங்களில் மதம் காரண மாக வாக்குரிமை சிலருக்கு அளிக்கப்படவில்லை. அரசாங்கப் பதவி களும் பணமுடையோருக்கே அளிக்கப்பட்டன. ஆனல், நாளடைவில் ஒவ்வொரு கூட்டரசு உறுப்பு நாட்டிலும் மக்களாட்சி முழுமையாக ஏற்படுத்தப்பட்டது.

அமெரிக்க சுதந்திரப் போர் ஃபிரஞ்சுப் புரட்சிக்கு ஒரு காரணமாய் அமைந்தது என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அப் போரின் வாயிலாக ஃபிரான்சு பிரிட்டன்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள முடிந்தது. 1763-ல் இழந்த இடங்களில் சிலவற்றை மீண்டும் பெற்றது.

அமெரிக்கப் புரட்சி முதலாவது ஆங்கிலேயப் பேரரசை அழித்து விட்டது. குடியேற்ற நாட்டுக் கொள்கையை மாற்றிவிட அது காரண

மாயிருந்தது. அதன் விளைவாகத் தடையிலா வர்த்தகக் கொள்கை பலப்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ்காரர்கள் அவர்களது கவனத்தை வேறு கண்டங்கள் பக்கம் திருப்பலாயினர்.

பிரிட்டிஷ் அரசியலில் இப் போர் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. மூன்ருவது ஜார்ஜ் மன்னருடைய நேரடி ஆட்சியை ஒழித்தது. அயர்லாந்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகத் தொடங்கப்பட்ட சுதந்திர இயக்கம் மேலும் பலமடைந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவாக அரசியல் சார்ந்த புதிய கருத்துகள் பல உருவாயின. அக் கருத்துகளைப் பிற நாடுகள் பின்பற்றலாயின. அவைகளுள் குறிப்பிடத்தக்க கருத்துகள் பின்வருவனவாகும்: ஆட்சியை மக்களே நடத்த வேண்டும் என்ற கருத்து; பல்வேறு கருத்துகளையுடைய மக்களைக் கொண்ட சிறு நாடுகள், தங்களுடைய தனித்தன்மையினையும் உரிமையினையும் இழக்காமல், பொதுக்காரியங்கள் சில நிறைவேற்றுவதற்காக ஒன்றுசேர வாய்ப்பைத் தரும் கூட்டாட்சிமுறை; அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆட்சி நடத்தும் முறை; சட்டம் இயற்றுதல், சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், சட்டத்தை மீறுபவரைத் தண்டித்தல் ஆகிய அரசாங்கக் காரியங்கள் தனித்தனி நபர்களால் அல்லது குழுக்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். கடைசியாகச் சொல்லப்பட்ட கருத்து மான்தெஸ்கியூவினுடையதாகும். எனினும், அமெரிக்காவில் அது முதன்முதலாக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

லத்தீன் அமெரிக்கா

15ஆம் நூற்ருண்டிலும் 16ஆம் நூற்ருண்டிலும் மேற்கொள்ளப்பட்ட கடற்பயணங்கள் விளைவாக ஐரோப்பியர்களில் சிலர் வடக்கு, நடு, தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் அவர்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினுர்கள் என்று நாம் முன்னர் கவனித்தோம். ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், ஃபிரஞ்சுக்காரர்கள் கைப்பற்றியிருந்த கயானு நீங்கலாக ஏனைய தென் அமெரிக்க நிலப்பகுதிகளும், ஆங்கிலேயர்வசம் நடு அமெரிக்காவில் இருந்த ஹோண்டுராஸ் பகுதியைத் தவிர ஏனைய நடு அமெரிக்கா நிலப்பகுதிகளும், மேற்கிந்தியத் தீவுகளைத் தவிர ஏனைய வட அமெரிக்காவின் தென்பகுதிகளும் 'லத்தீன் அமெரிக்கா' என்று அழைக்கப்படுகின்றன. அப் பகுதிகளில் ஸ்பானியர்களும் போர்ச்சுகீசியரும் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினுர்கள் என்று முன்னரே அறிந்திருக்கிருேம். 19ஆம் நூற்ருண்டில் அப் பகுதிகளில் சுதந்திர இயக்கம் உருவாகியது. அச் சுதந்திர இயக்கம் தற்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது. அவ்

வியக்கம் தேசியக் கருத்து, குடியாட்சிக் கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஆட்சி முறையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அதன் விளைவாகப் பல இடங்களிலும் மக்களாட்சி நிறுவப்பட்டது. ஆகவே, அவ்வியக்கத்தின் வரலாற்றினை இனிக் கவனிப்போம்.

19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் லத்தீன் அமெரிக்காவின் பெரும்பகுதி ஸ்பானியர்வசம் இருந்தது. பிரேசில்மட்டுமே போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. ஸ்பானிய அமெரிக்க நாட்டில் நான்கு பெரும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. நியூ ஸ்பெயின், நியூ கிரெனடா, பெரு, ரியோ தெ லா பிலாடா (Rio de la Plata) ஒவ்வொன்றிலும் ஒரு வைசிராய் நியமிக்கப்பட்டார். அவர்கள் பல அதிகாரங்கள் பெற்றிருந்தனர். ஆட்சிப் பொறுப்புடன், படைகளின் தலைமைப் பொறுப்பும் அவரிடம் விடப்பட்டிருந்தது. நிதியைப் பற்றிய விவகாரங்களை அவரே கட்டுப்படுத்திவந்தார். கியூபா, குவாதமாலா (Guatemala), சிலி, வெனிசூயீலா ஆகியவை ‘காப்டன்சி ஜெனரல்’ (Captaincy General) என்ற பெயர்கொண்ட ஆட்சி முறையைச் சார்ந்த பிரிவுகளாக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒரு காப்டன் ஜெனரலைத் தலைவராகக் கொண்டிருந்தன. அவைகளை விடச் சிறிய ஆட்சிமுறையைச் சார்ந்த பகுதிகள் கவர்னர் என்பவரின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டன. இவ்வதிகாரிகள் அனைவரும் சிறப்பாகப் பணியாற்றுவதற்காகப் பல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்று ஆடியென்சியா (Audiencia) என்பதாகும். அது பெரும்பாலும் நீதிமன்றமாகச் செயற்பட்ட போதிலும், மேற்கூறிய அதிகாரிகளின் ஆலோசனை சபையாகவும், அவர்களைக் கண்காணிக்கும் சபையாகவும் விளங்கியது. இவ்வாறு இருந்தும், வைசிராய்களில் பலர் கொடுங்கோலர்களாகவும், ஊழல் மலிந்தவர்களாகவும் காணப்பட்டனர். ஆகவே, அவர்களுடைய ஆட்சியினின்றும் விடுதலை பெற்று, மக்கள் உரிமைகளைக் காக்கும் வகையில் ஆட்சிமுறையை அமைக்க பல தலைவர்கள் முன்வந்தனர். பிரேசிலிலும் மேற்கூறியவாறே ஆட்சி நடைபெற்றுவந்தது. அதன் தலைவரான கவர்னர் ஜெனரலின்கீழ்ப் பல காப்டன்கள் பணியாற்றினர். காப்டன்கள் பெரும் அதிகாரங்கள் பெற்றிருந்தார்கள். மைய அரசு பலமற்றதாக இருந்ததால் புரட்சி வெற்றிகரமாக நடைபெறலாயிற்று. மேலும், கவர்னர் ஜெனரலும் அவருக்குக் கீழிருந்த அதிகாரிகளும், பிற்போக்காளர்களாகவும், திறமையற்றவர்களாகவும், ஊழல் நிறைந்தவர்களாகவும் இருந்தார்கள்.

சமுதாய அமைப்புமுறையில் இருந்த சீர்கேடுகள் புரட்சிக்குக் காரணங்களாய் அமைந்தன. ஸ்பானிய அமெரிக்காவில் மக்கள்

நான்கு பிரிவுகளாக இருந்தனர். ஸ்பெயினில் பிறந்து அமெரிக்காவில் தங்கிய ஸ்பானியர்கள் எல்லா உயர்பதவிகளையும் வகித்திருந்தனர். அவர்கள் மதஸ்தாபனம், படை, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றையும் அவர்களுடைய கட்டுக்குள் வைத்திருந்தனர். அவர்கள்தாம் பெரிய வியாபாரிகளாகவும் விளங்கிவந்தனர். அவர்கள் மற்றவரைத் தாழ்ந் தவர்களாகக் கருதினார்கள். அவர்களுக்கு அடுத்தவர்கள் கிரியோல் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் அமெரிக்காவில் பிறந்த ஸ்பானியர்களாவர். அவர்கள் விளைநிலங்களையும் சுரங்கங்களையும் அதிக அளவில் பெற்றிருந்தனர். அரசியல், மதம் ஆகிய துறை களில் சிறு பதவிகளை வகித்திருந்தனர். நகரசபைகளில் அங்கத்தினர் களாகப் பணியாற்றினார்கள். ஐரோப்பாவில் பிறந்த ஸ்பானியர் களுக்குச் சிறப்புரிமைகள் வழங்கப்பட்டதால் அவர்கள் வெறுப்படைந் திருந்தார்கள். அவர்கள் ஸ்பானிய ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகளின் தலைவர்களாக விளங்கினார்கள். அவர்களுக்கு அடுத்தாற்போல் மெஸ்டிஜோஸ் என்னும் வகுப்பினர் இருந்தார்கள். அவர்கள் ஸ்பானியர்களுக்கும் இந்தியர்களுக்கும் பிறந்தவர்களாவர். அவர்கள் சிறு தொழில்களிலும், பயிர்த்தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். பெரும்பாலான மக்கள் இந்தியர்கள் இனத்தைச் சார்ந்தவராவார்கள். அவர்கள் மிகவும் ஏழைமையான நிலையில் இருந்தனர். கடுமையான உழைப்புத் தேவைப்படும் வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். கிறித்துவ மதஸ்தாபனம் மதத்தைப் பரப்பக் கடுமை யான முறைகளைக் கையாண்டது. இதே மாதிரியான சமூக அமைப்பு பிரேசிலிலும் இருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, ஐரோப்பாவில் பிறந்த ஸ்பானியர், போர்ச்சுகீசியர் ஆகியோர்களையும், அமெரிக்காவில் பிறந்த ஸ்பானியர், போர்ச்சுகீசியர் ஆகியோர்களையும் பிரித்து, அவர்களுள் முதலாவது கூறப்பட்டவர்களுக்குத் தனிச் சலுகைகளைக் காட்டிய அரசாங்கத்திற்கு எதிராகவே கிளர்ச்சிகள் ஸ்பானிய தென் அமெரிக்காவிலும் பிரேசிலிலும் தோன்றின.

மேலும், வியாபாரத் துறையிலும் இம் மக்களிடம் மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. குடியேற்ற நாடுகள் தாய்நாடுகளின் நன்மைக் காகவே பயன்படுத்தப்பட்டன. அவைகள் பிற நாடுகளுடன் வியா பாரம் செய்வதைத் தாய்நாட்டின் அரசாங்கம் தடுத்தது. சில பொருள் களை விற்கும் உரிமையை அரசாங்கமே பெற்றிருந்தது. குடியேற்ற நாடுகளில் தொழில்கள் பெருகுவதைத் தடைசெய்தது. அதற்காக மூலப்பொருள்களைத் தாய்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யுமாறு கட்டளை யிட்டது. குடியேற்ற நாடுகளின் தொழில்கள் தாய்நாட்டுத் தொழில் களுடன் போட்டியிடுவதைத் தடுக்க, குடியேற்றத் தொழில்களின்மீது அதிக வரி விதித்திருந்தது. மேலும், குடியேற்ற நாடுகளில் வாழும் மக்கள்மீது ஏராளமான வரி விதிக்கப்பட்டிருந்தது. அதனால் அம்

மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைய வாய்ப் பில்லாதுபோயிற்று.

மேலும், லத்தீன் அமெரிக்காவில் முற்போக்குக் கருத்துகள் நுழைய ஆரம்பித்தன. பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த தால், அவைகள் மூலமாக அறிஞர்கள் பலரின் கருத்துகள் சில மக்களிடம் பரவின. அக் காலத்தில் செய்தித்தாள்கள் வெளியிடப் பட்டன. மேலும் பல அச்சகங்கள் தோன்றின. அவைகள் புரட்சிக் கருத்துகளை மக்களிடம் பரப்புவதற்குப் பெருமளவில் உதவி செய்தன. செய்தித்தாள்கள், சிறு வெளியீடுகள் அக் காலத்தில் நடை பெற்ற புரட்சிகளைப்பற்றி விரிவாக எடுத்துக்காட்டின. அமெரிக்க சுதந்திரப் போரும் ஃபிரஞ்சுப் புரட்சியும் அவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன.

ஸ்பெயினை நெப்போலியன் கைப்பற்றியதே புரட்சிக்கு உடனடி யான காரணம் ஆகும். ஸ்பெயின் அரசு நெப்போலியன் கைவச மாயிற்று என்ற செய்தியை ஸ்பானியக் குடியேற்ற நாடுகளுக்கு ஃபிரஞ்சுத் தூதுவர்களின் வாயிலாக அறிவிக்கப்பட்டது. அத்துடன் ஃபிரஞ்சு அரசாங்கம், அங்கு ஆட்சி புரிந்த வைசிராய், காப்டன் ஜெனரல்கள், கவர்னர்கள், மற்றுமுள்ள அதிகாரிகளை ஸ்பெயின் நாட்டின் புதிய அரசரான ஜோசப் போனபார்ட், அவர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கிய செய்தியையும் அறிவித்தது. இதனால் ஸ்பானிய மக்கள் கொதித்தெழுந்தனர். ஆகவே, முதன்முதலில் கிளர்ச்சி ஃபிரான்சுக்கு எதிராக ஏற்பட்டது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஸ்பெயினில் ஃபிரான்சுக்கு எதிராகக் கிளர்ச்சி ஏற் பட்டபோது, ஸ்பானிய அமெரிக்கர்கள் அக் கிளர்ச்சிக்குப் பேராதரவு அளித்தார்கள். நாளடைவில் இங்கு ஏற்பட்ட கிளர்ச்சிகள் ஸ்பெயி னுக்கு எதிராகத் திருப்பப்பட்டன.

முதன் முதலில் கிளர்ச்சி சார்காஸில் (Charcas) தொடங்கியது. கிரியோல்களைக் கொண்ட ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஆனால், விரை வில் கிளர்ச்சி அடக்கப்பட்டது. லாபாசிலும் (Lapaz) கிரியோல்களைக் கொண்ட ஆட்சி அமைக்கப்பட்டது. கீடோவின் (Quito) தலைவர் பதவியை இழந்தார். ரியோ தெ லா பிலாடா (Rio de la Plata) என்னும் பகுதியில் ஸ்பானியரின் ஆட்சி அழிக்கப்பட்டது. அங்குள்ள சார்காஸ் ஒன்றில்தான் ஸ்பானியர்கள் தங்களுடைய ஆட்சியை நிலை நிறுத்த முடிந்தது. இதற்கிடையே பிலாடாவில் ஸ்பானியர்களை எதிர்த்த மாகாணங்களை ஒன்றுசேர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால், அம் முயற்சி வெற்றி பெறவில்லை. அதனால் லாபிலாடா பகுதி யில் ஆர்ஜென்டைனா, உருகுவே, பராகுவே என்ற தனி நாடுகள்

அமைக்கப்பட்டன. மேலும், பெருவிலிருந்த ஸ்பெயின் அரசருடைய ஆதரவாளர்கள் புதிய ஆட்சிக்குத் தொல்லை கொடுத்துவந்தனர். அவர்களை ஒழித்தாலொழிய பிலாடா சுதந்திரமாக இருக்க முடியாது என்ற கருத்து வளரலாயிற்று. இதற்கிடையில் சான்மார்டின் பிலாடா வின் ஆட்சிக்கு ஆதரவளித்தார்.

மார்டின் புரட்சித் தலைவர்களுள் ஒருவர். 1778-ல் இவர் லா பிலாடா என்னுமிடத்தில் பிறந்தார். அவருடைய தந்தையார் இராணுவத்தில் சேர்ந்திருந்ததால், இவரும் இராணுவத்தில் சேர்த்துவிடப்பட்டார். ஸ்பெயினில் சில காலம் வாழ்ந்துவந்தார். ஸ்பெயின் படையில் சேர்ந்து வட ஆப்பிரிக்காவில் சண்டை செய்தார். தீபகற்பப் போரில் நெப்போலியனுக்கு எதிராகச் சண்டை செய்தார். இராணுவ விவகாரங்களை மிகுந்த அக்கறையுடன் படித்துவந்தார். 1812-ல் அவர் தாய்நாடு திரும்பினார். அப்பொழுது நடந்துகொண்டிருந்த கிளர்ச்சிகளில் ஈடுபட்டார். அவர் பிலாடா அரசாங்கத்திற்குப் புரிந்த உதவியின் காரணமாக குயோ (Cuyo) என்னும் பகுதிக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார். நன்னெறிகளையே கடைப்பிடித்துவந்தார். எவ்வித இன்னல்களையும் பொறுமையுடன் சகித்துக்கொள்வார். எவ்வித வேலையை மேற்கொண்டாலும், அதைப் பொறுமையுடனும் ஒழுங்காகவும் செய்து முடிக்கும் திறனுடையவர். ஆகவே, அவர் பத்தொன்பதாம் ஆண்டில் தோன்றிய தலைசிறந்த புரட்சித் தலைவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். நாட்டின் நன்மைக்காகவும் சுதந்திரத்திற்காகவுமே போரிட்டவர். சுயநலத்தில் அவருக்குப் பற்றேயில்லை என்று கூறலாம்.

வெனிசூயிலாவிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. அதை அறிந்த மற்றொரு தலைவர் (Miranda) நாடு திரும்பிக் கிளர்ச்சியில் பங்குகொள்ள முற்பட்டார். அவர் 1756-ல் காரகாஸ் என்னுமிடத்தில் பிறந்தார். ஐரோப்பாவில் பல ஆண்டுகள் செலவழித்தார். ஐரோப்பிய மன்னர்கள், அமைச்சர்கள் ஆகியோர்களில் பலரை அறிந்திருந்தார். அவர் ருஷ்யாவின் பேரரசியான காதரைன் என்பவரின் அன்பைப் பெற்றிருந்தார். ஃபிரஞ்சுப் புரட்சியின்போது ஃபிரஞ்சுப் படையில் சேர்ந்து, சண்டையிட்டார். அமெரிக்காவில் சுதந்திரப் போர் ஏற்பட்டபோது, ஸ்பெயின் அமெரிக்கர்களுக்கு உதவியாக அனுப்பிய படையில் கலந்துகொண்டார். உலக வரலாற்றில் சிறந்து விளங்கும் இரு புரட்சிகளில் ஈடுபட்டிருந்ததால், அப் புரட்சிகளின் கருத்துகளை அவர் பெற்றிருக்க ஏதுவாக இருந்தது. அதற்கு முன்னரே அவர் ஸ்பானிய அமெரிக்கா முழுவதும் சுதந்திரம் பெறவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதன் பிறகு பல இரகசியக் குழுக்களை ஏற்படுத்தினர். அவர் நோக்கம் நிறைவேறுவதற்காக அயல்நாட்டினருடைய உதவியை நாடினர்.

இறுதியில் ஒரு படையை அமெரிக்காவினின்றும் வெனிசூயீலாவிற்கு நடத்திச் சென்றுர். ஆனுல், அவர் முயற்சி வெற்றி பெறவில்லை.

வெனிசூயீலாவில் கிளர்ச்சி ஏற்பட்டதை அறிந்த மிராண்டா நாடு திரும்பினுர். அதே நேரத்தில் சைமன் பொலிவர் என்ற மற்றெரு பெருந் தலைவர் வெனிசூயீலாவிற்குத் திரும்பினுர். இவர் மார்டினைப் போலவோ அல்லது மிராண்டாவைப்போலவோ இராணுவத்தில் பணியாற்றியவர் அல்லர். செல்வம் கொழித்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் வறுமையுற்ற நிலையில் இறந்தார். அவர் தன் செல்வம் முழுவதையும் நாட்டின் விடுதலைக்காகச் செலவழித்தார். செல்வம் ஏராளமாகப் பெற்றிருந்ததால் அவர் வெளிநாடுகளில் கல்வி பயில முடிந்தது. கியூபா, மெக்ஸிகோ, ஃபிரான்சு ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்திருந்தார். சில காலம் ஸ்பெயினில் வாழ்ந்துவந்தார். அதனுல் ஊழல் நிறைந்த ஸ்பானிய அரசருடைய ஆட்சிமுறையை நேரடியாகப் பார்த்து உணர்ந்துகொள்ள முடிந்தது. 1802-ல் அவர் தன் நாடு திரும்பினுர். சில காலம் கழிந்து அவர் தனது மனைவியை இழந்தார். அதனுல் ஏற்பட்ட வருத்தத்தைப் போக்குவதற்காக ஐரோப்பா திரும்பிச் சென்றுர். களியாட்டங்களில் ஈடுபட்டும் அவருடைய வருத்தம் குறையவில்லை. ஆகவே, அவர் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தார். அப்பொழுது தற்செயலாக அவருடைய ஆசிரியரைச் சந்திக்க நேர்ந்தது. அதன் விளைவாக உயிரைப் போக்கிக்கொள்ளும் முயற்சியைக் கைவிட்டு நாட்டின் விடுதலைக்காக உயிரையே அர்ப்பணிக்கத் துணிந்தார். அதற்காக ஒரு கப்பற்படையையும் ஒரு படையையும் திரட்டினுர். மிக ஒல்லியான உருவத்தைப் பெற்றிருந்தாலும், மிகக் கொடூரமாக நடக்கும் தன்மையைப் பெற்றிருந்தார். அவர் தென் அமெரிக்காவின் வாஷிங்டன்[1] என்று அழைக்கப்படுகிருர்.

மிராண்டாவும் பொலிவரும் கலந்து வெனிசூயீலாவை சுதந்திர நாடாக்கத் திட்டமிட்டனர். அதற்கென ஓர் அரசியலமைப்புத் திட்டத்தையும் வகுத்தார்கள். இத் திட்டம் அமெரிக்காவின் அரசியல் திட்டத்தையும், ஃபிரஞ்சுக்காரர்களின் மனித உரிமைகளின் அறிக்கையையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனுல், ஸ்பானிய அரசாங்கம் அக் கிளர்ச்சியை அடக்க முற்பட்டது. அதுபோது மிராண்டாவிற்குப் பெரும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. போரில் மிராண்டா தோல்வியுற்றுர். ஆகவே, பகைவர்களுக்கு அடிபணிய நேர்ந்தது. புரட்சிக்காரர்கள் அவரை வெறுக்கலாயினர். அவர்கள் அவரைக் கைப்பற்றி ஸ்பானியர்களிடம் ஒப்படைத்தார்கள். ஸ்பானிய அரசாங்கம் அவரை

[1] H. G. Wells, 'The Outline of History', p. 940. (H. G. வெல்ஸ், 'வரலாற்றின் சுருக்கம்', பக்கம் 940.)

காடிஸ் (Codiz) சிறையிலடைத்தது. அச் சிறையிலேயே அவர் உயிர் நீத்தார்.

பொலிவர், வெனிசூயீலாவினின்றும் நியூ கிரனேடாவிற்கு ஓடினூர். அங்கு காரகாஸ் என்னுமிடத்தைக் கைப்பற்றிச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர் என்ற சிறப்புப் பெயர் பெற்ருர். ஆனுல், ஸ்பானியர்கள் அங்கு ஏற்பட்ட கிளர்ச்சியையும் அடக்கினுர்கள். பொலிவர் ஜமெய்கா விற்கு ஓடவேண்டியதாயிற்று. சிலி, சான் சால்வடோர், மேற்கு ஃபிளோரிடா, நியூ ஸ்பெயின் ஆகிய இடங்களிலும் கிளர்ச்சிகள் ஏற் பட்டன. நியூ ஸ்பெயினில் ஹிடால்கோ என்ற மதகுரு கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினுர். முடிவில் இக் கிளர்ச்சிகள் அனைத்தும் ஒடுக்கப் பட்டன. ஹிடால்கோ கைப்பற்றப்பட்டுக் கொல்லப்பட்டார். பெருவில் ஸ்பானியர்கள் ஆதிக்கம் எவ்வித எதிர்ப்புக்கும் உள்ளாகவில்லை. இவ்வாருக 1816ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட கிளர்ச்சிகள் பெரும்பாலும் அடக்கப்பட்டன.

ஸ்பானிய ஆதிக்கம் பெருவில் (Viceroyalty of Peru) வலிமை பெற்றிருந்ததால், அங்கிருந்து தென் அமெரிக்காவின் தெற்குப் பகுதி களில் தோன்றும் சுதந்திர இயக்கங்கள் நசுக்கப்படக் காரணமாய் இருந்தது என்று பலர் அறிந்திருந்தனர். அவர்களுள் சான் மார்டின் ஒருவராவார். ஆகவே, அதனுடைய தெற்குப் பகுதியான சிலியைத் தாக்க மார்டின் முனைந்தார். 1817-ல் சாகாபூகோ (Chacabuco) என்னுமிடத்தில் ஸ்பானியர்களைத் தோற்கடித்தார். அங்குள்ள நகர மக்கள் அவரைச் சிலியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனுல், அப் பதவியை அவருடைய தளகர்த்தரான ஓ' ஹிக்கின்ஸ் (O' Higgins) என்பவருக்கு அளித்துவிட்டார். சிலி சுதந்திர நாடாக அமைக்கப்பட்டது. அதன் சுதந்திரம் நிலையாக அமைக்கத் தென் புறத்திலுள்ள ஸ்பானிய ஆட்சியின் ஆதரவாளர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்று எண்ணினுர். மாய்பூ (Maipu) என்னுமிடத்தில் அவர்களைத் தோற்கடித்துச் சிலியின் சுதந்திரத்தை நிலையாக அமைத்தார்.

அதன் பிறகு பெரு ஆட்சிப் பிரிவின் வடபகுதியை நோக்கி முன்னேறினுர். அதற்காக ஒரு கப்பற்படையைத் தயாரித்தார். பெரு வின் கடற்கரைப் பகுதி முற்றுகையிடப்பட்டது. ஸ்பெயினுக்குச் சொந்தமான கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. பெருவினுடைய வியா பாரம் பல இன்னல்களுக்குட்படுத்தப்பட்டது. எனினும், மார்டின் அதிகமான இரத்தம் சிந்தாமல் அவருடைய நோக்கத்தை நிறை வேற்றிக்கொள்ள வேண்டும் என்று கருதினுர். ஆகவே, நேரடித் தாக்குதலை ஒத்திப்போட்டுக்கொண்டு வந்தார். சிறு வெளியீடுகளை

அச்சிட்டு ஸ்பெயினுக்கு விரோதமாக மக்களைக் கிளர்ச்சி செய்யுமாறு ஊக்குவித்தார். அவரது திட்டம் வெற்றிபெற்றது. லீமாவினின்றும் (பெருவின் தலைநகரம்) ஸ்பானியப் படை வெளியேறியது. அங்கு நடைபெற்றுவந்த அரசாங்கம், அதைப் பின்தொடர்ந்தது. மார்டின் பெருவின் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஆனால், ஸ்பானியர்கள் பெருவின் ஒரு பகுதியில் பலம்பெற்று இருந்தார்கள். அவர்களைப் போரிட்டு வெளியேற்றவேண்டும் என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. அதனால் அவருடைய ஆதரவாளர்களில் பலர் அவரை வெறுக்க ஆரம்பித்தனர். ஆதலால், பொலிவருடைய உதவியை மார்டின் நாட வேண்டியதாயிற்று.

இதற்கிடையில் பொலிவர் அங்கோஸ்டுரா (Angostura) என்னுமிடத்தைத் தளபதி அலுவலகமாக ஏற்படுத்திப் படைகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார். பிறகு நியூ கிரானடா ஆட்சிப் பிரிவிலுள்ள (Viceroyalty of New Granada) போகோடா (Bogota) என்னுமிடத்தைக் கைப்பற்ற முனைந்தார். ஸ்பானிய ஆதரவாளர்களை போயாகா (Boyaca) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அதன் பயனாக போகோடா அவர் கைவசமாயிற்று; நியூ'கிடோனே சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் வெனிசூயிலாவை நோக்கிப் படை நடத்திச் சென்றார். காராபோபோ (Carabobo) என்னுமிடத்தில் வெற்றி பெற்றார். அதனால் வெனிசூயிலா சுதந்திரமடைந்தது. அதே நேரத்தில் அவர் படைத் தலைவருள் ஒருவரான சுக்ரே (Sucre) என்பவர் கீடோவில் பிசின்சா (Pichincha) என்னுமிடத்தில் வெற்றிபெற்றுக் கீடோவைத் தன் ஆளுகைக்குட்படுத்தினார். கீடோவில் தகராறுகள் ஏற்படுவதை அறிந்த பொலிவர் கீடோ வருமுன்னரே, அவர் தளபதி அதைக் கைப்பற்றி விட்டார். ஆகவே, ஈக்வேடார் சுதந்திரமடைந்தது. இவ்வாறாகத் தென் அமெரிக்காவின் வட பாகத்தினின்றும் ஸ்பானியருடைய ஆட்சி விரட்டப்பட்டது. இம் மூன்று பகுதிகளையும் இணைத்துப் பெரிய கொலம்பியா என்ற பெயரில் கூட்டமைப்பு ஒன்றைப் பொலிவர் ஏற்படுத்தினார். ஆனால், 1830-ல் அது கலைக்கப்பட்டது. அதன் விளைவாகக் கொலம்பியா, வெனிசூயிலா, ஈக்வேடார் என்ற நாடுகள் ஏற்படுத்தப்பட்டன.

அதற்கிடையில் சான் மார்டின் பெருவில் ஸ்பானிய ஆதரவாளர்களை ஒழிக்க பொலிவருடைய உதவியை நாடினார். இரு தலைவர்களும் 1822-ல் சந்தித்தார்கள். மார்டின் வரம்புக்குட்படுத்தப்பட்ட மன்னராட்சியை விரும்பினார். பொலிவர் குடியாட்சியை விரும்பினார். மேலும், பொலிவர் ஆதிக்க மனப்பான்மையைக் கொண்டவர். அவரது கருத்துகளை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையற்றவர். ஆனால், மார்டின் எந்தவித ஆசையும் இல்லாதவர். அவருக்கும் பொலிவருக்கும்

இடையே ஒற்றுமை வளர வாய்ப்பு இல்லை என்று அறிந்த மார்டின், தனது ஒரே மகளுடன் ஃபிரான்சுக்குச் சென்றுவிட்டார். 1850-ல் அவர் உயிர்நீத்தார். நாட்டின் நன்மைக்காக சுயநலத்தை விட்டுக்கொடுத்த மேதைகளில் இவர் ஒருவராவார்.

பொலிவரும் சுக்ரேவும் பெருவிலிருந்த ஸ்பானிய ஆதரவாளர்களை அழிக்க முற்பட்டனர். ஜுனின் (Junin) என்னுமிடத்தில் அவர்களைத் தோற்கடித்தார்கள். சுக்ரே மீண்டும் ஒரு முறை அயாகுசோ (Ayacucho) என்னுமிடத்தில் தோற்கடித்தார். பெரு, சாரகாஸ் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேற ஸ்பானியர்கள் இசைந்தார்கள். சுக்ரே காரகாஸ் என்னும் பகுதியைச் சுதந்திர நாடாக்கினர். அதற்கு 'பொலிவியா' என்ற பெயர் கொடுத்தார். முதலில் பெருவும் பொலிவியா வும் இணைந்திருந்தன. 1839-ல் அவ்விரு நாடுகளும் தனி அரசுகளை ஏற்படுத்தின. இவ்வாறு ஸ்பானியத் தென் அமெரிக்கா சுதந்திரம் பெற்றது. அதற்கெனப் பாடுபட்ட பொலிவர் 1830-ல் சான்டா மார்டா (Santa Marta, near Columbia) என்னும் இடத்தில் உயிர்நீத்தார்.

ஸ்பெயினுக்குச் சொந்தமான வட அமெரிக்காவின் தென்பகுதி, நடு அமெரிக்கா ஆகிய இடங்களிலும் அதனுடைய ஆட்சி அகற்றப் பட்டது. 1820-ல் ஸ்பெயினில் புரட்சி ஏற்பட்டது. அப் புரட்சியால் கத்தோலிக்க மத ஸ்தாபனமும், உரிமைகள் பெற்ற பெருமக்களும் பாதிக்கப்பட்டனர். அப் புரட்சியால் ஏற்பட்ட திருத்தங்கள் மெக்ஸி கோவிலும் புகுத்தப்பட்டால் மெக்ஸிகோவில் வாழ்ந்துவந்த பெரு மக்களின் உரிமைகளும் சொத்துகளும் பறிபோய்விடும் என்ற பயம் அவர்களிடையே ஏற்பட்டது. ஸ்பெயினுக்கும் மெக்ஸிகோவிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட இணைப்பு துண்டிக்கப்பட்டால் அத்தகைய ஆபத்து நேராது என்று கருதினர்கள். ஆகவே, சுதந்திரம் கோரிக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். இவர்களது நோக்கம் அரசியல், சமூகம் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்துவதைத் தடுப்பதேயாகும். அவர்களை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட படை யாதொரு வெற்றி யும் பெறவில்லை. எனவே, மெக்ஸிகோவின் அரசப் பிரதிநிதி இல்டுர்பைட் (Ilturbide) என்பவரைத் தளபதியாக்கினர். அவர் நியூ ஸ்பெயினில் பிறந்தவர். அவர் கிரியோல் வகுப்பைச் சார்ந்தவர். போர்த்துறையில் மிகவும் திறமை வாய்ந்தவர். அவர் ஒரு சமயம் படைத்தலைவராகப் பணியாற்றியவர். சில குற்றங்கள் அவர்மீது சாட்டப்பட்டதால், அவர் விசாரணையின்றிப் பதவியினின்றும் விலக்கப்பட்டார். அதனல் அவர் அரசாங்கத்திடம் வெறுப்புக்கொண்டிருந்தார். இப்பொழுது தலைமைப் பதவி கிடைத்தவுடன், கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்குப் பதிலாக அவர்களுடன் சேர்ந்து ஸ்பானிய அரசாங்கத்தின்மீது பழிதீர்த்துக் கொள்ள முற்பட்டார். அதனல் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து

கொண்டார். மெக்ஸிகோ சுதந்திர நாடாகவும், ஒன்றுபடுத்தப்பட்ட நாடாகவும் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அது பூர்போன் குலத்தைச் சார்ந்த ஒருவரால் ஆட்சி செய்யப்படவேண்டும் என்றும், அவ்வாட்சி அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடைபெற வேண்டும் என்றும் முடிவுகட்டப்பட்டது. அதனால் எல்லா நகரங்களும் இல்டுர்பைட்டை வரவேற்றன. மெக்சிகோவிலிருந்த ஸ்பானிய அரசாங்கம் வேறு வழியின்றிச் சரணடைந்தது. பூர்போன் குலத்தைச் சார்ந்தவர்களை அரசராக அமர்த்தும் திட்டத்தை ஸ்பெயின் அங்கீகரிக்கவில்லையாதலால், இல்டுர்பைடே பேரரசர் என்ற பட்டத்தை 1822-ல் சூட்டிக் கொண்டார். ஸ்பானிய நடு அமெரிக்கா மெக்சிகோவின் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. ஆகவே, ஸ்பானிய நடு அமெரிக்கா மெக்சிகோ பேரரசுடன் இணைந்தது. ஆனால், சில காலத்திற்கெல்லாம் அது இரு பிரிவுகளாகப் பிரிந்தது—மெக்சிகோ, மத்திய அமெரிக்க நாடுகளின் கூட்டிணைவு. சில ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அமெரிக்கர்களின் கூட்டிணைவு ஐந்து நாடுகளாகப் பிரிந்தன—குவாதமாலா, எல் சால்வடார், ஹொண்டுராஸ், நிகாராகுவா, காஸ்டாரீகா.

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான எஸ்பானேலாவிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. அத் தீவின் மேற்குப் பகுதியில் ஃபிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த கறுப்பர்கள் 1804-ல் சுதந்திர அரசை ஏற்படுத்தினார்கள். அதற்கு 'ஹைதி' (Haiti) என்று பெயர் வழங்கலாயிற்று. கிழக்குப் பகுதியிலிருந்த ஸ்பானியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பகுதியும் அதனுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. ஆனால், 1844-ல் அப் பகுதி டாமினிகன் குடியரசு என்ற பெயரில் தனிநாடாக ஏற்படுத்தப்பட்டது. 1895-ல் ஸ்பெயினுக்கும், அதனுடைய குடியேற்ற நாடான கியூபாவிற்கும் போர் ஏற்பட்டது. அப் போரில் அமெரிக்கா கலந்துகொண்டு அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த ஸ்பானிய ஆதிக்கத்தை ஒழித்தது. இன்று கியூபா தனிநாடாக விளங்குகிறது. அவ்வாறே அமெரிக்க ஐக்கிய நாடுகள், கொலம்பியாவிலின்றும் பனாமா பிரிந்து 1903-ல் சுதந்திர நாடாவதற்குக் காரணமாயிருந்தன.

ஸ்பானிய அமெரிக்க நாடுகள் சுதந்திர இயக்கம் ஆரம்பித்த காலத்தில் பிரேசில் மக்களும் சுதந்திரம் பெற ஆசைப்பட்டார்கள். 1808 வரை பிரேசில் அரசப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டுவந்தது. 1808-ல் நெப்போலியன் போர்ச்சுகலைத் தாக்கவே, அரச குடும்பத்தினர் பிரேசிலுக்குச் சென்றனர். முதலில் மக்கள் செல்வாக்கைப் பெற்ற அரச குடும்பம் நாளடைவில் அதை இழக்கத் தொடங்கியது. ஆறுவது ஜான் (John VI) போர்ச்சுகீசியருக்கே எல்லாப் பதவிகளையும் கொடுத்தார். அவர்களுடைய செலவுகள் அதிகமாக இருந்தன. பிரேசில்

மக்களுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் ஆங்கிலேயருக்கு வியாபாரச் சலுகைகள் அளித்தார். இதற்கிடையில் போர்ச்சுகல் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. மக்கள், அரசரைப் போர்ச்சுகல் வருமாறு வேண்டினார்கள். ஜான் தயங்கினார். அதை அறிந்த பிரேசில் மக்களும் அரசருடைய அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என்று கோரிக் கிளர்ச்சி செய்தார்கள். அதன் பயனாக மக்கள் சபை ஒன்று கூட்டப்பட்டது. அச் சபை பல உரிமைகளை மக்களுக்கு அளிக்குமாறு கோரியது. 1821-ல் ஜான் பிரேசிலைவிட்டுச் சென்றார். அவர் மகன் பெட்ரோ பிரேசிலிலேயே தங்கினார். ஜான் பிரேசிலுக்கு அளித்திருந்த உரிமைகளைப் போர்ச்சுகீசியப் பாராளுமன்றம் ரத்து செய்தது. ஆகவே, பிரேசிலில் புரட்சி ஏற்பட்டது. புரட்சியின் பயனாக பிரேசில் சுதந்திர நாடாக அமைக்கப் பட்டது. பெட்ரோ, பேரரசர் என்ற பட்டத்துடன் சுதந்திர பிரேசிலின் தலைவரானார். போர்ச்சுகீசிய இராணுவப் படைகள் பிரேசிலினின்றும் விரட்டப்பட்டன.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்நாட்டுப் போர்

ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றினைப்பற்றி முன்னர் கவனித்தோம். அந்த நாட்டின் ஒற்றுமையை அழிக்கத்தக்க வகையில் 1861-ல் உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்பட்டது. அப் போரின் விளைவாக நாட்டின் ஒற்றுமை நிலைநிறுத்தப்பட்டது. அத்துடன் புதிய அமெரிக்காவையும் அப் போர் உருவாக்கியது. அத்தகைய சிறப்புப் பெற்ற விளைவுகளை உண்டாக்கிய போரைப்பற்றி இப்பொழுது கவனிப்போம்.

அமெரிக்க உள்நாட்டுப் போர் ஏற்படப் பல காரணங்கள் இருந்தன. அடிமைப் பிரச்சினை இதற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. ஐரோப்பியர்கள் அமெரிக்காவில் குடியேறி விவசாயத் தொழிலில் ஈடுபட்டபோது அவர்களுக்கு உதவியாகப் பல அடிமைகளை ஆப்பிரிக்காவினின்றும் இறக்குமதி செய்தார்கள் என்று முன்னரே கூறினோம். அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்பட்டபோது, பொதுவாக எல்லாக் குடியேற்ற நாடுகளிலும் அடிமைகள் இருந்தனர். ஆனால், நாளடைவில் வடக்கிலிருந்த குடியேற்ற நாடுகளில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. ஆகவே, சில கூட்டரசு உறுப்பு நாடுகள் அடிமைத்தனத்தை ஒழித்த நாடுகள் என்றும், வேறு சில கூட்டரசு உறுப்பு நாடுகள் அடிமைத் தனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள் என்றும் பிரிந்திருந்தன. இவைகளைப் பிரிக்க அமைக்கப்பட்ட எல்லைக்கோடு 'மேசன்-டிக்ஸன் கோடு' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. 1787-ல் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட வடமேற்குப் பகுதி அடிமைத்தனம் அகற்றப்பட்ட கூட்டரசு உறுப்பு நாடாக ஏற்படுத்தப்பட்டது. ஒகியோ நதி இவ்விரு வகையான நாடுகளைப் பிரிக்கும் எல்லையாகக் கொள்ளப்பட்டது.

அடிமைத்தனம் அகற்றப்படவேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து வந்த நேரத்தில், பருத்தியிலிருந்து விதைகளை அகற்றும் இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதனுல் பருத்தி பயிர்செய்யும் தொழில் பெருகிற்று. ஆகவே, அடிமைகளை ஒழிக்கும் மனப்பான்மை அழிவுற்றது. அதற்குப் பதிலாக அடிமைகள் வைத்துப் போற்றக் கூடிய சொத்து என்ற கருத்து வளரலாயிற்று. ஆகவே, அடிமை ஒழிப்பை எதிர்க்கலாயினர். அச் சமயத்தில் அமெரிக்க அரசாங்கம் நெப்போலியனிடமிருந்து லூசியானுவைப் பொருள் கொடுத்து வாங்கியது. அதனுல் புதிதாகப் பெறப்பட்ட பகுதி எவ்வகையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்ற பிரச்சினை எழுந்தது. இறுதியில் மிசௌரி அடிமைகள் உடைய நாடாகவும், அதற்கு மேற்கேயுள்ள பகுதியில் 36° 30′ அட்சரேகையை அவ்விருவகை நாடுகளின் எல்லையாகவும் கொள்ள முடிவுசெய்தனர். பிறகு மெக்சிகோவுடன் மேற்கொண்ட போரின் பயனுக மேலும் பல இடங்கள் அமெரிக்க நாட்டுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆகவே, அடிமைகளைக்கொண்ட நாடுகளாக அவைகளைச் சேர்த்துக்கொள்வதா, அல்லது அடிமைத்தனம் அகற்றப்பட்ட நாடுகளாக ஏற்படுத்துவதா என்ற பிரச்சினை மீண்டும் எழுந்தது. மறுபடியும் இப் பிரச்சினைக்குத் தகராறு இல்லாமல் முடிவு காணப்பட்டது. கலிஃபோர்னியா அடிமைத்தனம் அகற்றப்பட்ட நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. மற்றப் பகுதிகளில் அப் பிரச்சினைக்கு அந்தந்த மக்களே தீர்வு காணவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, அடிமைகள் பிரச்சினை சமாதான முறையில் தீர்வுகாணக்கூடிய பிரச்சினையாகவே இதுவரை இருந்துவந்தது. அந்தச் சமயத்தில் ஸ்டீபன் டக்ளஸ் (Stephen Douglas) என்பவர் மிசௌரி நாட்டிற்கு மேற்கேயுள்ள பகுதிகளினின்றும் புதிய நாடுகளை ஏற்படுத்த முனேந்தார். அப்பொழுது மிசௌரி ஒப்பந்தத்தை ரத்து செய்தார். அதனுல் அடிமைத்தனம், அடிமைத்தனம் ஒழிக்கப்பட்ட நாடுகளிலும் பரவ வழி ஏற்பட்டது. மேலும், 1857-ல் அமெரிக்காவின் கூட்டரசின் மைய அமைப்பைச் சார்ந்த நீதிமன்றம், மிசௌரி ஒப்பந்தம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணுனது என்றும், அடிமைத்தனத்தைச் சட்டப்படி ஐக்கிய நாடுகளின் எப் பகுதியினின்றும் அகற்றமுடியாது என்றும் தீர்ப்புக் கூறியது. அதைத் தொடர்ந்து கிளர்ச்சிகளை வடக்கு நாட்டவர்கள் (Northerners) ஏற்படுத்திஞர்கள். 1854-ல் அடிமைத்தனம் பரவுவதை எதிர்க்கும் வகையில் கட்சியொன்று தோன்றியது. அதுதான் ரிபப்ளிகன் கட்சியாகும் (Republican Party). மேலும், வடநாட்டவர்கள் அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அடிமைத்தனத்தை அழித்துவிடுவார்கள் என்ற பயம் தென்னுட்டவர்களைப் பிடித்துக்கொண்டுவிட்டது. அந் நேரத்தில் ஆபிரகாம் லிங்கன் ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிமைத்தனத்தை அவர்

அறவே வெறுத்தவர் என்பதை அனைவரும் அறிவார்கள். அடிமைகளை வைத்திருப்பது தவறு இல்லை என்ருல், உலகத்தில் வேறெதுவுமே தவறில்லை என்ற கருத்துடையவர் அவர். மேலும், நாடு இரு பிரிவாக இருப்பதையும் அவர் விரும்பவில்லை. அமெரிக்க நாடு பாதி அடிமை யாகவும், பாதி சுதந்திரமாகவும் இருக்கமுடியாது என்று திட்டவட்ட மாகக் குறிப்பிட்டார். அத்தகையவர் ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட செய்தி தென்பகுதியினரைக் கலக்கத்தில் ஆழ்த்திவிட்டது.

அதே நேரத்தில் அடிமைகளை உடைமையாக வைத்திருக்கும் வழக்கம் பொருளாதாரக் காரணங்களால் தாளுகவே அழிந்துவிடும் என்றும் அவர் கருதினர். ஆகவே, எந்தெந்த நாடுகளில் அவ் வழக்கம் இருந்ததோ அங்கெல்லாம் அவ் வழக்கத்தில் தலையிடுவதில்லை என்று முடிவுசெய்திருந்தார். ஆகவேதான், அவர் பதவியேற்ற பிறகு தெற்குக் கரோலினு கூட்டமைப்பினின்றும் (Union) பிரிந்துசென்றபோது, கூட்டமைப்பைக் காப்பதற்காகப் போராடினரேயொழிய, அடிமை களுக்கு சுதந்திரம் வழங்கும் பிரச்சினைக்காக அன்று என்று கூறப்படு கிறது. 1862-ல் அவர் ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதினர்: ‘இந்தப் போரில் என்னுடைய தலைசிறந்த நோக்கம் கூட்டமைப்பைக் காப்பதேயன்றி, அடிமைகளை உடைமையாக வைத்திருக்கும் வழக்கத் தைக் காப்பாற்றுவதோ அல்லது அழிப்பதோ அன்று. ஓர் அடிமையைக் கூட விடுவிக்காமல் கூட்டமைப்பைக் காப்பாற்ற முடிந்தால், நான் அதைச் செய்வேன்; எல்லா அடிமைகளுக்கும் சுதந்திரம் கொடுத்து அதைக் காப்பாற்ற முடிந்தால், நான் அதைச் செய்வேன்; சில அடிமை களுக்குச் சுதந்திரம் கொடுத்து சிலரை அந் நிலையிலேயே விட்டு வைத்து அதைக் காப்பாற்ற முடிந்தால் நான் அதையும் செய்வேன்.’ இதனின்றும் உள்நாட்டுப் போருக்கு முக்கியக் காரணம் என்ன என்பது நன்கு விளங்கும்.

போர் ஏற்பட வேறு சில காரணங்களும் உண்டு. வடநாட்டவர் களுக்குத் தெற்குப் பகுதியில் வாழ்ந்தவர்கள் பலவிதங்களில் வேறு பட்டிருந்தனர். வட பகுதியிலுள்ளவர்களின் மூதாதையர்கள் மத விவகாரங்களில் சுதந்திரமாக வாழ்வதற்காகத் தாங்கள் பிறந்த நாட்டையே உதறிவிட்டு வந்தவர்களாவார்கள். அத்தகையோர் வழியில் வந்தவர்கள் சுதந்திரத்தில் பற்றுள்ளவராகவும், தன்னுட்சி முறையில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், முற்போக்கு எண்ணங் கொண்டவர்களாகவும் விளங்கியதில் வியப்பொன்றுமில்லை. ஆனல், தென் பகுதிகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் நாடி வந்தவர்கள். அவர்களில் அநேகர் பண்ணை முதல்வர்களாக இருந்தனர். அவர்கள் பிற்போக்குக் கருத்துகளைக் கொண்டவர்களாகவும், மேற்குடி தொடர்புடையவர்

களாகவும் இருந்தனர். பொருளாதாரத் துறையிலும் இவ்விருவகை மக்களுக்குமிடையே பெருத்த வேறுபாடுகள் இருந்தன. தென்பகுதி மக்கள் விவசாயத்திலும், வடபகுதி மக்கள் தொழில்துறையிலும் ஈடுபட்டிருந்தனர். ஆகவே, வடபகுதியினர் தங்களுடைய தொழில்களை வெளிநாடுகளின் போட்டிகளினின்றும் காப்பாற்றுவதற்காகக் காப்புவரி விதிக்குமாறு அரசாங்கத்தினரை வேண்டிக்கொண்டார்கள். ஆனால், காப்புவரி செயற்கைப் பொருள்களின் விலைகளை அதிகமாக்கிவிடும் என்று தென்பகுதி மக்கள் உணர்ந்திருந்ததால் அதனை எதிர்த்தார்கள். மத விவகாரங்களிலும் இவர்கள் வேறுபட்டவர்களாயிருந்தனர். வட பகுதியினர் பெரும்பாலும் பியூரிடன்களாவர். தென் பகுதியினர் பெரும்பாலும் கத்தோலிக்கர்களாகவும், ஆங்கிலிகன் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

போருக்கு உடனடியான காரணம் தென்கரோலினு கூட்டமைப்பிலிருந்து விலகியதேயாகும். அது பிரிந்துபோவதற்குக் காரணம் அடிமைப் பிரச்சினை என்று கண்டறிந்தோம். அதைத் தொடர்ந்து அலபாமா, ஃபிலோரிடா, மிசிசிபி, லூசியானு, டெக்ஸாஸ், ஜார்ஜியா அதனுடன் சேர்ந்துகொண்டு, புதியதொரு கூட்டாட்சியை (Confederacy) ஜெஃப்பர்சன் டேவிஸ் (Jefferson Davis) தலைமையின்கீழ் அமைத்தன. லிங்கன், கூட்டமைப்பை எப்படியும் காப்பாற்றுவது என்று முடிவு செய்தார்.

1861-ல் தென்கரோலினு கூட்டமைப்புக்குச் சொந்தமான ஃபோர்ட் சம்டர் (Fort Sumter) என்ற படைத்தளத்தைத் தாக்கியது. அப்படைத்தளத்திற்கு அதிபதியான ஆண்டர்சன், போதிய உணவுப் பொருள்களும் பிற பொருள்களும் இல்லாத காரணத்தால் சரண் அடைந்தார். லிங்கன் உடனே படையெடுப்பு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினுர். அவர் போக்கை எதிர்க்கும் வகையில் வர்ஜீனியா, வடகரோலினு டென்னெஸி (Tennessee), அர்கன்சாஸ் (Arkansas) ஆகியவைகளும் கூட்டமைப்பினின்றும் பிரிந்து சென்றன. வர்ஜீனியாவிலுள்ள ரிக்மாண்டு (Richmond) கூட்டாட்சியின் தலைநகரமாக்கப் பட்டது. வடக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் வாழ்ந்துவந்த இருபது மிலியன் மக்கள் ஆபிரகாம் லிங்கன் தலைமையினை ஏற்றுக் கொண்டார்கள். வடபகுதியினருக்குச் சில அனுகூலங்கள் இருந்தன. அவர்களிடத்தில் படைத்தளங்களும், கப்பற்படையும், பாதி சேனையும், தலைநகரமும், போர்க்கருவிகள் தயார் செய்யும் சாதனங்களும் இருந்தன. மேலும், அவர்களிடத்தில் அரசியல் அமைப்பும் இருந்தது. தென்பகுதியினரின் மொத்த மக்கள்தொகை 5½ மிலியன்களாக இருந்தது. ஆனால், அவர்களிடத்தில் திறமைமிக்க படைத்தலைவர்கள் இருந்தனர். அவர்களிடம் பிளவுகள் அதிகமாயில்லை. அவர்களிடம்

ஒழுங்குக் கட்டுப்பாடு சிறந்த நிலையில் இருந்தது. மேலும், அவர்களுக்கு வெளிநாடுகளின் உதவிபெற வாய்ப்பு இருந்தது. ஆனால், எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துப் பார்க்குமிடத்து, வடபகுதியினருக்கு வெற்றிக்கான அனுகூலங்கள் அதிகமாக இருந்தன.

பல அனுகூலங்களைப் பெற்றிருந்தபோதிலும், முதலில் வடபகுதியினரே போரில் தோல்வியுற்றனர். புல் ரன் (Bull Run) என்னும் இடத்தில் வடபகுதியினரைத் தோற்கடித்து, வர்ஜீனியாவை வடபகுதியினர் கைப்பற்றும் முயற்சியைத் தென்பகுதியினர் தோற்கடித்தனர். பிறகு தளபதி லீ (General Lee) என்பவர் தென்பகுதியினருக்கு மேலும் ஒரு வெற்றியை புல் ரன் (Second Battle of Bull Run) என்னுமிடத்தில் தேடித்தந்தார். அதன் பிறகு லீ, மேரிலாந்தின்மீது படையெடுத்தார். அப் படையெடுப்பைத் தடுக்க வடபகுதியினர் முற்பட்டார்கள். ஆன்டியேடம் (Antietam) என்னுமிடத்தில் நடந்த சண்டை யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. ஆனால், அச் சண்டை தென்பகுதியினரை மேரிலாந்தினின்றும் பின்வாங்கும்படி செய்தது. மேலும், அது லிங்கன் அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கும் அறிக்கையொன்றை விடுக்கப் பயன்பட்டது. அதன்படி கூட்டாட்சி முறைக்கு எதிராகப் போராடும் நாடுகளில் உள்ள அடிமைகளுக்குச் சுதந்திரம் அளித்தார். அதனால் தென்பகுதியில் வாழும் அடிமைகளைப் பறிமுதல் செய்து இராணுவத்தில் சேர்த்துக்கொள்ள முடிந்தது. மேலும், அடிமைத்தனம் ஒழிக்க அது பெரிதும் உதவியது. போர் முடியுமுன்னர் அடிமைத்தனத்தை ஆதரித்த பிரிவினை ஆதரவாளர்கள் அடிமைகளுக்குச் சுதந்திரம் அளித்துப் படையில் சேர்த்துக் கொண்டனர். மற்றும், இங்கிலாந்து போன்ற நாடுகளின் அன்பைப் பெற அது உதவியது. முற்போக்குக் கருத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட இங்கிலாந்தின் அரசாங்கம், அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காகப் போராடும் லிங்கனுக்கு எதிராக அடிமைகளைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்பும் தென்பகுதியினருக்கு உதவி செய்ய முடியாதல்லவா?

பின்வாங்கிய லீயைத் தோற்கடிக்க வடபகுதியினர் முயற்சி செய்தார்கள். ஆனால், அம் முயற்சியில் அவர்கள் தோல்வியுற்றனர். மீண்டும் லீ முன்னேறினார். இச் சமயம் அவர் பென்சில்வேனியாவின் மீது படையெடுத்துச் சென்றார். கெட்டிஸ்பர்க் (Getteysburg) என்னுமிடத்தில் பெருஞ் சண்டை நிகழ்ந்தது. அதில் வடபகுதியினரின் படைத்தலைவர் ஹூக்கர், லீயைத் தோற்கடித்தார். அதைத் தொடர்ந்து லிங்கன் சிறப்புப் பெற்ற சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

மிசிசிபி போர்முனையில் வடபகுதியினரின் படைத்தலைவரான கிரான்ட் (Grant) பல வெற்றிகளைப் பெற்றார். அவைகளுள் மிகச் சிறப்பு வாய்ந்தது விக்ஸ்பர்க்கைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப் பட்ட சண்டையாகும். அச் சமயத்தில் தென்பகுதியினருடைய சிறந்த தளகர்த்தருள் ஒருவரான ஸ்டோன்வால் ஜாக்சன் (Stonewall Jackson) இறந்தார். அதன்பிறகு மிசிசிபி நதியில் வடபகுதியின ருடைய கப்பல்கள் சுலபமாகத் திரிய வழி ஏற்பட்டது. மேலும், மிசிசிபி நதியின் மேற்கேயிருந்த பிரிவினை ஆதரவாளர்களையும், கிழக்கேயிருந்த பிரிவினை ஆதரவாளர்களையும் பிரித்துவிட அவருடைய வெற்றிகள் உதவின. அதனுல் கிழக்கேயிருந்த பிரிவினை ஆதரவாளர் கள் மேற்கிலிருந்து படைகளையும், இராணுவத் தேவையான பொருள் களையும் பெற முடியவில்லை. கிரான்ட் பிரிவினை ஆதரவாளர்களை சாட்டநூகா (Chattanooga) என்னும் இடத்தில் தோற்கடித்தார். அதன் பயனுக அவர் ஜார்ஜியா நாட்டிற்குள் புகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. மேலும், கப்பற்படையைப் பயன்படுத்தி நியூஆர்லியன்ஸ் துறைமுகத்தைப் பிரிவினையை எதிர்ப்பவர்கள் கைப்பற்றினுர்கள். மேலும், வெளிநாடுகளுக்கும் தென்பகுதி நாடுகளுக்கும் இடையே நடைபெற்றுவந்த வியாபாரத்தை அறவே தடுத்து நிறுத்தியது. ஆகவே, தென்பகுதி மக்கள் பெருங்கஷ்டத்திற்குள்ளாஞர்கள்.

இறுதியில் போர், வடகிழக்கு, தென்மேற்குப் பகுதிகளில் நடை பெற்றது. கிரான்ட், ரிச்மாண்டைக் கைப்பற்ற முனைந்தார். ஷெர் மான் என்ற மற்றெரு படைத்தலைவர் ஜார்ஜியாவிலுள்ள அட்லான்டா வைக் கைப்பற்ற முயன்ருர். ஷெர்மான் அட்லான்டாவைக் கைப்பற் றினுர். பிறகு ஜார்ஜியாவை அடக்குவதில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தினுர். அதன்பிறகு சாவன்ன (Savannah), சார்லஸ்டன் ஆகிய இடங்களைக் கைப்பற்றினுர். இதற்கிடையில் கிரான்ட், பீட்டர்ஸ் பர்க் என்னும் இடத்தைக் கைப்பற்றினுர். அதனுல் லீ ரிச்மாண்டை விட்டு வெளியேறத் தீர்மானித்தார். ஆனல், கிரான்ட் அவரைப் பின் தொடர்ந்து அப்போடொமாக்ஸ் (Appotomax) என்னுமிடத்தில் சரண் அடையச் செய்தார். அத்துடன் போர் முடிவுற்றது (1865).

அமெரிக்க உள்நாட்டுப் போர், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஏற் படுத்தப்பட்டிருந்த கூட்டரசை அழியவொட்டாமல் நிலைநிறுத்தியது. அக் கூட்டரசுக்கு அழிவற்ற தன்மையை அளித்தது. நாட்டில் ஒற் றுமை ஏற்படவும் அது காரணமாயிருந்தது. வடபகுதியும் தென் பகுதியும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டன. அதன் விளைவாகத் தேசியப் பண்புகள் வளரலாயின. அப் பண்புகள் நாளடைவில் முதிர்ச்சி பெற உதவியது உள்நாட்டுப் போரேயாகும்.

அப் போர் முதலில் வடபகுதியினருக்கும் தென்பகுதியினருக்கும் இடையே மனக்கசப்பை வளர்த்துவிட்டது. அது மறைவதற்குப் பல வருடங்கள் ஆயின. அரசியல் விவகாரங்களில் சகிப்புத்தன்மை வளரு வதைத் தடை செய்தது. இருபதாண்டுகளுக்குப் பிறகுதான் ஒருவர் குடியரசுத் தலைவராகத் (டெமோகிராடிக் கட்சியைச் சார்ந்தவர்) தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர்தான் தென்பகுதியினருள் ஒருவர் ஜனாதிபதியாக வர முடிந்தது. உள்நாட் டுப் போருக்கு முன்னர் தென்பகுதியினர்தாம் ஆட்சியில் வெகுவாகப் பங்குகொண்டிருந்தனர் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வது அவசியமாகும்.

தென்பகுதியின் ஆட்சிமுறை திருத்தி அமைக்கப்பட்டது. லிங்கன் சிறந்த அரசியல் மேதை ஆவார். அவர் ஆட்சிமுறையைத் திருத்தி அமைக்கும் வகையிலும், எல்லோருக்கும் நியாயத்தை வழங் கும் வகையிலும், யாரிடத்திலும் பகைமை உணர்ச்சியைக் காட்டாமலும் நடந்துகொள்வேன் என்று கூறினார். ஆனால், 1865-ல் அவர் தென் பகுதியைச் சேர்ந்த வெறியர் ஒருவரால் கொல்லப்பட்டார். அவருக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்தினர் தென்பகுதியினருக்குத் தண்டனை அளிக்கும் வகையில் ஆட்சியமைப்பைத் திருத்த முற்பட் டனர். தென்பகுதியை ஐந்து இராணுவப் பிரிவுகளாகப் பிரித்தனர். ஒவ்வொன்றிலும் ஒரு படைத்தலைவரை நியமித்தார்கள். அவருடைய ஆட்சிக்கு உதவியாகப் படைகள் நிறுத்தப்பட்டன. நீக்ரோவர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. அவர்களுக்கு வெள்ளையர்கள் அனுபவித்து வந்த உரிமைகள் அனைத்தும் அளிக்கப்பட்டன. அதற்கென அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இத் திருத்தங்களைத் தென்பகுதியிலுள்ள வெள்ளையர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப் பட்டனர். புதிய அரசாங்கங்கள் தென்பகுதியில் அமைக்கப்பட்டன. அவைகளை நடத்தும் பொறுப்பு நீக்ரோவர்களுக்கும், வடபகுதியினின் றும் வந்த வெள்ளையர்களுக்கும், தென்பகுதியில் ஏழ்மையில் வாழ்ந்து வந்த வெள்ளையர்களுக்கும் அளிக்கப்பட்டது. அவர்களுடைய ஆட்சி பல சீர்கேடுகள் பெற்றிருந்தன. வெள்ளையர்கள்மீது கடுமையான வரி சுமத்தப்பட்டது. இலஞ்ச ஊழல் மலிந்திருந்தன. அரசாங்கப் பொருள் அனாவசியமாகச் செலவிடப்பட்டது. இந்த நிலை வெகு நாள் நீடித்து இருக்கவில்லை. வெள்ளையர்கள் பலாத்கார முறைகளைக் கையாளத் தொடங்கினார்கள். 'கு லக்ஸ் கிலான்' (Ku Lux Klan) போன்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, நீக்ரோவர்களுக்கும் வடபகுதி யினின்று வந்த வெள்ளையர்களுக்கும் இடையூறுகளைக் கொடுத்து வந்தனர். அதனால் கார்பெட்பாக்கர்ஸ் (Carpetbaggers) எனப் பட்ட அவ் வடபகுதி வெள்ளையர்கள் வெளியேற நேர்ந்தது. நீக்ரோ வர்கள் தங்களது ஓட்டுரிமையை விட்டுக்கொடுக்குமாறு கட்டாயப்

படுத்தப்பட்டார்கள். சிறிது காலத்திற்கெல்லாம் டெமோகிராடிக் கட்சியினர் தென்பகுதியில் மீண்டும் தங்களுடைய செல்வாக்கை ஏற்படுத்தினார்கள்.

பொருளாதாரத் துறையிலும் தென்பகுதியினர் பல இன்னல்கள் அனுபவிக்க நேர்ந்தது. சாலைகள், பாலங்கள், இருப்புப்பாதைகள் அழிக்கப்பட்டதால் வியாபாரம் குன்றியது. பணத்தின் மதிப்புக் குறைந்ததாலும், பாங்குகள் (Banks) மூடப்பட்டதாலும் வர்த்தகம் பாதிக்கப்பட்டது. பருத்தித் தொழிற்சாலைகள் அழிவுற்றன. பயிர்த் தொழில் சீரழிந்தது. பண்ணைகளில் வேலை செய்வோர் எண்ணிக்கை குறையலாயிற்று. ஆனால், விரைவில் தென்பகுதியில் அதனுடைய பொருளாதாரத் துறையில் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டதால், இழந்த வளத்தை மீண்டும் பெற வழியேற்பட்டது. தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. சாலைகள், இருப்புப்பாதைகள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டன. பாங்குகள், கம்பெனிகள் ஆகியவை மீண்டும் திறக்கப்பட்டன. விவசாயத்தில் பெரும்பான்மையினோர் ஈடுபட்டார்கள். வரிச்சுமை அதிகமாயிருந்ததால், வரிக்காகவும் கடனுக்காகவும் பெரு நிலப் பண்ணைகள் சிறிதுசிறிதாக விற்கப்பட்டன. அதனால் நிலமற்று இருந்த சிறு குடியானவர்கள் நிலம் வாங்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதாலும், பண்ணை உரிமையாளர்களிடத்தில் பணம் இல்லாததாலும் பண்ணைத் தொழிலாளர்களுக்குப் பண்ணையில் உற்பத்தியாகும் பொருள்களில் ஒரு பகுதியை அவர்களுக்கு அளிக்கும் முறை வளர்ந்தது.

உள்நாட்டுப் போர் புதிய அமெரிக்காவை ஏற்படுத்துவதற்கு உதவி செய்தது. போருக்குப் பிறகு தொழில் வளர்ச்சி பெற்றது. வியாபாரம் பெருகியது. போக்குவரத்துச் சாதனங்கள் பெருகின. இயந்திரங்களைக்கொண்டு பயிர்த்தொழில் நடத்தத் தொடங்கினார்கள். இதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்த நிலங்கள் பயிர்த்தொழில் செய்வதற்கும், ஆடுமாடுகள் வளர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. பெருநகரங்கள் வளருவதற்கு வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இவ்வாறாக உள்நாட்டுப் போருக்குப் பிறகு தொழில் அதிபர்களையும் (Captains of industry) பெரு முதலாளிகளையும் (Masters of Capital) கொண்ட அமெரிக்கா வெளிப்பட்டது. அதனுடைய பொருளாதார முன்னேற்றம் அமெரிக்கா வல்லரசாக மாற உதவி செய்தது.

போரினால் மக்கள்தொகை வெகுவாக பாதிக்கப்பட்டது. 31 மிலியன் மக்களில் அறுநூறு ஆயிரம் பேர் போரில் இறந்தார்கள். போரின் விளைவாகப் பணத்தாசையும், அதிகார வெறியும், அநாகரிகப் பண்புகளும் பெற்ற ஒரு வகுப்பினர் தோன்றினர். ஆனால், பொது

வாக மக்கள் நல்ல உழைப்பாளிகளாகவும், நாட்டுப் பற்றுடையவர்களாக வும் இருந்தனர். தென்பகுதியில் மேற்குடியைச் சார்ந்த பண்ணை முதல்வர்களை உட்கொண்ட வகுப்புச் சீரழிந்தது. அதற்குப் பதிலாகச் சிறுநிலச் சொந்தக்காரர்களும், வியாபாரிகளும், தொழில் தலைவர்களும், பணம் படைத்தவர்களும் அடங்கிய ஒரு நடுத்தர வகுப்பு வளரலாயிற்று. அடிமைகளை உடைமையாக வைத்திருக்கும் வழக்கம் ஒழிக்கப் பட்டது. அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டங்கள் வாயிலாக அவர் களுக்குச் சமவுரிமைகளும் ஒட்டுரிமையும் வழங்கப்பட்டன. ஆனால், அவர்களுடைய பொருளாதார நிலையைச் சீர்படுத்த யாதொரு முயற்சி யும் மேற்கொள்ளப்படவில்லை. சிறிது காலம் அங்கும் இங்கும் திரிந்து கொண்டிருந்தனர். அநேக குடும்பங்கள் நாசமாயின. சிலர் வட பகுதிக்குச் சென்று தொழிற்சாலைகளில் வேலை செய்யலாயினர். பெரும் பாலோர் விளைச்சலில் ஒரு பகுதியைப் பெறும் கூலியாட்களாகப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டார்கள்.

4. பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தேசீய நாடுகள் ஏற்படுத்துதல்

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஐரோப்பாவிலும், ஏனைய பகுதிகளிலும் தேசியக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு பல நாடுகள் உருவாக்கப்பட்டன. தற்காலத்தில் இருக்கும் தேசிய இனஞ் சார்ந்த நாடுகளில் ஐந்தில் ஒரு பங்கு அக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டவையேயாகும். ஐரோப்பியர்கள் தேசியக் கோட்பாட்டைப் பத்தொன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னரே அறிந்திருந்தார்கள். ஆனுல், ஃபிரஞ்சுப் புரட்சி அக் கோட்பாட்டுக்குப் புதியதோர் ஆற்றலை ஊட்டியது. அதன் விளைவாக ஐரோப்பிய மக்களிடையே அக் கோட்பாடு மிக்க .செல்வாக்குப் பெறலாயிற்று. அதன் பயனுகப் பல்வேறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த ஒரே இனத்தவர்கள் ஒன்றுசேர்ந்து தேசீய இனம் சார்ந்த ஒரே நாட்டை உருவாக்கினுர்கள். இத்தாலியும் ஜெர்மனியும் இவ்வாறு உருவாக்கப்பட்ட நாடுகளேயாகும். வேறு சில இடங்களில் அக் கோட்பாடு செல்வாக்குப் பெற்றதால், பல்வேறு இனங்களைக் கொண்ட பேரரசுகள், தனித்தனி தேசீய இனஞ் சார்ந்த நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. சென்ற அத்தியாயத்தில் ஸ்பானிய அமெரிக்கப் பேரரசு பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்ட வரலாற்றினைக் கண்டோம். இப்பொழுது சிறு பகுதிகள் ஒன்றுசேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட தேசீய இனஞ் சார்ந்த நாடுகள் எவ்வாறு தோன்றின என்பதைக் கவனிப்போம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னர் இத்தாலி பல பிரிவுகளை உட்கொண்டதாயிருந்தது. சவாய் குடும்பத்தைச் சேர்ந்த அரசர் இத்தாலிக்கு அருகேயுள்ள சார்டினியாவையும், வட இத்தாலியிலுள்ள பியட்மான்ட் என்னும் பகுதியையும் ஆண்டுவந்தார். மிலான் நகரம், அதைச் சுற்றியுள்ள லம்பார்டி பகுதி, மோடெனு ஆகியவை ஆஸ்திரியாவின் ஆளுகைக்குட்பட்டிருந்தன. டஸ்கனி ஆஸ்திரியாவைச் சார்ந்த ஆட்சிப் பகுதியாக இருந்தது. அதைக் கோமகன் ஒருவர் ஆண்டுவந்தரர். ஸ்பெயினில் ஆண்டுவந்த பூர்போன் குலத்தைச்

சார்ந்தவர் சிசிலித் தீவையும், தெற்கு இத்தாலியையும் ஆண்டு வந்தார். வட இத்தாலியிலுள்ள பார்மாவையும் அக் குலத்தைச் சார்ந் தவர்களில் ஒருவரே ஆண்டுவந்தார். கத்தோலிக்க மதத்தலைவரான போப் ரோம், நடு இத்தாலி ஆகியவற்றை ஆண்டுவந்தார். இவை களைத் தவிர நான்கு குடியரசுகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன—வெனிஸ் (Venice), ஜெனோவா (Genoa), லூக்கா (Lucca), சான் மாரினோ (San Marino). 1796-ல் நெப்போலியன் இத்தாலியின்மீது படை யெடுத்தார் என்று முன்னரே கூறினோம். அப் படையெடுப்பும், அதற் குப் பின்னர் அவர் மேற்கொண்ட மற்றொரு படையெடுப்பும் இத்தாலி யின் பெரும் பகுதியை அவருடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர உதவின. அங்கிருந்த நாடுகளின் எல்லைகளை அவருடைய விருப்பம் போல் மாற்றினார். இறுதியில் பியட் மான்ட், பார்மா, ஜெனோவா, ரோம் நகரம், அதைச் சுற்றியுள்ள பகுதிகள், சவாய், டஸ்கனி (Tuscany) ஆகியவற்றை ஃபிரான்சுடன் சேர்த்து அவருடைய நேரடி ஆட்சியை அங்கு ஏற்படுத்தினார். லம்பார்டி, மோடனா, வெனிஸ், நடு இத்தாலியில் போப்புக்குச் சொந்தமான இடங்கள் ஆகிய வற்றைச் சேர்த்து உருவாக்கப்பட்ட அரசுக்கு 'இத்தாலி அரசு' என்று பெயர் கொடுத்தார். நெப்போலியனே அதன் அரசரானார். அவரு டைய பிரதிநிதியைக் கொண்டு அப் பகுதியை ஆண்டுவந்தார். தெற்கு இத்தாலியைத் தனி அரசாக ஏற்படுத்தி, அதற்கு அவருடைய தமையனார் ஜோசஃப் போனபார்ட் என்பவரை அரசராக்கினார். லூக்காவை அவருடைய சகோதரி ஒருவருக்குக் கொடுத்தார். சார்டினியா சவாய் குலத்து அரசரிடமும், சிலி பூர்போன் அரசரிடமும் தொடர்ந்து இருந்துவந்தன. 1815-ல் நெப்போலியன் முடிவாக வீழ்த் தப்பட்டார். அதே ஆண்டில் வியன்னு ஏற்பாடு உருவாக்கப்பட்டது. அதன்படி இத்தாலி பழைய நிலைக்குத் திரும்பியது. இத்தாலியைப் பற்றிய ஏற்பாடு மெட்டர்னிக்கின் கருத்துக்கேற்றவாறு அமைக்கப் பட்டது. ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை இத்தாலியில் நிலைநாட்ட மெட்டர்னிக் அப் பகுதியினைப் பல பிரிவுகளாக வைத்துப் பலமற்றதாகச் செய்தார். ஆஸ்திரியா லம்பார்டியுடன் வெனிஷியாவையும் (Venetia) பெற்றது. போப் அவர் இழந்த பகுதிகளை மீண்டும் பெற்றார். ஆஸ்திரி யாவின் படைகள் அவருடைய ஆட்சிப் பகுதிகளிலுள்ள சில இடங் களில் நிலைநிறுத்தப்பட்டன. சவாய் குலத்து அரசர் பியட்மான்ட், சவாய், நைஸ் (Nice) பகுதிகளைப் பெற்றார். அத்துடன் இதுகாறும் குடியரசாக விளங்கிய ஜெனோவாவும் அவருக்கு அளிக்கப்பட்டது. டஸ்கனி, கோமகன் மூன்றாவது பெர்டினாண்டுக்குக் கொடுக்கப்பட்டது. லூக்கா, மாரிலூயே என்னும் பூர்போன் குலத்தவருக்கு அளிக்கப் பட்டது. பார்மா, நெப்போலியனுடைய மனைவியும், ஆஸ்திரியா நாட்டின் இளவரசியுமான மாரிலூயேக்கு அளிக்கப்பட்டது. ஆஸ்திரி யாவை ஆண்டுவந்த ஹாப்ஸ்பர்க்கு குலத்தைச் சார்ந்த நான்காவது

ஃபிரான்சிஸ் மோடெனுவைப் பெற்றுர். நேபில்ஸ், பூர்போன் அரசரான நான்காவது பெர்டினுன்டுக்குத் திருப்பி அளிக்கப்பட்டது. சான் மாரினு ஒன்றுதான் குடியரசாகத் தொடர்ந்து விளங்கியது. பார்மாவின் கோமாட்டி இறந்த பிறகு லூக்காவை ஆண்டுவந்தவருக்கு அது அளிக்கப்பட்டது. லூக்கா டஸ்கனியுடன் சேர்த்துக்கொள்ளப் பட்டது. இவ்வாருக, இத்தாலியில் பெரிய ஆட்சிப் பகுதிகளே அமைப் பதற்கு நெப்போலியன் மேற்கொண்ட முயற்சிகள் வீணுயின.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பல காரணங்களால் இத்தாலி ஒன்றுபடுத்தப்பட்ட நாடாக விளங்கவில்லே. இத்தாலியின் பெரும்பகுதி அன்னியருடைய ஆதிக்கத்தில் இருந்தது. போப், சார் டினியாவின் அரசர் ஆகியவர்களே இத்தாலி நாட்டைச் சார்ந்தவராவார் கள். மேலும், ஆஸ்திரியா தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இத்தாலியில் ஒற்றுமையுணர்ச்சி வளரவொட்டாது தடுத்தது. இத்தா லிய மக்கள் இன்னும் தேசியக் கருத்துகளே ஏற்றுக்கொள்ளவில்லே. நடுத்தர வகுப்பினர்களே அவ்வுணர்ச்சியைப் பெற்றிருந்தார்கள். பிரபுக்கள், மதகுருமார்கள் ஆகியவர்களில் ஒருசிலர் அவ் வகுப்பின ருக்கு அவ்வப்போது உதவி செய்துவந்தனர். இதுவன்றியும், போப் ஆண்டுவந்த நிலப்பகுதிகள் இத்தாலியை இரு துண்டுகளாக்கின. போப் நாடுகளே ஆட்சி செலுத்தும் அதிகாரங்களேப் பெற்றிருக்கும் வரை இத்தாலியை ஒன்றுபடுத்துவது அரிய செயலாகக் காணப்பட்டது.

அதே நேரத்தில் சில காரணக் கூறுகள் தேசீய உணர்ச்சி இத்தாலிய மக்களிடையே கொழுந்துவிட்டெரிய உதவி செய்தன. நெப்போலியன் இவ்வகையில் இத்தாலிக்கு அரிய சேவை செய்துள்ளார். பல பிரிவுகளே ஒழித்து மூன்று பெரும் பிரிவுகளே ஏற்படுத்தி, இத்தாலி யில் ஒரே அரசு ஏற்பட வழிவகை செய்தார். அதுமட்டுமன்றி இத்தாலியில் ஒரே சீரான சட்ட அமைப்பையும் ஆட்சிமுறையையும் புகுத்தி, ஒற்றுமை உணர்ச்சி வளர வழி ஏற்படுத்தினுர். சாலேகளேச் செம்மைப்படுத்தியும், கால்வாய்களே வெட்டியும், பாலங்களே அமைத் தும் போக்குவரத்துச் சாதனேகளேப் பெருக்கினுர். அதன் பயனுக மக்கள் ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களே ஏற்படுத்தினுர். அதனுல் மக்கள் அரிய கருத்துகளேத் தாங்களே கற்றுத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. பண்ணே நிலவுரிமை முறையைச் சார்ந்த வழக்கங்களே ஒழித்தார். நெப்போலியனின் நடவடிக்கைகள் பல அவர் வீழ்ச்சிக்குப் பிறகு ரத்து செய்யப்பட்டன என்பது உண்மையேயாகும். ஆனுல், அக் குறுகிய காலத்திற்குள்ளாகவே ஒற்றுமையின் அவசியத்தை அவர்களால் மறந்துவிட முடியாத அளவில்

அவர்களுக்குக் கற்றுக்கொடுத்துவிட்டார். மேலும், இத்தாலியை ஆண்டுகொண்டிருந்தவர்கள் அனைவரும் வல்லாட்சி முறையைப் பின் பற்றி யிருந்தனர். சார்டினியாவின் அரசர் முதலாவது விக்டர் இம்மானுவேல் பிற்போக்குக் கருத்துடையவர். லம்பார்டி-வெனீஷியா பகுதியில் மக்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க ஒற்றர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப் படவில்லை. அரசாங்கத்தினர் புத்தகங்கள், செய்தித் தாள்கள் ஆகிய வற்றைத் தணிக்கை செய்தனர். கடுமையான வரிகளை மக்கள்மீது சுமத்தி யிருந்தனர். ஒர் இத்தாலியிலுள்ள கோமகன் ஆட்சிக்குட் பட்டிருந்த பகுதிகளில் இருந்த மக்கள் அதிகாரிகளுடைய கொடுங் கோன்மைக்கும் பேராசைக்கும் இலக்காயினர். மோடனுவில் பிரபுக் களும் குருமார்களும் மட்டுமே சில உரிமைகள் பெற்றிருந்தனர். போப்பின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டனர். அதிகாரிகள் ஊழல் நிறைந்தவர்களா யிருந் தனர். தெற்கு இத்தாலியில் மக்கள் வெறுப்புக்குள்ளாகி யிருந்த தணிக்கைமுறை, முற்போக்குக் கருத்தினரைத் துன்புறுத்தும் வழக்கம் ஆகியவை மீண்டும் புகுத்தப்பட்டன. ஃபிரஞ்சுப் புரட்சிக் கருத்துகள் இத்தாலியிலும் பரவியதால், மக்கள் உரிமைகள் பெறத் துடித்தனர். அதனுல் கிளர்ச்சிகள் ஏற்படலாயின. மேலும், மக்க ளுடைய கருத்துகளை எடுத்துச்சொல்ல மன்றங்கள் எதுவும் இல்லாத தாலும், முற்போக்குக் கருத்துகளை எடுத்துரைப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதாலும், அரசாங்கம் அதனைக் குறை கூறுவதை அனுமதிக்கவில்லையாதலாலும் மக்கள் பல இரகசியக் கழகங்களை ஏற்படுத்தி யிருந்தனர். அவைகளுள் முக்கியமானது கார்போனரி (Carbonari) என்பதாகும். அவைகள் முற்போக்குக் கருத்துகள் அழிவுறுவதைத் தடைசெய்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக, அக் காலத்தில் இத்தாலியில் பல தலைவர்கள் தோன்றினுர்கள். அவர்கள் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்தினுர்கள். அதே நேரத்தில் முற்போக்குக் கருத்துகளைக்கொண்ட ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்கும் வழி வகை செய்தனர். அவர்களில் ஒருவர் மாஜினி (Mazzini) என்பவராவார். 1805-ல் ஜெனேவாவில் பிறந்த இவர், சிறு வயது முதற்கொண்டே நாட்டின் சீரழிந்த நிலையைக் கண்டு மனம் நொந்து இருந்தார். பல்கலைக்கழகப் படிப்பு முற்றுப் பெற்ற பிறகு கார்போனரியில் சேர்ந்தார். இத்தாலியில் 1831-ல் ஏற்பட்ட புரட்சியில் பங்கு கொண்டதற்காக அவர் கைது செய்யப்பட்டார். ஆனுல், சில மாதங்களுக்குப் பிறகு அவர் குற்றமற்றவர் என்பதற்காக விடுதலை செய்யப்பட்டார். போலீசார் கண்காணிப்பில் இருக்க விருப்பங்கொள்ளாததால், நாட்டை விட்டு

ஃபிரான்சிலுள்ள மார்சேயி (Marseilles) என்னுமிடத்திற்குச் சென்ருர். அங்கு 'யங் இத்தாலி' (Young Italy) என்ற பெயரில் ஒரு கழகத்தை அமைத்தார். இளைஞர்களிடம் அவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்த தால், அவருடைய கழகத்திற்கு 'யங் இத்தாலி' என்ற பெயரை வைத் தார். மாஜினி சிறந்த எழுத்தாளர்; மாசற்ற பண்புடையவர். ஆகவே, அவருடைய கழகம் வெகு விரைவில் வளர்ச்சி பெறலாயிற்று. அவருடைய முக்கிய நோக்கம் இத்தாலியை ஒரே ஆட்சியின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்பதாகும். அந்நியர்களை விரட்டி, மக்களே ஆட்சியை நடத்தவேண்டும் என்றும் விரும்பினுர். அந் நோக்கங்களை நிறைவேற்ற முதலில் மக்களுக்கு அக் கருத்துகளை எடுத்துரைத்து, அவர்களையும் அந் நோக்கங்களை மேற்கொள்ளுமாறு செய்தல் வேண்டும் என்று எண்ணினுர். ஆகவே, அவருடைய கழகத்தைச் சார்ந்தோர் களை இத்தாலிக்கு அனுப்பி, அக் கருத்துகளைப் பரப்புமாறு கட்டளையிட்டார். மக்களிடம் தேசீய உணர்ச்சியை வளர்த்த பிறகு, அவர்கள் துணையுடன் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டும் என்று எண்ணினுர். இத்தாலிய மக்களே அந்நியர்களுடைய உதவியின்றித் தங்களுடைய சுதந்திரத்திற்காகவும், ஒன்றுபடுத்தப்பட்ட ஆட்சிக் காகவும் போராட வேண்டும் என்பது அவர் நோக்கமாகும். அந்நிய ஆட்சியை ஒழித்த பிறகு இத்தாலி குடியரசாகவேண்டும் என்று அவர் கருதினுர். அதனுல் அவர் செயல் முறைக்குரிய திட்டங்களை உருவாக்கும் திறனற்றவர் என்று கூறுகிருர்கள். ஆனுல், இத்தாலியில் ஒரே ஆட்சி ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது என்று முதன்முதலில் கண்டறிந்தவர் அவரேயாவர். அதோடு இராமல், அதை அடையப் பெருமுயற்சியும் மேற்கொண்டதால், அவரை இத்தாலி யின் மாபெருந் தலைவர்களுள் ஒருவராகக் கருதுகிருர்கள். மாஜினியி னுடைய நடவடிக்கைகளை அறிந்த ஃபிரஞ்சு அரசாங்கம், அவரை ஃபிரான்சிலிருந்து வெளியேறும்படி உத்தரவிட்டது. சில காலம் ஸ்விட்சர்லாந்தில் தங்கியிருந்தார். 1833-ல் சவாய்மீது படையெடுக்க ஏற்பாடு செய்தார். அதனுல் ஸ்விட்சர்லாந்திலிருந்தும் அவர் துரத்தப் பட்டார். அதன் பிறகு அவர் இங்கிலாந்தில் தங்கினுர். 1848-ல் இத்தாலியில் கலகங்கள் ஏற்பட்டபோது நாடு திரும்பி அவற்றில் கலந்துகொண்டார்.

ஜுபார்தீ (Gioberti) என்பவரும் மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை வளர்த்தார். 1801-ல் பிறந்த இவர் முதலில் சார்டினியா அரசரிடம் மதகுருவாகப் பணியாற்றிவந்தார். நாளடைவில் அரசியலில் ஈடுபடலாயினுர். ஆகவே, 1833-ல் இவர் நாடுகடத்தப்பட்டார். சுதந் திரத்தையும் ஒன்றுபடுத்தப்பட்ட ஆட்சியையும் போப் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்படும் கூட்டமைவு (confederation) வாயிலாகத்தான் பெறமுடியும் என்று கருதினுர். ஒவ்வோர் அரசரும் சீர்திருத்தங்களை

மேற்கொள்ளுவாராயின் மக்கள் உரிமை பெற்று வாழ்வார்கள் என்றும் அறிவித்தார். ஆனால், அவர் திட்டங்கள் வெற்றிபெறவில்லை.

மற்றொரு தலைவர் மாசீமோ தெ அஜெக்லியோ (Massimo d' Azeglio) என்பவர். இவர் 1798-ல் பியட்மாண்டில் பிறந்தார். போப் ஆண்டுவந்த பகுதிகளில் பல நாள் வாழ்ந்துவந்தார். ஆகவே, அங்கு நிறைந்திருந்த சீர்கேடுகளை நன்கு அறிந்திருந்தார். எனவே, போப்பைத் தலைவராகக் கொண்டு இத்தாலியிலுள்ள நாடுகளை ஒன்றுசேர்த்து ஒரு கூட்டமைவை ஏற்படுத்துவதென்ற கருத்தை எதிர்த்தார். இத்தாலியை ஓர் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வல்லவர் சார்டினியாவின் அரசர் ஒருவரே என்று குறிப்பிட்டார். அவரால் தான் அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்தார். இவ்வாறு பிற்காலத்தில் சார்டினியாவின் தலைமையின்கீழ் ஐக்கிய இத்தாலிய சுதந்திர நாடு ஏற்படுத்துவதற்கு அவர் வழிவகை செய்தார்.

கத்தோலிக்க மதத்தலைவரான போப் ஒன்பதாவது பயஸ் முற்போக்குக் கருத்துகளை ஊக்குவிக்கும் வகையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அரசியல் குற்றவாளிகளை விடுவித்தார். செய்தித்தாள்களுக்குச் சுதந்திரம் அளித்தார். அமைச்சரவை ஒன்று ஏற்படுத்தினர். ரோமாபுரியில் மக்கள் பிரதிநிதிகள் கொண்ட சபையை ஏற்படுத்தி நகராட்சியினை அதனிடம் ஒப்படைத்தார். இந்த ஏற்பாடுகள் எல்லாம் மக்களின் தேசீய உணர்ச்சியைப் பேரளவில் தூண்டிவிட்டன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலேயே இத்தாலியைச் சுதந்திர நாடாக அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1821-ல் ஸ்பெயினில் புரட்சி ஏற்பட்ட செய்தி இத்தாலிய மக்களைத் தூண்டிவிட்டது. தெற்கு இத்தாலிய மக்கள் கிளர்ச்சி செய்தனர். நேபில்ஸ் அரசர் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அதே நேரத்தில் அவர் ஆஸ்திரியாவின் துணைகொண்டு தக்க சமயத்தில் தான் கொடுத்த வாக்குறுதிகளை ரத்து செய்ய முற்பட்டார். ஆஸ்திரியா அவருடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. ஏனெனில், ஆஸ்திரியாவிற்கு இத்தாலியில் பல பகுதிகள் சொந்தமாயிருந்தன. நேபில்ஸில் புரட்சி வெற்றியடைந்து அதன் பயனுகப் பொறுப்புள்ள ஆட்சி ஏற்படுத்தப்பட்டால், அதே நிலையை அவர்களுடைய பகுதியில் வாழும் மக்களும் பெற முயலுவார்கள் என்று கருதினர். ஆகவே, ஆஸ்திரியாவின் சேனையொன்று தெற்கு இத்தாலி சென்றது. நேபில்ஸ் அரசர் இழந்த அதிகாரங்களை மீண்டும் பெற அச் சேனை உதவி புரிந்தது. 'அதே நேரத்தில் பியட்மான்டிலும்

மக்கள் உரிமைகள் பெற கிளர்ச்சி செய்தார்கள். ஆஸ்திரியா, பியட்மான்டின் அரசரான சார்லஸ் ஃபெலிக்ஸ் (Charles Felix) என்பவரின் ஒப்புதலின்பேரில் பியட்மான்டிற்கு ஒரு சேனையை அனுப்பிக் கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்கியது. இவ்விரு கிளர்ச்சிகளும், மக்களிடம் முற்போக்குக் கருத்துகளும் ஒற்றுமை உணர்ச்சியும் அதிக அளவில் செல்வாக்குப் பெறவில்லை என்பதையும், மெட்டர்னிக்கின் வலிமையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அவைகளின் பயனாக ஆஸ்திரியாவின் செல்வாக்கு மேலும் இத்தாலியில் வளர்ச்சி பெறலாயிற்று.

1830-ல் கிளர்ச்சிகள் மீண்டும் ஏற்பட்டன. ஃபிரான்சில் அவ் வாண்டில் ஏற்பட்ட புரட்சி இத்தாலியர்களைக் கிளர்ச்சி செய்ய ஊக்கு வித்தது. போப்புக்குச் சொந்தமான ரோமக்னாவிலும், பார்மாவிலும், மோடனாவிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. போப் ஆஸ்திரியாவின் உதவியை நாடினார். மோடனாவின் கோமகன் ஆஸ்திரியாவிற்குச் சொந்தமான பகுதிக்கு ஓடிவிட்டார். ஆஸ்திரியா மீண்டும் படைகளை அனுப்பி மோடனாவிலும், ரோமக்னாவிலும், பார்மாவிலும் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்கியது. இக் கிளர்ச்சிகள் யாவும் தோல்வியுற்ற போதிலும், கிளர்ச்சிக்காரர்கள் ஆங்காங்கே இடைக்கால மக்கள் அரசாங்கத்தை ஏற்படுத்தி, பிற்போக்குக் கருத்துகளையுடைய தங்களது ஆட்சியாளர்களின் பலவீனத்தை நன்கு புலப்படுத்தி னார்கள். மேலும், ஆஸ்திரியாவின் உதவியால்தான் அவர்கள் அரசர் களாக இருக்கமுடியும் என்பதையும் எடுத்துக்காட்டினர்.

1848-ல் இத்தாலி சுதந்திரமும் ஒற்றுமையும் பெறுவதற்குத் தீவிர மான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவைகளுக்கு ஏற்றாற்போல் போப் ஒன்பதாவது பயஸ் (Pope Pius IX) தன்னுடைய ஆட்சிப் பகுதி யில் சில முற்போக்குச் சீர்திருத்தங்களைச் செய்து, மக்கள் உணர்ச் சியைத் தூண்டிவிட்டார். மேலும், மாஜினியின் முயற்சியால் மக்களிடம் சுதந்திர உணர்ச்சி கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. முதலில் சிசிலித் தீவில் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். அவர்களை அடக்க அனுப்பப்பட்ட படை தோல்வி யுற்றது. 1812-ல் ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. பிறகு நேபில்ஸ் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். நேபில்ஸ் மன்னர் பெர்டினாண்டு ஆஸ்திரியாவின் உதவியை நாடினார். ஆனால், போப் ஆஸ்திரியாவின் துருப்புகள் தன் நாட்டின் வழியாகச் செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆகவே, பெர்டினாண்டு மக்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. புதிய அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். அதற்குப் பின்னர் பியட்மான்ட் மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற, அப்பொழுது

அவர்களை ஆண்டுவந்த சார்லஸ் ஆல்பர்ட் என்ற முற்போக்குக் கருத்து உடைய அரசர் அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். டஸ்கனியிலும் பொறுப்பாட்சி ஏற்படுத்தப்பட்டது. போப்பும் அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். அந்த நேரத்தில் ஆஸ்திரியாவில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக, மெட்டர்னிக் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி லம்பார்டி மக்கள் சுதந்திரம்பெற முயன்றார்கள். லம்பார்டியிலுள்ள மிலான் நகரத்தில் நடைபெற்ற சண்டையில் மக்களே வெற்றி பெற்றார்கள். ஆஸ்திரியாவின் படையினர் மிலானைவிட்டு வெளியேறி நான்கு கோட்டைகளால் சூழப்பட்ட மாவட்டத்தில் (The Quadrilateral) தங்களுடைய படைநிலையை ஏற்படுத்தினார்கள். அதன் பிறகு வெனிஸ் நகர மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். டானியல் மானின் (Daniel Manin) என்பவரைத் தலைவராகக்கொண்ட குடியரசை அங்கு அமைத்தார்கள்.

சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியாவின் இக்கட்டான நிலையைப் பயன்படுத்தி, அந்நிய ஆட்சியை இத்தாலியினின்றும் ஒழித்து, இத்தாலியை ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர எண்ணினார்கள். பியட்மான்டின் தலைவர்கள் பலர் அவரை ஆஸ்திரியாவிற்கு எதிராகப் போர்புரியத் தூண்டினர். இத்தாலி மக்கள் எல்லோரும் சார்லஸ் ஆல்பர்ட்டைப் போரிட வேண்டினார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, சவாய் குலத்தினர் நாட்டுப்பற்றுடையவர். இரண்டாவதாக, இத்தாலியிலுள்ள அரசர்களுள் அவர்தாம் படைவலிமை பெற்றிருந்தார். மேலும், அவர் நாட்டு மக்களும் ஏனைய இத்தாலியர்களைவிடப் போர் புரிவதில் ஆர்வங் கொண்டிருந்தவர்கள். சார்லஸ் ஆல்பர்ட் மக்கள் வேண்டுகோளுக்கு இணங்கிப் போர்ப் பிரகடனம் செய்தார்; டஸ்கனியின் கோமகன், போப் பெர்டினாண்டு ஆகியோர் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவியாகப் படைகளை அனுப்பினார்கள். ஆனால், போப் தனது படை தனது நாட்டைக் காப்பதற்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவித்தார். பெர்டினாண்டு மீண்டும் தானாகவே சுய ஆட்சியை ஏற்படித்தியதால் தன் படைகளைத் திரும்பிவிடுமாறு கட்டளையிட்டார். நாடு திரும்பிய மாஜினியும் போரில் கலந்து கொண்டார்.

சார்லஸ் ஆல்பர்ட் மிலானை நோக்கிப் படைகளை நடத்திச் சென்றார். மிலான் நகர மக்கள் அவரை வரவேற்றனர். பிறகு வெனிஸ் சென்று அம் மக்களின் ஒப்புதலைப் பெற்றபின், வெனிஸை பியட்மான்டுடன் சேர்த்தார். மிலான், மோடனா ஆகியவைகளும் பியட்மான்டுடன் சேர்ந்தன. வட இத்தாலி இவ்வாறாக ஓர் ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

ஆனால், ஆஸ்திரியா முழுமையாக இத்தாலியினின்றும் விரட்டப் படவில்லை. அதன் படை ராடெட்ஸ்கியின் (Radetsky) தலைமையின் கீழ் மிக்க பாதுகாப்புடன் கூடிய மாவட்டத்தில் நிலைநிறுத்தப் பட்டிருந்தது. ஆகவே, போர் தொடர்ந்து நடைபெற்றது. சார்லஸ் ஆல்பர்ட் மாஜினியின் குடியரசுக் கருத்துகளை ஏற்றிருந்த மக்களிட மிருந்து தகுந்த ஆதரவைப் பெற இயலவில்லை. கஸ்டோஸ்ஸா (Custozza) என்னுமிடத்தில் ஆஸ்திரியா அவரை எளிதில் தோற்கடித்தது. ஆகவே, மிலானைவிட்டு அவர் வெளியேற நேர்ந்தது. மிலான் நகரத்தைப் பகைவர்களிடம் ஒப்படைத்ததால், மிலான் மக்கள் அவரைத் தாக்கினார்கள். இறுதியில் சார்லஸ் ஆல்பர்ட் லம்பார்டியை விட்டு வெளியேறவேண்டியதாயிற்று.

இதற்கிடையே ரோம் நகரில் கிளர்ச்சி ஏற்பட்டது. போப் நகரத்தைவிட்டு ஓடிவிட்டார். ரோம் மக்கள் அரசியல் நிர்ணய சபை ஒன்றை ஏற்படுத்தினார்கள். இறுதியில் ரோமில் குடியரசு ஏற்படுத்தப் பட்டது. மாஜினியை உட்கொண்ட மூன்று பேர் அடங்கிய குழுவினிடம் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. போப்பின் அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்த ஃபிரான்சு படையொன்றை ரோமுக்கு அனுப்பியது. ரோம் குடியரசைக் காக்க வட இத்தாலியில் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவியாகச் சண்டை செய்துகொண்டிருந்த மாஜினி கருத்துகளை ஏற்றிருந்த கரிபால்டி என்ற மற்றொரு இத்தாலியத் தலைவரை ரோம் குடியரசைக் காக்குமாறு மாஜினி வேண்டினார். உடனே கரிபால்டி ரோமுக்கு விரைந்து சென்றார்.

கரிபால்டி சவாயிலுள்ள நைஸ் என்னுமிடத்தில் 1807-ல் பிறந்தார். அவர் தந்தை அவர் மதஸ்தாபனத்தில் சேரவேண்டும் என்ற விருப்பங் கொண்டிருந்தார். ஆனால், மதகுருவாவதை அவர் விரும்பாததால், பதினைந்து வயதில் அவர் வீட்டைவிட்டு ஓடிவிட்டார். அதன் பிறகு அவர் கப்பலில் வேலைபார்த்துவந்தார். மாஜினி தொடங்கிய 'யங் இத்தாலி' கழகத்தில் சேர்ந்தார். பியட்மான்ட் கப்பற்படையில் பியட்மான்ட் அரசருக்கு எதிராகக் கலகம் ஏற்படுத்தி அதன் வாயிலாகக் குடியரசை அங்கு ஏற்படுத்த எண்ணியதால், அக் கப்பற்படையில் சேர்ந்தார். அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கையை மேற்கொண்ட தற்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அதை நிறைவேற்று முன்னர் ஃபிரான்சு நாட்டிற்கு ஓடிவிட்டார். அங் கிருந்து தென் அமெரிக்காவிற்குச் சென்றார். பன்னிரண்டு ஆண்டுகள் உருகுவே மக்களுடன் சேர்ந்து சுதந்திரப் போரில் ஈடுபட்டிருந்தார். அக் காலத்தில் அவர் கொரில்லா முறைப் போரையும், திறமையாகக் குதிரைகள்மீது சவாரிசெய்யும் முறையையும் கற்றுக்கொண்டார். அங்கு தான் அனீடா (Anita) என்பவரை மணம் செய்துகொண்டார்.

அவ்வம்மையார், தம் கணவர்மேற்கொண்டிருந்த மிகப் பயங்கரமான வாழ்க்கையை அவர் கூடவே இருந்து பகிர்ந்துகொண்டார். அங்கு ஒரு படையினை ஏற்படுத்தினுர். அப் படையினருக்குச் சிவப்பு ஆடைகளைச் சீருடையாக ஏற்படுத்தித் தந்தார். 1848-ல் அவர் நாடு திரும்பினுர். ஆஸ்திரியாவிற்கு எதிராக ஆர்வத்துடன் போரில் ஈடுபட முனைந்தார். முதலில் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவிசெய்ய அனுமதி கோரினுர். சார்லஸ் ஆல்பர்ட் அவருடைய உதவியை நிராகரிக்கவே, லம்பார்டிய மக்களுக்கு உதவி புரியலானுர். மிலான் நகர வாசிகள் அவருக்கு ஆர்வமிக்க வரவேற்பை அளித்தார்கள். பல பேர் அவருடைய படையில் சேர்ந்துகொண்டனர். அப் படையைக் (Red shirts) கொண்டு ஆஸ்திரியாவிற்குப் பல இன்னல்கள் கொடுத்து வந்தார். இறுதியில் சார்லஸ் ஆல்பர்ட்டு தன்னுடைய படையின் படைத்தலைவராக அமர்ந்தார். அதே நேரத்தில் மாஜினியின் வேண்டுகோள் அவருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே ரோம் நோக்கிப் புறப்பட்டார். முதலில் ஃபிரஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தார். ஆனுல், ஃபிரஞ்சுப் படைகள் பலப்படுத்தப்பட்டதால் ரோமைவிட்டு வெளியேறவேண்டியதாயிற்று. மறுபடியும் போப்ரோமாபுரியின் ஆட்சித் தலைவரானுர். ரோமைவிட்டு வெளியேறிய கரிபால்டி வெனிஸ் செல்ல முயன்றுர். ஆனுல், அவரைப் பின்தொடர்ந்த அவரது பகைவர்கள் அம் முயற்சியைத் தோற்கடித்தார்கள். அவர்களுடைய பிடியிலிருந்து தப்ப கரிபால்டி பல இன்னல்களை அனுபவித்தார். அவர் மனைவியார் அக் காலத்தில்தான் இறந்துவிட்டார். இறுதியில் அவர் இத்தாலியி னின்றும் தப்பி வெளியேறினுர்.

இதற்கிடையே பியட்மான்ட் பாராளுமன்றம் சார்லஸ் ஆல்பர்ட்டை ஆஸ்திரியாவுடன் மீண்டும் போர்செய்யுமாறு தூண்டியது. அதே நேரத்தில் ஆஸ்திரியாவின் தலைநகரில் கிளர்ச்சி ஏற்பட்டது. அதைப் பயன் படுத்தி சார்லஸ் ஆல்பர்ட் மீண்டும் போர் தொடங்கினுர். ஆனுல், மீண்டும் நோவாரா என்னுமிடத்தில் தோல்வியுற்றுர். அதனுல் அவர் முடிதுறந்தார். அவரைப் பின்தொடர்ந்த இரண்டாவது விக்டர் இம்மானுவேல் ஆஸ்திரியாவுடன் சமாதானம் செய்துகொண்டார். பியட்மான்ட், தான் கைப்பற்றிய இடங்களைத் திருப்பிக் கொடுத்து விட்டது. ஆஸ்திரியா பியன்ட்மான்டினுடைய அரசியலமைப்பை ஒழிக்குமாறு வேண்டிக்கொண்டது. ஆனுல், விக்டர் இம்மானுவேல் அதற்கிசைய மறுத்தார். ஆகவே, இத்தாலியில் 1848-ல் கிளர்ச்சி காரணமாக ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்புகளில் பியட்மான்ட் அரசியலமைப்பு ஒன்றுதான் நிலைபெற்றிருந்தது.

இவ்வாறிருக்க, வெனிஸ் நகரத்தில் மக்கள் ஆஸ்திரியாவைத் தொடர்ந்து எதிர்த்துக்கொண்டிருந்தார்கள். 1849-ல் வெனிஸ் சரண்

அடைந்தது. டஸ்கனி கோமகன் கிளர்ச்சி காரணமாகத் தன் ஆட்சிப் பகுதியைவிட்டு வெளியேறினூர். அவரும் தன்னுடைய ஆட்சியதிகாரத்தை மீண்டும் பெற்றூர்.

1848-ல் இத்தாலியின் சுதந்திரத்திற்காகவும், மக்களுக்கு உரிமைகள் அளிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது. கிளர்ச்சிக்காரர்கள் மிக்க ஆர்வத்துடன் அதில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனூல், அக் கிளர்ச்சியின் தலைவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அனைவரும் ஆஸ்திரியாவை விரட்டிவிட வேண்டும் என்று எண்ணினூர்கள். ஆனூல், அந் நோக்கத்தைச் செயற்படுத்துவதில் ஒற்றுமையைக் கையாளவில்லை. சார்லஸ் ஆல்பர்ட் தன்னுடைய ஆட்சியின்கீழ் இத்தாலியை ஒன்றுபடுத்த எண்ணினூர். ஆனூல், குடியரசை ஏற்படுத்தவேண்டும் என்று கருதிய மாஜினியின் கட்சியினரும், போப்பைத் தலைவராக்க வேண்டும் என்று கருதியவர்களும் சார்லஸ் ஆல்பர்ட்டுடன் ஒத்துழைக்கவில்லை. மேலும், வலிமை வாய்ந்த ஆஸ்திரியாவுடன் போரிட இத்தாலிய மக்களுக்கு அயல் நாடுகளினின்றும் யாதோர் உதவியும் கிடைக்கவில்லை. 1848-ல் ஏற்பட்ட இயக்கம் தோல்வியில் முடிந்தாலும், மக்களிடம் தேசீய உணர்ச்சியும், அரசியலமைப்புச் சார்ந்த ஆட்சியில் பற்றும் மேலும் வளர அது பெரிதும் உதவி செய்தது. மாஜினியின் கட்சியினரும், போப்பைத் தலைவராகக்கொண்ட அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கூறியவர்களும் தக்க சமயத்தில் சார்லஸ் ஆல்பர்ட்டுக்கு உதவி செய்யாததால், அவர்களுடைய செல்வாக்கை இழந்தார்கள். நாட்டு ஒற்றுமையை ஏற்படுத்தத் தகுதி பெற்றவர் பியட்மான்ட் அரசரே யாவார் என்ற கருத்து ஓங்கி வளரலாயிற்று.

இத்தாலியை தேசீயக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நாடாக மாற்றிய பெருமை கவூரைச் (Cavour) சேர்ந்ததாகும். கவூர் 1810-ல் டியூரின் என்னுமிடத்தில் பியட்மான்டைச் சார்ந்த மேற்குடியாளர் குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய தந்தைக்கு அவர் இளைய மைந்தனூதலின், அவர் படைத்துறையில் சேரவேண்டியதாயிற்று. பத்து வயதில் டியூரினிலுள்ள இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தார். இராணுவ சேவையில் விருப்பங் குறையவே, அதைவிட்டு வெளியேறினூர். பிரிட்டன் போன்ற நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். அதன் பயனூக முற்போக்குக் கருத்துகளில் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். சில காலம் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார். 1847-ல் 'ரிஸ்ஆர்கிமென்டோ' (Il. Resorgimento) என்ற பெயரில் பத்திரிகையொன்றை நடத்திவந்தார். ரிஸ்ஆர்கிமென்டோ என்றூல், புதுச் செயல் ஊக்குவிப்பு என்று பொருள். அப் பத்திரிகை அரசியலமைப்புச் சார்ந்த அரசாங்கம் அமைப்பது, இத்தாலியின் சுதந்திரம்

போன்ற கருத்துகளை ஆதரித்தது. 1848-ல் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டபோது, கவூர் பியட்மான்டின் முதல் பாராளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1850-ல் அமைச்சரானுர். விரைவில் பல துறைகளுக்கு அமைச்சரானுர். 1852-ல் பிரதம மந்திரி யானுர். வர்த்தகம் பெருகியதற்கும், நிதிநிலை நல்ல முறையில் அமைந் திருந்ததற்கும் அவருடைய பெருமுயற்சியே காரணமாகும். நாட்டில் மக்கள் எல்லா வளங்களையும் பெற்று மனநிறைவுடன் இருந்தால்தான் வெளிநாட்டுத்துறையில் நாடு சிறப்பாக விளங்க முடியும் என்று கருதினுர். நாட்டின் இராணுவப் பாதுகாப்புச் சாதனங்களைப் பெருக்கினுர்.

கவூருடைய சிறப்புக்குக் காரணம் அவர் இத்தாலியை ஒன்று படுத்த மேற்கொண்ட முயற்சியேயாகும். இத்தாலி சுதந்திரம் பெற்ற நாடாக அமையவேண்டுமென்றுல் ஆஸ்திரியாவுடன் போர்புரிய வேண்டும் என்பதை நன்ருக உணர்ந்திருந்தார். அதே கருத்தைத் தான் மாஜினியும் கொண்டிருந்தார். ஆனுல், காரியசாத்தியமான முறையைக் கையாண்டு, அந் நோக்கத்தை நிறைவேற்றி, அவர் சிறப் படைந்தார். இத்தாலி ஆஸ்திரியாவை வெளியேற்ற அயல் நாட்டரசு களின் உதவி மிகவும் அவசியமானது என்பதை உணர்ந்தார். ஆகவே, அதைப் பெற வழி தேடினுர். அச் சமயத்தில் கிரிமியப் போர் (Crimean war) தொடங்கியது. இங்கிலாந்தும் ஃபிரான்சும் சேர்ந்து ருஷ்யாவுடன் போரிட்டன. சார்டினியா அதில் கலந்துகொண்டால், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அதனுடைய செல்வாக்கை ஏற்படுத்த முடியும் என்று கவூர் கருதினுர். அத்தகைய செல்வாக்கு இத்தாலியை ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு அவசியம் என்று அறிந்திருந்தார். ஏனெனில், இத்தாலி ஒரு நாடாக உருவாக்கப்பட்டால், இத்தாலியைப் பொறுத்த அளவில் வியன்னு ஏற்பாடு கிழித்தெறியப்படவேண்டிய தாகும். அதற்கு அவ்வேற்பாட்டை உருவாக்கியவர்களின் ஆதரவு தேவைப்பட்டது. அவ்வாதரவைப் பெறவே கவூர் சார்டினியாவைப் போரில் ஈடுபடுத்தினுர். அதற்கு மன்னர் விக்டர் இம்மானுவேல் பேராதர வைக் கொடுத்தார். போரில் சார்டினிய வீரர்கள் வீராவேசத்துடன் போரிட்டனர். அதன் பயனுக சார்டினியாவின் புகழ் ஓங்க ஆரம்பித் தது. இப்பொழுது அது ஒரு வல்லரசாகவே கருதப்பட்டது. போருக்குப் பின்னர் பாரிஸில் கூட்டப்பட்ட மாநாட்டில் கவூர் கலந்து கொண்டார். அம் மாநாட்டில் இத்தாலியின் பல பாகங்களிலும் ஏற்பட்டிருந்த சீர் கேடுகளை விளக்கிக் கூறினுர். அச் சீர்கேடுகளுக்கு ஆஸ்திரியாவே பொறுப்பு என்றும் கூறினுர். அதன் விளைவாக இங்கிலாந்து, ஃபிரான்சு ஆகிய நாடுகளின் பரிவிரக்கத்தைமட்டுமே பெற்றுர். ஆகவே, போரிடுவது அவசியமாகும் என அறிந்தார். பிரிட்டனின் உதவி கிடைக்காது என்று அறிந்தவுடன், ஃபிரான்சை அப்பொழுது ஆண்டு

வந்த மூன்ருவது நெப்போலியனுடைய உதவியைக் கோரினர்[1]. பல காரணங்களால் நெப்போலியன் இத்தாலிக்கு உதவிசெய்ய முன் வந்தார். ஃபிரான்சில் அவர் ஆட்சி நிலைபெற்றிருக்க வெற்றிகரமான போர் தேவைப்பட்டது. வியன்ன ஏற்பாட்டை அழிக்கவேண்டும் என்ற கொள்கையை உடையவராதலின், இத்தாலிக்கு உதவிபுரிய இசைந்தார். மேலும், ஃபிரான்சின் அரசராவதற்கு முன்னர் இத்தாலியில் அம் மக்களின் உரிமைப் போராட்டங்களில் கலந்துகொண்டிருந்தார். மேலும், நாட்டிலுள்ள முற்போக்குக் கட்சியினரைத் திருப்திப்படுத்த அது பயன்படும் என்று கருதினர். 1858-ல் கவூரும் மூன்ருவது நெப்போலியனும் பிலாம்பியேர் (Plombieres) என்னுமிடத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். ஆஸ்திரியாவை இத்தாலியினின்றும் விரட்டுவதற்கும், சார்டினியாவின் ஆட்சியை லம்பார்டியிலும் வெனிஷியாவிலும் ஏற்படுத்துவதற்கும் சார்டினியா தொடங்கும் போரில் ஃபிரான்சு கலந்துகொள்ள இசைந்தது. அதற்குப் பதிலாக சவாய், நைஸ் ஆகிய இடங்களை நெப்போலியனுக்கு அளிக்க சார்டினியா சம்மதித்தது. மத்திய இத்தாலியில் நெப்போலியனுடைய நெருங்கிய உறவினரான ஜெரோம் போனபார்ட் அரசராக அமர்த்தப்படவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், போர் ஆஸ்திரியாவாலேயே தொடங்கப்பட்டதாகக் காணப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. இவ்வொப்பந்தத்தைப் பலப்படுத்தும் வகையில் இளவரசர் ஜெரோம் போனபார்ட், விக்டர் இம்மானுவேலின் மகளை மணம்புரிய ஏற்பாடு செய்யப்பட்டது.

சில காலம் கவூர் ஆஸ்திரியாவைப் போருக்கு இழுப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார். ஆனல், சில காலம் சென்றபின் நெப்போலியன் சண்டையிடத் தயங்குவதாக கவூர் கண்டார். ஆகவே, போருக்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய முற்பட்டார். ஐரோப்பிய நாடுகள் போர் நிகழாதவாறு தம் செல்வாக்கைப் பயன்படுத்தத் தொடங்கின. மாநாடு ஒன்றைக் கூட்டி இத்தாலியின் பிரச்சினைக்கு முடிவுகாண எண்ணினர்கள். கவூர் அதை விரும்பவில்லை. அப்பொழுது ஆஸ்திரியா சார்டினியாவிற்கு இறுதி அறிக்கையொன்றை அனுப்பியது. கவூர் அதை நிராகரித்ததால், ஆஸ்திரியா போர் தொடங்கியது. போருக்குக் காரணம் ஆஸ்திரியா என்று அறிந்தவுடன், நெப்போலியன் படையொன்றை சார்டினியாவிற்கு அனுப்பினர்.

1859-ல் தொடங்கிய போரில் விக்டர் இம்மானுவேல் மாஜென்டா, சால்ஃபெரினே (Magenta and Solferino) என்னுமிடத்தில் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தார். லம்பார்டி சார்டினியாவின் கைவசமாயிற்று.

[1] மூன்ருவது நெப்போலியன், நெப்போலியனுடைய சகோதரரான லூயி போனபார்ட் என்பவரின் மகன்.

இதற்கிடையில் நடு இத்தாலியிலுள்ள போப்பின் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து ஆஸ்திரியாவின் படைகள் வெளியேறின. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அப் பகுதிகளில் மக்கள் ஆதரவைப் பெற்ற ஆட்சிகள் நிறுவப்பட்டன. அதுபோலவே டஸ்கெனி, பார்மா, மோடனு ஆகிய இடங்களில் உள்ள மக்கள் கிளர்ச்சி செய்து தங்களுடைய ஆட்சியாளர்களை விரட்டிவிட்டார்கள். அவ்விடங்களில் மக்கள் ஆதரவைப் பெற்ற அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பிறகு, போப்பின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் ஒன்றுன ரோமாக்னு, டஸ்கனி, பார்மா, மோடனு ஆகியவற்றின் புதிய ஆட்சியாளர்கள் தங்களுடைய ஆட்சிப் பகுதிகளை பியட்மான்டுடன் சேர்த்துகொள்ளவேண்டும் என்று விக்டர் இம்மானுவேலை வேண்டிக்கொண்டார்கள். ஆஸ்திரியாவின் ஆதிக்கம் இத்தாலியில் ஒழிந்துவிடும் என்று அனைவரும் எண்ணியிருந்தபோது, நெப்போலியன் விக்டர் இம்மானுவேலைக் கலந்து ஆலோசியாமல் ஆஸ்திரியாவுடன் சமாதானம் செய்துகொண்டார். அதற்குப் பல காரணங்களுண்டு. நெப்போலியன் திடமனமுடையவரல்லர். இத்தாலி ஒன்றுக்கப்பட்டு அதனுல் அது வலிமை அடைவதை அவர் விரும்பவில்லை. சார்டினியா அத்தகைய இத்தாலியை உருவாக்க விரும்புகிறது என்பதை அறிந்ததால், அவர் சண்டையை நிறுத்திக் கொண்டார். பிரஷ்யாபோன்ற நாடுகள் இப் போர் நடைபெறுவதை விரும்பவில்லை. மேலும், ஃபிரான்சிலிருந்த கத்தோலிக்கர்கள் இப் போரை வெறுத்தார்கள். ஏனெனில், அப் போர் போப்பினுடைய ஆட்சிப் பகுதிகளில் கலவரத்தை உண்டாக்கக் காரணமாயிருந்தது. வில்லா பிரான்கா சமாதானத்தின்படி, லம்பார்டியை பியட்மான்டுக்கு கொடுக்க ஆஸ்திரியா இசைந்தது. பார்மாவையும் பியட்மான்டுடன் இணைப்பதென்று முடிவுசெய்தனர். டஸ்கெனியும் மோடனுவும் அவைகளின் கோமக்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. எல்லா இத்தாலிய நாடுகளும் போப்பின் தலைமையின்கீழ் ஒன்றுசேர்ந்து கூட்டமைவு ஒன்றை ஏற்படுத்த இவ்விருநாடுகளும் இசைந்தன. கவூர் இவ் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளலாகாது என்றும், போரைத் தனித்திருந்து நடத்தவேண்டும் என்றும் விக்டர் இம்மானுவேலிடம் மன்றுடினுர். அவர் மறுக்கவே, பதவியைவிட்டு விலகினுர். பிறகு ஃபிரான்சு, சார்டினியா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஜூரிக் உடன்படிக்கையை (Treaty of Zurich) ஏற்படுத்தின. வில்லாபிராங்கா சமாதானத்தில் காணப்பட்ட முக்கிய நிபந்தனைகளை இது உட்கொண்டிருந்தது. ஆனுல், நடு இத்தாலிய நாடுகள் அவைகளுடைய கோமக்களை ஏற்றுக்கொள்ள மறுத்தன. போப் கூட்டமைவுக் கருத்தை எதிர்த்தார். ஆகவே, இத்தாலியப் பிரச்சினையை ஐரோப்பிய நாடுகள் கூடித் தீர்வுகாண வேண்டும் என்று கூறினுர். 1860-ல் மீண்டும் கவூர் பிரதமரானுர். மறுபடியும் நெப்போலியனுடன் பேச்சுவார்த்தை நடத்தினுர். அதன் பயனுக அவ்விருவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. நடு

இத்தாலிய ஆட்சிப் பகுதிகளில் மக்களின் விருப்பப்படி ஆட்சி அமைய வேண்டும் என்றும், சவாய், நைஸ் ஆகிய பகுதிகளில் ஓட்டெடுப்பு நடத்தி மக்களின் ஒப்புதலைப் பெற்றபின்னர் அவைகளை ஃபிரான்சுடன் சேர்க்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. நடு இத்தாலியில் ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது. பெருவாரியான மக்கள் பியட்மான்டுடன் சேர விரும்பினர். அதேபோல் சவாய், நைஸ் ஆகிய மக்கள் ஃபிரான்சுடன் சேர விருப்பம் தெரிவித்தார்கள். டியூரினில் விக்டர் இம்மானுவேல் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக்கொண்ட பாராளுமன்றம் 1860-ல் கூடி ஜுரிக் உடன்படிக்கையை அங்கீகரித்தது.

இதற்கிடையில் சிசிலி, தெற்கு இத்தாலி ஆகிய இடங்களை பியட்மான்டுடன் இணைப்பதற்கு வேண்டிய முயர்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சிசிலியில் 1860-ல் கிளர்ச்சி ஏற்பட்டது. அம் மக்கள் உரிமைகளைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி, அம் மக்களையும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இத்தாலிய அரசில் சேர்த்துக்கொள்ள விரும்பினர். ஆனால், ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக ஆஸ்திரியா, மேலும் பல பகுதிகளை இத்தாலிய அரசுக்குட்படுத்துவதை எதிர்க்கக்கூடும் என்பதையும் அறிந்திருந்தார். ஆகவே, 1859-ல் நாடு திரும்பிய கரிபால்டியைத் தன்னுடைய படையுடன் சிசிலி சென்று அதை வெல்ல அனுப்பினர். விக்டர் இம்மானுவேலும் மக்களும் கரிபால்டிக்குப் பணவுதவி செய்து தங்களுடைய ஆதரவைத் தெரிவித்தார்கள். கரிபால்டி படைகளைச் சேகரிப்பதை அரசாங்கம் தடைசெய்யாது வாளாவிருந்தது. படையெடுப்பு ஏற்பாடுகள் முற்றுப்பெற்றபின், கரிபால்டி சிசிலி சென்று மார்சாலா என்னுமிடத்தில் கரையேறினர். சிசிலி மக்கள் அவரை வரவேற்று எல்லா அதிகாரங்களையும் கொடுத்தார்கள். தன்னை எதிர்த்த நேபில்ஸ் படையினரை அவர் தோற்கடித்தார். பாலர்மோ என்னும் நகரத்தை முற்றுகையிட்டார். வெகு விரைவில் சிசிலியின் பெரும்பகுதியைத் தனதாக்கிக் கொண்டார். அதன் பின்னர் கரிபால்டி தெற்கு இத்தாலிக்குச் சென்றார். அங்கிருந்து நேபில்ஸ் நோக்கிப் படையை நடத்திச் சென்றார். நேபில்ஸ் மன்னர் நகரத்தைவிட்டு வெளியேறினர். நேபில்ஸ் எளிதில் கரிபால்டியின் கைவசமாயிற்று. அதன் பிறகு தென்இத்தாலியின் சர்வாதிகாரி என்று தன்னை அழைத்துக்கொண்டார். அச் சமயம் மாஜினியும் நேபில்ஸில் இருந்தார். கரிபால்டி தான் வென்ற நாடுகளை இத்தாலிய அரசுடன் இணைத்துவிடாமல், அப் பகுதிகளுக்கு அவர் சர்வாதிகாரி பட்டம் ஏற்றுக்கொண்ட செய்தியும், மாஜினி நேபில்ஸில் தங்கியிருக்கும் செய்தியும் கவூருக்குப் பெருத்த பயத்தை விளைவித்தது. கரிபால்டி குடியரசை ஏற்படுத்த முற்படுவார் என்று கவூர் பயந்தார். ஆனல், கரிபால்டி, ரோமாபுரியையும் வென்றபிறகே எல்லாப் பகுதிகளை

யும் விக்டர் இம்மானுவேலின் ஆட்சிக்குட்படுத்துவேன் என்று அறிவித்தார். ரோம் நகரம் தாக்கப்பட்டால் ஃபிரான்சு போன்ற கத்தோலிக்க நாடுகள் அத் தாக்குதலினின்றும் போப்பைக் காப்பாற்ற முற்படும் என்றும், அதனுல் இத்தாலியப் பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் தலையிட வாய்ப்பு உண்டாகும் என்றும் கவூர் எண்ணினுர். ஆகவே, விக்டர் இம்மானுவேலை, நேபில்ஸ் சென்று அதைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அந் நேரத்தில் போப் ரோமாக்னுவைத் தாக்க ஏற்பாடு செய்தார். அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி பியட்மான்டினுடைய சேனையைப் போப்பிற்குச் சொந்தமான அம்பிரியா போன்ற பகுதிகளுக்கு அனுப்பினுர். காஸ்டல்ஃபிடார்டோ (Castelfidardo) என்னுமிடத்தில் போப்பின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அம்பிரியாவும் மார்சஸும் (Marches) பியட்மான்டின் படைகள்வசமாயின. அன்கோனு (Ancona) என்னுமிடத்தில் விக்டர் இம்மானுவேல் தன் படைகளுடன் சேர்ந்துகொண்டார். பிறகு தக்க சமயத்தில் விக்டர் இம்மானுவேல் நேபில்ஸ் சென்றுர். யாவரும் வியக்கத்தக்க வகையில் கரிபால்டி தன்னுடைய சர்வாதிகார பட்டத்தைத் துறந்தார். நேபில்சை விக்டர் இம்மானுவேல் கைகளில் ஒப்படைத்தார். அதன் பிறகு கரிபால்டியின் படைகள் கலைக்கப்பட்டன. கரிபால்டியும் காப்ரீரா என்னும் தீவுக்குச் சென்றுர். பல இடங்களை வென்று சர்வாதிகாரியாக விளங்கிய கரிபால்டி காப்ரீரா என்னும் தீவுக்குச் சென்றுர். பல இடங்களை வென்று சர்வாதிகாரியாக விளங்கிய கரிபால்டி, காப்ரீரா செல்லும்போது, ஒரு பை நிறைய விதைகளும், கடன் வாங்கிய 500 ஃபிராங்குகளுமே (Francs) எடுத்துச் சென்றுர். அவருக்கு அளிக்கப்பட்ட எல்லா விருதுகளையும் நிராகரித்தார். அவரது வாழ்க்கை, நாட்டின் நலமே ஒருவரது சுயநலத்தைவிட மேலாகக் கருதப்படவேண்டியது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அம்பிரியா, மார்சஸ், நேபில்ஸ், சிசிலி ஆகிய இடங்களில் ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது. மக்கள் இத்தாலிய அரசில் சேர விருப்பம் தெரிவித்தார்கள். அவர்கள் விருப்பப்படியே அவைகள் இத்தாலிய அரசுடன் இணைக்கப்பட்டன. 1861-ல் ஆஸ்திரியாவின் அதிகாரத்துக்குட்பட்ட வெனீஷியா, போப்பின் ஆட்சியின்கீழ் இருந்த ரோமாபுரி, அதைச் சுற்றியுள்ள பகுதிகள் தவிர, ஏனைய பாகங்களில் தேர்தல் நடத்தப்பட்டது. அதன் விளைவாக இத்தாலியப் பாராளுமன்றம் டியூரினில் கூடியது. சில மாதங்களுக்குப் பின்னர் கவூர் இறந்தார். அவர் இத்தாலியை ஐக்கியப்படுத்த மேற்கொண்ட முயற்சிகளும், அடைந்த மனவேதனைகளும் அவருடைய அகால மரணத்திற்குக் காரணமாகும்.

கவூர் மறைவிற்குப் பின்னர் இத்தாலியப் பகுதிகளான வெனீஷியா, ரோம் ஆகியவை இத்தாலிய அரசுடன் இணைக்கப்படவேண்டியனவாக இருந்தன. கவூருடைய அரசியல் திறம் இத்தாலியின் பெரும்

பகுதியை ஒரே ஆட்சியின்கீழ்க் கொண்டுவர உதவி செய்தது என்று நாம் முன்னர் கவனித்தோம். இத்தாலிக்கு வெளியே ஏற்பட்ட இரண்டு நெருக்கடிகள் மேற்கூறிய பகுதிகளை இத்தாலியுடன் இணைக்க உதவி செய்தன. ஜெர்மனியிலுள்ள பிரஷ்யாவும், இத்தாலியைப்போல ஆஸ்திரியாவை ஜெர்மனியினின்றும் விரட்டுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தது. ஆஸ்திரியாவுடன் போர்மேற்கொள்ளவேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டது. அதனுல், அது அப் போரில் தனக்கு உதவியாக இருக்க இத்தாலியைக் கேட்டுக்கொண்டது. அதற்குப் பதிலாக வெனீஷியாவை இத்தாலி பெறுவதற்கு உதவி செய்வதாகக் கூறியது. அதே நேரத்தில் விக்டர் இமானுவேல் போரின்போது நடுநிலை வகித்தால், ஆஸ்திரியா அவருக்கு வெனீஷியாவைத் தர இசைவு தெரிவித்தது. இத்தாலி அந்த யோசனையை நிராகரித்தது. பிறகு பிரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. 1866-ல் பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையே போர் ஏற்பட்டது. இத்தாலி போரில் கலந்துகொண்டது. அப் போரில் கஸ்டோஸா என்னுமிடத்தில் இத்தாலி தோல்வியுற்றது. இத்தாலியின் கப்பற்படையும் தோல்வியடைந்தது. ஆனுல், பிரஷ்யாவின் பெருவெற்றி வெனீஷியாவை இத்தாலிய அரசுடன் இணைப்பதற்கு உதவி செய்தது. 1866-ல் ஏற்படுத்தப்பட்ட பிரேக் உடன்படிக்கைப்படி (Treaty of Prague) ஆஸ்திரியா வெனீஷியாவைவிட்டு வெளியேறியது. அங்கும் ஓட்டெடுப்பு நடத்தி மக்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகே, வெனீஷியா இத்தாலிய அரசுடன் இணைக்கப்பட்டது.

எஞ்சியிருந்தது ரோமாபுரியும், அதைச் சுற்றியிருந்த பகுதியுமேயாகும். ரோமாபுரி இத்தாலிய அரசில் இல்லையென்றுல் இத்தாலி சிறப்புற்றிருக்க முடியாது என்று கருதப்பட்டது. ஃபிரான்சு ரோமாபுரியைக் காக்க ஒரு படையை அங்கு நிலைநிறுத்திவைத்திருந்தது. ஆகவே, ஃபிரான்சுடன் போர் புரியாமல் ரோமாபுரியைக் கைப்பற்றுவது இயலாத காரியமாகத் தோன்றியது.

1862-ல் கரிபால்டி ரோமாபுரியைத் தாக்க முற்பட்டார். ஆனுல், அவர் இத்தாலியப் படையால் தோற்கடிக்கப்பட்டார். போரில் காயமடைந்த கரிபால்டிக்கும், அவருடைய படையினருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது. அதன் பிறகு கரிபால்டி இங்கிலாந்துக்குச் சென்றுர். 1864-ல் விக்டர் இம்மானுவேலும் நெப்போலியனும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்கள். அதன்படி இரண்டு ஆண்டுகளுக்குள் ஃபிரஞ்சுப் படைகளை ரோமாபுரியினின்றும் திரும்ப அழைத்துக்கொள்ள நெப்போலியன் இசைந்தார். விக்டர் இம்மானுவேல் போப்பினுடைய ஆட்சிப் பகுதியை எல்லாத் தாக்குதல்களினின்றும் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆகவே, இத்தாலிய அரசாங்கம் ஃபிளாரன்ஸைத் (Florence) தலைநகரமாக்கிக்கொண்டது. 1866ஆம்

ஆண்டிற்குள் ஃபிரான்சு தன்னுடைய துருப்புகளை ரோமாபுரியினின்றும் திரும்ப அழைத்துக்கொண்டது. அவ் வாய்ப்பினைப் பயன்படுத்தி கரிபால்டி 1867-ல் ரோமாபுரியைத் தாக்க முயன்றார். முதலில் அவர் வெற்றியடைந்தார். அதை அறிந்த ஃபிரெஞ்சுப் படை மீண்டும் ரோமாபுரிக்குள் நுழைந்து கரிபால்டியை மென்டானு (Mentana) என்னுமிடத்தில் தோற்கடித்தது. ஆயினும், கரிபால்டி மீண்டும் காப்ரீராவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார். 1870-ல் ஃபிரான்சுக்கும் பிரஷ்யாவிற்கும் போர் ஏற்பட்டது. அச் சமயத்தில் கரிபால்டி ஃபிரான்சுக்குச் சென்றார். ஃபிரெஞ்சுப் படையின் ஒரு பகுதிக்குத் தலைவராக்கப்பட்டார். அவர் ஃபிரெஞ்சு மக்கள் சபையின் அங்கத்தினராகச் சில இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனல், அந்நியர் என்ற காரணத்தால் அவர் மக்கள் சபையில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்படவில்லை. 1874-ல் அவர் இத்தாலியப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் 1882-ல் காப்ரீராவில் உயிர் நீத்தார்.

இதற்கிடையில் 1870-ல் ஃபிரான்சு பிரஷ்யாவுடன் போரில் ஈடுபட்டிருந்ததால், தன்னுடைய துருப்புகளைத் திரும்ப அழைத்துக் கொண்டது. ஃபிரான்சு சேடானில் (Sedan) தோல்வியுற்ற செய்தி பரவியது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இத்தாலியப் படை ரோமாபுரிக்குள் நுழைந்தது. 1870-ல் ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது. மக்கள் பெருவாரியான ஓட்டுகளின் வாயிலாக விக்டர் இம்மானுவேலின் ஆட்சியை ஏற்றுக்கொண்டார்கள். 1871-ல் ரோமாபுரி இத்தாலிய நாட்டின் தலைநகரமாக ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கம் போப்புக்குப் பல உரிமைகளைக் கொடுத்தது. வாட்டிகன், லாடெரன் பெருமாளிகைகளை (Vatican Lateran) ஆண்டுகொள்ளும் உரிமையும் கொடுக்கப்பட்டது. மத ஸ்தாபனத்தை நடத்தும் பொறுப்பும் அளிக்கப்பட்டது. ஆனல், போப் இத்தாலிய அரசை அங்கீகரிக்கவில்லை. எனினும், இத்தாலியை அந்நிய ஆட்சியினின்றும் விடுவிக்கவும் ஒன்றுபடவும் மேற்கொண்ட முயற்சி பெரு வெற்றியை அடைந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

ஜெர்மனி

1800ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜெர்மனி சில நூற்றுக்கணக்கான சிறு நாடுகளைக் கொண்டிருந்தது. இந் நாடுகள் அனைத்தும் தெய்வீக ரோமானியப் பேரரசரைத் தலைவராகக் கொண்டிருந்தன. ஆனல், அவர் பெயரளவில் மட்டுமே தலைவராக இருந்தார். அந் நாடுகள் அனைத்தும் உள்நாட்டு விவகாரங்களாயினும் சரி அல்லது வெளிநாட்டு விவகாரங்களாயினுஞ் சரி, பெரும்பாலும் தங்கள் விருப்பப்படியே

செயற்பட்டுவந்தன. அவைகளுள் ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆஸ்திரியாவின் அரசர்தான் பேரரசர் பட்டத்தைப் பெற்றிருந்தார். பிரஷ்யா பலம் பொருந்திய இராணுவ அமைப்பைப் பெற்ற நாடாக விளங்கியது. ஏனைய நாடுகள் அவ்விரு நாடுகளைச் சார்ந்திருந்தன. எல்லா நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய சபையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அப் பிரதிநிதிகள் அந்தந்த நாட்டின் தலைவர்களால் நியமிக்கப்பட்டவர்களேயாவர். அச் சபைக்குக் குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் ஒன்றும் வழங்கப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டில் நெப்போலியன் பல மாறுதல்களை ஏற்படுத்தினுர் என்று நாம் முன்னரே கண்டறிந்தோம். சிறு நாடுகளை எல்லாம் ஒன்றுக்கி அங்கு 39 நாடுகளை ஏற்படுத்தினுர். அவைகளைத் தவிர அங்கிருந்த ஆட்சியுரிமை பெற்ற பல நகரங்களின் எண்ணிக்கையை நான்காகக் குறைத்தார். அவருடைய ஏற்பாட்டின் விளைவாக ஜெர்மனி நாடுகளிடையே கூட்டமைவு ஒன்றும் ஏற்படுத்தும் எண்ணம் வளரலாயிற்று. அத்துடன் விரிவாக்கப்பட்ட நாடுகள் மேலும் பலமுடையனவாயின. அதனுல், அவைகளிடையே சுதந்திரத்தில் பற்று ஏற்பட்டது. மேலும், தெய்வீகப் புனிதப் பேரரசு அழிக்கப்பட்டதால் புதிய ஜெர்மனியை உருவாக்குவதற்குத் தடையாய் நின்ற ஒரு ஸ்தாபனம் நீக்கப்பட்டது என்று கருதப்படுகிறது. அதுமட்டுமன்றி, ஆஸ்திரியா இன்றியே புதிய அமைப்பு ஒன்று ஜெர்மனியில் ஏற்படுத்த முடியும் என்ற கருத்து வளரலாயிற்று. நெப்போலியன், ஆட்சிமுறையில் பல திருத்தங்களை ஏற்படுத்தினுர். அதன் விளைவாக இடைக்காலத்திலிருந்து நடைமுறையில் இருந்துவந்த பல கட்டுப்பாடுகள் அழிந்தன. அதனுல் புதிய ஜெர்மனியை உண்டாக்குவது எளிதான செயலாகக் காணப்பட்டது. மற்ருெரு வகையிலும், நெப்போலியன் ஜெர்மனியைத் தேசிய இனஞ்சார்ந்த நாடாக அமைப்பதற்கு உதவி செய்துள்ளார். அவர் ஜெர்மனியில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களை அந்நிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டியது. அதன் பயனுக நெப்போலியன் சுதந்திர உணர்ச்சியால் தூண்டப்பட்ட மக்களுக்கு எதிராகப் போர்புரிய நேர்ந்தது. ஆனுல், அச் சுதந்திர உணர்ச்சி வளர்ச்சி பெறுவதற்கு அங்கிருந்த ஆட்சியாளர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளாததால், ஜெர்மனியை ஒன்றுபடுத்தும் வேலையை அங்கிருந்த அரசாங்கங்களே மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

1815-ல் வியன்னு ஏற்பாட்டின்வாயிலாக ஜெர்மனி பலமற்றதும், ஒற்றுமையுணர்ச்சி வளர வாய்ப்பு இல்லாததுமான நாடாக அமைக்கப்பட்டது என்று முன்னரே குறிப்பிட்டோம். தெய்வீகப் புனித ரோமானியப் பேரரசு மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை. முன்னிருந்த சில நூற்றுக்கணக்கான சிறு நாடுகளும், பல ஆட்சியுரிமை பெற்ற நகரங்

களும் மீண்டும் ஏற்படுத்தப்படவில்லை. புனித ரோமானியப் பேரரசுக்குப் பதிலாகக் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால், ஆஸ்திரியாவின் கருத்துக்கிணங்க அக் கூட்டமைப்பு பலம் பொருந்தியதாக வளராமல் தடுக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வமைப்பு உட்கொண்டிருந்த நாடுகளுக்கு ஆட்சிமுறை விவகாரங்களில் முழு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. கூட்டமைப்பு ஜெர்மனியில் அமைதியை நிலைநிறுத்தும் அதிகாரம் பெற்றிருந்தது. கூட்டமைப்பின் அதிகாரங்களைப் பொறுத்த விவகாரங்களைக் கவனிக்க ஒரு சபை ஃபிராங்போர்டில் நிறுவப்பட்டது. ஒவ்வொரு நாடும் குறைந்தது ஒரு பிரதிநிதியை அச் சபைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. அப் பிரதிநிதிகள் அனைவரும் அவ்வவ்வரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்டவர்களாவார்கள். முக்கியமான விவகாரங்களை எல்லா உறுப்பினர்களின் ஒப்புதலின் பேரிலேயே முடிவு செய்யவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆஸ்திரியாவை அச் சபையின் தலைமைப் பொறுப்பைத் தாங்குமாறும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால், ஆஸ்திரியாவின் செல்வாக்கு ஜெர்மனியில் பெருகிற்று. அதன் பயனாகக் கூட்டமைவினுடைய சபையைக்கொண்டு ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் கருத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. அச் சபையிலிருந்த அரசர்களின் பிரதிநிதிகள் மக்களாட்சியை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள விருப்பமற்றவர்களாயிருந்தனர். மேலும், அச் சபைக்கு அதனுடைய தீர்மானங்களைச் செயற்படுத்தக்கூடிய அமைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், ஆஸ்திரியா, பிரிட்டன் போன்ற ஜெர்மனிக்குப் புறம்பே இருந்த நாடுகளை ஆண்டுவந்த அரசர்கள் ஜெர்மனியின் நாடுகளுக்கும் அதிபர்களாயிருந்தனர். ஆகவே, அவர்களுடைய பிரதிநிதிகளும் அச் சபையில் கலந்துகொண்டனர். அவர்கள் ஜெர்மனி ஒன்றுசேர்ந்து பலம் பொருந்திய நாடாக அமைவதைத் தடுக்க முயற்சி செய்தனர். சுருங்கக் கூறுமிடத்து, வெளிநாட்டுப் போர்கள் ஏற்படும்போது ஜெர்மனி ஒரு கட்டாக நின்று போர்புரியவும், முற்போக்குக் கருத்துடையவர்களின் தாக்குதலினின்றும் கூட்டமைப்பில் அங்கம் வகித்திருந்த நாடுகளைக் காப்பதற்குமே ஜெர்மன் கூட்டமைப்புப் பயன்பட்டது.

ஜெர்மனி ஒன்ருக்கப்பட்ட நாடாக அமைவதை வேறு பல காரணக் கூறுகளும் தடைசெய்தன. நெப்போலியனுடன் போரிட்டுப் பல இன்னல்களுக்குட்பட்ட ஜெர்மானிய நாடுகள் போருக்கு முன் இருந்த நிலையைப் பெறும் முயற்சியிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் ஈடுபட்டிருந்தன. அரசியலமைப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிய முற்போக்குவாதிகளிடையே கருத்து ஒற்றுமை இல்லாதுபோயிற்று. சிலர் ஆஸ்திரியாவை ஜெர்மனி

யினின்றும் விரட்டவேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்தனர். வேறு சிலர் ஆஸ்திரியாவை ஜெர்மனியின் அரசியலமைப்பில் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இத்தாலியில் எல்லோருமே இத்தாலியின் ஐக்கியத்திற்கு முட்டுக்கட்டையாக அமைந்த ஆஸ்திரியாவை வெளியேற்ற வேண்டும் என்று வற்புறுத்தினர்கள் என்பதை நாம் இங்கு நினைவுக்குக் கொண்டுவருதல் அவசியமாகும். மேலும், மெட்டர்னிக் ஜெர்மனியில் முற்போக்குக் கருத்துகளை வளரவிடாது தடைசெய்தார். அவருடைய முயற்சியால் 1819-ல் ஜெர்மனியின் கூட்டமைப்பின் சபை கார்ல்ஸ்பாட் கட்டளைகளை (Carlsbad Decrees) நிறைவேற்றியது. கண்டிப்பான தணிக்கை முறை ஏற்படுத்தப்பட்டது. முற்போக்குக் கருத்துகளைக் கொண்ட மாணவர் கழகங்களை மூட உத்தரவிடப்பட்டது. அரசியலைச் சார்ந்த கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. பல பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பதவியினின்றும் விலக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டார்கள். இக் கடுமையான நடவடிக்கை ஜெர்மனியில் முற்போக்குக் கருத்துகளைச் சில காலத்திற்கு அடக்கிவிட்டது. இறுதியாக ஜெர்மனியிலுள்ள மக்களில் பெரும்பாலோர் தேசிய உணர்ச்சியைப் பெற்றவர்கள் அல்லர். ஜெர்மனியை ஒன்றுபடுத்தவேண்டும் என்ற கோரிக்கை படித்தறிந்த ஒருசிலரிடம்தான் காணப்பட்டது.

அதே நேரத்தில் ஒற்றுமை உணர்ச்சி வளர்வதற்கான சூழ்நிலையும் உருவாகிக்கொண்டுவந்தது. நெப்போலியன் ஜெர்மனிக்கு ஆற்றிய சேவைகளுள் முக்கியமானது அதனுடைய மக்களிடையே தேசிய மனப்பான்மையைத் தோற்றுவித்ததேயாகும். அதைப்பற்றி முன்னரே கண்டறிந்தோம். அக் காலத்தில் ஃபிக்டே (Fichte) போன்ற அறிஞர்கள் பலர் முற்போக்குக் கருத்துகளை வளர்ப்பத்தில் நாட்டம் செலுத்தியிருந்தனர். பல்கலைக்கழகங்களில் அக் கருத்துகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. மாணவர்கள், கழகங்கள் பல அமைத்து முற்போக்கு எண்ணங்கள் அழிவுறாமல் காத்துவந்தனர். மேலும், பொருளாதாரத் துறையில் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு, அரசியல் அமைப்பிலும் மாறுதல்கள் ஏற்படுத்த வழி காட்டியது. 1818-ல் பிரஷ்யா உள்நாட்டுச் சுங்க வரிகளையெல்லாம் தவிர்த்தது. அதைத் தொடர்ந்த ஏனைய நாடுகளைச் சுங்க வரியைச் சார்ந்த அமைப்பில் சேருமாறு வேண்டுகோள் விடுத்தது. அவ்வாறு அமைக்கப்பட்ட கூட்டிணைவு 'சால்வெரைன்' (Zollverein) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அதில் சேர்ந்த நாடுகளின் வியாபாரப் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட சுங்க வரிகள் ரத்து செய்யப்பட்டன. ஆகவே, அந் நாடுகளில் அப் பொருள்களை யாதொரு தடையுமின்றி எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. 1844ஆம் ஆண்டிற்குள்ளாகப் பெரும்பாலும் எல்லா ஜெர்மானிய நாடுகளும் சேர்ந்தன. இச் சங்கம் அந்

நாடுகளே அரசியல் துறையிலும் ஒன்றுபடுத்தும் இயக்கத்திற்கு வழி காட்டியாக அமைந்தது. மேலும், இச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பு பிரஷ்யாவிற்கு வழங்கப்பட்டது. ஆகவே, பிரஷ்யா அரசியல் துறையிலும் தலைமையாக ஏற்றுக்கொள்ளப்படும் வாய்ப்பைப்பெற்றது.

1815 முதல் 1848 வரை ஜெர்மனியில் குறிப்பிடத்தக்க பெருங் கிளர்ச்சிகள் எவையும் முற்போக்காளர்களால் மேற்கொள்ளப்பட வில்லை. 1830-ல் ஓரிரு இடங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதன் பயனுகப் புதிய அரசியலமைப்புகள் ஹெஸ்ஸி (Hesse) போன்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. ஆனுல், பெரும்பான்மையினர் அவைகளில் கலந்துகொள்ளாததால் கிளர்ச்சிகள் அடக்கப்பட்டு விட்டன. அவ்விடங்களில் பழைய ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப் பட்டது. 1848-ல் பெருமுயற்சி ஒன்றை முற்போக்காளர்கள் மேற் கொண்டனர். அக் காலத்தில் உணவுப் பொருள்களின் விலை ஏறிப் போயிருந்தது. மக்கள் பட்டினியால் வாடினர். அதே நேரத்தில் அண்மையிலுள்ள போலந்து நாட்டினர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந் தனர் (1846). ஸ்விட்சர்லாந்திலும் சில இடங்களில் வல்லாட்சி ஒழிக்கப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது. 1848-ல் ஃபிரான்சிலும் புரட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வியன்னுவில் இருந்த மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மெட்டர்னிக் நாட்டைவிட்டு வெளியேறினுர். இந் நிகழ்ச்சிகள் எல்லாம் ஜெர்மனி மக்களேப் புரட்சி செய்யத் தூண்டின.

1848-ல் ஜெர்மனியில் ஏற்பட்ட புரட்சி இரு நோக்கங்களேக் கொண்டிருந்தது. எல்லா ஜெர்மானிய நாடுகளேயும் ஒன்றுசேர்த்து வலிமையுடைய கூட்டமைப்பை ஏற்படுத்துவதையும், முற்போக்குக் கருத்துகளே அடிப்படையாகக்கொண்ட ஆட்சிமுறையை அமைப்பதை யும் புரட்சித் தலைவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய நோக்கங் களாகக் கொண்டிருந்தனர். அக் காலத்தில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாகப் பெரும்பாலும் எல்லா ஆட்சியாளர்களும் முற்போக்குக் கருத்துகளேயுடைய அரசியலமைப்பையும், முற்போக்காளர்களேக் கொண்ட அமைச்சரவையையும் ஏற்படுத்தினுர்கள். பெரும்பாலும் இரத்தம் சிந்தாமலே இவ்வேற்பாடுகள் செய்யப்பட்டன. பிரஷ்யாவின் அரசரான நான்காவது ஃபிரடரிக் வில்லியம் முற்போக்குக் கருத்து களும், தேசீய அமைப்பை உண்டாக்கும் எண்ணமும் ஓரளவு பெற்றிருந்தார் என்றுலும் பலாத்காரத்தை விரும்பவில்லை. வேறு சில இடங்களில் முற்போக்குக் கருத்துகள் செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும், தேசீய உணர்ச்சி அவர்களிடம் பெரிதளவில் காணப்பட வில்லை. எனினும், பெரும்பான்மையினர் விருப்பத்திற்கிணங்க தேசீய ஜெர்மானியப் பாராளுமன்றம் (National German Parlia-

ment) ஏற்படுத்த புரட்சித் தலைவர்கள் விரைந்தார்கள். ஃபிராங்போர்டில் பிரதிநிதிகள் கூடி நேரடித் தேர்தல் முறையைக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய மக்கள் சபையை அமைப்பது என்று முடிவு செய்தார்கள். அதற்கிடையில் ஆட்சிப் பொறுப்பைப் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஆட்சிக் குழுவினிடம் ஒப்படைத்தார்கள். அதற்கு ஆஸ்திரியாவின் இளவரசர் ஜான் (Arch Duke John) என்பவரைத் தலைவராக அமர்த்தினார்கள். 1848-ல் தேசிய ஜெர்மானிய மக்கள் சபை கூடியது. பல அறிஞர்களையும் வழக்கறிஞர்களையும் கொண்டிருந்த இச் சபை அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க முற்பட்டது. மனித உரிமைகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றைத் (Declaration of the Rights of Man) தயாரித்தது. ஜெர்மனியைத் தேசிய இனஞ் சார்ந்த நாடாகவும், அரசியலமைப்பைச் சார்ந்த ஆட்சி முறை பெற்ற நாடாகவும் அமைக்கத் தீர்மானித்தது. இறுதியில் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து முப்பது நாடுகளடங்கிய கூட்டமைவு ஏற்படுத்தவும், அதற்கு பிரஷ்யாவின் அரசரைப் பேரரசர் என்ற பெயருடன் தலைவராக்கவும் முடிவு செய்தது. அப் பேரரசரைக் கட்டுப்படுத்த இரு சபைகளடங்கிய சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. அவைகளில் ஒன்று அக் கூட்டமைப்பில் சேர்ந்துகொண்ட நாடுகளின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கவும், மற்றொன்று மக்கள் பிரிதிநிதிகளைக் கொண்டிருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஃபிராங்போர்ட் மக்கள் சபையின் ஏற்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், ஜெர்மனி ஒன்றுக்கப்பட்ட நாடாக மட்டுமன்றி ஜன நாயக நாடாகவும் விளங்கியிருக்கும். ஆனால், மக்களாட்சி முறையில் பற்றில்லாத அரசர்களின் நடவடிக்கைகள் அவ் வேற்பாட்டை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதைத் தடை செய்தன. அவ்வரசர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஃபிரெடரிக் வில்லியம் ஆவார். 1848-ல் புரட்சி ஏற்பட்டபோது மக்களைத் திருப்தி செய்யும் வகையில் நடந்துகொண்டார். தணிக்கை முறையை ஒழித்தார். அவருடைய படைகளை பெர்லினினின்றும் வெளியேற்றினார். முற்போக்காளர்களைக் கொண்ட அமைச்சர்களை நியமித்தார். ஜெர்மனியினுடன் பிரஷ்யாவை ஐக்கியப்படுத்துவதாக அறிவித்தார். இவைகளெல்லாம் அவர் முற்போக்குக் கருத்துகளின்பால் கொண்டிருந்த பற்றினால் ஏற்பட்டன அல்ல. அவர் சமாதானத்தைப் பெரிதும் விரும்புபவர். ஆகவே, மக்களைப் படை கொண்டு தாக்கி நாட்டில் பெருங் குழப்பத்தை விளைவிப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய விருப்பப்படி நடத்தி அமைதியை நிலைநிறுத்த விழைந்தார். அதே நேரத்தில், சமயம் நேரும்போது அவ்வேற்பாடுகளை நிராகரிக்கவும் எண்ணமிட்டிருந்தார். 1848-ல் வியன்னாவில் புரட்சி அடக்கப்பட்டதென்பதை அறிந்ததும்

பிரஷ்யப் படைகளை பெர்லினுக்கு வரவழைத்துக்கொண்டார். வரி வசூலிக்க அனுமதி கொடுக்க மறுத்த மக்கள் சபையைக் கலைத்து விட்டார். பிற்போக்காளர்களைக்கொண்ட அமைச்சரவையை ஏற்படுத்தினர். ஃபிராங்போர்ட் மக்கள் சபை அவருக்கு அளித்த பேரரசர் பட்டத்தை ஏற்க மறுத்தார். அப் பட்டத்தை மக்கள் சபைக்குப் பதிலாக மன்னர்கள் சபை அளித்திருந்தால் அவர் ஏற்றிருப்பார் என்று கூறினர். ஆகவே, நாட்டுப்பற்று மிகுந்த சில அரசர்கள் அவருக்கு ஜெர்மனியின் தலைவர் பதவியை அளிக்க முன்வந்தனர். ஆஸ்திரியாவின் அரசர் பிரஷ்யாவின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்க விரும்பவில்லை. எனவே, அவ்வேற்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஃபிரெடரிக் வில்லியம் ஆஸ்திரியாவுடன் போர்புரிய விருப்பமில்லாததாலும், அவர் ஆஸ்திரியாவிடம் மரியாதை கொண்டவராதலாலும், பேரரசர் பட்டத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், ஃபிராங்க்போர்ட் மக்கள் சபையின் முடிவினை இருபத்தெட்டு அரசுகள் ஏற்றுக் கொண்டன. ஆஸ்திரியா தன்னுடைய பிரதிநிதிகளை அச் சபையினின்றும் திரும்ப அழைத்துக்கொண்டது. பிரஷ்யா ஆஸ்திரியாவின் நடவடிக்கையைப் பின்பற்றியது. பிறகு ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ஜெர்மனியின் மைய ஆட்சி அதிகாரங்களை ஏற்றுக்கொண்டன. இவ்வாருக ஃபிராங்க்போர்ட் மக்கள் சபை அழிவுற்றது. அத்துடன் அது ஏற்படுத்திய அரசியலமைப்பும் அழிவுற்றது. அத்துடன் ஜெர்மானியர்களுடைய தேசிய உணர்ச்சியுடன் மக்களாட்சிக் கருத்தையும் ஒன்றுசேர்க்கும் முயற்சி பெருந் தோல்வியில் முடிவுற்றது. இனி ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் முயற்சி ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

1849-ல் ஃபிரெடரிக் வில்லியம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க கூட்டமைப்பை பிரஷ்யாவின் தலைமையில் ஏற்படுத்துவதற்கு அவருடைய ஒப்புதலைத் தெரிவித்தார். பல சிறு நாடுகளும், சில பெரிய நாடுகளும் அதில் கலந்துகொண்டன. அரசியல் அமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அவ்வமைப்பின்கீழ்த் தேர்தல் நடைபெற்று மக்கள் சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனல், இத் திட்டத்தை ஆஸ்திரியா ஏற்றுக்கொள்ள மறுக்கவே, பெரிய நாடுகள் அதனின்றும் விலகின. எனவே, பிரஷ்யா அத் திட்டத்தைக் கைவிட நேர்ந்தது. அதற்கிடையில் ஆஸ்திரியா 1815-ல் ஏற்படுத்தப்பட்ட ஜெர்மானியக் கூட்டமைவினைப் புதுப்பித்தது. அவ் வேற்பாட்டை பிரஷ்யா எதிர்க்கத் துணிந்தது. ஏனெனில், பழைய ஜெர்மானியக் கூட்டுக்குழு ஆஸ்திரியாவிற்கே முழுமையான செல்வாக்கை அளித்திருந்தது. இரு நாடுகளும் போர் ஏற்பாடுகளைச் செய்தன. முடிவில் பிரஷ்யா, ஆல்மூட்ஸ் (Olmutz) என்னுமிடத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டது (1850). அதன்படி பிரஷ்யா 1815ஆம் ஆண்டில் ஜெர்மனியக்

கூட்டமைவினை ஏற்றுக்கொண்டது. இவ்வாருக ஆஸ்திரியாவின் செல்வாக்கு ஜெர்மனியில் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. ஆனால், அடுத்த இருபதிதோராண்டுகளில் எல்லா ஜெர்மானிய நாடுகளும் ஒன்று சேர்ந்து ஜெர்மானியப் பேரரசை (German Empire) ஏற்படுத்தின. அந்தப் பேரரசை உருவாக்கியவர் பிரஷ்யாவின் முதலமைச்சரான (Chancellor) பிஸ்மார்க்கு என்பவராவார்.

ஜெர்மனியில் செல்வாக்குப் பெற ஆஸ்திரியாவும், பிரஷ்யாவும் போட்டியிட்டன என்றும், அப் போட்டியில் ஆஸ்திரியா வெற்றி பெற்றது என்றும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அப் போட்டியில் தோல்வியடையக் காரணம் அதனுடைய படையிலுள்ள சீர்கேடுகளே என்று பிரஷ்யாவின் ஆட்சியாளர்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே, பிரஷ்யாவின் படையைத் திருத்தியமைக்க முயற்சி செய்தார்கள். அவ் வாட்சியாளர்களுள் முக்கியமானவர் வில்லியம் என்பவராவார். அவர், அக் காலத்தில் மன்னருக்குப் பைத்தியம் பிடித்திருந்ததால், ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். பிறகு அவரே முதலாவது வில்லியம் மன்னரானுர். 1861-ல் வில்லியம் 39 புதிய படைப்பிரிவுகளை ஏற்படுத்த முனைந்தார். குடிமக்கள் அனைவரும் மூன்றுண்டுகள் இராணுவ சேவையில் ஈடுபடவேண்டும் என்றும், பிறகு நான்கு ஆண்டுகள் நெருக்கடிகால அழைப்புச் சேமப்படையிலும் பணியாற்றவேண்டும் என்றும் திட்டமிட்டார். புதிய போர்க்கருவிகளையும் புகுத்தினுர். மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லியமுக்கு அவரது போர்த்துறை அமைச்சர் ரூன் மிகவும் உதவியாக இருந்தார்.

மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்றப் போதுமான பணத்தைப் பெறுவதற்கு வில்லியம் மக்கள் சபையை நாடினுர். அப்பொழுது முற்போக்காளர்கள் அச் சபையில் பெரும்பான்மைக் கட்சியினராயிருந்தனர். அவர்கள் மன்னருடைய படைத்திட்டங்களைத் திருத்த முயன்ருர்கள். மேலும், பல முற்போக்குக் கருத்துகளின் அடிப்படையில் பல சீர்திருத்தங்களையும் அரசர் மேற்கொள்ள வேண்டும் என்று கோரினுர்கள். இராணுவ சேவை இரண்டு ஆண்டுக் காலத்திற்குக் குறைக்கப்படவேண்டும் என்றும், அரசருடைய அமைச்சர்கள் மக்கள் சபைக்கே பொறுப்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும் என்றும் கூறினுர்கள். அரசர் அவைகளை மறுக்கவே, அவருக்கு வேண்டிய பணத்தை வசூலிக்க அனுமதிதர மறுத்தனர். அந்த நிலையில் செய்வதறியாது வில்லியம் திகைத்திருந்தார். அச் சமயத்தில் பிஸ்மார்க்கு ஒருவரே நிலைமையைச் சமாளிக்க வல்லவர் என்று அவருக்கு யோசனை கூறவே, அவரை அமைச்சராக நியமிக்க முற்பட்டார். அந் நேரத்தில் பிஸ்மார்க்கு பாரிஸில் பிரஷ்யாவின் அயல்நாட்டுத் தூதுவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவருக்கு அவசரத்

தந்தி அனுப்பி அவரை வரவழைத்தார். பிஸ்மார்க்கு வில்லியமுடைய படைத்திட்டங்களை ஏற்றுக்கொள்ள வாக்களித்ததால் அவரை முதலமைச்சராக நியமித்தார்.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஐரோப்பாவில் தோன்றிய அரசியல் மேதைகளில் தலைசிறந்தவர்களில் பிஸ்மார்க்கு ஒருவராவார். அவர் 1815-ல் நிலம்படைத்த மேற்குடியாளர் குடும்பத்தில் பிறந்தார். நல்ல உடற்கட்டுடன் மிக்க மனவுறுதியையும் பெற்றிருந்தார். அவர் சிறந்த அறிவாளி. பிற்போக்குக் கருத்துகளைக் கொண்டிருந்தார். வல்லாட்சி முறையில் மிகுந்த நம்பிக்கை உடையவர். தொடக்கத்திலிருந்தே அரசாங்கப் பணியில் ஈடுபடவேண்டும் என்ற நோக்கம் இருந்ததால், சட்டம் பயிலப் பல்கலைக்கழகத்தில் சேரவேண்டியதாயிற்று. படிக்கும் போது நேரத்தைக் குடிப்பதிலும் சண்டையிடுவதிலும் செலவிட்டார். ஆயினும், இறுதித் தேர்வில் வெற்றி பெற்ருர். பட்டம்பெற்ற பிறகு நியாய நிலையத் துறையில் பணியாற்றிவந்தார். வெகுசீக்கிரத்தில் அப் பணியில் அவர் வெறுப்புக்கொண்டதால், அப் பதவியை ராஜிநாமா செய்தார். அதன் பிறகு தன்னுடைய நிலங்களைக் கவனித்துவந்தார். அக் காலத்தில் பல புத்தகங்களைப் படித்துத் தன்னுடைய அறிவைப் பெருக்கிக்கொண்டார். 1845-ல் பாமரேனியாவிலிருந்த மக்கள் சபையின் உறுப்பினராகப் பணியாற்றினர். 1847-ல் பிரஷ்யாவின் மக்கள் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு அவர் மணம் செய்துகொண்டார். அத் திருமணம் அவருடைய கட்டுப்பாடற்ற வாழ்க்கையைத் திருத்தியமைக்க உதவியது. 1848-ல் பிரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டபோது அதை வெகுவாகக் கண்டித்தார். மக்களாட்சியையும், பிரஷ்யாவை ஜெர்மனிக்குள் சேர்த்துவிடுவதையும் எதிர்த்தார். பிரஷ்யாவின் புரட்சிக்காரர்களைத் திருப்திபடுத்த மன்னர் சலுகைகள் வழங்குவதை எதிர்த்தார். தன் கருத்துகளைப் பரப்ப ஒரு கட்சியையும், ஒரு பத்திரிகையையும் ஏற்படுத்தினர். ஃபிராங்க்போர்ட் சபை ஏற்படுத்திய அரசியலமைப்பும் அவர் கண்டனத்துக்குள்ளாயிற்று. அதே நேரத்தில் ஆல்மூட்ஸ் உடன்படிக்கையை வெகுபலமாக ஆதரித்தார். பல சமயங் களில் அமைச்சர் பதவிக்கு அவர் பெயர் அடிபட்டது. ஆனல், இராணுவ ஆட்சி ஏற்படும் காலத்தில்தான் அவர் பதவியிலிருக்கத் தக்கவர் என்று மன்னர் கருதியதால், அவருக்கு அமைச்சர் பதவியைக் கொடுக்கவில்லை. எனினும், அவர் வல்லாட்சி முறைக்கு ஆற்றிய சேவைக்கு வெகுமதி அளிக்கும் வகையில் பிரஷ்ய மன்னரின் பிரதிநிதி யாக ஃபிராங்போர்ட் சபைக்கு (Diet) அனுப்பப்பட்டார். ஆஸ்திரியா விற்கும் பிரஷ்யாவிற்கும் இடையே ஏற்பட்டிருந்த பிளவைச் சரிப் படுத்துவதற்காக அனுப்பப்பட்ட பிஸ்மார்க்கு, அங்கு சென்ற பின் ஆஸ்திரியாவின் கடும் பகைவரானர். அவர் ஃபிராங்போர்டில் இருந்த

காலத்தில் ஜெர்மனி பல சிறு நாடுகளாகப் பிரிந்து இருந்ததாலும், வலிமை பொருந்திய மைய ஆட்சி அமைக்கப்படாததாலும், பல துன்பங்களை அடைய நேர்ந்தது என்று உணர்ந்தார். 1859-ல் ருஷ்யாவிற்குத் தூதுவராக அனுப்பப்பட்டார். அங்கு தனது திறமையினல் ருஷ்யப் பேரரசின் நன்மதிப்பைப் பெற்ருர். 1862-ல் பாரிஸில் தூதுவராக நியமிக்கப்பட்டார். அப்பொழுது ஃபிரான்சை ஆண்டுவந்த மூன்ருவது நெப்போலியனுடைய குண நலன்களைப்பற்றி சரியான முடிவை ஏற்படுத்திக்கொண்டார். அப்பொழுது அவருக்கு நாட்டுக்குத் திரும்பிவிடும்படி கட்டளை வரவே, பெர்லின் திரும்பினர். 1862-ல் முதலமைச்சராக அமர்த்தப்பட்டார். பிரஷ்யாவின் மக்கள் சபை (Diet) அவருக்கு ஓராண்டுதான் அதிகாரத்தை அளித்தது. ஆனல், அவர் 28 ஆண்டுகள் முதலமைச்சராகப் பணியாற்றி ஜெர்மனிக்குச் சிறந்த தொண்டுகள் பல செய்தார். அவைகளில் தலை சிறந்தது ஜெர்மனியை ஐக்கியப்படுத்தியதேயாகும்.

பதவியேற்றவுடன் பிஸ்மார்க்கு ஜெர்மனியைப் பிரஷ்யாவின் ஆதிக்கத்தின்கீழ் ஒன்றுசேர்க்கவேண்டியதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். அத்தகைய திட்டத்தை ஆஸ்திரியா தன்னுடைய முழு பலத்தைக்கொண்டு எதிர்க்கக்கூடும் என்று உணர்ந்தார். அவ் வெதிர்ப்பை எதிர்கொள்ள பிரஷ்யா தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்துக்சொள்ளவேண்டும் என்று எண்ணினர். ஆகவே, மன்னருடைய படைத்திட்டங்களை நிறைவேற்ற முனைந்தார். அத் திட்டங்களை நிறைவேற்றுவதைத் தடைசெய்யும் பிரஷ்யாவின் சபையை அணுகினர். படைபலத்தைப் பெருக்கவேண்டிய அவசியத்தை அவர்களுக்கு மிகத்திறமையாக எடுத்துக்காட்டினர். பெரும் பிரச்சினைகளைப் படைகொண்டு தீர்வுகாண முடியுமேயன்றித் தீர்மானங்கள் வாயிலாகவும், பேச்சுத் திறனலும் முடிவு செய்ய இயலாது என்ருர். ஆனல், சபை அசைந்து கொடுக்கவில்லை. எனவே, பிஸ்மார்க்கு, மன்னரை சபையின் அனுமதியின்றி வரிவசூல் செய்யுமாறு யோசனை கூறினர். பத்திரிகைத் தாள்கள்மீது கடுமையான தடைகள் விதித்தார். பிற்போக்குக் கருத்துடையவர்களைப் பதவியினின்றும் விலக்கினர். இவற்றின் பயனக முற்போக்காளர்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார். ஆனல், பிரஷ்யாவின் படைபலத்தை அதிக அளவில் பெருக்கிவிட்டார்.

அதன் பிறகு போர் ஏற்படும்போது ஆஸ்திரியா தனித்து நின்று போர்புரியவேண்டிய சூழலை உண்டாக்குவதில் தனது கவனத்தைச் செலவிட்டார். 1863-ல் போலந்து மக்கள் ருஷ்யாவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். பிரஷ்யாவிலுள்ள முற்போக்காளர்கள் தங்களுக்கு உதவி செய்யுமாறு அரசாங்கத்தைத் தூண்டினர்கள். ஆனல்,

அக் கிளர்ச்சிக்காரர்கள் வெற்றிபெற்ருல் பிரஷ்யாவிலுள்ள போலந்து மக்களும் கிளர்ச்சி செய்வார்கள் என்று கருதியதாலும், கிளர்ச்சிகளை எதிர்க்கும் பண்புடையவராதலாலும், எல்லாவற்றிற்கும் மேலாக ருஷ்யாவின் நட்பைப் பெறுவதற்காகவும் பிரஷ்யா ருஷ்யாவிற்கு உதவி செய்ய முடிவு செய்தது. அதே நேரத்தில் ஃபிரான்சு, ஆஸ்திரியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ருஷ்யாவைப் போலந்து நாட்டினருக்குச் சில உரிமைகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டன. முடிவில் ருஷ்யா போலந்தை அடக்கியது. அதற்குத் துணையாக நின்ற பிரஷ்யாவின் உதவியை ருஷ்யா, பிஸ்மார்க்கு பதவியிலிருந்தவரை மறவாமல் இருந்தது. ஆனுல், பிரஷ்யாவிலிருந்த முற்போக்குக் கட்சியினர் பிஸ்மார்க்கை வெகுவாகக் கண்டித்தார்கள். எனினும், அவர் அயல் நாட்டு விவகாரங்களில் வெற்றிபெற்ருல் அவ் வெறுப்பெல்லாம் மறைந்துவிடும் என்று கருதித் தனது கவனத்தை ஆஸ்திரியாவுடன் போர்புரிவதற்கான காரணங்களை ஆராய்வதில் செலவிட்டார்.

அப்பொழுது ஷிலெஸ்விக்-ஒல்ஷ்டைன் (Scheleswig-Holstein) பிரச்சினை ஐரோப்பியர்களின் கவனத்தை ஈர்த்திருந்தது. ஷிலெஸ்விக், ஒல்ஷ்டைன் ஆகிய இரண்டும் டென்மார்க்கின் தெற்கு எல்லையில் அமைந்திருந்தன. டென்மார்க்கின் அரசர் அப் பகுதிகளைக் கோமகன் என்ற பட்டத்துடன் ஆட்சி செய்துவந்தார். ஷிலெஸ்விக் மக்கள் பெரும்பாலும் டேனியர்களாவார்கள். அவர்களுக்கெனத் தனிச் சபையொன்று இருந்தது. ஒல்ஷ்டைன் மக்கள் பெரும்பாலும் ஜெர்மானியர்களாவார்கள். ஒல்ஷ்டைன் புனித ரோமானியப் பேரரசில் சேர்ந்திருந்தது. 1815-ல் ஜெர்மானியக் கூட்டமைவில் அங்கம் வகிக்கும் நாடாக ஏற்படுத்தப்பட்டது. டென்மார்க்கு அரசரின் பிரதிநிதியொருவர் அவ்வமைப்பின் சபையின் உறுப்பினராக இருந்தார். ஷிலெஸ்விக்கும் ஒல்ஷ்டைனும் தனி ஆட்சிப் பகுதிகளாக இருந்தாலும், ஓர் அமைச்சரவையால் ஆளப்பட்டுவந்தன. தேசிய உணர்ச்சி ஜெர்மானியர்களிடம் தோன்றவே, ஜெர்மானியர்கள் ஒல்ஷ்டைனை ஜெர்மனி நாட்டில் சேர்த்துக்கொள்ள விரும்பினுர்கள். 1848-ல் ஒல்ஷ்டைன் மக்கள் தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டு டென்மார்க்கு அரசருக்கெதிராகப் புரட்சியில் ஈடுபட்டார்கள். மேலும், அப் பகுதிகளைப்பற்றிய வாரிசு உரிமையைப்பற்றித் தகராறுகள் ஏற்பட்டன. டென்மார்க்கின் அப்போதைய அரசர் ஏழாவது ஃபிரெடரிக் என்பவராவார். அவருக்குக் குழந்தைகள் இல்லை. ஷிலெஸ்விக், ஒல்ஷ்டைன் பகுதிகளில், மகள் வழியாக வந்தவருக்கு அரசுரிமை இல்லை என்ற சட்டம் வழக்கில் இருந்தது. ஆகவே, அவருக்குப் பின்னர் டென்மார்க்கினுடைய அரசரே ஷிலெஸ்விக், ஒல்ஷ்டைன் பகுதிகளுக்கும் தலைவராக இருக்கமுடியாது. எனவே, டேனியர்கள் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தி எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே அரசர்

ஆள ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். அதனுல்தான் 1848-ல் கிளர்ச்சி ஏற்பட்டது. பிரஷ்யா அவர்களுக்கு உதவியாகப் படையொன்றை அனுப்பிவைத்தது. ஆனுல், ஷிலெஸ்விக்—ஒல்ஷ்டைன் பிரச்சினை ஐரோப்பிய நாடுகளின் கவனத்திற்குரிய பிரச்சினையாக இருந்ததால் அவர்கள் தலையிட்டனர். பிரஷ்யா அவர்களுடன் போர்புரிய விருப்பமில்லாததால், டென்மார்க்குடன் ஒப்பந்தம் செய்து கொண்டு படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டது.

1852-ல் வாரிசுப் பிரச்சினைக்கு முடிவுகட்டப்பட்டது. அதன்படி ஃபிரெடரிக்குக்குப் பின் கிறிஸ்டியன் என்பவர் டென்மார்க்குக்கும், ஷிலெஸ்விக், ஒல்ஷ்டைன் பகுதிகளுக்கும் அரசராக வேண்டும் என்றும், ஒல்ஷ்டைனுக்கும் ஜெர்மானியக் கூட்டமைப்புக்கும் இடையே ஏற்பட்டிருந்த தொடர்பு நீடிக்கவேண்டும் என்றும் முடிவுசெய்யப் பட்டது. பிஸ்மார்க்கு இப் பகுதிகளை எவ்வாறேனும் பிரஷ்யாவுடன் சேர்த்துக்கொள்ள விரும்பினுர். அதற்கான நேரத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார். 1863-ல் ஒன்பதாவது கிறிஸ்டியன் டென்மார்க்கு அரசரானுர். ஜெர்மனி மக்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதிகளை மீறி நடக்கலானுர். புதிய அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தி ஷிலெஸ்விக், ஒல்ஷ்டைன் ஆகியவற்றை டென்மார்க்குடன் நெருக்கமாக இணைத்துவிட வேண்டும் என்று நினைத்தார். புதிதாக ஏற்படுத்தப் பட்ட அரசியலமைப்புப்படி ஷிலெஸ்விக் டென்மார்க்குடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஒல்ஷ்டைன் டென்மார்க்குடன் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டது. ஒல்ஷ்டைனில் கிளர்ச்சி ஏற்பட்டது. பிஸ்மார்க்கு அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி அவ்விரு பகுதிகளையும் பிரஷ்யாவுடன் இணைத்துக்கொள்ளவும், ஜெர்மனி மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தகுதிபெற்றது பிரஷ்யாவே என்பதை அறிவிக்கவும் முற்பட்டார். இதற்கிடையில் ஜெர்மானியக் கூட்டமைப்பின் சபை (German diet) ஒல்ஷ்டைனுடைய ஆட்சி உரிமையைக் கொண்டாடிய ஃபிரெடரிக் கோமகனை (Frederick Duke of Augratenberg) ஆதரித்தது. ஹானேவர், சாக்சனி ஆகிய ஜெர்மனி நாடுகளின் துருப்புகள் ஒல்ஷ்டைனைக் கைப்பற்றின. ஜெர்மானிய சபை ஃபிரடரிக் கோமகனை ஒல்ஷ்டைன் பகுதிக்கு எட்டாவது ஃபிரெடரிக் கோமகன் என்ற பட்டத்துடன் தலைவராக்கியது. பிரஷ்யாவும் ஆஸ்திரியாவும் இப் பிரச்சினைக்குச் சிறு நாடுகளே தீர்வுகாணுவதை விரும்பவில்லை. அத்தகைய நிலையை பிஸ்மார்க்கு பயன்படுத்தி, ஆஸ்திரியாவைப் பிரஷ்யாவுடன் சேர்த்துப் போரிட ஏற்பாடு செய்தார். ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ஜெர்மானிய சபையை ஷிலெஸ்விக்கைக் கைப்பற்றி, 1852-ல் ஏற்படுத்தப்பட்ட லண்டன் உடன்படிக்கையை நிலைநிறுத்தும்படி வேண்டின. அவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொண்டால் ஃபிரெடரிக் கோமகனுடைய ஆட்சியுரிமையை நிராகரிக்க நேரும் என்று உணர்ந்த

ஜெர்மானிய சபை அவ் வேண்டுகோளை நிராகரித்தது. ஆகவே, ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் சேர்ந்து டென்மார்க்குக்கு இறுதி எச்சரிக்கையொன்றை விடுத்தன. அதன்படி டென்மார்க்கு 1863-ல் ஏற்படுத்திய அரசியலமைப்பை ரத்து செய்யவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. கிரிஸ்டியன் அதை மறுக்கவே போர் ஏற்பட்டது. ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ஷிலெஸ்விக்கைக் கைப்பற்றின. பிறகு டென்மார்க்கு நாட்டிற்குள் புகுந்தன. இறுதியில் வியன்னு உடன்படிக்கையை (1864) டென்மார்க்கு ஏற்றுக்கொண்டது. டென்மார்க்கு ஷிலெஸ்விக்கை இழந்தது. அதன் பிறகு அந்நியப் படைகள் ஓல்ஷ்டைனை விட்டு வெளியேறவேண்டும் என்று பிரஷ்யா கூறியது. ஆகவே, ஜெர்மானியக் கூட்டமைப்பினுடைய படைகளை ஜெர்மானியக் கூட்டமைவு திருப்பிப் பெற்றது. அப் படைகள் ஓல்ஷ்டைனை விட்டுச் சென்றதும் பிரஷ்யா அதனுடைய படைகளை அங்கு நடத்திச் சென்றது. இவ்வாறாக ஷிலெஸ்விக்கும் ஓல்ஷ்டைனும் ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகியவற்றின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டன.

நாளடைவில் பிஸ்மார்க்கினுடைய உட்கருத்து ஆஸ்திரியாவிற்கு விளங்கலாயிற்று. ஷிலெஸ்விக்கும் ஓல்ஷ்டைனும் பிரஷ்யா நாட்டின் எல்லைக்கு அண்மையில் இருப்பதால் பெயரளவில் இரு நாடுகளும் அவைகளை ஆட்சி செய்யவேண்டும் என்று இருந்தபோதிலும், பிரஷ்யாவினுடைய ஆதிக்கமே வளருவதற்கு வாய்ப்பு இருந்தது என்பதை ஆஸ்திரியா அறிந்தது. மேலும், பிஸ்மார்க்கு தன்னுடைய ஆதிக்க நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள ஆஸ்திரியாவை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டார் என்பதையும் அது உணர வெகு காலமாகவில்லை. ஆகவே, ஆஸ்திரியா, பிரஷ்யா புதிதாகக் கைப்பற்றிய பகுதிகளைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள அனுமதி வழங்குவதாகவும், அதற்காக ஆஸ்திரியா பிரஷ்யாவிடமிருந்த சைலீஷியாவைப் பெறவேண்டும் என்றும் யோசனை கூறியது. புதிய பகுதிகளை இணைத்துக்கொள்ள பிஸ்மார்க்குக்கு அதிக விருப்பமேயென்றுலும், அதற்காக பிரஷ்ய நாட்டின் ஒரு சிறு பகுதியையும் இழக்கத் தயாராக இல்லை. ஆகவே, ஆஸ்திரியா பிரஷ்யாவிற்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. ஆனுல், 1865-ல் இரு நாடுகளும் காஸ்டைன் ஒப்பந்தம் (Convention of Gastein) செய்துகொண்டன. ஷிலெஸ்விக்கை பிரஷ்யா ஆட்சி செய்யவேண்டும் என்றும், ஆஸ்திரியா ஓல்ஷ்டைனை ஆட்சி செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த ஏற்பாடும் வெகு நாள் நிலைத்திருக்க முடியாது என்பது பிஸ்மார்க்குக்குத் தெரியும். ஆகவே, போர் ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தார். ஃபிரான்சின் அதிபரான மூன்ருவது நெப்போலியன் போரின்போது நடுநிலை வகிக்கவேண்டும் என்பதற்காக அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். போரில் பிரஷ்யா வெற்றி பெற்றுல் ஷிலெஸ்விக், ஓல்ஷ்

டைன் பகுதிகளை பிரஷ்யா சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்குவதாக வும், போருக்குப் பின்னர் பிரஷ்யாவின் தலைமையின்கீழ் நிறுவப்பட விருக்கும் புதிய ஜெர்மனி நாட்டை ஏற்படுத்துவதற்கு அங்கீகாரம் அளிப்பதாகவும் வாக்குறுதி கூறினர். இவைகளுக்குப் பதிலாக நெப்போலியனுக்குச் சரியீடுகள் வழங்க பிரஷ்யா தன்னுடைய ஒப்பு தலைத் தெரிவித்தது. அதன் பிறகு அவர் இத்தாலியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதைப்பற்றி நாம் முன்னரே கவனித்தோம்.

போர் ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்ட பிறகு, பிஸ்மார்க் ஆஸ்திரியாவைப் போர் புரியத் தூண்டினர். அதற்கு ஷிலெஸ்விக், ஒல்ஷ்டைன் பிரச்சினை அவருக்கு உதவியது. ஆஸ்திரியா ஃபிரடரிக் கோமகன் உரிமைகளை ஆதரித்தது. அது காஸ்டைன் ஒப்பந்தத்துக்கு விரோதமான செயலாகும். அதுமட்டுமன்றி, பத்திரிகைகளும் அவரை ஆதரிக்கத் தூண்டப்பட்டன. அதனால் பிரஷ்யா தன்னுடைய படைகளை ஒல்ஷ்டைனுக்கு அனுப்பியது. ஆனாலும், போர் மூளவில்லை. ஷிலெஸ்விக், ஒல்ஷ்டைன் பிரச்சினையினால் போர் விளையாததால், பிஸ்மார்க் வேறு வகையில் ஆஸ்திரியாவைத் தூண்டிவிட முற்பட்டார். ஜெர்மானியக் கூட்டமைப்பைச் சீர்திருத்த ஒரு திட்டம் தயாரித்து ஜெர்மானிய சபையின் முன்னர் வைத்தார். அத் திட்டத்தில் ஆஸ்திரியா ஜெர்மனியினின்றும் அகற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். ஆகவே, ஆஸ்திரியா அதை எதிர்த்தது. மேலும், ஆஸ்திரியா மற்றொரு திட்டத்தை அச் சபையின் முன் வைத்தது. அதில் வட ஜெர்மனியில் ஏற்பட்ட பிரச்சினைக்கு ஜெர்மானிய சபை தீர்வுகாண வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்விரு திட்டங்களும் சபையின்முன் வைக்கப்பட்டன. ஆஸ்திரியாவின் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவே, பிரஷ்யா ஜெர்மானிய அமைப்பினின்றும் விலகியது. ஆகவே, ஆஸ்திரியா, ஜெர்மானிய நாடுகளை பிரஷ்யாவுடன் போர் புரியக் கட்டளையிட்டது.

ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்கும் இடையே ஏற்படவிருக்கும் போர் வெகு நாள் நீடிக்கும் என்றும், தக்க சமயத்தில் தலையிட்ட ஜெர்மனி ஒன்றுபடுவதைத் தடைசெய்யலாம் என்றும் மூன்றுவது நெப்போலியன் எண்ணமிட்டிருந்தார். ஆனால், அதற்கு மாருக பிரஷ்யா ஜெர்மானிய நாடுகளைச் சுலபமாகத் தோற்கடித்து, அவைகளுடைய நிலப்பகுதிகளைக் கைப்பற்றியது. பிறகு 1866-ல் பொகிமியாவிலுள்ள சாடோவா (Sadowa) என்னுமிடத்தில் ஆஸ்திரியாவையும் சாக்சனியையும் தோற்கடித்தது. வெற்றி பெற்ற பிரஷ்யப் படை வியன்னுவைக் கைப்பற்றத் துடித்தது. ஆனால், அரசியல் நிபுணரான பிஸ்மார்க் உடனே சமாதானம் செய்துகொள்ள மன்னரை வேண்டினர். 1866-ல் ஏற்படுத்தப்பட்ட பிரேக் உடன்படிக்கை (Treaty

of Prague) வாயிலாக இந்த ஏழு வாரப் போர் முடிவுற்றது. அதன்படி வெனீஷியாவை இத்தாலி இணைத்துக்கொண்டது. 1815-ல் ஏற்படுத்தப்பட்ட ஜெர்மானியக் கூட்டமைவு அழிந்தது; வட ஜெர்மானியக் கூட்டமைவு ஏற்படுத்தப்பட்டது. நான்கு தெற்கு ஜெர்மானிய நாடுகள் தவிர மற்றவை இதில் சேர்ந்துகொண்டன. பிரஷ்யாவின் அரசர் அதன் தலைவராகத் (President) தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் வெளிநாட்டு விவகாரங்கள், படை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி வந்தார். அவருக்கு உதவியாக முதலமைச்சர் அடங்கிய மந்திரி சபை ஏற்படுத்தப்பட்டது. பிரஷ்யாவின் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையினராகக்கொண்ட மக்கள் சபையும், கூட்டமைவில் சேர்ந்துகொண்ட நாடுகளின் பிரதிநிதிகளைக்கொண்ட சபையும் ஏற்படுத்தப்பட்டன. ஆஸ்திரியா ஜெர்மனியில் புதிய அமைப்பு ஏற்படுத்துவதில் யாதொரு பங்கும் பெறவில்லை. இந்த ஏற்பாடு பிஸ்மார்க்கினுடைய பெருமையை உயர்த்தியது. இதுவரை எல்லோருடைய வெறுப்புக்குமாளாகியிருந்த பிஸ்மார்க்கை இப்பொழுது தெய்வமாக மக்கள் கொண்டாட ஆரம்பித்தனர். முற்போக்குக் கருத்துகள் வலியற்றுப்போயின.

வட ஜெர்மானியக் கூட்டமைவு, ஜெர்மனி ஒன்றுபட்ட நாடாக விளங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கை என்று கூறலாம். நான்கு தெற்கு ஜெர்மானிய நாடுகள் இக் கூட்டமைவுக்கு வெளியேயிருந்ததால், ஜெர்மனியை முற்றிலும் ஐக்கியப்பட்ட நாடாகக் கருத இயலாது. அவைகளையும் ஜெர்மனியின் அரசியலமைப்பில் சேர்த்துவிட பிஸ்மார்க்கு முயற்சி செய்யலானுர். ஆனுல், அதில் சில இடையூறுகள் இருந்தன. அவைகள் எல்லாம் பிரஷ்யாவை வெறுத்தன. ஃபிரான்சைத் தங்களது பாதுகாவலராகக் கருதிவந்தன. அவைகளைப் படைகொண்டு தாக்கி ஜெர்மானியக் கூட்டமைவில் சேர்க்கவும் இயலாது. ஏனெனில், அவைகள் ஏனைய நாடுகளுடன் தொடர்பு கொண்ட சுதந்திர நாடுகளாக அமைக்கப்பட்டிருந்தன. அதே நேரத்தில் அவைகளைச் சேர்த்துக்கொள்ள வாய்ப்பும் இருந்தது. அவைகளுக்குள் ஒற்றுமையில்லை. ஆகவே, அவைகள் தனியான கூட்டமைவு ஒன்றை ஏற்படுத்தவும் முடியாத நிலையில் இருந்தன. எதை எதிரி என்று கருதினுர்களோ அதையே அவர்களுடைய நண்பன் என்ற முடிவுக்கு அவர்களைக் கொண்டுவந்து, அவர்களையும் ஜெர்மானியக் கூட்டமைவுக்குள் சேர்த்த பெருமை பிஸ்மார்க்கைச் சேர்ந்தது. அதற்குத் துணையாக நின்றவை நெப்போலியனுடைய தவறுகளாகும். சாடோவா போருக்குப் பிறகு மற்ருெரு பிரச்சினையையும் அவர் கவனிக்க வேண்டியதாயிருந்தது. ஃபிரான்சு எப்பொழுதுமே ஜெர்மனி ஒற்றுமை பெற்ற நாடாக விளங்க விரும்பவில்லை. ஏனெனில், ஒற்றுமையுள்ள ஜெர்மனி பலம் பொருந்திய நிலையை அடையும். அத்தகைய நாடு ஃபிரான்சின் எல்லையில் அமைவதால் அதனுடைய பாது

காப்புக்கு பங்கம் விளையும் என்று அது கருதியது. ஆகவே, ஃபிரஞ்சுக்காரர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: 'சாடோவா சண்டையில் தோல்வியுற்றது ஃபிரான்சே அன்றி ஆஸ்திரியா அன்று'. எனவே, ஃபிரான்சுக்கும் பிரஷ்யாவிற்கும் போர் ஏற்படுவது நிச்சயம் என்று கருதப்பட்டது.

சாடோவாவிற்குப் பிறகு நெப்போலியன் தனக்கு நாடு கொடுப்பதாக பிஸ்மார்க்கு செய்துதந்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு வேண்டிக்கொண்டார். பிஸ்மார்க்கு ஜெர்மனியின் எப் பகுதியையும் நெப்போலியனுக்கு அளிக்க இசையவில்லை. தனக்கும் நெப்போலியனுக்கும் இடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளை வெளியிட்டு, ஜெர்மனி நாட்டுப் பகுதிகளைப் பெற நெப்போலியன் விரும்புகிறார் என்பதை வெளிப்படுத்தினார். அதனால் தெற்கு ஜெர்மனி நாடுகள் நெப்போலியனை தம்முடைய பகைவன் என்று கருதி, ஒன்றன்பின் ஒன்றாகப் பிரஷ்யாவுடன் படையொப்பந்தம் செய்துகொண்டன. சிறிது காலத்திற்குப்பின், அந் நாடுகளின் வரவுசெலவுத் திட்டங்களையும் பிரஷ்யா கட்டுப்படுத்த ஆரம்பித்தது. அதன்பிறகு காப்புவரிகளைப்பற்றி ஆலோசிக்க அவர்களுடைய பிரதிநிதிகளை வரவழைத்து, பிறகு அவர்களுடைய ஒப்புதலின்பேரில் வடக்கு ஜெர்மானியக் கூட்டமைவும், தெற்கு ஜெர்மானிய நாடுகளும் ஒன்றுசேர்ந்த காப்புவரிக் குழு (Tariff Council) ஒன்றை அமைத்தது. அவைகளின் பயனாகப் பெயரளவில் மட்டும்தான் தெற்கு ஜெர்மானிய நாடுகள் சுதந்திர நாடுகளாக இருந்தன. அந்நிய நாட்டுடன் போர் ஏற்பட்டால் அவைகள் பிரஷ்யாவுடன் தோளோடு தோள் சேர்ந்து சண்டையிட வாய்ப்பு நேரும் என்றும், அதன் பயனாக அவர்களையும் ஜெர்மானியக் கூட்டமைவினில் சேர்த்துவிடலாம் என்றும் பிஸ்மார்க்கு எண்ணினார். அப் போர் ஃபிரான்சுடன் ஏற்பட்டால், ஃபிரஞ்சுக்காரர்களின் பகைமையை அழித்து ஜெர்மனியின் ஐக்கியம் முழுமையடையச் செய்து, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தலாம் என்று எண்ணினார்.

அப் போர் ஸ்பானிய வாரிசுரிமைப் பிரச்சினை வாயிலாக ஏற்பட்டது. 1868-ல் ஸ்பானிய மக்கள் தங்களுடைய அரசியைத் துரத்திவிட்டு ஆட்சியுரிமையைப் பிரஷ்ய அரச குடும்பத்தைச் சேர்ந்த லியோபால்டுக்கு அளித்தார்கள். ஆனால், அதை ஏற்றுக்கொள்வதால் இடையூறுகள் விளையும் என்று கருதி அந்த உரிமையை நிராகரித்தார். சில காலத்திற்குப்பின் மறுபடியும் அவருக்கு ஸ்பானிய மக்கள் அழைப்பு விடுத்தார்கள். இம் முறை பிஸ்மார்க்கின் தூண்டுதலின் பேரில் அதை ஏற்றுக்கொண்டார். ஃபிரான்சு அதை எதிர்த்தது. வில்லியம் அரசரை, அவ்வேற்பாட்டை நிராகரிக்குமாறு கேட்டுக்கொண்டது. அப் பிரச்சினை அவருடைய குடும்பத்தைச் சார்ந்த பிரச்சினையே

யன்றி அரசியலைச் சார்ந்ததன்று என்றும், லியோபால்ட் மீண்டும் தனக்கு விடுத்த அழைப்பை ஆராய்ந்து முடிவுக்கு வர அவருக்கு உரிமை உண்டு என்றும் கூறினர். இதற்கிடையே லியோபால்ட் மறு முறையும் அவ்வழைப்பை நிராகரித்தார். ஃபிரான்சு அத்துடன் மன நிறைவு பெறமல், ஸ்பெயின் நாட்டு அரச பதவியை ஏற்றுக்கொள்ளு மாறு லியோபால்டுக்கு அனுப்பப்படும் அழைப்பை எக் காலத்திலும் லியோபால்டு ஏற்றுக்கொள்ளாதவாறு பிரஷ்யா வாக்குறுதி தரவேண்டும் என்றும் கோரியது. அரசர் மறுக்கவே போர் ஏற்பட்டது.

1870-ல் ஏற்பட்ட அப் போரில் ஃபிரான்சு வெகு எளிதாகத் தோற் கடிக்கப்பட்டது. சேடான் (Sedan) என்னுமிடத்தில் நெப்போலியன் சரணடைந்தார். பிறகு பாரிஸ் சரணடைந்தது. அந்நிய நாட்டா ருடன் ஏற்பட்ட போர் தெற்கு ஜெர்மானிய நாட்டினரிடையே தேசீய உணர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த ஆர்வத்தில் அவர்கள் வடக்கு ஜெர்மானியக் கூட்டமைவில் சேர்ந்துகொண்டார்கள். அதனுல், அரசியலமைப்பில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. வடக்கு ஜெர் மானியக் கூட்டமைவு மறைந்தது. அதனிடத்தில் ஜெர்மானியப் பேரரசு ஏற்ப்டுத்தப்பட்டது. பவேரிய அரசர் வில்லியத்தைப் பேரரசர் பட்டம் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். 1871ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆந்தேதி வெர்சாயி என்னுமிடத்திலுள்ள பதினுன் காம் லூயி கட்டி முடித்த அரண்மனையில் ஜெர்மன் கெய்சர் (German Kaiser) என்ற பெயரை வில்லியம் சூட்டிக்கொண்டார். பிஸ்மார்க்கு அப் பேரரசின் முதலமைச்சரானர். இவ்வாருக ஜெர்மனி முழுவதும் பிரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் ஒன்ருக்கப்பட்டது.

5. ஆஃப்ரிக்காவும் ஆஸ்திரேலியாவும்

ஐரோப்பியர்களின் நாகரிகம் உலகத்தின் பல பாகங்களில் பரவக் காரணமாயிருந்தது, அவர்கள் அப் பாகங்களில் குடியேற்றங்கள் ஏற்படுத்தியதேயாகும். பதினறு, பதினேழாம் நூற்ருண்டுகளில் ஆசியா, அமெரிக்கா ஆகிய இடங்களில் குடியேறிய வரலாற்றினை முன்னரே கண்டறிந்தோம். பத்தொன்பதாம் நூற்ருண்டில் மேலும் இரண்டு கண்டங்களில் ஐரோப்பியர்கள் குடியேறத் தொடங்கினர்கள். ஆகவே, அவ்விடங்களில் ஐரோப்பியர்கள் குடியேறிய வரலாற்றினை இப்பொழுது காண்போம்.

ஆஃப்ரிக்கா

பத்தொன்பதாம் நூற்ருண்டின் கடைசிப் பகுதிவரை ஆஃப்ரிக்கா இருண்ட கண்டமாகக் (Dark Continent) கருதப்பட்டது. அக் கண்டத்தின் பெரும்பகுதியைப்பற்றி ஐரோப்பியர்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. அப் பகுதிகளில் ஆய்வுப் பயணங்களும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே, அதனை 'இருண்ட கண்டம்' என்று கூறுகிருேம். அதன் குடிமக்கள் கறுப்பு நிறமுடையவர்களாயும் அநாகரிகமாயும் வாழ்ந்துவந்தமையால் அப் பெயர் ஏற்பட்டது என்றும் சிலர் கூறுகிருர்கள். ஐரோப்பியர்கள் அங்குக் குடியேற முற்படாததற்குப் பல காரணங்களுண்டு. அவர்களுடைய குடியிருப்பை ஏற்படுத்தத் தக்க வடக்குக் கடற்கரைப் பகுதியில் முஸ்லீம்கள் வசித்துவந்தனர். ஆகவே, அவர்கள் கிறித்துவ நாகரிகம் ஐரோப்பியர் வாயிலாக உட்புகுவதை வெறுத்தனர். ஏனைய பகுதிகள் பாலைவனமாகவும், அடர்ந்த காடுகளடங்கிய பகுதிகளாகவும், கொடிய விலங்குகளை உட்கொண்டிருந்தனவாகவும் அவர்களுக்குத் தோன்றவே, குடியேறும் முயற்சியை மேற்கொள்ளவில்லை. எனவே, பத்தொன்பதாம் நூற்ருண்டு தொடங்குவதற்கு முன்னர் ஐரோப்பியர்களுக்குச் சொந்தமாயிருந்தவையெல்லாம் கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்ட வியாபாரத் தலங்களும், தேவைப் பொருள்களுக்காகவும் கப்பல்கள் செப்பனிடுவதற்காகவும்

செல்லக்கூடிய துறைமுகங்களுமேயாகும். அவையன்றி, அக் காலத்தில் அங்கு ஏற்படுத்தப்பட்ட ஒரே குடியேற்ற நாடு நன்னம்பிக்கை முனைக் குடியேற்ற நாடாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஒருசில குடியேற்றங்களை ஐரோப்பியர்கள் ஏற்படுத்தினர்கள். ஆனால், 1880-க்குப் பிறகுதான் குடியேற்றங்கள் பெருமளவில் ஏற்படுத்தப்பட்டன. சிறிது காலத்திற்குள் ஆஃப்ரிக்காவின் நிலப்பகுதிகளில் பெரும் பகுதியை ஐரோப்பியர்கள் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர். அத்தகைய நிலைமை ஏற்படக் காரணங்கள் சிலவற்றை இப்பொழுது கவனிக்கலாம்.

ஃபிரஞ்சுப் புரட்சி தேசீயக் கொள்கை வளர்ச்சியுறுவதற்கு உதவியாக இருந்தது என்றும், அதனால் ஐரோப்பாவில் தேசீயக் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட நாடுகள் உருவாக்கப்பட்டன என்றும் நாம் முன்னர் கண்டறிந்தோம். புதிதாக வளர்ச்சி பெற்ற தேசீய இனஞ்சார்ந்த நாடுகள் தங்களின் பெருமையை உயர்த்தவேண்டும் என்று எண்ணங்கொண்டன. அதற்காக அவைகள் நாடுகளைச் சேர்க்க முனைந்தன. குறிப்பாக, அவைகள் குடியேற்றங்களை அமைக்க விரும்பின. தொழிற் புரட்சி குடியேற்றங்களை ஏற்படுத்துவதை ஊக்குவித்தது. நாட்டில் தேவைக்குமேல் தயாரிக்கப்படும் ஆக்கப் பொருள்களை விற்பதற்குப் புதிய அங்காடிகள் தேவையாயிருந்தன. மேலும், நாட்டுத் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களைப் பெறுவதற்கும் குடியேற்றங்கள் பயன்படும் என்று கருதலாயினர். அதுமட்டுமன்றி, அக் காலத்தில் கிறித்துவ மக்களிடையே தங்களது மதத்தைப் பரப்பவேண்டும் என்ற ஆர்வம் தோன்றலாயிற்று. ஆகவே, கிறித்துவரல்லாதாரைத் தங்களுடைய மதத்தில் சேர்த்துக்கொள்வதற்காகப் பல இடங்களுக்குச் செல்லலாயினர். எல்லாவற்றிற்கும் மேலாக ஆஃப்ரிக்காவை ஐரோப்பியர்கள் தங்களிடையே பிரித்துக்கொள்ள முற்பட்டதற்குக் காரணம், அக் கண்டத்தின் உட்பகுதியில் குடியேற்றங்களை அமைக்க வாய்ப்பு உண்டு என்பதை அவர்கள் உணரத் தொடங்கியதேயாகும். அத்தகைய வாய்ப்பை வெளிக்காட்டியவர்கள் ஆஃப்ரிக்காவிற்குள் ஆய்வுப் பயணங்கள் நடத்தியவர்களேயாவார்கள்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இதுகாறும் கடற்கரையோரமாகவே சென்றுகொண்டிருந்த ஐரோப்பியர்கள், ஆஃப்ரிக்காக் கண்டத்தை ஆராய முற்பட்டனர். 1769-ல் புரூஸ் (Bruce) அபிசீனியாவை அடைந்து பிறகு நைல்நதியின் தோற்றத்தைக் கண்டறிந்தார். மங்கோ பார்க் (Mungo Park) என்பவர் நைஜர் நதியின் பெரும் பகுதியில் ஆய்வுப் பயணம் நடத்தினர். அவரைப் பின்தொடர்ந்த கிளாப்பர்டன் (Clapperton), லாண்டர் (Lander) ஆகியோர் மங்கோ பார்க்

தொடங்கிய வேலையை முடித்துவைத்தனர். தெற்கு ஆஃப்ரிக்காவில் கிறித்துவ சமயப் பரப்பாளர்கள் லிம்போ நதிவரை சென்றனர். பார்த் (Barth), ரிச்சர்ட்சன் என்பவர்கள் இக் காலத்தில் டிரிபோலியைவிட்டு சஹாரா பாலைவனத்தையும் கடந்துசென்று டிம்பக்டுவை அடைந்தார்கள். சில போர்ச்சுகீசியர்கள் ஆஃப்ரிக்காவின் தென்கிழக்குக் கரையின் பாகத்திலுள்ள மொசாம்பிக் என்னும் பகுதியிலிருந்து புறப்பட்டு, மேற்குக் கரையிலுள்ள அங்கோலா (Angola) என்னும் பகுதியைச் சென்றடைந்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டவர்கள் மேலும் பல வெற்றிகளை அடைந்தனர். ஃபிரான்சு, போர்ச்சுகல், ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இத் துறையில் பங்குகொண்டபோதிலும், பிரிட்டனைச் சார்ந்தவர்களே பெருஞ் சாதனைகளைப் புரிந்தனர் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். டுவேயிரியே (Duveyrier), நாஷ்டிகல் (Nachtigal), யங்கர் (Yunker), ஷிவன்பர்த், (Schweinberth), லிவிங்ஸ்டன் (Livingstone), பர்ட்டன் (Burton), ஸ்பெக் (Speke), கிரான்ட் (Grant), காமரோன் (Cameron), பேகர் (Baker), ஸ்டான்லி (Stanley) ஆகியோர் ஆஃப்ரிக்காவில் ஆய்வுப் பயணங்களை நடத்தி, அக் கண்டத்தில் குடியேற்றங்களை அமைப்பதற்குத் துணைபுரிந்தனர். அவர்களுள் தலைசிறந்தவர் லிவிங்ஸ்டன் என்பவராவர். ஸ்காத்லாந்தைச் சேர்ந்த இவர் சமயப் பரப்பாளராகப் பணிபுரியத் தலைப்பட்டார். 1840-ல் லண்டன் சமயப் பரப்பாளர் கழகம் (London Missionery Society) இவரைத் தென் ஆஃப்ரிக்காவிலுள்ள குருமான் என்னுமிடத்திற்கு அனுப்பிவைத்தது. அங்குள்ள மக்களிடையே காணப்பட்ட அநாகரிகப் பண்புகளை ஒழித்து அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்த எண்ணினர். ஐரோப்பியர்கள் அம் மக்களை நடத்தும் முறையைக் கண்டு மனம் வருந்தினர். குறிப்பாக, அடிமைத்தனத்தை ஒழிக்க விருப்பங்கொண்டார். ஆகவே, ஒரே இடத்தில் நிலையாக இருக்க விருப்பமின்றிப் பல இடங்களுக்குச் சென்று சமயத்தைப் பரப்புவதோடு, ஆஃப்ரிக்க மக்கள் மேற்கொண்டிருந்த கொடூரமான வாழ்க்கையைச் சீராக்கவும் முனைந்தார். பெச்சுவானலாந்திலிருந்து மேற்குக் காங்கோ பிரதேசம்வரை ஊடுருவிச் சென்றார். 1849-ல் என்காமி (Ngami) என்னும் ஏரியை அடைந்தார். பிறகு ஜாம்பஸி நதியை அடைந்தார். அந்த நதிவழியாகச் சென்று ஏறக்குறைய அதனுடைய பிறப்பிடத்தை அடைந்தார். பிறகு அட்லான்டிக் கரையிலுள்ள லோவாண்டா (Lounda) என்னுமிடத்தை அடைந்தார். மறுபடியும் ஜாம்பஸியை அடைந்து, இந்து மகாசமுத்திரத்திலுள்ள அதனுடைய முகத்துவாரத்தைச் சென்று அடைந்தார். மேற்கூறிய சாதனையின் பயனாக, ஜாம்பஸி நதியின் கிளைநதியாகிய ஷிரே (Shire) நதிப்பகுதியிலும் நையாசா

ஏரிப்பகுதியிலும் பயணங்களை மேற்கொள்ளுமாறு ஆங்கிலேய அரசாங்கம் அவரைக் கேட்டுக்கொண்டது. 1866-ல் அவர் ஆய்வுப் பயணத்தில் ஈடுபட்டிருந்தபோது மறைந்தார் அவருடைய பயணங்களின் விளைவாகக் காங்கோ நதியின் மேற்பிரதேசங்களிலும், நடு ஆஃப்ரிக்காவின் கிழக்குப் பகுதியிலும் ஐரோப்பியர்கள் குடியேற்றங்களை அமைக்க வழி ஏற்பட்டது. ரிச்சர்ட் பர்ட்டன், ஸ்பெக் என்பவர்கள் சோமாலிலாந்து பிரதேசத்தை ஆய்ந்தறிந்தனர். பிறகு தங்கனீகா, விக்டோரியா ஆகிய பெரிய ஏரிகளைக் கண்டார்கள். ஸ்பெக்கும் கிரான்டும் விக்டோரியா ஏரியினின்றும் கார்டும்வரை நைல் நதியின் செல்வழியைக் கண்டறிந்தார்கள். சாமுவேல் பேக்கர் நைல் நதியின் மேற்பகுதியை ஆராய்ந்தார். 1873-ல் காமரோன் லிவிங்ஸ்டனைத் தேடிப் புறப்பட்டார். அப்போது கிழக்கு ஆஃப்ரிக்காவிற்குள் புக நேர்ந்தது. தங்கனீகாவை அடைந்த பின்னர், காங்கோ நாட்டிலுள்ள அட்லான்டிக் கரையிலுள்ள பென்கியூலா (Benguala) என்னுமிடத்தை அடைந்தார். ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த நாஷ்டிகல், சஹாரா பாலைவனத்தில் பயணம் மேற்கொண்டார். சாட் ஏரிக்கரையிலிருந்து புறப்பட்டு நேர்கிழக்காகச் சென்று நைல் நதியை அடைந்தார். ஸ்டான்லி என்பவர் விக்டோரியா, தங்கனீகா ஆகிய ஏரிப் பிரதேசங்களில் ஆய்வுப் பயணங்கள் நடத்திய பிறகு, காங்கோ நதி வழியாகப் பல இடையூறுகளைப் பொறுமையுடனும் தைரியத்துடனும் தாங்கி அட்லான்டிக் கரையை அடைந்தார். அவருடைய முயற்சியின் பயனாகப் பலவித வளங்களைப் பெற்ற காங்கோ நதிப் பிரதேசத்தில் வெள்ளையர்கள் தங்களுடைய செல்வாக்கை ஏற்படுத்த விரைந்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம், பொறியியல், வைத்தியக்கலை ஆகியவை மேம்பாடுற்றன. அதன் பயனாக இயற்கை ஏற்படுத்தியிருந்த பல முட்டுக்கட்டைகளைக் கடந்து ஆஃப்ரிக்காவை முழுமையாக அறிய இயன்றது. ஆஃப்ரிக்காவில் மலிந்திருந்த நோய்களும், காடுகளும், ஆறுகளும் இனி ஐரோப்பியர்களை உட்புகாவண்ணம் தடுக்க இயலாதுபோயின. மாலுமிகளின் திசைக் கருவி எவ்வாறு பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் கடற்பயணம் மேற்கொள்ள உதவியதோ, அதேபோல விஞ்ஞான வளர்ச்சி ஆஃப்ரிக்காவை ஐரோப்பியர்களுக்கிடையே பிரித்துக்கொள்வதற்குத் துணைநின்றது என்று கூறப்படுகிறது. இனி, ஆஃப்ரிக்காவில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றைக் கவனிப்போம்.

வடக்கு ஆஃப்ரிக்கா

வடக்கு ஆஃப்ரிக்கக் கடற்கரைப் பகுதி வெகுகாலமாக ஐரோப்பாவின் ஒரு பகுதியாகவே இருந்துவந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அப் பகுதி பெரும்பாலும் முஸ்லீம்களின்

இருப்பிடமாக இருந்த துருக்கியின் பேரரசர் அப் பகுதியின் தலைவராக இருந்துவந்தார். எனினும், அங்குள்ள தலைவர்கள் ஏறக்குறைய சுதந்திரம் பெற்றவர்களாகவே ஆண்டுவந்தனர். அப் பகுதியில் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஃபிரான்சு வெகு நாளாக முயன்றுவந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அம் முயற்சி தீவிரமாக்கப்பட்டது. அமெரிக்காவில் ஃபிரஞ்சு ஆதிக்கம் அழிந்ததாலும், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தலைவரான மன்றோ ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கர்கள் விவகாரத்தில் தலையிடுதல் கூடாது என்று அறிக்கை விடுத்ததாலும், ஃபிரான்சு தன்னுடைய ஆதிக்க நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள ஆஃப்ரிக்காவின் பக்கம் தன்னுடைய கவனத்தைத் திருப்பியது. அப்பொழுது அல்ஜீரியா கடற்கொள்ளைக்காரர்கள் ஆட்சி செய்துவந்தனர். அவர்கள் துருக்கியின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தனர். அவர்கள் மத்தியதரைக் கடல் வழியாகச் செல்லும் வியாபாரிகளையும் கிறித்துவர்களையும் பலவாறு துன்புறுத்தினர்கள். அதைக் காரணமாகப் பயன்படுத்தி அல்ஜீரியாவை ஃபிரான்சு தன் ஆதிக்கத்திற்குட்படுத்த முயன்றது. 1830-ல் ஃபிரான்சு ஒரு படையை அனுப்பி அல்ஜீயர்ஸ் என்னுமிடத்தைக் கைப்பற்றியது. பிறகு கடற்கரைப் பிரதேசத்தையும் உள்நாட்டுப் பிரதேசத்தையும் கைவசமாக்கிக் கொண்டது. பல அல்ஜீரியத் தலைவர்கள் மொராக்கோ சென்று அம் மக்களின் உதவியைக்கொண்டு தாக்கினர்கள். ஆனல், ஃபிரெஞ்சுப் படை மொராக்கோ தலைவரைத் தோற்கடித்து அவர் அல்ஜீரியாவின் தலைவர்களுக்கு உதவி செய்வதைத் தடுத்தது. அதன் பிறகு ஃபிரஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் யாதொரு தடையுமின்றி ஏற்படுத்தப்பட்டது. சாலைகள் அமைத்தும், கால்வாய்கள் வெட்டியும், ஒழுங்கை ஏற்படுத்தியும் ஃபிரான்சு அவ்விடத்தில் முன்னேற்றங்களை உண்டாக்கியது. 1841-ல் ஃபிரஞ்சுக்காரர்கள் அங்குக் குடியேறத் தலைப்பட்டார்கள். அவர்களுக்கு அல்ஜீரிய மக்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலங்கள் கொடுக்கப்பட்டன. எனினும், அங்குக் குடியேறுவதற்கு ஃபிரஞ்சுக்காரர்கள் பலர் முன்வரவில்லை. பிறகு அல்ஜீரியாவையும், ஃபிரஞ்சுக்காரர்களுக்கு மேற்கு ஆஃப்ரிக்காவில் சொந்தமான பகுதியையும் இணைக்க சஹாரா பாலைவனத்தைத் தங்களுடைய ஆதிக்கத்திற்குட்படுத்தினர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆஃப்ரிக்காவைப் பிரித்துக்கொள்ள ஐரோப்பியர்களிடையே பலத்த போட்டி ஏற்பட்டது. அப் போட்டியை ஆரம்பித்தவை ஃபிரான்சும் பிரிட்டனுமேயாகும். அதன் பிறகு ஜெர்மனியும், இறுதியில் இத்தாலியும், பெல்ஜியமும், ஸ்பெயினும் சேர்ந்துகொண்டன. அதனுடைய முதல் விளைவு டுனிசியா ஃபிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டதேயாகும். 1869-ல் இத்தாலி, ஃபிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகள்

டுனிசியாவின் நிதிநிலையைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1878-ல் பிரிட்டன் சைப்பிரஸ் தீவினைத் தன்னுடைய ஆதிக்கத்திற்குள் கொண்டுவர விருப்பப்பட்டது. ஃபிரான்சு அதை எதிர்த்தது. அதனால் ஃபிரான்ஸ் டுனிசியாவை இணைத்துக்கொள்ளுவதை பிரிட்டன் ஆதரிப்பதாகக் கூறியது. ஐரோப்பாவில் ஜெர்மனியுடன் நிகழ்த்திய போருக்குப் பின்னர், நாட்டின் சில பகுதியை இழந்த ஃபிரான்சினுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்கு, ஜெர்மனியும் ஃபிரான்சு டுனிசியாவைக் கைப்பற்றும் முயற்சியை ஆதரித்தது. அதன் விளைவாக ஃபிரான்சு டுனிசியாவின் தலைவருடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. அப் பகுதியை இத்தாலியும் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தது. ஆகவே, ஃபிரான்சு மறைமுகமாகப் படையெடுப்பு ஏற்பாடுகளைச் செய்து 1881-ல் டுனிசியாவைத் தாக்கியது. டுனிசியா ஃபிரஞ்சு வசமாயிற்று. ஃபிரான்சை எதிர்த்த சுதேசி மக்களும் சரணடைந்தார்கள்.

ஃபிரான்சு அடுத்தபடியாக மொராக்கோவைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தது. மொராக்கோவும் முஸ்லீம்களுடைய நாடாகும். அதுவும் துருக்கி மன்னரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. ஆனால், அங்கிருந்த சுல்தான் பெரும் அதிகாரங்களைப் பெற்றிருந்தார். அப் பகுதி ஜிப்ரால்டருக்கு எதிர்க்கரையில் இருந்ததால், பிரிட்டனும் ஃபிரான்சும் தம்முடைய ஆதிக்கத்தை அங்கு ஏற்படுத்த விழைந்தன. ஆனால், 1904-ல் அவைகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, மொராக்கோவில் ஃபிரஞ்சுக்காரர்களின் செல்வாக்கை ஏற்படுத்துவதை பிரிட்டிஷ்காரர்கள் ஆதரித்தனர். ஆகவே, ஃபிரான்சு மொராக்கோவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முற்பட்டது. ஆனால், ஜெர்மனி அதை அனுமதிக்கத் தயாராக இல்லை. ஆகவே, ஃபிரஞ்சுக்காரர்களின் ஆலோசனையை மொராக்கோ சுல்தான் நாடுவதை நிறுத்திக்கொண்டார். ஃபிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் அதனால் தகராறுகள் ஏற்பட்டன. ஆகவே, 1906-ல் அல்ஜிசிராஸ் (Alzeciras) என்னுமிடத்தில் வல்லரசுகள் கூடின. ஃபிரஞ்சுப் படைத்தலைவர்களும், ஸ்பானியப் படைத்தலைவர்களும் மொராக்கோவின் இராணுவப் படை, போலீஸ் படை ஆகியவற்றினுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மொராக்கோ சுதந்திர நாடாக இருக்கவேண்டும் என்று ஏற்பாடாயிற்று. 1911-ல் சுல்தானுக்கு எதிராக அவருடைய மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். அதைப் பயன்படுத்தி ஃபிரான்சு படையொன்றை மொராக்கோவிற்கு அனுப்பிவைத்தது. ஜெர்மனி அதை எதிர்த்தது. அதைத் தொடர்ந்து போர்க்கப்பல் ஒன்றை அகாடிர் (Agadir) என்னுமிடத்திற்கு அனுப்பியது. மீண்டும் ஃபிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் தகராறுகள் ஏற்பட்டன. இறுதியில் மொராக்கோவில் ஃபிரான்சு காப்பாளர் அரசு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்

டது. மொராக்கோவின் ஒரு சிறு பகுதி ஸ்பெயினுக்கு அளிக்கப் பட்டது. அதற்குப் பதிலாக ஃபிரான்சுக்குச் சொந்தமான காங்கோ பிரதேசத்தின் ஒரு பகுதியை ஜெர்மனிக்கு அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டது. ஸ்பெயின் 1885-ல் வடமேற்கு ஆஃப்ரிக்காவிலுள்ள ரியோதெ ஓரே என்னும் பகுதியைத் தன்னுடைய ஆதிக்கத்திற்குட்படுத்தியது.

இத்தாலியும் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தது. முதலில் அது டுனிசியாவைக் கைப்பற்ற எண்ணியிருந்தது. அதை ஃபிரான்சு கைப்பற்றிக்கொள்ளவே, இத்தாலி மனக்கசப்படைந்திருந் தது. இருபதாம் நூற்றுண்டில் ஃபிரான்சும் பிரிட்டனும் மேற் கொண்டிருந்த நாடு பிடிக்கும் கொள்கையை ஆதரிப்பதாகவும், அதற் காக இத்தாலி தன்னுடைய ஆதிக்கத்தை டிரிபோலியில் ஏற்படுத்த ஃபிரான்சும் பிரிட்டனும் துணைபுரிய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. 1911-ல் ஃபிரான்சு மொராக்கோவில் தன்னுடைய ஆதிக் கத்தை ஏற்படுத்த முனைந்தபோது, இத்தாலி டிரிபோலியைத் தாக் கியது. அதனுல் துருக்கிக்கும் இத்தாலிக்கும் போர் ஏற்பட்டது. போரின் முடிவில் டிரிபோலி, சைரீனைகா (Cyrenaica) ஆகிய இடங் களை இத்தாலி பெற்றது. அப் பகுதிக்கு 'லிபியா' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. ஆயினும், இங்கு முஸ்லீம்களின் எதிர்ப்பு கடுமை யாக இருந்தது. அவைகளை அடக்கப் பெரும்பொருள் செலவிட வேண்டியதாயிற்று. அந் நாடு வறண்ட பிரதேசமாகையால், இத்தாலி பயனடைய முடியவில்லை.

வட ஆஃப்ரிக்காவின் செழிப்பான பகுதியான எகிப்து பிரிட்டிஷ் காரர்களின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. எகிப்து முஸ்லீம் தலைவரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அவருக்கு 'கேடிவ்' (Khedive) என்ற பட்டம் அளிக்கப்பட்டிருந்தது. அவர் துருக்கி மன்னரின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தார். எனினும், அவர் பெரும் பாலும் முழு அதிகாரம் பெற்ற தலைவராகவே இருந்துவந்தார். சையத் பாஷா (1854—1863) என்பவர் ஆண்டுவந்த காலத்தில் ஃபிரஞ்சுக் கட்டுமான வேலைகளைத் திட்டமிட்டு வகுத்தமைப்பவர் (Engineer) ஒருவர் சூயஸ் கால்வாயை வெட்டும் திட்டத்தைத் தயா ரித்தார். அத் திட்டத்தை சையத்பாஷா அங்கீகரித்தார். அவருக்குப் பின்னர் ஆட்சி செலுத்திய இஸ்மெயில் பாஷா, எகிப்தினுடைய ஆதிக் கத்தைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், கார்டன் என்னும் பிரிட்டன் நாட்டவரை சூடானுக்கு அனுப்பி அதைக் கைப்பற்றினர். மேலும், இஸ்மெயில் பாஷா வெளிநாட்டவர்களிடமிருந்து பெருந் தொகையைக் கடனுக வாங்கியிருந்தார். நாளடைவில் கடன் தொகை யைத் திருப்பித்தர இயலாதுபோகவே, சூயஸ் கால்வாய்க் கம்பெனியில் எகிப்திற்குச் சொந்தமான பங்குகளை விற்க முற்பட்டார். சூயஸ் கால்

வாய் வெட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதிலிருந்து பிரிட்டன் அத் திட்டத்தில் அக்கறை செலுத்த ஆரம்பித்தது. ஏனெனில், அக் கால்வாய் ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே இருந்த தூரத் தைக் குறைக்கப் பெரிதும் பயன்பட்டது. கால்வாய் வெட்டுவதற்கு முன்னர் ஐரோப்பாவினின்றும் இந்தியாவிற்குச் செல்லும் கப்பல்கள் ஆஃப்ரிக்காவைச் சுற்றிக்கொண்டுதான் செல்லவேண்டியிருந்தது. கால்வாய் வெட்டப்பட்டதால், மத்தியதரைக் கடலினின்று கால்வாய் வழியாகச் செங்கடல் சென்று, அங்கிருந்து இந்தியாவிற்கு விரைவில் செல்ல முடிந்தது. இந்தியாவில் பேரரசு ஏற்படுத்திய பிரிட்டிஷ்காரர் களுக்கு இக் கால்வாய் பெரிதும் பயன்படத்தக்க வழியில் அமைந் திருந்தது. அக் கால்வாயைக் கட்டுப்படுத்த எகிப்திலும் பிரிட்டனின் ஆதிக்கம் ஏற்படுத்துவது அவசியமாகக் காணப்பட்டது. அந் நேரத் தில் பணத்திற்காகக் கஷ்டப்பட்டிருந்த இஸ்மெயில் பாக்ஷா சூயஸ் கால்வாய்க் கம்பெனியில் அவருக்கிருந்த பங்குகளை விற்க முற்பட்டார். பிரிட்டிஷ் அரசாங்கம் உடனே அப் பங்குகளை வாங்கிக் கால்வாய்த் திட்டத்தில் பெருஞ் செல்வாக்கைப் பெற்றது. அதன் பிறகுங்கூடக் கடன் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டார். ஆகவே, அவர் வாங்கிய கடனைத் திருப்பித்தர மறுத்துவிட்டார். ஃபிரஞ்சு அரசாங்கம் அவருக்குக் கடன் கொடுத்திருந்த ஃபிரஞ்சுக் காரர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதென முடிவு செய்தது. மேலும், எகிப்து இந்தியாவிற்குச் செல்லும் வழியில் இருந்ததால், ஃபிரான்சும் தன் செல்வாக்கை அங்கு ஏற்படுத்த முயன்றது. பிரிட்டன், ஃபிரான்சு மட்டும் எகிப்தின் விவகாரங்களில் தலையிட அனுமதி தர மறுத்தது. ஆகவே, பிரிட்டனும் ஃபிரான்சும் சேர்ந்து தலையிட்டன. அதன்படி எகிப்தின் அரசாங்க வருவாயின் பாதியைக் கட்டுப் படுத்தும் உரிமை ஃபிரான்சு, பிரிட்டன், இத்தாலி, ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய ஐந்து நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன் றிற்கு வழங்கப்பட்டது. நாளடைவில் பிரிட்டனும் ஃபிரான்சுமே கட்டுப்படுத்தும் உரிமையை அனுபவித்து வந்தன. இதற்கு 'இரட் டைக் கட்டுப்பாடு' (Dual Control) என்று பெயர் வழங்கி வந்தது. பிரிட்டனும் ஃபிரான்சும் கமிஷனர்களை அனுப்பின. பிரிட்டன் சார்பில் எவிலின் பாரிங் (Evelyn Baring) அனுப்பப்பட்டார். அந்த ஏற் பாட்டிற்குப் பின்னரும் இஸ்மெயில் திருந்தவில்லை. மேலும், அந்நியர் களின் கட்டுப்பாட்டை விரும்பாமையால், அந்த இரட்டைக் கட்டுப் பாட்டு முறையை ஒழிக்க முற்பட்டார். ஆகவே, பிரிட்டனும் ஃபிரான்சும் அவரைப் பதவியினின்றும் நீக்கிவிட்டு, வேறொருவரை அப் பதவியில் நியமித்தன.

புதிதாக நியமிக்கப்பட்ட கேடிவ் அவ்விரு நாடுகளின் கைப் பொம்மையாக இருந்தார். ஆகவே, தேசீய உணர்ச்சி வயப்பட்ட

தலைவர்களில் சிலர் கிளர்ச்சி செய்து அந்நியர்களை விரட்டியடிக்க முற்பட்டனர். அவர்களுக்குத் தலைவராக விளங்கியவர் அராபி பாஷா (Arabi Pasha) என்பவராவார். அவர் எகிப்தியப் படையில் பணியாற்றி வந்தார். அப்பொழுது தோன்றிய தேசீயவாதிகளின் துணையுடன் கிளர்ச்சி யொன்றை ஏற்படுத்தினர். திறமையற்ற கேடிவ் அராபி பாஷாவின் விருப்பப்படியே அவரை அமைச்சராக்கினர். எல்லா அதிகாரங்களையும் அராபி பாஷாவே ஏற்றிருந்தார். பிரிட்டனும் ஃபிரான்சும் எகிப்தில் இருந்த தங்களுடைய குடிமக்களைக் காக்கும் பொருட்டுக் கப்பற்படையை அனுப்பிவைத்தன. ஆனால், அக் கப்பற் படைகள் யாதொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளு முன்னர் ஃபிரான்சு தன்னுடைய கப்பற் படையைத் திருப்பி அழைத்துக்கொண்டது. அப்படியிருந்தும் பிரிட்டன் தானே செயற்பட முனைந்தது.

இதற்கிடையில் ஃபிரான்சும் பிரிட்டனும் எகிப்திய அரசுத் தலைவருக்கு 1882-ல் ஓர் அறிக்கையை அனுப்பியது. அதில் ஃபிரான்சும் பிரிட்டனும் எகிப்தில் அமைதியை ஏற்படுத்த எல்லா வகையிலும் முயலும் என்று குறிப்பிட்டிருந்தது. ஆகவே, அது மக்களுடைய தேசிய உணர்ச்சியை மேலும் தூண்டிவிட்டது. பிரிட்டிஷ் கப்பற் படை அலெக்சாந்திரியாவின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதன் விளைவாக மக்கள் திரண்டு எழுந்தனர். அலெக்சாந்திரியாவில் சுமார் ஐம்பது ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். உடனே பிரிட்டிஷ் கப்பற் படை அலெக்சாந்திரியாவைத் தாக்கியது. மேலும், பிரிட்டிஷ் சேனை யொன்று சர் கார்னெட் உல்ஸ்லி (Sir Garnet Wolsley) என்பவரின் தலைமையின்கீழ் அனுப்பப்பட்டது. அராபி பாஷா டெல்–எல்–கபீர் என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார். பிறகு அவரைக் கைது செய்து இலங்கைக்கு அனுப்பிவிட்டனர். அதன் பிறகு கேடிவினுடைய அதிகாரம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. எவிலின் பாரிங்கு எகிப்தில் இருந்துகொண்டு 1906 வரை ஆட்சி நடத்தி வந்தார். 1884-ல் அவருக்கு கான்சல்–ஜெனரல் பதவி அளிக்கப்பட்டது. அவரைத் தற்கால எகிப்தை உருவாக்கியவர் என்று கருதுகிறார்கள். எகிப்தின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். நீர்ப்பாசனத் திட்டத்தைப் பெருக்கினர். நிதி நிலையைச் சீர்படுத்தினர். இலஞ்ச ஊழல்களை ஒழித்தார். மக்களைப் பொது வேலையில் கட்டாயமாக ஈடுபடுத்தும் பழக்கத்தை நிறுத்தினர். இத்தகைய சிறப்புப் பணியாற்றிய இவருக்குப் பிற்காலத்தில் 'கிரோமர் பிரபு' என்ற பட்டம் அளிக்கப் பட்டது.

1883-ல் இரட்டைக் கட்டுப்பாட்டு முறை ஒழிக்கப்பட்டபோதும், ஃபிரான்சுக்கு எகிப்தில் செல்வாக்குத் தொடர்ந்து இருந்து வந்தது. எகிப்தில் இங்கிலாந்தின் வளர்ச்சி அதனுடைய பொறுமையைத்

தூண்டி விட்டது. 1898-ல் நைல்நதியின் மேற்பாகத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் சேனை யொன்றை ஃபிரான்சு ஃபஷோடா (Fashoda) என்னுமிடத்திற்கு அனுப்பியது. அதைத் தடுக்க பிரிட்டிஷ் படையொன்று அனுப்பப்பட்டது. இரு நாடுகளும் கைகலக்கத் தயாராயிருந்தன. ஆனால், ஃபிரெஞ்சுப் படைகள் அவ்விடமிருந்து பின்வாங்கியதால், போர் தடைப்பட்டு நின்றது. இறுதியில், 1904-ல் இரு நாடுகளும் ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன்படி, பிரிட்டிஷ்காரர்கள் எகிப்தில் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும் என்றும், ஃபிரஞ்சுக்காரர்கள் மொராக்கோவில் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

முதலாவது உலகப் போரின்போது 'கேடிவ்' பிரிட்டனுக்கு எதிராகத் துருக்கி மன்னருடன் சேர்ந்து போரிட்டார். ஆகவே, பிரிட்டிஷ்காரர்கள் அவரைப் பதவியினின்றும் நீக்கவேண்டியதாயிற்று. எகிப்தில் பிரிட்டிஷ்காரர்களுடைய காப்பாளர் அரசு ஏற்படுத்தப்பட்டது. போர் முடிந்த பின்னர் எகிப்தியர்கள் தன்னாட்சியுரிமையைக் கோரினார்கள். 1922-ல் பிரிட்டன் எகிப்தினுடைய சுதந்திரத்தை அங்கீகரித்தது. ஆனால், சில கட்டுப்பாடுகள் அந்நாட்டின்மீது சுமத்தப்பட்டன. 1923-ல் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 1953-ல் எகிப்து குடியரசாக மாறியது. இப்பொழுது அது ஐக்கிய அரபுக் குடியரசில் அங்கம் வகிக்கும் நாடாக விளங்குகிறது.

சூடான்

இஸ்மெயில் பாஷா பிரிட்டிஷ் படைத் தலைவர்களின் துணை கொண்டு சூடானைக் கைப்பற்றினார் என்று முன்னரே கண்டறிந்தோம். சூடான் எகிப்தின் ஆட்சிக்குட்பட்ட மாகாணமாக இருந்துவந்தது. கார்டன் சூடானை விட்டு வெளியேறிய பிறகு, தேசீய உணர்ச்சியால் உந்தப்பட்டு சூடான் மக்கள் 1880-ல் கிளர்ச்சி செய்தார்கள். மஹதி (Mahedi) என்ற பெயரால் அம் மக்கள் அழைத்துவந்த ஒரு மதத் தலைவர் அக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தார். ஆகவே, கேடிவ் படையொன்றை சூடானுக்கு அனுப்பினார். ஆனால், அப் படை தோற்கடிக்கப்பட்டது. எனவே, கேடிவ் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சண்டையிட விருப்பமில்லை. ஆனால், அங்கு நிலைநிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகளை வெளியேற்றிவிட வேண்டும் என்று தீர்மானித்தது. கார்டனை அங்கு சென்று அப் படைகளைத் திரும்பி அழைத்து வருமாறு கட்டளையிட்டது. ஆனால், கார்டன் அதற்குப் பதிலாக கார்டுமில் காலதாமதம் செய்தார். அந்நேரத்தில் பகைவர்கள் அவரையும் அவர் படைகளையும் சூழ்ந்து கொண்டனர். அச் செய்தி அறிந்த அரசாங்கம் மற்றொரு படையை அவருடைய உதவிக்கு அனுப்பியது. உதவிப்படை அவரை அணுகு

முன்னரே கார்டும் கோட்டை பிடிபட்டது. அநேக பிரிட்டிஷ் போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். 1885-ல் ஆங்கிலேயர் சூடானை விட்டு வெளியேறினர்கள். 1896-ல் பிரிட்டிஷ் அரசினர் சூடானை மீண்டும் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர முற்பட்டனர். கிட்சனர் (Lord Kitchener) தலைமையின்கீழ்ப் படையொன்று அனுப்பப் பட்டது. சூடானியர்கள் ஓம்தூர்மான் (Omdurman) என்னு மிடத்தில் தோற்கடிக்கப்பட்டார்கள். எகிப்தும் பிரிட்டனும் சேர்ந்து சூடானில் காப்பாளர் அரசை ஏற்படுத்தின. இங்கும் ஃபிரஞ்சுக் காரர்கள் தொல்லை கொடுத்தனர். ஆனால், முன்னரே குறிப்பிட்ட பஷோடா நிகழ்ச்சிக்குப்பின் அவர்கள் சூடானைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டனர். இப்பொழுது சூடான் சுதந்திரம் பெற்ற நாடாக விளங்குகிறது.

மேற்கு ஆஃப்ரிக்கா

ஆஃப்ரிக்காவின் மேற்குக் கரையில் பல வியாபாரத் தலங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதை நாம் கண்டறிந்தோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ்காரர்கள் மூன்று குடியேற்றங் களை ஏற்படுத்தி இருந்தார்கள். காம்பியா நதியின் முகத்துவாரத் திலும், சீயேரா லியோனிலும் (Sierra Leone), 'கோல்ட் கோஸ்டில்' பல பகுதிகளிலும் வியாபாரத் தலங்கள் ஏற்படுத்தி யிருந்தனர். கோல்ட் கோஸ்டில் அமைக்கப்பட்ட தலங்கள் டேனியர்களாலும், டச்சுக்காரர் களாலும், அஷாந்தி (Ashonti) என்ற சுதேசி அரசாலும் சூழப்பட் டிருந்தன. எல்லாக் குடியேற்றங்களும் ஆஃப்ரிக்கக் கம்பெனியின் அதிகாரத்துக்குட்பட்டிருந்தன. 1821-ல் அக் கம்பெனி மூடப்பட்ட தால், கோல்ட் கோஸ்ட் கோட்டைகளை லண்டன் வியாபாரிகள் அடங்கிய குழுவொன்றிற்கு அவைகளை ஆளும் உரிமை வழங்கப் பட்டது. ஜார்ஜ் மக்வீன் என்ற அக் குழுவின் காரகர் (Agent) அங்குள்ள சுதேசி மக்களிடம் பிரிட்டிஷ்காரர்களுடைய செல்வாக்கை ஏற்படுத்தினர். சமயப் பரப்பாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்கப்பட்டது. 1343-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னுடைய ஆளுகையின்கீழ் அக் குடியேற்றத்தைக் கொண்டுவந்தது. 1850-ல் டேனியர் அரசாங்கம் தங்களுக்குச் சொந்தமாயிருந்த கோட்டைகளை ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டது. ஆங்கிலேயருடைய ஆதிக்கம் உள் நாட்டில் சுமார் நாற்பது மைல்வரை பரவியிருந்தது. டச்சுக்காரர் களும் அப் பகுதியினின்றும் விலகினர்கள். 1873-ல் ஆங்கிலேயருக்கும் சுதேசி அரசுக்குமிடையே போர் ஏற்பட்டது. கார்னெட் உல்ஸ்லி என்பவரின்கீழ் அனுப்பப்பட்ட படை அவ்வரசின் வலிமையை ஒழித்தது. அதன்பிறகு கோல்ட் கோஸ்ட் சிறந்த வியாபாரத்தலமாக விளங்கியது. இதுதான் இப்பொழுது 'கானு' என்ற பெயரில் சுதந்திர நாடாக விளங்குகிறது.

1861-ல் லாகோஸ் என்னும் தீவு பிரிட்டிஷ்காரர்கள் வசமாயிற்று. அத் தீவும் சிறந்த வியாபார ஸ்தலமாக விளங்கியது. அதன் பயனாக பிரிட்டிஷ்காரர்கள் மேற்குக் கடற்கரைப் பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். மேற்குக் கரை வியாபாரத்தின் பெரும்பகுதி அவர்கள் கைகளிலேயே இருந்தது.

ஆனால், அங்கும் ஃபிரஞ்சுக்காரர்களே அவர்களுடைய எதிரிகளாக இருந்தனர். ஃபிரான்சு செனிகல் நதி முகத்துவாரத்தில் குடியேற்றம் அமைத்திருந்தது. ஆனால், செனிகல் எவ்வகையிலும் ஆங்கிலேயர்களுடன் போட்டியிடத்தக்க வலிமையைப் பெற்றிருக்கவில்லை. மேலும், ஃபிரஞ்சுக்காரர்கள் ஃபிரஞ்சு கினி (French Guinnea) என்ற இடத்திலும் குடியேற்றம் ஏற்படுத்தினார்கள். போர்ச்சுகீசியரும் மேற்குக் கரையில் 'போர்ச்சுகீசிய கினி' என்ற குடியேற்றத்தை அமைத்திருந்தார்கள். நாளடைவில் ஃபிரஞ்சுக்காரர்கள் செனிகலிலிருந்து கிழக்கு நோக்கித் தங்களுடைய ஆதிக்கத்தைப் பரப்ப முற்பட்டனர். அதன் விளைவாக அவர்கள் சூடான்வரை தங்களுடைய ஆதிக்கத்தைப் பரப்பினார்கள். அப் பகுதியிலிருந்த செழிப்பான பாகங்களாகிய டிம்பக்டு போன்ற இடங்கள் அவர்கள் வசமாயின. மேலும், மேற்குக் கரைப் பிரதேசங்களிலிருந்த சுதேசித் தலைவர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டனர். இவ்வாறாக ஃபிரான்சு தன்னுடைய ஆதிக்கத்தை அட்லான்டிக் கரையிலிருந்து செங்கடல்வரை பரப்ப முயன்றது.

மேற்கூறிய நடவடிக்கைகள் பிரிட்டிஷ்காரர்களுக்கு பயத்தை உண்டாக்கின. தங்களுடைய வியாபாரம் பாதிக்கப்படும் என்று எண்ணினார்கள். ஆகவே, ஆங்கிலேய வியாபாரிகள் 1879-ல் யுனைடெட் ஆஃபிரிக்கன் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தினார்கள். சில ஆண்டுகளில் நைஜீரிய நதியின் கீழ்ப்பாகத்திலுள்ள ஃபிரஞ்சுக்காரர்களை வெளியேற்றினார்கள். அதன் பயனாக பிரிட்டிஷ்காரர்களுடைய செல்வாக்கு கீழ்நைஜீரியாவில் நிலைநாட்டப்பட்டது. 1884-ல் கீழ்நைஜீரியாவில் காப்பாளர் அரசு ஏற்படுத்தப்பட்டது. 1887-ல் ஜார்ஜ் கோல்டி (George Goldie) என்பவரின் தூண்டுதலின்பேரில் ராயல் நைஜர் கம்பெனிக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் உரிமைச் சாசனம் ஒன்றை வழங்கியது. அக் கம்பெனிக்கும் ஃபிரஞ்சுக்காரர்களுக்கும் பலத்த போட்டி ஏற்பட்டது. 1890-ல் இரு நாடுகளும் ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன் விளைவாக பிரிட்டிஷ்காரர்கள் நைஜீரியாவில் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

1884-ல் ஜெர்மனியைச் சார்ந்த நாஷ்டிகல் என்பவர் ஆஃப்ரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள ஜெர்மானியர்களின் வியாபார நிலைமையைப்பற்றி ஆராயும் பொருட்டு மேற்குக் கரையை அடைந்தார்.

அவரும் டோகோலாந்தின் மன்னரும் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்படி, டோகோலாந்தில் ஜெர்மனியின் 'காப்பாளர் அரசு' ஏற்படுத்தப்பட்டது. மேலும், ஜெர்மனி காமெரூன் பகுதியிலிருந்த தலைவர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. அதன் பயனாக காமெரூன்ஸில் ஜெர்மனியின் செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டது. 1911-ல் ஃபிரான்சிடமிருந்து காங்கோவின் ஒரு பகுதியைப் பெற்றது. போர்ச்சுகீசியருக்கும் ஸ்பெயினுக்கும் சிறுசிறு பகுதிகள் மேற்கு ஆஃப்ரிக்காவில் சொந்தமாயிருந்தன. அவைகள் போர்ச்சுகீசிய கினி, ஸ்பானிய கினி என்று அழைக்கப்பட்டன. மேற்குக் கரையில் ஐரோப்பியர் ஆதிக்கத்திற்குட்படாத நாடு லைபீரியா ஒன்றேயாகும்.

மேற்குக் கரையின் நடுப்பகுதியில் தெ பிராஸ்ஸா (de Brazza) என்ற ஃபிரஞ்சுக்காரர் காங்கோ நதியின் வடபகுதியில் ஆய்வுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அவருக்கு ஃபிரஞ்சு அரசாங்கம் தக்க உதவி புரிந்தது. 1880-ல் அப் பகுதிகளை ஃபிரஞ்சு அதிகாரத்திற்குட்படுத்தினர். அப் பகுதியில் ஒரு பாகத்தை ஃபிரான்சு 1911-ல் ஜெர்மனிக்குக் கொடுக்க நேர்ந்ததென்பதை முன்னரே அறிந்தோம்.

ஃபிரஞ்சுக் காங்கோவிற்குத் தெற்கே போர்ச்சுகீசியர் 'அங்கோலா' என்ற பகுதியைத் தங்களின் ஆளுகையின்கீழ்க் கொண்டுவந்தனர்.

ஆஃப்ரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் ஜெர்மானியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டியிருந்தனர். லடரிட்ஸ் (Luderitz) என்ற ஜெர்மானிய வியாபாரி வடமேற்கு ஆஃப்ரிக்காவிற்குச் சென்று அங்கிருந்த தலைவருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். 1884-ல் ஜெர்மானிய அரசாங்கம் அப் பகுதியைத் தன்னுடைய அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்தது.

நடு ஆஃப்ரிக்கா

நடு ஆஃப்ரிக்காவில்தான் ஐரோப்பிய நாடுகளிடையே பலத்த போட்டி ஏற்பட்டது. அப் போட்டியைத் தொடங்கியவர் பெல்ஜியம் நாட்டின் மன்னரான லியோபால்ட் என்பவராவார். 1876-ல் அவர் மாநாடு ஒன்றைத் தன்னுடைய தலைநகரில் கூட்டினார். அம் மாநாடு 'இன்டர் நேஷனல் ஆஃப்ரிக்கன் அசோசியேஷன்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது. அதற்கு லியோபால்டே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக் குழுவினுடைய கிளைகள் எல்லா நாடுகளிலும் அமைக்கப்பட்டன. எல்லா நாடுகளும் ஒன்றுசேர்ந்து, இதுவரை ஐரோப்பியர்களால் அறிய முடியாத ஆஃப்ரிக்காவை எல்லோரும் அறியச் செய்ய வேண்டும் என்பதே அவ்வமைப்பை ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம் ஆகும். நாளடைவில் அந்த அமைப்பு பெல்ஜிய நாட்டவரின்

அமைப்பாக மாறியது. லியோபால்ட், ஸ்டான்லியை மீண்டும் காங்கோ சென்று அங்கு ஆட்சிமுறையை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். அதனுடைய விளைவாக சுதந்திரக் காங்கோ நாடு (Congo Free State) ஏற்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் இந் நாடு நல்ல முறையில் ஆளப்பட்டுவந்தது. ஆனால், நாளடைவில் பல சீர்கேடுகள் தோன்றின. சில இடங்களில் சுதேசி மக்கள் கொடுமையாக நடத்தப் பட்டனர். சில காலம் சென்றபின் அது பெல்ஜிய நாட்டின் ஆட்சிக்குட் படுத்தப்பட்டது.

கிழக்கு ஆஃப்ரிக்கா

கிழக்கு ஆஃப்ரிக்காவின் தெற்குப் பகுதியிலுள்ள மொசாம்பிக் பகுதியில் போர்ச்சுகீசியர் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினர் கள். 1885-ல் கார்ல் பீட்டர்ஸ் (Karl Peters) என்ற ஜெர்மானியர் ஜெர்மானியப் பேரரசின் ஆஃப்ரிக்கன் கம்பெனியின் சார்பாக ஜான்சி பார் தீவிற்கு எதிர்ப்புறத்திலுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் ஜெர்மனி யின் செல்வாக்கை நிலைநாட்டினர். அதை ஜான்சிபார் சுல்தான் எதிர்த்தார். ஆயினும், 1885-ல் ஜெர்மனி அவ்விடத்தில காப்பாளர் அரசை ஏற்படுத்தியது; கப்பற்படையொன்றை அனுப்பி அந்த அரசை எதிர்ப்பாளர்களிடமிருந்து காப்பாற்றியது.

பிரிட்டிஷ் வியாபாரிகள் சிலர் ஜெர்மானியர்களின் நடவடிக்கை களால் தங்களுடைய வியாபாரம் அழிவுறும் என்று கருதினர்கள். எனவே, கெனியா என்னும் பகுதியிலுள்ள தலைவர்களுடன் உடன் படிக்கைகள் செய்துகொண்டனர். அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் கிழக்கு ஆஃப்ரிக்கக் கம்பெனி கெனியாவில் பிரிட்டிஷ்காரர் களின் செல்வாக்கை ஏற்படுத்த வழிசெய்தது. பிறகு பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகள் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாக கெனியாவிற்கும் ஜெர்மன் கிழக்கு ஆஃப்ரிக்காவிற்கும் இடையேயுள்ள எல்லை 1886-ல் வரையறுக்கப்பட்டது. 1890-ல் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை வாயிலாக பிரிட்டிஷ் கிழக்கு ஆஃப்ரிக்கா, யுகாந்தா (Uganda) ஆகிய இடங்களில் காப்பாளர் அரசுகளை பிரிட்டன் ஏற்படுத்த அனுமதி பெற்றது. மேலும், ஜான்சிபாரில் பிரிட்டிஷ்காரர்கள் பெற்றிருந்த அதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

இத்தாலி செங்கடல் ஓரத்தில் 1882-ல் ஒரு தலத்தை ஏற்படுத்தி யிருந்தது. ஆங்கிலேயர்கள் துணைகொண்டு அதை நாளடைவில் விரிவுபடுத்தி 'எரிட்ரியா' என்ற பெயருடைய குடியேற்ற நாடாக அமைத்தது. 1889-லும், அதற்கு அடுத்த ஆண்டிலும் சோமாலிலாந்து என்னும் பகுதியில் பெரும் பகுதியைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க்

கொண்டுவந்தது. சோமாலிலாந்தின் மற்ருெரு பகுதி பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1891ஆம் ஆண்டிலும், 1894ஆம் ஆண்டிலும் இவ்விரு நாடுகள் மேற்கொண்ட உடன்படிக்கைகள் அவைகளுக்குச் சொந்தமான பகுதிகளின் எல்லைகளை வரையறுத்தன. சோமாலிலாந்தின் மற்ருெரு சிறு பகுதி ஃபிரஞ்சுக்காரர்கள் ஆளுகைக்குட்படுத்தப்பட்டது. 1890-ல் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை வாயிலாக மடகாஸ்கரில் ஃபிரஞ்சுக்காரர்களின் காப்பாளர் அரசு ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. கிழக்கு ஆஃப்ரிக்காவில் ஐரோப்பியர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றி கண்ட நாடு அபிசீனியாவேயாகும். அபிசீனியா ஒரு கிறித்துவ நாடாகும். அம் மக்கள் ஓரளவு நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். அந் நாட்டை இத்தாலி தன்னுடைய ஆளுகையின்கீழ்க் கொண்டுவர முற்பட்டது. 1889-ல் அபிசீனியாவின் பேரரசர் இத்தாலியுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். சில காலத்திற்குப்பின் அப் பேரரசர் அதை நிராகரித்தார். ஆகவே, போர் ஏற்பட்டது. இத்தாலியர்கள் அடோவா (Adowa) என்னுமிடத்தில் தோல்வியுற்றனர். அதனுல் இத்தாலி அந் நாட்டைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டது.

தென் ஆஃப்ரிக்கா

1486-ல் நன்னம்பிக்கை முனை போச்சுகீசியரால் கண்டுபிடிக்கப்பட்டது. 1652-ல் டச்சுக்காரர்கள் கைப்பற்றினர்கள். வெகு நாளாக அது கப்பல்களுக்குத் தேவையான பொருள்களை அளிக்கும் துறைமுகமாக விளங்கிவந்தது. பதினேழாம் நூற்ருண்டில் டச்சுக்காரர்கள் குடியேற முற்பட்டனர். முதலில் கடற்கரையோரமாகவே அவர்கள் குடியேறினர்கள். நாளடைவில் உள்நாட்டுப் பிரதேசத்திலும் குடியேறத் தலைப்பட்டார்கள். ஆனுல், டச்சுக்காரர்கள் ஆதிக்கத்திலிருந்தபோது, அக் குடியேற்ற நாட்டின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. அக் காலத்தில் ஃபிரஞ்சுப் பிராடஸ்டன்டுகளும் அங்குக் குடியேறினர்கள். 1795-ல் ஹாலந்து ஃபிரஞ்சுக்காரர்களின் அதிகாரத்திற்குட்படுத்தப்பட்டது. ஆகவே, ஃபிரான்சுடன் போர்புரிந்துகொண்டிருந்த பிரிட்டன் அதைக் கைப்பற்ற வேண்டியதாயிற்று. 1796-ல் நன்னம்பிக்கை முனை குடியேற்ற நாடு பிரிட்டன் வசமாயிற்று. நெப்போலியனுடன் நடத்தப்பட்டுவந்த போர் முடிந்த பிறகு, அக் குடியேற்ற நாடு பிரிட்டிஷ்காரர்களே வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பொழுது அக் குடியேற்ற நாடுகளில் சுமார் 25,000 டச்சுக்காரர்கள் இருந்தனர். அவர்களை போயர்கள் என்றும் கூறுகிருேம். அவர்களைத் தவிர அப் பகுதியில் சுதேசி மக்களும் இருந்தனர். போயர்களுடைய நிலங்களைப் பயிரிடுவதற்கு அடிமைகளைப் பயன்படுத்திவந்தனர். பிரிட்டிஷ்காரர்களுடைய ஆட்சி அங்கு ஏற்படுத்தப்பட்ட பிறகு அடிமைத்தனத்தை ஒழித்தனர்.

அதற்காக அடிமைகளை வைத்திருப்போர்களுக்கு நஷ்டவீடு வழங்குவதாக உறுதி கூறியது. ஆனால், அநேகருக்கு நஷ்டவீடு வழங்கப்படவில்லை. மேலும், அக் குடியேற்ற நாட்டிற்கு அண்மையில் கஃபீர்ஸ் (Kaffirs) என்ற இனத்தவர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் அடிக்கடி குடியேற்ற நாட்டைத் தாக்கி மக்களைத் துன்புறுத்திவந்தனர். போயர்கள் அம் மக்களை அடக்கவேண்டும் என்று கருதினார்கள். அவர்களுடைய கருத்திற்கேற்றவாறு அப்பொழுது இருந்த கவர்னர் அவர்களுடன் போரிட்டு, அவர்களுடைய நிலப்பகுதியின் ஒரு பாகத்தை நன்னம்பிக்கை முனைக் குடியேற்ற நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் அவருடைய ஏற்பாட்டை நிராகரித்தது. அவர் கைப்பற்றிய இடங்கள் அவர்களுக்குத் திருப்பியளிக்கப்பட்டன. ஆகவே, போயர்கள் பிரிட்டிஷ் அரசாங்கம் தங்களுடைய சொத்துகளையும் உயிர்களையும்கூடக் காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ளாதென்று கருதினார்கள். எனவே, அவர்களில் ஒரு பகுதியினர் வேறு இடங்களுக்குச் செல்ல முற்பட்டார்கள். இதற்குப் 'பெரும் வெளியேற்றம்' (The Great Trek) என்ற பெயர் வழங்கப்பட்டது.

1836-ல் தொடங்கிய வெளியேற்றம் சுமார் இருபது ஆண்டுகள் நீடித்தது. வெளியேறிய போயர்கள் முதலில் ஆரஞ்சு, வால் என்ற நதிகளின் இடைப்பட்ட பகுதியில் தங்கினார்கள். அதற்குச் 'சுதந்திர ஆரஞ்சு நாடு' (Orange Free State) என்ற பெயர் கொடுத்தார்கள். பிறகு வால் நதியைக் கடந்து டிரான்ஸ்வால் என்ற மற்றொரு குடியேற்ற நாட்டை அமைத்தார்கள்; நெட்டால் என்ற பகுதியிலும் குடியேற்றங்களை அமைத்தார்கள். இவ்வாறாக ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் மிகவும் வலிகுன்றியனவாக இருந்தன. அவைகளில் அமைதி நிலைநாட்டுவது மிகவும் கடினமாக இருந்தது. மேலும், அவைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்துவந்த முரட்டு இனத்தவர்கள் அவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தார்கள். அத் தொல்லைகளினின்றும் அம் மக்களைக் காப்பாற்றத்தக்க ஆட்சி அங்கு ஏற்படுத்தப்படவில்லை. மேலும், நெட்டால் பிரிட்டனுக்குச் சொந்தமான பகுதி என்று பிரிட்டன் உரிமை கொண்டாடியது. மேலும், போயர்கள் இன்னும் பிரிட்டிஷ் அரசரின் குடிமக்களாகவே கருதப்பட்டனர். அந் நிலையில் 1841-ல் நெட்டால் போயர்கள் கஃபீர் இனத்தவரைத் தாக்கத் தொடங்கினார்கள். அவ்வாறு தாக்கப்பட்டவர்கள் நன்னம்பிக்கை முனைக் குடியேற்றத்திற்குள் நுழைய நேரும் என்று கருதிய பிரிட்டிஷ் அரசாங்கம், நெட்டாலை நன்னம்பிக்கை முனைக் குடியேற்ற நாட்டுடன் சேர்த்துக்கொண்டது. ஆகவே, போயர்கள் நெட்டாலைவிட்டு வெளியேறினர். 1847-ல் கஃபீர் இனத்தவர் வசித்த பகுதி பிரிட்டிஷ் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. 1848-ல் ஆரஞ்சு, வால் நதிகளுக்கு இடையேயிருந்த பகுதியும் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

அதை எதிர்த்த சில போயர்கள் தோற்கடிக்கப்பட்டதால், அவர்கள் டிரான்ஸ்வால் செல்ல நேர்ந்தது. ஏனையோர் பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்றுக்கொண்டனர். நாளடைவில் பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகமான பொறுப்புகளை வகிக்க விருப்பம் கொள்ளாததால், போயர் குடியேறிய நாடுகளுக்குச் சுதந்திரம் அளிக்க முடிவு செய்தது. 1852-ல் சான்ட் நதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி டிரான்ஸ்வாலுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டது. 1854-ல் ஆரஞ்சு நாட்டிற்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டது. அக் காலத்தில் பெருவாரியான போயர்கள் அவ்வேற்பாடுகளை விரும்பவில்லை என்பதையும், அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருக்க விருப்பப்பட்டனர் என்பதையும் இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும். இவ்வாறாக, ஆங்கிலேய ஆதிக்கத்தை மேற்கூறிய குடியேற்ற நாடுகளில் ஏற்படுத்துவதற்குரிய அரிய வாய்ப்பை ஆங்கிலேயர்கள் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

1860-ல் ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளாகிய நன்னம்பிக்கை முனைக் குடியேற்றம், நேட்டால் குடியேற்றம், போயர்களின் குடியரசுகளாகிய டிரான்ஸ்வால், ஆரஞ்சு நாடு ஆகியவைகளே தென் ஆப்பிரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட ஐரோப்பியக் குடியேற்றங்களாக அமைந்திருந்தன. அவைகளைச் சுற்றி சுதேச மக்கள் வாழ்ந்திருந்தனர். அவர்களில் சிலர் போரில் விருப்பம் கொண்டிருந்தனர். மேலும், அவர்கள் வெள்ளையர்களை எதிரிகளாகக் கருதினார்கள். போயர் குடியரசுகள் பலமற்றனவாகவும் வளங்குன்றியனவாகவும் இருந்தன. அந் நிலையைப் பயன்படுத்தி, அந் நாடுகளுக்கு அண்மையிலிருந்த ஜுலு (Zulus) என்னும் இனத்தவர் அக் குடியரசுகளுக்குத் தொல்லைகள் கொடுத்தனர். ஆகவே, டிரான்ஸ்வால் போயர்கள் வேண்டுகோளுக்கிணங்க டிரான்ஸ்வால் பிரிட்டிஷ் குடியேற்றங்களுடன் இணைக்கப்பட்டது. ஆகவே, 1879-ல் ஜுலு மக்களுக்கு எதிராகப் போர் தொடங்கப்பட்டது. பிரிட்டிஷ்காரர்கள் முதலில் தோல்வியுற்றனர். ஆனால், இறுதியில் உலுண்டி (Ulundi) என்னுமிடத்தில் ஜுலுக்கள் தோல்வியுற்றனர். அவர்களுடைய அரசர் செடிவாயோ (Cetewayo) நாடுகடத்தப்பட்டார்.

ஜுலுக்களின் வலிமை அடக்கப்பட்டுவிட்டதால், போயர்கள் சுதந்திரம் அடைய விரும்பினார்கள். ஆதலால், அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 1881-ல் பிரிட்டிஷ் படையொன்றை மஜுபாஹில் என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள். அப்பொழுது பிரிட்டிஷ் பிரதமரான கிளாட்சன் (Gladstone) முற்போக்குக் கருத்துடையவராதலால், போயர்களுடன் சமாதானம் செய்துகொண்டார். அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட பிரிடோரியா ஒப்பந்தத்தின்படி (Convention of Pretoria) போயர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

டிரான்ஸ்வால் போயர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும், போயர்களுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் இடையே வேற்றுமைகள் வளரலாயின. அதன் விளைவாக அவர்களுடைய தலைவரான பால் குரூகர் (Paul Kruger) என்பவர் தென் ஆஃப்ரிக்காவில் போயர்களுடைய பேரரசை ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணமிட்டார். அதே நேரத்தில் பிரிட்டிஷ்காரர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயினர். நன்னம்பிக்கை முனைக் குடியேற்றத்தின் கவர்னரான சிசில் ரோட்ஸ் (Cecil Rhodes) என்பவர் பிரிட்டிஷ்காரர்களுடைய ஆதிக்கத்தைப் பரப்பவேண்டும் என்று எண்ணினார். அவர் ஒரு கம்பெனிக்குத் தனியுரிமைப் பத்திரம் வாங்கிக்கொடுத்து, அதைப் புதிய குடியேற்றங்களை ஏற்படுத்துமாறு ஊக்குவித்தார். அதன் பயனாக லிம்போபோ நதிக்கும், நடுஆஃப்ரிக்காவிலுள்ள ஏரிகளுக்கும் இடையேயுள்ள பகுதியில் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. அப் பகுதிக்கு 'ரொடீசியா' (Rhodesia) என்ற பெயர் அளிக்கப்பட்டது. மேலும், ரோட்ஸ், ஜுலுலாந்து, பெச்சுவானாலாந்து ஆகிய இடங்களையும் பிரிட்டனின் ஆளுகைக்குட்படுத்தக் காரணமாயிருந்தார். அதன் பயனாக போயர்கள் தங்களுடைய நாடுகளைப் பெரிதாக்க முடியாமற்போயிற்று. மேலும், பால் குரூகருடைய நோக்கமும், ரோட்ஸினுடைய நோக்கமும் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன.

1886-ல் டிரான்ஸ்வாலில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. பிரிட்டிஷ்காரர்கள் பலர் அங்குச் சென்று குடியேறினார்கள். சில காலத்திற்கெல்லாம் அவர்களுடைய எண்ணிக்கை பெருகியது. டிரான்ஸ்வால் குடியரசுத் தலைவரான குரூகர் பிரிட்டிஷ்காரர்களை வெறுத்ததால், அவர்களைப் பலவாறு துன்புறுத்தினார். அவர்களுக்கு அரசியல் சார்ந்த உரிமைகள் ஏதும் வழங்கவில்லை. அவர்கள்மீது தனிப்பட்ட சுரங்க வரி விதிக்கப்பட்டது. ஆகவே, அவர்கள் கிளர்ச்சி செய்ய முடிவு செய்தனர். அவர்களுக்கு உதவி செய்ய ஜேம்ஸன் என்பவர் படையுடன் சென்றார். ஆனால், அவர் கிளர்ச்சி ஏற்படு முன்னரே டிரான்ஸ்வாலுக்குச் சென்றுவிட்டதால், அவருடைய முயற்சி தோல்வியுற்றது. அதை அறிந்த ஜெர்மன் பேரரசர் குரூகருடைய வெற்றியைப் பாராட்டும் வகையில் தந்தி அனுப்பினார். அத் தந்தி குரூகரை பிரிட்டனுக்கு எதிராகப் போராடும்படி ஊக்குவித்தது. உடனே போருக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தலைப்பட்டார். 1899-ல் போர் தொடங்கியது. டிரான்ஸ்வாலுடன் ஆரஞ்சு நாடும் சேர்ந்துகொண்டது. இதனை 'இரண்டாவது போயர் போர்' அல்லது 'தெற்கு ஆஃப்ரிக்கப் போர்' என்று அழைக்கிறார்கள்.

போர் மூண்டதும் போயர்கள் நெட்டாலின்மீது படையெடுத்தார்கள். லேடிஸ்மித் என்னுமிடத்தை முற்றுகையிட்டார்கள். அம்

முற்றுகையினின்றும் அதை மீட்பதற்கு பிரிட்டிஷ்காரர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வீணாயின. பிறகு போயர்கள் கிம்பர்லி (Kimberley), மாஃப்கிங் (Mafeking) ஆகிய இடங்களை முற்றுகையிட்டனர். பிரிட்டிஷ் அரசாங்கம் ராபர்ட்சையும் கிட்சனரையும் தென் ஆஃப்ரிக்காவிற்குப் பெரும்படையுடன் அனுப்பிவைத்தது. பார்டிபர்க் என்னுமிடத்தில போயர்கள் சரணடைந்தார்கள். முற்றுகையிடப்பட்ட நகரங்கள் மீட்கப்பட்டன. சுதந்திர ஆரஞ்சு நாடும் டிரான்ஸ்வாலும் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஆயினும், போயர்கள் பணியவில்லை. கிட்சனர் சிறிது சிறிதாக எல்லாப் பகுதிகளையும் வென்றார். போயர்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டனர். இறுதியில் போயர் தலைவர்கள் பணிந்தார்கள். 1902-ல் சமாதானம் ஏற்படுத்தப்பட்டது. போயர்கள் சுதந்திரத்தை இழந்தார்கள். அதே நேரத்தில் பல கொடுமைகளுக்குள்ளான போயர்களுக்கு அரசாங்கம் உதவிப் பணம் வழங்கியது. போயர் நாடுகளுக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டது. அதன் பிறகு நான்கு தெற்கு ஆஃப்ரிக்கக் குடியேற்ற நாடுகளும் ஒன்று சேர்க்கப்பட்டன. அதன் விளைவாகத் தென்னாஃப்ரிக்க நாடுகளின் கூட்டரசு அமைக்கப்பட்டது (1910). அதன் முதல் பிரதமர் போதா (Botha) என்னும் போயராவார். மற்றொரு போயர் தலைவரான ஸ்மட்ஸ் (Smuts) என்பவர் பிரிட்டிஷ் பேரரசின் அமைச்சரவையில் இடம் பெற்றார் என்பதையும் இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

மேற்கூறியவற்றிலிருந்து ஆஃப்ரிக்கா வெகு சுலபமாக ஐரோப்பிய நாடுகளிடையே பிரித்துக்கொள்ளப்பட்டது என்பது தெளிவாகும். சுதேசித் தலைவர்களிடம் செய்துகொண்ட உடன்படிக்கைகளின் வாயிலாகக் காப்பாளர் அரசு பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் வாயிலாகவும் ஆஃப்ரிக்க நாடுகள் பிரிக்கப்பட்டன. அவ்வாறு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பிரித்துக்கொள்ளப்பட்ட ஆஃப்ரிக்கா சில நன்மைகளைப் பெற்றது. ஒழுங்கான ஆட்சிமுறை, சட்டங்கள் போன்றவை புகுத்தப்பட்டன. அடிமை வியாபாரம் வெளிப்படையாகச் செய்வது தடுக்கப்பட்டது. போக்குவரத்துச் சாதனங்கள் அமைக்கப்பட்டன. சாலைகள் போடப்பட்டன. நீராவிக்கப்பல், இருப்புப்பாதை போன்றவைகள் பயன்படுத்தப்பட்டன. பள்ளிகள், மருத்துவச்சாலைகள் போன்ற சமூகநலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சுருங்கக்கூறின், பல நூற்றுண்டுகளாகக் காட்டுமிராண்டிகள்போல வாழ்ந்துவந்த மக்களிடையே முதல் தடவையாக நாகரிகப் பண்புகள் புகுத்தப்பட்டன.

அதே நேரத்தில் பல தீமைகளும் ஏற்பட்டன என்பதை நாம் மறுக்க முடியாது. பெல்ஜியன் காங்கோ நாடு போன்ற இடங்களில்

மக்கள் கொடுமையாக நடத்தப்பட்டனர். அவர்களின் அறியாமை யைப் பயன்படுத்தி வெள்ளையர்கள் கொள்ளையடிக்கலாயினர். ஜெர் மனிக்குச் சொந்தமான குடியேற்றங்களிலும் மக்கள் பலவாறு துன் புறுத்தப்பட்டனர். ஃபிரஞ்சுக்காரர்கள் பெரும்பாலும் சுதேசி மக்க ளின் நம்பிக்கையைப் பெற்றிருந்தனர். எனினும், அவர்கள் இராணுவ முறைகளைக் கையாண்டுவந்தனர். அவர்கள் சுதேசி மக்களை இராணு வத்தில் சேரத் தூண்டினார்கள். ஆகவே, இருபதாம் நூற்றாண்டில் இவ்வாட்சிகளுக்கெல்லாம் முடிவு ஏற்படலாற்று.

ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா தென் கோளத்தில் அமைந்திருக்கும் ஒரு பெரிய தீவுக்கண்டமாகும். பதினேழாம் நூற்றாண்டு தொடங்கு முன்னர் இத் தீவைப்பற்றி அறிந்த ஐரோப்பியர் எவருமிலர். இத் தீவை நெருங்கிய முதல் ஐரோப்பியர்கள் ஸ்பானியர்களேயாவர். 1605-ல் ஸ்பானியக் கப்பற்படைத் தலைவர் டாரெஸ் (Torres) என்பவர் ஆஸ்தி ரேலியாவிற்கும் நியூகினிக்கும் இடையேயுள்ள கடலிடுக்கில் முதல் முறையாகப் பயணம் செய்தார். அதற்குப் பிறகு பல டச்சுக்காரர்கள் ஆஸ்திரேலியாவை அடைந்தார்கள். அவர்களில் தலைசிறந்தவர் டாஸ் மன் என்பவராவார். 1642-ல் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான கிழக் கிந்தியத் தீவுகளை ஆண்டுவந்த கவர்னர் ஜெனரலின் கட்டளைக்கிணங்க பசிபிக் பெருங்கடலிலிருந்த நாடுகளில் ஆய்வுப் பயணஞ் செய்ய அவர் புறப்பட்டார். அதன் பயனாக டாஸ்மானியா தீவைக் கண்டுபிடித்தார். பிறகு ஆஸ்திரேலியாவின் கடற்கரையோரமாகச் சென்று நியூஜி லாந்து தீவுகளைக் கண்டுபிடித்தார். ஆயினும், அவ்விடங்களில் டச்சுக்காரர்கள் குடியேற்றங்களை அமைக்க முயற்சி ஏதும் மேற் கொள்ளவில்லை.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர்களும் ஆஸ்தி ரேலியாவைப்பற்றித் தெரிந்துகொள்ளப் பல ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டார்கள். வில்லியம் டாம்பியர் என்பவர் ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரைப் பகுதியில் ஆய்வுப் பயணஞ் செய்தார். ஆனால், 18ஆம் நூற்றாண்டில்தான் குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. காப்டன் குக் (Captain Cook) என்பவர் 1768-ல் வெள்ளிக் கோள், கதிரவன் விட்டம் கடந்து செல்லுகின்ற வானிலைக் காட்சியைப் பதிவு செய்யும்பொருட்டுத் தென்கோளத்திற்கு அனுப்பப்பட்டார். சில காலம் நியுஜீலாந்து கடற்கரையோரமாகச் சுற்றுப்பயணம் செய்த பின்னர் மேற்கு நோக்கிப் பயணம் செய்தார். அதன் விளைவாக ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரைப் பிரதேசத்தை வந்தடைந்தார். கப்பல் செலுத்துவதில் மிகத் திறமை வாய்ந்தவராதலின், பவளத்தீவு களால் பல இன்னல்கள் ஏற்பட்டபோதும், கிழக்குக் கடற்கரைப் பகுதி

முழுவதையும் தன்னுடைய கப்பல்களைக்கொண்டு ஆராய்ந்துவிட்டார். 1770-ல் பாட்டனி விரிகுடா (Botany Bay) கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு ஏராளமான தாவர வகைகள் வளர்ந்திருந்த காரணத்தால், அதற்கு அப் பெயர் அளிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தின் தெற்குப் பாகத்திற்கு 'நியூ சவுத் வேல்ஸ்' (New South Wales) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. 1771-ல் குக் நாடு திரும்பினுர். அதற்குப் பின்னர் மேலும் இரண்டு கடற் பயணங்களை ஆஸ்திரேலியாவிற்கு நடத்திச் சென்ருர். நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா, சில பசிபிக் தீவுகள், அலாஸ்கா ஆகிய பகுதிகளை ஆராய்ந்து, அவைகளைப்பற்றிய குறிப்புகளைச் சேகரித்துக்கொண்டார். 1779-ல் ஹாவாய்த் தீவிலிருந்த சுதேசி மக்களுடன் அவர் சண்டையிட நேர்ந்தது. அச் சண்டையில் அவர் கொல்லப்பட்டார்.

குக் மேற்கொண்ட கடற்பயணங்களுக்குப் பிறகு ஆஸ்திரேலியா வில் குடியேற்றங்களை அமைக்க உடனடியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நியூ சவுத் வேல்ஸில் குடியேற்றங்களை ஏற்படுத்துமாறு அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனுல், பிரிட்டிஷ் அரசாங்கம் புதிய குடியேற்றங்களை அமைப்பதில் அக்கறை கொள்ளவில்லை. ஆனுல், அங்குக் குற்றவாளிகளைக் கொண்டு குடியேற்றங்களை அமைக்கத் தீர்மானித்தது. அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுவதற்கு முன்னர் பெருங்குற்றம் செய்தவர்களை அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பிவைத்தனர். 1783-ல் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் சுதந்திரம் பெற்றதால், அங்குக் குற்றவாளிகளை அனுப்ப இயலவில்லை. ஆகவே, அவர்களை ஆஸ்தி ரேலியாவிற்கு அனுப்பத் தீர்மானித்தது. 1787-ல் சுமார் 250 குற்றவாளிகளை ஏற்றிக்கொண்டு காப்டன் ஆர்தர் ஃபிலிப்ஸ் என்பவரின் தலைமையின்கீழ் ஒரு கப்பற்படை பாட்டனி குடாவை நோக்கிப் புறப்பட்டது. அக் குடியேறுபவர்கள் விவசாயத்தில் ஈடுபட அவர் களுக்குத் தேவையான விதை முதலியவைகளும் எடுத்துச்செல்லப் பட்டன. 1788-ல் பாட்டனி குடாவைச் சென்றடைத்தனர். அவ்விடம் குடியேற்றத்துக்குத் தகுதியானதாகக் காணப்படாததால், அங்கிருந்து அதற்கு வடக்கே இருந்த ஜாக்ஸன் துறைமுகத்திற்குச் சென்று குடியேறினுர்கள். அவ்விடத்தில்தான் சிட்னி (Sydney) நகரம் ஏற்படுத்தப்பட்டது. இக் குடியேறுபவர்களின் பாதுகாப்பிற்காகப் படைவீரர்கள் அனுப்பப்பட்டனர். அதன் பிறகு குற்றவாளிகளும், மக்களுரிமை உடையவர்களும் அங்குச் சென்று குடியேறினுர்கள். குற்றவாளிகள் அனைவரும் அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்படுத்தப் பட்டனர். இராணுவத்தில் காணப்படும் கடுமையான கட்டுப்பாடு அம் மக்கள்மீது சுமத்தப்பட்டது. குற்றவாளிகளைக் கொண்டு சாலை அமைத்தல் போன்ற பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மக்களுரிமையுடைய குடியேற்றத்தார்கள் பசுமையான இடங்களில் குடியேறினுர்கள். அவர்களுக்கு விவசாயத்திற்குப் போதுமான ஆட்கள் கிடைக்காததால், ஆடுமாடுகளைப் பரந்த புல்வெளிகளில் மேய்த்து வாழ்க்கையை நடத்திவந்தனர். குற்றவாளிகளுள் நன்னடத்தை யுடையவர்கள் மற்றவர்களுக்கு வேலை செய்ய அனுப்பப்பட்டனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம்வரை வேலை செய்யவேண்டும் என்றும், அதற்கென அவர்களுக்கு ஊதியத்தொகை கொடுக்கவேண்டியதில்லை என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட குற்றவாளிகள்மீது ஏனையோருக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப் பட்டிருந்தன. குறிப்பிட்ட காலம் வேலைசெய்த பிறகு அக் குற்றவாளிகள் உரிமையுடைய குடியேற்றத்தவர்களாக மாறினுர்கள். இவ்வாருக நியூ சவுத் வேல்ஸ் என்ற குடியேற்ற நாடு அமைக்கப்பட்டது. 1803-ல் டாஸ்மேனியாவில் குடியேற்றம் ஒன்று அமைக்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரேலியாவின் உட்பகுதியை ஆராய்ந்தறியப் பலர் முற்பட்டனர். முர்ரே, டார்லிங் நதிப்பிரதேசத்தைக் கண்டறிந்தார்கள். அவர்களில் தலைசிறந் தவர்கள் லாசனும் ஸ்டர்ட்டும் ஆவார்கள். புதியவாகக் கண்டுபிடித்த இடங்கள் ஆடுகளை வளர்க்கத் தகுதியானவை என்று பலர் ஆஸ்திரேலி யாவிற்கு வந்தனர். மேலும், 1824-ல் இரண்டு கம்பெனிகள் உருவாகின. குடியுரிமையுடையவர்களை ஆஸ்திரேலியாவில் குடியேறும் படி செய்வதே அக் கம்பெனிகளின் நோக்கம் ஆகும். 1827-ல் மக்களுரிமை பெற்றவர்களைக்கொண்டு ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரையில் குடியேற்றம் அமைக்கப்பட்டது. அக் குடியேற்றத்திற்குக் காரணமாயிருந்தவர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் நிலம் அளித்தது. அதற்குப் பதிலாகக் குடியேறுபவர்களைக் கொண்டுபோகும் செலவினை அவர்கள் மேற்கொள்ள இசைந்தார்கள். ஆனுல், அக் குடியேற்றம் சிறப்புற்று விளங்கவில்லை. ஏனெனில், பயிர்த்தொழிலும் மேய்ச்சல் தொழிலும் நடைபெறுதற்குரிய நிலம் அங்குச் சொற்ப அளவிலேயே இருந்தது.

1830-ல் மூன்று குடியேற்றங்கள் இருந்தன—நியூ சவுத் வேல்ஸ், டாஸ்மானியா, மேற்கு ஆஸ்திரேலியா. முதலிரண்டும் குற்றம் செய்தவர்களைப் பெரும் அளவில் கொண்டிருந்தன. மேற்கு ஆஸ்தி ரேலியா ஒன்றுதான் மக்களுரிமைகள் உடையவர்களை மட்டுமே கொண்டிருந்தது. அடுத்த இருபது ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவின் முக்கியப் பிரச்சினை மக்களுரிமை உடையவர்களை அதிக அளவில் குடியேறும்படி ஊக்கம் கொடுப்பதேயாகும். ஆஸ்திரேலியாவின் பழங்குடிகளைக் கண்டு பயந்துவிட்ட காரணத்தால் மக்கள் அங்குச் சென்று குடியேறுவதை விரும்பவில்லை என்று நாம் கூறமுடியாது.

அதற்கு மாருக அம் மக்கள் வெள்ளையர்கள் தங்காத இடங்களைத்தான் நாடினுர்கள். மேலும், அவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. அவ்வாறிருந்தும் மக்கள் பெருமளவில் அங்குச் சென்று குடியேருததற்குக் காரணம், அவ்விடங்கள் குற்றவாளிகளை அனுப்பப் படும் இடங்களாக அமைந்ததேயாகும். மேலும், இங்கிலாந்திற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே நெடுந்தூரம் இருப்பதால், எல்லோரும் அங்குச் செல்ல ஆர்வம் கொள்ளவில்லை. எனவே, அரசாங்கம் குடியேறு பவர்களுக்குச் சலுகைகள் காட்டியபோதும், குடியேறுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டது.

1830-க்குப் பிறகு ஆஸ்திரேலியாவின் பெரும் பகுதியைக் கண்டு ஆராய்துவிட்டனர். அவர்களில் தலைசிறந்தவர்கள் அயர் (Eyre), ஸ்டுவர்ட் (Stuart) என்பவர்களாவார்கள். மேலும், வேக்ஃபீல்டு அவர்களின் திட்டமும் மக்கள் பல இடங்களில் குடியேற ஊக்கமளித்தது. அத் திட்டத்தின்படி குடியேற்றங்களிலுள்ள நிலத்தை மிகக் குறைந்த அளவிற்கு விற்கவும், அவ்வாறு விற்பதால் கிடைக்கும் தொகையைக் குடியேற விருப்பமுடையவர்களுக்குக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தது. அத் திட்டத்தின்கீழ் வந்தவர்கள் குற்றவாளிகளுடன் வாழ விரும்பாத தால், புதிய இடங்களில் குடியேறினுர்கள். இவ்வாருக 1835-ல் விக்டோரியாவும், 1836-ல் தெற்கு ஆஸ்திரேலியாவும் ஏற்படுத் தப்பட்டன. 1852ஆம் ஆண்டுவரை விக்டோரியா, நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்தின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டிருந்தது. விக்டோரியாவில் முதன்முதலாக வந்து குடியேறியவர்கள் நியூ சவுத் வேல்ஸ், டாஸ் மேனியாஆகிய இடங்களிலிருந்த மக்களுரிமை பெற்றவர்களாவார்கள். இவர்கள் குற்றவாளிகளிடையே வாழ விரும்பாததால் வெளியேறி னுர்கள். தெற்கு ஆஸ்திரேலியா, வேக்ஸ்ஃபீல்டு திட்டப்படி அமைக்கப் பட்ட கம்பெனியால் ஏற்படுத்தப்பட்டது. சுமார் 16,000 பேர் வெகு விரைவில் அங்குக் குடியேறினுர்கள்.

புதியோராகக் குடியேறியவர்கள் குற்றவாளிகளை ஆஸ்திரேலியா விற்கு அனுப்பும் வழக்கத்தை நிறுத்துமாறு வேண்டினுர்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க 1840-ல் நியூ சவுத்வேல்ஸ் குடியேற்ற நாட்டுக்குக் குற்றவாளிகளை அனுப்புவது நிறுத்தப்பட்டது; 1853-ல் டாஸ்மேனியாவிற்குக் குற்றவாளிகளை அனுப்பும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

1850-க்குப் பிறகு மேலும் பலர் குடியேறத் தொடங்கினுர்கள். 1851-ல் நியூ சவுத் வேல்சிலும் விக்டோரியாவிலும் தங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. 1867-ல் குவீன்ஸ்லாந்திலும் தங்கம் தோண்டியெடுக்க ஆரம்பித்தனர். மேற்கு ஆஸ்திரேலியாவிலும் தங்கச் சுரங்கங்கள் சில

ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றின. தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டதால் நாட்டில் அமைதி குலையலாயிற்று. பல நகரங்களி னின்றும் மக்கள் சுரங்கங்கள் தோண்டப்பட்ட இடங்களுக்குச் சென்றனர். அதனால் தொழில் வளம் குறைந்தது. பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் பலரும் அங்குச் சென்றனர். ஆகவே, விவசாயம் சீர்கேடுற்றது. பொருள்களின் விலை ஏறியது. வழிப்பறி செய்து வாழ்பவர்களின் (bush rangers) எண்ணிக்கை அதிகரித்தது. முதலில் சுரங்கங்களை வெட்டுவதில் ஈடுபட்டவர்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட வர்களா யிருக்கவில்லை. அமைதியை நிலைநாட்டுவதும், தொழில், விவசாயம் ஆகியவைகளுக்கு உயிரூட்டுவதும் அரசாங்கத்தின் கவனத்திற்குரிய பிரச்சினைகளாயின. 1860-ல் 'சுரங்கக் கம்பெனிகளை அமைத்துச் சட்டபூர்வமற்ற சுரங்க வேலையில் ஈடுபட்டவர்களை வெளியேற்றியது. சுரங்க வேலை ஒழுங்காக அமைக்கப்பட்டதாலும், சுரங்க வேலையில் ஈடுபட்டிருந்தோர்க்கு உணவு, உடை முதலியன தேவைப்பட்டதாலும் விவசாயமும், தொழிலும் வளர ஆரம்பித்தன. போக்குவரத்து முறையும் சீர்படுத்தப்பட்டது. இருப்புப் பாதைகளை அரசாங்கமே அமைக்க நேர்ந்தது. அவ் வேலைக்கெனப் பொருள் செலவிடும் முறை ஊதாரித்தனமாக இருந்ததால், அரசாங்கத்தின் கடன் பெருகிற்று.

1890-க்குப் பிறகு மக்கள்.குடியேறுவது நின்றுவிட்டது. குடியேற்ற நாடுகள்—குவீன்ஸ்லாந்து தவிர—குடியேறுபவர்களுக்குச் சலுகை காட்டுவதை நிறுத்திக்கொண்டன. மேலும், வறட்சியின் காரணமாக மக்கள் அங்குச் செல்ல முற்படவில்லை. அதுவன்றியும் அங்குத் தொழி லாளிகள் பிரச்சினை மிகக் கடுமையாக இருந்தது. அதற்குக் காரணம் அநேக தொழிலாளிகள் சுரங்க வேலையில் ஈடுபட்டிருந்ததேயாகும். ஆதலின், தொழில்களுக்குத் தேவையான தொழிலாளிகள் இராமை யால் அதிகமான கூலி கேட்டனர். ஆனால், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கூலிகள் குறையலாயின. சுரங்கத் தொழிலாளிகள் நிலையான முறையில் அமைக்கப்பட்டதால், பிற தொழில்களில் ஈடுபடப் போதிய தொழிலாளிகள் இருந்தனர். ஆயினும், அவர்களுடைய ஊதியம் குறைக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆகவே, வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆனால், அவ் வேலைநிறுத்தம் வெற்றி பெற வில்லை. வேலைநிறுத்தத்தால் பெறமுடியாததை ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றி அடைய முயன்றனர். அதன் விளைவாகத் தொழிற் கட்சி உருவாகியது. சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் கட்சி யினர் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டதால், அவர்களுக்குத் தேவையான சட்ட திட்டங்களை வகுக்க முடிந்தது. அவைகளின் பயனாகத் தொழிலாளிகளின் வேலைநேரம், கூலிகள் போன்ற பிரச்சினை களுக்கு வேலைநிறுத்தமின்றி முடிவுகாண வழி ஏற்பட்டது. சில

தொழில்களில் தொழிலாளிகள், முதலாளிகள் ஆகியோருடைய பிரதிநிதிகளைக்கொண்ட கூட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டன. அக் குழு தொழில் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு முடிவுகாணும் பொறுப்புப் பெற்றிருந்தது.

ஆஸ்திரேலியாவின் மற்றொரு பிரச்சினை அரசியலைப்பற்றியதாகும். முதலில் ஏற்படுத்தப்பட்ட நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற நாடு குற்றவாளிகளின் குடியிருப்பாக அமைக்கப்பட்டதால், அதனுடைய ஆட்சி முறை சிறைச்சாலையின் ஆட்சிமுறையை ஏறத்தாழ ஒத்திருந்தது. மக்கள் ஆட்சியைச் சார்ந்த ஸ்தாபனங்கள் ஒன்றும் அமைக்கப்படவில்லை. காப்டன் மாக்குவாரி (Captain Macquarie) கவர்னராகப் பணியாற்றிய காலத்தில் (1809–1821), நியூ சவுத் வேல்ஸ் குற்றவாளி இருக்கையாக இருந்த நிலை மாறிக் குடியேற்ற நாட்டின் நிலையைப் பெற்றது. பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டன. பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. மக்களுரிமை பெற்றவர்கள் குடியேறத் தலைப்பட்டார்கள். ஆகவே, கவர்னர் சர்வாதிகாரியாகத் தொடர்ந்து இருக்கமுடியாது என்று கருதப்பட்டது. ஆகவே, 1824-ல் ஆட்சிக்குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. அக் குழுவின் அங்கத்தினர்கள் யாவரும் நியமனம் செய்யப்பட்டவர்களேயாவார்கள். 1828-ல் அச் சபைக்கு வரி விதிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. இதற்கிடையே நீதிமன்றங்களும் ஏற்படுத்தப்பட்டன. 1830-க்குப் பிறகு மக்கள் அதிக அளவில் குடியேறியதால், மக்கள்தொகையில் குற்றவாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. ஆகவே, அங்கிருந்த சபையை மக்களாட்சிக் கருத்துக்கு ஏற்றவாறு அமைத்தல் வேண்டுமென்று கருதப்பட்டது. அதன் விளைவாக அச் சபையின் அங்கத்தினர்களில் மூன்றில் இரு பங்கினர் மக்களால் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

1825ஆம் ஆண்டுவரை டாஸ்மேனியா, நியூ சவுத்வேல்சின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அந்த ஆண்டில் அதற்கெனத் தனியான சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. அச் சபையின் அங்கத்தினர்கள் முதலில் நியமனம் செய்யப்பட்டவர்களாயிருந்தனர். அச் சபைக்கும் வரி விதிக்கும் உரிமை வழங்கப்பட்டது. அங்கும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தெற்கு ஆஸ்திரேலியாவின் மக்கள்தொகை குறிப்பிட்ட அளவுக்கு அதிகமானல் அங்கு மக்களாட்சி முறை ஏற்படுத்தவேண்டும் என்று வேக்ஃபீல்ட் வேண்டினர். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு யாதோர் அதிகாரமும் இருக்கலாகாது என்றும் கூறினர். ஆனல், அக் கருத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்கவில்லை. ஆனல், ஆட்சிப் பொறுப்பை அரசாங்கத்திற்குப் பதில்சொல்லக்கூடிய கவர்னரிடமும், லண்டனில்

உள்ள கமிஷனர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், கவர்னர்கள் பணத்தை அநாவசியமாகச் செலவிட்டதால், அம் முறை 1842-ல் ஒழிக்கப்பட்டது. ஆதலால், மற்றக் குடியேற்ற நாடுகளில் நடைபெற்று வரும் ஆட்சிமுறை அங்கும் அமைக்கப்பட்டது.

குடியேற்ற நாடுகளில் மக்கள் உரிமை பெற்றவர்கள் குடியேறத் தொடங்கியதால், அவர்கள் பொறுப்பாட்சியை விரும்பினார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற முற்பட்டது. 1850-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட சட்டம் விக்டோரியாவையும் நியூசவுத் வேல்ஸையும் பிரித்து விட்டது. குவீன்ஸ்லாந்தும் பிற்காலத்தில் நியூசவுத் வேல்சினின்றும் பிரிந்து தனி நாடாக ஏற்பாடு செய்தது. குடியேற்ற நாடுகள் தங்களுடைய அரசியலமைப்பைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளவும் அனுமதி வழங்கியது. அச் சட்டத்தின்படி, நியூ சவுத் வேல்ஸ், டாஸ் மேனியா, விக்டோரியா, தெற்கு ஆஸ்திரேலியா ஆகியவை அதனதன் அரசியலமைப்பை ஏற்படுத்திக்கொண்டன. 1855ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் சட்டங்கள் வாயிலாக அவ்வமைப்புகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றன. அவ்வமைப்புகள் பிரிட்டனின் அரசியலமைப்பை ஏறக்குறைய ஒத்திருந்தன. 1859-ல் குவீன்ஸ்லாந்து தனி நாடாயிற்று. 1890-ல் மேற்கு ஆஸ்திரேலியாவிலும் குடி யேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், அங்கும் பொறுப் புள்ள ஆட்சி அமைக்கப்பட்டது. அதனால் சட்டசபையிலுள்ள பெரும் பான்மைக் கட்சியினரால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம் நடை பெறலாயிற்று.

ஆஸ்திரேலியாவின் அரசியலில் அடுத்த முன்னேற்றம் 1901-ல் ஏற்பட்டது. அவ்வாண்டின் தொடக்க நாளன்று ஆஸ்திரேலியாவில் தேசீயக் கொள்கையினை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்ட கூட்டாட்சி அரசு (federation) ஏற்படுத்தப்பட்டது. பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே ஆஸ்திரேலியா தேசீய நாடாக விளங்கவேண்டும் என்ற கருத்து வளரலாயிற்று. ஆகவே, கூட்டாட்சி சபையொன்று (Federal Council) ஏற்படுத்தப்பட்டது. ஆனால், நியூ சவுத்வேல்ஸ் அக் கூட்டாட்சி சபையில் அங்கம் வகிக்க விரும்ப வில்லை. ஏனெனில், அதனுடைய தடையிலா வர்த்தகக் கொள்கை பாதிக்கப்படும் என்று அது கருதியது. மேலும், அதற்குப் பிரச்சினை களைக் கலந்து ஆலோசிக்கக்கூடிய அதிகாரம் மட்டுமே வழங்கப் பட்டிருந்தது. மற்றும், அங்கிருந்த குடியேற்ற நாடுகள் ஒரே இனத் தவர்களைக் கொண்டிருந்தபோதிலும், அவைகள் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டிருந்தனவாதலால், அவைகள் எல்லாவற்றையும் ஒரு மைய ஆட்சியின் அதிகாரத்துக்குட்படுத்துவதென்பது கடினமான

செயலாக இருந்தது. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட சில மாறுதல்கள் அவைகளை ஒன்றாக்கிவிட்டன. போக்குவரத்துச் சாதனங்கள், குறிப்பாக இருப்புப்பாதை அமைப்புகள் பல்வேறு பகுதிகளை ஒன்றாக்கிவிட உதவி செய்தன. அதனால் மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், அவர்களுக்குள் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளவும் இயன்றது. அந் நாடுகளிடையே ஏற்பட்ட பிரச்சினைகள் ஏறக்குறைய ஒரேமாதிரியாக அமைந்திருந்தன. பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் தலைநகரங்களிலேயே வசித்தனர். அத் தலைநகரங்களே அந்த நாடு முழுவதையும் ஆட்சி செலுத்திவந்தது என்று கூறலாம். அந் நகரங்களில்தான் தொழில், வாணிகம் ஆகியவை பெருவாரியாக நடைபெற்றுவந்தன. தொழிற் சங்கங்களின் செல்வாக்கு பல இடங்களில் ஏறக்குறைய ஒரே அளவில் காணப்பட்டது. 1895-ல் விக்டோரியா குடியேற்ற நாட்டில் தொழிலாளிகளின் ஊதியத் தொகையை நிர்ணயிக்கத் தனிப்பட்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. அம் முறையை ஏனைய நாடுகளும் பின்பற்றத் தொடங்கின. இதனின்றும் அவர்களுக்கிடையே ஒரே மாதிரியான பிரச்சினை வளர்ந்திருந்தது என்பதை நாம் அறியலாம். ஆகவே, அத்தகைய மக்கள் ஒன்றுபட்டுக் கூட்டாட்சி அரசை ஏற்படுத்துவதில் வியப்பொன்றும் இல்லை எனலாம். மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆஸ்திரேலியாவிற்கு வெளியே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஆஸ்திரேலிய மக்களை ஒரு மைய ஆட்சிமுறை அமைக்கத் தூண்டின. ஆஸ்திரேலியாவிற்கு அண்மையிலுள்ள பசிஃபிக் தீவுகளை ஃபிரான்சு, ஜெர்மனிபோன்ற நாடுகள் கைப்பற்றி, அவைகளில் கப்பற் படைத் தளங்களை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டன. மேலும், 1867-ல் ஜப்பானில் ஏற்பட்ட புரட்சியின் பயனாக ஜப்பான் வெகு தீவிரமான முன்னேற்றத்தை அடைந்தது. அதன் பயனாக அது வல்லரசாக முயன்றது. தனித்திருந்து புதிய சூழ்நிலையில் வாழ இயலாது என்று ஆஸ்திரேலியக் குடியேற்ற நாடுகள் கருதின. அதன் விளைவாகக் கூட்டாட்சி அரசு அமைப்பதற்கான முயற்சிகள் 1891-ல் மேற்கொள்ளப்பட்டன. 1900-ல் மைய அரசு ஏற்படுத்த ஒப்பந்தம் ஆயிற்று. 1901-ல் ஆஸ்திரேலியா உலக தேசீயக் கொள்கையின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட நாடாக மாறியது.

அதன் பயனாக ஆஸ்திரேலியாவில் 6 குடியேற்ற நாடுகள் அடங்கிய —நியூ சவுத்வேல்ஸ், விக்டோரியா, தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, குவீன்ஸ்லாந்து, டாஸ்மேனியா—கூட்டாட்சி அரசு ஏற்படுத்தப்பட்டது. அவ்வமைப்பில் சேர்ந்துகொண்ட நாடுகள் பெருமளவில் சுதந்திரத்தைப் பெற்றிருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மைய ஆட்சிக்கு ஒருசில அதிகாரங்களே வழங்கப்பட்டன. அவ்வதிகாரங்களும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டன. இரு சபைகள் அடங்கிய

மைய சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. மேல் சபையில் கூட்டரசு உறுப்பு நாடுகளின் சமமான பிரதிநிதித்துவம் பெற்றிருக்குமாறும், கீழ்ச்சபை மக்களின் பிரதிநிதிகளை உட்கொண்டிருக்குமாறும் ஏற்பாடு செய்யப்பட்டது. பொறுப்பாட்சி ஏற்படுத்த வழிவகை செய்யப் பட்டது. ஆட்சிப்பொறுப்பு பிரதம மந்திரியின் கீழ் அமைந்த மந்திரி சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அம் முறை ஆஸ்திரேலியாவின் பிரதமர் தாய்நாட்டுப் பிரதமருடனும், ஏனைய காமன்வெல்த் நாடு களின் பிரதமர்களுடனும் கலந்து ஆலோசனை நடத்த வழி ஏற் படுத்தியது.

6. தொழிற் புரட்சியும் விவசாயப் புரட்சியும்

தொழிற் புரட்சி

பதினெட்டாம் நூற்ருண்டில் பெரிய தொழிற்சாலைகளை அமைத்து நீராவியின் ஆற்றலைக்கொண்டு இயந்திரங்களை இயக்கிப் பொருள்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் முறையை மேற்கொள்ளுவதற்குக் காரணமாயமைந்த மாறுதலைத் தொழிற்புரட்சி என்று நாம் கூறுகிருேம். அப் புரட்சி முதலில் பிரிட்டன் நாட்டில் தோன்றியது. பிறகு ஃபிரான்சு, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது. அப் புரட்சி மக்களின் வாழ்க்கையில் அநேக மாறுதல்களை உண்டாக்கியது. அம் மாறுதல்கள், நாம் இதுவரை படித்தறிந்த போர்கள், புரட்சிகள் ஆகியவை ஏற்படுத்திய விளைவுகளைவிட அதிகமான செயல் விளைவுகளை ஏற்படுத்தின. ஆகவே, இனி அப் புரட்சியைப்பற்றியும், அதன் விளைவுகளைப்பற்றியும் ஆராய்வோம்.

தொழிற் புரட்சி எந்த நாளில் தொடங்கியது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் திட்டவட்டமாகக் கூற இயலாத நிலையில் இருக்கிருர்கள். ஏனெனில், அப் புரட்சிக்குக் காரணமாய் அமைந்த இயந்திர சாதனங்கள் பலகாலமாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் பரிசோதனைகளின் விளைவாக உண்டாக்கப்பட்டனவே யன்றி ஒரே நாளில் ஏற்படுத்தப்பட்டவையன்று. ஆகவே, சரித்திர ஆசிரியர்கள் தொழிற் புரட்சி பதினெட்டாம் நூற்ருண்டிற்கு முன்னரே தொடங்கியது என்றும், அது பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பிரிட்டனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்ததென்றும், பத்தொன்பதாம் நூற்ருண்டில் மேலும் பல முன்னேற்றங்களை அடைந்தது என்றும், அப் புரட்சி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும் கூறுகிருர்கள்.

இயந்திரங்களைக் கொண்டு பொருள் ஆக்குதலே தொழிற் புரட்சியின் தனிச் சிறப்புக்கூறு ஆகும். அவ்வியந்திரங்களைக் கண்டுபிடிப்பதற்குப் பல காரணங்கள் துணை புரிந்தன. ஐரோப்பிய வியாபாரம்

பெருகியதால் ஆக்கப் பொருள்கள் பெருத்த அளவில் தேவைப்பட்டன. அத் தேவையை நிறைவேற்ற மக்கள் அவர்களுடைய அறிவைப் பயன் படுத்திப் பல இயந்திரங்கள் செய்தனர். அவ்வியந்திரங்களைக் கொண்டு முதன்முதலில் பருத்தி ஆடைகளை ஆக்க முற்பட்டனர். அதுவரை கழி சுற்று நூற்கோல் (spindle) என்று அழைக்கப்படும் சிறு குச்சிகளைக் கொண்டு மக்கள் நூல் நூற்றனர். அந் நூலைக் கைத்தறிகளிலிட்டுத் துணி நெய்துவந்தனர். பதினெட்டாம் நூற்றாண் டில் பல இயந்திரங்களைக் கொண்டு நூல் நூற்றும், ஆடைகள் நெய்தும் வந்தனர். 1733-ல் ஜான் கே (John Kay) என்பவர் எறிகுழல் (flying shuttle) என்னும் பொறியைக் கண்டுபிடித்தார். அதன் பயனாக நெய்யும் வேலை வெகு வேகமாக நடைபெற்றது. மேலும், பழைய கைத்தறிகள் மறையலாயின. அவைகளுக்குப் பதிலாகத் தண்ணீரின் உதவி கொண்டு இயக்கப்படும் தறிகள் ஏற்படுத்தப் பட்டன. லங்காஷயரில் அநேக நீரோடைகளுக்கருகே அவைகளைப் பொருத்தினார்கள். புதிதாக ஏற்படுத்தப்பட்ட எந்திரத் தறிகள் (Power-loom) நெய்யும் வேலையைத் துரிதப்படுத்தின. பழைய காலத்திய நூற்கோல்களைக் கொண்டு ஆக்கப்பட்ட நூல் இத் தறிகளு டைய தேவைக்குத் தகுந்தவாறு அமையவில்லை. 1764-ல் ஜேம்ஸ் ஹார்கிரீவ்ஸ் (James Hargreaves) என்பவர் பல நூற்கோல்களை ஒரே நேரத்தில் இயக்கக்கூடிய நூற்கும் இயந்திரம் (Spinning Jenny) ஒன்றைக் கண்டுபிடித்தார். அதன் பயனாக ஒருவர் ஒரே சமயத்தில் எட்டு நூற்கோல்களைச் சுழற்றி நூல் எடுக்க முடிந்தது. நாளடைவில் நூறு நூற்கோல்களை ஒரே நேரத்தில் ஒருவரே சுழற்றக்கூடிய இயந் திரத்தைச் செய்து முடித்தார். இதிலிருந்து தயாரிக்கப்பட்ட நூல் நுட்பமாக இருந்தது. அந்த நூற்கும் ஜென்னியை[1] அடிப்படையாகக் கொண்டு ஆர்க்ரைட் (Arkwright) என்பவர் தண்ணீரைக்கொண்டு இயக்கப்படும் நூற்பு இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்தார். இதற்கு நீர்ச்சட்டம் (Water Frame) என்று பெயர். இதன் உதவியால் அழுத்தமான நூல் நூற்க முடிந்தது. ஆர்க்ரைட் தொழிற்சாலை ஒன்றை அமைத்துப் பல நூற்றக்கணக்கான நீர்ச்சட்டங்களைத் தயாரித்தார். நூற்கும் 'ஜென்னியில்' தயாரிக்கப்பட்ட நூல் உறுதி யற்றதாக இருந்தது. 'நீர்ச்சட்டத்தில்' தயாரிக்கப்பட்ட நூல் மிகவும் சொரசொரப்பாக இருந்தது. ஆகவே, நுட்பமானதும் உறுதி யானதுமான நூலை நூற்கவல்ல இயந்திரத்தைக் கண்டுபிடிப்பதில் பலர் முனைந்தனர். இறுதியில் கிராம்டன் (Crompton) என்பவர் 'மியூல்' (Mule) என்னும் இயந்திரத்தை 1779-ல் கண்டுபிடித்து அத் தேவையை நிறைவேற்றிவைத்தார். நூற்பு இயந்திரங்கள் கண்டு

[1] ஜென்னி என்பது அவரது மனைவியின் பெயர். அதைக் கண்டுபிடிக்க அவர் மனைவி காரணமாயிருந்ததால் அதற்கு அப் பெயர் வைத்தார்.

பிடிக்கப்பட்ட பிறகு அதிக அளவில் நூல் உற்பத்தி செய்யப்பட்டது. அவை அனைத்தையும் நெய்யும் தொழிலில் பயன்படுத்த இயலவில்லை. ஆகவே, நெய்யும் தொழிலில் இயந்திரங்களைப் புகுத்தவேண்டிய தாயிற்று. கார்ட்ரைட் (Cartwright) என்பவர் தானே இயங்கும் தறியைக் கண்டுபிடித்தார். அதன் பிறகு அத் தறியை அனைவரும் பயன்படுத்தலாயினர்.

மேற்கூறிய இயந்திரங்கள் முதன்முதலில் பருத்தி ஆடைகளைத் தயாரிக்கவே பயன்படுத்தப்பட்டன. அவைகளை அக் காலத்தில் பிரிட்டனில் பருத்தி ஆடைகளை அநேகர் விரும்பினார்கள். ஆகவே, பருத்தி ஆடைகளைத் தயாரிப்பது லாபகரமாக இருந்தது. சிலகாலம் சென்றபின் அவ்வியந்திரங்கள் கம்பளி ஆடைகள், நாரால் செய்யப் பட்ட (linen) ஆடைகள், பட்டு ஆடைகள் ஆகியவற்றைத் தயாரிக்க வும் பயன்படுத்தப்பட்டன.

முதலில் இவ்வியந்திரங்கள் தண்ணீரின் உதவியைக் கொண்டு இயக்கப்பட்டு வந்தன. ஆகவே, பருத்தி ஆலைகள் ஆறுகள், சிற்று றுகள் ஆகியவற்றின் கரையோரங்களில் அமைக்கப்பட்டன. மேலும், காற்றைக் கொண்டும் இயந்திரங்கள் இயக்கப்பட்டு வந்தன. நீரும், காற்றும் இயந்திரங்களை இயக்கப் பயன்படுத்தும்போது சில இடை யூறுகள் தோன்றின. தண்ணீர் கிடைக்கும் இடத்தில்தான் ஆலைகளை ஏற்படுத்த முடியும். மேலும், காற்று வீசும்போதுதான் இயந்திரங்கள் வேலை செய்ய முடியும். எனவே, இந்த இடர்ப்பாடுகளை நீக்க மக்கள், முனைந்தனர். அதன் பயனாக நீராவியந்திரம் (steam engine) கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குக் காரணமாயிருந்தவர் ஜேம்ஸ் வாட் (James Watt) என்பவராவார். அவருக்கு போல்டன் (Boulton) என்பவர் மிகவும் உதவியாயிருந்தார். அவருக்கு முன்னரே பலவிதமான நீராவியந்திரங்களை மக்கள் பயன்படுத்தி வந்த னர். நியூ கோமென் (New Comen) என்பவர் கண்டுபிடித்த நீராவி யந்திரம் நிலக்கரிச் சுரங்கங்களினின்றும் நீரை அப்புறப்படுத்தப் பயன்பட்டது. 1769-ல் ஜேம்ஸ் வாட் மேம்பாடான மாறுதல்களைக் கொண்டிருந்த நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். முதலில் அவ் வியந்திரம் நிலக்கரிச் சுரங்கங்களினின்றும் நீர் இறைத்தல், உலைக் களத்திலுள்ள காற்றுப் பைகளை இயக்குதல் போன்ற வேலைகளில் கையாளப்பட்டு வந்தன. பிறகு அவைகளில் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்திப் பருத்தி ஆடை தயாரிக்கும் இயந்திரங்களை இயக்கு வதற்குப் பயன்படுத்தப்பட்டன. அச்சுத் தொழிலிலும் அது பயன் பட்டது.

இயந்திரங்களைக் கொண்டு ஆடைகள் தயாரிக்கவும், நீராவி யந்திரங்களைக் கொண்டு அவ்வியந்திரங்களை இயக்கவும் மக்கள்

முற்பட்டதால், நிலக்கரி, இரும்பு ஆகியவைகளைப் பெரிதளவில் பயன்படுத்தத் தலைப்பட்டார்கள். தொழிற்புரட்சிக்கு முன்னர் தொழிற்கருவிகளைச் செய்வதற்கும், தொழிலுக்கு வேண்டிய எரிபொருளைப் பெறவும், கட்டைகளையே பயன்படுத்தி வந்தார்கள். காடுகள் அழிவுற்றதால் கட்டைகள் விலை அதிகமாயிற்று. ஆகவே, இரும்பினுடைய விலையும் உயர்ந்திருந்தது. இரும்பின் விலையுயர்வுக்கு மற்றொரு காரணமுண்டு. இரும்பு உற்பத்தி முறை சரிவர அமைந்திருக்கவில்லை. எனவே, மக்கள் புதிய கருவிகளைச் செய்ய முற்பட்டபோது மரத்தினாலேயே அக் கருவிகளைச் செய்யலாயினர். நாளடைவில் நிலக்கரியைப் பயன்படுத்திக் குறைந்த செலவில் இரும்பு தயாரிக்க முற்பட்டார்கள். முதலில் நிலக்கரியை உபயோகித்து இரும்பை உருக்கும் முயற்சி பலனளிக்கவில்லை. ஆனால், ஆபிரகாம் டார்பி (Abraham Darby) என்பவர் நிலக்கரியினின்றும் தயாரித்த சுட்ட நிலக்கரியைக் (Coal) கொண்டு இரும்பு தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். அவருடைய மகன் அம் முறையை மேம்பாடான வகையில் திருத்தியமைத்தார். அதன் பயனாகச் சுட்ட நிலக்கரி எல்லாவிதமான உருக்கு வேலைகளுக்கும், சூடேற்றும் வேலைகளுக்கும் பயன்படுத்தப் பட்டது. அவர் காற்று ஊதும் துருத்தியைப் பயன்படுத்திச் சுட்ட நிலக்கரியிலிருந்து உண்டாகும் அனலை அதிகப்படுத்தினார். அத் துருத்தி நீரினால் இயக்கப்பட்டு வந்தது. அம் முறையை மேம்படுத்தும் வகையில் ஸ்மீடன் (Smeaton) என்பவர் காற்றடிக்கும் கருவியொன்றைத் தயாரித்தார். இரும்பினால் இயக்கப்பட்ட இக் கருவியும் தண்ணீரினால் இயக்கப்பட்டது. அந்தத் தண்ணீரை இறைப்பதற்கு நீராவி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. அதன் பிறகு வெப்பக் காற்றூட்டப் பட்ட உலையில் (Blast furnace) தயாரிக்கப்பட்ட தேனிரும்பில் கழிவுப் பொருள்கள் நிறைந்திருந்தமையால் உறுதியற்றதாக இருந்தது. எனவே, 1784-ல் அதற்கென அமைக்கப்பட்ட உலையில் தேனிரும்பை இட்டு, நன்றாகக் காய்ச்சி, அந்த நிலையில் இருக்கும்போது நன்றாகக் கலக்கிக் கழிவுப் பொருள்களை அகற்றி உறுதியான இரும்பைத் தயாரிக்கும் முறையை ஹென்ரி கோர்ட் (Henry Cort) என்பவர் கண்டுபிடித்தார். நீராவியந்திரங்கள் போன்றவைகளின் பாகங்களைக் கைகளில் பிடித்துக்கொண்டு சம்மட்டிகொண்டு அடித்து உருவாக்குவது வழக்கமாயிருந்தது. அப்பொழுது அவைகள் சிறிது வழுக்கிவிட்டாலும், அவைகளைப் பொருத்துவது மிக்க கடினமாக இருந்தது. ஆகவே, சறுக்கிவிடாமல் உறுதியாகப் பற்றிக்கொள்ளுவதற்குப் புதிய சாதனம் (Slide-trest) ஒன்று உண்டாக்கப்பட்டது. அதனால் இயந்திரங்களும் நீராவி இயந்திரங்களும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட ஏதுவாயிற்று. மேற்கூறிய சாதனங்களும் முறைகளும் இரும்புத் தொழிலில் கையாளப்பட்டதன் விளைவாக இரும்புத் தொழில் வளர்ச்சியுற்றது. அதனால் சுரங்கத் தொழிலும் பெருகிற்று.

தொழிற்புரட்சியின் விளைவாக நீராவியைக்கொண்டு போக்குவரவு சாதனங்களை இயக்கும் முறை கையாளப்பட்டது. அதைப்பற்றிக் கவனிக்கு முன்னர், புரட்சிக்கு முன்னர் போக்குவரவு சாதனங்களைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்வது அவசியமாகும். பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன் சாலைகள் மிகவும் சீர்கேடுற்ற நிலையில் இருந்தன. பொருள்கள் பெரும்பாலும் பொதிக்குதிரைகளின் துணைகொண்டு ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. கனமான பொருள்கள் பெரும்பாலும் கப்பல்களிலேயே கடல் வழியாக ஏற்றிச் செல்லப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் சாலைகளைத் திருத்தியமைப்பதில் ஒரு முன்னேற்றம் காணப்பட்டது. தல ஆட்சியினர் சுங்கவரி வசூலித்து அத் தொகையைச் சாலைகளைச் சீர்படுத்துவதற்குப் பயன்படுத்த அனுமதி பெற்றனர். ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டில்தான் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. அதனால் பிரயாணி வண்டிகள் வேகமாகச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அத்தகைய முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தவர்கள் மூவராவர்—மெட்காஃப் (Metcalfe), மெகாடம் (Macadam), டெல்ஃபோர்டு (Telford). மெட்காஃப் பல சாலைகளை உருவாக்குவதற்குக் காரணமாயிருந்தார். டெல்ஃபோர்டு தொங்கும் இரும்புப் பாலங்களை அமைத்துப் பெருமை பெற்றார். மெகாடம் என்பவர் சாலைகளை அமைக்கும் முறையில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தினார். சிறு கற்களைக்கொண்டு சாலைகளின் மேற்பரப்பைக் கெட்டியாகவும், சமமாகவும் அமைத்தார். அதன் விளைவாகப் பிரயாணிகளை ஏற்றிச்சென்ற குதிரை வண்டிகள் வேகமாகச் செல்லலாயின.

கால்வாய்களை வெட்டிப் போக்குவரவை அதிகப்படுத்தப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுரங்கத் தொழில் வளர்ச்சியின் காரணமாகப் பல கால்வாய்கள் வெட்ட நேர்ந்தது. நிலக்கரியைச் சீர்கேடுற்ற நிலையிலிருந்த சாலைகள் வாயிலாக எடுத்துச் செல்ல முடியாததே அதற்குக் காரணமாகும். பிரிட்ஜ்வாடர் (Bridgewater) என்ற சுரங்க முதலாளியொருவர் ஒர்ஸ்லியையும் மாஞ்செஸ்டரையும் இணைக்கும் கால்வாயை வெட்டினார். அதன் பயனாகக் குறைந்த செலவில் பொருள்களை ஏற்றிச்செல்ல இயன்றது. ஆகவே, வேறு பலரும் கால்வாய்களை வெட்டுவதில் முனைந்தனர். பல கம்பெனிகள் அதற்கெனத் தோன்றின. டெல்ஃபோர்டும் பல கால்வாய்களை வெட்டினார். புகைவண்டிகள் ஏற்படும்வரை இக் கால்வாய்களே நிலக்கரி, இரும்பு, புதிதாக ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளில் ஆக்கப்பட்ட பொருள்கள் ஆகியவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச்செல்லப் பெரிதும் பயன்பட்டுவந்தன.

இருப்புப்பாதை நிறுவனம் மனிதர்களுடைய வாழ்க்கையில் அநேக மாறுதல்களை ஏற்படுத்தியது. அத்தகைய நிறுவனம் அமைவ

தற்குக் காரணமாயமைந்தது நீராவி இயந்திரமேயாகும். முதலில் நீராவியந்திரம் தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களை இயக்கப் பயன்பட்டது என்று நாம் முன்னரே கவனித்தோம். நாளடைவில் அது வண்டிகளை இயக்கவும் பயன்பட்டது. அதற்குப் பெரிதும் உதவி யாக இருந்தவர் ரிச்சர்ட் டிரெவிதிக் (Richard Trevithik) என்பவ ராவார். அவர்தாம் முதன்முதலில் அதிக அழுத்தத்தைத் தாங்க வல்ல இயந்திரத்தைக் (high pressure engine) கண்டுபிடித்தார். அதை அடிப்படையாகக் கொண்டு அவர் 1804-ல் நீராவி வண்டி யொன்றைச் செய்தார். அதில் பலபேரை ஏற்றிக்கொண்டு சாலை வழி யாகச் சென்றார். அதன் பின்னர் ஜார்ஜ் ஸ்டீபன்சன் என்பவர் ஓர் இயந்திரத்தைத் தயாரித்தார். அதை இருப்புப்பாதையின் மேல் வண்டியை இழுக்கப் பயன்படுத்தினார். அதன் பயனாக இரண்டு இருப்புப்பாதை அமைப்புகள் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டன. ஸ்டாக்டன், டார்லிங்டன் இருப்புப்பாதை அமைப்பு, லிவர்பூல், மாஞ் செஸ்டர் இருப்புப்பாதை நிறுவனம். அவர் தயாரித்த ராக்கெட் என்ற இயந்திரம் பரிசுக்குடைய பொருளாயிற்று. அவருக்குப் பின்னர் அவரது மகன் ராபர்ட் ஸ்டீபன்சன் வேறு பல இருப்புப்பாதை நிறு வனங்களுக்கு உதவி செய்து வந்தார். அவர் இருப்புப்பாதைப் பாலங் களை அமைத்தார். மலைக்குடைவுகளை அமைக்கும் முயற்சியை புரூனல் (Brunel) மேற்கொண்டார். அதனால் இருப்புப்பாதையை விரிவுபடுத்த இயன்றது. முதலில் மக்கள் இருப்புப்பாதை வண்டிகளில் செல்லப் பயந்தனர். ஆனால், நாளடைவில் அவ் வண்டிகள் மிகுந்த செல்வாக் கையும் ஆதரவையும் பெற்றன. வியாபாரம் பெருகவும், உணவுப் பொருள்களை விரைவில் எடுத்துச்செல்லவும், கடிதப் போக்குவரத்தைத் துரிதப்படுத்தவும் இருப்புப்பாதை நிறுவனங்கள் பெரிதும் உதவின.

பதினெட்டாம் நூற்றாண்டிலேயே நீராவி இயந்திரத்தைக் கொண்டு கப்பலைச் செலுத்தும் முறையைக் கண்டுபிடிக்கச் சிலர் முயன்றனர். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் முன்னேற்றங்கள் பல இத் துறையில் ஏற்பட்டன. 1802-ல் ஸ்மிங்டன் (Smyngton) என்பவர் முதல் தடவையாக நீராவிக் கப்பல் ஒன்றை கிளைடு - போர்த்து கால் வாயில் செலுத்தினார். அதன் பிறகு லிவர்பூலுக்கும் கிளாஸ்கோவிற்கும் இடையே நீராவிக் கப்பல் செயற்படத் தொடங்கியது. ராபர்ட் ஃபுல்டன் (Robert Fulton) என்பவர் அமெரிக்காவில் ஹட்சன் நதியில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் நீராவிக் கப்பலைச் செலுத்தினார். எனவே, அவரை நடைமுறைப்படுத்தத்தக்க நீராவிக் கப்பலை அமைத் தவர் என்று குறிப்பிடலாம்.

பிறகு சாவன்னா என்னும் நீராவிக் கப்பல் அமெரிக்காவிலுள்ள சாவன்னா என்னுமிடத்திலிருந்து புறப்பட்டு அட்லாண்டிக் பெருங்கடல்

வழியாக இங்கிலாந்திலுள்ள லிவர்பூலுக்கு வந்து சேர்ந்தது. அதைத் தொடர்ந்து கனடாவின் ராயல் வில்லியம் என்ற கப்பல் 1833-ல் லண்டனுக்கு இருபத்தொரு நாட்களில் வந்து சேர்ந்தது. சில ஆண்டுகளுக்குப் பின் புருனல் தயாரித்த கிரேட்வெஸ்டர்ன் (The Great Western) என்னும் கப்பல் பிரிஸ்டலினின்றும் புறப்பட்டு நியூயார்க் நகரத்தைப் பதின்மூன்று நாட்களில் சென்றடைந்தது. அதன் பிறகு பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. பல கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளின் விளைவாகக் கப்பல் பயணம் துரிதமாகவும் சௌகரியமாகவும் அமைந்தது.

மின்சக்தியைக் கண்டுபிடித்ததாலும் பலவகைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. 1800-ல் வோல்டா மின்கலம் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் தடையின்றி மின் ஓட்டம் பெற இயன்றது. அதைப் பயன்படுத்திச் செய்திகளை அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1837-ல் தந்தி முறையை வீட்ஸ்டோன் என்பவர் நடைமுறைப்படுத்தினர். 1851-ல் இங்கிலாந்திலுள்ள டோவருக்கும், ஃபிரான்சிலுள்ள கலேக்கும் இடையே தந்தித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. அதனால் செய்திகள் விரைவாக அனுப்ப வழி ஏற்பட்டது. அதன் பிறகு அட்லான்டிக் பெருங்கடல் வழியாகக் கம்பிவடம் இடப்பட்டது. 1868-ல் அமெரிக்காவுடன் தந்தித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. அதன் பிறகு உலகத்தின் பல பகுதிகளும் கம்பி வடங்களால் இணைக்கப்பட்டன.

ஐரோப்பாவில் தொழிற் புரட்சி

ஐரோப்பாவில் தொழிற் புரட்சி 19ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. ஹாலந்து, பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் தொழிற் புரட்சி அந் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் ஐரோப்பாவின் முக்கியமான நாடுகளான ஃபிரான்சிலும், ஜெர்மனியிலும் புரட்சி ஏற்பட்டது. ருஷ்யா போன்ற நாடுகளில் புரட்சி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டது.

பிரிட்டனில் தொழிற் புரட்சி ஏற்பட்டிருந்த காலத்தில் ஃபிரான்சு நாட்டில் ஃபிரஞ்சுப் புரட்சி நடைபெற்றது. மேலும், ஃபிரஞ்சுக்காரர்கள் புரட்சிக்கு முன்னர் செய்பொருளைத் தயாரிப்பதில் வல்லவர்களாயிருந்தனர். ஆகவே, தொழிற்புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட்ட காலத்திலேயே ஃபிரான்சிலும் ஏற்பட வாய்ப்பில்லாதிருந்தது. 1825ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் தொழிற்புரட்சி இங்கு ஏற்பட்டது. அவ்வாண்டில் இயந்திரங்களை பிரிட்டனிலிருந்து ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அதனால் ஃபிரஞ்சுக்காரர்கள் தடையின்றி அவ்வியந்திரங்களை அவர்களுடைய நாட்டில் புகுத்த வழியேற்பட்டது. அவ்

இயந்திரங்களைத் தொழிற்சாலைகளில் புகுத்தும் முன்னர், கைகளினுலேயே பெரும்பாலும் நூற்புத்தொழிலும் நெய்யும் தொழிலும் நடைபெற்று வந்தன. இரும்பைக் கட்டைக்கரிகொண்டு தயாரித்து வந்தனர்.

ஃபிரான்சில் ஏற்பட்ட தொழிற்புரட்சி மூன்று தனிச் சிறப்புக் கூறுகளைப் பெற்றிருந்தது. முதலாவதாகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தொழிற் சங்கங்களில் (guild) சேரவேண்டியது அவசியமில்லை என்று ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், 1791-ல் தொழிற் சங்கங்கள் பெற்றிருந்த தனிச் சலுகைகளையும், ஏகபோக உரிமைகளையும் அழித்துவிட்டனர். இரண்டாவதாக, இயந்திரங்களைப் புகுத்திக் கைத்தொழிலை அழித்துவிட்டனர். நெசவு ஆலைகளும், இரும்புத் தொழில்களும் வளர்ச்சியடைந்தன. சுட்ட நிலக்கரி கொண்டு இரும்பு உருக்கப்பட்டது. இரும்பு உலைகள் பல தோன்றின. இரும்புத் தொழிலுக்குப் போதிய நிலக்கரி இல்லாததால் வெளிநாடுகளினின்றும் இறக்குமதி செய்யப்பட்டது. நீராவி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. மூன்ருவதாகப் போக்குவரத்துச் சாதனங்களில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் உயர்தரமான சாலைகளைப் பெற்றிருந்தது ஃபிரான்சு நாடேயாகும். ஆகவேதான் அங்கு இருப்புப்பாதை அமைப்பது தாமதப்பட்டது. எனினும், தொழிற் புரட்சியின் காரணமாகப் பல இருப்புப்பாதை நிறுவனங்கள் ஏற்பட்டன. நீர்வழிப் போக்குவரத்து ஃபிரான்சில் மிக உன்னத நிலையில் இருந்தது. அங்குள்ள நான்கு பெரிய நதிகளும், பல சிற்ருறுகளும், கால்வாய்களும் பொருள்களை எடுத்துச் செல்லப் பயன்பட்டன.

ஜெர்மனியில் ஏற்பட்ட புரட்சியும் ஏறக்குறைய இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் கருத்துகளைக் கொண்டிருந்தது. அங்கும் தொழிற் சங்கங்களின் உரிமைகளை அழிக்கவேண்டியதாயிருந்தது. 1869-ல் தொழிலில் ஈடுபட்டிருப்போர்களுக்குச் சுதந்திரம் வழங்கி அவர்களைத் தொழிற் சங்கங்களின் கட்டுப்பாடுகளினின்றும் விடுவித்தது. ஜெர்மனியில் தொழில் பெருக்கத்திற்குத் தடையாகப் பல முட்டுக்கட்டைகள் இருந்தன. ஜெர்மனியின் தொழில் பெருக்கத்திற்கு வேண்டிய மூலதனம் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் பெரும்பாலும் வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தனர். வரிச் சுமையும் அதிகமாக இருந்தது. நாட்டின் பொருளாதாரமுறை படைபலத்தைப் பெருக்கவும், போர் புரியவுமே பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் ஜெர்மானியர்கள் பிரிட்டிஷ்காரர்களின் துணைகொண்டு மேற்கூறிய இடர்ப்பாடுகளை ஓரளவு சமாளிக்கத் தலைப்பட்டனர். பிரிட்டனிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பிரிட்டிஷ்காரர்கள் அவர்களுடைய மூலதனத்தைக் கொண்டு தொழிற்சாலைகளை அமைத்தார்கள்.

அதன் விளைவாகத் தொழிற் துறையில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டது. நெசவுத் தொழில் சிறப்படைந்தது. ஆயினும், உலோகத் தொழிலின் அடிப்படையில்தான் ஜெர்மனியின் தொழில் வளம் பெருக லாயிற்று. ஜெர்மனியில் இரும்பும், நிலக்கரியும் பெருமளவில் தோண்டி யெடுத்தனர். அவ் விரு பொருள்களும் ஒரே இடத்தில் கிடைக்க வில்லை என்பது உண்மையே யானாலும், அவைகளை ஓரிடத்தினின்றும் மற்றோர் இடத்திற்கு எடுத்துச்செல்வது எளிதாக இருந்தது. மின்சாரத்தைச் சார்ந்த பொருள்களை உற்பத்தி செய்யும் துறையிலும், வேதியியலைச் சார்ந்த பொருள்களைத் (chemical goods) தயாரிப் பதிலும் வல்லுநர்களானார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் போட்டியிடத்தக்க முன்னேற்றத்தைப் பல தொழில் களிலும் பெற்றனர். போக்குவரத்துத் துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. சாலைகளை அமைப்பதில் ஜெர்மனி முதலில் கவனம் செலுத்தவில்லை. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சாலைகளை அமைப்பதில் அக்கறை காட்டப்பட்டது. நீர்வழிப் போக்கு வரத்தில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கால்வாய்கள் வெட்டப்பட்டன. நதி களுடன் இக் கால்வாய்கள் இணைக்கப்பட்டதால் போக்குவரத்து யாதொரு தடையின்றி நடைபெறலாயிற்று. இருப்புப்பாதை அமைப் பதிலும் அக்கறை செலுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே ஏற்படுத்தப்பட்ட இருப்புப்பாதை அமைப்பு நாளடை வில் அரசாங்கத்தின் பொறுப்புகளில் ஒன்றாகக் கருதப்பட்டது.

ருஷ்யா பெரும்பாலும் விவசாய நாடாகவே பல ஆண்டுகளாக இருந்து வந்தது. கைத்தொழில்களால் தயாரிக்கப்பட்ட பொருள்கள் அதற்குப் போதுமானதாக இருந்தன. பணம் படைத்தவர்கள் விரும்பிய பொருள்கள் வெளிநாடுகளினின்றும் வரவழைக்கப்பட்டன. 1890-க்குப் பின் தொழில் வளம் பெருகலாயிற்று. தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. அரசாங்கத்தின் பெருமுயற்சிகளால்தான் தொழில் ருஷ்யாவில் பெருகிற்று. மகா பீட்டர் ருஷ்யாவில் தொழில் வளர்த்த வரலாற்றினை நாம் ஏற்கெனவே படித்தறிந்தோம். ஆனால், அத் தொழிற்சாலைகள் எல்லாம் பழைய முறையைக் கையாண்டு வந்தன. மேலும், அவைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் கிடைப்பது அருமையாக இருந்தது. ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதால் நிலைமை சீரடையத் தொடங்கியது. வேலைக்கு ஆட்கள் போதிய அளவில் கிடைத்தனர். மேலும், நிலம் இழந்த பண்ணை நிலவுரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டதால் அவர்களிடம் தேவையான மூலதனம் இருக்க வாய்ப்பு ஏற்பட்டது. அவர்கள் அப் பணத்தைக் கொண்டு தொழிலில் ஈடுபடத் தொடங்கினார்கள். அயல்நாட்டினர்களும் அவர்களுடைய

மூலதனத்தை ருஷ்யத் தொழில்களில் ஈடுபடுத்தினர்கள். நெசவுத் தொழில் மிகவும் சிறப்படையத் தொடங்கியது. இரும்பு, சர்க்கரை போன்ற தொழில்களும் முன்னேற்றம் அடைந்தன. போக்குவரத்துச் சாதனங்கள் பெருகின. கால்வாய்கள் வெட்டப்பட்டன. இருப்புப் பாதைகளும் அமைக்கப்பட்டன. 1881-ல் அரசாங்கமே இருப்புப் பாதை அமைக்கும் பணியை மேற்கொண்டது. 1891-ல் டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதை ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற் கொள்ளப்பட்டது. அதன் விளைவாக பீட்ரோகிராட்டிலிருந்து பசிஃபிக் கரை வரை சுமார் 5,500 மைல்கள் ரெயில் வண்டியில் பிரயாணம் செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

விளைவுகள்

தொழிற் புரட்சியினுல் உற்பத்தி பெருகியது. முதலில் இப் புரட்சி பிரிட்டனில் ஏற்பட்டதால் நாட்டின் தேவைக்கு எடுத்துக்கொண்டது போக மற்றவை வெளிநாடுகளில் விற்க ஏற்பாடாயிற்று. கைத் தொழிலில் ஈடுபட்டிருந்த நாடுகள் பிரிட்டனில் இயந்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட விலை மலிவான பொருள்களை வாங்க முற்பட்டன. அதனுல் பிரிட்டனின் வியாபாரம் பெருகியது. வியாபாரப் பெருக்கம் பிரிட்டனின் செல்வச் செழிப்பை வளர்த்தது. ஆனுல், ஏனைய நாடுகளிலும் தொழிற் புரட்சி ஏற்பட்ட பிறகு பிரிட்டன் அந் நாடுகளுடன் போட்டியிட நேர்ந்தது. தொழிற் புரட்சியினுல் ஏனைய நாடுகளின் செல்வமும் பெருகிற்று.

தொழிற்புரட்சியினுல் தொழிற்சாலை முறை வளரலாயிற்று. தொழிற்புரட்சிக்கு முன்னர் தொழிலாளர்கள், குறிப்பாக நெசவாளர்கள் அவர்களுடைய வீடுகளிலேயே தங்கி வேலை செய்துவந்தனர். தொழிலுக்கு வேண்டிய கருவிகளையும் அவர்களே வைத்திருந்தனர். அம் முறைக்கு வீட்டுத் தொழில்முறை (domestic system) என்று பெயர். ஆனுல், தொழிற்புரட்சிக்குப் பின்னர் அம் முறை அழிவுற்றது. இயந்திரங்கள் புகுத்தப்பட்டதால் ஒரு தனிப்பட்ட தொழிலாளி அவருக்குத் தேவையான எல்லா இயந்திரங்களையும் வாங்குவதற்கு முடியாதுபோயிற்று. மேலும், அவைகளை அவர் வீட்டிலேயே அமைக்கவும் இயலாத காரியமாக ஆயிற்று. அத்துடன், அவைகளை எப்பொழுதும் இயக்கிக்கொண்டே இருக்க அவருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படவில்லை. ஆகவே, மிகுந்த பொருள் உடையோர் அவ் வியந்திரங் களை வாங்கி, பெரிய கட்டடத்திற்குள் அமைத்து, அங்குப் பலரை அழைத்து அவ்வியந்திரங்களை இயக்குமாறு ஏற்பாடு செய்தனர். பெரிய தொழிற்சாலைகளை அமைத்து அங்குத் தொழிலாளர்களை நியமித்துப் பெரிய அளவில் ஆக்கப்பொருள்களைத் தயாரிக்கும் முறையைத் தொழிற் சாலை முறை என்று கூறுகிறேம். நெசவுத்தொழில், இரும்புத்தொழில்

ஆகியவை இம் முறையைப் பின்பற்ற ஆரம்பித்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரிட்டனில் நூற்றுக்கணக்கான தொழிற் சாலைகள் ஏற்பட்டன. இவ்வாறே ஏனைய நாடுகளிலும் தொழிற் புரட்சிக்குப் பின்னர் தொழிற்சாலை முறை கையாளப்பட்டு வந்தது.

தொழிற்சாலை முறை பல தீமைகளைக் கொண்டிருந்தது. அம் முறையால் உற்பத்தி பெருகவே ஆக்கப் பொருள்களின் விலை குறைய லாயிற்று. வீட்டுத் தொழில்முறையைக் கையாண்டு வந்தவர்கள் பலர் அவர்களுடைய வேலைக்குத்தக்க ஊதியம் பெறமுடியவில்லை. நாட்டின் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டதால் பலர் 'வேலை யிழந்தனர். தொழிற்சாலை முறைக்குப் பெரும்பாலும் திறமையான தொழிலாளர்கள் தேவையில்லாததால் பெண்களையும், குழந்தைகளையும் அதிகமான அளவில் வேலைக்கு அமர்த்திக்கொண்டனர். ஏனெனில், அவர்களுக்கு ஆண்களைவிடக் குறைவான ஊதியமே கொடுக்கப்பட்டு வந்தது. சுரங்கங்களிலும் அவர்களே பெரும்பான்மையினராக இருந்தனர். தொழிற்சாலையில் நெடுநேரம் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். சாதாரணமாக ஒரு நாளில் ஆண்கள் 16 மணி நேரமும், பெண்கள் 14 மணிநேரமும், குழந்தைகள் 12 மணி நேரமும் வேலை செய்தனர். தொழில் அதிகாரிக்குத் தூங்கும் குழந்தை களை.அடிக்கவும் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. குடும்பப் பொருளாதார நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்தமையால் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்பவேண்டிய நிலை ஏற்பட்டது. வேலைக்குத் தகுந்த ஊதியமும் வழங்கப்படவில்லை. தொழிற்சாலையில் வசதிகள் குறைந்திருந்தன. இயந்திரங்கள் சரிவர மூடி ஆபத்து நேராதபடி அமைக்கப்படவில்லை. அன்று இருந்த நிலையில் அரசாங்கம் அவர்களுக்கு நன்மை பயக்கத்தக்க வகையில் தலையிடவில்லை. ஆனால், நாளடைவில் அந் நிலை மாறியது. அரசாங்கம் தொழிற்சாலைச் சட்டங்கள் ஏற்படுத்தித் தொழிலாளர்களின் நிலையைச் சீர்படுத்த முனைந்தது. மேலும், தொழிற்சாலைக்கு வெளியேயும் சீர்குலைந்த நிலை ஏற்படத் தொழிற்சாலை முறை காரணமாயிருந்தது. தொழிற்சாலைகள் பெரும் பாலும் மூலப் பொருள்கள் கிடைக்குமிடத்திலேயே அமைக்கப்பட்டன. ஆகவே, தொழிலாளர்கள் அச் சாலைகளுக்கு அண்மையில் வசிக்க லாயினர். அதனால் அநேக சீர்கேடுகள் நிறைந்த சேரிகள் வளர்ந்தன. அவர்கள் வாழ்ந்துவந்த இடங்கள் பல நோய்களுக்கு இலக்காயின. மேலும், அவ்விடங்கள் கேடுற்ற வாழ்க்கை வளர வழி செய்தன. பெண்கள் தொழிற்சாலையில் வேலை செய்திருந்தமையால் குடும்பத்தைக் கவனிக்க முடியாதுபோயிற்று. பலர் நடத்தை கெடுவதற்கும் அங்கு ஏற்பட்டிருந்த சூழ்நிலை காரணமாக அமைந்தது. குடிபோன்ற கொடிய வழக்கம் எல்லோரிடமும் காணப்பட்டது. பள்ளிக்குச் செல்ல முடியாத காரணத்தால் மக்களிடம் அறியாமை ஓங்கி வளர்ந்திருந்தது.

ஆனால், சில நன்மைகளையும் தொழிற்சாலை முறை ஏற்படுத்தியது. அது நாட்டின் பொருள்வளத்தைப் பெருக்கியது என்று முன்னரே கண்டறிந்தோம். முதலில் வேலையின்மையை உண்டாக்கியபோதிலும் நாளடைவில் பிரிட்டன் உலக அங்காடிகளைக் கைப்பற்றியதால் பொருள் உற்பத்தி அதிகப்படுத்த வேண்டியதாயிற்று. அதன் பயனாக வேலையின்மை ஒழிந்தது.

தொழிற்புரட்சியின் காரணமாக முதலாளித்துவம் வளர்ச்சி பெறலாயிற்று. நாட்டின் உற்பத்தி சாதனங்களை ஒருசிலரே சொந்தமாகப் பெற்று, அதன் வாயிலாக அவைகளைக் கட்டுப்படுத்தும் உரிமையைப் பெற்றிருக்கும் முறையை முதலாளித்துவம் என்று கூறுகிறோம். அந்த முறையைப் பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே மக்கள் அறிந்திருந்தனர். ஆனால், இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் முதலாளித்துவம் பெருமளவில் வளரலாயிற்று. பெரும் பணக்காரர்களே தொழிற்சாலைகளை நிறுவ வாய்ப்புப் பெற்றிருந்தனர். கட்டடங்களைக் கட்டுவிக்கவும், இயந்திரங்களை அவைகளில் பொருத்தவும், மூலப்பொருள்களை வாங்கவும், தொழிலாளர்களுக்கு ஊதியத்தொகையை வழங்கவும் வேண்டிய பணத்தைச் செலவிட்டுப் பின்னர் ஆக்கப் பொருள்களை விற்றுத் தொழிலில் ஈடுபடுத்திய முதலைத் திரும்பப் பெறும்வரை காத்திருக்க அவர்களால்தான் இயன்றது. பொருள்களை விற்பதால் ஏற்பட்ட இலாபம் அனைத்தும் அவருக்கே உரியதாயிற்று. அவருடைய நோக்கம் அதிக விலைக்குப் பொருளை விற்று லாபம் கொள்ள வேண்டும் என்பதேயன்றி, அவர்கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதன்று. பிரிட்டனின் வியாபாரம் பெருகியதாலும், அரசாங்கம் வியாபாரத் துறையிலும் தொழில் துறையிலும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி வந்ததாலும், அம் முதலாளிகள் பெரும்பொருள் சேர்த்துவிட்டனர். அப் பொருளைப் பயன்படுத்தி அரசியல் துறையில் செல்வாக்குப் பெறமுற்பட்டனர். இவர்கள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தும், ஒருசிலர் அவர்களுடைய பொருட் செல்வத்தைப் பயன்படுத்தி மேற்குடியாளர்களுடன் உறவு ஏற்படுத்திக் கொண்டார்கள். அதே நேரத்தில் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஒரு காரணமாகத் தொழிலாளர்கள் இழிந்த நிலையில் இருந்தனர். இயந்திரங்களைவிடத் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டு வந்தனர். முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றதால் தடையிலா வர்த்தகக் கொள்கை செல்வாக்குப் பெறலாயிற்று. நாட்டினுடைய வளம் பெருகுவதற்குத் தொழில் முதல்வர்களுக்கும் வியாபாரிகளுக்கும் முழு சுதந்திரம் அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதன் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுத் தடையிலா வர்த்தக முறை (Free Trade) ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறாகப் பொருளாதாரத்

துறையில் சுதந்திரம் ஏற்படுத்த முதலாளித்துவம் வழி செய்தது. அத்தகைய சுதந்திரம் ஏற்படுவதற்கு ஆதாம் ஸ்மித் (Adam Smith) போன்ற பொருளியல் நூலாசிரியர்கள் பெரிதும் உதவி செய்தனர் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அயல்நாடுகளின் போட்டி ஏற்படாதவரையில் இக் கொள்கை சரியானதாகத் தோன்றியது. ஏனைய நாடுகளில் தொழிற்புரட்சி ஏற்பட்டபோது பிரிட்டன் அவர்களுடன் போட்டியிட நேர்ந்தது. அதன் பயனாக அதனுடைய வியாபாரத்தை யும் தொழிலையும் பாதுகாக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. ஃபிரான்சில் முதலில் இந்தப் பொருளாதார சுதந்திரக் கருத்துச் செல்வாக்குப் பெறவில்லை. இங்கிலாந்தின் போட்டியினின்றும் தங்களைக் காத்துக்கொள்ள அரசாங்கத்தின் பாதுகாப்பு அவர்களுக்குத் தேவையாகக் காணப்பட்டது.

தொழிற்புரட்சி தொழிலாளர்கள் இயக்கம் வளருவதற்குப் பெரும் உதவி புரிந்தது. தொழிற்புரட்சியால் தொழிலாளர்கள் நிலை மிகவும் தாழ்ந்துவிட்டது என்றும், அதனால் அவர்கள் பல துன்பங்களை அடைய நேர்ந்தது என்றும் கண்டறிந்தோம். நாளடைவில் அவர்களுக் கிடையே ஒற்றுமை உணர்ச்சி வளரலாயிற்று. ஆகவே, பல தொழிற் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். அச் சங்கங்களின் வாயிலாக அவர்களுடைய குறைகளைப் போக்கிக்கொள்ளலாம் என்ற கருத்து வளர்ந்து வந்தது. ஆகவே, பல நாடுகளில் தொழிற்சங்கங்கள் வளர்ந்தன. ஆனால், ஃபிரான்சில் தொழிற்சங்கங்கள் தடை செய்யப் பட்டன. நாளடைவில் பிரிட்டனில் தொழிற்சங்கங்கள் செல்வாக்குப் பெற்றன. அரசாங்கம் அவைகளை அமைக்க அனுமதி வழங்கியது. அவைகளின் வாயிலாக அதிக ஊதியத்தையும், குறைந்த வேலை நேரத் தையும், சில சௌகரியங்களையும் பெற்றனர். பிரிட்டன் போன்ற நாடு களில் இச்சங்கங்கள் அரசாங்கத்தையே கைப்பற்றும் அளவிற்கு வளர்ந்திருக்கின்றன.

தொழிலாளர்கள் கூட்டுறவு முறையின் சிறப்புத் தன்மையை அறிந்துகொள்வதற்கும் தொழிற்புரட்சி உதவிசெய்தது. 1844-ல் பிரிட்டனிலுள்ள ராக்டேல் (Rockdale) என்னுமிடத்திலிருந்த சில தொழிலாளர்கள் ஒரு பலசரக்குக் கடையொன்றை ஆரம்பித்தார்கள். அதன் வாயிலாக அவர்களுக்கு வேண்டிய பொருள்களை நடுவர் இன்றிப் பெறலாமென்பதே அம் முயற்சியின் நோக்கமாகும். அதனால் வியாபாரிகளின் இலாபத்தைத் தடுக்கலாம் என்று எண்ணினர்கள். டென்மார்க்கில் ஆட்டுப் பண்ணையார்கள் கூட்டுறவு முறையைக் கையாண்டு வந்தனர். நாளடைவில் பொருள் உற்பத்தியிலும் அம் முறை கையாளப்பட்டது.

தொழிற்புரட்சியின் காரணமாக சோஷலிசக் கொள்கை (Socialism) வளர்ச்சி பெற்றது. தொழிற்சங்கங்கள் தடை செய்யப் பட்ட ஃபிரான்சில் தொழிலாளர்கள் பலர் இக் கொள்கையில் நம்பிக்கை வைத்தனர். சோஷலிசக் கொள்கை என்பது பொருள் உற்பத்தி சாதனைகள் அனைத்தும் எல்லோராலும் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்பதாகும். அக் கொள்கையின் அடிப்படை நோக்கம் தொழிலாளர் களுக்கு நல்ல சூழ்நிலைகளை உருவாக்கித் தரவேண்டுமென்பதாகும். பல நாடுகளிலும் அக் கருத்தை ஆதரித்த பெரியார்கள் தோன்றினார்கள். ஃபிரான்சில் லூயி பிளான் (Louis Blanc) என்ற சோஷலிஸ்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்துவந்தார். பிரிட்டனில் ராபர்ட் ஓவன் என்பவரை ஆங்கிலேய சோஷலிசத்தின் தந்தை என்று கூறுவதுண்டு. அவர் ஒரு தொழிற்சாலையின் அதிபர். நியூலானர்க்கு என்னுமிடத்தில் எல்லோரும் தொழிற்சாலையை எவ்வாறு அமைக்கவேண்டும் என்பதைக் காட்டத்தக்க வகையில் ஒரு தொழிற் சாலையை நிறுவினார். தொழில் நேரத்தைக் குறைத்தார். எல்லாவித சுகாதார வசதிகளையும் ஏற்படுத்தியிருந்தார்.

தற்கால சோஷலிசக் கொள்கையின் தலைசிறந்த ஆசிரியர் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) என்பவராவார். அவர் போதித்த சோஷலிசக் கொள்கையை ‘கம்யூனிசம்’ என்று கூறுகிறோம். அவர் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து அரசியல் அதிகாரத்தைப் பலாத்கார முறையைக் கொண்டு கைப்பற்றவேண்டும் என்றும், எல்லாவித உற்பத்தி சாதனங்களையும் மக்களின் பொதுச் சொத்தாக மாற்றிவிட வேண்டும் என்றும் கூறினார். அவருடைய நூல்களில் சிறந்தது ‘தி காபிடல்’ (The Capital) என்பதாகும். பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் அவருடைய கொள்கையை ஆதரிப்பவர்கள் உண்டு. சில நாடுகளின் ஆட்சி அவருடைய ஆதரவாளர்களின் கைகளில் இருக்கின்றது. அந் நாடுகளில் முதன்மையானவை ருஷ்யாவும் சீனாவு மாகும். அதைப்பற்றிப் பின்னர் கவனிப்போம்.

தொழிற்புரட்சி அரசியல் துறையில் வேறு சில மாற்றங்களுக்கும் காரணமாயமைந்தது. பிரிட்டனில் பாராளுமன்றத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற இயக்கம் இப் புரட்சியினால் வலிமை அடைந்தது. புரட்சியின் காரணமாக அதுவரை மக்கள் அதிகமாக வாழாத வடக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் தொழிற்சாலைகள் பெருமளவில் ஏற் படுத்தப்பட்டதால் அவ்விடங்களுக்குச் செல்லத் தொடங்கினார்கள். அத னால் கிழக்கு, தெற்குப் பகுதிகளில் மக்கள் தொகை குறையலாயிற்று. புதிய நகரங்கள் உருவாயின. பழைய நகரங்கள் அழிந்தன. தொழிற் புரட்சியினால் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இத்தகைய மாற்றங்களினால் ஓட்டுரிமை வழங்குவதிலும், பாராளுமன்றத்திற்கான

தேர்தல் தொகுதிகளை அமைப்பதிலும் திருத்தங்கள் தேவைப்பட்டன. ஃபிரான்சிலும் ஏனைய நாடுகளிலும் தொழிற்புரட்சி முற்போக்குக் கருத்துகள் வளருவதை ஊக்குவித்தது.

தொழிற்புரட்சி விவசாய நாடாக இருந்த பிரிட்டனைத் தொழில் நாடாக மாற்றி அமைத்தது. பிரிட்டனில் தொழில்துறையே மேம்பட்டு விளங்கியது. ஆனால், ஃபிரான்சில் இத்தகைய மாறுதல் ஏற்படவில்லை. ஏனெனில், அங்குக் குடியானவர்கள் தொகை அதிகமாக இருந்தது. மேலும், பிரிட்டனில் சிறுபான்மையினரே நிலச் சொந்தக்காரர்களாய் இருந்தனர். ஃபிரான்சில் அவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததால் அவர்கள் வேலைதேடி நகர்ப்புறம் போகத் தலைப்படவில்லை. விவசாயப் புரட்சி என்பதன் பொருள் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

விவசாயப் புரட்சி : பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டனில் விவசாயத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. அம் மாற்றங்களை நாம் விவசாயப் புரட்சி என்று கூறுகிறோம். விவசாயப் புரட்சியைப்பற்றி அறிந்துகொள்ளும் முன்னர் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டனில் விவசாயத்தின் நிலையைப்பற்றி அறிந்துகொள்வதவசியமாகும். பிரிட்டன் ஒரு விவசாய நாடாகவே இருந்தது. பயிரிடுதலே பெரும்பான்மையினருடைய தொழிலாக இருந்தது. நகரங்களின் எண்ணிக்கையும், அவைகளிலிருந்த மக்கள்தொகையும் குறைவாகக் காணப்பட்டன. பழைய முறைகளைக்கொண்டே நிலங்களைப் பயிரிடப்பட்டு வந்தன. பிரிட்டனின் நிலப்பரப்பில் பாதிதான் பயிரிடப்பட்டது. அக் காலத்தில் மூன்று வயல் திட்டம் (three field system) நடைமுறையிலிருந்தது. அதன்படி ஓர் ஆண்டில் மூன்றில் இரண்டு பங்கு நிலமே பயிரிடப் பட்டது. மூன்றாவது பகுதி இழந்த சத்தைப் பெறுவதற்காகப் பயிரிடப் படாமலிருந்தது. மேலும், நிலங்களை அடைப்பிலா வயல் முறையைக் (open field system) கையாண்டு பயிரிட்டு வந்தனர். அதன்படி ஒவ்வொருவருடைய நிலங்களும் அடைக்கப்படாமல் இருந்தன. ஆகவே, அவைகள் பயிரிடாத காலத்தில் தரிசு நிலம்போலக் கையாளப் பட்டு வந்தன. விவசாயப் புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் இவ்விதமாக ஆதாரித்தனமான முறைகளைக் கையாண்டு அவர்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களை உற்பத்தி செய்துவந்தனர். ஆனால், சில காரணங்களால் விளைச்சலைப் பெருக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டது. நெப்போலியனுக்கு எதிராக மேற்கொண்ட போரின்போது உணவுப் பொருள்களின் விலை ஏற ஆரம்பித்தது. ஆகவே, மக்கள் உணவு உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடலாயினர். மேலும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிலம் படைத்தவர்களே செல்வாக்குப் பெற்றிருந்ததால், விவசாயம் இலாபகரமாக அமையும்பொருட்டு அது பல

சட்டங்கள் இயற்றியது. அவைகளில் முக்கியமானவை தானியச் சட்டங்களாகும் (Corn Laws). தொழிற்புரட்சி காரணமாக மக்கள் தொகை பெருகிற்று. தொழிலாளர்கள் சிறுவயதிலேயே மணம் செய்து கொண்டார்கள். ஆகவே, அவர்கள் பெரிய குடும்பங்களுக்குத் தலைவர்களானார்கள். ஆக்கத் தொழில்களில் பெரும்பான்மையோர் ஈடுபட்டதாலும், விவசாயத் தொழில் குன்றியது. எனவே, விளைச்சலைப் பெருக்கப் புதிய முறைகளைக் கையாள நேர்ந்தது.

அம் முறைகளைக் கண்டுபிடிக்கக் காரணமாயிருந்தவர்களில் ஒருவர் ஜெத்ரோ டல் (Jethro Tull) என்பவராவர். அவர் விதைகளை விதைக்கும் கருவியொன்றைக் கண்டுபிடித்தார். அக் கருவிக்கு 'டிரில்' (Drill) என்று பெயர். அக் கருவி விதைகளை விதைப்பதற்கான சிறு கால்வாய்களை அமைத்து, அவற்றில் விதைகளை இட்டு, பிறகு மண்ணை மூடிவிடும். அவர் மேற்கொண்ட முறைகளையும் கருவிகளையும்பற்றிப் புத்தகம் வாயிலாகப் பிறருக்கு எடுத்துரைத்தார்.

விவசாயப் புரட்சியில் பங்குகொண்ட மற்றொருவர் டவுன்ஷெண்ட் (Townshend) என்பவராவர். அரசியலில் ஈடுபட்டிருந்த இவர் 1730-ல் அத் துறையினின்றும் விலகி விவசாயத்தில் அக்கறை கொண்டிருந்தார். அவர் 'டல்' ஏற்படுத்திய புதிய முறைகளைக் கையாண்டார். அவர் நிலங்களைப் பயிரிடாமல் வைக்கும் மூன்று வயல் முறையை மாற்றியமைக்கவும் காரணமாயிருந்தார். ஒரு குறிப்பிட்ட நிலத்தில் முதலில் கோதுமையையும், பிறகு டர்னிப்ஸ் என்னும் கிழங்குவகைப் பயிரையும், அதன் பிறகு கிளோவர் என்னும் ஒருவகைப் புல்லையும், மறுபடியும் கோதுமையையும் மாற்றி மாற்றிப் பயிரிடுவதால் எல்லா நிலங்களையும் எக்காலத்திலும் பயிரிடலாம் என்றும், டர்னிப்ஸ் போன்ற பயிர்களைப் பயிரிடுவதால் வளங்குறையாது என்றும், கிளோவர் போன்றவற்றைப் பயிரிடுவதால் மாட்டுக்குத் தீவனம் பெறலாம் என்றும் பரிசோதனை மூலமாகக் கண்டறிந்தார். அதனால் மூன்று வயல் திட்டம் மறைந்தது. மேலும், குளிர்காலத்தில் மாட்டுக்குத் தீவனம் பெறமுடியாத காரணத்தால் அவைகளைக் கொன்று அவைகளின் இறைச்சியை உலர்த்தி வைத்துக்கொள்ளும் பழக்கம் மறைந்தது.

விவசாயப் புரட்சியில் பங்குகொண்ட மற்றொருவர் இராபர்ட் பேக்வெல் என்பவராவர். அவர் ஆடுமாடுகளை வளர்ப்பதில் சிறந்த முறைகளைக் கையாண்டு பலனடைந்தார். அவர் உயர்தரமான ஆடுகளை வளர்ப்பதில் சிறப்புப் பெற்றார். அத்தகைய ஆடுகள் மிகத் தேவைப்படுவனவாக விளங்கின. அதன் பயனாக நகரத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கு வேண்டிய இறைச்சி, பால் போன்ற பொருள்களை எளிதில் பெறலாயினர்.

ஆர்தர் யங் என்பவரும் விவசாயப் புரட்சியில் ஆர்வங்காட்டியவர்களுள் ஒருவராவர். அவர் ஃபிரான்சு போன்ற இடங்களில் சுற்றுப் பயணம் செய்து ஆங்காங்கே அவர் கண்டறிந்த மேற்கொள்ளத்தக்க விவசாய முறைகளைக் குடியானவர்களுக்கு எடுத்துக்காட்டினார். அவர் அநேக புத்தகங்களை எழுதிப் புதிய முறைகளை மக்களிடையே பரப்பினார். விவசாயத்தைப்பற்றிய மாதப் பத்திரிகையொன்றையும் அவர் நடத்திவந்தார்.

புதிய முறைகளைக் கையாளுவதில் அநேக இடையூறுகள் இருந்தன. அவைகளைச் சிறு பண்ணைகளில் இலாபகரமாகப் பயன்படுத்த இயலாது. அடைப்பிலா வயல் முறையும் அவைகளுக்கு ஏற்றனவாகக் காணப்படவில்லை. அம் முறை வழக்கில் இருந்ததால் எல்லாக் குடியானவர்களும் ஒன்று சேர்ந்து புது முறைகளைக் கையாள வேண்டிய நிலை ஏற்பட்டது. பழைய முறைகளைக் கையாளும் பழக்கத்தை விட்டுவிடுவதற்கு மனமில்லாதவர்கள் ஓரிருவர் இருப்பினும் புது முறைகளைக் கையாளுவது மிகவும் கடினமாகக் காணப்பட்டது. மேலும், குடியானவர்களின் நிலங்கள் பல இடங்களில் சிதறிக்கிடந்தன. அதுமட்டுமன்றிப் பயிரிடத் தக்க நிலத்தின் ஒரு பகுதி வரப்புகளாக இருந்தது. ஆகவே, மேற்கூறிய இடையூறுகளை அகற்றினாலொழியப் புதிய முறைகளைக் கையாளுவது கடினமாகத் தோன்றியது. ஆகவே, பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அடைப்புகளை உடைய வயல் முறையைப் புகுத்தப் பலர் வேண்டினார்கள். ஆதாம் ஸ்மித் போன்ற பொருளியல் ஆசிரியர்களும், ஆர்தர் யங் போன்ற விவசாய மேதைகளும், பல பண்ணையார்களும் ஆதரவு அளிக்கவே பாராளுமன்றம் நில அடைப்புச் சட்டங்களை நிறைவேற்றியது. அச் சட்டங்கள் வாயிலாகவும், சம்பந்தப் பட்டவர்களின் ஒப்புதல்களின்பேரிலும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அடைக்கப்பட்டன. ஒவ்வொரு குடியானவருக்கும் அவருக்குப் பல இடங்களில் சிதறிக் கிடந்த நிலங்களின் பரப்புக்குத் தக்கவாறு ஒரே நிலப் பகுதியாக அளிக்கப்பட்டது. அநேக குடியானவர்கள் தங்களுக்கு நிலத்தின்மீதிருந்த உரிமையை நிலைநாட்ட முடியாது போயிற்று. ஆகவே, அத்தகையோர் பல ஆண்டுகளாகப் பயிரிட்டு வந்த நிலத்தை இழந்தார்கள். மேலும், அடைப்புகளைப் போடுவதற்கு ஏற்படும் செலவு அதிகமாயிருந்ததால் பல சிறு நிலங்களை உடையவர்கள் அவற்றை விற்கவேண்டியதாயிற்று. மேலும், தரிசான நிலங்களும் அடைக்கப்பட்டுவிட்டதால் அவ்விடங்களில் அவர்கள் ஆடு மாடுகளை மேய்க்கும் உரிமையையும், கட்டைகளை வெட்டும் உரிமையையும் இழந்தனர். அதனால் அம் மக்கள் மிகவும் துன்பமுற்றனர். ஆனால், இங்கிலாந்தில் உயர்ந்த விளைவுகளை உண்டாக்கத்தக்க பண்ணைகள் உருவாவதற்கு அது காரணமாயிருந்தது என்பதை நாம்

மறுக்க முடியாது. மேலும், விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மக்களில் பெரும்பாலோர் அவர்களது கிராமங்களைவிட்டு நகரங்களில் வேலைதேட முற்பட்டனர். வேறு சிலர் அமெரிக்கா போன்ற நாடுகளிலும், குடியேற்ற நாடுகளிலும் சென்று தங்கினர். ஏனையோர் அங்கேயே தங்கி நாள்தோறும் ஊதியம் பெறும் விவசாயத் தொழிலாளர்களாக மாறினார்கள். விவசாயப் புரட்சிக்குப் பின்னர் பெருநிலச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டார்கள். அந் நிலத்தைக் குத்தகைக்காரர்கள் லாபம் பெறும் நோக்கத்துடன் பயிரிட்டு வந்தனர்.

விவசாயத்தில் ஈடுபட்டிருந்த பிரிட்டன், தொழிற்புரட்சியின் காரணமாகத் தொழில் துறையில் சிறந்த நாடாக விளங்கத் தொடங்கியது. ஆனால், ஃபிரான்சு, தொழிற்புரட்சி ஏற்பட்டும் விவசாயத் துறையில் சிறந்த நாடாகவே இருந்து வந்தது. பாதிக்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர். விவசாயத் துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பயிர்த்தொழிலில் ஈடுபட்டு இருந்தவர்கள் அடிமைக் குடிகளாக இருந்தனர். அந்த அடிமைக் குடிகளுக்குச் சுதந்திரம் வழங்கியதே ஃபிரஞ்சு விவசாயப் புரட்சியின் முதலாவது தனிச் சிறப்புக்கூறு ஆகும். ஃபிரஞ்சுப் புரட்சியின்போது அவ்வடிமைத் தனம் ஒழிக்கப்பட்டது என்று நாம் முன்னரே கண்டறிந்தோம். சிறு நில உடைமைகள் வளர்ச்சி பெற்றதை நாம் ஃபிரஞ்சு விவசாயப் புரட்சியின் இரண்டாவது தனிச் சிறப்புக் கூறாகக் கொள்ளலாம். ஃபிரஞ்சுப் புரட்சியின்போது நாட்டை விட்டு வெளியேறிய பிரபுக்களின் பண்ணை நிலங்களைச் சிறுசிறு துண்டுகளாகப் பிரித்து நிலமற்றவர்களுக்குக் கொடுத்தார்கள். மேலும், நிலங்களைச் சிறு பகுதிகளாகவே விற்கவேண்டும் என்று ஃபிரஞ்சுப் புரட்சியின் போது நிறைவேற்றப்பட்ட சட்டம் ஏற்பாடு செய்தது. இயந்திரங்களைக் கொண்டு பயிர்த்தொழில் நடத்துவதும், முறைப்படியமைந்த விவசாய முறைகளை மேற்கொள்ளுவதும், ஃபிரஞ்சு விவசாயப் புரட்சியின் மூன்றாவது தனிச்சிறப்புக் கூறாகும். பிற நாடுகளில் கையாளப்பட்ட பயிர் வகைகளை மாற்றிப் பயிர் செய்யும் முறையை நெப்போலியன் ஃபிரான்சில் புகுத்தினார். 1860-க்குப் பிறகு இயந்திரங்களைக் கொண்டு பயிர் செய்யலானார்கள். விஞ்ஞான முறைப்படியமைந்த எருவிடும் முறையைக் கையாண்டனர். அரசாங்கமும் பலவிதங்களில் விவசாய வளத்தைப் பெருக்க முற்பட்டது. காப்பு வரிகளை விதித்து ஃபிரஞ்சு விவசாயிகளை அயல்நாட்டவரிடமிருந்து காப்பாற்றியது. அரசாங்கத்தில் விவசாயத்துறை யொன்று ஏற்படுத்தப்பட்டது. விவசாயப் பாடத்தைக் கற்பிக்கும் பள்ளிகள் ஏற்பட்டிருந்தன. தேசிய விவசாயக் கல்விக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. கூட்டுறவு முறை பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. இயந்திரக் கருவிகளைக்

கூட்டுறவு ஸ்தாபனங்கள் வாயிலாக விவசாயிகள் பெற்றனர். அவைகள் பெரும்பாலும் விவசாயப் பொருள்களை விற்பதும், அப் பொருள் களைச் செய்பொருள்களாக மாற்றுவதும் போன்ற துறைகளிலேயே சிறப்புற்று இருந்தன. விவசாயம் சார்ந்த கழகங்கள் பல அக்காலத் தில் புதிய விவசாய முறைகள் மக்களிடம் செல்வாக்குப் பெற வழி செய்தன.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஜெர்மனி விவசாயத் துறையில் சிறப்புற்ற நாடாகவே இருந்தது. ஆனால், அந் நூற்றுண் டின் பிற்பகுதியில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் காரணமாக மூன்றில் ஒரு பங்கு மக்களே விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். ஜெர்மனியின் விவசாயப் புரட்சியின் கீழ்க்கண்ட தனிச் சிறப்புக் கூறுகளைப் பெற் றிருந்தது. விவசாயத் துறையில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. முறையாக அமைந்த முறைகள் கையாளப்பட்டன. மூன்று வயல் திட்டம் மறைந்துவிட்டது. பயிர் வகைகளை மாற்றிப் பயிர் செய்யும் முறை கையாளப்பட்டது. இலாபகரமான பயிர் வகைகளையே அதிக அளவில் பயிர் செய்தனர். கூட்டுறவு முறையும் கையாளப்பட்டு வந்தது. ஜெர்மனியின் ஒரு பகுதியில் சிறு பண்ணைகளும் மற்றப் பகுதியில், பெரும் பண்ணைகளும் ஒரே நேரத்தில் வளர்ச்சியுற்றன.

ருஷ்யாவில் விவசாயப் புரட்சி அடிமைக் குடியானவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பெற்றபோது ஏற்பட்டது என்று நாம் கூறலாம். 1861-ல் ருஷ்யப் பேரரசர் ஒரு கட்டளை வாயிலாக அடிமைக் குடியான வர்களுக்கு உரிமைகளை வழங்கினர். அத்துடன் அவர்கள் பயிரிட்டு வந்த நிலத்தின் ஒரு பகுதியும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. ஆனால், அந் நிலத்திற்காக அவர்கள் ஒரு தொகையைப் பண்ணைச் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. நில உடைமை உரிமை பெரும்பாலும் ஊர்ச் சமுதாயத்திற்கு அளிக் கப்பட்டது. விவசாய முறையில் சிறப்பான மாற்றங்கள் எதுவும் பத் தொன்பதாம் நூற்றுண்டில் ஏற்படவில்லை. குடியானவர்களில் பெரும் பான்மையினர் ஏழைகளாக இருந்தமையால் அவர்கள் இயந்திரங் களையும், உயர்ந்த ரக எருக்களையும், விதைகளையும் வாங்கிப் பயன் படுத்த இயலவில்லை. பெரும் பணக்காரர்களின் பண்ணைகளில்தான் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், போதிய அளவு விவசாயத் தொழிலாளிகள் கூலி வேலை செய்ய முன்வரவில்லையாதலால் அங்கு விவசாயம் ஓரளவு பாதிக்கப்பட்டது. ஆயினும் இரும்புக் கலப் பைகள், 'டிரில்', போர் அடிக்கும் இயந்திரம் ஆகியவை பயன் படுத்தப்பட்டதால் விவசாய உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டது.

7. தற்கால ஆசியா

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஜப்பான் ஒரு வல்லர சாக மாறியது. அந் நிகழ்ச்சியைத் தற்கால ஆசியாவின் வரலாற் றின் தனிச் சிறப்புக்கூறு என்று நாம் கருதலாம். அந் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஜப்பான் அந்நிய நாடுகளுடன்—சீனு, ஹாலந்து தவிர —நெருக்கமான தொடர்பு வைத்துக்கொண்டிருக்கவில்லை. ஆட்சி முறை இடைக்காலக் கருத்திற்கேற்ப நடந்து வந்தது. ஆட்சி அதி காரம் முழுவதும் ஷோகன் என்பவரே பெற்றிருந்தார் என்றும், பேரரசர் பெயரளவில் ஆட்சித் தலைவராக இருந்து வந்தார் என்றும் நாம் முன்னரே படித்துள்ளோம். நாடு முழுவதிலும் பண்ணை உரிமை யுடைய பிரபுக்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்றும், அவர்கள் ஜப்பானின் அமைதியற்ற நிலைக்குக் காரணமானவர்கள் என்றும் முன்னரே கண்டறிந்தோம். இனி, பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற் பகுதியில், ஜப்பான் வலிமை பொருந்திய நாடாக மாறுவதற்குத் துணை புரிந்த காரணக் கூறுகளைப்பற்றி ஆராய்ந்தறிவோம்.

பதினாறும் நூற்றுண்டில் ஐரோப்பிய வியாபாரிகளும், சமயப் பரப்பூழியர்களும் ஜப்பானை அடைந்தார்கள் என்றும், நாளடைவில் பல காரணங்களால் அவர்கள் ஜப்பானிலிருந்து வெளியேற்றபட்டனர் என்றும் கண்டறிந்தோம். ஆனல், பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் மீண்டும் ஐரோப்பியர்களுடைய செல்வாக்கு ஜப்பானில் ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஜப்பானி யர்கள் பிற நாடுகளுக்குச் செல்லுவது தடை செய்யப்பட்டதால், அவர் களுடைய அயல்நாட்டு வியாபாரம் சீர்கேடுற்றது. பஞ்சகாலத்தில் தேவையான உணவுப் பொருள்கள் பெற முடியாததால், அநேக மக்கள் உயிரிழக்க நேர்ந்தது. மேலும், ருஷ்யர்கள் தங்களுடைய செல்வாக் கைப் பசிஃபிக் கடற் பிரதேசத்தில் ஏற்படுத்த முனைந்தார்கள். அதே சமயத்தில் ஆங்கிலேயர்களும் சீனக் கடலில் அவர்களுடைய செல்வாக் கைப் பெருக்கிக்கொண்டிருந்தனர். அதுமட்டுமன்றி முதல் சீனப் போரில் ஆங்கிலேயர்கள் வெற்றியடைந்ததன் பயனுக சீனுவின் துறை

முகங்கள் சிலவற்றுடன் ஐரோப்பியர்கள் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். மேற்கூறிய நிகழ்ச்சிகள் ஜப்பானுக்குப் பெருத்த பயம் விளைவித்தது. நாட்டின் மக்களுள் சிலர் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தினின்றும் ஜப்பான் தப்பவேண்டுமாயின், மேற்கத்திய கருத்துகளையும் முறைகளையும் ஜப்பான் பின்பற்றவேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்கலாயினர். மேற்கத்திய கருத்துகளும் முறைகளும் ஜப்பானில் அக்காலத்தில் இருந்துவந்த கருத்துகளைவிட மேலானவை என்று அவர்கள் எண்ணினர்கள். அக் கருத்துகள் ஜப்பானில் நுழையவேண்டுமானல், மீண்டும் ஐரோப்பியர்கள் ஜப்பானியர்களுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்று கருதினர்கள்.

அந் நேரத்தில் ஐக்கிய அமெரிக்க நாடு தன்னுடைய செல்வாக்கை பசிஃபிக் கடற்பிரதேசத்தில் ஜப்பான்வரை ஏற்படுத்தியிருந்தது. ஆகவே, பசிஃபிக் பெருங்கடலின் எதிர்க்கரையில் அமெரிக்கக் கப்பல்களுக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதற்கும், அக் கப்பல்களைச் செப்பனிடுவதற்கும் சில துறைமுகங்கள் தேவைப்பட்டன. மேலும், அமெரிக்கா ஆசியாவுடன் வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும் விரும்பியது. ஆகவே, 1853-ல் அதனுடைய கப்பற்படையை பெர்ரி (Perry) என்பவரின் தலைமையின்கீழ் ஜப்பானுக்கு அனுப்பி, அந் நாட்டின் துறைமுகங்களில் சிலவற்றை அமெரிக்கக் கப்பல்கள் பயன்படுத்துவதற்கு வேண்டிய அனுமதியை ஜப்பான் அரசாங்கத்தை அளிக்கும்படி கேட்டுக்கொண்டது. 1851-ல் ஜப்பான் அரசாங்கம் அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது. இரண்டு ஜப்பானியத் துறைமுகங்களைப் பயன்படுத்த அமெரிக்காவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதை அறிந்த மற்ற ஐரோப்பிய நாடுகள் ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள முற்பட்டன. பிரிட்டனும் ஜப்பானுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டது. அதன்படி பிரிட்டிஷ் கப்பல்களை ஜப்பான் துறைமுகங்களில் செப்பனிட அனுமதி வழங்கப்பட்டது. அதற்குப் பின்னர் வியாபாரத் தொடர்புகளை அமெரிக்காவும் பிரிட்டனும் ஏற்படுத்திக்கொண்டன. 1867ஆம் ஆண்டிற்குள் பதினைந்து நாடுகள் ஜப்பானுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டன. இவ் வொப்பந்தங்கள் ஷோகனுடன் ஏற்படுத்தப்பட்டவை என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில், அவரே உண்மை ஆட்சியாளர் என்று மேல்நாட்டவர்கள் கருதினர்கள். அவைகளின் பயனாக மேற்கு நாடுகள் ஜப்பானுடன் வியாபாரத் தொடர்புகளன்றி ஏனைய உரிமைகளையும் அங்கு அனுபவிக்கலாயின. ஜப்பானில் வசிக்கும் ஐரோப்பியர்கள் ஜப்பானுடைய ஆட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து விலக்குரிமை பெற்றனர். மேல்நாட்டவர்களுடைய நலத்தைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய அரசாங்கங்கள் அம் மக்கள் நலப் பாதுகாப்பாளர்களை ஜப்பானில்

ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டது. ஜப்பானில் மேல்நாட்டு அரசியல் தூதுவர்கள் செயற்படவும் அனுமதி வழங்கப்பட்டது. மேல்நாட்டவர்களின் கப்பல்கள் ஜப்பான் துறைமுகங்களுக்குள் காசின்றி நுழையும் உரிமை வழங்கப்பட்டது. மத விவகாரங்களில் அவர்களுக்கு முழு உரிமை வழங்கப்பட்டது. மேலும், ஜப்பானுக்குள் எல்லா இடங்களிலும் தடையின்றிப் பிரயாணம் செய்வதற்கும் உரிமை அளிக்கப்பட்டது. சமயப் பரப்பூழியர்களுடைய நடவடிக்கைகளும் தடையின்றி மேற்கொள்ளப்பட்டன.

மேல்நாட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் நாட்டு மக்களிடையே வெறுப்புணர்ச்சியை வளர்த்தது. அவர்களில் பலருக்கு மேல்நாட்டவர்கள் வியாபாரம் செய்யத் தொடங்கி, முடிவில் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்துவார்கள் என்ற பயம் ஏற்பட்டது. அதுமட்டுமன்றிச் சிறிது சிறிதாகத் தங்களுடைய பொருளாதார நிலையைக் குலைத்துவிடுவார்கள் என்றும் கருதினர். அத்தகையோர் பேரரசரின் அவையில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். மேலும், பல இனத் தலைவர்கள் டோகுகாவா குலத்தைச் சார்ந்த ஷோகனை வெறுத்தார்கள். ஆகவே, அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மேல்நாட்டவர்களை வெளியேற்ற வேண்டும் என்று பேரரசரைக் கேட்டுக் கொண்டனர். ஆகவே, பேரரசர் அந்நியர்களை வெளியேற்றும்படி ஷோகனுக்குக் கட்டளையிட்டார். பேரரசருடைய கட்டளையை நிறைவேற்ருவிடில் மக்கள் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வார்கள் என்று ஷோகன் அறிந்தார். அதே நேரத்தில் மேல்நாட்டவரிடம் உயர்ந்தரக போர்க்கருவிகள் இருந்ததால், அவர்களை வெளியேற்றுவது கடினமான செயலாயிற்று. மேலும், அந்நியர்களுக்கும் உள்நாட்டுத் தலைவர்களுக்கும் (Local Chiefs) அடிக்கடி கைகலப்புகள் ஏற்பட்டன. ஷோகனுல் அவைகளைத் தடுக்க முடியவில்லை. ஆகவே, அவர் பதவியை இராஜிநாமா செய்தார். அவரைப் பின்தொடர்ந்தவர் அவருடைய அதிகாரத்தை நிலைநிறுத்த முயன்ருல் நாட்டில் குழப்பம் ஏற்படும் என்று கருதியதால், அவரும் பதவியைவிட்டு விலகினர். ஆகவே, ஷோகன் பதவியை ஒழிப்பது எளிதான காரியமாயிற்று. 1867-ல் ஷோகன் என்ற பதவி ஒழிக்கப்பட்டதால், ஜப்பானில் சுமார் 700 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இரட்டை ஆட்சி அழிவுற்றது. இனி, அதிகாரங்கள் அனைத்தையும் பேரரசரே மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனுல், உண்மையில் பேரரசர் பெயரளவில்தான் ஆட்சியாளராக இருந்தார். டோகுகாவா குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சியைக் கட்டுப்படுத்தி வருவதற்குப் பதிலாக சாத்சுமா, ஷோஷு குலத்தினர்கள் ஆட்சியைச் செலுத்தலாயினர். அப்பொழுது அரசாண்டுவந்த முட்சுஹிடோ (Mutsuhito) என்பவர் மக்கள் நலத்தில் அக்கறை கொண்டவராய் இருந்தார். ஆகவே, அவர்களுடைய காலத்தை

(1868–1912) மேஜி சகாப்தம் என்று கூறுகிருர்கள். அக் காலத்தில் ஜப்பானில் பல புரட்சிகரமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலும் மேல்நாட்டவர்களின் முறையே பின்பற்றப்பட்டது. ஏனெனில், அம் முறை தாங்கள் வலுப்பெறுவதற்கு உதவும் என்று அவர்கள் கருதினுர்கள். ஆட்சிமுறை மேற்கத்திய ஆட்சிமுறையை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்டது. 1889-ல் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அது பிரஷ்யாவின் அரசியலமைப்பை ஒத்திருந்தது. தல ஆட்சிமுறை ஃபிரான்சின் தல ஆட்சிமுறையை ஒத்திருக்குமாறு மாற்றியமைக்கப்பட்டது. மேற்கத்திய சட்டத் தொகுதிகளின் அடிப்படையில் புதிய சிவில், கிரிமினல், இராணுவச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. சாமுராய் அமைப்பைச் சார்ந்த வீரர்கள் அவர்களுடைய தனிப்பட்ட உரிமைகளை இழந்தனர். அதற்குப் பதிலாக எல்லா மக்களும் போர்ப்பயிற்சி பெறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட படை ஜெர்மானியர்களுடைய இராணுவ முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் கப்பற்படை அமைப்பைப் பின்பற்றி ஜப்பானியக் கப்பற்படை திருத்தியமைக்கப்பட்டது. நிலவரி ஒன்று புதிதாக விதிக்கப்பட்டது.

சமுதாய அமைப்பும் முற்றிலும் மாற்றப்பட்டது. நிலமானியத் திட்டம் அழிக்கப்பட்டது. மக்கள் இனவழியாகப் பிரிக்கப்பட்டிருந்த முறையும் ஒழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக மூன்று கூறுகளையுடைய சமுதாயம் உருவாக்கப்பட்டது. கல்வித்துறையில் பெருமாற்றங்கள் செய்யப்பட்டன. பல்கலைக் கழகங்களும் தொழிற் கல்விக்கூடங்களும் அமைக்கப்பட்டன. அவைகளெல்லாம் அரசாங்கத்தின் மேற்பார்வைக்குட்படுத்தப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். எல்லாப் பள்ளி மாணவர்களும் ஆங்கிலமொழி கற்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஷின்டோ மதம் புரட்சியின் விளைவாக அரசாங்க ஆதரவை இழந்தது. இனி அரச சபையினரால் பின்பற்றப்படும் மதமாக மட்டுமே அது விளங்கியது. எல்லா மதங்களும் சமமாகவே நடத்தப்பட்டன. கிறித்துவர்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. ஜப்பானியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடைசெய்வதற்குப் பதிலாக ஜப்பானியர்கள் வெளிநாடுகள் சென்று மேல்நாட்டுக் கருத்துகளை அறிந்து வருமாறு அனுப்பப்பட்டனர். மேல்நாட்டவர்களின் ஆண்டுக் குறிப்பேடு கையாளப்பட்டது.

பொருளாதாரத் துறையிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷ் மக்கள் கையாண்டுவந்த தொழில் முறைகளைப் பின்பற்றலாயினர். கப்பல் கட்டும் தொழில் ஊக்குவிக்கப்பட்டது. போக்கு

வரத்துச் சாதனங்களும், செய்தித் தொடர்பு சாதனங்களும் பெருக்கப் பட்டன. அதன் விளைவாக வியாபாரம் பெருகியது. வர்த்தகச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

மேற்கத்திய கருத்துகளின்மீது ஜப்பானியர்கள் கொண்டிருந்த மோகம் நாளடைவில் குறையலாயிற்று. 1880-க்குப் பின்னர் ஜப்பானியர்கள் தேசீய உணர்ச்சியால் உந்தப்பட்டு, ஒருசில துறைகளைத் தவிர மற்றையத் துறைகளில் தேசீயக் கருத்துகளுக்கே முக்கியத்துவம் அளித்தார்கள்.

புரட்சியின் காரணமாக ஜப்பானியர்களுடைய அயல்நாட்டுக் கொள்கையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. முதலில் அதனுடன் மேல்நாட்டவர்கள் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கைகளைத் திருத்தியமைக்க எண்ணியது. ஏனெனில், அவ்வுடன்படிக்கைகள் மேல்நாட்டவர்களுக்கே மிகுந்த பயனளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆகவே, 1871-ல் தூதுக்குழுவொன்றை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பியது. அதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. எனவே, அவ்வுடன்படிக்கைகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமாயின் ஜப்பான் மேல்நாடுகளைப்போல் வல்லரசாக வேண்டும் என்ற கருத்து வளரலாயிற்று. அதன் விளைவாக ஜப்பான் இராணுவ பலம் பொருந்திய நாடாக மாறியது. படைபலம் பெருகியவுடன் ஆதிக்க மனப்பான்மை அதனிடம் வளர்ச்சியுற்றது. அதனால் முதலில் அண்மையிலுள்ள நாடுகளில் அதனுடைய செல்வாக்கை ஏற்படுத்த விரைந்தது.

முதலில் ஜப்பானியர்கள் வசிக்கும் பகுதிகள் அனைத்தும் ஜப்பான் நாட்டிற்கே சொந்தமாகும் என்று அறிவித்தது. அவ்வறிவிப்பின் விளைவாக ஹொனகடோ, கியூரீல் தீவுகளில் அதனுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. அதே நேரத்தில் ருஷ்யா சில பகுதிகளின் மீது உரிமை கொண்டாடியதால், அதைத் திருப்திப்படுத்துவதற்கு சகோலின் தீவை அதற்கு அளிக்கவேண்டியதாயிற்று. 1879-ல் ரியூகியூ தீவுகள் ஜப்பான் வசமாயின. அதன் பின்னர் ஜப்பான் கொரியாவில் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றது. ஜப்பானுடைய பாதுகாப்பும் கொரியாவினுடைய சுதந்திரமும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டனவாகக் கருதப்பட்டது. கொரியா ஒரு வல்லரசின் ஆளுகைக்கு உட்பட நேர்ந்தால் ஜப்பான் நாட்டினுடைய பாதுகாப்பிற்குக் கேடு நேரும் என்று ஜப்பானியர்கள் கருதினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கொரியா சீனாவின் சார்பு நாடாக (dependency) இருந்தது. அக்காலத்தில் சீனா வலிமைபெற்று விளங்கவில்லை. ஆனால், சீனாவின் வலிமையற்ற நிலையைப் பயன்படுத்தி ருஷ்யா தன்னுடைய ஆதிக்கத்தைக் கொரியாவில் ஏற்படுத்த முயலும் என்று ஜப்பானியர் எண்ணி

ஞர்கள். ஆகவே, கொரியா ருஷ்யாவின் கைவசம் ஆகுமுன்னர் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்று கருதியது. எனவே, 1875-ல் கொரியாவைத் தாக்கி அதனுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. மேலும், அங்குள்ள முற்போக்காளர்களுக்கு உதவி செய்தது. ஆகவே, கொரியாவில் இருந்த பிற்போக்காளர்கள் சீனுவின் துணையை நாடினுர்கள். 1884-ல் சீனு, ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் தங்களுடைய உதவியை நாடியவர்களுக்குத் துணைபுரியப் படைகளை அனுப்பின. 1885-ல் இரு நாடுகளும் முன்னறிவிப்பின்றிப் படைகளை கொரியாவிற்கு அனுப்புவதில்லை என்று ஏற்பாடு செய்துகொண்டன.

1894-ல் கொரியாவில் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்நியர்களை வெளியேற்றுவதே அக் கிளர்ச்சிக்காரர்களின் நோக்கமாகும். கிளர்ச்சிக்காரர்களை அடக்கக் கொரியாவின் அரசாங்கம், சீனுவின் உதவியை நாடியது. ஜப்பானும் ஒரு படையை அனுப்பிவைத்தது. கலகம் அடக்கப்பட்ட பின்னர் இரு நாடுகளும் தங்களுடைய துருப்புகளைத் திரும்பப் பெறவில்லை. இரு நாடுகளும் தங்களுடைய படைகளைத் திரும்பப் பெறவேண்டும் என்றும், கொரியாவின் உள்நாட்டு விவகாரங்களில் இருவரும் தலையிடலாகாது என்றும் சீனு யோசனை கூறியது. ஜப்பான் அதை நிராகரித்தது. அதற்குப் பதிலாக இரு நாடுகளும் கொரியாவில் சீர்திருத்தங்களைப் புகுத்த ஒன்றிற்கொன்று துணைபுரிய வேண்டும் என்று யோசனை கூறியது. ஆனுல், சீனு அதை ஏற்க மறுத்தது. முடிவில் இரு நாடுகளும் போர் செய்தன.

சீனு பல இடங்களில் தோல்வியுற்றது. கொரியாவினின்றும் அதனுடைய படைகள் விரட்டப்பட்டன. சீனுவின் கப்பற்படை யாலூ நதிச் (The Yalu) சண்டையில் தோற்கடிக்கப்பட்டது. ஜப்பானியப் படையொன்று மஞ்சூரியாவின்மீது படையெடுத்தது. மற்ருெரு படை லியோ-டுங் (Liao-tung) தீபகற்பத்தில் பல வெற்றிகளைக் கொண்டது. அங்குள்ள போர்ட் ஆர்தர் (Port Arthur) துறைமுகத்தைக் கைப்பற்றியது. பின்னர் ஷான்டுங் (Shantung) பகுதியில் ஜப்பான் உட்புகுந்தது. பிறகு பீக்கிங்கை நோக்கி முன்னேறியது. ஆகவே, சீனு சமாதானத்தை நாடியது.

1895-ல் சிமோனோசகி உடன்படிக்கை (Treaty of Shimonoseki) ஏற்படுத்தப்பட்டது. கொரியா சுதந்திர நாடாக அமைவதற்கு சீனு ஒப்புதல் தெரிவித்தது. பார்மோசா, லியோ-டுங் தீபகற்பம் ஆகிய இடங்களை சீனு, ஜப்பானுக்கு அளித்தது. ஜப்பானுக்குப் போரினுல் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடுசெய்ய சீனு இசைந்தது. நான்கு துறைமுகங்களில் ஜப்பானியர்கள் வியாபாரம் செய்ய சீனு

அனுமதி வழங்கியது. மேல்நாட்டவருக்கு அளிக்கப்பட்ட வியாபார உரிமைகளை சீனு ஜப்பானுக்கு வழங்கியது. சீனுவிற்கும் ஜப்பானுக்கும் ஏற்பட்ட போர், ஜப்பான் நாட்டின் வலிமையை வெளிப்படுத்தியது. போரில் ஜப்பான் அடைந்த வெற்றி அதனுடைய ஆதிக்க வெறியை அதிகரிக்கச் செய்தது. மேல்நாட்டவர்கள் ஜப்பானியர்களின் வலிமையையும், அதனுல் ஏற்படவிருக்கும் ஆபத்துகளையும் உணர்ந்தார்கள். சீனுவின் சீர்கேடுற்ற நிலையை அப் போர் வெளிப்படுத்தியது. அதைப் பயன்படுத்தி மேல்நாட்டவர்கள் சீனுவைத் தங்களிடையே பிரித்துக்கொள்ள முற்பட்டனர். அதைப்பற்றிப் பின்னர் விரிவாகக் கவனிப்போம்.

ஜப்பானியர்களுடைய பெரு வெற்றியால் ஏற்படவிருக்கும் ஆபத்தை உணர்ந்த ஜெர்மனி, ருஷ்யா, ஃபிரான்சு ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து, லியோ-டுங் தீபகற்பத்தினின்றும் வெளியேறும்படி ஜப்பானுக்குக் கட்டளை இட்டன. ஜப்பான் அவைகளுடைய கட்டளைக்கிணங்கி அப் பகுதியை விட்டு வெளியேறியது.

1895-ல் மூன்று ஐரோப்பிய நாடுகளின் நடவடிக்கைகளின் விளைவாக ஜப்பான் நாட்டினுடைய தேசீயப் பெருமையும் பாதிக்கப்பட்டது என்று ஜப்பானியர்கள் கருதினர். ஆகவே, தாங்கள் லியோடுங் பகுதியினின்று வெளியேறவும், தங்களுடைய தேசீயப் பெருமை குறைவதற்கும் காரணமாயிருந்த நாடுகளில் ஒன்ருன ருஷ்யாவின்மீது பழி தீர்த்துக்கொள்ள ஜப்பான் முனைந்தது. அதே நேரத்தில் ருஷ்யாவின் ஆதிக்கம் பெருகி வந்தது. 1897-ல் போர்ட் ஆர்தரைக் கைப்பற்றியது. ருஷ்யாவின் இருப்புப்பாதை யமைப்பை மஞ்சூரியா வழியாக விளாடிவாஸ்டாக்கு, போர்ட் ஆர்தர் ஆகிய இடங்கள் வரை விரிவுபடுத்தியது. 1900-ல் சீனுவில் ஏற்பட்டிருந்த குழப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு ருஷ்யா மஞ்சூரியாவின் சில பகுதிகளைத் தன்னுடைய ஆதிக்கத்திற்குட்படுத்தியது. சில காலத்திற்குள் மஞ்சூரியா முழுவதையும் தன்னுடைய ஆளுகைக்குட்படுத்தத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. ருஷ்யாவின் நடவடிக்கைகள் ஜப்பானுக்குமட்டுமன்றி பிரிட்டனுக்கும் பெருத்த பயத்தை உண்டாக்கியது. ஆகவே, ஜப்பானும் பிரிட்டனும் 1902-ல் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டன. இரு நாடுகளும் காசில்லா நுழைவுச் சலுகை (open door) கோட்பாட்டை அங்கீகரித்தன. சீனுவிலும் கொரியாவிலும் அவ்விரு நாடுகள் பெற்றிருந்த உரிமைகளைக் காப்பாற்றும் பொருட்டு ஜப்பானும் பிரிட்டனும், தனியாக மற்ருெரு நாட்டுடன் போரிட நேர்ந்தால், அடுத்த நாடு நடுநிலைமை வகிக்க இசைந்தது. ஆனுல், அவைகளுள் ஒன்று இரண்டு நாடுகளுக்கு எதிராகத் தன்னுடைய உரிமைகளைக் காப்பதற்காகப் போரிட நேர்ந்தால், இரண்டா

வது நாடு அதனுடைய உதவிக்குச் செல்லவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வுடன்படிக்கை ஜப்பானைப் பொறுத்த அளவில் மிக்க பயன்தரத்தக்கதாக இருந்தது. இதுவரை மேல்நாடுகளால் தாழ்வாகக் கருதப்பட்டுவந்த ஜப்பான், அவ்வுடன்படிக்கை வாயிலாக உலகத்திலேயே வலிமை பொருந்திய கடற்படையுடன் கூடிய பேரரசுக்குச் சமமான நிலையைப் பெற்ற நாடாக மாறியது. அதன் விளைவாக ஜப்பான் ஆதிக்கக் கொள்கையை மேலும் ஆர்வத்துடன் பின்பற்றத் தொடங்கியது. அதன் விளைவாகத் தூரக்கிழக்குப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. ஜப்பானியர்களுக்கும்.ருஷ்யர்களுக்கும் இடையே 1904-ல் ஏற்பட்ட போர் அவ்வுடன்படிக்கையின் நேரடி விளைவு என்று கூறுவது மிகையாகாது.

1904-ல் போர் ஏற்பட முக்கியமான காரணம் ருஷ்யாவின் ஆதிக்க வளர்ச்சியேயாகும். மஞ்சூரியாவில் ருஷ்யர்களின் செல்வாக்கு வளர்ந்து வந்தது என்று முன்னரே குறிப்பிட்டோம். அத்துடன் இராமல் ருஷ்யப் படைகள் மரம் வெட்டுதலைச் சாக்காகக் கொண்டு கொரியாவிற்குள்ளும் செல்லத் தொடங்கின. ஆகவே, ஜப்பான் தலையிட நேர்ந்தது. ஜப்பான் ருஷ்யாவிற்குச் சில கோரிக்கைகளை விடுத்தது. சீனு, கொரியா ஆகியவற்றின் கூறுபடா நிலையை ருஷ்யாவும் ஜப்பானும் பாதுகாக்கவேண்டும் என்றும், மஞ்சூரியாவில் ருஷ்யாவிற்கு இருந்த தனி நலன்களை ஜப்பான் போற்றவேண்டும் என்றும், ஜப்பானுக்குக் கொரியாவில் இருந்த தனிநலன்களை ருஷ்யா போற்றவேண்டும் என்றும் அக் கோரிக்கைகளில் ஜப்பான் குறிப்பிட்டிருந்தது. ஆனல், ருஷ்யா தகுந்தவாறு பதிலளிக்கவில்லை. மஞ்சூரியாவில் அது பெற்றிருந்த செல்வாக்கு நிலைத்திருக்கவேண்டும் என்றும், அங்குத் தன் விருப்பம்போல் நடந்துகொள்ளும் உரிமையை அது தொடர்ந்து பெற்றிருக்கவேண்டும் என்றும் கூறியது. மேலும், கொரியாவில் ஜப்பான் தன் விருப்பம்போல் நடக்கலாகாது என்றும் குறிப்பிட்டது. எனவே, போர் மூண்டது.

1904-ல் யாலு நதிச் சண்டையில் ருஷ்யா தோற்றது. அதைத் தொடர்ந்து ருஷ்யா பல இடங்களில் தோல்வியுற்றது. லியோ-டுங் தீபகற்பத்தில் தோல்வி யடைந்ததன் பயனுக போர்ட் ஆர்தர் முற்றுகையிடப்பட்டது. 1905-ல் முக்டென் (Mukden) என்னுமிடத்தில் ருஷ்யா பெருந்தோல்வி யடைந்தது. இறுதியில் போர்ட் ஆர்தர் ஜப்பானியர் வசமாயிற்று. 1905-ல் ஜப்பானியர்கள் ஷஷீமா கடல் இடுக்கில் (Straits of Tsushima) ருஷ்யக் கப்பற்படையைத் தோற்கடித்தார்கள். அதற்குள்ளாக ஜப்பானியர்கள் களைத்துவிட்டனர். வெற்றிகள் பல பெற்றபோதிலும், ருஷ்யாவை அடக்குவது முடியாத காரியம் என்று உணர்ந்தார்கள். அதே நேரத்தில் ருஷ்யாவில் பேரரசருடைய

தோல்விகள் நாட்டில் குழப்பங்களை விளைவித்தன. ஆகவே, கப்பற் படை தோல்வியுற்ற பிறகு சமாதானம் செய்துகொள்ள விரும்பினர். அதே நேரத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதி அவ்விரு நாடுகளிடையே சமரசம் ஏற்படுத்தத் தன் செல்வாக்கைப் பயன்படுத்தினர். அதனால் 1905-ல் போர்ட்ஸ்மத் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. ஜப்பானி யர் கொரியாவில் பெற்றிருந்த நலன்கள் உறுதி செய்யப்பட்டன. 1910-ல் கொரியா ஜப்பான் பேரரசின் ஒரு பகுதியாக மாறியது. இரு நாடுகளும் மஞ்சூரியாவினின்றும் வெளியேறின. லியோ-டூங் பகுதியில் ருஷ்யா பெற்றிருந்த இடங்கள் ஜப்பானுக்கு அளிக்கப்பட்டன. தென் மஞ்சூரியாவில் ருஷ்யா பெற்றிருந்த இருப்புப்பாதைபற்றிய உரிமை களும், சுரங்கங்கள்பற்றிய உரிமைகளும் ஜப்பானுக்கு அளிக்கப் பட்டன. அதன் விளைவாகப் பிற்காலத்தில் மஞ்சூரியாவில் முழு ஆதிக்கம் ஏற்படுத்த முற்பட்டது. சகோலின் தீவின் தென்பகுதியும் ஜப்பானுக்கு அளிக்கப்பட்டது. சீனாவின் ஆதிக்கம் மஞ்சூரியாவில் மீண்டும் ஏற்பட இரு நாடுகளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண் டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

1904-5-ல் நடந்த போர், ருஷ்யாவின் ஆதிக்க வளர்ச்சியைத் தடைப்படுத்தியது. சீனாவில் ஜப்பானின் ஆதிக்கம் ஏற்பட வழி ஏற்பட்டது. ஜப்பானின் வெற்றி ஐரோப்பியர்களைத் தோற்கடிக்க முடியாது என்ற கருத்தைச் சிதறடித்தது. ஐரோப்பிய நாடுகளுடன் அது சீனாவில் போட்டியிடத் தலைப்பட்டது. தூரக்கிழக்கு நாடுகளுக் குத் தலைமை தாங்கும் வாய்ப்பை ஜப்பான் பெற்றது. சீனாவில் புரட்சி ஏற்படவும் இப் போர் காரணமாக இருந்தது.

இருபதாம் நூற்றாண்டில் மேலும் பல நாடுகளை வெல்லவேண்டும் என்று ஜப்பான் கருதலாயிற்று. நாள்தோறும் பெருகிக்கொண்டே போகும் மக்கள் தொகையைக் குறைக்கப் புதிய நாடுகள் தேவைப் பட்டன. தொழில்வளம் பெருகியதால், ஜப்பானில் உற்பத்தி செய்யப் பட்ட பொருள்களுக்குப் புதிய சந்தைகள் தேவைப்பட்டன. அதனுடைய உண்மையான கருத்தை மறைத்து வைக்கவே பிற்காலத்தில் ஜப்பான் 'ஆசியா ஆசியருக்கே உரியது' என்ற கூச்சலை எழுப்பியது. முதலாவது உலகப் போர் ஜப்பானுக்கு அரிய வாய்ப்பைத் தேடிக்கொடுத்தது. ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய கவனத்தைப் போரிடுவதில் செலவிட்டிருந்தனர். அதே நேரத்தில் சீனாவில் 1911ஆம் ஆண்டின் புரட்சிக்குப் பின்னர் ஒற்றுமை குலைந்து விட்டது. அந் நிலையைப் பயன்படுத்தி ஜப்பான் தன்னுடைய ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொள்ள முற்பட்டது. முதலில் பிரிட்ட னுடன் சேர்ந்து ஜெர்மனிக்கு எதிராகப் போர்புரிய முற்பட்டது. சீனாவில் ஜெர்மனி செல்வாக்குப் பெற்ற இடங்களை ஜப்பானிடம்

ஒப்படைக்குமாறு ஜப்பான் போர் அறிக்கையொன்றின்மூலம் தெரிவித்தது. அதை மறுக்கவே, ஜப்பான் போரில் ஈடுபட்டது. அப்போர் அளித்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஜப்பான், ஜெர்மனிக்குச் சொந்தமாக சீனுவிலிருந்த இடங்களைக் கைப்பற்றத் தன்னுடைய படைகளை சீனுவிற்குள் அனுப்பியது. ஷான்டுங்கில் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. 1915-ல் ஜப்பான் இருபத்தொரு கோரிக்கைகள் அடங்கிய பத்திரம் ஒன்று தயாரித்து சீனுவிற்கு அனுப்பியது. அக் கோரிக்கைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால், சீன ஜப்பானின் ஆளுகைக்குட்பட்ட நாடாக மாறியிருக்கும். அக் கோரிக்கைகளை சீனுவின் குடியரசுத் தலைவர் யுவான் ஷி கே (Yuan Shih Kai) ஏற்றுக்கொண்டால் அவருக்குத் தக்க வெகுமதி அளிப்பதாகவும், இல்லையெனில் ஜப்பான் போர் தொடுக்கும் என்றும் குறிப்பிடப்பட்டன. யுவான் ஷி கே அக் கோரிக்கைகளின் பெரும் பகுதியை ஏற்றுப் பலனடைந்தார். அதன்படி ஷான்டுங்கில் ஜெர்மனி பெற்றிருந்த நலன்கள் அனைத்தையும் ஜப்பான் பெற்றது. தென்மஞ்சூரியாவில் ஜப்பானின் ஆதிக்கம் முழுமையாக ஏற்படுத்தப் பட்டது. ஜப்பான் சில வியாபாரம் சார்ந்த உரிமைகளையும் பெற்றது. ஆனால், சீனமக்கள் அவ் வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, ஜப்பான் ஷான்டுங்கைப் பெறும் நோக்கத்துடன் நேசநாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது.

ஜப்பானின் ஆதிக்க வெறியினின்றும் தப்புவதற்கும், நேசநாடுகளின் துணைகொள்ளவும் சீன 1917-ல் போரில் ஈடுபட்டது. சீன நிபந்தனைகள் எதையும் ஏற்படுத்தவில்லை என்றாலும், போருக்குப் பின்னர் நேச நாடுகளுக்கு சீனுவிலிருந்த உரிமைகளை அவர்கள் விட்டுக்கொடுப்பார்கள் என்று சீன எதிர்பார்த்தது. ஆகவேதான், சீன போரில் ஈடுபடுவதை ஜப்பான் விரும்பவில்லை.

போருக்குப் பின்னர் பாரிஸில் கூடிய மாநாட்டில் ஷான்டுங் ஜப்பானுக்குச் சேரவேண்டும் என்று ஜப்பான் விரும்பியது. ஆனால், அதை சீனுவிற்குத் திருப்பித்தரவேண்டும் என்று சீனர்கள் கோரினர்கள். முடிவில் ஷான்டுங் ஜப்பானுக்கு அளிக்கப்பட்டது. மேலும், நேசநாடுகளுக்கு சீனுவில் இருந்த உரிமைகளும் தொடர்ந்து இருந்துவந்தன. ஆகவே, அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை சீனர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

1919ஆம் ஆண்டிற்குப் பிறகு ஜப்பானின் செல்வாக்கு ஓரளவு குறைய ஆரம்பித்தது. பிரிட்டனுடன் 1902-ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அழிவுற்றது. ஜப்பானின் ஆதிக்க வெறியால் ஆபத்து நேராதவாறு பசிஃபிக் கடற் பகுதிகளில் பாதுகாப்பு அரண்கள்

ஏற்படுத்தப்பட்டன. மேலும், நேசநாடுகள் சீனுவின் கூறுபடா நிலையை ஆதரிப்பதாக வாக்குறுதியளித்தன. ஆனால், 1931-ல் ஜப்பானின் ஆதிக்கவெறி புத்துயிர் பெற்றது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, ஜப்பானின் பொருளாதாரநிலை சீர்படக் குடியேற்ற நாடுகள் தேவைப்பட்டன. ஜப்பானில் மக்கள் தொகை பெருகியது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் வெளிநாடுகளிலிருந்து மக்கள் அங்கு வந்து குடியேறுவதைக் கட்டுப் படுத்தலாயினர். சீனுவில் குடியேறிய ஜப்பானியர்களுக்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. மக்கள்தொகை பெருகியதாலும், வெளி நாடுகளுக்குச் சென்று குடியேறுவது தடைபட்டதாலும், அதிக அளவில் உணவுப் பொருள்களைப் பிறநாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டியிருந்தது. ஜப்பானின் தொழில் வளர்ச்சியும் பிறநாடுகளின் ஆதரவைச் சார்ந்திருந்தது. ஆகவே, ஜப்பான் நாடு பெரிதாக்கப்பட வேண்டியதாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் களிடையே போர் மனப்பான்மையும், ஆதிக்கக் கருத்துகளும் இடம் பெற்றிருந்தன.

ஆகவே, ஜப்பான் வாழப் பிறநாடுகள்மீது படையெடுக்க வேண்டியதாயிற்று. முதலில் தன்னுடைய கவனத்தை மஞ்சூரியா வின்பால் திருப்பியது. சீனுவின் வலுவிழந்த நிலை மஞ்சூரியாவைக் கைப்பற்றுமாறு ஜப்பானியரை ஊக்குவித்தது. 1931-ல் ஜப்பான் மஞ்சூரியாவின்மீது படையெடுத்தது. தெற்கு மஞ்சூரியா அதன் கைவசமாயிற்று. 1932-ல் மற்றையப் பகுதியும் அதன் ஆட்சிக்குட் பட்டது. மஞ்சுகோ (Manchuko) என்ற பெயருடன் அதைத் தனி நாடாக மாற்றியது. ஆயினும், அது பெயரளவில்தான் சுதந்திரம் பெற்ற நாடாக விளங்கியது. அதன் பிறகு சீனுவிற்குள் புகுந்ததன் விளைவாக சீனுவிற்கும் ஜப்பானுக்கும் போர் ஏற்பட்டது. பீக்கிங் நகரத்தை நோக்கி முன்னேறியது. அதற்கிடையே மஞ்சூரியப் பிரச்சினை சர்வதேச சங்கத்தின் (League of Nations) கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சர்வதேச சங்கம் லிட்டன் பிரபுவின் தலைமையின்கீழ் ஒரு விசாரணைக் குழுவை அமைத்தது. அக் குழு இயற்றிய திட்டத்தை ஜப்பான் நிராகரித்தது. அதன் பின்னர் அது சர்வதேச சங்கத்தினின்றும் விலகிக்கொண்டது. சர்வதேச சங்கம் ஜப்பான்மீது யாதொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. 1935-ல் மங்கோலியாவின் ஒரு பகுதி (Inner Mongolia) மஞ்சுகோ கைப்பற்றியது; அடுத்து பீக்கிங்கைக் கைப்பற்றியது; பிறகு நான்கிங் அதன் கைவசமாயிற்று. ஜப்பானியர்களுடைய முன்னேற் றத்தால் சீன அரசாங்கத்தின் தலைநகரம் முதலில் ஹான்கோவிற்கும், பிறகு சுங்கிங்குக்கும் மாற்றப்பட்டது. கான்டன் ஜப்பானியர்கள் கைவசமாயிற்று. ஜப்பானியர்களுடைய சமாதான நிபந்தனைகள்

கடுமையாக இருந்ததால், சீன அரசாங்கத்தின் தலைவர் சியாங்கேய் ஷேக் போரைத் தொடர்ந்து நடத்தத் தீர்மானித்தார். ஆகவே, ஜப்பானியர்கள் சியாங்கேய் ஷேக்கின் அரசியல் எதிரிகளைக் கொண்டு சீனக் குடியரசு ஒன்றை 1940-ல் ஏற்படுத்தினார்கள். நான்கிங் (Nanking) அதனுடைய தலைநகரமாக்கப்பட்டது. அதன் பிறகு ஜப்பான் மேலும் பல இடங்களைக் கைப்பற்றும் நோக்கத்தைக் கைவிட்டு, இதுவரை கைப்பற்றிய பகுதிகளில் தன்னுடைய செல்வாக்கை நிலைநாட்ட முற்பட்டது.

அதற்கிடையே இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டது. 1936-ல் ஜப்பானும் ஜெர்மனியும் ருஷ்யாவிற்கெதிராக ஒப்பந்தம் செய்து கொண்டன. அதற்கு அனைத்து நாட்டுப் பொதுவுடைமை அமைப்புக்கெதிராக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் (Ante-Comintern Pact) என்ற பெயர் அளிக்கப்பட்டது. பிறகு இத்தாலியும் அதில் சேர்ந்து கொண்டது. அதற்கு ரோம்-பெர்லின்-டோக்கியோ அச்சு (Rome-Berlin-Tokyo Axis) என்ற பெயர் அளிக்கப்பட்டது. இரண்டாவது உலகப் போரை ஜப்பான் தன்னுடைய ஆதிக்கத்தைப் பரப்புவதற்குப் பயன்படுத்திக்கொண்டது. எண்ணெய்க் கிணறுகளையுடைய கிழக்கிந்தியத் தீவுகளையும், உணவுப் பொருள்கள் மலிந்திருக்கும் பர்மா, மலாயா ஆகியவற்றையும் கைப்பற்றினால் தன்னுடைய பொருளாதார நிலை சீர்படும் என்று ஜப்பான் எண்ணியது. மேலும், ஆசிய நாடுகளின் விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தவும் அப் போர் அரிய வாய்ப்பு ஒன்றினைத் தந்தது. அதற்குத் தடையாக இருக்கக்கூடிய நாடு அமெரிக்கா ஒன்றுதான் என்று ஜப்பான் எண்ணியது. ஆகவே, 1941-ல் பெர்ல் துறைமுகத்திலிருந்த அமெரிக்கக் கப்பற்படைமீது குண்டு வீசியது. அதே நாளில் பிலிப்பைன் தீவுகளில் இருந்த படைத்தளங்களையும் சிங்கப்பூரையும் தாக்கியது. பின்னர் ஷாங்காய் கைப்பற்றப்பட்டது. ஆறு மாதத்திற்கெல்லாம் ஃபிரெஞ்சு இந்தோ-சீனா, போர்ச்சுகீசியர்களுக்குச் சொந்தமான மாகவோ (Macao), டைமோர் ஆகியவைகளைத் தவிர தென்கிழக்கு ஆசியாவிலிருந்த அந்நியர்களின் குடியேற்ற அரசுகள் யாவும் ஒழிக்கப்பட்டன. இறுதியில் ஜப்பான் இந் நாடுகளினின்றும் வெளியேறவேண்டியதாயிற்று. ஜப்பான் ஏற்படுத்திய பேரரசும் வீழ்ந்தது.

சீனா

பதினாறும் நூற்றாண்டுவரை சீனா பிற நாடுகளுடன் தொடர்பின்றி வாழ்ந்துவந்தது என்றும், அந் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் சீனாவில் வியாபாரத்தலங்களை ஏற்படுத்தத் தொடங்கினார்கள் என்றும் முன்னரே கண்டறிந்தோம். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டில்

தான் அவர்களுடைய நடவடிக்கைகளின் பயனாக சீனாவின் ஒழுக்கநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அதன் பயனாக இருபதாம் நூற்றாண்டில் சீனாவில் புரட்சி ஏற்பட்டது. ஆகவே, ஐரோப்பியர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றி இனிக் கவனிப்போம்.

சீனர்கள், வெளிநாட்டு வியாபாரிகள் தங்களுடைய நாட்டில் வசிப்பதை விரும்பவில்லை. ஆனால், அவர்களை வெளியேற்றுவதற்குத் தேவையான வலிமையை அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அவர்களுக்குப் பலவிதத் தொல்லைகளைக் கொடுத்துவந்தார்கள். அவர்களைக் கண்ணியமாக நடத்தும்படி மேல்நாடுகள் பல முறை சீன அரசாங்கத்தை வேண்டிக்கொண்டன. ஆனால், ஒரு பயனும் ஏற்பட வில்லை. இறுதியில் அவர்கள் போரிட நேர்ந்தது. அவ்வாறு ஏற்பட்ட முதல் சீனப்போர் அபினிப் போர் (Opium War) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. சீனர்கள் அபினியைப் பெருமளவில் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து வாங்கிவந்தனர். அபினியை உட்கொள்ளுவதால் தேகநலம் பாதிக்கப்படுவதை அறிந்த சீன அரசாங்கம் அப் பொருளை இறக்குமதி செய்வதைத் தடுத்தது. ஆனால், பிரிட்டிஷ் வியாபாரிகள் சீன அதிகாரிகளின் மறைமுக ஆதரவுடன் அப் பொருளைத் தொடர்ந்து இறக்குமதி செய்துவந்தனர். அதனால் 1839-ல் போர் ஏற்பட்டது. ஷாங்காய், ஹாங்காங் ஆகிய இடங்களை பிரிட்டிஷார் கைப்பற்றினார்கள். 1842-ல் ஏற்படுத்தப்பட்ட நான்கிங் உடன்படிக்கை வாயிலாக பிரிட்டன் ஹாங்காங்கைப் பெற்றது. மேலும், சீனாவிற்குச் சொந்தமான ஐந்து துறைமுகங்களில் அவர்களுடைய வியாபாரம் நடைபெற அனுமதிக்கப் பட்டது. ஐரோப்பியர்களை சீனர்களுக்குச் சமமாக வைத்து நடத்த சீன அரசாங்கம் இசைந்தது.

1857-ல் சீனாவுடன் பிரிட்டன் இரண்டாவது முறையாகப் போரிட நேர்ந்தது. அப் போரில் ஃபிரான்சும் கலந்துகொண்டது. அப்பொழுதுதான் சீனப் பேரரசரின் கோடைக்கால மாளிகை அழிக்கப்பட்டது. 1861-ல் டியென்ஸ்டன் உடன்படிக்கைகள் ஏற்படுத் தப்பட்டன. பிரிட்டன் கௌலூன் (Kowloon) என்னுமிடத்தைப் பெற்றது. மேலும், பல துறைமுகங்களைப் பயன்படுத்தி வியாபாரம் செய்ய மேல்நாட்டவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அயல்நாட்டுத் தூதுவர்கள் பீக்கிங்கில் வசிக்க அனுமதிக்கப்பட்டார்கள். சமயப் பரப் பூழியர்களுக்குப் பாதுகாப்பளிக்க சீன அரசாங்கம் ஒப்புதல் தெரிவித்தது. அதுவன்றி, சீனாவில் வசிக்கும் ஐரோப்பியர்களை அவர்களுடைய நாட்டின் சட்டங்களைக்கொண்டு விசாரித்துத் தண்டிப் பதற்கும் சீனா இசைந்தது. அதன் பிறகு ஏனைய நாடுகளும் சீனாவுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ள முற்பட்டன. முதலில் வியாபாரத்

திற்காக சீனவுடன் தொடர்புகொண்ட நாடுகள் நாளடைவில் சீனவின் வலுவற்ற தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றன. சீனவிற்குச் சொந்தமாக அதைச் சுற்றியிருந்த சார்பு நாடுகளைக் கைப்பற்றினர்கள். 1853-ல் ருஷ்யா தன்னுடைய ஆதிக்கத்தை ஆமூர் நதிவரை பரப்பியது. மேலும், பசிஃபிக் கடற்கரையில் ஒரு சிறு நிலப்பரப்பைக் கைப்பற்றி விளாடிவாஸ்டாக் என்னும் நகரத்தை அமைத்தது. டான்கினில் (Tonkin) ஃபிரான்சினுடைய ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. பர்மா, சிக்கிம் பகுதிகள் ஆங்கிலேயர்கள் வசமாயின. சையாமின் ஒரு பகுதியை ஃபிரான்சும் பிரிட்டனும் தங்களிடையே பிரித்துக் கொண்டன.

மேல்நாடுகளன்றி ஜப்பானும் சீனவின் நிலையைப் பயன்படுத்தி நாடுகளைக் கைப்பற்ற முயன்றது என்றும், அதன் விளைவாக முதல் சீன-ஜப்பானியப் போர் ஏற்பட்டது என்றும் முன்னரே கண்டோம். அப் போரின் விளைவாக சீனவில் மேல்நாட்டவர்கள் பல உரிமைகளை சீனவிடமிருந்து பெற முற்பட்டனர். மஞ்சூரியாவில் இருப்புப்பாதை அமைப்பை ஏற்படுத்த ருஷ்யா உரிமை பெற்றது. ஜெர்மனி கியோ சௌ (Kiao Chow) என்னுமிடத்தைத் தனதாக்கிக்கொண்டது. மேற்கத்திய கருத்துகளின் செல்வாக்கை சீன புரிந்துகொள்ளவும் அப் போர் உதவியாக இருந்தது. ஆகவே, அப்பொழுது அரசாண்ட குவாங்சு (Kwang-Su) சீனவை மேற்கத்தியமயமாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். மேலும், போர் காரணமாக சீன அரசாங்கம் வெளிநாட்டவர்களிடமிருந்து பெருந் தொகையைக் கடனகப் பெற்றது. சீனவின் நிதிநிலையை அந்நியர்கள் கட்டுப்படுத்த அது வழி செய்தது. ஆகவே, பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிக்குள் சீனவின் அரசியல், வியாபாரம், நிதி ஆகியவற்றில் அயல் நாட்டவர்களின் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் சீனவில் கிளர்ச்சிகள் ஏற்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியிருந்தது. அந்நிய நாடுகளின் நடவடிக்கைகள் மக்களின் அருவருப்பை வளர்த்துவிட்டிருந்தன. அந்நியர்களை ,விரட்டவேண்டும் என்ற எண்ணங்கொண்டனர். கிறித்துவ சமயப் பரப்பாளர்களுடைய நடவடிக்கைகளும் மக்களின் எதிர்ப்பைத் தூண்டிவிட்டன. சீன-ஜப்பானியப் போரில் சீன தோல்வியடைந்ததால் சீனவின் மதிப்பு அழிந்துவிட்டது என்று மக்கள் கருதலாயினர். ஆகவே, அதற்குக் காரணமாயிருந்த அரசாங்கத்தின்பால் அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. மேலும், சீன-ஜப்பானியப் போர் மேற்கத்திய நாகரிகத்தின் சிறப்பை

வலியுறுத்தியது. எனவே, சீனர்களில் ஒரு சாரார் மேற்கத்திய கருத்து களை சீனுவில் புகுத்தப் பல துறைகளிலும் சீர்திருத்தங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று 'யங் சைனு' (Young China) என்ற இயக்கத்தை ஏற்படுத்தினுர்கள். அவர்கள் மஞ்சு அரசர்கள் அந்நியர்களாயிருந்த தால் அவர்களை நீக்கவேண்டும் என்று கருதினுர்கள். அவர்கள் சீனுவின் தெற்கு, நடுப்பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவர்களின் நடவடிக்கைகளின் விளைவாகப் பேரரசர் பல புரட்சிகரமான கட்டளைகளை ஏற்படுத்தினுர். பிற்போக்குக் கருத்துடையவர்கள் புரட்சிகரமான மாறுதல்களுக்கு இடங்கொடுக்கத் தயாராக இல்லை. ஆகவே, அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

புரட்சிகரமான மாறுதல்களைத் தடுத்து நிறுத்தவும், அந்நியர்களை விரட்டவும் 1899-ல் ஓர் இயக்கம் ஏற்பட்டது. அவ்வியக்கத்தில் பல அந்நியர்களை விரட்டுவதற்கெனத் தோற்றுவிக்கப்பட்ட இரகசியக் கழகங்கள் சேர்ந்துகொண்டன. அவைகளுள் ஒன்று 'பாக்ஸர் கழக மா'கும். அக் கழகங்கள் சேர்ந்துகொண்டதால், பல பலாத்காரச் செயல்கள் நடைபெற்றன. மஞ்சு குலத்தினர் மக்களிடம் செல்வாக்குப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடனும், மக்கள் அக் குலத்தினருக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபடுவதைத் தடைசெய்யும் நோக்கத்துடனும் பேரரசரின் தாயார் அவ்வியக்கத்திற்கு ஆதரவு அளித்தார். அதிகாரப் பொறுப்பைத் தானே ஏற்று, பேரரசர் ஏற்படுத்திய புரட்சிகரமான மாறுதல்களை ரத்து செய்தார். வெளிநாட்டவருக்கு எதிராக ஏற்பட்ட இயக்கம் 1900-ல் உச்ச கட்டத்தை அடைந்தது. பீக்கிங் நகரத்தி லிருந்த வெளிநாட்டுத் தூதுவர்கள், கிறித்துவ சமயப் பரப்பாளர்கள், அந்நியர்கள் ஆகிய பலர் கொல்லப்பட்டனர். இறுதியில் பல நாடு களின் போர்வீரர்களைக்கொண்ட படையொன்றை அந்நிய நாடுகள் அனுப்பிக் கலகத்தை அடக்கின. பேரரசியார் ஓடிவிட்டார். சீனுவைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு மேல்நாட்டவர்களுக்கு இருந்த போதிலும், சீனுவின் கூறுபடா நிலையை அமெரிக்கா ஆதரித்ததால், சீனு மேல்நாட்டவர்களிடையே மேலும் பிரிக்கப்படாமல் தொடர்ந்து இருந்துவந்தது. ஆனுல், சீனு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும், வடசீனுவில் அந்நிய நாட்டினர்களின் படையை நிலை நிறுத்திவைக்கவும், வியாபாரம்பற்றிய உடன்படிக்கைகளைத் திருத்தி யமைக்கவும் ஒப்புக்கொள்ள நேர்ந்தது.

1911-ல் மற்ருெரு புரட்சி ஏற்பட்டது. 1904–1905-ல் நடைபெற்ற ருஷ்ய–ஜப்பானியப் போர் சீன மக்களை விழிப்படையச் செய்தது. மஞ்சு அரசர்கள் ஆற்றலிழந்தவர்களாய் இருந்தனர். அவர்கள் ஆட்சியில் ஊழல் மலிந்திருந்தன. அவர்கள் காலத்தில் சீனு பல

போர்களில் ஈடுபட்டுத் தோல்வியடைந்தது. சீனுவினுல் தாழ்வாகக் கருதப்பட்ட ஜப்பான் சீனுவைத் தோற்கடித்ததோடல்லாமல், ருஷ்யா வையும் தோல்வியுறச் செய்தது. ருஷ்யாவின் தோல்வி சீனுவில் ஜப்பானினுடைய செல்வாக்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுத்தியது. மஞ்சு அரசர்களின் வலுவற்ற நிலை, ஏனைய அந்நிய நாடுகளின் செல்வாக்கு சீனுவில் ஏற்படக் காரணமாயிருந்தது என்று மக்கள் கருதலாயினர். ஆகவே, மஞ்சு அரசர்களே சீனர்களுடைய துன்பங் களுக்குக் காரணமானவர்கள் என்று அவர்கள் கருதினுர்கள். மஞ்சு அரசர்கள் அந்நியர்கள் என்ற காரணத்தாலும் அவர்கள் மக்களிடம் தொடர்ந்து செல்வாக்குப் பெற முடியாது போயிற்று. மேலும், இதுகாறும் மஞ்சு அரசர்களுடைய செல்வாக்கு மக்களிடம் நிலைத்து இருக்கப் பேரரசியார் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டார். 1900-ல் ஏற்பட்ட இயக்கம் மஞ்சு அரசர்களைப் பாதிக்காதிருக்கும்பொருட்டு மிகத் திறமையாக அவ்வியக்கத்தை அந்நியர்களுக்கு எதிராகத் திருப்பி விட்டார். மீண்டும் 1906-ல் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி மக்களுடைய ஆதரவை மஞ்சு அரசர்களுக்குத் தேடித்தர முற்பட்டார். இராணுவ அமைப்பை மேற்கத்திய முறைக்கு ஏற்றவாறு திருத்தியமைத்தார். பள்ளிகள் நிறுவினுர். ஆட்சிமுறையில் திருத்தங்கள் ஏற்படுத்தினுர். புதிய அரசியலமைப்பு ஏற்படுத்துவதாக வாக்களித்தார். ஆனுல், திட்டங்கள் அனைத்தையும் செயற்படுத்து முன்னர் அவர் இறந்து விட்டார். அவருடைய மறைவு மஞ்சு அரசர்களுக்குப் பெரு நஷ்டத்தை விளைவித்தது.

மேற்கூறிய காரணங்களால் 1911-ல் புரட்சி ஏற்பட்டது. சன்யாட் சென் (Sunyatsen) புரட்சியின் தலைவராக விளங்கினுர். 1867-ல் தெற்கு சீனுவில் ஏழைக் குடியானவரின் மகனுகப் பிறந்தார். 1895-க் குள்ளாகவே புரட்சிக் கருத்துகளை மேற்கொண்டார். அக் கருத்துகளை நிறைவேற்றிக்கொள்ள 'கோமின்டாங்' (Kuomintang) என்ற கட்சியை அமைத்தார். சன்யாட்சென் சில முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தார். சீனுவைத் தேசீயக் கோட்பாட்டை அடிப்படை யாகக்கொண்ட நாடாக அமைக்கவேண்டும் என்று கருதினுர். அதற் காக அந்நியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சலுகைகளை அழித்து, சீனர்களுக்கு எல்லா அதிகாரங்களையும் உரிமைகளையும் அளிக்க வேண்டும் என்று எண்ணினுர். சீனுவைக் குடியரசு நாடாக் மாற்ற வேண்டும் என்றும் திட்டமிட்டார். மக்களாட்சி முறையைச் சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சபையை ஏற்படுத்துதல், மக்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்ள எண்ணினுர். பிறகு சோஷியலிஸக் கொள்கையை அடிப்படை யாகக்கொண்டு பொருளாதாரத்துறையைத் திருத்தியமைக்கவேண்டும் என்று எண்ணினுர். அதற்காக விவசாயம், தொழில், வியாபாரம்

ஆகியவை பெருக வழி செய்யவேண்டும் என்று திட்டமிட்டார். சமூக நலப் பணிகளேயும் மேற்கொள்ள எண்ணினர். வெளிநாட்டு விவகாரங்களில் சீன சமாதானத்தையே பின்பற்றிவரவேண்டும் என்றும், ஆதிக்கக் கொள்கையை நிராகரிக்கவேண்டும் என்றும் எண்ணமிட்டார்.

1911-ல் ஹான்கௌ (Hankow), வூஷாங் (Wuchang) என்னுமிடங்களில் புரட்சி ஆரம்பமாயிற்று. சீன குடியரசு நாடாக அமைக்கப்பட்டது. பீக்கிங் அரசாங்கம் புரட்சிக்காரர்களை அடக்க மஞ்சு படைத் தலைவர்களில் ஒருவரான யுவான்ஷிகேவிற்கு அழைப்பு விடுத்தது. அவர் அதனுடைய அழைப்பிற்கிணங்கி ஹான்கௌவைக் கைப்பற்றினர். ஆனல், ஒன்றன்பின் ஒன்ருகப் பல நகரங்கள் பீக்கிங் ஆட்சிக்கு எதிராகச் சேர்ந்துகொண்டன. 1911-ல் தேசீய சபையொன்று நான்கிங்கில் நடைபெற்றது. சன்யாட்செனை சீனக் குடியரசின் தலைவராக அம் மாநாடு தேர்ந்தெடுத்தது. 1912-ல் பேரரசர் முடி துறந்தார். அப்பொழுது யுவான்ஷிகேயை சீனவில் குடியரசு ஒன்றை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். அதனல் நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது. குடியரசைக் காப்பாற்றுவதற்கும், ஒற்றுமையை நிலைநாட்டவும் சன்யாட்சென் குடியரசுத் தலைமைப் பதவியை யுவான்ஷிகேயிக்கு விட்டுக்கொடுத்தார். 1912-ல் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதன்படி குடியரசுத் தலைவர் மக்கள் சபையின் அதிகாரத்திற்குட்பட்டு நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. புதிய மக்கள் சபையில் கோமின்டாங் கட்சியினர் பெரும்பான்மையினராக இருந்தார்கள்.

சீனக் குடியரசு பல இடையூறுகளைத் தாங்கவேண்டியதாயிருந்தது. யுவான்ஷிகே குடியரசை நடத்தத்தக்க திறம் பெற்றிருக்கவில்லை. மேலும், அவருக்கும் மக்கள் சபைக்கும் தகராறுகள் ஏற்பட்டன. 1913-ல் மக்கள் சபை கலைக்கப்பட்டது. முதலிலிருந்தே கோமின்டாங் கட்சியின் செல்வாக்கை அழிக்க முற்பட்டார். தெற்கு சீனவில் அவருடைய ஆட்களைப் படைத் தலைவர்களாக நியமித்த போது கிளர்ச்சி ஏற்பட்டது. அக் கிளர்ச்சியை அடக்கி சன்யாட்செனை நாட்டைவிட்டு ஓடச் செய்தார். இறுதியில் குடியரசு அழிக்கப்பட்டது என்றும், மன்னர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது என்றும் 1915-ல் அறிவித்தார். அந்நியர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளை ஒழிப்பதற்குப் பதிலாக அவர்களுடைய உதவியைப் பெற்றுத் தனது ஆட்சியை ஏற்படுத்துவதற்காக அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை உறுதிப்படுத்தினர். 1915-ல் ஜப்பான் அனுப்பிய இருபத்தொரு கோரிக்கைகளில் பெரும் பகுதியை ஏற்றுக்கொண்டார் என்பதை நாம் முன்னரே படித்தோம். அதனல் நாட்டில் கலகம் ஏற்பட்டது. 1916-ல் யுவான்ஷிகே இறந்தார். அதன் பின்னர் குழப்

பம் அதிகரித்தது. அதன் பயனுகப் படைத்தலைவர்கள் தங்களுடைய அதிகாரத்தை வடக்கு சீனுவில் ஏற்படுத்தினுர்கள்.

சீனுவின் நிலையைச் சீர்படுத்துவதற்காக சன்யாட்சென் மீண்டும் தம் நாடு திரும்பினுர். தென் சீனுவில் தன்னுடைய அரசாங்கத்தை அமைத்தார். பீக்கிங்கில் நடைபெற்றுவந்த அரசாங்கம் படைத் தலைவர்களால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாட்சியை ஒழித்து சீனுவில் ஒரே ஆட்சியை ஏற்படுத்த முனைந்தார். சீனுவை ஐக்கியப் படுத்துவதற்கும், அமைதியை ஏற்படுத்துவதற்கும் போதிய உதவியை பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளிடமிருந்து பெற முடியாது என்று உணர்ந்த சன்யாட்சென், கம்யூனிஸ்டு ருஷ்யாவின் உதவியை நாடினுர். அதே நேரத்தில் சீனுவில் கம்யூனிஸ்டு கட்சியும் ஏற்படுத்தப் பட்டிருந்தது. 1924-ல் சன்யாட்சென் அரசாங்கத்துடனும், பீக்கிங் அரசாங்கத்துடனும் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டது. வட சீனுவில் ருஷ்யா செல்வாக்குப் பெற இயலவில்லை. மேலும், சீனுவி லிருந்த கம்யூனிஸ்டு தொழிற் சங்கங்கள் புரட்சிக்குத் தகுதியானவை யாக இன்னும் அமைக்கப்படவில்லை என்று ருஷ்யா கருதியது. ஆகவே, சன்யாட்சென் கட்சியினருக்கு அதிக ஆதரவளித்தது. 1925-ல் சன்யாட்சென் இறந்தார். அவருடைய நோக்கங்களை நிறை வேற்றும் பணி சியாங் கே ஷேக் (Chiang Kai Shek) என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சன்யாட்சென் தான் மேற்கொண்ட காரியத்தில் வெற்றி பெற வில்லை என்பது உண்மையேயாகும். செயல்முறைக்குரிய திட்டங்களை வகுக்கும் ஆற்றலை அவர் பெற்றிருக்கவில்லை. அவருடைய படைத் தலைவர்களில் பலர் திறமையற்றவர்களாய் இருந்தார்கள். ஆனுல், ஒரு கட்டான அமைப்பையும், சிறந்த தலைவரையும், வலிமையுடைய நேச நாடு ஒன்றையும், உயர்ந்த கருத்துகளைக் கொண்ட திட்ட மொன்றையும் சீனுவிற்கு அளித்துச் சிறப்புப் பணியாற்றினுர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவரைப் பின்தொடர்ந்த சியாங் கே ஷேக் ருஷ்யர்களின் உதவி கொண்டு ஹான்கௌ, நான்கிங், ஷாங்காய், பீக்கிங் ஆகியவற்றைக் கைப்பற்றினுர். அதன் விளைவாக சீனுவின் பெரும் பகுதியை அவருடைய ஆட்சியின்கீழ் ஒன்றுபடுத்தினுர். நான்கிங் அவருடைய தலைநகரமாக்கப்பட்டது. தன் ஆளுகைக்குட் பட்ட பகுதியில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினுர். சிறந்த முறை களைக் கையாள ஊக்குவித்தும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கியும் விவசாயத்தை முன்னேற்றினுர். தொழில்துறையில் அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டிவந்தது. தொழிலாளர்களுக்குப் போதிய இடர்க் காப்புறுதி அளிக்க சட்டங்கள் இயற்றப்பட்டன. நிதிநிலை சீராக்கப்பட்டது. சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. எல்லா இருப்புப்

பாதை அமைப்புகளும் ஒன்றுக்கப்பட்டன. ஆகாய விமானம் வழியாகச் செய்திக் கடிதங்கள் அனுப்ப ஏற்பாடு செய்தார். கல்வியைப் பெருக்குவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், குடியரசு என்ற பெயர் பெற்றிருந்தாலும், ஆட்சியதிகாரங்களை சியாங்கும் அவருடைய கட்சியினருமே பெற்றிருந்தார்கள் என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும். தல ஆட்சிமுறையில்தான் ஓரளவு மக்களாட்சிக் கருத்துகளுக்கு இடமளிக்கப்பட்டது.

சியாங்கினுடைய ஆட்சி பல இன்னல்களைத் தாங்கவேண்டியதாயிற்று. ஜப்பான் சீனாவில் ஆதிக்கம் ஏற்படுத்த செய்த முயற்சிகளைப்பற்றியும், அதனுடைய விளைவுகளைப்பற்றியும் நாம் முன்னரே கண்டறிந்தோம். அதுமட்டுமன்றி அவர் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்ந்து போர் செய்யவேண்டியதாயிற்று. சன்யாட்சென் ருஷ்யர்களுடைய உதவியை நாடினார் என்றும், அவர்கள் துணைகொண்டு தென் சீன அரசாங்கம் பீக்கிங்கைக் கைப்பற்றியது என்றும் கண்டறிந்தோம். நாளடைவில் ருஷ்ய கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குப் பெருகி வருவதை அவர் உணர்ந்தார். சீனாவைக் கம்யூனிஸ்டு நாடாக மாற்றுவதற்கு ருஷ்யா முயன்றுவருகிறது என்று அறிந்த சியாங்கு, கம்யூனிஸ்டுகளை அடக்கத் தொடங்கினார். அதை அறிந்த ருஷ்யா, கம்யூனிஸ்டுகளுக்கும் கோமின்டாங்கு கட்சியினருக்கும் சமரசம் ஏற்படுத்த முயன்றது. அம் முயற்சியில் இந்தியக் கம்யூனிஸ்டு எம். என். ராய் என்பவர் பங்குகொண்டார். ஆனால், அம் முயற்சி வெற்றிபெறவில்லை. அதன் பிறகு கம்யூனிஸ்டுகள் தங்களுடைய பலத்தைப் பெருக்கிக் கொள்ள முற்பட்டார்கள். பல கம்யூனிஸ்டு படைகள் உருவாக்கப்பட்டன. 1935-ல் மாசேதுங் (Mao-Tse-Tung) என்பவர் கம்யூனிஸ்டுகளின் 'தலைவரானார். கம்யூனிஸ்டுகளும் கோமின்டாங் கட்சியினரும் தொடர்ந்து போரிட்டுவந்தனர். ருஷ்யா கம்யூனிஸ்டுகளை ஆதரித்தது. அதே நேரத்தில் ஜப்பான் சீனாவைத் தாக்கியது. அவ்விருவருக்கும் பொதுவான பகைவன் நாட்டிற்குள் புகுந்ததால், அவர்கள் ஒன்றுபட்டு ஜப்பானை எதிர்க்கலாயினர். சுமார் பத்து ஆண்டுகளாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போர் அப்பொழுது தேசீயப் போராக மாறியது. அக் காலத்திலுங்கூட கம்யூனிஸ்டுகள் தங்களுடைய அமைப்பை பலப்படுத்துவதில் ஆர்வம் காட்டினர். ஜப்பானுடன் போர் நின்ற பிறகு, மீண்டும் கம்யூனிஸ்டுகளுக்கும் கோமின்டாங்கினருக்கும் தகராறுகள் ஏற்பட்டன. கோமின்டாங்கினருடைய செல்வாக்கு நாளடைவில் குறையலாயிற்று. 1947-ல் சியாங்கு கம்யூனிஸ்டுகளின் தலைநகரைத் தாக்கினார். ஆனால், 1948-ல் வடகிழக்கு சீனா கம்யூனிஸ்டுகள் வசமாயிற்று. 1949-ல் பீக்கிங்கைக் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றினர். அவ்வாண்டு .அக்டோபர் மாதம் முதல் தேதியன்று சீன மக்களின் குடியரசு நாடு ஏற்படுத்தப்பட்டது. கோமின்டாங்கினர் சீனாவினின்

றும் துரத்தப்பட்டனர். அவர்கள் பார்மோசா தீவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர்கள். இன்று சீனவில் கம்யூனிஸ்டுகள் ஆட்சியும், பார்மோசாவில் கோமின்டாங்கினர் ஆட்சியும் நடைபெற்று வருகிறது.

இந்தியா

பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் இந்தியாவிற்குக் கடல்வழி கண்டுபிடிக்க போர்ச்சுகீசியர் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக ஐரோப்பிய நாடுகள் இந்தியாவில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்த முற்பட்டன என்று நாம் முன்னரே கண்டறிந்தோம். நாளடைவில் அவைகளுக்குள் பலத்த போட்டி ஏற்பட்டதன் விளைவாக இறுதியில் பிரிட்டிஷ் பேரரசு இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே, நாம் நமது நாட்டில் பிரிட்டிஷ் பேரரசு ஏற்படுத்தப்பட்ட வரலாற்றினை முதலில் கவனிப்போம்.

இந்தியாவில் போர்ச்சுகீசியரே முதலில் வியாபாரத் தலங்களை ஏற்படுத்தினர்கள். அவர்களுக்குப் பின்னர் டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும், டேனியர்களும், ஃபிரஞ்சுக்காரர்களும் வியாபாரத் தலங்களை அமைத்தார்கள். 17ஆம் நூற்றுண்டில் போர்ச்சுகீசியர்களுக்கும், ஃபிரஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. இறுதியில் போர்ச்சுகீசியர்களுடைய செல்வாக்கு கோவா போன்ற சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் அழிக்கப்பட்டது. ஆங்கிலேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போட்டி 18ஆம் நூற்றுண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது. ஆயினும், டச்சுக்காரர்கள் தங்களுடைய கவனத்தைப் பெரும்பாலும் கிழக்கிந்தியத் தீவுகளிலேயே செலுத்திவந்தனர். அந் நூற்றுண்டிலேயே ஃபிரஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் கடுமையான போட்டி ஏற்பட்டது. அதன் விளைவாகப் போர் ஏற்பட்டது. அப் போர் பெரும்பாலும் கர்நாடகத்தில் நடைபெற்றதால், அதற்குக் கர்நாடகப் போர் என்ற பெயர் வழங்கப்பட்டது.

பிரிட்டனும் ஃபிரான்சும் ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுப் போரில் கலந்துகொண்டதால், கர்நாடகத்தில் ஃபிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் போரிடத் தொடங்கினர்கள். அப்பொழுது சென்னையை ஃபிரஞ்சுக்காரர்கள் கைப்பற்றினர்கள். கர்நாடகத்தை ஆண்டுவந்த நவாப் போரை நிறுத்தும்படி கட்டளையிட்டார். ஃபிரஞ்சுக்காரர்கள் அக் கட்டளையை மீறியதால், நவாப் தனது சேனையைச் சென்னையை நோக்கி நடத்திச் சென்றுர். ஆனல், அடையாற்றுக்கு அருகே அவர் தோல்வியுற்றுர். 1748-ல் ஆங்கிலேயர்கள் பாண்டிச்சேரியை முற்றுகையிட்டனர். அதே ஆண்டில் ஐரோப்பாவில் போர்

முடிவுற்றது. சென்னையை ஆங்கிலேயர்களுக்குத் திருப்பியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அப்பொழுது பாண்டிச்சேரியின் கவர்னராகப் பணியாற்றிவந்த டூப்ளே (Dupleix) என்பவர் கொண்டிருந்த பேராசையே இரண்டாவது கர்நாடகப் போருக்குக் காரணமாகும். டூப்ளே திணைக்குடி ஆட்சியாளர்களுடைய விவகாரங்களில் தலையிடலானார். அப்பொழுது கர்நாடக நவாப் பதவிக்கு இருவர் போட்டியிடலானார்கள். அன்வருதீன் (Anwar-ud-din) நவாபாக நியமிக்கப்பட்ட பின்னர், அவருக்கு முன்னர் கர்நாடகத்தை ஆண்டுவந்த தோஸ்த் அலியின் (Dost Ali) மருமகனான சந்தாசாகிப் நவாப் பதவியின்மீது உரிமை கொண்டாடினார். தோஸ்த் அலியின் உறவினர்களும் நண்பர்களும் உதவி புரிந்தார்கள். அதே நேரத்தில் தக்காண ஆட்சி உரிமையையும் இருவர் கொண்டாடினார்கள். தக்காண அரசை ஏற்படுத்திய ஆசப் ஜா (Asaf Jah) இறந்த பின்னர், அவருடைய மகன் நாசர் ஜங் (Nasir Jang) பதவியேற்றார். ஆனால், ஆசப்ஜாவினுடைய பேரனான முசாபர்ஜங் அவரை எதிர்த்தார். டூப்ளே சந்தா சாகிப்பினுடனும், முசாபர்ஜங்குடனும் இரகசியமாக ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன் விளைவாக அன்வருதீன் ஆம்பூர் என்னுமிடத்தில் தோற்கடிக்கப் பட்டார். அவருடைய மகன், முகமது அலி திருச்சிராப்பள்ளிக்கு ஓடிவிட்டார். அக் கோட்டையைக் கைப்பற்ற ஃபிரஞ்சுப் படையொன்று அனுப்பப்பட்டது. ஆங்கிலேயர்கள் டூப்ளேயின் நடவடிக்கைகளால் ஏற்படும் ஆபத்தை நன்கு உணர்ந்தார்கள். ஆகவே, நாசர்ஜங்கைக் கர்நாடக விவகாரங்களில் தலையிட்டு முகம்மது அலியை நவாபாக ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். கர்நாடகம் அக் காலத்தில் நிஜாமுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், நாசர்ஜங் இறுதியில் கொல்லப் பட்டார். முசாபர்ஜங் தக்காண சுபேதார் ஆனார். டூப்ளே பல நிலப் பகுதிகளை வெகுமதியாகப் பெற்றார். மேலும், ஃபிரஞ்சுப் படையொன்று முசாபர்ஜங்குக்கு உதவியாக அனுப்பப்பட்டது. அதன் விளைவாக சுபேதாரின் அரசவையில் ஃபிரஞ்சுக்காரர்களின் செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டது.

அதற்கிடையில் ஆங்கிலேயர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காகச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கர்நாடகப் பகுதி டூப்ளேயின் ஆதரவுபெற்றவரிடம் இருக்கும்வரை ஆங்கிலேயர்கள் கர்நாடகத்தில் நிலைத்திருக்க முடியாது என்று உணர்ந்தார்கள். ஆகவே, அவர்கள் முகம்மது அலிக்கு உதவி செய்யவேண்டியதாயிற்று. திருச்சிராப்பள்ளியை நோக்கி ஆங்கிலேயப் படை முன்னேறியது. மற்றொரு படை ராபர்ட் கிளைவின் தலைமையின்கீழ்

ஆர்க்காட்டை நோக்கிச் சென்றது. அதனால் சந்தாசாகிப் தன்னுடைய சேனையின் பெரும் பகுதியை ஆர்க்காட்டைக் காப்பாற்றுவதற்குத் திருச்சியினின்றும் அனுப்ப வேண்டியதாயிற்று. முடிவில் கிளைவ் ஆர்க்காட்டைக் கைப்பற்றினார். திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டிருந்த ஃபிரஞ்சுப் படை தோற்கடிக்கப்பட்டது. ஃபிரஞ்சுப் படை முடிவில் சரணடைந்தது. சந்தாசாகிப் கொல்லப்பட்டார். டுப்ளேயின் தோல்விகளைப்பற்றிக் கேள்வியுற்ற ஃபிரஞ்சு அரசாங்கம் டுப்ளேயைத் திரும்ப அழைத்துக்கொண்டது. அதனால் ஆங்கிலேயர்கள் கர்நாடகத்தில் தங்களுடைய ஆதிக்கத்தை எளிதாக ஏற்படுத்த வாய்ப்பு ஏற்பட்டது. 1754-ல் சமாதானம் ஏற்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர்களும் ஃபிரஞ்சுக்காரர்களும் சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். ஃபிரஞ்சுக்காரர்கள் தக்காண சுபேதாரிடமிருந்து பெற்ற நிலப்பகுதிகளைத் திருப்பிக்கொடுக்க இசைந்தனர். இவ்வாறாக, ஃபிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் கர்நாடகத்தில் ஏற்பட டுப்ளே செய்த பெரு முயற்சியை ஆங்கிலேயர்கள் தோற்கடித்தனர்.

1756-ல் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் ஏற்பட்டபோது, கர்நாடகத்தில் மீண்டும் ஆங்கிலேயர்களுக்கும் ஃபிரஞ்சுக்காரர்களுக்கும் இடையே போர் ஏற்பட்டது. ஃபிரான்சு லாலி பிரபுவை (Count de Lally) என்பவரைக் கர்நாடகத்திற்கு அனுப்பிவைத்தது. சென்னையை அவர் முற்றுகையிட விருப்பப்பட்டார். ஆனால், ஃபிரஞ்சுக் கப்பற்படை அவருக்கு உதவி செய்ய மறுத்ததால், அத்திட்டத்தைக் கைவிட்டார். பிறகு தஞ்சாவூர் அரசரிடமிருந்து ஃபிரஞ்சுக்காரர்களுக்குச் சேரவேண்டிய தொகையைப் பெறுவதற்குத் தஞ்சாவூரை முற்றுகையிட்டார். அதிலும் அவர் வெற்றி பெறவில்லை. பிறகு சென்னையை முற்றுகையிட்டார். அதிலும் அவர் தோல்வியே அடைந்தார். முடிவில் வந்தவாசி என்னுமிடத்தில் அவருடைய படை ஆங்கிலேயர்களால் முறியடிக்கப்பட்டது. பாண்டிச்சேரி முற்றுகையிடப்பட்டது. 1761-ல் அது சரணடைந்தது.

அதற்கிடையே தக்காணத்திலிருந்த ஃபிரஞ்சுப் படையை லாலி திரும்பிவருமாறு உத்தரவு இட்டார். அவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கிளைவ் வங்காளத்தினின்றும் ஒரு படையை அனுப்பினார். அது வடசர்க்கார் பிரதேசத்தை ஃபிரஞ்சுக்காரர்களிடமிருந்து கைப்பற்றியது. 1763-ல் போர் முடிவுற்றது. பாண்டிச்சேரி ஃபிரஞ்சுக்காரர்களுக்குத் திருப்பியளிக்கப்பட்டது. மூன்றாவது கர்நாடகப் போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கத்தைக் கர்நாடகத்தில் எதிர்க்க வல்ல ஐரோப்பியர்கள் எவருமில்லை என்று கூறலாம். இத்தகைய நிலையை ஆங்கிலேயருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் அவர்

களுடைய கப்பற்படையும், கிளைவ் போன்ற ஒப்பற்ற படைத்தலைவர்களும் பெரும் பங்கு கொண்டனர். அதே நேரத்தில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி தன்னுடைய வியாபாரத்தில் தொடர்ந்து அக்கறை காட்டிவந்ததால், அதனுடைய நிதிநிலை பாதிக்கப்படாமல் இருந்தது. அதுவும் ஆங்கிலேயர்களுடைய வெற்றிக்குக் காரணமாகும்.

ஆங்கிலேயர்கள் இந்திய அரசர்களுடனும் போர்புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. வங்காளத்தில் ஆங்கிலேயர்கள் பல தலங்களை ஏற்படுத்தி யிருந்தனர். வங்காளத்தின் நவாபுகளில் ஒருவரான சிராஜ்-உத்-தௌலா ஆங்கிலேயரின் பகைவரானார். கல்கத்தா கோட்டையை ஆங்கிலேயர்கள் பலப்படுத்த முயன்றார்கள். அதற்கு சிராஜ்-உத்-தௌலா சம்மதிக்கவில்லை. ஆகவே, புதிதாக அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களை அழித்துவிடுமாறு கட்டளையிட்டார். ஆங்கிலேயர்கள் அதற்கு இசையவில்லை. எனவே, சிராஜ்-உத்-தௌலா கல்கத்தாவைத் தாக்கி அதைக் கைப்பற்றினார். அதை அறிந்த சென்னை கவர்னர் கிளைவின் தலைமையின்கீழ் ஒரு படையை வங்காளத்திற்கு அனுப்பினார். அவருக்கு உதவியாக வாட்சன் தலைமையின்கீழ் ஒரு கப்பற்படை அனுப்பப்பட்டது. கல்கத்தா மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று. அதன் பிறகு அவர்கள் ஃபிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான சந்திரநாகூரைக் கைப்பற்றினார்கள். மேலும், சிராஜ்-உத்-தௌலாவின் பகைவர்களுடன் சேர்ந்து அவரை வீழ்த்தச் சூழ்ச்சி செய்தார்கள். ஆகவே, அவர் ஆங்கிலேயர்களைப் பிளாசி என்னுமிடத்தில் தாக்கினார். சிராஜ்-உத்-தௌலாவின் படைத் தலைவர்களில் ஒருவரான மீர்ஜாஃபர் துரோகச் செயலில் ஈடுபட்டதால், சிராஜ்-உத்-தௌலா தோற்கடிக்கப்பட்டார். அதன் பிறகு மீர்ஜாஃபர் நவாபாக நியமிக்கப்பட்டார். ஆங்கிலேயக் கம்பெனிக்கு மீர்ஜாஃபர் 24 பர்கானக்களை அளித்தார். ஃபிரஞ்சுக்காரர்கள் வங்காளத்தினின்றும் வெளியேற்றப்பட்டனர். அதன் பிறகு மீர்ஜாஃபர் டச்சுக்காரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததால், அவரை நீக்கிவிட்டு மீர்காசிம் என்பவரை நவாபாக நியமித்தார். பிறகு ஆங்கிலேயர்கள் அவருடனும் சண்டையிட்டுக்கொண்டார்கள். மீர்காசிம் அயோத்தியின் நாவபு, மொகலாயப் பேரரசர் ஆகியோரின் துணைகொண்டு ஆங்கிலேயருடன் போர் செய்தார். பக்ஸார் என்னுமிடத்தில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றார்கள். மொகலாயப் பேரரசர் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார். 1765-ல் வங்காளம் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்டது. நவாப் பெயரளவில் வங்காளத்தின் தலைவராக இருந்தார்.

1767 முதல் 1799 வரை ஆங்கிலேயர்கள் மைசூர் அரசர்களான ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியவர்களுடன் போர் புரிந்தனர்.

முதலாவது மைசூர்ப் போரில் முதலில் ஆங்கிலேயர்கள் மராத்தியர்கள், நைஜாம் ஆகியோரின் உதவியைப் பெற்றனர்கள். ஹைதர் அலி பொருள் கொடுத்து மராத்தியர்களைப் போரினின்றும் விலகச் செய்தார். நைஜாம் ஹைதர் அலியின் பக்கம் சேர்ந்துகொண்டார். அவ்வாறிருந்தும் ஆங்கிலேயர்கள் பல வெற்றிகளை அடைந்தார்கள். திருவண்ணாமலையில் அவர்கள் பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்கதாகும். அதனால் நிஜாம் போரினின்றும் விலகினார். ஹைதர் பாராமஹாரில் படையெடுத்துச் சில இடங்களைக் கைப்பற்றினார். அதன் பிறகு கர்நாடகத்திலும் படையை நடத்திச் சென்னையைத் தாக்க முற்பட்டார். 1769-ல் சென்னை கவர்னருக்கு அவர் சமாதானத்திற்கான நிபந்தனைகளை அறிவித்தார். அதன்படி அவரவர் கைப்பற்றிய இடங்களைத் திருப்பியளிக்க முடிவு செய்யப்பட்டது. ஹைதருக்கு எதிராகப் போர் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் அவருக்கு உதவி செய்ய இசைந்தார்கள்.

1771-ல் மராத்தியர்கள் மைசூர்மீது படையெடுத்தார்கள். ஆங்கிலேயர்கள் அப்பொழுது உதவிக்குச் செல்லவில்லை. ஆகவே, ஹைதர் கோபமடைந்தார். 1779-ல் ஆங்கிலேயர்களுக்கெதிராக ஏற்படுத்தப் பட்ட கூட்டமைப்பில் அவர் கலந்துகொண்டார். மைசூரில் ஃபிரஞ்சுக் காரர்களுக்குச் சொந்தமாயிருந்த மாகியை ஆங்கிலேயர்கள் கைப் பற்றியபோது ஹைதர் போர் தொடுத்தார். 1780-ல் கர்நாடகத்தில் படை நடத்தி ஆர்க்காட்டைக் கைப்பற்றினார். அப்பொழுது கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் கூட்டமைப்பை அழித்தார். ஆகவே, ஹைதர் தனியாகப் போர்புரிய வேண்டியதாயிற்று. அவ்வாறிருந்தும் அவர் தொடர்ந்து போர்புரிந்தார். ஆங்கிலேயர் படை ஹைதரை போர்ட் நோவோ (Port Novo) என்னுமிடத்தில் தோற்கடித்துச் சென்னையைக் காப்பாற்றியது. 1882-ல் ஹைதர் இறக்கவே, அவருடைய மகன் திப்புசுல்தான் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டான். அவ் உடன்படிக்கையின்படி அவ்விருவரும் தாம் தாம் கைப்பற்றிய இடங்களைத் திருப்பிக்கொடுக்க இசைந்தார்கள்.

திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களின் நட்பு நாடான திருவாங்கூரைத் தாக்கியதால், மூன்றாவது மைசூர்ப் போர் ஏற்பட்டது. திப்பு சுல்தான் ஃபிரஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற முயன்றார். அப்பொழுது கவர்னர் ஜெனரலாயிருந்த காரன்வாலிஸ் பிரபு தாமே படையை நடத்திச் சென்றார். 1791-ல் பெங்களூரைக் கைப்பற்றினார். மழை காரணமாகக் காரன்வாலிஸ் மங்களூர் செல்லவேண்டியதாயிற்று. திப்பு கோயம்புத்தூரைக் கைப்பற்றினார். 1792-ல் காரன்வாலிஸ் பல கோட்டைகளைக் கைப்பற்றி சீரங்கப்பட்டணத்திற்கு அருகே சென்றடைந்தார். ஆகவே, திப்பு சீரங்கப்பட்டண உடன்படிக்கை செய்து கொண்டார். அவருடைய இராச்சியத்தின் பாதிப் பகுதியை இழக்க

நேர்ந்தது. அதில் ஒரு பகுதி நிஜாமுக்கு அளிக்கப்பட்டது. மற்றொரு பகுதி மராத்தியர்களுக்கு அளிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் மலபார், திண்டுக்கல், பாராமஹால் ஆகிய இடங்களைப் பெற்றனர்கள். குடகு நாட்டு அரசருக்கு திப்பு சுதந்திரம் அளிக்க இசைந்தார். அவரது இரு குமாரர்களும் ஆங்கிலேயர்களிடம் பிணையாக நிறுத்தப்பட்டார்கள். அதன் பிறகு திப்பு ஃபிரஞ்சுக்காரர்களுடைய உதவியைக்கொண்டு இழந்த இடங்களைத் திரும்பப் பெற முயற்சி செய்தார். ஃபிரஞ்சுக் காரர்களை வரவேற்றார். திப்பு சுல்தானின் உதவியைக்கொண்டு ஃபிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் மீண்டும் இந்தியாவில் ஏற்படுவதைத் தடுக்க அப்பொழுது கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லெஸ்லி பிரபு முற்பட்டார். ஆகவே, நான்காவது மைசூர்ப் போர் தொடங்கியது. திப்பு செடசீர் (Sedeser), மால்வெல்லி (Malvelly) ஆகிய இடங்களில் தோற்றார். அதனால் சீரங்கப்பட்டணம் முற்றுகையிடப்பட்டது. திப்பு போரிலே மாண்டார். ஆங்கிலேயர்கள் கன்னடம், வைநாடு, கோயம் புத்தூர், தாராபுரம் ஆகிய இடங்களைப் பெற்றனர். நிஜாமுக்கு ஒரு பகுதி அளிக்கப்பட்டது. முன்னர் மைசூரில் ஆண்டுவந்த இந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ உடையார் என்ற சிறுவர் எஞ்சியுள்ள பகுதிக்கு அரசரானார். மைசூரில் ஆங்கிலேய ரெசிடன்டு ஒருவர் அமர்த்தப்பட்டார். அப்போர்களின் விளைவாகத் தென்னிந் தியாவின் பெரும்பகுதி ஆங்கிலேய ஆளுகைக்குட்பட்டது.

மராத்தியத் தலைவர்களின் கூட்டு இணைவு ஆங்கிலேயருடைய ஆதிக்கத்தை இந்தியாவில் ஏற்படுத்துவதற்குத் தடையாக இருந்தது. மராத்தியத் தலைவர்களிடையே ஏற்பட்டிருந்த பிளவுகள், அவர்களுடைய விவகாரங்களில் ஆங்கிலேயர்கள் தலையிட்டு, அதன் பயனைத் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்குத் துணைபுரிந்தன. சாம்பூஜிக்குப் பின்னர் மராத்திய நாட்டின் ஆட்சியதிகாரங்களை பீஷ்வா வகிக்க நேர்ந்தது என்று முன்னரே குறிப்பிட்டோம். 1772-ல் பீஷ்வா மாதவ ராவ் இறந்தபின்னர் நாராயண ராவ் அப் பதவியிலமர்ந் தார். ஆனால், அவரைக் கொன்றுவிட்டு ரகுநாத ராவ் பீஷ்வாவின் பொறுப்புகளை ஏற்றார். ஆனால், நானாபட்னாவிஸ் போன்ற மராத்தியத் தலைவர்கள், நாராயண ராவின் மறைவிற்குப்பின், அவருக்குப் பிறந்த மகனை பீஷ்வாவாக ஏற்றுக்கொண்டார்கள். அதனால் நாட்டைவிட்டு ஓடிய ரகுநாத ராவ் ஆங்கிலேயர்களின் துணையை நாடினார். பம்பாயி லிருந்த ஆங்கிலேயர்கள் அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி பம்பாயிக்கு அருகே இருந்த இடங்களைப் பெற ரகுநாத ராவுக்கு உதவியளிக்க இசைந்தார்கள். ஆங்கிலேயப் படையுடன் ரகுநாத ராவ் தம் பகைவர் களைத் தோற்கடித்தார். ஆனால், பம்பாய் ஆங்கிலேயர்களின் செய்கை யைக் கல்கத்தாவிலிருந்த தலைமை ஆட்சிக்குழு கண்டித்தது. மேலும், அது ரகுநாத ராவிற்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட பீஷ்வா

வுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. ரகுநாத ராவை ஆதரிப்ப தில்லை என்று ஆங்கிலேயர்கள் அறிவித்தார்கள். அதற்காக அவர்க ளுக்கு சால்செட் என்னுமிடத்தை பீஷ்வா அளிக்க ஒப்புக்கொண்டார். பம்பாய் அரசாங்கத்தார் புதிய திட்டத்தை எதிர்த்தனர். ரகுநாத ராவுக்குப் புகலிடம் தந்தனர். நானு பட்னுவிஸ் இப்பொழுது பீஷ்வா வின் அதிகாரங்களைப் பெற்றிருந்தார். அவர் கல்கத்தா அரசாங்கத் துடன் செய்துகொண்ட உடன்படிக்கையை நிறைவேற்ற முற்பட வில்லை. மேலும், ஃபிரஞ்சுக்காரர்களுக்குச் சலுகைகள் அளிப்பதாக வாக்குறுதி கூறினுர் என்ற செய்தியும் ஆங்கிலேயருக்கு எட்டியது. ஆகவே, இங்கிலாந்தில் கம்பெனியின் ஆட்சியைக் கண்காணித்து வரும் இயக்குநர்கள் பம்பாய் அரசாங்கத்தின் திட்டத்தை ஆதரித் தனர். ஆகவே, மீண்டும் பம்பாய் அரசாங்கம் ரகுநாத ராவ் சார்பில் போரில் ஈடுபட்டது. ஆங்கிலேயர்கள் முதலில் தோல்வியுற்றனர். மராத் தியர்களிடமிருந்து பெற்ற இடங்களைத் திருப்பித்தர நேர்ந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தினின்றும் படை அனுப்பி மராத்தியர்களைத் தோற்கடித்தார். மராத்திய நாடுகளின் தலைவர்களுள் ஒருவரான சிந்தியா, சிப்ரி (Sipri) என்னுமிடத்தில் தோற்றுர். அவர் ஆங்கிலேய ருடன் சமாதானம் செய்துகொண்டார். அவருடைய முயற்சியால் சால்பை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அப் போரின் முடிவில் ஆங்கிலேயர்கள் சால்செட்டைப் பெற்றுர்கள். மாதவ ராவ் நாரா யண் பீஷ்வாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

மாதவ ராவ் நாராயணுக்குப் பிறகு இரண்டாவது பாஜி ராவ் பீஷ்வா பதவியேற்றுர். அவர் காலத்தில் மராத்தியத் தலைவர்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்ற வெல்லஸ்லி, அவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறுகளைப் பயன்படுத்தி ஆங்கிலேய ஆதிக்கத்தை ஏற் படுத்த முனைந்தார். அதே நேரத்தில் ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்தை மராத்தியர்கள்மீது ஏற்படுத்துவதைத் தடைசெய்துவந்த நானு பட்னு விஸ் இறந்தார். அவருக்குப் பின்னர் ஜஸ்வந்த் ராவ் ஹோல்காரும் தௌலத் ராவ் சிந்தியாவும் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தார்கள். பாஜி ராவ், அவர்கள் இருவருடனும் கள்ளத் தொடர்பு வைத்துக்கொண்டார். முடிவில் அவர் பதவியினின்றும் நீக்கப்படவே, வெல்லஸ்லியின் துணையை 1802-ல் நாடினுர். அதன் விளைவாக பாஜி ராவ் வெல்லஸ்லியுடன் துணைப்படை ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். அதனுல் ஆங்கிலேயர்கள் மராத்திய நாடுகளில் சிலவற்றைப் பெற்றனர். ஆங்கிலேயப் படையொன்று பீஷ்வாவின் நிலப்பகுதியில் நிலைநிறுத்தப்பட்டது. அவ்வுடன்படிக்கை ஏனைய மராத்தியத் தலைவர்களின் கோபத்தைக் கிளறியது. அவர்கள் எல் லோரும் ஒன்றுசேர்ந்து நாட்டின் சுதந்திரத்தைக் காக்க அக் காலத்தில்

கூட முயலவில்லை. தௌலத் ராவ் சிந்தியாவும் ரகுஜி பான்ஸ்லேயும் ஒன்றுசேர்ந்தனர். ஹோல்கார் சில காலத்திற்குப் பின்னரே சேர்ந்தார். கெய்க்வார் நடுநிலை வகித்தார். பாஜிராவ் தனது பிழையை உணர்ந்தவராய் அவர்களுக்கு மறைமுகமாக ஊக்கங்கொடுத்து வந்தார். அஸ்ஸேயி (Assaye) என்னுமிடத்தில் ஆர்தர் வெல்லஸ்லி சிந்தியா, பான்ஸ்லே ஆகியோருடைய படைகளைத் தோற்கடித்தார். பான்ஸ்லேயின் படை மீண்டும் ஆரகான் (Aragon) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டது. சிந்தியாவின் படைகள் வடக்குப் பகுதியில் டெல்லிக்கருகேயும், லாஸ்வாரி என்னுமிடத்திலும் தோற்கடிக்கப்பட்டன. இருவரும் சமாதானம் செய்துகொண்டார்கள். அதன் பின்னர் ஹோல்கார் போரில் ஈடுபட்டார். முதலில் சில வெற்றிகளைப் பெற்றார். டில்லியை முற்றுகையிட்டார். ஆனால், டிக் (Dig) என்னுமிடத்தில் தோல்வியுற்றார். வெல்லஸ்லியின் போர்கள் பெருஞ்செலவை ஏற்படுத்தியதாலும், ஆங்கிலேயர்கள் சில தோல்விகளை அடைந்ததாலும் வெல்லஸ்லி திரும்ப அழைக்கப்பட்டார். இரண்டாவது மராத்தியப் போர் ஆங்கிலேயர்களின் ஆட்சிப்பகுதியை மேலும் பரவச் செய்தது. ஒரிசா, வார்தா நதியின் வடக்கேயுள்ள பகுதி, கங்கை, யமுனை ஆகியவற்றின் இடையேயுள்ள பகுதி, தில்லி, அகம்மது நகர், புரோச் ஆகிய இடங்களைப் பெற்றனர். சிந்தியா, பான்ஸ்லே ஆகியவர்களின் தலைநகரங்களில் ஆங்கிலேய ரெஸிடென்டுகளை அமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1805-ல் கெய்க்வார் துணைப்படை ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். 1816-ல் பான்ஸ்லே துணைப்படை ஒப்பந்தத்தை ஆங்கிலேயர்களுடன் செய்துகொண்டார். ஆனால், மராத்தியத் தலைவர்கள் தங்களுடைய சுதந்திரத்தை மீண்டும் பெறத் துடித்தார்கள். அதன் விளைவாக பாஜிராவ் பூனாவில் இருந்த ரெஸிடென்டின் இருப்பிடத்தைத் தாக்கினார். அதைத் தொடர்ந்து போர் ஏற்பட்டது. கர்க்கி என்னுமிடத்தில் பாஜிராவ் தோல்வியுற்றார். மல்ஹர் ராவ் ஹோல்காரும் நாகபுரியைச் சார்ந்த அப்பா சாஹேப்பும் போரில் ஈடுபட்டார்கள். அவ்விருவரும் தோல்வியடைந்தனர். 1818-ல் அஷ்டி (Ashti) என்னுமிடத்தில் பாஜிராவ் மீண்டும் தோல்வியடைந்தார். மூன்றாவது மராத்தியப் போரின் விளைவாக நர்மதைக்கு வடக்கேயுள்ள பகுதியும், அதற்குத் தெற்கிலுள்ள பகுதியும் ஆங்கிலேயர் வசமாயின. ஹோல்காரின் தலைநகரத்தில் ஆங்கில ரெஸிடென்டு அமர்த்தப்பட்டார். பீஷ்வாவின் ஆட்சிப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. இவ்வாறாக எல்லா மராத்தியத் தலைவர்களும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டனர். இராஜபுத்திர இராச்சியங்களும் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டன.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் பஞ்சாபிலும் ஏற்படுத்தப்பட்டது. அதற்காக இரண்டு

போர்கள் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. சீக்கியர்களின் பெருந் தலைவரான இரஞ்சித் சிங் இறந்த பிறகு பஞ்சாபில் குழப்பம் ஏற்பட்டது. அதன் விளைவாக ஆட்சிமுறை சீர்கேடுற்றது. அதனால் சீக்கியப் படை செல்வாக்குப் பெறலாயிற்று. அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டவுடன், சீக்கிய அரசு ஆங்கிலேயர்களைப் பஞ்சாபின்மீது படையெடுக்குமாறு வேண்டியது; அதனால் போர் மூண்டது. முட்கி (Mudki) என்னுமிடத்தில் சீக்கியப் படை தோல்வியுற்றது. பிறகு அலிவால் என்னுமிடத்திலும் தோல்வியுற்றது. சீக்கியர்களிடமிருந்து சட்லெஜ் பகுதியை ஆங்கிலேயர்கள் பெற்றனர். லாகூரில் ஆங்கிலேய ரெஸிடென்டு அமர்த்தப்பட்டார்.

ஆங்கிலேயர்களுடைய நடவடிக்கைகள் சீக்கியர்களிடையே தேசீய உணர்ச்சியை வளர்த்தன. அதன் விளைவாக ஆங்கிலேயர்கள் இருவர் கொல்லப்பட்டனர். அதனால் போர் ஏற்பட்டது. சிலியன் வாலா என்னுமிடத்தில் பெருஞ்சேதத்துடன் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். மூல்தான் (Multan), குஜராத் (Gujarat) ஆகிய இடங்களிலும் ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்றனர். அதன் பிறகு சீக்கியர்கள் சரணடைந்தார்கள். 1849-ல் பஞ்சாப் ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்டது. அதன் விளைவாக ஆங்கிலேயர்களுடைய ஆட்சி ஆப்கானியக் குன்றுகள்வரை பரவியது. மூன்று பர்மியப் போர்களுக்குப் பின்னர் பர்மாவைக் கைப்பற்றினார்கள்; சிந்துவும் ஆங்கிலேயர் வசமாயிற்று.

போர் முறையைக் கையாண்டு பல இடங்களை ஆங்கிலேயர் கைப்பற்றியது எப்படி என்று அறிந்தோம். அதே நேரத்தில் வேறு பல வழிகளையும் கையாண்டு கம்பெனி தனது ஆதிக்கத்தைப் பல இடங்களில் ஏற்படுத்தியது. அவைகளுள் ஒன்று துணைப்படை ஒப்பந்தத் திட்டமாகும். அதன்படி ஆங்கிலேயர் படைகளை சுதேச மன்னர்களின் பாதுகாப்புக்காக அவர்களுடைய ஆட்சிப் பகுதிகளில் நிலைநிறுத்தியது. அப் படைகளை வைத்துப் போற்றுவதற்காக ஆங்கிலேயர்களுக்கு நிலப்பகுதிகளை சுதேச மன்னர்கள் வழங்கினார்கள். மைசூர் அரசரும் மராத்தியத் தலைவர்களும் அத்தகைய ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்று முன்னரே கண்டோம். நிஜாமும் அயோத்தியின் நவாபும் அவ்வித ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்கள். சில இடங்களில் ஆங்கிலேயர்கள் ஆட்சிப் பொறுப்பைத் தாங்களாகவே ஏற்றுக்கொண்டனர். தஞ்சாவூர், கர்நாடகம் ஆகிய பகுதிகள் இவ்வாறே ஆங்கிலேய அரசுடன் சேர்க்கப்பட்டன. சந்ததியற்ற அரசர்களுடைய நாடுகள் ஆங்கிலேயருக்குச் சொந்தமாகக் கருதப்பட்டு, அவைகள் ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டன; அதற்கு 'லாப்ஸ்' கொள்கை என்ற பெயர் அளிக்கப்பட்டது.

1857ஆம் ஆண்டுவரை மேற்கூறிய பகுதிகளையெல்லாம் கம்பெனியே ஆட்சிசெய்துவந்தது. ஆனால், 1773ஆம் ஆண்டிலேயே பிரிட்டிஷ் அரசாங்கம், ஒரு தனிப்பட்ட கம்பெனிக்கு ஆட்சியதிகாரங்கள் அளிக்கப்பட்டால், அதனால் பல சீர்கேடுகள் நேரும் என்று உணர்ந்தது. ஆயினும், அது ஆட்சிப் பொறுப்பைத் தானே ஏற்கவும் தயாராக இல்லை. ஆகவே, அவ்வப்போது சட்டங்களை இயற்றி இந்திய ஆட்சி முறையை ஒழுங்குபடுத்திவந்தது. அதனால் 1857ஆம் ஆண்டிற்குள்ளாகவே பிரிட்டிஷ் அரசாங்கமே ஆட்சியதிகாரங்களைப் பெற்றதாக விளங்கியது. கம்பெனி பெயரளவில் ஆட்சியாளராக இருந்துவந்தது. 1857-ல் பல காரணங்களால் இந்தியாவில் படைக்கலகம் ஏற்பட்டது. அதன் விளைவாக இந்தியாவில் கம்பெனியினுடைய ஆட்சி முடிவுற்றது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இக் கலகம் இந்திய தேசீயப் போரில் ஒரு முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது.

இந்தியாவில் சுதந்திரப் போர்

பிரிட்டிஷ் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின், அது வைசிராய் ஒருவரை நியமித்து, அதன் வாயிலாக ஆட்சி நடத்திவந்தது. அன்றியும், இந்தியாவில் கணக்கற்ற சிறு நாடுகள் தொடர்ந்து இருந்துவந்தன. அவைகளெல்லாம் சிற்றரசர்களின் ஆளுகையின் கீழ் இருந்தன. ஆனால், அங்கும் ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு சுதேச சமஸ்தானத்திலும் ஓர் ஆங்கிலேய ரெஸிடென்டு அல்லது ஓர் ஏஜென்டு இருந்துவந்தார். அவர்கள் அந்தந்தச் சிறு நாடுகளின் ஆட்சியைக் கட்டுப்படுத்திவந்தனர். இவ்வாறாக எல்லாப் பகுதியிலும் அந்நிய ஆட்சி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவாக இந்தியாவில் தேசீய இயக்கம் தோன்றியது. அவ்வியக்கம் இரண்டு குறிக்கோள்களைக் கொண்டிருந்தது. எல்லா மக்களையும் ஒன்றுசேர்த்து ஒரு தேசீய இனமாக அமைக்க வேண்டும் என்பது அதனுடைய முதல் நோக்கமாகும். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட தேசீய இனஞ்சார்ந்த நாடு தன்னாட்சியுரிமை பெற வேண்டும் என்பது அதனுடைய இரண்டாவது நோக்கமாகும்.

இந்தியாவில் தேசீய இயக்கம் ஏற்படப் பல காரணங்கள் இருந்தன. ஆங்கிலேய ஆட்சி ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக ஆங்கிலேயக் கல்வி இந்தியாவில் வளர்ச்சியடைந்தது. ஆங்கிலம் கற்றதன் பயனாக ஆங்கிலேய இலக்கியங்களையும், ஐரோப்பிய வரலாற்றினையும்,

அரசியல் சார்ந்த நூல்களையும் கற்க இந்தியர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதன் விளைவாக முற்போக்குக் கருத்துகள் அவர்களிடம் செல்வாக்குப் பெறலாயின. மேலும், பிரிட்டிஷ் அரசாங்கம் முற்போக்குக் கருத்துகளை மேற்கொண்டிருந்ததால், இந்திய மக்களையும் அத்தகைய கருத்துகளை மேற்கொள்ளுமாறு தூண்டியது. அதுமட்டுமன்றி, .இந்திய மக்களின் நலன்களையும், அவர்களுடைய நல்வாழ்வையும் பெருக்குவதே தன்னுடைய நோக்கமாகும் என்று பல முறை அறிவித்துவந்தது. உதாரணமாக, 1813ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பட்டயச் சட்டத்தில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டது: 'இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் சுதேசி மக்களின் நலன்களையும் நல்வாழ்வையும் பெருக்குவதே இந் நாட்டின் (பிரிட்டன்) கடமையாகும்.' ஏனைய பிரிட்டிஷ் குடி மக்கள் எவ்விதம் நடத்தப்படுகிருர்களோ அதே விதமாக இந்திய மக்களும் நடத்தப்படுவார்கள் என்று அரசியார் 1858-ல் விடுத்த பொது அறிக்கையில் அறிவித்தார். அவ்வறிக்கை வெளியிடப்பட்ட சில ஆண்டிற்குள் கனடாவில் புதிய தன்னுட்சி முறையைச் சார்ந்த அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆகவே, இந்தியர்களும் அத்தகைய சலுகைகளை பிரிட்டிஷ் அரசாங்கத்தினரிடம் பெறலாம் என்ற நம்பிக்கை வளரலாயிற்று. மேற்கூறிய காரணங்களால் தேசீய உணர்ச்சி மக்களிடையே தோன்றத் தொடங்கியது. அதன் விளைவாக இந்திய தேசீய காங்கிரஸ் தோன்றியது. இந்திய தேசீயக் காங்கிரஸ் அரசியல் சார்ந்த கிளர்ச்சிக்காரர்களின் குவிமையமாக அமைந்தது.

மேலும், ஆங்கிலேயக் கல்வி குற்றங்களைக் கண்டிக்கும் மனப் பாங்கை வளர்த்தது. முதலில் சமூகத்தில் மலிந்திருந்த ஊழல்களைக் கண்டிக்கலாயினர். அதன் பிறகு அரசியலில் காணப்பட்ட குறைகளைக் கண்டிக்கத் தலைப்பட்டார்கள். மேலும், ஐரோப்பாவில் அந்நிய ஆட்சியை ஒழித்துத் தன்னுட்சியை ஏற்படுத்திய நாடுகளின் வரலாறு இந்தியர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

பொருளாதாரத்துறையில் மக்களின் முன்னேற்றம் தடைபட்டு நின்றது. ஆங்கிலேயத் தொழில் தலைவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் பிரிட்டிஷ் அரசியலார் நடவடிக்கைகளை மேற் கொண்டனர். ஆகவே, இந்தியர்களின் நலன்களைப் பேணும் பொருட்டு இந்தியர்களின் ஆட்சியை ஏற்படுத்துவது அவசியம் என்று சிலர் கருதலாயினர்.

மேலும், வெள்ளையர்கள் இந்தியர்களைவிட உயர்வானவர்கள் என்று கருதிவந்தனர். அதன் விளைவாக இந்தியர்கள் மரியாதை குறைவாகவும், அவர்களுக்குக் கோபம் விளைவிக்கத்தக்க வகையிலும்

நடந்துகொண்டார்கள். மேலும், அரசாங்கம் இந்தியர்களையும் ஐரோப்பியர்களையும் ஒரேவிதமாக நடத்தத் தவறியது. உதாரணமாக, இந்திய நீதிபதிகள் சிலருக்கு ஐரோப்பியர்களைச் சில வழக்குகளில் விசாரிக்கும் உரிமையை வழங்கவில்லை. அம் முறையை மாற்றியமைக்க முற்பட்டபோது (இல்பர்ட் மசோதா), ஐரோப்பியர்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக அம் முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று. மேற்கூறிய காரணங்களால் படித்த சிறப்புப் பெற்ற இந்தியர்கள் பலர் வெகுண்டெழுந்தனர். அதன் விளைவாக இந்திய தேசீயக் காங்கிரஸ் வளர்ந்தது.

தொடக்கத்தில் இந்தியர்கள் ஆட்சி நடத்தும் பணியில் பங்கு கொள்ளவேண்டும் என்று விரும்பினார்கள். அதனால் முதலில் அவர்கள் இந்திய சிவில் பணித்துறையில் (Indian Civil Service) உயர்ந்த பதவிகளை வகிக்க அரசாங்கம் அனுமதிக்கவேண்டும் என்று கோரினார்கள். இந்தியர்களுக்கு சிவில் பணித்துறையில் உயர்ந்த பதவிகளை அளிப்பதாக முதலில் பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது. ஆனால், அவ் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அதனால் இந்தியர்கள் ஏமாற்றமும் மனக்கசப்பும் அடைந்தார்கள். அதன் பிறகு சுரேந்திரநாத் பானர்ஜி (Surendranath Banerjee) இந்திய சிவில் பணித்துறைக்கான போட்டித் தேர்வில் வெற்றியடைந்தார். அவரை சிவில் பணித்துறையில் நுழையவிடாது தடுக்க முயற்சி செய்தார்கள். அது பலனளிக்காதுபோகவே, சில காலத்திற்கெல்லாம் தக்க காரணமின்றி அவரைப் பதவியினின்றும் நீக்கிவிட்டார்கள். அதனால் மனக்கசப்பு அடைந்த பானர்ஜி, கல்கத்தாவில் இந்தியர்கள் கழகம் (Indian Association) ஒன்றை நிறுவினார். இந்திய இளைஞர்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டுவதே அதனுடைய நோக்கமாகும். அதன் பிறகு பல கிளைகளை ஏற்படுத்த பானர்ஜி வழிசெய்தார். இந்தியர்களை ஆட்சி நிர்வாகத்தில் பங்கு பெறுவதைத் தடைசெய்வதற்குப் பல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. ஆகவே, பானர்ஜி இந்தியாவின் பல பாகங்களில் சுற்றுப் பயணம் செய்து, எல்லா இடங்களிலும் மக்களை அந் நடவடிக்கைகளை எதிர்க்குமாறு தூண்டிவிட்டார். அதன் விளைவாகப் பல்வேறு பகுதியிலிருந்த மக்கள் ஒரு பொதுக்காரணத்திற்காக ஒன்று சேர்ந்து போராட அவர்களிடம் ஒற்றுமை உணர்ச்சியைத் தூண்டிவிட்டார். அதற்கு ஆங்கில மொழி பேருதவி செய்தது என்பதை நாம் மறுக்க இயலாது. அதன் பிறகு பிற்போக்குத் தன்மை வாய்ந்த அரசாங்கத்தின் சட்டதிட்டங்களையும் இவ்வாறே கண்டனம் செய்ய முற்பட்டனர். குறிப்பாக, இல்பர்ட் மசோதா (Ilbert Bill) இயற்றப்பட்டபோது வெள்ளையர்கள் தொடங்கிய கிளர்ச்சிக்குப் பதிலிறுக்கும் வகையில் இந்தியர்களும் பெருங்கிளர்ச்சி செய்தனர். அதன் பயனாக தேசீய உணர்ச்சி மேலும் வளர்ச்சியடைந்தது. அதன் விளைவாக

1883-ல் இந்திய தேசீய மாநாடு கல்கத்தாவில் கூடியது. அதே நேரத்தில் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (Allan Octavian Hume) என்ற ஓய்வு பெற்ற சிவில் பணித்துறையாளர் இந்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்று, இந்தியர்களுடைய நலன்களைக் காக்கும்பொருட்டு, இந்திய மக்களில் சிறப்புற்று விளங்கியவர்களின் துணைகொண்டு ஒரு சங்கத்தை ஏற்படுத்த முனைந்தார். அதன் பயனாக பம்பாயில் முதல் இந்திய தேசீயக் காங்கிரஸ் 1885-ல் கூடியது. இந்திய தேசீயக் காங்கிரஸ் கூட்டத்தை ஏற்படுத்துவதாகச் சென்னையில்தான் இந்தியத் தலைவர்கள் முடிவு கட்டினார்கள் என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியம்[1]. அதன் பிறகு இந்திய தேசீய மாநாடு காங்கிரஸுடன் இணைந்துவிட்டது. இரண்டு அமைப்புகளின் நோக்கங்களும் ஏறக்குறைய ஒத்திருந்ததால், அவ்விணைப்பு ஏற்பட வாய்ப்பு உண்டாயிற்று. அதன் பிறகு ஒவ்வோர் ஆண்டும் இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாடு நடத்தியது. தேச ஒற்றுமைக்காகவும், எல்லா இடங்களிலும்மிருந்த மக்களிடத்தில் அரசியல் விழிப்பை உண்டாக்கவும் அம் மாநாடு ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வோர் இடத்தில் கூடியது. முதலில் இந்திய விவகாரங்களைப்பற்றிய தீர்மானங்களை நிறைவேற்றுவதிலேயே காங்கிரஸ் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியது. அத் தீர்மானங்களை அரசாங்கத்திற்கு அனுப்பித் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டியது. இந்தியத் தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 1896-ல் தொழிற் கண்காட்சி ஒன்றைக் காங்கிரஸ் ஏற்படுத்தியது.

முதலில் காங்கிரஸ், அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெற்றிருந்தது. ஏனெனில், மக்களின் தேவைகளை அரசாங்கம் அறிந்துகொள்ள அது பெரிதும் பயன்பட்டது. எனவே, அரசுப் பணியாளர்களும் அதன் கூட்டங்களில் கலந்துகொண்டனர். ஆனால், நாளடைவில் அது அரசாங்கத்தின் நட்பு நோக்கை இழந்தது. மேலும், அரசாங்கம் அதைப் படித்த மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பாகக் கருதியதே யொழியப் பொதுமக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பாகக் கருதவில்லை. ஆனால், கல்வியறிவில்லாப் பொதுமக்களின் சார்பில் வாதாடக்கூடிய உரிமை தனக்கேயுண்டு என்று காங்கிரஸ் வாதாடியது. அவ் வேற்றுமையின் காரணமாகக் காங்கிரஸின் தீர்மானங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அரசியல் சார்ந்த கிளர்ச்சிகளில் காங்கிரஸ் ஈடுபடவேண்டியதாயிற்று. அக் கிளர்ச்சிக்கு இங்கிலாந்திலும் ஆதரவாளர்களைப் பெறக் காங்கிரஸ் முயற்சி செய்தது. கிளர்ச்சியின் பயனாக 1892-ல் இந்தியக் கவுன்சில்கள் சட்டம் இயற்றப்பட்டது. சட்டசபையின் உறுப்பினர்களின்

[1] Annie Besant, 'How India Wrought for Freedom,' Chap. 1, Page 1.

எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. சட்டசபைகள் வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கவும், பொதுநலன்களைப் பற்றிக் கேள்விகள் எழுப்பவும் அதிகாரம் பெற்றன.

1892ஆம் ஆண்டின் சட்டம் இந்தியத் தலைவர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தவில்லை. அதனால் அவர்களில் ஒரு சாரார் நேரடி நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். பாலகங்காதர திலகர் அவர்களுள் தலைசிறந்தவர் ஆவார். அவர் 'கேசரி' (Kesari) என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அதன் வாயிலாக மக்களிடம் நாட்டுப் பற்றை உண்டாக்கப் பெரும்பாடு பட்டார். காங்கிரஸ் அமைப்பிற்குள் தீவிரவாதிகள் அடங்கிய உட்குழு ஏற்படுவதற்கு அவரே காரணமாவார்.

அதற்கிடையேக ாங்கிரஸின் எதிரியான சர். சையத் அஹமத் (Sir Syed Ahmad) என்பவர் முஸ்லீம்களைக் காங்கிரஸில் சேரலாகாது என்று வேண்டினார். அதே நேரத்தில் காங்கிரசை எதிர்க்க இரண்டு சங்கங்களை ஏற்படுத்தினார். அவற்றுள் ஒன்று முஸ்லீம்களையும் ஐரோப்பியர்களையுமே அங்கத்தினர்களாகக் கொண்டிருந்தது. முஸ்லீம்கள் கல்வித்துறையில் இந்துக்களைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்ததால், அவர்கள் முன்னேற்றம் அடையக் கல்வித்துறையில் நாட்டம் செலுத்த வேண்டுமேயொழிய அரசியல் கிளரச்சிகளில் ஈடுபடலாகாது என்று அவர் கருதினார். ஆகவே, அவர் முஸ்லீம்களுடைய கல்விப் பெருக்கத்தில் ஆர்வம் காட்டினார். இந்திய அரசாங்கம் பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றி இரு மக்களிடையே வேற்றுமையுணர்ச்சியை வளர்த்துவிட்டது. மேலும், முஸ்லீம்கள் சிறுபான்மையினராய் இருந்ததால், மக்களாட்சி முறை ஏற்படுத்தப்பட்டால் இந்துக்களே அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற நேரும் என்று கருதினார்கள். இந்த உணர்ச்சிதான் இந்தியா இரு துண்டாக்கப்படுவதற்கு—இந்தியா-பாகிஸ்தான்—மூலகாரணமாய் அமைந்துவிட்டது.

இருபதாம் நூற்றாண்டில் தேசீய இயக்கம் மேலும் வளர்ச்சியுற்றது. 1905-ல் கர்சன் பிரபு ஆட்சிமுறை சிறப்புற்று நடக்க வேண்டும் என்பதற்காக வங்காளத்தின் ஒரு பகுதியை அசாமுடன் சேர்த்துக் கிழக்கு வங்காளமும் அசாமும் சேர்ந்த மாகாணம் ஒன்றை அமைத்தார். அதனால் வங்காளியர்கள் இரு கூறுக்கப்பட்டனர். எனவே, அதை எதிர்த்து வங்காளியர்கள் கிளர்ச்சி செய்தார்கள். பேபின் சந்திர பால் (Bepin Chandra Pal), அரவிந்த கோஷ் (Arabinda Ghosh), சுரேந்தரநாத் பானர்ஜி ஆகியோர் அக் கிளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டார்கள். அக் கிளர்ச்சியின் பயனாகத் தேசீய

உணர்ச்சி மேலும் வலுவடைந்தது. அக் கிளர்ச்சியின்போது சுதேசி இயக்கம் உருவாகியது. அதன்படி வெளிநாட்டுப் பொருள்களை மக்கள் பயன்படுத்துவதை நிறுத்தினர். அக் கிளர்ச்சி இந்தியாவெங்கும் பரபரப்பூட்டியது. ஆகவே, 1906-ல் கூட்டப்பட்ட தேசீயக் காங்கிரஸ் வங்காளியர்களின் கிளர்ச்சித் திட்டத்தை ஆதரித்ததோடல்லாமல், இந்தியா தன்னாட்சி முறை பெறுவதை (Swaraj) நோக்கமாக மேற் கொண்டது. அதே ஆண்டில் நவாப்சாலி முல்லா என்ற முஸ்லீம்கள் தலைவர் 'முஸ்லிம் லீக்' என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். அது வங்காளப் பிரிவினையை ஆதரித்ததோடல்லாமல், சுதேசி இயக்கத்தை யும் எதிர்த்தது.

ஆட்சியாளர்கள் கிளர்ச்சிக்காரர்களை அடக்கக்கூடிய நடவடிக்கை களை மேற்கொண்டனர். ஆனால், அவைகளினால் கிளர்ச்சி வளர்ச்சி யுற்றதேயொழியக் குறையவில்லை. எனவே, இந்தியர்களைத் திருப்தி படுத்தத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு கிளர்ச்சியை அடக்க முற்பட்டார்கள். அதன் பயனாக மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. ஆனால், பணித்துறையைச் சார்ந்தவர்களே மத்திய சட்டசபையில் பெரும்பான்மையினராக இருந்தனர். சட்டசபை களுக்கு மேலும் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. முஸ்லீம்களுக் குத் தனிப்பட்ட தொகுதிகள் (Separate electorates) அளிக்கப்பட் டன. ஆனால், இந்தியாவின் அரசியல் பிரச்சினைக்குத் தகுந்த முடிவை அவை ஏற்படுத்தவில்லை. அச் சீர்திருத்தங்கள் காங்கிரசிலிருந்த மிதவாதிகளுக்குக்கூடத் திருப்தியை ஏற்படுத்தவில்லை. அதன் பயனாகக் காங்கிரசில் தோன்றியிருந்த பிளவு மறையலாயிற்று. முதலாவது உலகப் போரில் துருக்கிக்கு எதிராக பிரிட்டன் போர்புரிய வேண்டியதாயிற்று. அதனால் மனக்கசப்புற்ற முஸ்லீம் லீக் கட்சியினர் காங்கிரசுடன் ஒன்றுபட்டு இயங்கத் தொடங்கினர். 1916-ல் அவ்விரு ஸ்தாபனங்களும் பொதுவான அரசியலமைப்புத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடலாயின. அதே ஆண்டில் தன்னாட்சி இயக்கங்கள் இரண்டினைத் திலகரும் பெஸன்ட் அம்மையாரும் தொடங்கினார்கள்.

முதலாவது உலகப் போர் முடிவுற்ற பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம் போர்க்காலத்தில் இந்தியர்கள் ஆற்றிய சிறப்புப் பணிக்கு வெகுமதி அளிக்கும் வகையில் 1919-ல் அரசியல் சட்டம் ஒன்றை இயற்றியது. அதன்படி இரு சபைகள் கொண்ட மத்திய சட்டசபை ஏற்படுத்தப் பட்டது. அவ்விரு சபைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் களே பெரும்பான்மையினராக இருந்தனர். ஓட்டு உரிமை சொத் துடையவருக்கே அளிக்கப்பட்டது. சட்டசபைகளின் அதிகாரங்கள்

விரிவுபடுத்தப்பட்டன. மாகாணத்தில் இரட்டையாட்சி (dyarchy) ஏற்படுத்தப்பட்டது. அதன்படி ஆட்சித் துறைகள் இரு பிரிவுகளாக் கப்பட்டன. அவற்றுள் ஒரு பிரிவை கவர்னரால் நியமிக்கப்பட்டவர் களும், கவர்னருக்கே பொறுப்பாயுள்ளவர்களுமான மந்திரிகள் கவனித்துவந்தனர். ஏனைய பிரிவைச் சட்டசபையின் அங்கத்தினர் களினின்றும் நியமிக்கப்பட்டவர்களும், சட்டசபைக்கே பொறுப்பா யுள்ளவர்களுமான அமைச்சர்கள் கவனித்துவந்தனர். இவ்வாருகத் தன்னுட்சி முறையில் பெரியதொரு தொடக்கத்தை அச் சட்டம் ஏற்படுத்தியது.

1919ஆம் ஆண்டின் சட்டமும் இந்தியத் தலைவர்களைத் திருப்தி படுத்தவில்லை. காங்கிரஸ் அதைக் குறைகூறியது. எனவே, மிதவாதிகள் காங்கிரசினின்றும் பிரிந்தார்கள்; ஏனெனில், அதிகாரங்கள் அனைத்தும் வெள்ளையர்கள் கைகளிலேயே இருந்துவந்தன. ஆகவே, கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றது. 1920-ல் எம். கே. காந்தி அவர்களின் தலைமையில் புதியதொரு போராட்டம் தொடங்கப்பட்டது. அதற்கு ‘ஒத்துழையாமை இயக்கம்’ என்ற பெயர் ஏற்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் வ்ழங்கிய பட்டங்களை மக்கள் துறக்கவேண்டும் என்றும், சட்டசபை, நீதிமன்றங்கள், கல்வி ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் கலந்துகொள்ளக்கூடாதென்றும், வரி செலுத்தக்கூடாது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. தன்னுட்சியுரிமை பெறுவதற்குச் சமா தான முறையையே (அஹிம்சா மார்க்கம்) கையாளவேண்டும் என்று காந்தி வலியுறுத்திஞர். மக்கள் அவருடைய கருத்துக்குப் பேராதரவு அளித்தார்கள். அதன் பயஞகத் தேசீய இயக்கம் மக்கள் ஆதரவு பெற்ற இயக்கமாக மாறியது. அரசாங்கம் அவ் வியக்கத்தை அடக்கக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண் டது. அவைகளுக்கு ‘ரௌலத் சட்டங்கள்’ என்று பெயர். அவை களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் காந்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்திஞர். பொதுக் கூட்டங்களை ஆங்காங்கே ஏற்பாடு செய்தார். ஆனல், அரசாங்கம் மேலும் கடுமை யான முறைகளைக் கையாண்டது. அமிர்தசரசில் ஜாலியன்வாலா பாக் என்னுமிடத்தில் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட படைக்கலமற்ற மக்களின்மீது துப்பாக்கிச் சூடு நிகழ்த்தி நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்றது. அச் சம்பவத்தால் மக்களின் உணர்ச்சி மேலும் தூண்டப்பட்டது. மோதிலால், சி. ஆர். தாஸ் போன்றவர்கள் அவ்வியக்கத்தில் கலந்துகொண்டனர். இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட ஆடைகளைக் கொளுத்திஞர்கள். பள்ளிகளைவிட்டு மாணவர்கள் வெளியேறிஞர்கள். பல வழக்கறிஞர்கள் நீதிமன்றங் களுக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டார்கள். 1921-ல் காந்தியிடம் அவ்வியக்கத்தை நடத்தும் பொறுப்பு முழுவதும் அளிக்கப்பட்டது;

ஆனால், மக்கள் பலாத்காரச் செயலில் ஈடுபட்டதால், காந்தி அவ்வியக்கத்தைத் தாற்காலிகமாக நிறுத்திக்கொண்டார்.

இந்தியாவிற்கு 'டொமினியன் அந்தஸ்து' 1929ஆம் ஆண்டிற்குள் அளிக்க வேண்டும் என்றும், இல்லையெனில் இந்தியா அஹிம்சை முறையைக் கையாண்டு முழுச் சுதந்திரம் பெற முயலும் என்றும் 1927-ல் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. 1928-ல் சைமன் கமிஷனில் இந்தியர் எவருமில்லாத காரணத்தால், காங்கிரஸ், முஸ்லிம் லீக், லிபரல் கட்சி ஆகியோர் அனைவரும் அக் கமிஷனுடன் ஒத்துழைக்க மறுத்தனர். 1929-ல் சைமன் கமிஷன் அறிக்கையை விவாதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வட்டமேசை மாநாட்டில் எல்லாக் கட்சியினரும் கலந்துகொள்ள வேண்டும் என்று வைசிராய் அறிவித்தார். அவ்வறிக்கை காங்கிரசின் 1927ஆம் ஆண்டின் தீர்மானத்திற்குத் தகுந்த சமாதானம் அளிக்கவில்லை என்ற காரணத்தால், காங்கிரஸ் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள மறுத்துவிட்டது. மேலும், இந்தியாவை முழுச் சுதந்திரம் பெற்ற நாடாக அமைப்பதே காங்கிரசின் நோக்கமாகக் கொள்ளப்பட்டது. அந் நோக்கத்தை நிறைவேற்றச் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டது.

1930-ல் காந்தியடிகள் உப்புச் சட்டங்களை மீறத் தண்டி யாத்திரை மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து இந்தியாவெங்கும் சட்ட மறுப்பு இயக்கம் நடைபெற்றது. வேலைநிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அடக்குமுறை மீண்டும் பயன்தரவில்லை. எனவே, இந்திய அரசாங்கம் காந்தியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது (Gandhi - Irwin Pact). காந்தி வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டார். அது யாதொரு பயனையும் ஏற்படுத்தவில்லை. நாடு திரும்பிய காந்தி அடிகள், அடக்குமுறையில் யாதொரு மாற்றமும் இல்லாததால், மீண்டும் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினர். ஆகவே, அவரும் அவரைச் சார்ந்தவர்களும் சிறையிலடைக்கப்பட்டார்கள். 1934-ல் அவ்வியக்கம் நிறுத்தப்பட்டது.

1935-ல் இந்திய மக்களைத் திருப்திசெய்வதற்காக அரசியல் சட்டம் இயற்றப்பட்டது. இந்தியாவில் கூட்டாட்சி ஏற்படுத்தப்பட்டது. மத்திய அரசில் இரட்டையாட்சி முறை புகுத்தப்பட்டது. நேரடித் தேர்தல் முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாதி அடிப்படையில் அமைக்கப்பட்ட சட்டசபைத் தேர்தல் தொகுதிகளை அமைக்கும் முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாகாணங்களில் பொறுப்பாட்சி ஏற்படுத்தப்பட்டது. ஆனால், கவர்னருக்கு அளிக்கப்பட்டிருந்த தனிப்பட்ட அதிகாரங்கள் அப் பொறுப்பாட்சி சரிவர நடைபெறுவதைத் தடுத்தன. காங்கிரஸ் அத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தது. தேர்தலில்

காங்கிரஸ் பெருவெற்றியைக் கண்டது. ஆனால், ஒவ்வொரு மாகாணத்திலும் முஸ்லீம் லீக்குடன் சேர்ந்து கூட்டு அரசாங்கத்தை (Coalition) ஏற்படுத்த விரும்பவில்லை. ஏனெனில், லீக்கு காங்கிரசின் திட்டத்தை ஏற்கவில்லை. 'ஆகவே, இரு கட்சியினருக்கும் இடையேயிருந்த பிளவு விரிவடைந்தது. ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுத்தப் பட்டது.

1939-ல் இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டது. இந்தியர்களுடைய அனுமதியின்றி இந்தியாவை பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் ஈடுபடச் செய்ததால், காங்கிரஸ் அமைச்சர்கள் பதவியினின்றும் விலகினார்கள். 1940-ல் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டது. 1942-ல் ஜப்பானியர்கள் வெகு தீவிரமாக முன்னேறிக்கொண்டு வருவதால், இந்தியர்களுடைய நன்மதிப்பைப் பெற சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் என்பவர் அனுப்பப்பட்டார். போர் முடிந்தவுடன் இந்தியர்களுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதாகவும், அரசியல் நிர்ணய சபையொன்றை ஏற்படுத்துவதாகவும் அவர் அறிவித்தார். காங்கிரஸ் அத் திட்டத்தை நிராகரித்தது. முஸ்லீம் லீக் தனிச் சுதந்திர நாடு கோரியதால், அதுவும் அத் திட்டத்தை ஏற்கவில்லை. 1942-ல் ஆகஸ்டு 8ஆம் தேதி காங்கிரஸ் மக்கள் போராட்டம் ஒன்றைப் பெரிய அளவில் நடத்த முடிவு செய்தது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்யு முன்னரே, காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். ஆகவே, நாட்டில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. அதே நேரத்தில் இந்தியக் காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவராக இருந்து பிறகு 'ஃபார்வேர்ட் பிளாக்' (Forward Bloc) என்ற கட்சியைத் தோற்றுவித்தவரான சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானிய அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி ஜப்பானியர் கைகளில் சிக்கிய இந்திய வீரர்களைக் கொண்டு இந்திய தேசீயப் படையை அமைக்க ஏற்பாடாயிற்று. அப் படை இந்தியாவைச் சுதந்திர நாடாக அமைப்பதைத் தன்னுடைய நோக்கமாகக் கொண்டிருந்தது. அதை அறிந்த பிரிட்டிஷ் அரசாங்கம் புதிய திட்டத்தை அறிவித்தது. வைசிராயின் நிர்வாகக் குழுவில் இந்தியர்களுக்கு அதிகமான இடங்களை அளிப்பதாக வேவல் கூறினார். அத் திட்டமும் தோல்வியடைந்தது.

1946-ல் பிரிட்டனில் தொழிற் கட்சி பதவி ஏற்றது. இந்தியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக மந்திரி சபையின் மூன்று உறுப்பினர்களை இந்தியாவிற்கு அது அனுப்பியது. அவர்கள் ஏற்படுத்திய திட்டத்தின்கீழ் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்டது. ஜவஹர்லால் நேருவும் ஏனையோரும் வைசிராய் நிர்வாகக் குழுவில் இடம்பெற்றார்கள். முஸ்லீம் லீக் கட்சியினர் அதில் இடம்பெறவில்லை. அதைத் தொடர்ந்து பல இடங்களில் முஸ்லீம்கள் பலாத்காரச் செயலில்

ஈடுபட்டார்கள். பிறகு முஸ்லிம்களும் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றனர். ஆனால், அரசியல் நிர்ணய சபையில் பங்கு கொள்ள வில்லை. 1947-ல் ஆங்கிலேயர்கள் வெளியேறத் தீர்மானம் செய்தார்கள். அத் தீர்மானத்தை நிறைவேற்ற மவுன்ட்பேட்டன் பிரபு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். இந்தியா முழுவதையும் சுதந்திரம் பெற்ற ஒரே நாடாக அமைப்பதற்கு வழி ஏற்படாததால், இந்தியாவை இருநாடு களாகப் பிரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 1947-ல் இந்திய சுதந்திரச் சட்டம் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. 1947ஆம் ஆண்டு' ஆகஸ்டு 14-15ஆம் தேதி நள்ளிரவில் அரசியல் நிர்ணய சபை இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த்தைச் சார்ந்த சுதந்திரம் பெற்ற நாடாக அமைக்கப்பட்டது என்று அறிவித்தது. மவுன்ட்பேட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலானார்; ஜின்னா பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரலானார். இந்தியாவிலிருந்த சிற்றரசர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு அவ்விரு நாடுகளுள் ஏதாவது ஒன்றில் சேர அனுமதியளிக்கப்பட்டனர். 1950-ல் இந்தியா குடியரசு நாடாக அமைக்கப்பட்டது. இராஜேந்திர பிரசாத் இந்தியா வின் முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜவஹர்லால் நேரு இந்தியாவின் பிரதமரானார். இந்தியாவின் விடுதலைப் போராட் டத்தில் பெரும் பங்கு கொண்ட மகாத்மா காந்தி அடிகளை மதவெறியர் ஒருவர், அவர் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டிருந்தபோது கொலைசெய்தார்.

இனி, பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியாவிற்கு ஏற்பட்ட நன்மை தீமைகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம். ஆங்கிலேயர்களுடைய ஆட்சியின் பயனாக மையம் நோக்கிய ஆட்சி அமைக்கப்பட்டது. அவ் வாட்சிக்குத் தலைவராக இருக்கும்பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் வைசிராயை அனுப்பி வைத்தது. மாகாண ஆட்சி கவர்னரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் கலெக்டர் ஒருவர் நியமிக்கப் பட்டார். மாவட்டங்கள் கீழ் வட்டகைகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் துணைக் கலெக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஒவ்வொரு கீழ்வட்டகையும் பல தாலுக்காகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒரு தாசில்தார் அமர்த்தப்பட்டார். கிராமங்களில் கிராம அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மேலதிகாரிகளின் ஆணைப்படி நடக்கும் அதிகாரிகளாகவே இருந்தனர். இத்தகைய ஒழுங்குமுறையோடு அமைக்கப்பட்ட ஆட்சிமுறையை ஆங்கிலே யர்கள் நமக்கு ஏற்படுத்தித்தந்தார்கள் என்பதையும், அம் முறையே இன்று பெருமளவில் கையாளப்பட்டுவருகிறது என்பதையும் நாம் மறுக்க முடியாது. மேலும், ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பல படி நிலைகள் அடங்கிய அதிகார வர்க்கத்தையும் ஏற்படுத்தியிருந்தனர்.

இவ்வாறாக அமைக்கப்பட்ட ஆட்சி முறையில், இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வருவதற்குமுன் ஏற்படுத்தப்பட்டிருந்த ஆட்சி முறையின் சில அடிப்படைக் கூறுகளை நாம் காணலாம். ஆயினும், ஆங்கிலேயர்கள் அவ்வாட்சி முறைக்கு நீடிப்பாற்றலையும், இடைவிடாத் தொடர்பையும் ஏற்படுத்தித்தந்தார்கள்.[1]

தல ஆட்சி முறையிலும் ஆங்கிலேயர்கள் அரிய சேவை செய்துள்ளார்கள். இன்று நடைபெற்றுவரும் தல ஆட்சி முறையின் அடிப்படைக் கருத்துகளை உருவாக்கியவர் இந்தியாவின் வைசிராயாகப் பணியாற்றிய ரிப்பன் பிரபு ஆவார். ஆனால், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டாலும், போதிய பணமின்மையாலும் தல ஆட்சிமுறை சீரிய முறையில் செயற்படவில்லை. ஆயினும், மக்களுக்கு ஆட்சிமுறையில் சிறந்த அனுபவம் பெற வாய்ப்பை அளித்தது.

ஆங்கிலேயர்கள் ஆட்சியில் தனித்து இயங்குகிற நீதி நிலையத் துறை ஏற்படுத்தப்பட்டது. அனைவரும் சட்டத்திற்கு முன்னர் சமமானவர்களே என்ற கோட்பாட்டை வலியுறுத்தி நீதி மன்றங்கள் மக்களுக்குச் சிறந்த பணியாற்றிவந்தன. ஆங்கிலேயர்கள் காலத்தில் சட்டங்கள் வரையறுக்கப்பட்டன. இன்று நடைமுறையில் இருக்கும் கிரிமினல் வழக்குமுறைச் சட்டம், இந்தியத் தண்டனைச் சிவில் வழக்குகளைப்பற்றிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதனால் நாட்டின் மக்கள் ஒரே மாதிரியான சட்டதிட்டங்களின்கீழ் ஆளப்படும் நிலை ஏற்பட்டது.

ஆங்கிலேயர்கள் அதிகாரத்தை நம்மவர்களிடம் ஒப்படைத்த போது, சிறப்பாக இராணுவ அமைப்பை விட்டுச் சென்றனர். அரசியல் வருமானத்துறை ஒன்றையும் ஏற்படுத்தியிருந்தார்கள்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதில் ஆங்கிலேயர்கள் சிறந்த பணியாற்றியிருந்தனர். கொள்ளைக் கூட்டத்தினரை அடக்குவதில் பெரும் அக்கறை காட்டிவந்தனர். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், அவர் பிண்டாரிகளை அழித்து அமைதி ஏற்பட வழிவகை செய்தனர்.

மற்றொரு வகையிலும் ஆங்கிலேயர்கள் நமக்கு நன்மை செய்துள்ளார்கள். இந்தியாவின் பல பகுதிகளிலும் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தி ஒற்றுமையுணர்ச்சி வளர வழி செய்தனர். அவ்வுணர்ச்சி அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடத் தொடங்கிய போது மேலும் வளரச்சியுற்றது.

[1] N. V. Sovani, 'British Impact on India' in 'Studies in the Cultural History of India', p. 303.

எல்லாவற்றிற்கும் மேலாக மக்களாட்சிக் கருத்துகளின் அடிப்படையில் சில அமைப்புகளை ஏற்படுத்தி, மக்களிடையே மக்களாட்சி முறையைச் சார்ந்த கருத்துகளை வளரவிட்டனர். தல ஆட்சி முறையைச் சார்ந்த சபைகள் மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டன. மேலும், சட்டசபைகளை ஏற்படுத்தியும், பிறகு பொறுப்பாட்சியை ஏற்படுத்தியும், தேர்தல் முறையைப் பயன்படுத்தியும் மக்களுக்கு மக்களாட்சி முறையில் பயிற்சிபெற வாய்ப்பளித்தார்கள். அதன் பயனாக நாம் இன்று ஆசியாவிலேயே தலைசிறந்த ஜனநாயக நாடாக விளங்குகிறோம். அதுவுமன்றி, பார்லிமென்டைச் சார்ந்த ஆட்சிமுறை (Parlimentary government) சிறந்த முறையில் நம் நாட்டில் நடைபெற்றுவருவதற்கு நாம் பெற்ற பயிற்சியே காரணமாகும்.

பொருளாதாரத் துறையிலும் ஆங்கிலேயர்கள் ஒருசில நற்பணிகளை ஆற்றியுள்ளார்கள். பல அணைக்கட்டுகள் கட்டியும், கால்வாய்களை வெட்டியும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி இந்திய விவசாயத்திற்கு உதவி செய்தனர். குடியானவர்களின் உரிமைகளைக் காக்கும் பொருட்டுப் பல குடிவாரச் சட்டங்களை ஏற்படுத்தினார்கள். நிலவரித் திட்டத்தை ஒழுங்கான முறையில் அமைத்தார்கள். குடியானவர்களை வட்டிக்காரர்களிடமிருந்து காப்பதற்காகக் கடனுதவி செய்தார்கள்.

தொழில் துறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் விளைவாக இங்கிலாந்தில் தோன்றிய தொழிற் புரட்சி இந்தியாவிற்கும் பரவலாயிற்று. ஆகவே, அவர்கள் காலத்தில் தற்காலத் தொழிற்சாலை முறை ஏற்படத் தொடங்கியது. சர்க்கரை ஆலைகள், பருத்தி ஆலைகள், இரும்புத் தொழிற்சாலைகள் போன்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. தொழிலாளர்களின் நலன்களைக் காக்கும் வகையில் தொழிற்சாலைச் சட்டங்கள் இயற்றப்பட்டன. வியாபாரத் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. இராணுவத் தேவைக்காக அமைக்கப்பட்ட சாலைகள் நாளடைவில் போக்குவரத்தைத் துரிதப்படுத்தப் பயன்பட்டன. இருப்புப்பாதை அமைப்புகள், தந்திமுறை, தபால்முறை, தொலைபேசிமுறை ஆகியவைகள் சிறந்த பணிபுரிந்துள்ளன. ஆங்கிலேயர்கள் நீராவி இயந்திரம் பொருத்தப்பட்ட கப்பல்களை உபயோகத்தில் கொண்டுவந்தனர். மேலும், வெகுநாளாக வழக்கத்திலிருந்துவந்த உள்நாட்டுச் சுங்க வரிகளை நீக்கி உள்நாட்டு வியாபாரம் தடையில்லாமல் நடக்க வழி செய்தனர். துறைமுகங்களைக் கட்டுவித்து வெளிநாட்டு வியாபாரம் பெருக வழிசெய்தனர். சென்னைத் துறைமுகம் 1876-ல்தான் கட்டத் தொடங்கப்பட்டது. நாணய முறையும் ஒரே சீராக்கப்பட்டதால் வியாபாரம் பெருகிற்று.

ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்டதன் விளைவாக இந்திய சமுதயா அமைப்பில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. யூரேஷியர்கள் (Eurasians) என்ற புதிய வகுப்புத் தோன்றியது. தாழ்த்தப்பட்டோர்கள் நிலையைச் செம்மைப்படுத்த சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகளும், மேல்நாட்டுக் கல்வியும் அவர் களுடைய நிலையைச் சீர்படுத்துவதற்குப் பெரிதும் பயன்பட்டன. பெண்களின் நிலை ஓரளவு முன்னேற்றம் கண்டது. சதி, பெண்குழந் தைகளைக் கொல்லுதல், குழந்தைப் பருவத்திலேயே மணம் செய்தல், அடிமைத்தனம் போன்ற தீய பழக்கங்களை ஒழிக்க முயற்சி மேற்கொள் ளப்பட்டன. இத் துறையிலும் மேல்நாட்டுக் கல்வி பயின்ற இந்தியர்களே சிறப்புப் பணியாற்றினர். மேல்நாட்டுக் கல்வியின் பயனாகச் சில சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. இராஜாராம் மோகன்ராய் ஏற்படுத்திய பிரம்ம சமாஜம், கேசவ் சந்திரசென் ஏற்படுத்திய பிரார்த்தன சமாஜம், தயாநந்த சரஸ்வதி ஏற்படுத்திய ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண பரமஹம்சர் ஏற்படுத்திய இயக்கம் ஆகியவைகள் சமூகத்தில் இருந்த சீர்கேடுகளை அகற்ற முற்பட்டன. அவைகள் பெண்களின் நிலையை உயர்த்தவும், சாதிமத பேதங்களை அகற்றவும், விதவைகளின் துயரைப் போக்கவும், பன்மனைவி மணமுறையை ஒழிக்கவும் பாடுபட்டன. மேல்நாட்டுக் கல்வியின் பயனாக இந்துமதத்தில் விக்கிரக ஆராதனையை எதிர்க்க ஒருசிலர் தொடங்கினர்கள். மேலும், மேல்நாட்டு மதங்களைப் பற்றி இந்தியர்கள் புரிந்துகொள்ளவும், இந்து மதத்தைப் பற்றி வெளிநாட்டவர்கள் தெரிந்துகொள்ளவும் வழி ஏற்பட்டது. அதன் விளைவாக எல்லா மதங் களையும் மரியாதையுடனும் பற்றுடனும் அறிந்துகொள்ள முற்பட்டனர். அதன் விளைவாக 'தியோசாபிகல் சொசைட்டி' (Theosophical Society) ஏற்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் மேல்நாட்டுக் கல்வி பயின்றவர்களில் சிலர் மேல்நாட்டுப் பகுத்தறிவாதிகளைப் (Rationalists) பின்பற்றி நாத்திகர்கள் ஆனர்கள் என்பதையும் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். முஸ்லிம்களிடையேயும் சீர்திருத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சையத் அகம்மது முஸ்லிம்கள் கல்விக்காகவும், அவர்களைச் சமூகத்தில் சிறந்த இடத்தில் வைக்கவும் அரும்பாடு பட்டார்.

மேல்நாட்டுடன் ஏற்பட்ட தொடர்பால் இந்திய மக்களின் பழக்க வழக்கங்களிலும் நடையுடை பாவனைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவில் வெகுகாலமாக மதுபானம் அருந்துவதை வெறுத்து வந்தனர். மேல்நாட்டுடன் ஏற்பட்ட தொடர்பால் வெளிநாடுகளி லிருந்து வரவழைக்கப்பட்ட மதுபானங்களைச் சமூகத்தின் உயர்நிலையில் இருந்தோர்கள் உட்கொள்ளத் தொடங்கினர்கள். மேல்நாட்டு கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளும் நம் நாட்டில் புகுத்தப்பட்டன.

ஆங்கிலேயர்களுடைய ஆட்சியில் கல்வித் துறையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் பல இக் காலத்தில் தோன்றின. ஆங்கிலேயக் கல்விமுறை புகுத்தப்பட்டதால், மேல்நாட்டுக் கருத்துகள் இந்திய மக்களிடையே பரவத் தொடங்கின. அதன் விளைவாக மக்களிடையே முற்போக்கு உணர்ச்சியும், தேசிய உணர்ச்சியும் வளர்ந்தனவென்று முன்னரே கண்டறிந்தோம். ஆங்கில மொழி இந்திய மக்களை ஒன்று சேர்க்கப் பயன்பட்டதென்றும் மேலே கவனித்தோம். மேலும், இந்திய மொழிகள் வளருவதற்கும் அது துணைபுரிந்தது. ஆங்கிலேயர்கள் பலர் இந்திய மொழிகளைக் கற்க ஆரம்பித்தனர். பல அகராதிகளை வெளியிடுவதற்கு அவர்கள் உதவினார்கள். ஆங்கிலேய இலக்கியங்களை இந்திய மொழிகளில் எழுதப் பலர் முற்பட்டதால், இந்திய இலக்கியங்கள் வளரலாயின. நவீனங்கள் (Novels) வளரவும் அது காரணமாயிருந்தது. சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு ஐரோப்பியர்கள் பெரிதும் உதவினர். மேல்நாட்டவர்கள் சமஸ்கிருதக் கையேடுகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்ய முற்பட்டனர். வரலாற்றுத் துறையில் அவர்கள் அரும்பணி செய்துள்ளார்கள். ஐரோப்பிய அறிஞர்கள் பழங்கால நினைவுச் சின்னங்களையும், பொறித்து வைக்கப்பட்ட எழுத்துமூலங்களையும் ஆராய்ந்தறியவில்லை யென்றால், இந்திய சரித்திரத்தில் தோன்றிய பெருமை வாய்ந்த காலங்களைப்பற்றி நாம் அறிவது மிகவும் கடினமாக இருந்திருக்கும்.[1] கண்டறிந்த புதைபொருள்களையும், நினைவுச் சின்னங்களையும், கல்வெட்டுகள், செப்பேடுகள், கையேடுகள், பழங்கால நாணயங்கள் ஆகியவற்றையும் சீரிய முறையிலே பாதுகாத்து வைத்தனர். ஆட்சிமுறையைப்பற்றிய பத்திரங்களையும் பாதுகாத்து வைக்க ஏற்பாடு செய்திருந்ததால், சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுவதற்கு நமக்கு உதவிபுரிகிறது.

ஐரோப்பியக் குடியேற்ற மக்களுடைய தேவையை நிறைவேற்றுவதற்குப் பத்திரிகைகள் முதலில் தோன்றின. அச்சுத் தொழில் வளர்ச்சியடையவே, பத்திரிகைத் தொழில் சிறப்புற்று வளரலாயிற்று. சமயப் பரப்பாளர்கள் முதன்முதலில் இந்திய மொழிகளில் அச்சுகளைத் தயாரித்தனர். அதன் விளைவாக இந்திய மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவரலாயின. பத்திரிகைகள் இந்தியர்களின் கருத்துகளை வெளியிடவும், புது வகையான இலக்கியம் தோன்றவும் உதவி செய்தன. நாடகம், சித்திரம் போன்ற கலைகளும் மேல்நாட்டினருடன் ஏற்பட்ட தொடர்பால் மாறுதல் அடைந்தன.

பிரிட்டிஷ் ஆட்சி சில தீமைகளையும் ஏற்படுத்தியது. ஆட்சி முறையைப் பொறுத்த அளவில், அது கிராமத்தில் வளர்ச்சி பெற்றுவந்த

[1] K. M. Panikkar, 'A Survey of Indian History', p. 264.

தன்னாட்சி முறையை ஒழித்தது. கிராம அதிகாரிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஊழியர்களாக இருந்தனரேயன்றி மக்களின் தலைவர்களாக விளங்கவில்லை. அதிகாரவர்க்கம் வலிமை பெற்று விளங்கியதால், மக்கள் வாய்ப்பு வள ஆற்றல் அற்றிருந்தனர். வரிச்சுமை அதிகமாக இருந்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டது. ஆகவே, விவசாயிகள் கடன் வாங்க நேர்ந்தது. மேலும், ஆங்கிலேயர்களுடன் ஏற்பட்ட தொடர்பினால் உணவுப் பொருள்கள் பயிரிடுவது தடைப்பட்டது. பிரிட்டனிலுள்ள நெசவாலைகளுக்கு வேண்டிய பருத்தியையும், சணலையும், அவுரிச் செடியையும், சீனர்களுக்கு வேண்டிய அபினியைத் தரும் செடியையும் பயிரிட்டனர். மேலும், பயிர்த் தோட்டங்கள் பெரும்பாலும் வெள்ளையர்களிடமே இருந்தன. மேலும், நாட்டில் தொழில் வளம் பெருகாததால், மக்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறெதையும் மேற்கொள்ள முடியவில்லை. ஆதலால், ஒவ்வொரு தலைமுறையின்போதும் பயிர் நிலங்கள் சிறு சிறு துண்டுகளாக்கப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள் போதிய அளவில் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, நாட்டில் பஞ்சம் அடிக்கடி ஏற்படலாயிற்று. தொழில் துறையும் மிக இழிந்த நிலையில் இருந்தது. தொழிற் புரட்சியின் காரணமாகக் கைத்தொழில்கள் அழிவுற்றன. இந்தியாவிலே பல நெசவாலைகள், இரும்புத் தொழில்கள்போன்றவை ஏற்படுத்தப்பட்டன என்றாலும், அவைகளுடைய வளர்ச்சி அரசாங்கத்தின் தடையிலா வர்த்தகக் கொள்கையால் பாதிக்கப்பட்டது. புதியவாக வளரும் தொழில்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அரசாங்கம் அளிக்கத் தவறியது. மேலும், இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட தொழில்களும் பெரும்பாலும் அந்நியர்களிடமே இருந்தன. வியாபாரத் துறையிலும் அந்நியர்களே செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஆகவே, பஞ்சத்தாலும் வேலையின்மையாலும் அவதிப்பட்ட மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல நேர்ந்தது. சமூகத்துறையிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முயற்சிகள் பெரும் பயனை அளிக்கவில்லை. சமூகச் சீர்திருத்தங்கள் பெரும்பாலும் படித்தறிந்த இந்தியர்களிடமே விடப்பட்டது. ஏனெனில், பேரரசியார் விடுத்த பொது அறிக்கையில் அரசாங்கம் சாதிமத விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆயினும், சாதிமத வேற்றுமைகளை பிரிட்டிஷ் ஆட்சி நிலைபெற வேண்டி அரசாங்கம் பயன்படுத்தியது. மேலும், அறியாமை முற்றிலும் அகற்றப்படவில்லை. கல்விக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஏற்படுத்தப்பட்ட பாடமுறை அரசாங்கத் துறையில் பணிபுரிவதற்கேற்றவாறு அமைக்கப்பட்டது. பொறியியல் கல்லூரிகளும் மருத்துவக் கல்லூரியும் ஓரளவு ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அவைகள் போதிய அளவில் இருக்கவில்லை. மேலும், தொழிற் கல்விக்குத் தகுந்த இடமளிக்கப்படவில்லை. ஆகவேதான், இந்தியா சுதந்திரம் பெற்றபிறகு பல துறைகளிலும் முன்னேறப் பெருமுயற்சி மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

இந்தோ–சீனு

இந்தோ–சீனு தென்கிழக்கு ஆசியாவின் தென்கிழக்குப் பகுதியிலிருக்கிறது. 16ஆம் நூற்றுண்டில் அது பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளுள் முக்கியமானவை அன்னும், கொச்சின் சீனு, கம்போடியா என்பனவாகும். 17ஆம் நூற்றுண்டில் ஃபிரஞ்சுக்காரர்கள் கொச்சின் சீனுவின் அரசருடன் வியாபார உடன்படிக்கை செய்துகொண்டனர். ஆனல், 19ஆம் நூற்றுண்டில் ஃபிரஞ்சு வியாபாரிகள் வெளியேற்றப்பட்டனர். அங்குக் கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காகச் சென்ற சமயப் பரப்பாளர்கள் துன்புறுத்தப்பட்டனர். ஆகவே, ஃபிரஞ்சு அரசாங்கம் ஒரு படையை அனுப்பிச் சிறிது சிறிதாக இந்தோ–சீனுவின் பெரும்பகுதியைத் தன்னுடைய ஆதிக்கத்திற்குட்படுத்தியது. இருபதாம் நூற்றுண்டில் இந்தோ–சீன மக்களிடையே தேசிய உணர்ச்சி வளரலாயிற்று. அத்துடன் கம்யூனிசக் கோட்பாடும் அவர்களிடையே வேரூன்றத் தொடங்கியது. அதன் விளைவாக வியத்நாம் சுதந்திர சங்கம் ஒன்று கம்யூனிஸ்டு தலைவரான ஹோ சி மின் (Ho Chi Minh) என்பவரின் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டபொழுது, ஜப்பானியர்கள் இந்தோ–சீனுவிலிருந்த ஃபிரஞ்சுப் படைகளை முறியடித்து விரட்டினுர்கள். ஜப்பான் தோல்வியுற்றபோது, ஹோ சி மின் இந்தோ–சீனுவை 'வியத்நாம்' என்ற பெயருடன் சுதந்திர நாடாக அமைத்தார். அக் குடியரசு இந்தோ–சீனுவின் வடபகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தது. தென்பகுதியில் ஃபிரஞ்சுக்காரர்கள் மீண்டும் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திஞர்கள். அதன் பிறகு ஃபிரஞ்சுக்காரர்கள் தேசிய உணர்வு பெற்ற மக்களுடன் போர் புரிய வேண்டியதாயிற்று. அதன் விளைவாக 1949-ல் தென்பகுதியில் பாதாய் (Baodai) தலைமையில் வியத்நாம் அரசு ஏற்படுத்தப்பட்டது. ஃபிரான்சு கம்போடியா, லாவோஸ் ஆகியவற்றுடன் உடன்பாடு ஏற்படுத்தியது. அவைகளுக்குத் தன்னுட்சி உரிமை வழங்கியது. அயல்நாட்டுக் கொள்கையிலும், பாதுகாப்புத் துறையிலும் ஃபிரான்சுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

1950-ல் இந்தோ–சீனு மூன்று பிரிவுகளாக இருந்தது—லாவோஸும் கம்போடியாவும் சேர்ந்த அரசு, பாதாயின்கீழ் அமைக்கப்பட்ட வியத்நாம், ஹோ சி மின் கீழ் அமைக்கப்பட்ட ஜனநாயகக் குடியரசு. முதலிரண்டு பிரிவுகளும் பெயரளவில் சுதந்திரமடைந்த நாடுகளாக இருந்தன. அங்கு ஃபிரஞ்சுக்காரர்களின் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. வியட்மின் படைகள் கொரில்லாப் போர்முறையைக் கையாண்டு தம்முடைய செல்வாக்கைப் பரப்ப முயன்றன. அவைகளுக்கு சீனக் கம்யூனிஸ்டுகளின் ஆதரவு இருந்தது. ஆகவே, 1954-ல் இந்தோ–சீனுவின் பிரச்சினைக்கு முடிவு காண ஜெனீவாவில் மாநாடு

நடத்தப்பட்டது. இந்தோ–சீனுவிலுள்ள நாடுகளின் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. ஃபிரஞ்சுக்காரர்கள் இந்தோ–சீனுவினின்றும் வெளியேற இசைந்தனர். வடக்கு வியத்நாம், தெற்கு வியத்நாம் நாடுகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன. தெற்கு வியத்நாமில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்தத் தெற்கு வியத்நாம் கம்யூனிஸ்டுகள் முனைந்திருக்கிறுர்கள். அவர்களுக்கு வியத்காங் (Viet Cong) என்று பெயர். அவர்கள் கொரில்லா முறைப் போரைக் கையாண்டு ஆட்சியை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறுர்கள். அவர்களுக்கு வடக்கு வியத்நாம் அரசும், கம்யூனிஸ்டு நாடுகளும் உதவி செய்கின்றன. தெற்கு வியத்நாமில் அமெரிக்கப் படைகள் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அந் நாட்டின் அரசாங்கத்திற்கு உதவி செய்து வருகிறது.

இந்தோனீசியா

கிழக்கிந்தியத் தீவுகளில் முதலில் குடியேற்றங்களை அமைத்தவர்கள் போர்ச்சுகீசியரேயாவர். 17ஆம் நூற்ருண்டில் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி கிழக்கிந்தியத் தீவுகளில் சுதேசி மக்களுடன் மேற்கொண்ட போர்களின் விளைவாகப் பேரரசை ஏற்படுத்திஞர்கள். 1798-ல் ஆட்சி அதிகாரங்களை டச்சு அரசாங்கத்தினர் மேற்கொண்டனர். இருபதாம் நூற்ருண்டில் அப் பகுதியில் வாழும் இந்தோனீசியர்கள் அந்நிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர். அதன் விளைவாகப் பல தேசீய அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் ஒன்று இந்தோனீசிய தேசீயக் கட்சியாகும். இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டபோது தேசீய உணர்ச்சி மக்களிடம் மேலும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. 1945-ல் ஜப்பானியர்களின் தோல்விகளுக்குப் பிறகு அவர்கள் இந்தோனீசியக் குடியரசை ஏற்படுத்திஞர்கள். டாக்டர் சுகர்னே அதன் தலைவராக அமர்த்தப்பட்டார். ஆயினும், டச்சுக்காரர்களுக்கும் இந்தோனீசியர்களுக்கும் இடையே தகராறுகள் தீர்ந்தபாடில்லை. முடிவில் வட்டமேசை மாநாடுகளின் பயனுக ஹேக் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. அதனுல் டச்சுக்காரர்கள் இந்தோனீசியாவைச் சுதந்திர நாடாக ஏற்றுக்கொண்டார்கள்.

பிலிப்பைன் தீவுகள்

பசிஃபிக் பெருங்கடலிலுள்ள பிலிப்பைன் தீவுகள் முதலில் ஸ்பானியர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்துவந்தது. 1898-ல் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவிற்கும் ஏற்பட்ட போரின் விளைவாக அத் தீவுகள் அமெரிக்கா வசமாயின. அமெரிக்கா 1934-ல் அந் நாட்டு மக்களுக்குத் தன்னுட்சி யுரிமையைப் பெரிதளவில் வழங்கிற்று. 1942-ல் அத் தீவுகள் ஜப்பானியர் வசமாயின. 1944-ல் அமெரிக்கா அவைகளை மீண்டும் கைப்பற்றியது. 1946-ல் அத் தீவுகள் சுதந்திரம் பெற்றன.

8. இருபதாம் நூற்ருண்டில் உலகத்தின் நிலை

பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஐரோப்பியர்கள் பல துறைகளிலும் தீவிர முன்னேற்றம் அடைந்தார்கள் என்று கண்டறிந்தோம். தொழிற் புரட்சியும், விவசாயப் புரட்சியும் அந் நாடுகளின் பொருள் வளத்தைப் பெருக்கிற்று. வல்லாட்சி முறை பல இடங்களில் ஒழிக்கப்பட்டு மக்களாட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. தேசிய.இனஞ் சார்ந்த நாடுகள் சில தோன்றின. உலகத்தின் பெரும்பாகத்தில் குடியேற்றங்களை அமைத்தார்கள். ஆனல், நாடுகளுக்கிடையே ஏற்படும் தகராறுகளைச் சமாதான முறையைக் கையாண்டு தீர்த்துக்கொள்ளும் கலையை அவர்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. அவ்வப்பொழுது மகாநாடு களை ஏற்படுத்திப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்பட்டனர் என்பது உண்மையே என்ருலும், அம் மகாநாடுகள் நிலையான சமாதானம் ஏற்பட வழிசெய்யவில்லை. 1899-ல் சர்வதேச நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு நாடுகளுக்கிடையே ஏற்படும் தகராறு களைத் தீர்த்துவைக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனல், அதனுடைய முடிவை வலியுறுத்துவதற்கு வேண்டிய அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந் நூற்ருண்டின் முற்பகுதியில் உலக அமைதி இருமுறை பாதிக்கப்பட்டது. அதனல் பல கேடுகள் நேர்ந்தன. எனவே, இனி அவைகளுள் முதலாவது போர் ஏற்படக் காரணங்களையும் விளைவுகளையும் கவனிப்போம்.

முதலாவது உலகப் போர்

இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஐரோப்பாவில் ஏற்பட் டிருந்த நிலைமை போர் ஏற்படக் காரணமாய் இருந்தது. 1870–1871-ல் ஃபிரான்சுக்கும் பிரஷ்யாவிற்கும் போர் நடந்தது என்றும், அப் போரின் விளைவாக ஃபிரான்சு.அல்சேஸ், லொரேன் பகுதிகளை இழந்தது என்றும் முன்னர்க் குறிப்பிட்டோம். இழந்த இடங்களைத் திரும்பப் பெறவேண்டும் என்று ஃபிரான்சு எண்ணமிட்டிருந்தது. அதற்காக ஃபிரான்சு போர்செய்ய முயற்சி செய்யும் என்று பிஸ்மார்க்கு அறிந்

திருந்தார். பிரஷ்யா மேற்கொண்ட போர்களின் விளைவாகவே ஜெர்மனிப் பேரரசு ஏற்படுத்தப்பட்டபோதிலும், ஜெர்மனி அனைத்தும் ஓராட்சியின் கீழ்க் கொண்டு வந்த பிறகு பிஸ்மார்க்கு போரைத் தடுக்க முயன்றுர். அவருடைய கவனமெல்லாம் ஜெர்மனிப் பேரரசை வலுப் படுத்துவதிலேயே செலுத்தப்பட்டிருந்தது. அவருடைய நோக்கம் நிறைவேற, அமைதி இன்றியமையாததாகக் காணப்பட்டது. ஆனால், ஃபிரான்சு ஜெர்மனியை அமைதியாக வாழவிடாது என்றும் அவர் அறிந்தார். ஃபிரான்சு மட்டும் மீண்டும் போரிட நேர்ந்தால் ஜெர்மனி வெற்றி பெறுவது நிச்சயம். ஆனால், வேறு ஐரோப்பிய வல்லரசுகள் அதனுடன் சேர்ந்தால் ஜெர்மனியின் நிலை கவலைக்கிடமாகும். அப்பொழுது பிரிட்டன் ஐரோப்பாவினின்றும் விலகி வாழும் கொள்கை யைப் பின்பற்றி வந்தது. ஜெர்மனி பலமுடைய நாடாக மாறுவதை ருஷ்யா விரும்பவில்லை. என்றாலும், பிஸ்மார்க்கு ருஷ்யாவிற்குச் செய்த நற்பணியை மறக்கவில்லை. ஆஸ்திரியா பிரஷ்யாவிடம் தோல்வியடைந்தபோதிலும், பிரஷ்யா வியன்னாவைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிடுமாறு பிஸ்மார்க்கு அதனுடைய மன்னரை வேண்டி, அதன் வாயிலாக ஆஸ்திரியாவின் நன்மதிப்பைப் பெற்றுர். ஆயினும், இவ்விரு நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டு ஃபிரான்சைத் தனித்திருக்கவைத்தால் ஜெர்மனிக்கு எதிராக நேச உடன்படிக்கை ஏற்படுத்துவதைத் தடுக்கக்கூடும் என்று பிஸ்மார்க்கு கருதினர். 1872-ல் மூன்று பேரரசர்களும் பெர்லினில் கூடித் தனிமுறையான ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அப்பொழுது ஏற்படுத்தியிருந்த எல்லைகளைக் காத்துவர மூவரும் ஒப்புதல் தெரிவித் தார்கள். மேலும், புரட்சி இயக்கங்களை ஒடுக்கவும், அண்மைக் கிழக்கு நாடுகளைப்பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் ஒத்துழைக்க இசைந்தார்கள். 1873-ல் இத்தாலியின் அரசர் பெர்லின் சென்றுர். ஆகவே, ஃபிரான்சைத் தனித்திருக்கச் செய்த முயற்சியில் பெரும் வெற்றியை பிஸ்மார்க்கு அடைந்தார்.

1875-ல் ஒரு பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. ருஷ்யாவும் ஆஸ்திரி யாவும் துருக்கியின் ஆளுகைக்குட்பட்டிருந்த அண்மைக் கிழக்கு நாடுகளில் செல்வாக்குப் பெற முயன்றன. அவ் விரு நாடுகளுக் கிடையே போர் ஏற்பட வாய்ப்பு இருந்தது. ஆகவே, அவ் விரு நாடுகளுக்கிடையே போர் ஏற்பட்டால் ஜெர்மனி நடுநிலை வகிக்க வேண்டுமென்றுருஷ்யா கேட்டுக்கொண்டது. ஆனால், ஜெர்மனி மறுத்து விட்டது. மேலும், 1878-ல் பெர்லின் மாநாட்டில் ஜெர்மனி ஆஸ்திரி யாவையே ஆதரித்தது. ஆகவே, ருஷ்யா மூன்று பேரரசர்கள் ஒப்பந் தக் குழுவினின்றும் விலகியது. அதனால், ஜெர்மனி ஆஸ்திரியாவுடன் நெருங்கி உறவு ஏற்படுத்திக்கொள்வது அவசியமாக இருந்தது. ஆகவே, ஆஸ்திரியாவுடன் 1879-ல் தற்காப்புக்கென ஒப்பந்தம் ஏற்

படுத்திக்கொண்டது. அதற்கு இரண்டு அரசு நேச உடன்படிக்கை என்று பெயர். இவ்விரு நாடுகளில் ஒன்றை ருஷ்யா தாக்க நேர்ந்தால் மற்ற நாடு அதனுடைய உதவிக்குச் செல்லவேண்டும் என்றும், ருஷ்யாவைத் தவிர ஏனைய நாடு ஜெர்மனி அல்லது ஆஸ்திரியாவைத் தாக்க நேர்ந்தால், மற்ற நாடு நடுநிலை வகிக்க வேண்டும் என்றும், ஜெர்மனி அல்லது ஆஸ்திரியாவை ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் தாக்க நேர்ந்தால் மற்ற நாடு அதனுடைய உதவிக்குச் செல்லவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் நிபந்தனைகள் இரகசியமாக வைக்கப்பட்டன. இவ்வொப்பந்தம் ஐந்து ஆண்டுகள் வரை நடைமுறையில் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதே நேரத்தில் பிஸ்மார்க்கு ருஷ்யாவைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, மூன்று பேரரசர்களின் தனிமுறையான ஒப்பந்தத்தை 1881-ல் புதுப்பித்தார். 1882-ல் இத்தாலி இரண்டு அரசு ஒப்பந்தத்தில் சேர்ந்து கொண்டதால் இரண்டு அரசு ஒப்பந்தம் மூவரசு நேச உடன்படிக்கையாக மாறியது. ஃபிரான்சு டுனிசியாவைக் கைப்பற்றி இத்தாலியின் வெறுப்பைத் தேடிக்கொண்டது. மேலும், ஃபிரான்சு இத்தாலிய அரசுக்கு எதிராக போப்புக்கு உதவிபுரியும் என்ற பயம் இத்தாலிக்கு ஏற்பட்டதால் அவ்வுடன்படிக்கையைச் செய்துகொண்டது. ஃபிரான்சு ஜெர்மனியைத் தாக்க நேர்ந்தால் ஜெர்மனிக்கு உதவுவதாக இத்தாலி ஒப்புக்கொண்டது. ஃபிரான்சு இத்தாலியைத் தாக்க நேர்ந்தால் ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் இத்தாலிக்கு உதவுவதாக ஒப்புக்கொண்டன. ருஷ்யா இம் மூன்று நாடுகளில் ஒன்றைத் தாக்க நேர்ந்தால், ஏனைய இரண்டு நாடுகளும் நடுநிலைமை வகிக்கவும், ருஷ்யாவும் ஃபிரான்சும் சேர்ந்து இம் மூன்று நாடுகளில் ஒன்றைத் தாக்க நேர்ந்தால், மற்ற இருநாடுகளும் தாக்கப்பட்ட நாட்டிற்கு உதவுவதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வுடன்படிக்கையும் இரகசியமாகவே வைத்திருக்க ஏற்பாடாயிற்று. அது 5 ஆண்டுகள் நீடித்திருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இரண்டு அரசு உடன்படிக்கை அதனால் பாதிக்கப்படவில்லை.

அதே நேரத்தில் பிஸ்மார்க்கு ருஷ்யாவின் நட்பையும் நாடினார். ஆகவே, மூன்று பேரரசர்களின் தனி முறையான ஒப்பந்தம் 1887-ல் முடிவுற்றபோது, பிஸ்மார்க்கு ருஷ்யாவுடன் உடன்படிக்கையும் செய்து கொண்டார். அதன்படி ஃபிரான்சு ஜெர்மனியைத் தாக்கினால், ருஷ்யா நடுநிலை வகிக்கவும், ஆஸ்திரியா ருஷ்யாவைத் தாக்கினால் ஜெர்மனி நடுநிலை வகிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வுடன்படிக்கையும் இரகசியமாகவே வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பிஸ்மார்க்கினுடைய நடவடிக்கைகளின் விளைவாக ஐரோப்பாவில் மூன்று அரசு நேச உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. 'அவர் பதவியி

னின்றும் விலகிய பிறகு அதற்கெதிராக மூன்று அரசு நட்புறவு ஒப்பந்தம் (Triple Entente) ஏற்படுத்தப்பட்டது. 1888-ல் ருஷ்யா ஜெர்மனியைப் பண உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டது. ஜெர்மனி மறுக்கவே, ருஷ்யா ஃபிரான்சின் உதவியை நாடியது. ஃபிரான்சு அவ் வாய்ப்பைப் பயன்படுத்தி ருஷ்யாவிற்கு வேண்டிய உதவியளித்து அதனுடைய நட்பைப் பெற முயன்றது. ஆகவே, ஜெர்மன் கெய்சர் ருஷ்யாவுடன் பிஸ்மார்க்கு செய்துகொண்ட உடன் படிக்கையைப் புதுப்பிக்க மறுத்துவிட்டார். அதனுல் ருஷ்யாவிற்கும் ஃபிரான்சுக்கும் இடையே ஏற்பட்ட உறவு மேலும் வலுப்பெற்றது. ஃபிரான்சு ருஷ்யாவிற்கு மேலும் கடன் தொகைகளே வழங்கியது. இறுதியில் 1894-ல் இரு நாடுகளும் உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி ஜெர்மனி அல்லது ஜெர்மனியின் உதவியைப் பெற்ற இத்தாலி ஃபிரான்சைத் தாக்கினுல் ருஷ்யா ஃபிரான்சின் உதவிக்கு வர இசைந்தது. ஜெர்மனி அல்லது ஜெர்மனியின் உதவியுடன் ஆஸ்திரியா ருஷ்யாவைத் தாக்கினுல் ஃபிரான்சு ருஷ்யாவிற்கு உதவி செய்ய இசைந்தது. அவ் வுடன்படிக்கையின் நிபந்தனேகள் இரகசியமாக வைக்கப்பட்டன. மேலும், மூவரசு நேச உடன்படிக்கை நீடித்திருக் கும் வரை இவ் வுடன்படிக்கையும் நீடித்திருக்க ஏற்பாடு செய்யப்பட் டது. பிஸ்மார்க்கு எதைத் தடுக்க எண்ணினுரோ அது நேர்ந்து விட்டது. ஃபிரான்சு இப்பொழுது நேசநாட்டின் உறவைப் பெற்றது. ருஷ்யாவிற்கு இராணுவ உதவி மட்டுமன்றி அமைதிக்காலத்தில் ஃபிரான்சின் பண உதவியும் கிடைத்தது. ஆனுல், ஐரோப்பா இப் பொழுது இரண்டு பிரிவுகளாக அமைந்துவிட்டது.

முதலில் பிரிட்டன் மூவரசு நேச உடன்படிக்கையை ஆதரிப்ப தாகத் தோன்றியது. ஃபிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் குடியேற்றப் பெருக்கக் கொள்கையின் காரணமாகத் தகராறுகள் ஏற்பட்டிருந்தன. ருஷ்யாவிற்கும் பிரிட்டனுக்கும் அண்மைக் கிழக்கு நாடுகளேப்பற்றிய பிரச்சினேயில் கருத்துவேற்றுமைகள் இருந்தன. மேலும், அவ்விரு நாடுகளுக்கும் பாரசீகத்திலும் ஆப்கானித்தானத்திலும் ஆதிக்கம் ஏற்படுத்துவதில் போட்டி ஏற்பட்டிருந்தது. ஆயினும், மூவரசு நேச உடன்படிக்கையில் சேர்ந்துகொள்ளுமாறு பிரிட்டனுக்கு விடுத்த அழைப்பை, பிரிட்டன் ஏற்றுக்கொள்ளவில்லே. இறுதியில் பிரிட்டன் சில காரணங்களால் ஜெர்மனிக்கு எதிராக உடன்படிக்கை ஏற்படுத்த வேண்டியதாயிற்று. ஜெர்மனியில் தொழிற்புரட்சி ஏற்பட்டதன் விளே வாக ஜெர்மனியினுடைய செய்பொருள்களே விற்பதற்கும், அதற்குத் தேவையான மூலப்பொருள்களேப் பெறுவதற்கும், குடியேற்றங்கள் தேவைப்பட்டன. மேலும், ஜெர்மனியில் மக்கள் தொகை பெருகி வந்ததால், அவர்களுக்குப் புதிய குடியிருப்பை ஏற்படுத்தித் தரவேண் டியதாயிற்று. மேலும், ஜெர்மனியின் தேசப் பெருமையை உயர்த்தவும்

குடியேற்றங்கள் தேவைப்பட்டன. ஆகவே, பிரிட்டனுடன் ஜெர்மனியும் குடியேற்றப் பெருக்கத்தின் காரணமாகப் போட்டியிட நேர்ந்தது. மேலும், ஜெர்மனி சமாதான முறையைக் கையாண்டு துருக்கியில் அதனுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டு வந்தது. ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கியில் போர் வாயிலாகவோ அல்லது சமாதான முறையைக் கைப்பற்றியோ அவைகளுடைய செல்வாக்கை ஏற்படுத்தினுல் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசுக்கு ஆபத்து விளையும் என்ற கருத்தை பிரிட்டன் வெகுநாளாகக் கொண்டிருந்தது. மேலும், ஜெர்மனி அதனுடைய கப்பற்படையை வலுப்படுத்தத் தொடங்கியது. அதற்கெனச் சட்டங்களை இயற்றியது. பிரிட்டிஷ் கப்பற்படையின் செல்வாக்கை அழிக்கவேண்டும் என்பதே ஜெர்மனியின் கப்பற்படை பெருக்கக் கொள்கையின் உட்கருத்தாகும். மேலும், 1895-ல் டிரான்ஸ்வால் பகுதியில் பிரிட்டிஷ் படைகள் தோல்வியுற்றபோது ஜெர்மன் கெய்சர் டிரான்ஸ்வால் அரசுத்தலைவரான குரூகருக்கு ஜெர்மனியின் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் தந்தியொன்றை அனுப்பிவைத்தார். ஜெர்மனியின் நடவடிக்கைகள் பிரிட்டனை நேசநாடுகளைத் தேடி அலையச்செய்தன. அதனுல் பிரிட்டன் ஃபிரான்சுடன் சேர்ந்தது. 1904-ல் அவ் விரு நாடுகளுக்கு இடையே குடியேற்றப் பெருக்கத்தின் காரணமாக ஆஃப்ரிக்கா, ஆசியா, அமெரிக்கா ஆகிய இடங்களில் ஏற்பட்டிருந்த தகராறுகளுக்குத் தீர்வு காணப்பட்டது. அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி (Anglo-French Entente) ஃபிரான்சு நியூபவுண்டுலாந்தில் அதற்கிருந்த மீன்பிடிக்கும் உரிமைகளை விட்டுக்கொடுத்தது. அதற்காக மேற்கு ஆஃப்ரிக்காவில் சில இடங்களைப் பெற்றது. ஃபிரான்சு மொராக்கோவில் அதனுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தவும், பிரிட்டன் எகிப்தில் அதனுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. சையாம் பிரிச்சினைக்கும் முடிவு காணப்பட்டது.

அதன் பிறகு பிரிட்டனுக்கும், ருஷ்யாவிற்கும் இடையேயிருந்த தகராறுகளுக்கும் முடிவுகாண ஃபிரான்சு முயன்றது. அதனுல் 1907-ல் அவ்விரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் (Anglo-Russian Entente) ஏற்பட்டது. பாரசீகத்தில அந் நாடுகளுக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கு வட்டாரங்கள் (Spheres of Influence) வரையறுக்கப்பட்டன. ஆப்கானித்தானமும், திபெத்தும் கூறுபடா நிலையில் இருத்தல் வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்வாருக, ஐரோப்பாவில் பெரும் வல்லரசுகள் அடங்கிய இரு நேச நாடுகளின் கூட்டிணைவு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவைகளுக்கிடையே பகையுணர்ச்சியும், வெறுப்பும், பொருமையும் வளர்ந்திருந்தன. அதுவே முதலாவது உலகப்போருக்கு முக்கியமான காரணங்களில் ஒன்ருகும்.

போருக்கு வேறு காரணங்களும் உண்டு. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஆட்சிப் பரப்புச் சார்ந்த தகராறுகள் பல ஏற்பட்டிருந்தன. உதாரணமாக, ஃபிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் அல்சேஸ் லொரேன் பகுதிகளைப்பற்றித் தகராறு ஏற்பட்டிருந்தது. அப் பிரச்சினைகளைப் போர் முறையைக் கையாண்டு தீர்த்துக்கொள்ள விரும்பினுர்கள்.

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே அக் காலத்தில் போர்க்கருவிகளைச் சேகரிப்பதிலும், படைகளை அதிகப்படுத்துவதிலும் பெரும் போட்டி ஏற்பட்டிருந்தது. போர் முறையைக் கையாண்டு பிரஷ்யா முன்னேற்றம் அடைந்ததைக் கண்ணுற்ற ஏனைய நாடுகளும் போர் மனப்பான்மையை வளர்க்கலாயின. சில நாடுகள் படைகளைப் பெருக்குவதைக் கண்ட மற்ற நாடுகள் படைகளைப் பெருக்க முற்பட்டன. அக் காலத்தில் எல்லா நாடுகளும் தற்காப்புக்காகவும், அமைதியாக வாழ்வதற்கும் படைகளைப் பெருக்குவதாகக் கூறிக்கொண்டன. படைப்பெருக்கம் போருக்கான காரணங்களில் ஒன்ருகும்.

மேலும், ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை அமைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தன. அதனுல் அவைகளுக்கிடையே பலத்த போட்டி ஏற்பட்டது. அதன் பயனுகப் பகைமையுணர்ச்சி வளரலாயிற்று.

தொழிற்புரட்சி ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு நாடும் தன்னுடைய தொழில்களைக் காப்பாற்ற நடவடிக்கை மேற்கொண்டது. அதனுல் காப்பு வரிகளை விதிக்க முற்பட்டது. அதனுலும் நாடுகளுக்கிடையே தகராறுகள் ஏற்பட்டன.

மேலும், ஐரோப்பாவில் சுமார் 25 முழு உரிமைபெற்ற நாடுகள் இருந்தன. அவைகள் ஒவ்வொன்றும் அதன் விருப்பம்போல் நடக்க உரிமையுண்டு என்று வாதாடின. வேறெரு நாடு அதற்குக் கட்டளையிடுவதை அனுமதிக்கத் தயாராகவில்லை. மேலும், பிற நாடுகளின் யோசனையை ஏற்ருல் அதனுடைய நாட்டுப் பெருமை குறைந்துவிடும் என்ற கருத்தும் நிலவிவந்தது. அப்பொழுது வளர்ந்திருந்த நாட்டுப்பற்றுக் கருத்தின்படி, குடிமக்கள் அனைவரும் தங்களுடைய அரசாங்கம் நியாயமற்ற காரணங்களால் போர் புரிய நேர்ந்தாலும் அதற்கு முழு மனத்துடன் உதவிசெய்ய வேண்டும் என்று கருதினுர்கள்.

போருக்கு உடனடியான காரணம் ஆஸ்திரியாவின் இளவரசரான ஃபிரான்சிஸ் பெர்டினுண்டு என்பவரைக் கொலை செய்ததேயாகும். அப்பொழுது பாஸ்னியா என்னும் பகுதி ஆஸ்திரியாவின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. பாஸ்னிய மக்கள் ஸ்லாவ் (Slav) இனத்தைச்

சார்ந்தவர்கள். ஆகவே, அதற்கு அண்மையிலுள்ள செர்பியா (Serbia) என்னும் நாடு பாஸ்னியாவைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள விரும்பியது. ஆஸ்திரியா ஜெர்மன் நாடாதலால், பாஸ்னியாவும் செர்பியாவுடன் சேர விரும்பியது. அதனால் அங்குக் கிளர்ச்சி ஏற்பட்டது. அதன் பயனாக இளவரசர் பாஸ்னியாவிலுள்ள செரயிவோ (Serajevo) என்னும் இடத்திற்குச் சென்றிருந்தபோது கொலைசெய்யப்பட்டார். செர்பியாவே இக் கொடுஞ்செயலுக்குக் காரணம் என்று ஆஸ்திரியா முடிவு கட்டியது. ஆனால், அதற்குத் தகுந்த ஆதாரம் ஏதும் இல்லை. எனினும், அவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு செர்பியாவை அழித்துவிட ஆஸ்திரியா தீர்மானித்தது. ஆஸ்திரியா செர்பியாவிற்கெதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஜெர்மனி உதவ வாக்களித்த பின்னர், செர்பியாவிற்குப் போர்ச் செய்தி ஒன்றை அனுப்பியது. அதில் காணப்பட்ட நிபந்தனைகள் சிலவற்றை செர்பியா ஏற்றுக்சொள்வதாக கூறியும் ஆஸ்திரியா 1914ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் தேதி செர்பியாவிற்கு எதிராகப் போர் துவக்கியது. ருஷ்யா செர்பியாவின் உதவிக்கு வந்தது. ஜெர்மனி ஆஸ்திரியாவின் பக்கம் சேர்ந்தது. ஃபிரான்சு நடுநிலைமை வகிக்க மறுத்ததால் ஜெர்மனி ஃபிரான்சுக்கு எதிராகப் போர் தொடுத்தது. ருஷ்யா போர் ஏற்பாடுகளைச் செய்து முடிக்கும் முன்னர் ஃபிரான்சை ஒழித்துவிடவேண்டும் என்று ஜெர்மனியப் படைகள் பெல்ஜியம் வழியாக ஃபிரான்சை நோக்கி முன்னேறியது. பெல்ஜியத்தின் அனுமதி இன்றி அந் நாட்டிற்குள் புகுந்ததாலும், ஐரோப்பிய நாடுகள் பெல்ஜியத்தினுடைய நடுநிலையைக் காப்பாற்றுவதாக உடன்படிக்கை செய்துகொண்டிருந்ததாலும், பிரிட்டன் போரில் கலந்துகொள்ள பார்லிமென்டின் ஆதரவைப்பெற வாய்ப்பு ஏற்பட்டது. பிரிட்டனின் நேசநாடான ஜப்பான் ஜெர்மனிக்கு எதிராகப் போரில் ஈடுபட்டது. இத்தாலி முதலில் நடுநிலைமை வகித்தது. பிறகு பிரிட்டன் ஃபிரான்சு ஆகியவற்றுடன் சேர்ந்து போரில் ஈடுபட்டது. நாளடைவில் ஏனைய நாடுகளும் போரில் கலந்துகொண்டன. துருக்கி, பல்கேரியா ஆகியவை ஜெர்மனியுடனும், ருமேனியா, சீனு ஆகியவை பிரிட்டனுடனும் சேர்ந்துகொண்டன. பிரிட்டிஷ் பேரரசைச் சார்ந்த நாடுகளும் போரில் கலந்துகொண்டன. 1917-ல் ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஜெர்மனிக்கு எதிராகப் போரில் ஈடுபட்டன. நேசநாடுகளின் வெற்றிக்கு அமெரிக்கா பேரளவில் உதவி செய்தது.

போர் பல முனைகளிலும் நடைபெற்றது. மேற்கு ஐரோப்பாவில் ஜெர்மானியர்கள் பெல்ஜியத்தைக் கைப்பற்றினுர்கள். பிறகு அவர்கள் ஃபிரான்சின்மீது படையெடுத்தார்கள். ஜெர்மானியர்கள் மார்ன் நதிச் சண்டையில் (Battle of the Marne) தோல்வி யுற்றதால் அவர்கள் ஃபிரான்சிலிருந்து பின்வாங்க நேர்ந்தது. பாரிஸ்

காப்பாற்றப்பட்டுவிட்டது. ஃபிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான மால்வாய்த் துறைமுகங்களைக் கைப்பற்றும் முயற்சியும் தோற்கடிக்கப் பட்டது. அதன் பிறகு போர்க் குழிகளில் (Trench) தங்கிப் போர் புரியலாயினர். இறுதியில் இரண்டாவது மார்ன் சண்டையில் ஜெர்மானி யர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ஆகவே, அவர்கள் ஃபிரான்சு, பெல்ஜி யம் ஆகிய இடங்களினின்றும் வெளியேறினர்.

கிழக்குப் போர் முனையில் ஜெர்மானியர்கள் ருஷ்யாவை டானென் பர்க் (Tanenburg) என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள். ருஷ்யா விற்குச் சொந்தமான போலந்து, பால்டிக் நாடுகள் ஜெர்மானியர் கைவசமாயின. 1918-ல் ருஷ்யர்கள் ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். செர்பியா ஜெர்மானியர்கள் கைவசமாயிற்று. அதற்கிடையே நேச நாடுகள் மெஸபடோமியா, பாலஸ்தீனம், சிரியா, அரேபியா, எகிப்து ஆகியவற்றைக் கைப்பற்றின. மேற்கு முனையில் ஜெர்மனி அடைந்த தோல்வி கிழக்கு முனையில் பால்கன் தீபகற்பத்தில் தோற்கக் காரணமாய் அமைந்தது. துருக்கி, ஆஸ்திரியா, பல்கேரியா ஆகியவை அடிபணிந்தன. பிரிட்டிஷ் கப்பற்படை ஜெர்மனிக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளைப் பிடித்தது. பிரிட்டிஷ் கப்பற்படை வலுப்பெற்றிருந்ததால் ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு போர்க் கப்பல்களுடன் ஏனைய கப்பல்களையும் மூழ்கடித்துக்கொண்டு வந்தது. அதுவே அமெரிக்கா போரில் ஈடுபடக் காரணமாகும். போரில் ஜெர்மானியர்கள் ஆகாய விமானங்களைக் கொண்டு தாக்கும் போர் முறையைத் தொடங்கி வைத்தார்கள். இரண்டாவது உலகப் போரின் போதுதான் ஆகாய விமானங்கள் பேரளவில் பயன்படுத்தப் பட்டன.

1918-ல் போர் முடிந்தது. அதன் பிறகு சமாதான உடன்படிக்கை களை ஏற்படுத்த பாரிஸில் மாநாடு 1919-ல் கூடியது. ஜெர்மனிக்கு எதிராகப் போராடிய நாடுகளும், ஆதரவளித்த நாடுகளும் அதில் பங்கு கொண்டன. ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்டதன் விளைவாக அந் நாட்டிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதில் அக்காலத்தில் வாழ்ந் திருந்த தலைசிறந்த அரசியல் மேதைகள் கலந்துகொண்டனர். அமெ ரிக்க ஜனாதிபதி வில்சன் மாநாட்டைத் துவக்கி வைத்தார். ஃபிரஞ்சுப் பிரதமர் கிளெமன்சோ (Clemenceaw) அதற்குத் தலைமை தாங்கினர். ஜெர்மானியர்கள் போர் நிறுத்தம் செய்தபொழுது வில்சன் அறிவித்த 14 உறுதிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமாதான உடன்படிக் கையை ஏற்படுத்துவதாக அவர்களுக்கு நேசநாடுகள் வாக்குறுதி அளித்தன. ஆனால், நேசநாடுகள் ஏற்கெனவே செய்திருந்த இரகசிய உடன்படிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள முற்பட்டதாலும், தோல்வி யுற்ற நாடுகளை மீண்டும் போர் புரியாத அளவிற்கு அவைகளுடைய

பலத்தைக் குறைக்கவேண்டும் என்று எண்ணமிட்டதாலும், போரில் ஈடுபட்டுப் பெருத்த நஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்த நேசநாடுகள் தகுந்த வெகுமதி பெறவேண்டும் என்று கருதியதாலும், முடிவாக ஏற்படுத்தப்பட்ட திட்டம் வில்சன் அறிவித்த உறுதிப்பாடுகளுக்கு ஏற்றவாறு அமையவில்லை. அதுவே ஜெர்மானியர்களுடைய பெருங் குறையாக இருந்தது. இத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு முதலில் 10 பேரடங்கிய குழுவொன்றிற்கு அளிக்கப்பட்டது. பிறகு வில்சன், கிளெமென்சோ, லாயிட் ஜார்ஜ் (பிரிட்டன்), ஆர்லாண்டோ (இத்தாலி) ஆகிய நால்வரைக் கொண்ட குழு அப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. கிளெமென்சோ ஃபிரஞ்சு நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதிலே நாட்டம் செலுத்தினர். வில்சன் சர்வதேச சங்கம் அமைப்பதிலே கவனத்தைச் செலுத்தினர். லாயிட் ஜார்ஜ் பிரிட்டனின் வியாபாரத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் கவனத்தைச் செலுத்தினர். ஆர்லாண்டோ இத்தாலிக்கு நாடுகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தினர். இறுதியில் நான்கு முக்கியமான உடன்படிக்கை களும், வேறு பல ஒப்பந்தங்களும் செய்து முடிக்கப்பட்டன. இவைகள் அனைத்தையும் பாரிஸ் சமாதான ஏற்பாடு (Paris Peace Settlement) என்று கூறுகிறோம்.

அவற்றுள் முக்கியமானது வெர்சேயி உடன்படிக்கையாகும். அதன்படி ஜெர்மனி, பல இடங்களை இழந்தது. அல்சேஸ், லொரென் பகுதிகளை ஃபிரான்சும், மேற்கு ஷ்லெஸ்விக்கை டென்மார்க்கும், போசன், மேற்குப் பிரஷ்யாவின் பெரும் பகுதி, மேற்கு சைலீசியா வில் ஒரு பகுதி ஆகியவற்றைப் போலந்தும், மால்மெடி (Malmedy) போன்ற சிறு மாவட்டங்களை பெல்ஜியமும் பெற்றன. புதிதாக ஏற்படுத் தப்பட்ட போலந்து நாட்டிற்குத் துறைமுக வாய்ப்பு ஏற்படுத்துவ தற்காக டான்ஜிக் (Daniz) தனியுரிமையுடைய துறைமுகமாக ஏற்படுத் தப்பட்டது. அத்துடன் போலந்து தொடர்புகொள்ள ஜெர்மானியர்கள் வசிக்கும் பகுதி (Polish Corridor) போலந்துக்கு அளிக்கப்பட்டது. பால்டிக் கரையிலுள்ள மெமல் என்னும் துறைமுகம் நேச நாடுகளின் அதிகாரத்திற்குட்படுத்தப்பட்டது. சார் பள்ளத்தாக்கும் பதினைந்து ஆண்டுகளுக்குச் சர்வதேச சங்கத்தின் ஆளுகைக்குட்படுத்தப்பட்டது. ஜெர்மனி அதனுடைய குடியேற்ற நாடுகள் அனைத்தையும் இழந்தது. மேலும், அதற்குப் பல இடங்களில் ஏற்பட்டிருந்த வியாபார உரிமை களும் பறிக்கப்பட்டன. அதனுடைய படைபலம் குறைக்கப்பட்டது. ரைன் நதிக்கு மேற்கேயுள்ள அதனுடைய ஆட்சிப் பகுதியில் படைகளை வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை. மேலும், போர் ஏற்பட ஜெர் மனியே காரணம் என்று முடிவு செய்ததால் அது நேச நாடுகளுக்கு விளைவித்த நஷ்டத்திற்கு ஈடுசெய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பட்டது.

ஆஸ்திரியாவுடன் ஏற்படுத்தப்பட்ட செயின்ட் ஜெர்மெயின் (St. Germain) உடன்படிக்கைப்படி, ஆஸ்திரியா பல ஆட்சிப் பகுதிகளை இழந்தது. புகோவினுவை ருமேனியாவும், காலீஷியாவை போலந்தும், பொகீமியாவை செக்கோஸ்லாவாக்கியாவும், டிரென்ட் போன்ற பகுதியை இத்தாலியும், பாஸ்னியா போன்ற பால்கன் பகுதிகளை செர்பியாவும் பெற்றன. ஆஸ்திரியாவின் படைபலமும் குறைக்கப்பட்டது.

ஹங்கேரியுடன் ஏற்படுத்தப்பட்ட டிரையனுன் உடன்படிக்கையின்படி (Treaty of Trianon) ருமேனியாவும், செக்கோஸ்லாவாக்கியாவும் பல ஆட்சிப் பகுதிகளைப் பெற்றன. பல்கேரியாவின் ஆட்சிப் புகுதிகளில் சிலவற்றை கிரேக்க நாட்டிற்கும், செர்பியாவிற்கும் அளித்தார்கள். துருக்கி, செவ்ரே உடன்படிக்கையின் வாயிலாக (Treaty of Sevres) மெஸபடோமியா, பாலஸ்தீனம், சிரியா ஆகியவற்றை இழந்தது. இத்தாலியும் கிரீஸ் நாடும் சில பகுதிகளைப் பெற்றன. அரேபியர்கள் சுதந்திரமடைந்தனர். இவ்வுடன்படிக்கையைத் துருக்கியின் புரட்சித் தலைவர், கெமால் பாஷா ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் கெமால் பாஷாவுடன் வேறேர் உடன்படிக்கையை செய்துகொள்ள வேண்டியதாயிற்று. அவ் வுடன்படிக்கை துருக்கிக்குச் சாதகமாகவே அமைந்தது.

முதலாவது உலகப் போர் பல விளைவுகளை ஏற்படுத்தியது. ஐரோப்பாவின் அரசியல் பிரிவுகளில் பெரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. வெகு காலமாக நடை முறையில் இருந்த பேரரசுகள்—ஆஸ்திரியா, ருஷ்யா, துருக்கி, ஜெர்மனி—அழிந்துவிட்டன. அதனுல் பாரிஸ் சமாதான ஏற்பாட்டை அமைப்பதற்குக் காரணமாய் இருந்தவர்கள் மக்களினத்தின் தனியாட்சிப் பண்புரிமைக் கோட்பாட்டைப் பல இடங்களில் கையாண்டு புதிய தேசீய இனஞ் சார்ந்த நாடுகளை உருவாக்கினுர்கள். செக்கோஸ்லாவாக்கியா, லாட்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகிய நாடுகள் ஏற்படுத்தப்பட்டன. போலந்துநாடு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் தனித்தனி நாடுகளாயின. செர்பியா பல இடங்களைப் பெற்று யூகோஸ்லாவியா என்ற பெயருடன் விளங்கலாயிற்று. இத்தாலியர்கள் வசித்து வந்த ஆஸ்திரியாவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் இத்தாலியர் வசமாயின. பின்லாந்து சுதந்திரமான நாடாக அமைக்கப்பட்டது. ஐரோப்பாவில் 36 தனி நாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

போரின் விளைவாக பிரிட்டன் வலிமை வாய்ந்த பேரரசாக விளங்கிற்று.. அதனுடைய கடலாதிக்கம் நிலைநாட்டப்பட்டது. குடியேற்ற

நாடுகளைப் பெற்ற பேரரசுகளில் பிரிட்டனே தலைசிறந்து விளங்கியது. ஃபிரான்சும் பல குடியேற்ற நாடுகளைப் பெற்றுச் சிறப்படைந்தது. ஐரோப்பாவில் இராணுவ பலம் பெற்ற நாடுகளில் அதுவே சிறந்து விளங்கியது. போரின் விளைவாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் சிறப்புற்று விளங்கலாயிற்று. உலக நாடுகளிலே செல்வமிக்க நாடாகவும் பலம் பொருந்திய நாடாகவும் விளங்கியது. மேலும், ஜப்பானுடைய வலிமையையும் அப் போர் வளர வழி செய்தது.

அடுத்தபடியாகப் போர் தேசீய உணர்ச்சியைத் தட்டியெழுப்பியது. தேசியக் கோட்பாட்டின் அடிப்படையிலே பல புதிய நாடுகள் உருவாக்கப்பட்டன என்று முன்னரே கண்டோம். ஆங்காங்கே ஓட்டெடுப்புகளை நடத்தி மக்களின் விருப்பங்களை அறிந்து அதன்படி ஆட்சிப் பகுதிகளை மாற்றியமைத்தனர். உலகத்தின் ஏனைய பகுதி களிலும் இப் போர் அந்நியர் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய மக்களைத் தூண்டியது. எகிப்தில் மக்கள் எழுச்சி ஏற்பட்டதன் விளைவாக பிரிட்டன் அந் நாட்டிற்குச் சுதந்திரம் அளித்தது. இராக்கிலும் கிளர்ச்சியின் காரணமாக மக்கள் தன்னாட்சி யுரிமையைப் பெற்றனர். இந்தியாவில் கிளர்ச்சி வலுவடைய இப் போர் உதவி செய்தது.

தேசீய இனஞ்சார்ந்த நாடுகளை ஐரோப்பாவில் ஏற்படுத்திய போது சிக்கல்கள் பல ஏற்பட்டன. அந் நாடுகளில் மக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து இருந்தமையால் அவர்களைப் பிரிப்பது மிகக் கடினமாக இருந்தது. ஆகவே, ஒவ்வொரு நாட்டிலும் சிறுபான்மையினர் இருந்தனர். அவர்களுடைய உரிமைகளைக் காப்பதற்காகப் பல உடன் படிக்கைகளும் ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டன. சில இடங்களில் மக்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்பி அப் பிரச் சினைக்குத் தீர்வு காண முயன்றார்கள். அதனால் மக்கள் பல இன்னல் களுக்குட்பட நேர்ந்தது. பொதுவாகச் சிறுபான்மையினர் நிலை எல்லா இடங்களிலும் திருப்திகரமாக அமைக்கப்படவில்லை.

தேசீய கோட்பாடுமட்டுமன்றி மக்களாட்சி முறையும் வெற்றி பெறப் போர் வாய்ப்பளித்தது. ஐரோப்பாவின் வல்லரசர்கள் சிலர் முடி துறந்தார்கள். அவர்களுடைய அழிவிற்குப் பின் மக்களாட்சிக் கருத்துகளின் அடிப்படையில் ஆட்சிகள் அமைக்கப்பட்டன. அதனால் பிற இடங்களிலும் மக்களாட்சி முறை செல்வாக்குப் பெற வாய்ப்பு ஏற்பட்டது. முடியாட்சிக்குப் பதிலாகக் குடியரசுகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. முடியாட்சி தொடர்ந்து இருந்து வந்த நாடுகளில் மன்னர்கள் அதிகாரம் குறைக்கப்பட்டது. ஆங்காங்கே அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் எல்லோ

ருக்கும் ஓட்டுரிமை அளிக்கும் கருத்துச் செல்வாக்குப் பெற்றது. ஆனால், பல இடங்களில் மக்களாட்சி முறை வெகு விரைவாகவே அழிக்கப்பட்டுப் புது வகையான வல்லாட்சி ஏற்படுத்தப்பட்டது.

பொருளாதாரத் துறையில் முதலாவது உலகப் போர் பல விளைவுகளை ஏற்படுத்தியது. நாட்டின் சொத்துகளுக்கும் தனிப்பட்டவர்களின் சொத்துகளுக்கும் பலத்த நஷ்டத்தை ஏற்படுத்தியது. ஃபிரான்சில் பல நிலக்கரிச் சுரங்கங்கள் பயனற்றனவாகச் செய்யப்பட்டன. அதனால் தொழில் வளம் குறையலாயிற்று. போர் முடிந்த பிறகு போர்க் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை மூடப்பட்டதால் வேலையின்மை பெருகியது. படைகள் குறைக்கப்பட்டதால், போர் வீரர்கள் பலர் வேலையின்றி இருந்தனர். நீர் மூழ்கிக்கப்பல்களாலும், கடற்கண்ணிகளாலும் வியாபாரக் கப்பல்கள் பெருத்த சேதத்தை அடைந்தன. அதனால் வியாபார வளம் குன்றியது. போர் ஏற்பட்டதால் அரசாங்கத்தின் செலவு அதிகரித்தது. போர் முடிந்த பின்னர் புனர் நிர்மாண வேலைக்குப் பொருள் தேவையாக இருந்தது. அதனோடு போரில் காயமுற்றோர்களையும், போரில் இறந்துபோனவர்களுடைய குடும்பத்தினரையும் வைத்துப் பராமரிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. அதற்கு வேண்டிய பொருளைப் பெற அரசாங்கம் வரியை அதிகரித்தது. கடன் வாங்கவும் முற்பட்டது. ஆகவே, மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. அதன் பயனாக அவர்களுடைய வாழ்க்கைத் தரம் குறைந்தது.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்குப் பல வகைப்பட்ட வழிகளைக் கையாண்டு தீர்வுகாண முற்பட்டனர். ஒவ்வொரு நாடும் தனக்கு வேண்டிய பொருள்களைத் தானே உற்பத்தி செய்ய முயன்றது. வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்யக் காப்பு வரிகளை விதித்தது. போர்க்காலத்தில் படைகளுக்கு வேண்டிய பொருள்களைப் பெறவும், மக்களிடம் குழப்பம் ஏற்படாதவாறு தடுக்கவும் விலைகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற பல முறைகளை அரசாங்கம் கையாண்டது. வியாபாரம், தொழில் ஆகியவை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டன. வேலைநிறுத்தம் தடை செய்யப்பட்டது. அரசாங்கம் அவ்வாருகப் பொருளாதாரத் துறையில் நடவடிக்கைகள் மேற்கொண்டதால் சோஷியலிசக் கருத்து வலுப்படத் தொடங்கியது. மேலும், போர் ருஷ்யப் புரட்சியின் காரணங்களுள் ஒன்ருக இருந்து அங்குக் கம்யூனிசம் வெற்றி பெற வழி ஏற்படுத்தியது. அவ் வெற்றியும் சோஷலிசக் கருத்து வளர்ச்சியுறுவதற்குக் காரணமாய் அமைந்தது. மேலும், தொழிலாளர் இயக்கமும் போருக்குப் பிறகு வலுவடைந்தது. சர்வதேசத் தொழிலாளர் நல மாநாடு கூட்டப்பட்டு அவர்களுடைய முன்னேற்றத்திற்கான பெரு

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனுல் தொழிலாளர்களின் நன்மைக்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

போரின் காரணமாக மக்கள் தொகை வெகுவாகப் பாதிக்கப் பட்டது. போர் நடைபெற்றபோது மக்கள் உரிமைகள்மீது கட்டுப் பாடுகள் சுமத்தப்பட்டன. பத்திரிகைகளுடைய சுதந்திரம் குறைக்கப் பட்டது. பஞ்சம், வியாதி ஆகியவை பெருமளவில் ஏற்பட்டன. போருக்குப்பின் அகதிகள் பிரச்சினை வளர்ச்சியுற்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக முதலாவது உலகப்போர் சர்வதேச சங்கம் அமைப்பதற்குத் துணை புரிந்தது. அதைப்பற்றி இனிக் கவனிப்போம்.

சர்வதேச சங்கம்

முதலாவது உலகப்போரினுல் அநேக மக்கள் உயிரிழந்தனர் என்றும், பலர் காயமுற்றனர் என்றும், வேறு பலர் நோய்வாய்ப் பட்டனர் என்றும், சொத்துகள் அழிக்கப்பட்டனவென்றும் மேலே படித்தோம். அதனுல் உலக மக்களிடம் போரின்மீது வெறுப்பு ஏற்பட லாயிற்று. எல்லா இடங்களிலும் மக்கள் சமாதான வாழ்வைக் கோரி ஞர்கள். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அரசியல் தலைவர்கள் பலர் முதலாவது போர், போரை இனி ஏற்படாதவாறு தடுக்க மேற் கொள்ளப்பட்ட போர் என்று கூறினுர்கள். மேலும், போர் முடிந்த பிறகு அதற்காகத் திட்டத்தை வகுக்க முயற்சி மேற்கொள்வதாகவும் கூறினுர்கள். அவர்களில் தலைசிறந்தவர் உட்ரோ வில்சன் (Woodrow Wilson) என்பவராவார். அவர் விடுத்த 14 உறுதிப்பாடுகளைக் கொண்ட அறிக்கையில் சர்வதேச சங்கம் ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று உறுதிமொழி அளித்தார். ஆகவே, அவ் வுறுதிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சமாதான ஏற்பாடு செய்ய பாரிஸ் மாநாடு முற்பட்டபோது, வில்சன் சர்வதேச சங்கம் ஏற் படுத்துவதற்கான முயற்சியை முதலில் மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினுர். ஆகவே, வில்சனைத் தலைவராகக் கொண்ட குழு வொன்று அமைக்கப்பட்டது. அக் குழுவில் ஸ்மட்ஸ் (Smuts), இராபர்ட் சிசில் (Robert Cecil) என்பவர்கள் பணியாற்றினுர்கள். அக் குழு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியது. அத் திட்டத்தைப் பாரிஸ் மாநாடு ஏற்றுக்கொண்டது. அதன் பிறகு அத் திட்டம் சமாதான உடன்படிக்கைகளில் சேர்க்கப்பட்டது. சமாதான உடன்படிக்கைகளில் காணப்படும் குறைகளை சர்வதேச சங்கத்தின் வாயிலாகத் தீர்க்க முடியும் என்ற எண்ணத்தால் அவ்வாறு அது உடன்படிக்கையுடன் சேர்க்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது. 26 பிரிவுக்கூறுகளைக் கொண்ட அத் திட்டத்தை சர்வதேச சங்கத்தின் ஒப்பந்தத் திட்டம்

என்று அழைக்கிருர்கள். சர்வதேச சங்கத்தின் நோக்கங்களும், அமைப்பும் அத் திட்டத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன. உலக நாடுகளிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்ப்பதையும், உலக சமாதானத்தை நிலைநாட்டுவதையும் சர்வதேச சங்கம் குறிக்கோள்களாகக் கொண்டிருந்தது. அக் குறிக்கோள்களை நிறைவேற்ற அதனுறுப்பு நாடுகள் அவைகளுக்கிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்காகப் போரில் ஈடுபடுவதில்லை என்று வாக்குறுதி செய்தன. அவ் வாக்குறுதியை மீறி வலுச்சண்டைக்குச் செல்ல முற்படும் நாட்டிற்கு எதிராக எல்லா உறுப்பு நாடுகளும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. முதலில் உறுப்பு நாடுகள் அத்தகைய நாட்டுடன் கொண்டிருக்கும் வியாபாரத் தொடர்புகளைத் துண்டித்துவிடவேண்டும் என்றும், அதனுல் பயன் ஏற்படவில்லை யென்ருல், அந் நாட்டுக்கு எதிராகப் போர் ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், அதற்காக உறுப்பு நாடுகள் சர்வதேச சங்கத்திற்குப் படைகளை அனுப்பி உதவி செய்யவேண்டும் என்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும், உறுப்பு நாடுகள், சர்வதேச விதிமுறைகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றிற்கு மதிப்புக் கொடுக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒன்றையொன்று மரியாதையுடன் நடத்த வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

பாரிஸ் மாநாடு ஏற்படுத்திய சமாதான உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்ட நாடுகளும், 13 நடுநிலை நாடுகளும் இச் சங்கத்தின் மூல உறுப்பினர்களாய் இருந்தன. தன்னுட்சியுரிமையுடைய எல்லா நாடுகளும், தன்னுட்சியுரிமையுடைய குடியேற்றநாடுகளும், குடியேற்ற நாடுகளும் இதில் சேர்ந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டது. புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள சங்கத்தின் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அங்கம் வகிக்கும் நாடுகள் அதனின்றும் வெளியேறவும், வெளியேற்றப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆகவே, அதனுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை அவ்வப்பொழுது மாறிக்கொண்டே யிருந்தது. ஒரு காலத்தில் அதன் எண்ணிக்கை 58 ஆக இருந்தது.

சர்வதேச சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற ஒரு சபையும், ஒரு குழுவும், ஒரு 'காரியாலயமும் ஏற்படுத்தப்பட்டன. சங்கத்தின் சபையில் எல்லா அங்க நாடுகளும் இடம் பெற்றிருந்தன. ஒவ்வோர் அங்கநாடும் ஓர் ஓட்டுப் பெற்றிருந்தது. எல்லா முக்கியமான முடிவுகளும் எல்லோருடைய ஒப்புதலைப் பெற்றே மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே அதனுடைய முக்கிய வேலையாகும்.

சர்வதேச சங்கத்தின் மற்றைய உறுப்புகளை மேற்பார்வையிடுதலும், வரவு செலவு திட்டத்தை அங்கீகரிப்பதும், புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்ளுவதும் அதனுடைய 'மற்றைய வேலைகளாகும். மேலும், சங்கத்தின் குழுவுடன் சேர்ந்து சர்வதேச நீதிமன்றத்தின் உறுப்பினர்களையும், காரியாலயத்தின் தலைவரையும் தேர்ந்தெடுத்தது. குறிப்பாகக் கூறவேண்டுமாயின், அச் சங்கம் நாடுகளிடையே சமரசம் ஏற்படுத்தி உலக அமைதியைக் காக்கப் பாடுபட்டது. ஆண்டிற்கு ஒரு முறை கூடியது.

சங்கத்தின் குழு, ஐந்து நிரந்தரமான உறுப்பு நாடுகளையும், குறிப்பிட்டகாலம் வரை அங்கம் வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில உறுப்பு நாடுகளையும் உட்கொண்டிருந்தது. அமெரிக்கா அதில் அங்கம் வகிக்க ஏற்பாடு செய்திருந்தபோதிலும், அமெரிக்கா பாரிஸ் உடன் படிக்கைகளை ஏற்றுக்கொள்ளாததால், அது அச் சங்கக் குழுவில் பங்கு கொள்ளவில்லை. அது ஆண்டிற்கு நான்கு முறை கூடியது. உலக அமைதியைக் குலைக்கும் தகராறுகளைத் தீர்த்து வைப்பதே அதனுடைய முக்கிய வேலையாகும். அதுவன்றி அதற்குப் பல தனிமுறையான வேலைகளும் கொடுக்கப்பட்டிருந்தன. உலக நாடுகளின் படை பலத்தைக் குறைக்கத் திட்டம் வகுக்க அதற்கு அதிகாரம் அளிக்கப் பட்டது. வலுச்சண்டை போடும் நாடுகளுக்கு எதிராக இராணுவம் பற்றிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அதற்கே அதி காரம் வழங்கப்பட்டது. தோற்கடிக்கப்பட்ட நாடுகளின் குடியேற்றப் பகுதிகள் நேசநாடுகளின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டன. அத்தகைய நாடுகளின் ஆட்சி முறையை மேற்பார்வையிடவும் அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

சர்வதேச சங்கத்தின் வேலைகளைக் கவனிக்கத் தலைமைக் காரிய தரிசியைக் கொண்ட காரியாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. முதல் காரியதரிசியை பாரிஸ் மாநாடு நியமித்தது. அதன் பிறகு சங்கத்தின் சபையும் குழுவும் சேர்ந்து அவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்தது. அவருக்கு உதவியாகப் பல நாடுகளைச் சேர்ந்த நிலையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் அச் சங்கமே ஊதியத் தொகை வழங்கியது. அக் காரியாலயம் தொடர்ந்து பணியாற்றி வந்தது. சர்வதேச சங்கத்தின் உறுப்பு களினுடைய வேலைகளை இணைத்து ஒரு நிலைப்படுத்த அச் சங்கம் உதவி செய்தது. மேலும், அவ் வுறுப்புகளுக்கு அவ்வப் போது தேவையான தகவல்களை அளித்து வந்தது.

சர்வதேச சங்கத்துடன் இணைந்து இரு அமைப்புகள் பணியாற்றி வந்தன. அவைகளுள் சர்வதேச நீதிமன்றம் ஒன்ருகும். அந்

நீதிமன்றம் பல நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக்[1] கொண்டிருந்தது. அவர்களை சர்வதேச சங்கத்தின் சபையும் குழுவும் சேர்ந்து தேர்ந்தெடுத்தன. அது ஹாலந்திலுள்ள ஹேக் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டது. அந் நீதிமன்றத்துக்கு உடன்படிக்கைகள் பற்றிய தகராறுகளையும், சர்வதேசச் சட்டங்களை மீறுவதால் ஏற்படும் தகராறுகளையும் தீர்த்து வைக்க அதிகாரம் வழங்கப்பட்டது. அரசாங்கங்களே அதைப் பயன்படுத்துமாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

சர்வதேசத் தொழிலாளர்கள் நல ஸ்தாபனம் வெர்சேயி உடன்படிக்கை வாயிலாக ஏற்படுத்தப்பட்டது. சர்வதேசத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அதில் அங்கம் வகித்தனர். வேறு நாடுகளும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டன. அந்த ஸ்தாபனம் மூன்று பிரிவுகளை உடையதாயிருந்தது. பொது மாநாட்டில் (Generel Conference) எல்லா நாடுகளும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. ஒவ்வொரு நாடும் தொழிலாளர்கள் சார்பில் ஒருவரையும், முதலாளிகள் சார்பில் ஒருவரையும், அரசாங்கத்தின் சார்பில் இருவரையும் நான்கு பேர்களை அதில் பங்கு கொள்ள அனுப்பியது. ஆளுங் குழுவில் (Governing Body) இருபத்திநான்கு உறுப்பினர்கள் இருந்தனர். உலகத்தில் தொழில் வளத்தில் சிறந்து விளங்கிய நாடுகள் நிலையான உறுப்பினர்களாக அதில் ஏற்படுத்தப்பட்டன. சர்வதேசத் தொழிலாளர் நல காரியாலயம் ஊதியம் பெற்ற பல அலுவலர்களைக் கொண்டிருந்தது. அதற்கு டைக்ரடர் ஜெனரல் தலைவராக இருந்தார். தொழிலாளர் நல ஸ்தாபனம் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டது. அதன் விளைவாகப் பல நாடுகளில் தொழிலாளர்களின் நலன்களைப் பெருக்குவதற்கு வேண்டிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அமைதியை நிலைநாட்டும் வகையில் பல சிறு நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட தகராறுகளைத் தீர்த்து வைத்தது. ஸ்வீடனுக்கும் பின்லாந்துக்கும் ஏற்பட்ட தகராறை ஆலந்து தீவுகளைப் பின்லாந்துக்குக் கொடுத்து அமைதியை ஏற்படுத்தியது. அல்பேனியாவின்மீது யூகோஸ்லாவியா மேற்கொண்ட படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியது. கிரீஸ், பல்கேரியா ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்படவிருந்த போரை நிறுத்தியது. ஆனால், வல்லரசுகள் போர் முழக்கம் செய்தபொழுது அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது. ஜப்பான், மஞ்சூரியாமீது போர் தொடுத்து, அதை மஞ்சூகோ என்ற தனி நாடாக அமைத்து, அங்கு அதனுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திய

[1] முதலில் அதில் 11 உறுப்பினர்கள் இருந்தனர். பிறகு அதனுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 15ஆக உயர்த்தப்பட்டது.

போது அதன்மீது யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று முன்னரே கண்டோம். பிறகு அபிசீனியாமீது முஸோலினி படையெடுத்தபொழுதும் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. ஆகவே, அதனுடைய முக்கியமான நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. உலக நாடுகள் அனைத்தும் அதில் சேரவில்லை. ஆகவே, வியாபாரத் தடுப்பு நடவடிக்கை வெற்றி பெற வழி இல்லாது இருந்தது. மேலும், அமெரிக்கா அதில் கலந்துகொள்ளாததால் அச் சங்கம் வலிமை பெற்று விளங்கவில்லை. மேலும், ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகியன அதிலிருந்து விலகிக் கொண்டன. சர்வதேச சங்கத்திற்குப் படைகளை ஏற்படுத்த அதிகாரம் வழங்கப்படவில்லை. உறுப்பு நாடுகள் தானாகவே அனுப்பும் படைகளைக் கொண்டுதான் அது தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுத்தப்பட்டது. மேலும், அதனுடைய தீர்மானங்களைச் செயற்படுத்தும் ஆற்றல் அதற்களிக்கப்படவில்லை. உறுப்பு நாடுகள் இன்னும் முழு உரிமை பெற்ற நாடுகளாக இருந்தன. மேலும், உலக நாடுகளிடம் சமாதான மனப்பான்மை ஏற்பட விடவில்லை. ஆகவே, அவைகளுக்கிடையே ஏற்பட்ட தகராறுகளை அமைதியான முறைகளைக் கையாண்டு தீர்வு காணும் மனப்பான்மை அவர்களிடம் ஏற்படவில்லை. மேலும், எல்லாத் தீர்மானங்களும் அனைவருடைய ஒப்புதல் பெற்றே மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆகவே, பல விவகாரங்களில் தீர்வு காண இயலாது போயிற்று. சர்வதேச சங்கம் போர்க் கருவிகளையும், படைகளையும் குறைப்பதற்கு மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. அதற்கு மாறாகப் படைக் குறைப்பு மாநாடு ஜெர்மனியினுடைய படைகளைப் பெருக்குவதற்கு அனுமதி வழங்கியது. ஆகவே, மீண்டும் படைகளைப் பெருக்குவதில் போட்டி ஏற்பட்டது. அதன் காரணமாக அமைதி குலைந்தது.

இனி வேறு துறைகளில் சர்வதேச சங்கம் ஆற்றிய பணிகளைப் பற்றிக் கவனிப்போம். சர்வதேச சங்கம் சிறுபான்மையினரைக் காப்பாற்றும் வகையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளின் காப்பாளராக இருந்து பணியாற்றியது. ஆனால், ஐரோப்பிய நாடுகள் முழு உரிமை பெற்ற நாடுகளாகத் தொடர்ந்து இருந்த வந்த காரணத்தால் அவைகளைச் சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்குமாறு கட்டாயப்படுத்த முடியவில்லை. சில ஆட்சிப் பகுதிகள் சர்வதேச சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் ஆளப்பட்டு வந்தன. ஆனால், அதனுடைய மேற்பார்வை வெற்றிகரமாக இருந்தது என்று சொல்வதற்கில்லை. மேலும், சர்வதேச சங்கம் சில ஓட்டெடுப்புகளை நடத்தியது. அதன் பயனாக சார் பள்ளத்தாக்கு ஜெர்மனிக்கு அளிக்கப்பட்டது. ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளும் துருக்கியின் ஆட்சிக்குட்பட்டிருந்த சில பகுதிகளும் போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்டன. போர்

முடிந்த பிறகு அந்த ஆட்சிப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் தன்னுட்சி முறையைக் கையாளத் தக்க வளர்ச்சி பெறவில்லை என்ற காரணத்தால், தக்க வளர்ச்சி அடையும்வரை அவைகள் சில நேச நாடுகளின் அதிகாரத்திற்குட்பட்டிருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அந் நாடுகள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணிகளைச் செம்மையாக நிறைவேற்றும்பொருட்டு அவைகளைக் கண்காணிக்க ஒரு குழு அமைக்கப்பட்டது.

முதலாவது உலகப் போரின் விளைவாகவும், நாடுகளின் எல்லைகளைப் புதிதாக வரையறுத்ததாலும், அகதிகள் பிரச்சினை மேலோங்கி இருந்தது. அப் பிரச்சினையை கவனிக்க சர்வதேச சங்கத்திடம் யாதோர் அமைப்பும் இல்லையென்றாலும், தனியார்கள் அகதிகளின் நிலையைச் சீர்படுத்த முனைந்தபோது, அவர்களின் நடவடிக்கைகளை அது ஒன்றாக இணைத்துக் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியது.

சர்வதேச சங்கம் போர்க் கைதிகள் அவரவர் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல உதவியது. உடல் நல ஸ்தாபனத்தின் வாயிலாக வியாதிகளைப் பரவாமல் தடுக்கத் தக்க நடவடிக்கையை மேற்கொண்டது. பல நாடுகளில் பொதுச் சுகாதாரத் துறைகளை ஏற்படுத்தித் தந்தது. அடிமைத்தனத்தை ஒழிப்பதிலும் பல அரசாங்கங்களுக்கு உதவி செய்தது. பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வு காணப் பொருளாதார மாநாடுகள் ஏற்படுத்தப்பட்டன. பெண்கள், குழந்தைகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டங்க்ள் இயற்ற சர்வதேசத் தொழிலாளர் நல சங்கம் உதவியது.

ருஷ்யப் புரட்சி

இருபதாம் நூற்றுண்டில் ஏற்பட்ட சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகளில் ருஷ்யப் புரட்சி ஒன்றாகும். புரட்சி ஏற்படப் பல காரணங்கள் இருந்தன. ருஷ்யாவில் ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் பேரரசரிடம் இருந்தன. வல்லாட்சி முறை முற்காலத்தில் மக்களுக்குப் பயன் அளித்திருந்தபோதிலும், அப்பொழுது அது தேவையற்றதாகத் தோன்றியது. மேலும், மக்கள் முற்போக்குக் கருத்துகளுக்கு இடமளித்திருந்தனர். ஆகவே, அவர்கள் ஆட்சியில் பங்குகொள்ள விரும்பினார்கள். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபைகளை அமைக்க வேண்டும் என்றும், அவைகளுக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் என்றும் கோரினார்கள். ஆனால், அப்பொழுது ஆண்டுவந்த இரண்டாவது நிக்கோலஸ் (Nicholas II) அவைகளை ஏற்க மறுத்துவிட்டார். அதற்கு மாறாக வல்லாட்சி முறையைத் தொடர்ந்து கைப்பற்றி வருவதாக அவர் பதவியேறியபொழுது அறிவித்தார். மேலும், மக்கள் உரிமைகளுக்காகப் போராடியபொழுது அவர்களைக்

கடுமையான வழிகளைக் கையாண்டு அடக்கினர். ஆகவே, அவர்கள் புரட்சியில் ஈடுபடவேண்டியதாயிற்று. மேலும், வல்லாட்சி முறை வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால் அதனுடைய தலைவர் திறமை வாய்ந்தவராய் இருத்தல் வேண்டும். ஆனால், நிக்கோலஸ் திறமையற்றவராய் இருந்ததோடல்லாமல், அவர் தீய ஆலோசகர் களுடன் உறவு கொண்டிருந்தார்.

ருஷ்யாவில் சமுதாய அமைப்பும் புரட்சி ஏற்படக் காரணமா யிருந்தது. எல்லா அதிகாரங்களையும் செல்வத்தையும் நிலம் படைத்த மேற்குடியாளர்களே பெற்றிருந்தனர். அவர்களே படித்தவர்களாயும் இருந்தனர். மேற்கத்திய நாகரிகப் பண்புகளும் அவர்களிடமே செல்வாக்குப் பெற்றிருந்தன. ருஷ்ய மக்களின் பெரும் பகுதியினர் வளர்ச்சியற்று இருந்தனர். கல்வியறிவு இல்லாதவர்களாகவும் இருந்தனர். அவர்களில் பெரும் பகுதியினர் விவசாயத்தில் ஈடுபட் டிருந்தனர். அவர்கள் சுதந்திரமான குடியானவர்களாக மாறிய பொழுதும் அவர்களுடைய நிலை முன்னேற்றம் காணவில்லை. ஏனெனில், அவர்கள் பெற்ற நிலத்தின் மதிப்பைச் சிறு தவணைகளில் அரசாங்கத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், அவர்கள் பயிர்செய்துவந்த நிலங்களைவிடக் குறைவான நிலங்களையே அப்பொழுது பெற நேர்ந்தது. மேலும், புதுமுறைகளைக் கையாண்டு நிலங்களைப் பயிரிடப் போதிய பொருளில்லை. மற்றும் நில உரிமை சமுதாயத்திடம் ஒப்படைக்கப்பட்டதால் நிலங்களைச் செம்மைப்படுத்தத் தனி மனிதர்கள் முயற்சி செய்யவில்லை. தொழிற்புரட்சி ஏற்பட்டதன் விளைவாகப் புதிய சமுதாயப் பிரிவுகள் வளர்ந்தன. தொழில் அதிபர்கள் பெருஞ் செல்வத்தைத் திரட்டினார்கள். செல்வத்தைப் பெரும் அளவில் பெற்றவுடன் ஆட்சியில் பங்குகொள்ள முற்பட்டனர். தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமானதாக இருந்தது. அவர்கள் சுகாதாரமற்ற இடங்களில் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் தொழிற் சாலைகளில் நீண்டநேரம் வேலைசெய்ய வற்புறுத்தப்பட்டனர். வேலைக்குத் தக்க ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தொழிற் சாலைகளில் வசதிகள் மிகக் குறைவாயிருந்தன. தொழிற்சங்கங்களை ஏற்படுத்தி அவைகளின் வாயிலாக அவர்களுடைய நிலையைச் சீர்படுத்துவதற்குப் பதிலாகப் புரட்சி செய்து அரசியலைக் கைப்பற்றி நிலையைச் செம்மையாக்க விரும்பினார்கள்.

ஃபிரஞ்சுப் புரட்சியைப் போலவே ருஷ்யப் புரட்சியும் பல அறிஞர் களால் தூண்டப்பட்டது. டால்ஸ்டாய் குடியானவர்களின் பரிதாப கரமான நிலையை வெகு தெளிவாகத் தம்முடைய நூல்களில் சித்திரித்து மக்களிடையே வெறுப்புணர்ச்சியை வளர்த்தார். கார்ல் மார்க்ஸ் எழுதிய 'கம்யூனிஸ்ட் மானிஃபெஸ்டோ' (Communist Manifesto) ருஷ்யப் புரட்சிக்காரர்களின் வேதநூல் என்று கூறலாம். அதில்

தொழிலாளர்களைப் புரட்சி முறையைக் கையாண்டு ஆட்சியைக் கைப்பற்றுமாறு தூண்டிவிட்டார்.'

பல ஊழல்கள் நிறைந்த சமுதாயத்தைப் புரட்சிமுறை கொண்டு மாற்றியமைக்க முற்பட்டவர்களுக்கு முதலாவது உலகப்போர் அரிய சந்தர்ப்பத்தை வழங்கியது. சிறந்த போர்க்கருவிகளைப் பெற்றிராத காரணத்தாலும், படைத்தலைவர்கள் திறமையற்றவர்களாயிருந்ததாலும் ருஷ்யப் படை பல இடங்களில் தோல்வியடைந்தது. அத் தோல்விகள் பேரரசின் வலுக்குறைவைத் தெளிவாக எடுத்துக் காட்டின. மேலும், அப் போர் நாட்டினுடைய பொருளாதார நிலையைச் சீர்குலைத்து விட்டது. அநேகர் போரில் ஈடுபடவேண்டியதால், உணவு உற்பத்தி தடைப்பட்டது. போக்குவரத்து சீர்குலைந்ததால் பொருள்களை ஓரிடத்தி லிருந்து வேறு இடத்திற்கு அனுப்புவது தடைப்பட்டது. பொருள் களின் விலை ஏறியது. மக்கள் வருவாய்க்கு அதிகமாகச் செலவு மேற்கொள்ள வேண்டியதாயிற்று. பணத்தின் மதிப்புக் குறைந்ததால் மக்கள் அதிக துன்பங்களை அடையலானுர்கள். ஆகவே, நாட்டில் வேலைநிறுத்தங்களும், உணவுப் பற்றுக்குறை காரணமாகக் கிளர்ச்சி களும் ஏற்பட்டன. பேரரசர் தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்களைக் கைவிடுமாறு கட்டளையிட்டார். தொழிலாளர்கள் மறுத்தனர். ஆகவே, அவர்களை அடக்கப் படை அனுப்பினுர். படைகளில் கட்டுப்பாடு தளர்வுற்றதால், போர்வீரர்கள் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர். 1917ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ஆம் தேதி பேரரசர் முடிதுறந்தார்.

அதன் பிறகு ஆட்சி அதிகாரங்களை நடுத்தர வகுப்பினர்கள் கைப்பற்றினுர்கள். ஐவோ (Ivov) அவ்வாட்சியின் தலைவரானுர். அவர் மக்களாட்சி முறையை ஏற்படுத்த முனைந்தார். ஆனுல், அத்துடன் மனநிறைவு பெருத தொழிலாளர்களும், குடியானவர்களும் பல சங்கங்கள் அல்லது சோவியத்துகளை (Soviet) ஏற்படுத்தி ஞர்கள். பீட்ரோகிராட்டில் ஏற்படுத்தப்பட்ட புரட்சி ருஷ்யாவெங்கும் பரவியது. அவ் விடங்களில் எல்லாம் சோவியத்துகள் ஏற்படுத்தப் பட்டன. 1917-ல் ருஷ்ய சோவியத்துகளின் மாநாடு பீட்ரோ கிராட்டில் நடைபெற்றது. அதன் பயனுக தேசீய சோவியத்துகளின் காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஸ்தாபனம் நாளடைவில் பெரும் செல்வாக்குப் பெற்றது. அந்த ஸ்தாபனங்களில் சோஷலிஸ்டுகள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஆகவே, ஐவோப் பதவியினின்றும் விலகினுர். அதன் பிறகு சோஷலிஸ்டுகளில் ஒருவரான அலெக் சாந்தர் கெரன்ஸ்கி மிதவாத சோஷலிஸ்டுகளின் ஆட்சியை ஏற்படுத் தினுர். போரைத் தொடர்ந்து நடத்தியதால் அவர் செல்வாக்கு இழந்தார். படைவீரர்கள் இராணுவ அமைப்பினின்றும் விலகிச் சென்றனர். அந்த நிலையை சோஷலிஸ்டுகளில் தீவிர கொள்கையை

யுடைய போல்ஷிவிக்குகள் (Bolsheviks) அல்லது கம்யூனிஸ்டுகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். அவர்களுடைய தலைவர்களான லெனினும், டிராட்ஸ்கியும் மிதவாதிகளை ஒழித்துக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியை 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் தேதி ஏற்படுத்தினார்கள். அவ்வாட்சிக்கு லெனின் தலைவரானார். அதுவே ருஷ்யப் புரட்சியின் முக்கிய விளைவாகும்.

லெனின் 1870-ல் ஒரு பள்ளி ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தார். அவருடைய தந்தை அவர் சட்டக்கலையைப் பயில ஏற்பாடு செய்தார். ஆனால், புரட்சிக் கருத்துகளைக் கொண்டிருந்ததால் அவர் பல்கலைக் கழகத்தினின்றும் வெளியேற்றப்பட்டார். எனினும், பீட்ரோகிராட்டில் சட்டம் பயின்று தேர்ந்தார். ருஷ்யத் தொழிலாளர்களிடையே புரட்சிக் கருத்துகளை வளர்ப்பதிலேயே அவருடைய காலத்தைச் செலவிட்டிருந்தார். புரட்சியைத் தூண்டுவதில் ஈடுபட்டதற்காக அவர் சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்து தப்பி லண்டன் சென்றார். 1905-ல் ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்டபோது நாடு திரும்பினார். அது அடக்கப்பட்ட பிறகு மீண்டும் வெளியேற வேண்டியதாயிற்று. 1917-ல் நாடு திரும்பிய அவர் மக்கள் விருப்பத்திற்கேற்றவாறு ஒரு திட்டத்தை வகுத்தார். அதன் பயனாக அவர் கம்யூனிஸ்டு புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தார்.

ஆட்சிப் பொறுப்பேற்றபின் ருஷ்யாவின் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தினர். ஜெர்மனியுடன் போரை நிறுத்திக்கொண்டு உடன்படிக்கை செய்துகொண்டார். கம்யூனிஸ்டு ஆட்சியை எதிர்த்த ருஷ்யர்களை அடக்கினர். 1918-ல் அரசியலமைப்புத் திட்டத்தை வகுத்தார். அதன்படி ருஷ்யா சோஷலிஸ்டு குடியரசாக அமைக்கப்பட்டது. பதினெட்டு வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய மனைவியர்களுக்கும், போர் வீரர்களுக்குமே ஓட்டுரிமை வழங்கப்பட்டது. சோவியத்துகளை அடிப்படையாகக்கொண்ட ஆட்சி அமைக்கப்பட்டது. கம்யூனிஸ்டு கட்சியே ஆளும் வாய்ப்பைப் பெற்றிருந்தது. மக்களுக்குப் பேச்சு சுதந்திரம் போன்ற உரிமைகள் வழங்கப்படவில்லை. 1923-ல் ஏனைய தேசிய இனங்களும் ருஷ்யாவுடன் சேர்ந்ததால் ஐக்கிய சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகள் ஏற்படுத்தப்பட்டன. அது முதலில் நான்கு குடியரசுகளை உட்கொண்டிருந்தது. 1936-க்குள் அதனுடைய எண்ணிக்கை பதினொன்றாக உயர்ந்தது.

பொருளாதார அமைப்பிலும் மாறுதல் ஏற்படுத்தப்பட்டது. எல்லா இயற்கை வளங்களும் பொதுவுடைமையாக்கப்பட்டன. செய்பொருள்கள் உற்பத்தி சாதனங்களும், போக்குவரத்துச் சாதனங்களும்,

வியாபாரமும், பாங்கு, ஆயுள் காப்பு ஆகியவையும் தேசீய மயமாக்கப்பட்டன. ருஷ்யர்களில் பெரும் பகுதியினர் பின்தங்கியவர்களாயும், கல்வியறிவு இல்லாதவர்களாயும், தற்காலத் தொழில் முறைகளைப்பற்றி அறியாதவர்களாயும் இருந்தமையால், அவர்களே தொழில்களை நடத்தத் திறனற்று இருந்தனர். ஆகவே, தொழில்வளம் குன்றியது. பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்கள் அவர்களுடைய தேவைக்குப் போக மிகுதியை அரசாங்கத்திற்கு அளிக்க ஏற்பாடு செய்திருந்ததால் நிலங்களைச் சரிவரப் பயிரிடவில்லை. ஆகையால், உணவு உற்பத்தி தடைப்பட்டு நின்றது. ஆகவே, கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அவைகளைத் தடுக்க லெனின் புதிய பொருளாதாரக் கொள்கையை (New Economic Policy) பின்பற்றினார். அதன்படி அரசாங்கம் பெரிய தொழிற்சாலைகளையும், பாங்குகளையும், வெளிநாட்டு வியாபாரத்தையும் நடத்திவந்தது. தனிப்பட்ட மக்கள் உள்நாட்டு வியாபாரம், சிறு தொழில்கள் நடத்த அனுமதிக்கப்பட்டார்கள். குடியானவர்கள் அவர்களுடைய தேவைக்குப்போக மிகுதியை விற்க அனுமதிக்கப்பட்டனர். அதற்குப் பதிலாக அவர்கள் அரசாங்கத்திற்கு வரி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நிலங்களைக் குத்தகைக்கு விடவும், கூலியாட்களை அமர்த்தி பயிர்செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதே நேரத்தில் அரசாங்கமே நிலத்தின் உடைமை உரிமையைப் பெற்றிருந்தது. தொழிலாளர்களுக்குப் பொருள்களை ஊதியமாக வழங்கும் முறையும் நிறுத்தப்பட்டது. ஆகவே, புதிய நாணய முறையைப் புகுத்தினார். மேற்கூறிய மாறுதல்களின் விளைவாக ருஷ்யாவில் கம்யூனிஸ்டு கருத்துகளும், முதலாளித்துவ கருத்துகளும் ஒன்று சேர்க்கப்பட்ட ஒரு புதிய பொருளாதார அமைப்பு தோன்றியது. அதன் விளைவாகத் தொழில் வளமும், விவசாயமும் பெருக ஆரம்பித்தன.

லெனின் மறைந்த பிறகு ஸ்டாலினுக்கும் டிராட்ஸ்கிக்கும் பதவிக்காகப் போட்டி ஏற்பட்டது. ஸ்டாலின் ருஷ்யாவில் முதலில் கம்யூனிசத்தை வெற்றிகரமாக நடத்திவிட்டால் பிற நாடுகளில் கம்யூனிசம் ஏற்பட ஏதுவாக இருக்கும் என்று எண்ணினார். டிராட்ஸ்கி ருஷ்யாவில் கம்யூனிசம் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்றால் ஏனைய நாடுகளில் புரட்சிகளை ஏற்படுத்த வழிவகை மேற்கொள்ளவேண்டும் என்று கருதினார். இறுதியில் ஸ்டாலினே வெற்றிபெற்றார். ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. 1936-ல் ருஷ்யாவிற்குப் புதிய அரசியலமைப்பை உருவாக்கித் தந்தார். ஓட்டுரிமையின்மீது சுமத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டன. நேரடித் தேர்தல் முறையைக் கையாண்டு எல்லா சோவியத்துகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆயினும், கம்யூனிஸ்டு கட்சி ஒன்றுதான் இன்னும் சட்டமுறையான கட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கம்யூனிஸ்டு கட்சியினரே எல்லா முக்கிய பதவி

களிலும் அமர்த்தப்பட்டனர். விவசாயத்துறையில் கூட்டாண்மை முறையை (Collectivisation) புகுத்தினர். அதன்படி பல சிறு பண்ணைகள் ஒன்ருக்கப்பட்டுப் பெரிய பண்ணைகளாக மாற்றப்பட்டன. அப் பண்ணையில் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கம் விவசாயக் கருவிகளை யும் இயந்திரங்களையும் கொடுத்து உதவியது. அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு தானிய வகையைக் கொடுத்து மிகுதியை விற்று, அதனுல் பெற்ற பணத்தை அவரவர்கள் வேலைக்கு ஏற்றவாறு பிரித்துக் கொண்டனர். அவைகளைத் தவிர அரசாங்கப் பண்ணைகளும் ஏற்படுத் தப்பட்டன. ஸ்டாலின் நாட்டின் பொருளாதாரம் சீர்பட வேண்டுமாயின் தொழில் வளம் பெருகவேண்டும் என்று எண்ணியதால் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கினுர். உற்பத்தி பெருகவே வியாபாரம் பெருகிற்று. கல்விக்கூடங்களை ஏற்படுத்தி அறியாமையைப் போக்க முற்பட்டார். தொழில் வளத்தைப் பெருக்க உதவக்கூடிய கல்வி முறையை ஏற்படுத்தினுர். கிறித்தவ மதஸ்தாபனத்தின் சொத்துகள் ஏற்கெனவே பறிமுதல் செய்யப்பட்டன. அரசாங்கப் பள்ளிகளில் நாத்திகம் கற்றுக் கொடுக்கப்பட்டது. மதஸ்தாபனங் களைச் சார்ந்த கட்டடங்கள் கல்விக் கூடங்களாயின. சுருங்கக்கூறின், ருஷ்யாவில் வல்லாட்சிக்கு எதிராக ஏற்பட்ட புரட்சி ஒரு கட்சியின் ஆட்சியை ஏற்படுத்தி முடிவுற்றது.

பாஸிசமும், நாஜிசமும்

முதலாவது உலகப்போரின் விளைவாகப் பல இடங்களில் மக்களாட்சி ஏற்பட்டது என்று கண்டறிந்தோம். ஆனுல், வெகு விரைவில் பல நாடுகளில் அது அழிவுற்றது. அதன் விளைவாக வல்லாட்சி முறை மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. அவற்றுள் இரண்டு நாடுகளில் வல்லாட்சி முறை எவ்வாறு இயங்கிவந்தது என்பதை இப்பொழுது கவனிப்போம்.

முதலாவது உலகப்போர் ஏற்பட்டபொழுது இத்தாலியில் மக்களாட்சி நடைபெற்று வந்தது. போர் நடைபெற்று வந்த காலத்தில் இத்தாலியில் குழப்பங்கள் ஏற்பட்டன. பொருளாதாரத் துறையில் மலிந்திருந்த சீர்கேடுகளே குழப்பங்களுக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தன. இத்தாலி போரில் ஈடுபட்டதால் வரிகளை அதிகரிக்க வேண்டியதாயிற்று. பணத்தின் மதிப்பு குறைந்து வந்தது. பொருள்களின் விலைகள் ஏறின. வியாபார மும், தொழிலும் வெகுவாக பாதிக்கப்பட்டன. விவசாயம் யாதொரு முன்னேற்றமும் அடையவில்லை. எல்லோருக்கும் அரசாங் கத்தால் வேலை கொடுக்க இயலவில்லை. ஏற்கெனவே ஏழை களாக இருந்த தொழிலாளர்களும் குடியானவர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். அதன் விளைவாகக் குழப்பங்கள் உண்

டாயின. மக்கள், பயிரிடப்படாது இருந்த நிலங்களை அவர்களுடைய உடைமையாக்க முயன்றனர். குத்தகைக்காரர்கள் குத்தகைப் பணம் கொடுக்க மறுத்தனர். பண்ணையார்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பலர் கொல்லப்பட்டனர். நகரங்களில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். தொழிற்சாலைகளைத் தொழிலாளர்கள் கைப்பற்றினுர்கள். குழப்பங்களுக்குக் காரணமானவர்களை அடக்க அரசாங்கம் வலுப்பெற்றிருக்கவில்லை.

அந்த நேரத்தில் சோஷியலிஸ்டுக் கொள்கைகள் தொழிலாளர்களிடத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆனுல், சோஷியலிஸ்டுகள் பெரும்பாலும் மிதவாதிகளாகவே யிருந்தனர். புரட்சியின் வாயிலாக ஆட்சியைக் கைப்பற்ற அவர்கள் விரும்பவில்லை. ஆகவே, அவர்கள் தொழிலாளர்களைத் தொழிற்சாலைகளைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு பணித்தார்கள். ஆகவே, சில தீவிரவாதிகள் கம்யூனிஸ்டு கட்சியை அமைக்கலானுர்கள். சோஷியலிஸ்டுகளின் செல்வாக்குக் குறையலாயிற்று.

குழப்பங்கள் ஏற்பட்டபோது அமைதியைக் காப்பதற்கு வேண்டிய பலத்தை அரசாங்கம் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அது பலருடைய வெறுப்பைத் தேடிக்கொண்டது. முதலாளிகளும் தொழிலாளர்களும், பண்ணையார்களும், குடியானவர்களும், வேலையில்லாமல் திண்டாடிய போர்வீரர்களும் அரசாங்கத்தினிடத்தில் பற்றின்றி இருந்தனர். மேலும், தேசீயவாதிகளும் அதைத் தூற்ற ஆரம்பித்தனர். போர் முடிந்த பிறகு இத்தாலி பல நாடுகளைப் பெற்று அதனுடைய தேசீய இனஞ்சார்ந்த நாட்டை அமைப்பதிலும், பேரரசை ஏற்படுத்துவதிலும் காட்டி வந்த விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று கருதியது. ஆனுல், இத்தாலி பெரும் ஏமாற்றம் அடைந்தது. எனவே, அவ் ஏமாற்றத்தைத் தேடித் தந்த ஆட்சியை வெறுக்கலாயினர். ஆகவே, இத்தாலியர்களில் பலர் நாட்டில் அமைதி நிலவ வலிமை பொருந்திய ஆட்சி வேண்டுமென்று கோரினுர்கள். அதைப் பெற வழிவகை செய்யும் தலைவருக்கு எல்லா உதவியும் அளிக்கக் காத்திருந்தனர். நாட்டில் மக்கள் நிலையான ஆட்சியையும் அமைதியையும் விரும்பியதாலேயே பாஸிச இயக்கம் வளரலாயிற்று. நாட்டில் குழப்பங்களினுல் புரட்சி ஏற்பட்டு அதனுல் கம்யூனிசம் புகுத்தப்படும் என்ற பயமும் பாஸிசம் வளருவதற்குக் காரணமாயிருந்தது. அரசாங்கம், பண்ணையார்கள், முதலாளிகள், பாஸிஸ்டுகளுக்குப் பலவிதங்களிலும் உதவி செய்தது. ஏனெனில், கம்யூனிஸ்டுகளைப் பாஸிஸ்டுகள் அவர்களது முக்கிய எதிரிகளாகக் கருதி வந்தனர்.

மேற் குறிப்பிட்ட நிலைமையைப் பயன்படுத்தி சர்வாதிகார ஆட்சியை இத்தாலியில் ஏற்படுத்தியவர் முஸோலினி என்பவராவார். 1883-ல் பிறந்த இவர் பலவித தொழில்களில் ஈடுபட்டிருந்தார். சில

காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். மேற்படிப்புக்காக ஸ்விட்சர்லாந்து சென்றார். அங்கு சோஷியலிஸ்டுக் கொள்கைகளைக் கைப்பற்றலானார். தொழிற்சங்கங்கள் ஏற்படுத்துவதிலும், வேலைநிறுத்தங்களை நடத்துவதிலும் மிகுந்த ஆர்வத்துடன் பணியாற்றி வந்ததால் அவரை அங்கிருந்து ஸ்விட்ஜர்லாந்து அரசாங்கம் துரத்தியது. இத்தாலி திரும்பிய அவர் ஆசிரியர் தொழிலில் மீண்டும் ஈடுபட்டார். குழப்பங்களில் பங்கு கொண்டதால் அவர் சிறையிலடைக்கப்பட்டார். 1912-ல் சோஷியலிஸ்டு பத்திரிகையின் ஆசிரியரானார். போர் தொடங்கிய போது இத்தாலி நடுநிலை வகிக்கவேண்டும் என்று வலியுறுத்தினர். பின்னர் இத்தாலி போரில் ஈடுபடவேண்டும் என்று வற்புறுத்தியதால் அவர் சோஷியலிஸ்டுக் கட்சியினின்றும் விலகநேர்ந்தது. போரில் கலந்து கொண்டு காயமுற்றதால் அவர் படையினின்றும் விலக்குப் பெற்றார். அதன் பிறகு பத்திரிகை யொன்றை நடத்தி அதன்வாயிலாகக் கம்யூனிசத்தையும், சமாதானக் கொள்கையையும் கன்டனம் செய்தார். நாட்டில் சோஷியலிஸ்டுப் புரட்சி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்றுணர்ந்த முஸோலினி அதைத் தடுக்க ஒரு குழுவைத் தோற்றுவித்தார். அக் குழுவைச் சார்ந்தோர்கள் பாஸிஸ்டுகள் எனப்பட்டனர். பல கட்சியினின்றும் விலகியவர்களும், விலக்குப்பெற்ற போர்வீரர்களும், தேசீயவாதிகளும் இதில் சேர்ந்தனர். பாஸிஸ்டுகளுக்குச் சிறப்பு உடையையும் (கருப்பு), சின்னமும் (கோடாரி நடுவே வைத்த சலாகைக்கட்டுச் சின்னம்), ஒரு திட்டமும் ஏற்படுத்தித் தந்தார். பாஸிஸ்டுகள் கம்யூனிஸ்டுகளைக் கடுமையான வழிகளைக் கையாண்டு அடக்கினார்கள். அதுவே அவர்களுடைய செல்வாக்குப் பெருகக் காரணமாயிருந்தது. 1921-ல் 35 பாஸிஸ்டுகளே மக்கள் சபைக்கான தேர்தலில் வெற்றி பெற்றனர். தேர்தலுக்குப் பின்னரும் கட்சிகளில் ஏற்பட்டிருந்த பிளவுகள் நிலையான ஆட்சியை ஏற்படுத்துவதற்குத் தடையாயிருந்தன. ஆகவே, 1922-ல் பாஸிஸ்டு கட்சியினர் நேபிள்ஸில் மாநாடு நடத்தினார்கள். அதன் பின்னர் அரசரை முஸோலினியினிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு கேட்டனர். அதைத் தொடர்ந்து பாஸிஸ்டுகள் ரோமாபுரி நோக்கி அணிவகுத்துச் சென்றனர். பிரதம மந்திரி ராஜிநாமாச் செய்ததால் முஸோலினியை மந்திரி சபையை அமைக்குமாறு அரசர் கேட்டுக்கொண்டார். பிறகு, மக்கள் சபையை அவரிடம் முழு அதிகாரங்களைக் கொடுக்குமாறு பணித்தார். மக்கள் சபை அவரது வேண்டுகோளுக்கு இணங்கியது. இவ்வாறாக முஸோலினியினுடைய சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

அரசியல் துறையில் பொறுப்பாட்சியைச் சார்ந்த அமைப்புகளை ஒழித்தார். அதிகாரம் அனைத்தும் பாஸிஸ்டு கட்சியின் தலைவராகிய முஸோலினியினிடமே ஒப்படைக்கப்பட்டது. அவரே எல்லா ஸ்தாபனங்களையும்—அரசியல், பொருளாதாரம், இராணுவம்—கட்டுப்படுத்தி

வந்தார். பாஸிஸ்டு கட்சி ஒன்றுதான் சட்ட முறையான கட்சியாகக் கருதப்பட்டது. மற்றக் கட்சிகள் ஒழிக்கப்பட்டன. எல்லாப் பதவிகளிலும் பாஸிஸ்டுகளே நியமிக்கப்பட்டனர். தேர்தல் முறையை மாற்றியமைத்து மக்கள் சபையில் பாஸிஸ்டுகளே பெரும்பான்மைக் கட்சியினராக மாற்றினர். தலஸ்தாபன ஆட்சி முறையை ஒழித்தார். அங்கிருந்த அலுவலர்களை யெல்லாம் முஸோலினியே நியமித்தார். மக்களுக்கு உரிமைகள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. பேச்சுரிமை ஒழிக்கப்பட்டது. பத்திரிகைகள்மீது கட்டுப்பாடுகள் சுமத்தப்பட்டன. நாளடைவில் பாஸிஸ்டு பத்திரிகைகளே நடைபெற்று வந்தன. சர்வாதிபத்திய அரசு ஏற்படுத்தப்பட்டது. தனிப்பட்ட மனிதர்களின் நலன்கள் அரசு நலன்களுக்கு அடிமைப்படுத்தப்பட்டன. எல்லாத் துறைகளிலும் அரசாங்கம் தலையிட்டது. பல்கலைக்கழகங்கள், பள்ளிகள் ஆகியவற்றின் தலைவர்களெல்லாம் பாஸிஸ்டுகளாகவே இருந்தனர். பாஸிஸ்டு கருத்துகளுக்கு ஏற்ற புத்தகங்களே பள்ளிகளில் பாடப் புத்தகங்களாக ஏற்படுத்தப்பட்டன. பாஸிஸ்டு கட்சியின் தோற்றம், குறிக்கோள்கள், அமைப்புகள் ஆகியவற்றை மாணவர்கள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. பாஸிஸ்டுகளின் எதிரிகளைக் கண்டுபிடிக்க இரகசிய போலீஸ் படையும், அவர்களைத் தண்டிக்க இராணுவ தீர்ப்பு மன்றங்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள்.

பொருளாதாரத் துறையில் முஸோலினி சோஷியலிசத்தையும், தடையிலா வர்த்தகக் கோட்பாட்டையும் வெறுத்தார். வேலைநிறுத்தங்களையும், கதவடைப்புகளையும் தடை செய்தார். தொழிற்சங்கங்கள் ஒழிக்கப்பட்டன. ஒவ்வொரு தொழிலுக்கும் தொழிலாளிகளும், முதலாளிகளும் அடங்கிய குழு (Corporation) ஒன்றை ஏற்படுத்தினர். அவைகளின் சார்பில் ஏற்படுத்தப்பட்ட தீர்ப்பு மன்றங்கள் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறுகளைத் தீர்த்து வைத்தன. இத்தாலிக்குத் தேவையான பொருள்களை அம் மக்களே உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். நீர்மின் ஆற்றலைச் சார்ந்த திட்டங்களை வகுத்தார். வியாபாரம் பெருக நாணய முறையைத் திருத்தியமைத்தார். போக்குவரத்துச் சாதனங்களைச் சீர்படுத்தினர். வியாபாரக் கப்பல்களைப் பெருக்கினர். விவசாயத்தைப் பெருக்க சதுப்பு நிலங்களைப் பயிர்த் தொழிலுக்குரியனவாக மாற்றினர்.

முஸோலினி தன்னுடைய ஆட்சிக்குக் கத்தோலிக்கர்களின் ஆதரவைப் பெற போப்புடன் உடன்பாடு செய்துகொண்டார் (1929). போப் இத்தாலிய அரசை அங்கீகரித்தார். ரோமாபுரியை அவ்வரசின் தலைநகராகவும் போப் ஏற்றுக்கொண்டார்.

வெளிநாட்டுக் கொள்கையில் அவர் சமாதானக் கொள்கையை நிராகரித்தார். இத்தாலியப் பேரரசை ஏற்படுத்தப் புதிய நாடுகளைக் கைப்

பற்றுவதில் முனைந்தார். 1924-ல் யூகோஸ்லாவியாவிடமிருந்து ஃபியூம் (Fiume) என்ற இடமும், கிழக்கு ஆஃப்ரிக்காவில் சில பகுதியையும் சமாதான முறையைக் கையாண்டு பெற்றுர். அல்பேனியாவைக் கைப் பற்றினர். 1935-ல் அபிசீனியாவின்மீது போர் தொடுத்து அதைக் கைப்பற்றினர். ஜெர்மனியுடன் கம்யூனிஸ்டுகளுக்கெதிராக ஒப்பந்தம் செய்துகொண்டார்.

நாஜிசம்

முதலாவது உலகப் போர் தொடங்கியபொழுது ஜெர்மனி பேரரசாக விளங்கியது. அப் போரில் ஜெர்மனி தோல்வியுறவே, ஜெர்மன் கெய்சர் முடிதுறக்கவேண்டியதாயிற்று. அதன் பிறகு ஜெர்மனியில் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. 1919ஆம் ஆண்டு புதிய அரசிய லமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இப் புதிய அமைப்பு விரைவில் அதனுடைய செல்வாக்கை இழந்தது. அதற்குப் பல காரணங்க ளுண்டு. அக் குடியரசு மேற்கொள்ளவேண்டிய முதல் நடவடிக்கை ஜெர்மனியின் நாட்டுப் பெருமையைக் குலைக்கத்தக்க உடன்படிக் கையை ஏற்றுக்கொள்வதேயாகும். அதனல் ஜெர்மானியக் குடியரசு மக்களின் வெறுப்புக்கு இலக்காகியது. ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகள் வளர்ச்சியடைந்து வந்தனர். நாஜிகள் கம்யூனிஸ்டுகளை எதிர்த்த காரணத்தால் ஜனநாயகத்தில் பற்றுடையவர்களின் ஆதரவும் பெரிய முதலாளிகளின் பண உதவியும் கிடைத்தன. ஹிட்லர் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்திய பிறகுங்கூட கம்யூனிசத்தைப் பயன்படுத்தி நேச நாடுகளுடன்' ஒப்பந்தம் செய்துகொண்டார் என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

நாட்டில் பொருளாதாரத் துறையில் காணப்பட்ட சீர்கேடுகள் சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்த உதவியாயிருந்தன. விவசாயம் சீர்குலைந்து இருந்தது. குடியானவர்களிடம் போதிய பணமில்லாத தால் முன்னேற்றங்களை ஏற்படுத்த முடியாமல் திகைத்திருந்தனர். தொழிலாளர்களுக்குத் தக்க ஊதியம் வழங்கப்படவில்லை. பணத்தின் மதிப்புக் குறைந்திருந்ததால் விலைகள் ஏறின. வேலையின்மை பெரு மளவில் இருந்தது. எல்லா வகை மக்களிடமும் பொருளாதாரத்தின் சீர்குலைந்த நிலை வெறுப்பை ஏற்படுத்தி இருந்தது. அதைப் பயன் படுத்தி நாஜி கட்சியினர் நடுத்தர வகுப்பைச் சார்ந்த குடியானவர்கள், வியாபாரிகள், வேலையற்றவர்கள் ஆகியோருடைய ஆதரவைப் பெற அவர்களுக்குப் பல வாக்குறுதிகளை அளித்தனர்.

நாஜிகளின் வெற்றிக்கு யூதர்களுக்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்புணர்ச்சி பெரிதும் உதவியது. மேலும், ஜெர்மானியர்களுக்கு பார்லிமென்டைச் சார்ந்த ஆட்சிமுறையில் போதிய அனுபவம் இல்லை. மேலும், எண்ணிறந்த கட்சிகள் இருந்ததால் நிலையான ஆட்சி ஏற்

படுத்துவது கடினமாக இருந்தது. நாஜிகள் கையாண்ட பலாத்கார செயல்களும் அவர்களுடைய வெற்றிக்கு உதவி செய்தன. அவர்களுடைய பிரசார முறைகளும் நாஜி கட்சி செல்வாக்குப் பெறக் காரணமாயிருந்தது.

ஜெர்மனியில் ஏற்பட்டிருந்த நிலையைப் பயன்படுத்தி சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தியவர் அடால்ஃப் ஹிட்லராவார் (Adolf Hitler). அவர் ஆஸ்திரியாவில் சுங்கவரித் துறையில் பணியாற்றி வந்தவரின் மகனுகப் பிறந்தார். பணமில்லாத காரணத்தால் உயர்ந்த கல்வியைப் பெறவில்லை. வியன்னுவில் கட்டடக்கலை பயிலச் சென்றுர். இறுதியில் சித்திரக்கலைக் கழகத்தில்தான் சேர வாய்ப்பு இருந்தது. வியன்னுவில் இருக்கும்போதுதான் அவர் கம்யூனிஸ்டுகளையும், யூதர்களையும் வெறுக்க ஆரம்பித்தார். முதல் உலகப்போர் ஏற்படும் முன்னர் மியூனிக் (Munich) சென்றுர். பிறகு ஜெர்மானியப் படையில் சேர்ந்தார். போர் முடிந்தபிறகு அரசியல் கிளர்ச்சிக்காரராக மாறினுர். அவருக்கு உதவியாக ஒரு கட்சியை ஏற்படுத்தினுர். அதற்கு நாஜி (National Socialist German Workers Party) என்று பெயரளித்தார். சோஷியலிஸ்டு என்ற வார்த்தை சேர்க்கப்பட்டிருந்தாலும் சோஷியலிஸ்டுக் கொள்கைகளை அவர் ஏற்கவில்லை என்பதைக் குறிப்பிடுதல் அவசியம். அக் கட்சிக்குச் சிறப்பு உடையும் (பழுப்பு வண்ணம்), சின்னமும் (சுவஸ்திகை), 21 உறுதிப்பாடுகள்கொண்ட திட்டமும் ஏற்படுத்திக் கொடுத்தார். அக் கட்சி குடியரசை ஒழிக்கவும், கம்யூனிஸத்தை ஒழிக்கவும் ஜெர்மனியின் தேசப் பெருமையைக் குலைத்த உடன்படிக்கையைக் கிழித்தெறியவும் முற்பட்டது. 1923-ல் பவேரியாவின் ஆட்சியைப் பலாத்கார முறையில் கைப்பற்ற முயற்சித்தார். அதில் தோல்வியை அடைந்ததால் சிறையிலடைக்கப்பட்டார். அப்பொழுது 'மெயின் காம்ப்' (Mein Kampf = My Struggle) என்ற நூலை எழுதினுர். அதில் நாஜி கட்சியினுடைய திட்டத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டார். விடுதலை பெற்ற பிறகு அரசியலமைப்பைச் சார்ந்த முறைகளில் பதவியைக் கைப்பற்றிப் பின்னர் சர்வாதிகாரத்தை ஏற்படுத்த முனைந்தார். அவரது கட்சிக்குப் படையொன்றை அமைத்துத் தந்தார். நாஜி கட்சிக் கூட்டங்களுக்குப் பாதுகாப்பளித்தது. அதே நேரத்தில் அது மாற்றுக் கட்சிக் கூட்டங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியது. 1932-ல் ஹிட்லர் குடியரசுத்தலைவர் பதவிக்கான தேர்தலில் நின்று தோல்வியுற்றுர். மக்கள் சபைக்கான (Reichstag) தேர்தலில் நாஜிகள் அதிகமான இடங்களைப் பெற்றனர். 1933-ல் ஹிட்லர் முதலமைச்சர் பதவியை ஏற்றுர். மக்கள் சபையில் நாஜிகள் பெரும்பான்மையினராக இராததால், அதைக் கலைத்து மறு தேர்தல் நடத்த ஏற்பாடு செய்தார். தேர்தலுக்கு முன் மக்கள் சபைக் கட்டடத்தைக் கொளுத்த ஏற்பாடு செய்து பழியைக் கம்யூனிஸ்டுகளின்மீது சுமத்தினுர். ஆகவே,

கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப்பட்டது. ஆயினும், நாஜிகள் தனி நிலைப் பெரும்பான்மையைப் பெறவில்லை. 1933-ல் முற்போக்காளர் களுடன் நாஜிகள் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்தனர். சில மாதத் திற்கெல்லாம் மக்கள் சபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தலுக்கு ஏற்பாடு செய்தார். அரசியலமைப்பு தடுத்து நிறுத்தப்பட்டது. நாஜிகள் மட்டும் தேர்தலில் நிற்க அனுமதிக்கப்பட்டார்கள். 1934-ல் குடியரசுத் தலைவர் இறந்தவுடன் ஹிட்லரே அப் பதவியையும் ஏற்றார். அதன் பிறகு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபையை அவருக்கு எல்லா அதிகாரங்களையும் வழங்குமாறு கோரிப் பெற்றார். அதன் பிறகு மக்கள் சபை தள்ளிவைக்கப்பட்டது.

பொறுப்பேற்ற பிறகு ஹிட்லர் சர்வாதிபத்திய அரசை ஏற்படுத்த முனைந்தார். நாஜி கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் தடை செய்யப் பட்டன. அக் கட்சிகளின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. புதிய கட்சிகள் உருவாக்கப்படுவது தடை செய்யப்பட்டது. நாஜி களே எல்லாப் பதவிகளிலும் அமர்த்தப்பட்டனர். கூட்டாட்சியின் உறுப்பு நாடுகளுக்கு இருந்த தனியுரிமை பறிக்கப்பட்டது. அவைகள் பெற்றிருந்த சட்டமியற்றும் உரிமைகளும் பறிக்கப்பட்டன. அவை களின் கவர்னர்களை ஹிட்லரே நியமித்தார். அவைகளுக்கென அமைக்கப்பட்டிருந்த மேல் சபை (Reichsrat) அழிக்கப்பட்டது. தல ஆட்சி அலுவலர்களை ஹிட்லரே நியமித்தார். பார்லிமென்டைச் சார்ந்த ஆட்சி முறையை ஒழித்தார். மக்கள் சபையில் நாஜிகளே இருக்க வழிவகை செய்தார். மக்கள் சபைக்கு இருந்த அதிகாரங்கள் அகற்றப்பட்டன. மக்களுக்கு எவ்வித உரிமைகளும் வழங்கப் படவில்லை. பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் அளிக்கப்படவில்லை. அவரது ஆட்சியைக் குறைகூறுப்வர்களைக் கண்டுபிடிக்க இரகசிய போலீஸ்படை ஏற்படுத்தப்பட்டது. அவர்களை ஒதுக்கிவைக்கத் தனிக் குடியேற்றப் பகுதி அமைக்கப்பட்டது. கல்வித்துறையிலும் நாஜி களின் செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டது. நாஜி ஆட்சிக்கு ஆதரவு தேடுவதற்கு எல்லாவித பிரசார சாதனங்களும் உபயோகப்படுத்தப் பட்டன. பிராடஸ்டன்டு மதஸ்தாபனம் நாஜிகளின் கட்டுப்பாட்டிற் குள் கொண்டுவரப்பட்டது. போப்புடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கத்தோலிக்கர்கள் நாஜிகளுக்கு எதிராக நடப்பதைத் தடை செய்தார். பிறகு அரசியலில் ஈடுபட்டார்கள் என்ற காரணங்காட்டி அதனுடைய சொத்துகளைப் பறிமுதல் செய்தார். கத்தோலிக்கர்களுடைய இளைஞர் ஸ்தாபனமும், கல்விக்கூடங்களும் மூடப்பட்டன. யூதர்களைப் பல இன்னல்களுக்கு உள்ளாக்கினார்கள். அவர்களுக்கு அரசாங்க பதவி கள் அளிக்கப்படவில்லை. வைத்தியம், கல்வி, சட்டம் ஆகிய துறை களில் அவர்கள் பணி புரிவதையும் நாஜிகள் தடை செய்தார்கள். கல்வி கற்கவும் அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படவில்லை. அவர்

கள் சொத்துகளே, சுதந்திரமாக விற்கவோ வாங்கவோ அனுமதிக்கப் படவில்லே.

பொருளாதாரத் துறையை நாஜி கருத்துகளுக்கேற்றவாறு ஹிட்லர் அமைத்தார். தொழில்வளம் பெருகுவதற்காக வேலேநிறுத் தங்களேயும் கதவடைப்புகளேயும் தடை செய்தார். தொழிற்சங்கங் களேக் கலேத்தார். அவைகளுக்குப் பதிலாகத் தொழிலாளர்களும் முதலாளிகளும் அடங்கிய சங்கங்களே ஏற்படுத்தினர். தொழிலாளர் களின் குறைகளேப் போக்க அதிகாரிகளே அமர்த்தினர். போர்க்கருவி களேத் தயாரிக்க முற்பட்டு வேலேயின்மையைக் குறைத்தார். நாட்டிற் குத் தேவையான உணவை ஜெர்மனியில் உற்பத்தி செய்ய வழிவகை செய்தார். அதற்கென திட்டங்களே வகுத்தார். தகுந்த நடவடிக்கை வாயிலாகப் பணத்தின் மதிப்பை நிலேநிறுத்தினர்.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த அளவில் அவர் வெர்சேயி உடன்படிக்கையை மீறி நடக்கத் தீர்மானித்தார். மேலும், போர் முறை யைக் கையாண்டு நாடுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஜெர்மனியை மீண்டும் வல்லரசாக ஏற்படுத்த வேண்டும் என்பதே அவரது முக்கிய நோக்கமாகும். எனவே, சர்வதேச சங்கத்தினின்றும் ஜெர்மனியை விலகச்செய்தார். படைபலத்தைப் பெருக்கினர். ஆஸ்திரியா, செக் கோஸ்லோவேக்கியா ஆகியவற்றைக் கைப்பற்றினர். முடிவில் போலந் தின்மீது படையெடுத்தார். அதுவே இரண்டாவது உலகப் போருக்கு உடனடியான காரணமாக அமைந்தது.

இரண்டாவது உலகப் போர்

1939-ல் இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டது. போருக்குப் பல காரணங்களுண்டு. முதலாவதாக ஜெர்மனி வெர்சேயி உடன் படிக்கையை மீறி நடக்கலாயிற்று. 1918-ல் ஜெர்மனி தோல்வியுற்ற பிறகு போர்நிறுத்தம் செய்தது. அப்பொழுது வில்சனின் 14 உறுதிப் பாடுகளின் அடிப்படையில் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று ஜெர்மனி நிபந்தனே விதித்தது. பாரிஸ் மகாநாடும் அவ் வுறுதிப்பாடுகளே அடிப்படையாகக் கொண்ட சமாதான ஏற் பாட்டை அமைக்க முற்பட்டது. ஆனல், இறுதியில் ஏற்படுத்தப் பட்ட சமாதான ஏற்பாட்டிற்கும் 14 உறுதிப்பாடுகளுக்கும் இடையே பல விஷயங்களில் வேறுபாடுகள் காணப்பட்டன. ஆகவே, அத் திட்டத்தை எதிர்த்து மேலும், வெர்சேயி உடன்படிக்கை ஜெர்மனியின் துணேகொண்டு ஏற்படுத்தப்படவில்லே. அது ஜெர்மனியின்மீது சுமத்தப் பட்ட உடன்படிக்கையேயன்றி, ஜெர்மனியின் பிரதிநிதிகளேக் கலந்து ஆலோசித்து, அவர்களுடைய மனமுவந்த ஒப்புதல் பெற்று ஏற்படுத் தப்பட்ட உடன்படிக்கையன்று. மற்றும், உடன்படிக்கையின் நிபந் தனேகள் கடுமையாக இருந்தன என்று வாதிடப்பட்டது. ஜெர்மனி பல ஆட்சிப் பகுதிகளே இழந்தது. இவைகளில் பெரும் பகுதிகள்

வேற்றுநாடுகளிடமிருந்து ஜெர்மனியால் முன்னர் கைப்பற்றிய பகுதிகளாகும். ஆனல், ஜெர்மானியர்கள் வசித்து வந்த சில இடங்கள் அயல் நாடுகளுக்குக் கொடுக்கப்பட்டன என்பதும், ஜெர்மனிக்கே சொந்தமான சார் பள்ளத்தாக்கு 15 ஆண்டுகளுக்கு அதனிடமிருந்து பிரித்துவைக்க ஏற்பாடு செய்யப்பட்டதென்பதும் உண்மையேயாகும். ஜெர்மனி அதனுடைய குடியேற்றப் பகுதிகளை இழந்தது. ஆட்சிப் பகுதிகளையும் குடியேற்ற நாடுகளையும் இழந்ததால் ஜெர்மனியின் பொருளாதாரநிலை சீர்கேடுற்றது. ஆக அதற்குக் காரணமாய் இருந்த உடன்படிக்கையை வெறுக்க ஆரம்பித்தது. மேலும், ஜெர்மனியே போர் தொடங்குவதற்குக் காரணமாகும் என்று முடிவு செய்யப்பட்டதால் ஜெர்மனி நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடாயிற்று. பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த ஜெர்மனி நஷ்டஈடு அளிப்பதற்கு வாய்ப்பற்று இருந்தது. மேலும், ஜெர்மனியின் படைபலம் குறைக்கப்பட்டது. போருக்கு முன்னர் ஐரோப்பாவில் படைபலம் பொருந்திய நாடாக இருந்தது. அதனுடைய படைகளைக் குறைத்ததோடு அல்லாமல் ஜெர்மனியின் ஆட்சிக்குட்பட்ட ரைன் நதிப் பிரதேசத்தில் ஜெர்மனி படைத்தளங்களை ஏற்படுத்துவதைத் தடை செய்தார்கள். மேற்கூறிய காரணங்களால் ஜெர்மானியர்கள் அவ்வுடன்படிக்கையை வெறுத்தனர். அவ் வெறுப்புணர்ச்சியைப் பயன்படுத்தி சர்வாதிகார அரசை ஏற்படுத்திய ஹிட்லர் அவ்வுடன்படிக்கையை மீறி நடக்க முயற்சித்ததில் ஐயமொன்றும் இல்லை. அதுவே போருக்கு ஒரு காரணமாயிற்று.

வேறு சில நாடுகளும் சமாதான ஏற்பாட்டின்மீது வெறுப்புக் கொண்டிருந்தன. இத்தாலியும் ஜப்பானும் அவைகளுக்கு வேண்டிய ஆட்சிப் பகுதிகள் அளிக்கப்படவில்லை என்று கருதின.

சர்வதேச சங்கம் அதற்களிக்கப்பட்ட வேலையை வெற்றிகரமாகச் செய்து முடிக்கத் தவறியது. ஜெர்மனியின் படைகளைக் குறைக்க முயற்சி மேற்கொண்டபோது எல்லா நாடுகளும் படைகளைக் குறைப்பதற்கு வேண்டிய திட்டத்தை அச் சங்கம் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அரிய முயற்சிகள் எடுத்தபோதிலும், எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய படைக்குறைப்புத் திட்டம் வகுக்கப்படவில்லை. அதற்கு மாருகப் படைக்குறைப்பு மாநாட்டில் ஜெர்மனியைக் கலந்து கொள்ளச் செய்வதற்காக அதனுடைய படைபலத்தை ஓரளவு பெருக்க அனுமதி வழங்கப்பட்டது. அதனல் மீண்டும் படைகளை விரிவுபடுத்துவதில் வல்லரசுகளிடையே போட்டி ஏற்பட்டதென்று முன்னரே கவனித்தோம். மேலும், அது ஜப்பானும், இத்தாலியும் வலுச்சண்டையிட்டபோது போதிய அளவில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று நாம் முன்னர் கவனித்தோம். அதன் பயனுக ஐரோப்பாவில் ஹிட்லரும் அந்நிய நாடுகளின்மீது படையெடுக்க ஆர்வம் கொண்டார்.

சர்வாதிகார ஆட்சி ஏற்பாட்டின் விளைவாகவும் போர் ஏற்பட்டது. சர்வாதிகாரிகள் போர்முறையைக் கையாளுவதில் மிகுந்த பற்றுடைய வர்களாய் இருந்தனர். அதற்காக அவர்கள் போர் ஏற்பாடுகளைச் செய் வதில் ஆர்வங்காட்டினுர்கள்.

முதலாவது உலகப் போருக்கு முன்னர் ஐரோப்பா இருந்த நிலை மீண்டும் ஏற்பட்டது. சர்வாதிகாரிகள் இருவரும் உலக கம்யூனிஸ்டு புரட்சியைத் தடுக்க ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன் பின்னர் ஜப்பானும் அதில் கலந்துகொண்டது என்று நாம் முன்னரே கண்ட றிந்தோம். ஆகவே, நேசநாடுகள் ஒன்று சேரவேண்டியதாயிற்று.

போருக்கு உடனடியான காரணம் ஜெர்மனியின் படைகள் போலந்து நாட்டிற்குள் புகுந்ததேயாகும். போலந்தின் நேச நாடான பிரிட்டன் அதற்கு உதவி புரிய போரில் ஈடுபட்டது. பிரிட்டனின் நேச நாடான ஃபிரான்சும் ஜெர்மனிக்கு எதிராகப் போர்புரிய முடிவுகட்டியது.

போலந்தில் ஏற்பட்ட போர் வெகு சீக்கிரமே முடிவுற்றது. ஜெர்மனியும் ருஷ்யாவும் 1939ஆம் ஆண்டில் செய்துகொண்ட ஒப்பந் தத்தின்படி போலந்தை அவர்களுக்குள் பிரித்துக்கொண்டனர். ருஷ்யா, லாட்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா ஆகியவைகளைத் தன்னுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு கட்டாயப்படுத்தியது. அதன் பின்னர் பின்லாந்தையும் ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தியது. அதற்கு அது மறுக்கவே பின்லாந்தை ருஷ்யா கைப்பற்றியது. 1940-ல் ஜெர்மனி டென்மார்க்கு, நார்வே நாடுகளைக் கைப்பற்றியது. அதன் பிறகு ஜெர்மனி மேற்குப் புறமாக முன்னேறத் தொடங்கியது. ஹாலந்தும் பெல்ஜியமும் சரணடைந்தன. ஃபிரெஞ்சுக்காரர்களின் உதவிக்கு வந்த பிரிட்டிஷ் படைகள் விரட்டியடிக்கப்பட்டன. ஃபிரான்சும் பலமாகத் தாக்கப்பட்டது. அச்சமயத்தில் இத்தாலியும் போரில் ஈடுபட்டது. அதன் விளைவாக ஃபிரான்சு இத்தாலியின் தாக்குதலுக்கும் இலக்காயிற்று. பல திசைகளினின்றும் தாக்கப்பட்ட ஃபிரான்சு வழியேதுமின்றிப் போர் நிறுத்த ஏற்பாட்டைச் செய்து கொண்டது. வடக்கு ஃபிரான்சு ஜெர்மனியின் அதிகாரத்திற்குட் படுத்தப்பட்டது. இத்தாலி சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டது. ஃபிரெஞ்சு அரசாங்கம் விஷி (Vichy) என்னுமிடத்தில் நடைபெற்று வர அனுமதிக்கப்பட்டது.

அதன் பிறகு ஜெர்மானியர்கள் பிரிட்டனை ஆகாய விமானப் படை கொண்டு தாக்கிப் பிறகு கைப்பற்ற எண்ணினுர்கள். அப்பொழுது பிரிட்டனின் ஆகாயவிமானப்படை திறமையுடன் போர் செய்து ஜெர்மனியின் திட்டத்தைத் தகர்த்தெறிந்தது. மேலும், மக்களும் படைவீரர்களும் இத் தாக்குதல்களால் கட்டுப்பாட்டை இழக்காமல் இருக்க பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் என்பவர் அவர்களுக்கு அவ்வப்பொழுது ஊக்கம் கொடுத்து வந்தார்.

போர் பால்கன் தீபகற்பத்திலும் வட ஆஃப்ரிக்காவிலும் நடை பெற்றது. ஜெர்மனி ஃபிரான்சைக் கைப்பற்றியபோது ருஷ்யா பால்டிக் நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டது. ருமேனியாவின் சில பகுதிகளை ருஷ்யாவிற்குக் கொடுக்குமாறு, ருமேனியா வற்புறுத்தப் பட்டது. அதே நேரத்தில் ஜெர்மன் படை ருமேனியாவின்மீது படையெடுத்துச் சென்றது. ருஷ்யா அதற்கு வேண்டிய பகுதிகளைப் பெற்றது. பல்கேரியாவிற்கும், ஹங்கேரிக்கும் ருமேனியாவின் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்து அவைகளுடைய நட்பை ஜெர்மனி பெற்றது. எஞ்சியிருந்த பகுதியில் நாஜிகளை ஆதரிக்கும் சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. கிரீஸ் இத்தாலிக்கு எதிராகப் போராடி அல்பேனியாவிலிருந்த இத்தாலியப் படைத்தளங்கள் சிலவற்றைக் கைப்பற்றியது.

ஆஃப்ரிக்காவில் இத்தாலியப் படை பிரிட்டிஷ் சோமாலிலாந்தைக் கைப்பற்றியது. பிறகு எகிப்தைத் தாக்கியது. பிரிட்டிஷ் படைகள் லிபியாவைக் கைப்பற்றின. இத்தாலிய சோமாலிலாந்து, அபி சீனியா, எரெட்ரியா ஆகியவை பிரிட்டிஷார் வசமாயிற்று. பிரிட்டிஷ் சோமாலிலாந்து மீட்கப்பட்டது. ஆனால், ஹிட்லரின் படைகள் லிபியாவைக் கைப்பற்றின. ரோம் தலைமையின்கீழ் அவைகள் எகிப்தைத் தாக்கின.

அதற்கிடையே ஹிட்லர் கிரீசை ஒழிக்க முற்பட்டார். யூகோஸ் லாவியாவில் ஏற்படுத்தப்பட்ட புதிய அரசும் பிரிட்டனும் சேர்ந்து கொண்டதால் அதற்கெதிராகவும் போர் செய்யவேண்டியதாயிற்று. வெகு விரையில் யூகோஸ்லாவியாவும், கிரீசும் ஹிட்லர் கைவசமாயின. 1941-ல் ஹிட்லர் திடீரென ருஷ்யாவுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்தத்தை மீறி ருஷ்யாவின்மீது படையெடுத்தார். அதனால் ருஷ்யா பிரிட்டனுடைய உதவியை நாடியது. ஜெர்மானியர்கள் பல வெற்றிகளை அடைந்தார்கள். மாஸ்கோவை நோக்கி ஜெர்மன் படைகள் முன்னேறின.

அதற்கிடையே ஜப்பான் போரில் ஈடுபட்டது. அதற்கு முன்னரே சீனாவுடன் போர் செய்து வந்தது என்று நாம் முன்னரே அறிந் தோம். பிரிட்டிஷ், ஃபிரான்சு, அமெரிக்கா, ஹாலந்து ஆகியவை களின் குடியேற்ற நாடுகளைத் தாக்க ஆரம்பித்தது. வெகு சீக்கிரத்தில் தென் கிழக்கு ஆசியாவில் அதனுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தியது.

1941-ல் ஐக்கிய அமெரிக்கா நாடுகள் மக்களாட்சி முறையைக் காப்பாற்றுவதற்கென போரில் ஈடுபட்டது. ஜப்பான் பெர்ல் துறை முகத்தைத் தாக்கவே ஜப்பானுக்கு எதிராகவும், பிறகு ஜெர்மனிக்கு எதிராகவும் போரில் ஈடுபட்டது. அமெரிக்கா போரில் ஈடுபட்ட பிறகு நேசநாடுகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறலாயின. ஆஃப்ரிக்காவி

னின்றும் நேசநாடுகளின் பகைவர்கள் துரத்தப்பட்டார்கள். இத்தாலி கைப்பற்றப்பட்டது. பால்கன் தீபகற்பம் ஜெர்மனியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது. அதற்கிடையே ஜெர்மனியை ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராடுக்கு அருகே தோற்கடித்தார்கள். ஜெர்மானியர்கள் ருஷ்யாவினின்றும் விரட்டப்பட்டனர். அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் பாரிசைக் கைப்பற்றின. ஃபிரான்சு, பெல்ஜியம், ஹாலந்து ஆகியவை விடுவிக்கப்பட்டன. 1945-ல் ஜெர்மனியில் படையெடுத்துச் சென்றன. அந்த நெருக்கடியான வேளையில் ஹிட்லர் தற்கொலே செய்துகொண்டார். 1945-ல் ஜெர்மனி சரணடைந்தது. ஜப்பானியர்களும் தென்கிழக்கு ஆசிய நாடுகளினின்றும் விரட்டப் பட்டனர். 1945-ல் அந் நாட்டின்மீது அணுவாயுதம் வீசினுர்கள். அதன் பயனுக ஜப்பான் சரணடைந்தது.

போரின் விளேவாக ஜெர்மனியும், ஜப்பானும் நேசநாடுகளின் படைகளின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றன. அந் நாட்டு மக்களுக்கு மக்களாட்சிக் கருத்துகளேக் கற்றுக் கொடுக்கவும், சமாதானத்தில் பற்றுக் கொள்ளவுமே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஜப்பானில் பேரரசரின் (Mikado) அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. பார்லி மென்டுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஜப்பானுடைய படை பலம் குறைக்கப்பட்டது. ஜெர்மனியில் நாஜிசம் அழிக்கப்பட்டது. அதனுடைய படைபலமும் அழிக்கப்பட்டது. ஆனுல், அதுவரை ஒன்று சேர்ந்து போராடி வந்த நேச நாடுகளிடையே கருத்து வேற்றுமை வளரலாயிற்று. எனவே, பிரிட்டனும் அமெரிக்காவும் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த மேற்கு ஜெர்மனி தனி நாடாக அமைக்கப்பட்ட.து. ருஷ்யா ஆட்சிப் பொறுப்புப் பெற்றிருந்த கிழக்கு ஜெர்மனி மற்ரெரு தனி நாடாக அமைக்கப்பட்டது. அந் நாடு கம்யூனிசக் கொள்கையின்படி அடிப்படையில் இயங்கத் தொடங்கியது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சர்வாதிகாரிகளால் அழிக்கப்பட்ட மக்களாட்சி மீண்டும் நிலேநிறுத்தப்பட்டது. ஃபிரான்சில் நான்காவது குடியரசு அமைக்கப்பட்டது. ஆனுல், ஸ்பெயின் போன்ற சில நாடுகள் தொடர்ந்து சர்வாதிகாரிகளின் பிடியிலேயே இருந்துவந்தன.

இரண்டாவது உலகப் போர் ஏற்படுவதற்கு முன்னர் பிரிட்டன், ஃபிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ருஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய வல்லரசுகள் உலகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன. சண்டையின்போது, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை தோற் கடிக்கப்பட்டன. ஃபிரான்சும் பிரிட்டனும் ஆற்றல் இழந்தன. ருஷ்யாவும் அமெரிக்காவுமே அவைகளின் செல்வாக்கைத் தொடர்ந்து பெற்றிருந்தன. அவ்விரு நாடுகளுக்குமிடையே கருத்து வேறுபாடு கள் இருந்தபோதிலும், சர்வாதிகாரிகளுக்கு எதிராக நடந்த போரில் வியக்கத்தக்க வகையில் ஒத்துழைத்தன. ஆனுல், போர் முடிந்த

பிறகு அந்த ஒத்துழைப்பு மறையலாயிற்று. இரண்டும் ஒன்றை யொன்று பகைமையுணர்ச்சியோடு நோக்க ஆரம்பித்தன. இரு நாடு களும் வெவ்வேறு தத்துவங்களை மேற்கொண்டிருந்ததால், அவைகள் ஒவ்வொன்றும் அதனுடைய கோட்பாட்டினுக்கு ஆதரவுதேட முற் பட்டன. ஒவ்வொன்றும் அதனுடைய கோட்பாட்டினை மேற்கொண்ட அரசுக்கு உதவிபுரியத் தலைப்பட்டன. அத்தகைய நிலைமையை சூழ்ச்சிப் போர் (cold war) என்று கூறுகிறோம்.

1944-ல் ஸ்டாலின் மேற்கொண்ட முயற்சியால் ஜெர்மானியர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று கண்டறிந்தோம். அதைத் தொடர்ந்து ருஷ்யர்கள் ஐரோப்பாவின் மத்திய கிழக்கு நாடுகளில் படையெடுத்தார் கள். ருஷ்யர்கள் கண்ட வெற்றி அவர்களை உலக கம்யூனிஸ்டு புரட்சி ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சியை மேற்கொள்ளத் தூண்டியது. போர்க் காலத்தில் ருஷ்யர்கள் கைப்பற்றிய இடங்களில் கம்யூனிஸ்டு ஆட்சிகளை அமைத்தார்கள். போலந்து, செக்கோஸ்லோவேக்கியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, யூகோஸ்லாவியா, அல்பேனியா ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டு அரசுகள் ஏற்படுத்தப்பட்டன. லாட் வியா, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகியவை ருஷ்யாவுடன் இணைக் கப்பட்டன. கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டு அரசு ஏற்படுத்தப் பட்டது. சீனு, வட கொரியா, வடக்கு வியத்நாம் ஆகிய நாடுகளிலும் கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ருஷ்யா அந் நாடுகளுக்கு வேண்டிய உதவியை அளித்து வந்தது. ருஷ்யாவின் நடவடிக்கைகள் மக்களாட்சி நடைபெற்று வந்த நாடுகளுக்குப் பெருத்த பயத்தை விளை வித்தன. ஆகவே, அவைகளைக் காப்பாற்றிக்கொள்ள அவைகள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தலைமையின்கீழ் ஒன்றுசேர்ந்தன.

ஐக்கிய அமெரிக்க நாடுகள் போரினுல் ஏற்பட்ட விளைவுகளினின் றும் வெகு சீக்கிரமாக மீட்புப் பெற்றன. தொழில் வளர்ச்சி ஏற்பட்ட தன் பயனுகப் பொருளாதார வளம் பெருகியது. ஆனுல், வெளி நாட்டுத் துறையில் ருஷ்யாவின் நடவடிக்கைகளால் ஏற்பட்ட சிக்கல் களைத் தீர்க்கவேண்டியதாயிற்று. கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதே அமெரிக்காவின் முக்கிய நோக்கமாக அமைந்தது. ஆகவே, ருஷ்யா வின் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளத் தொடங்கியது. அமெரிக்கா தனக்கு ஆதரவாளர்களைச் சேர்த்துக்கொள்ள முயற்சித்தது. லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டன. பொருளாதாரத்துறையில் காணப்படும் சீர்கேடுகளே பல இடங்களில் கம்யூனிசக் கொள்கை செல்வாக்குப் பெறக் காரணமாயிருந்தன என்று அறிந்ததால், அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்பட்டிராத நாடுகளுக்கும் பொருள் உதவி செய்தது. அந் நாடுகளை இணைத்து நேச உடன்படிக்கை செய்து வைத்தது. அமெரிக்காவின்

செல்வாக்கின் பயனுக வட அட்லான்டிக் உடன்படிக்கை நாடுகளின் கூட்டு அமைப்பும் (Nato), தென் கிழக்கு ஆசியா உடன்படிக்கை நாடுகளின் கூட்டு அமைப்பும் (Seato) ஏற்படுத்தப்பட்டன. கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதே இவ்வமைப்புகளின் நோக்கமாய் இருக்கிறது. மேலும், படைபலம் பெற்றிராத நாடுகளுக்கு இராணுவ உதவியும் அளித்து வருகிறது. தென் அமெரிக்காவிலும், தெற்கு வியத்நாமிலும் அமெரிக்கப் படைகள் கம்யூனிசம் பரவுவதைத் தடுக்க நேரடி நடவடிக்கைகளை மேற்கொண்டன. சுருக்கமாகச் சொல்லவேண்டுமாயின், அமெரிக்கா, ருஷ்யாவின் கம்யூனிச ஆதிக்கத்தைத் தடை செய்ய நேச நாடுகள் உடன்படிக்கை ஏற்படுத்துவதில் வெகு தீவிரமாக முயற்சி செய்து வருகிறது. தற்காலத்தில் அமெரிக்கா மற்ெருரு கம்யூனிச வல்லரசையும்—சீனு—கட்டுப்படுத்தும் பொறுப்பை ஏற்றிருக்கிறது. தற்காலத்தில் சீனுவின் நடவடிக்கைகள் உலக அமைதிக்குக் கேடு விளைவிப்பனவாக இருக்கின்றன.

சில நாடுகள் இவ்விரு கூட்டணிகளிலும் சேராமல் நடுநிலை வகிக்கின்றன. அவைகள் எல்லோருடனும் நட்பு கொள்ள முடியும் என்று கருதியதே இதற்குக் காரணமாகும். மேலும், இவ்விருவகைக் கூட்டணிகளும் ஒன்ருேடு ஒன்று கலந்து உலக அமைதியைக் காக்க முடியும் என்றும் கருதி வந்தன. அதற்கு நட்பமைதியுடன்கூடிய கூட்டு வாழ்வு என்ற பெயர் வழங்குகிறது. அத்தகைய நாடுகளில் இந்தியா சிறப்புற்று விளங்குகிறது.

ஏனைய ஆசிய நாடுகள்

ஆசியாவில் பல நாடுகள் சுதந்திரப் போரை மேற்கொண்டு அதன் விளைவாகச் சுதந்திரமடைந்தன என்று முன்னர் படித்துள்ளோம். வேறு பல ஆசிய நாடுகளிலும் அவ் வுணர்ச்சி தோன்றியதன் பயனுய்ச் சுதந்திர நாடுகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

இந்துமகா சமுத்திரத்தில் இந்தியாவிற்குத் தெற்கேயுள்ள இலங்கைத் தீவு முதலில் போர்ச்சுகீசியர் கைவசமாயிற்று. அதன் பிறகு டச்சுக்காரர்கள் அதைக் கைப்பற்றினுர்கள். பதினெட்டாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்கள் அதைக் கைப்பற்றினுர்கள். இருபதாம் நூற்றுண்டில் அங்கு ஏற்பட்ட தேசிய இயக்கத்தின் விளைவாக இலங்கை சுதந்திரம் அடைந்தது. 1948-ல் சுதந்திர நாடாக அமைக்கப்பட்டது.

வங்காளக் குடாக் கடலுக்குக் கிழக்கேயுள்ள பர்மாவில் பத்தொன்பதாம் நூற்றுண்டில் .பிரிட்டிஷ் செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டது. 1937ஆம் ஆண்டுவரை பர்மா இந்தியாவின் மாகாணங்களில் ஒன்ருக இருந்துவந்தது. அந்த ஆண்டில் பர்மாவிற்குத் தனி அரசாங்கம் அமைக்கப்பட்டது. ஆனுல், அந்தச் சலுகை அம் மக்களுக்குத் திருப்தி

ஏற்படுத்தவில்லை. அதன் பயனாக அங்குக் கிளர்ச்சி ஏற்பட்டது. இரண்டாவது உலகப்போர் நடைபெற்றபோது பர்மா ஜப்பானியர் வசமாயிற்று. 1948-ல் பர்மாவிற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அங்கு இப்பொழுது நீவின் (Newin) தலைமையின்கீழ் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. பர்மாவிற்குத் தெற்கே மலாயா தீபகற்பம் உள்ளது. அத் தீபகற்பத்திற்கும் சுமத்ராவிற்கும் இடையேயுள்ள மலாக்கா கடலிடுக்கின் வழியாகத்தான் பசிஃபிக் பெருங்கடலிலிருந்து இந்துமகா சமுத்திரத்திற்குச் செல்லும் கப்பல்கள் செல்லுகின்றன. அதனுடைய முக்கியத்துவத்தை அறிந்த ஆங்கிலேயர்கள் மலாயாவிற்குத் தென்கோடியிலுள்ள சிங்கப்பூர் தீவை விலைகொடுத்து வாங்கினார்கள். பிறகு மலாயாவின் ஏனைய பாகங்களாகிய மலாக்காவையும், பினாங்கையும் அவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர். மலாயாவின் ஏனைய பகுதிகள் சுல்தான்களால் ஆளப்பட்டு வந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களின் செல்வாக்கு சுல்தான்களிடத்திலும் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே, மலாயா நாடுகளை ஒன்றாக இணைத்துக் கூட்டாட்சியை அமைத்தார்கள். இரண்டாவது உலகப்போர் அவர்களிடம் தேசீய உணர்ச்சியைப் பெருமளவில் வளர்த்துவிட்டது. ஆகவே, அவர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் சுதந்திரம் வழங்கியது. 1963-ல் மலாயா கூட்டாட்சி ஏற்படுத்தப்பட்டது. 1965-ல் சிங்கப்பூர் கூட்டாட்சியினின்றும் விலகிக்கொண்டது.

தென்கிழக்கு ஆசியாவில் ஐரோப்பியர் ஆதிக்கத்தினின்றும் விலகி இருந்த நாடு சையாம் என்பதாகும். அது பர்மாவிற்கும் இந்தோ-சீனாவிற்கும் இடையே இருக்கிறது.

மத்திய கிழக்கு ஆசிய நாடுகளும் இருபதாம் நூற்றாண்டில் சுதந்திரம் பெற்ற நாடுகளாக அமைக்கப்பட்டன. மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையினுக்கும் ஆஃப்கானியக் குன்றுகளுக்கும் இடையேயுள்ள பகுதிக்கு மத்தியக் கிழக்கு நாடுகள் என்று பெயர். அரபு நாடே முதலில் சுதந்திரம் பெற்ற நாடாக அமைக்கப்பட்டது. அதுவரை அப் பகுதி துருக்கியின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. முதலாவது உலகப்போர் ஏற்பட்டபொழுது அரேபியர்கள் துருக்கிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து சவூதி அரேபியா (Saudi Arabia) என்ற பெயருடன் சுதந்திர நாடொன்றை அமைத்தார்கள். துருக்கியின் ஆளுகைக்குட்பட்ட முஸ்லிம்கள் வாழ்ந்துவந்த பாலஸ்தீனம் என்னும் பகுதியை முதலாவது உலகப்போர் ஏற்பட்டபொழுது பிரிட்டிஷார் கைப்பற்றினார்கள். அப்பொழுதிலிருந்து யூதர்கள் பாலஸ்தீனத்திற்குத் திரும்பிவரத் தலைப்பட்டார்கள். அரேபியர்கள் அவர்கள் வருகையை எதிர்த்தார்கள். ஆகவே, அவ்விரு மக்களிடையே தகராறுகள் ஏற்பட்டன. முடிவில் பாலஸ்தீனம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதில் ஒன்றை யூதர்களுக்கு அளித்தனர். அதுவே இன்று

இஸ்ரயேல் குடியரசாக விளங்குகிறது. மற்றென்றை ஜோர்டான் என்ற பெயருடன் விளங்கிய முஸ்லீம் நாட்டுடன் இணைத்தார்கள். முதலாவது உலகப்போர் ஏற்பட்டபொழுது ஜோர்டான் என்ற பெயருடன் அழைக்கப்படும் அப் பகுதியை பிரிட்டன் கைப்பற்றியது. பிறகு அதற்கு சுதந்திரம் வழங்கியது. பாலஸ்தீனத்திற்கு வடக்கேயுள்ள சிரியாவும், லெபனுனும் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டன. முதலாவது உலகப் போருக்குப் பிறகு அவைகள் ஃபிரான்சின் செல்வாக்கிற்குட்படுத்தப்பட்டன. இரண்டாவது உலகப் போர் முடிவுற்ற பிறகு அவைகள் சுதந்திரம் பெற்றன. 1958-ல் சிரியா எகிப்துடன் சேர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசு ஏற்படுத்தியது. மெஸபடோமியா என்ற பெயருடன் வெகுநாளாக அழைக்கப்பட்டு வந்த இராக்கை முதலாவது உலகப் போர் ஏற்பட்டபோது பிரிட்டிஷார்கள் கைப்பற்றினுர்கள். அந்நியர்கள் ஆட்சியை விரும்பாததால் அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அதன் பயனுக இரண்டாவது உலகப் போர் ஏற்பட்டபோது சுதந்திரமடைந்தார்கள். பாரசீகம் இப்பொழுது ஈரான் என்ற பெயருடன் அழைக்கப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்ருண்டில் பிரிட்டிஷார்களும் ருஷ்யர்களும் அங்கு ஆதிக்கம் ஏற்படுத்துவதை விரும்பினுர்கள். 1907-ல் அவ்விருவர்களுடைய ஆதிக்கத்தை அங்கு ஏற்படுத்தினுர்கள். ஆயினும், பாரசீக அரசர் தொடர்ந்து ஆண்டு வந்தார். பாரசீக மக்கள் தேசீய உணர்ச்சியைப் பெற்றதால் கிளர்ச்சி செய்தார்கள். ரெஸா கான் (Reza Khan) என்பவர் அக் கிளர்ச்சியின் தலைவராக விளங்கினுர். அவர் ஈரான் சுதந்திரம் பெறுவதற்கும், மேற்கத்திய முறைகளைக் கையாளுவதற்கும் வழிவகை செய்து தந்தார். ஆப்கானிஸ்தானத்தில், ஆதிக்கம் ஏற்படுத்த ருஷ்யாவும் பிரிட்டனும் போட்டியிட்டன. 1907-ல் இரு நாடுகளும் ஆப்கானிஸ்தானத்தின் சுதந்திரத்தை அங்கீகரித்தன.

ஐக்கிய நாடுகள்

உலக அமைதியைக் காக்கும் பொருட்டு சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டதென்றும், ஆனுல், அது அவ் வமைதியை நிலைநிறுத்த இயலவில்லை என்றும் நாம் முன்னரே கண்டறிந்தோம். 1939-ல் இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டது. ஆகவே, இரண்டாவது உலகப்போர் நடைபெற்று வரும்பொழுது போரில் ஜெர்மனிக்கு எதிராக ஈடுபட்டிருந்த நாடுகள் உலக அமைதியை ஏற்படுத்தவல்ல சர்வதேச அமைப்பை ஏற்படுத்தவேண்டுமென்று எண்ணின. அமெரிக்காவின் குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் அதை ஏற்படுத்துவதற்கான முதல் நடவடிக்கையை மேற்கொண்டார். அவரும், பிரிட்டனின் பிரதமரான சர்ச்சிலும் அட்லான்டிக் சாசனம் ஒன்று ஏற்படுத்தினுர்கள். 1945-ல் ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் சான்ஃபிரான்சிஸ்கோ என்னுமிடத்தில் கூடி

ஐக்கிய நாடுகளின் சாசனத்தை அங்கீகரித்தார்கள். அச் சாசனம் 1945ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் தேதி நடைமுறைப் படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் குறிக்கோள்களும், அமைப்பும் அடங்கியுள்ளன. உலக அமைதியை ஏற்படுத்துவதும், நாடுகளிடையே நட்புறவை வளர்ப்பதும், உலக நாடுகள் ஒன்று சேர்ந்து உலகத்தில் ஏற்பட்டிருக்கும் எல்லா வகையான பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வழி ஏற்படுத்துவதும் அந்த ஸ்தாபனத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும். அக் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்துள்ள நாடுகள் தங்களுக்கிடையே ஏற்படும் தகராறுகளைச் சமாதான முறைகளைக் கையாண்டு தீர்வுகாண வேண்டும் என்றும், ஐக்கிய நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எல்லா உறுப்பு நாடுகளுக்கும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. நாடுகளுக்கிடையே நல்லுறவு வளர்ப்பதற்காக இந்த ஸ்தாபனம் எல்லா நாடுகளும் சமமானவர்களே என்ற கருத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சாசனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளும், ஐக்கிய நாடுகளின் அறிவிப்பில் கலந்துகொண்ட நாடுகளும் ஐக்கிய நாடுகளின் மூல முதலான உறுப்பு நாடுகளாக விளங்கின. சமாதானம் விரும்பும் எல்லா நாடுகளும் இதில் சேர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது இதில் 117 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் முக்கிய உறுப்புகள் பின்வருமாறு: மகாசபை, பந்தோபஸ்து சபை, பொருளாதார சமூகநல சபை, டிரஸ்டி பரிபாலன சபை, சர்வதேச நீதிமன்றம், நிர்வாகக் காரியாலயம்.

ஐக்கிய நாடுகளின் அங்க நாடுகளின் பிரதிநிதிகளை மகாசபை உட்கொண்டிருக்கிறது. ஒவ்வோர் அங்க நாடும் மகாசபைக்கென ஐந்து பிரதிநிதிகள் வரை அனுப்பிவைக்கலாம். ஆனால், ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரே ஓட்டுதான் வழங்கப்பட்டிருக்கிறது. ஆண்டிற்கு ஒருமுறை அமெரிக்காவில் அது கூடுகிறது. ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் குறிப்பிட்ட விவகாரங்களைப்பற்றி விவாதிக்க இதற்கு அதிகாரமுண்டு. இதர உறுப்பு ஸ்தாபனங்களின் அறிக்கைகளை ஏற்றுப் பரிசீலனை செய்யவும் அதிகாரமுண்டு. ஐக்கிய நாடுகளின் வரவு செலவுத் திட்டத்தை ஆராய்ந்து அங்கீகரிக்கும் உரிமையும் பெற்றிருக்கிறது. பந்தோபஸ்து சபையில் குறிப்பிட்ட காலம் வரை பணியாற்றவேண்டிய நாடுகளைத் தேர்ந்தெடுப்பது, பொருளாதார சமூக நல ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது, டிரஸ்டி சபையின் சபையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது போன்ற அதிகாரமும் பெற்றிருக்கிறது.

பந்தோபஸ்து சபை இப்பொழுது 15 அங்கத்தினர்களைக் கொண் டிருக்கிறது. அவைகளுள் ஐந்து அதில் நிலையான இடம் பெற்றிருக் கின்றன. நேஷனலிஸ்ட் சீனு, ஃபிரான்சு, பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா ஆகியவை நிலையாக இடம் பெற்றிருக்கின்றன. மற்றவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மகா சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அமைதியைப்பற்றிய பிரச்சினைகளுக்கு முடிவு காண இச் சபைக்கு அதிகாரமுண்டு. வலுச்சண்டைக்காரர்களுக்கு எதிராகத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள பந்தோபஸ்து சபைக்கு அதிகாரமுண்டு. புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு இதனுடைய ஒப்புதல் அவசியமாகும். முக்கியமான பிரச்சினைகளில் முடிவெடுப்பதற்கு எல்லா நிலையான இடங்களைப்பெற்ற அங்கத்தினர்களின் ஒப்புதல் அவசியமாகும். இதையே தடுப்புமுறை (veto) என்று கூறு கிருர்கள்.

பொருளாதார சமூகநல சபை 18 அங்கத்தினர்களைக் கொண்டிருக் கிறது. அவர்கள் மகாசபையால் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்ந் தெடுக்கப்படுகிருர்கள். உலக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்து வதற்கும், வேலையின்மையை ஒழிப்பதற்கும், மக்களின் ஜீவாதார உரிமைகளைக் காப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. டிரஸ்டி சபை (Trusteeship Council) டிரஸ்டி பரிபாலனத்துக்குட்பட்ட பகுதிகளின் மக்கள் அடை யும் முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகிறது. அப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத்தை மேர்பார்வையிட்டு வருகிறது. சர்வ தேச நீதிமன்றம் 15 நீதிபதிகளை உட்கொண்டிருக்கிறது. மகா சபை யும், பந்தோபஸ்து சபையும் தனித்தனி தேர்தல் நடத்தி நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. நீதிபதிகளின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டு களாகும். நீதிமன்ற அமைப்புச் சட்டத்தை ஏற்றுள்ள நாடுகள் அனைத்தும் இதனுடைய உதவியைப்பெற்றுப் பிரச்சினைகளுக்கு முடிவு காண ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், ஐக்கிய நாடுகளின் உறுப்பு ஸ்தாபனங்கள் அதனுடைய ஆலோசனையைப் பெறவும் வழி ஏற்படுத் தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் நிர்வாகப் பொறுப்பு ஊதியம் பெற்ற நிரந்தர அலுவலர்களைக் கொண்டிருக்கிறது. தலைமைக் காரிய தரிசி (Secretary-General) இதன் தலைவராக நியமிக்கப்பட்டிருக் கிருர். உறுப்பு ஸ்தாபனங்களுக்குத் தகவல்கள் சேகரித்துக் கொடுப்ப தும், ஆண்டு அறிக்கையைத் தயாரிப்பதும், அமைதிக்குக் கேடு விளை விக்கும் பிரச்சினைகளை பந்தோபஸ்து சபைக்கு அறிவிப்பதும் அதனுடைய முக்கிய வேலைகளாகும்.

இவையன்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின்கீழ் பலவகையான ஏஜென்சிகள் (Specialised Agencies) பணியாற்றி வருகின்றன. சர்வதேசத் தொழிலாளர் நல ஸ்தாபனம், ஐக்கிய நாடுகளின் கல்வி


விஞ்ஞானம், கலாசாரம், உணவு விவசாய ஸ்தாபனம், உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற ஏஜென்சிகள் சமூகப் பொருளாதார நலப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன.

இருபது ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் இந்த ஸ்தாபனம் பல அரிய சேவைகளைப் புரிந்திருக்கின்றது. அரசியல் பாதுகாப்பு ஆகியவற்றைச் சார்ந்த பிரச்சினைகள் பலவற்றைத் தீர்த்துவைத்தது. கொரியாவில் நடைபெற்ற போரை நிறுத்தியது. சூயஸ் கால்வாய் பிரச்சினையைத் தீர்த்துவைத்தது. யூதர்கள் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டது. காங்கோவில் நடைபெற்ற சண்டை நிறுத்தப்பட்டது. படைக் குறைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆயினும், இத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. பொருளாதாரம் சமூகம் ஆகிய துறைகளில் பல அரிய பணிகளை ஏஜென்சிகள் வாயிலாகச் செய்து வருகிறது. மக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றும் வகையில் மக்கள் உரிமைகளின் அறிக்கை யொன்றை விடுவித்தது.


ஐக்கிய நாடுகள் சர்வதேச ஸ்தாபனத்தைவிடப் பல வழிகளிலும் மேம்பட்டு விளங்குகிறது. ஆயினும், இதிலும் சில குறைகள் இருக்கின்றன. இது இன்னும் உலக நாடுகள் அனைத்தையும் உட்கொண்டிருக்கவில்லை. ஐந்து வல்லரசுகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் தடுப்பு முறை பல முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சியைத் தடை செய்கிறது. மேலும், சர்வதேச இராணுவ அமைப்பு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முடிவுகளை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்கு வேண்டிய அதிகாரம் பெற்றிருக்கவில்லை. இந்த ஸ்தாபனம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு அமெரிக்கா ருஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையேயுள்ள பிளவுகள் தடை செய்கின்றன. மேலும், உலக மக்கள் தலைவர்கள் அனைவரும் அமைதியையே விரும்பினால் ஒழிய உலக அமைதி நிலையாக இருக்க முடியாது. பல குறைகள் இருந்தபோதிலும், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் உலக நாடுகள் ஒன்றுகூடி அவைகளிடையே ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்தறிய வாய்ப்பு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. ஆகவே, சமாதானத்தை விரும்பும் மக்கள் அனைவரும் அந்த ஸ்தாபனத்தினிடம் பற்றுறுதி கொண்டு அதனுடைய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அதனுடன் ஒத்துழைக்க வேண்டும். ஏனெனில், இந்த ஸ்தாபனம்தான் மனித இனம் அழிவுறாது பாதுகாக்கவல்லதாய் இருக்கிறது.

பின்னிணைப்பு


(படங்கள்)




படம் 1.—லத்தீன் அமெரிக்க நாடுகள் (1850)




படம் 2.—1750-ல் புதிய உலகத்தில் ஐரோப்பியக் குடியேற்றங்கள்




படம் 3.—1871-ல் ஜெர்மனி




படம் 4.—1914-ல் ஆஃப்ரிக்கா




படம் 5.—1871-ல் இத்தாலி




படம் 6.—பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பியக் குடியேற்றங்கள்




படம் 7.—1763-ல் பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்றங்கள்



படம் 8.—வியன்னு ஏற்பாடு (1815)



படம் 9.—நெப்போலியனுடைய பேரரசு (1812)



படம் 10,—1919-ல் ஐரோப்பா

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

1965வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

	நூல்		ஆசிரியர்		ரூ.	காசு
*1.	பொருளாதாரம்–II	—	சி. வேலாயுதம்	...	9	00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	—	திருமதி ஆர். தாமரஜாட்சி	...	12	00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்–I	—	தி. சி. மோகன்	...	12	00
4.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்–II	—	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	...	10	75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	—	க. முத்தையன்	...	7	00
*6.	பணவியலும் பாங்கியலும்–II	—	சி. வேலாயுதம்	...	11	50
7.	நவீன பாங்கு இயல்	—	க. வெற்றிவேல்	...	7	50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	—	பி. வி. ஸ்ரீநிவாசன்	...	5	50
*9.	அரசாங்க நிதி இயல்	—	அர. சேஷாசலம்	...	4	75
10.	இந்தியப் பொருளியல்–I	—	எம். பாலசுப்பிரமணியன்	...	10	00
11.	இந்தியப் பொருளியல்–II	—	எம். லூர்துநாதன்	...	4	25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை–I	—	சி. சுந்தரராஜன்	...	10	75
13.	நமது பொருளாதாரப் பிரச்சினை–II	—	எஸ். குழந்தைநாதன்	...	10	50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு–I	—	கீ. சீ. இராமசாமி	...	6	00
15.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு–II	—	,,	...	6	00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	—	தி. சி. மோகன்	...	5	00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு–I	—	மு. க. சுப்பிரமணியம்	...	11	00
18.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்–I	—	மா. குமாரசாமி	...	10	00
19.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி–I	—	தே. வேலப்பன்	...	10	00

* மூல நூல் (Original, Book)

பொருளாதாரம்—தொடர்ச்சி

			ரூ.	காசு
20.	பணம்-சிறு விளக்கம்	— கோ. இராதாகிருஷ்ணன் ...	10	00
*21.	வணிக இயலின் தத்துவங்கள்	— கு. ஆளுடையபிள்ளை ...	9	50
22.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	— சு. ரா. கறுப்பண்ணன் ...	11	00

வரலாறு

*23.	பிரிட்டன் வரலாறு-I	— கி. ர. அனுமந்தன் ...	10	00
*24.	பிரிட்டன் வரலாறு-II	— ,, ...	9	75
*25.	ஐரோப்பிய வரலாறு-I	— டி. வி. சொக்கப்பா ...	4	50
26.	ஐரோப்பா-கடந்த ஐந்து நூற்றாண்டுகாலச் சரித்திரம்	— வை. விருத்தகிரீசன் ...	15	00
27.	இங்கிலாந்து வரலாறு-I	— இரா. அண்ணாமலை ...	13	00
28.	இங்கிலாந்து வரலாறு-II	— பா. மாணிக்கவேலு ...	13	00
29.	இங்கிலாந்தின் வரலாறு-I	— க. த. திருநாவுக்கரசு ...	15	00
30.	இந்தியாவின் சிறப்பு வரலாறு-I	— தி. வெ. குப்புசாமி ...	7	50

அரசியல்

*31.	இந்திய அரசியலமைப்பு	— வீ. கண்ணையா ...	4	75
32.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	— டி. செல்லப்பா ...	8	50
33.	தற்கால அரசியல் அமைப்புகள்	— மோ. வள்ளுவன் கிளாரன்சு ...	8	50
34.	பன்னாட்டு அரசியல்-I	— திருமதி நூர்ஜஹான்பாவா ...	16	00
35.	பொதுத்துறை ஆட்சி இயல்-I	— வீ. கண்ணையா ...	9	00
36.	பொதுத்துறை ஆட்சி இயல்-II	— அ. ஜெகதீசன் ...	7	25

உளவியல்

37.	குழந்தை உளவியல்-I	— கி. ர. அப்புள்ளாச்சாரி ...	8	00

38. குழந்தை உளவியல்–II	— கி. ர. அப்புள்ளாச்சாரி	...	7 00
39. உட்கவர் மனம்	— சி. ந. வைத்தீஸ்வரன்	...	7 00
40. இளையோர் உளவியல்–I	— தி. இரா. அரங்கராசன்	...	12 00
41. இளையோர் உளவியல்–II	— ,,	...	9 00
42. சமூக உளவியல்	— என். வேதமணி மானுவேல்	...	9 25
43. பிறழ்நிலை உளவியல்	— அ. பெசன்ட் கிரிப்பர்ராஜ்	...	11 00
44. பித்தரின் உள்ளம்	— ,,	...	3 00
தத்துவம்			
45. இந்து சமயத் தத்துவம்	— ஞா. ராஜாபகதூர்	...	5 50
அறவியல்			
46. அறவியல் – ஓர் அறிமுகம்	— கோ. மோ. காந்தி	...	8 50
அளவையியல்			
47. அளவை இயல் – தொடக்க நூல்	— கி. ர. அப்புள்ளாச்சாரி	...	2 50
மானிடவியல்			
*48. மானிடவியல்	— ம. சு. கோபாலகிருஷ்ணன்	...	4 75
49. பண்பாட்டுக் கோலங்கள்	— கி. பூ. சுப்பிரமணியன்	...	5 50
சமூகவியல்			
50. சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	— ஜெ. நாராயணன்	...	10 00
புவியியல்			
*51. ஆசியா–I	— கொ. சேஷ. நரசிம்மன்	...	9 50
*52. ஆசியா–II	— ,,	...	8 75
*53. ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	— ஏ. எஸ். நாராயணன்	...	8 50
*54. வட அமெரிக்கா	— குமாரி இரா. அலமேலு	...	8 25
*55. தென் கண்டங்கள்–ஆஸ்திரேலியா	— திருமதி எச். நியூமன்	...	4 00

* மூல நூல் (Original Book)

புவியியல்—தொடர்ச்சி

			ரூ.	காசு
*56.	புவிப்புறவியல்–II	— நா. அனந்தபத்மநாபன் ...	6	00
*57.	செய்முறைப் புவியியல்	— சு. ஜெயச்சந்திரன் ...	9	00
*58.	மக்கட் பரப்பியல்	— வி. எஸ். அனந்தபத்மநாபன் ...	6	25
*59.	சமுத்திரவியல்	— கோ. இராமசுவாமி ...	6	50
60.	காலநிலை இயல்–I	— கொ. சேஷ. நரசிம்மன் ...	10	00
61.	வளிமியலுக்கு ஓர் அறிமுகம்	— கோ. இராமசுவாமி ...	11	00
*62.	புவி அமைப்பு இயல்	— சி. விசுவநாதன் ...	4	75

புள்ளியியல்

*63.	புள்ளியியல்–அறிமுகம்	— சு. வைத்தியநாதன் ...	10	00
64.	புள்ளியியல் முறைகள்–I	— கோ. சண்முகசுந்தரம் ...	10	00
65.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	— தி. வி. லட்சுமிநரசிம்மன் ...	6	50

விலங்கியல்

*66.	விலங்கியல்	— பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன் ...	12	00

பௌதிகவியல்

67.	ஒளி நூல்	— ச. சம்பத்து ...	10	00

பொது நூல்கள்

68.	மகாத்மா காந்தி	— சரஸ்வதி தங்கையன் ...	8	25
69.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	— எஸ். இலட்சுமி ...	3	50
70.	விவசாயப் புரட்சி	— வி. கார்த்திகேயன் ...	8	00
71.	சேமக் கை–நூல்	— ஆ. சுப்பிரமணியன் ...	2	50
*72.	நீரிழிவு–க்ஷயரோகம்	— ஜி. வேங்கடசாமி, ஏ. கதிரேசன் ...	2	50

* மூல நூல் (Original Book)